
ஹர்ஷவர்த்தனர்

(HARSHA VARDHANA)



அ. கணேசன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க்.வெ.) வரிசை எண்—358

ஹர்ஷவர்த்தனர்

ஆசிரியர்
அ. கணேசன், எம்.ஏ.,
வரலாற்றுத்துறை விரிவுரையாளர்,
சரஸ்வதி நாராயணன் கல்லூரி,
பெருங்குடி, மதுரை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1972

T.N.T.B.S. (C.P.) No. 358

HARSHAVARDHANA

A. GANESAN

Price Rs 12-00

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by

M/s. Sputnic Printers,
27, Perambur Barracks Road,
Vepery, Madras-7.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'ஹர்ஷவர்த்தனர்' என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 358ஆவது வெளியீடாகும். இதுவரை 393 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பின்னிணைப்பு

பட விளக்கங்கள்

பக்கம்

சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள்

A. B. O. R. I. — Annals of the Bhandarkar Oriental Research Institute

A. S. I. A. R. — Archaeological Survey of India Annual Reports

B. M. C. — J. Allan, Catalogue of the Coins of the Gupta Dynasties and of Sasanka, the King of Gauda (in the British Museum)

C. A. G. I. — A. Cunningham, Ancient Geography of India

C. I. I. — Corpus Inscriptionum Indicarum

D. H. N. I. — H. C. Ray, Dynastic History of North India

E. H. I. — V. A. Smith, Early History of India

E. I. — Epigraphia Indica

G. D. A. M. I. — N. L. Dey, Geographical Dictionary of Ancient and Medieval India

H. C. I. P. — R. C. Majumdar, History and Culture of the Indian People

H. M. H. I. — C. V. Vaidya, History of Medieval Hindu India

Hist. Dh. — P. V. Cane, History of Dharma-sāstra


I. A. — Indian Antiquary

I. H. Q. — Indian Historical Quarterly

J. A. H. R. S. — Journal of the Andra Historical Research Society

J. A. R. S. — Journal of the Assam Research Society

M. A. S. I.	—	Memoirs of the Archaeological Survey of India
N. H. I. P.	—	R. C. Majumdar and A.S. Altekar, A New History of the Indian People, vol. vi-c (The Vakataka-Gupta Age)
P. H. A. I.	—	H. C. Raychaudhuri, Polit'cal History of Ancient India
V. S. அகர்வாலா	—	Harsha-charita, A Cultural Study
இட்சிங்	—	T. Takakusu, A Record of the Buddhist Religion as practised in India and the Malay Archipelago
காத்யாயனு	—	Katyayana, Smriti, or Dharma-śastra
சுக்ரா	—	Sukra, Niti-sāra
தக்காகசு	—	Takakusu, J. Taishõ Issaikyo Series
பிரகஸ்பதி	—	Brihaspati, Smriti or Dharma-sāstra
பீல்	—	S. Beal, Buddhist Records of the Western World
லைப்	—	S. Beal, The Life of Hiuen-tsiang
வாட்டர்ஸ்	—	T. Watters, On Yuan Chwang's Travels in India
ஹர்ஷ சரித்திரம் மொழி பெயர்ப்பு		Harsa Carita of Bana, E. B. Cowell & F. W. Thomas


ஹர்ஷப் பேரரசு
கி.பி. 606 - 47
கபிசா
காந்தாரம்
புருஷபுரம்
காஷ்மீரம்
தக்ஷசீலம்
கைலாச பர்வதம்
பர்வதா
அரோர்
தானேஸ்வரம்
சோனபட்டு
டெல்லி
பாரியாத்ரா
ஜெய்பூர்
கூர்ஜரம்
நேபாளம்
அயோத்தி
மிதிலா
காமரூபம்
வாரணசி
கயை
புண்ட்ரவர்த்தனம்
கல்கத்தா
தாமரலிப்தி
சோமநாதபுரம்
உஜ்ஜயினி
மாளவம்
மகாகோசலா
தக்ஷிண கோசலா
அஜந்தா
பம்பாய்
வெங்கி
கஞ்சம்
பாசிம் ஓடாதி
அரபிக் கடல்
பூர்வ சமுத்ரா
வங்காளக் குடாக் கடல்
வாதாபி
காஞ்சி
மாமல்லபுரம்
தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
மதுரை
குமரி
அனுராதபுரம்
கொழும்பு
இந்தியப் பெருங் கடல்
வலுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்த பகுதிகள்
நட்புறவு கொண்டு கட்டுப்பட்டிருந்த பகுதிகள்
மேலாண்மையை ஏற்றுக்கொண்ட பகுதிகள்

1. ஹர்ஷ வரலாற்று ஆதாரங்கள்

கி.பி. 606-லிருந்து 647 வரை ஆட்சி புரிந்த ஹர்ஷரின் வரலாற்றை அறிந்துகொள்வதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அதற்குச் சிறிது முந்திய காலத்தைப்பற்றி அறிந்து கொள்ள நமக்குக் கிடைத்திருக்கும் சான்றுகளைவிட, ஹர்ஷரது காலத்து வரலாற்றுச் சான்றுகள் ஏற்கத் தகுந்தவையாகவும், அதிக அளவிலும் உள்ளன. ஆகவே, ஹர்ஷரின் வரலாற்றை நாம் எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது. ஹர்ஷரது காலத்துக்கு முற்பட்ட மன்னர்களைப் பற்றிய வரலாற்றுச் சான்றுகளும் ஓரளவு நமக்குத் துணை புரிவதாய் அமைந்துள்ளன. குப்தர்கள் காலத்துக்கும் ஹர்ஷரது காலத்துக்கும் இடைப்பட்ட இந்தியாவின் அரசியல், சமுதாய நிலைமைகளை அறிய அவை பெரிதும் துணை புரிகின்றன.

செப்பேட்டு, கல்வெட்டுக் குறிப்புகள்

ஹர்ஷர் காலத்து வெளியிடப்பட்ட செப்பேட்டு, கல்வெட்டு வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படும் வழக்கமான அலங்காரச் சொல் அடுக்குகளை நீக்கிக் காணும்பொழுது, அவை நமக்கு மிகவும் பயனுள்ள ஆதாரங்களாக விளங்குகின்றன. ஹர்ஷரின் காலத்தில் நிலவி வந்த அரசாங்க நிருவாகப் பிரிவுகளை அறிந்து கொள்ள அவர் காலத்துச் செப்பேட்டுச் சான்றுகளும், நாணயங் களும் உதவுகின்றன. அதே போலப் பிற்காலக் குப்தர்களின் குறிப்புகளும் வரலாற்றுப் பயன் உடையவையாம். மேலும், மௌகாரிகள் (Maukharis), மைத்ரேகர்கள் (Maitrakas), பரோச்சின் கூர்ஜரர்கள், சாளுக்கியர்கள், நேபாளம், வங்காளம், காமரூபம், ஒரிசா ஆகிய அரசர்களின் கல்வெட்டு, செப்பேட்டுக் குறிப்புகளும் மிகப் பயனுடையவையாகும்.

நிலவரியைத் தள்ளுபடி செய்யும் கட்டளைகள் அல்லது அரச விழாக் கொண்டாட்டங்களைப் பற்றிய குறிப்புகள் பொதுவாக மிக அதிக வரலாற்றுப் பூர்வமான தகவல்களைத் தந்து உதவு

கின்றன எனலாம். ஹர்ஷர் காலத்தைப் பற்றிய இவ்வகைக் குறிப்புகள், செப்பேடுகள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் நான்கு ஹர்ஷரே அளித்தவை ஆகும். வர்த்தனர்களின் நாணயங் களும் நமக்கு வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன.[1]

கட்டடச் சான்றுகள்

ஹர்ஷர் காலக் கட்டடச் சான்று ஒன்று நாளந்தாவில் காணப் படுகிறது. அங்கு ஹர்ஷரால் கட்டப்பட்ட பகுதிகள் எவை என அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. நாளந்தாவை யுவான் சுவாங் நேரில் கண்டு அதைப்பற்றி எழுதிவைத்துச் சென்றுள்ளார்.[2]

நீதி நூல்கள்

அரசாங்க முறைகளையும், நீதிகளையும் விளக்கும் நூல்களாக அர்த்த சாஸ்திரமும், ஸ்மிருதியும் விளங்குகின்றன. அவை போன்ற பல புதிய நூல்களும் குப்தர்கள் காலத்திற்குப் பின் தோன்றின. அவற்றில் பழைய காலத்திலிருந்து பின்பற்றப்பட்ட நீதிமுறைகளுடன் அவர்கள் காலத்தின் சமூக அரசியல் மரபுகளும், கொள்கைகளைச் செயலாற்றும் முறைகளும் பிரதிபலிக்கின்றன. அவற்றில் பழைய, புதிய மரபுகளையும், கொள்கைகளையும் பகுத்து உணர்வது சற்று எளிதாகவே உள்ளது. கி.பி. 400-லிருந்து கி.பி. 800 வரையுள்ள காலத்தில் தோன்றிய மிக முக்கியமான நூல்கள் பல. அவற்றில் காமாந்தகாவின் நீதிசாரா அல்லது நல் அரசியலின் சாரம் என்ற நூலும், காத்யாயனரும் தேவலாவும் எழுதிய ஸ்மிருதியும், நாரத ஸ்மிருதியின் அசகாயா(Asahaya) வின் உரையும் சமூக அரசியல் நீதிமுறைகளைப்பற்றி விளக்கும் மிகச் சிறப்பான நூல்கள் ஆம். கி.பி. 400 முதல் 800 வரையில் தோன்றிய இந் நீதி நூல்களை முற்றிலும் அறிந்துகொள்ளுவதற்கு அடிப்படை நூல்களாகிய கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தை யும், யாக்ஞவல்கி (Yajna Valky)யின் ஸ்மிருதியையும் கற்றுத் தேர்தல் மிக அவசியம் எனலாம்.

இலக்கியச் சான்றுகள்

இலக்கியப் படைப்புகளிலிருந்து வரலாற்றுக்குத் தேவை யான பயனுள்ள சான்றுகளையும் குறிப்புகளையும் அறிந்து கொள்ளலாம். வரலாற்றை விளக்குவது இலக்கியப் படைப்பு

[1] ஹர்ஷரின் செப்பேட்டுக் குறிப்புகளின் மூலமும் மொழிபெயர்ப்பு களும் எபிகிராபியா இந்திகா(Epigraphia Indica)வின் IV, VII, XXI பகுதி களிலும், கார்பஸ் இன்ஸ்கிரிப்ஷனம் இண்டிகரத்(Corpus Inscripitinum Indicarum)திலும் காணப்பட்டன.

[2] நாளந்தாவின் வரலாறும், விளக்கமும் யுவான் சுவாங் பற்றிய தனிப் பகுதியில் காண்க.

களின் முக்கிய நோக்கமல்ல எனினும், கதைப்போக்கில் வரலாற்றுச் சான்றுகள் அவற்றில் குறிக்கப்படுகின்றன. ஆதலால், அவ் விலக்கியப் படைப்புகளை ஓரளவு வரலாற்று ஆதாரமாகக் கொள்வது பொருத்தம் உடையது ஆகும். தந்தின் (Dandin) எழுதிய தச குமார சரிதம் என்ற பத்து இளவரசர்களின் வீரச் செயல்கள் என்ற படைப்புச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், அது ஹர்ஷர் ஆட்சிக் காலத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன்தான் எழுதப்பட்டது. மேலும், ஹர்ஷர் ரத்னுவளி, பிரிய தர்சிகா, நாகானந்தம் என்ற மூன்று பெரும் இலக்கிய நூல்களை எழுதியுள்ளார். முதல் இரண்டும் அரசியலை எளிய நடையில் விளக்குகின்றன. நாகானந்தம் பௌத்தக் கருத்துகளை விளக்குவ தற்காகப் படைக்கப்பட்டதாகும். ஹர்ஷர் பௌத்தக் கொள்கை களின்மீது நம்பிக்கை கொண்டிருந்ததற்கு அஃது ஒரு சிறப்பான சான்று ஆகும். அம்மூன்று படைப்புகளும் ஹர்ஷரின் இலக்கியத் திறனுக்குச் சிறப்பான சான்றுகளாம். மேலும், அக்காலச் சமூக அமைப்பையும், அரசியல் கொள்கைகளையும், மத நம்பிக்கைகளை யும் நாம் அறிந்துகொள்ள அவை பெரிதும் உதவுகின்றன. பாணரின் காதம்பரி (Kadambari) அதே காலத்தைச் சேர்ந்த மற்றொரு படைப்பாகும். ஹர்ஷர் வரலாற்றை அறிய உதவும் பல குறிப்புகள் காதம்பரியில் காணப்படுகின்றன.

வாழ்க்கை வரலாறும் பயணக் குறிப்புகளும்

வாழ்க்கை வரலாறும், பயணக் குறிப்புகளும் ஹர்ஷர் காலத்தைச் சேர்ந்த இரண்டு வரலாற்று ஆதாரங்களாகக் கருதப் படுகின்றன. அவை இரண்டும் மிகவும் கவனமாக ஆராய்ந்து உணரத் தக்கவை ஆம். ஏனெனில், அவற்றில் எழுதுபவரின் நம்பிக்கையும், குறிக்கோள்களும், கருத்துகளும் இடம் பெறுவ தைத் தவிர்க்க இயலாது. செப்பேட்டு, கல்வெட்டுக் குறிப்புகள் சுருக்கமாகக் காணப்படுவதால், சொந்தக் கருத்தை ஏற்றிக் கூறும் சூழ்நிலை அவற்றில் மிக அரிது.

இது போன்ற சான்றுகள் இரண்டு நமக்குக் கிடைத்துள்ளன. பாணபட்டர் என்ற இந்தியக் கவிஞர் எழுதியுள்ள ஹர்ஷ சரிதா (Harsha Charita) என்ற ஹர்ஷரின் வரலாறும், பௌத்த மதத்தைத் தழுவிய சீனத்துப் பயணி யுவான் சுவாங்கின் 'ஹி யூ சி' (Hsi-yu-chi) என்ற குறிப்பின் மொழிபெயர்ப்பான 'மேலை நாடு பற்றிய குறிப்புகள்' (The Records of the Western World) என்னும் நூலும், மேலும் 'சட்டத்தின் தலைவரது வாழ்க்கை வரலாறு' (The Life of the Master of the Law) என்னும் ஹ்யூலி (Hui-Li) துறவி எழுதியுள்ள யுவான் சுவாங்கின் வாழ்க்கை வரலாறும் முக்கியச் சான்றுகளாம். ஹ்யூலி எழுதியுள்ள நூலுக்கு யுவான்

சுவாங் கொடுத்த பயணக் குறிப்புகளும், மற்றவையுமே அடிப்படையாகும். இவை அனைத்தும் ஒருங்கே ஹர்ஷ வரலாற்றை அறிந்துகொள்ளப் பயன்படுகின்றன. பாணர், யுவான் சுவாங் ஆகிய இருவருக்கும் ஹர்ஷர் ஆதரவளித்து அன்பு செலுத்தி வந்தமையால், அவர்களுடைய படைப்புகளும் எந்த அளவிற்கு நம்பத் தகுந்தவை என்பது ஆராயத் தக்கது.

யுவான் சுவாங்கின் பயணம்

யுவான் சுவாங் இந்தியாவில் ஏறக்குறைய பதின்மூன்று (கி.பி. 630-44) ஆண்டுகள் தங்கிப் பல்வேறு நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்தார். ஹர்ஷரின் நிருவாகத்திறனை யுவான் சுவாங் பெரிதும் புகழ்ந்து உரைக்கின்றார். ஹர்ஷரின் குடும்பச் சிறப்பும் விளக்கப்படுகிறது. யுவான் சுவாங் இந்தியாவின் அரசாங்க, சமூக, மதக்கொள்கைகளைத் தம்முடைய கன்பூஷியஸ் கொள்கை, சீன அரசியல் கொள்கை ஆகியவற்றின் பின்னணியில் விளக்கியிருக்க வேண்டும்.

தம் பயணக்காலங்களில் யுவான் சுவாங் பல கருத்தரங்குகளில் பங்கு கொண்டார்; புத்தரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட இடங்களுக்குச் சென்று களிப்புற்றார். குறிப்பிடத்தக்க எந்த ஒரு நிகழ்ச்சியும் அவருடைய கவனத்திலிருந்து தப்பவில்லை. தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்து வைத்துக் கொண்டு, சீனத்திற்குத் திரும்பியவுடன் தொகுத்துப் புத்தக வடிவில் வெளியிட்டார்.

யுவான் சுவாங்கின் குறிப்புகளின் நிறைவுகளையும் குறைபாடுகளையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்துப் பொதுவாக அவை நம்பத் தகுந்தவையாகவே காணப்படுகின்றன. ஆகவே, ஹர்ஷர் கால நிலையை விளக்கும் மிகப் பயனுள்ள ஆதாரமாக அவை விளங்குகின்றன. ஆனால், யுவான் சுவாங் ஏற்கெனவே ஏற்றுக் கொண்ட அரசாங்க நிருவாக முறைகள், உயர் தத்துவக் கொள்கைகள், தாய்நாட்டின் ஒழுக்க விதிகள், பௌத்த மதத்தின் மீது கொண்டிருந்த அளவற்ற பற்று முதலியவை அவருடைய விளக்கங்களில் பல இடங்களில் அடிப்படையாக நின்று ஒலிப்பதைக் காண முடிகிறது. இருப்பினும், வேற்று நாட்டைச் சேர்ந்த ஒருவர் இத்தகைய பின்னணிக் குறைபாடின்றிக் காணுதலோ, எழுதுதலோ இயலாது.

தாய்தந்தையரை மதித்துப் போற்றல் என்ற நற்குணம் சீனாவில் மிக முக்கியமாகக் கருதப்படுவதாகும். அதே போன்ற நிலை இந்தியாவிலும் இருந்தது என்பதை நிலைநாட்ட விரும்பிய

யுவான் சுவாங் அங்குமிங்குமாக நடைபெற்ற ஒருசில நிகழ்ச்சிகளைக்கொண்டு தம் கருத்தை வலியுறுத்த முயல்கின்றார். இந்தியச் சமூகப் பண்பாட்டின்படி தாய்தந்தையரை மதித்துப் போற்றும் நற்குணம் இன்றியமையாதது எனக் கருதப்பட்டது உண்மை. அதைச் செய்யத் தவறும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். எனினும், தண்டனை அபராதத் தொகை வசூலிக்கும் அளவில்தான் இருந்தது.[1] ஆனால், சீனத்துப் பயணி அக்குற்றம் செய்பவர்களின் மூக்கு, காது அல்லது கைகால்கள் வெட்டப்பட்டன என்றும், நாடு கடத்தப்பட்டனர் என்றும், காட்டிற்குத் துரத்தப்பட்டனர் என்றும் சீனப் பின்னணியைக் கருத்தில் கொண்டு மிகைபடுத்திக் கூறுகிறார்.[2]

சீனத்துப் பயணி புத்தரின் புனித பூமியைக் காணும் ஆர்வத்தால் உந்தப்பட்டு இந்தியா வந்து சேர்ந்தார். புத்தரின் போதனைகளில் மிக முக்கியமான அஹிம்சை எவ்வாறு இந்தியாவில் போற்றப்பட்டுப் பின்பற்றப்படுகிறது என்பதையும் அறிந்து கொள்ள யுவான் சுவாங் ஆர்வம் கொண்டிருந்தார். ஹர்ஷரின் காலத்தில் பின்பற்றப்பட்ட கொள்கைகளில் மனநிறைவைத் தெரிவித்து யுவான் சுவாங் போற்றுவதைக் காண்கிறோம். 'ஐந்து இந்தியாவிலும் புலால் உண்ணுதல் தடுக்கப்பட்டது. உயிர்களைக் கொல்லுதல் என்ற குற்றத்திற்கு மன்னிப்பு இன்றித் தண்டனை அளிக்கப்பட்டது'[3] என யுவான் சுவாங் கூறுவதைக் காண்கிறோம். இதற்குத் தக்க சான்றுகள் இல்லை. புலால் உண்ணாமையையும், உயிர்களைக் கொல்லாமையையும் மக்கள் பின்பற்ற வேண்டும் என ஹர்ஷர் கட்டளையிட்டிருப்பார் என்று எண்ண முடியவில்லை. நடைமுறைகளை உணர்ந்த திறன்மிக்க ஹர்ஷர் போன்ற ஒருவர் இப்படி நடந்துகொண்டிருக்க முடியாது எனலாம். யுவான் சுவாங் இவ்விதம் குறிப்பிட்டது யென்கி (Yenki), கு-ஷி(Ku-Chih) பகுதி ஹீனயான பௌத்தப் பிரிவினரைப் பற்றியதாக இருக்க வேண்டும்.[4] தம் நாட்டில் வாழும் பௌத்த மத ஹீனயானப் பிரிவைச் சேர்ந்த துறவிகளின் விருப்பங்களையும், தேவைகளையும் ஹர்ஷர்மீது ஏற்றி அவர் எழுதி இருக்க வேண்டும்; மற்றப்படி இந்தியாவைப் பற்றிப் பொதுவான விளக்கங்கள் தரும் சமயத்தில் மக்கள் உண்ணும் புலால் வகைகளையும், உண்ணத்

[1] காத்யாயனர் ஸ்மிருதி 'இது ஒரு குற்றம்' என்றே கூறவில்லை. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் (iii 20) 'சிறிய அபராதம் விதிக்கப்படலாம்' எனக் கூறுகிறது. மனு (viii 389) '600 அல்லது 100 பணம் அபராதம் விதிக்கப்படலாம்' எனக் கூறுகிறது.

[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 172

[3] வாட்டர்ஸ்-i-பக்கம் 344

[4] வாட்டர்ஸ்-i-பக்கங்கள் 53-60

த்குதியற்ற புலால் வகைகளையும் பற்றிக் குறிப்பிடுகிறார்.[1] 'அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருக்கும் முயல்களைக் கூட்டம் கூட்டமாகத் துரத்திச் சென்று அவற்றைக் கழிகளால் போலோ (Polo) பந்தை அடிப்பது போன்று அடித்தனர்'[2] என்று பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் கூறுகிறார். ஹர்ஷர் ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் வேட்டையாடுதல் தடுக்கப்படவில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. படையெடுப்பின் சமயத்திலுங்கூட உயிரினங்கள் துன்புறுத்திக் கொல்லப்பட்டன என்பதும் தெரிகிறது. ஹர்ஷர் பௌத்த மதத்தின்மீது கொண்டிருந்த பற்றின் காரணமாகத் தமது வாழ்க்கையின் பிற்பகுதியில் தமக்கு முன்னர் வாழ்ந்த மாமன்னர் அசோகரைப் போன்று புலால் உண்ணுதலை வெறுத்து ஒதுக்கினார். அரண்மனையில் மற்றவர்களுக்கும் புலால் உண்ண அனுமதி அளிக்கப்படவில்லை. இதனைத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாகவோ அல்லது வேண்டுமென்றே மிகைப் படுத்தியோ நாடு முழுவதும் புலால் உண்ணுதல் தடுக்கப்பட்டது என யுவான் சுவாங் குறித்திருக்க வேண்டும்.

மேலும், யுவான் சுவாங் புத்த மதத்தின்மீது கொண்டிருந்த அளவற்ற பற்றின் விளைவாகப் பல வியக்கத்தகு புத்த கதைகளைப் பற்றிக் கூறுகிறார். அவற்றில் பல புறக்கணிக்கப்பட்டவையும், ஓரளவிற்கே உண்மை கலந்தவையும் ஆம். அவற்றில் சில வரலாற்றுத் தொடர்புடையவையாக இருப்பதன் காரணத்தால், மிகச் சிறப்பாக விளக்கப்படுகின்றன. தாம் கேட்டவற்றை அப்படியே மாற்றம் எதுவும் செய்யாமல் சீனத்துப் பயணி குறித்து வைத்துள்ளார்; பௌத்த மதத்தின்மீது அளவற்ற ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டிருந்ததால், அக் கதைகளைக் கேள்விக்கு இடமின்றி ஏற்றுக்கொண்டார். தம்மைப் புத்தரின் தலைமையான சீடர்களுள் ஒருவராகக் காட்ட வேண்டும் என்ற விருப்பமும் அதற்கு மற்றொரு முக்கியக் காரணமாகும்.[3]

யுவான் சுவாங் நேரில் சென்று தாம் கண்ட நாடுகளின் பரப்பு, தூரம், மக்கள்தொகை, அமைந்திருந்த இடம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைத் தருவதை ஒவ்வொரு பகுதியிலும் காணலாம். ஆனால், அவை அனைத்தும் சீனத்துப் பயணி தாம் புரிந்துகொண்ட அளவில் எழுதிய குறிப்புகளாகையால் பல இடங்களில் சரியானவையாக இல்லை. அவை 'லைப்' என்ற பயணக் குறிப்பிலும், 'ரெக்கார்டு' (Record) என்ற மற்றொரு பயணக்குறிப்பிலும் ஒன்றுக்

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 178
2 ஹர்ஷ சரித்திரம் - மூலம் - பக்கம் 212; மொழிபெயர்ப்பு-பக்கம் 209
3 லைப் - பக்கம் 49

கொன்று முரண்பட்டுக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'லைப்' என்ற நூலில் கபிதா (Kapita) அல்லது சங்கிசா (Sankisa), பிலோஷன்னு[1] (Pi-lo-Shan-na)விற்குக் கிழக்கே இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், 'ரெக்கார்டு' என்ற நூலில் அது தென்கிழக்கே இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், இரண்டிற்கும் இடையே உள்ள தூரத்தை லைப், ரெக்கார்டு இரண்டும் ஒரே மாதிரிக் குறித்துள்ளன. தமாசவன (Tamasa-vana) மடத்திலிருந்து 50லி[2] தொலைவில் சைனு புக்தி(China Bhukti)யின் தலைநகர் அமைந்திருப்பதாக 'லைப்'-பில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'ரெக்கார்டு' 500லி தூரம் என்று கூறுகிறது. காஷ்மீர் அரசின் பரப்புச் சுமார் 7000லி என ரெக்கார்டில் காணப்படுகிறது. ஆனால், வேறு சீன ஆதாரங்களில் எடுத்துக்காட்டாக மா துஅன்-லின்' (Ma-Tuan-lin)[3] என்ற நூல் காஷ்மீரின் பரப்பளவு சுமார் 4000லி எனக் கூறுகிறது. இது போன்று காணப்படும் தவறுகள், கவனக் குறைவின் காரணமாக ஏற்பட்டவையாகவோ அல்லது எழுதியவர் வேண்டுமென்றே செய்த தவறுகளாகவோ இருக்கக் கூடும். இந்தியா பற்றி யுவான் சுவாங் தரும் நீண்ட விளக்கங்களையும், குறிப்பிட்ட நாடுகளையும் நாம் எண்ணிப் பார்க்கையில், இது போன்ற சிறு தவறுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. யுவான் சுவாங் பயணக்குறிப்புகளில் காணப்படும் நம்புவதற்குக் கடினமான செய்திகளை முழுவதும் தவறு என நிராகரிப்பதும் கூடாது. மாறாகத் தீர ஆழ்ந்து ஆலோசித்துப் பார்க்கும் வேளைகளில் அவை உண்மையானவையாக இருக்கக்கூடும் என்பது விளங்கும். இதற்கு எடுத்துக்காட்டாக ஹர்ஷரின் யானைப்படையின் அளவாக யுவான் சுவாங் குறிப்பதைக் கூறலாம். சந்திரகுப்த மௌரியர், மகாபத்மநந்தன் போன்ற அரசர்களின் யானைப்படையுடன் ஒப்பிட்டு நோக்கினால், யுவான் சுவாங் குறிப்பிட்ட அளவு உண்மையானதாகவே இருக்கும் என்பதை உணரலாம். நாளந்தாப் பல்கலைக்கழகத்தில் சுமார் பத்தாயிரம் மாணவர்கள் பயின்றனர் என யுவான் சுவாங் தரும் குறிப்பையும் இவ்விடத்தில் குறிப்பிடலாம்.[4] சீனத்துப் பயணி இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சாதாரணமாகக் காணப்பட்ட பௌத்த மடங்களில் பயின்ற துறவிகளின் எண்ணிக்கை ஆயிரம் எனக் குறித்திருப்பதைக் காண்கிறோம். இந்த அடிப்படையில் காணும் சமயத்தில் நாளந்தாவின் மாணவர்கள் எண்ணிக்கை நம்ப முடியாத அளவிற்கு அதிகம் எனக் கூறமுடியாது. ஹர்ஷர் கனோஜ் பேரவையின் தத்துவக் கருத்தரங்கில்

1 வாட்டர்ஸ் - i - பக்கங்கள் 332—333; லைப் - பக்கம் 81

2 8லி ஒரு மைல்

3 வாட்டர்ஸ் -i -பக்கம் 261

4 லைப் - பக்கம் 112

பங்கு கொள்வதற்கு நாளந்தாவிலிருந்து சுமார் ஆயிரம் துறவிகளை அழைத்தார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. நாளந்தா பற்றிய சீனத்துப் பயணியின் மற்றக் குறிப்புகளும், புதை பொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளும் அப் பல்கலைக் கழகத்தின் கட்டடங்கள் நான்கு மாடிகள் கொண்டவை என்பதைத் தெரிவிக்கின்றன. தற்சமய அகழ்வு ஆராய்ச்சியின்படி இடைக்கால நாளந்தாப் பல்கலைக்கழகம் குறிக்கப்பட்டிருக்கும் இடத்தைத் தவிர, மற்றப் பகுதிகளிலும் வெகுதூரம் பரவியிருந்தது என்பது **H. D.** சங்காலியா(Sankalia)வின் கருத்தாகும்.

சீனத்துப் பயணி தாம் சென்ற இடங்களைப் பற்றித் தரும் மிக முக்கியமான சிறப்பான விளக்கங்களிலிருந்து, அவர் அவற்றைப் பற்றிய செய்திகளைத் திரட்டிக்கொண்டு சென்றிருக்க வேண்டும் என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது. அவ் விளக்கங்களில் யுவான் சுவாங் தாமாகவே எழுதிய சொந்த அனுபவங்களுடன், இந்திய அரசுகள் பற்றிச் சேகரித்துக்கொண்டவையும் அடங்கும். யுவான் சுவாங் தாயகம் திரும்பும் வழியில் சிந்து ஆற்றில் எதிர் பாராத விதமாக இழக்க நேர்ந்த 50 பயணக் குறிப்புப் பிரதிகளும் **(Sutras),** பலவகைக் கவிதைகளும் மறுபடியும் திரும்பப் பெறப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. பயணக் குறிப்புகளுக்கு நூல்வடிவம் தருவதற்குத் தாமே எழுதிய குறிப்புப் பிரதிகள் பெரிதும் உதவின என்ருலுங்கூட, யுவான் சுவாங்கின் நினைவு ஆற்றல் வியக்கத்தக்க வகையில் உதவியிருக்கின்றது. பயண நிகழ்ச்சிகள், அனுபவங்கள் அவர் மனதில் பசுமையாக இருந்ததால், கி.பி. 646ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நூல் முற்றுப்பெற்றது. ஹர்ஷரிடமிருந்து விடைபெற்ற மூன்று ஆண்டுகளுக்கு உள்ளாகவும், இந்தியாவிலிருந்து சென்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளும் தம்முடைய பயணக் குறிப்புகளுக்கு நூல்வடிவம் தந்துவிட்டார் யுவான் சுவாங். இச் சூழ்நிலைகள், யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் நம்பிக்கை கொள்ளத்தக்க வரலாற்று ஆதாரங்கள் என்பதற்கு உதவும் சான்றுகளாம்.

யுவான் சுவாங்கின்மீது அடிக்கடி கூறப்படும் பெரிய குறைபாடு, ஹர்ஷரைப்பற்றிய மிகப் புகழ்ச்சியான தகவல்களைத் தருகிருர் என்பதாகும்.[1] அதற்குக் கூறப்படும் முக்கியமான காரணங்கள் இரண்டு. அவை, யுவான் சுவாங் ஹர்ஷரால் வரவேற்றுப் போற்றப்பட்டுச் சிறப்பான விருந்தினராக நடத்தப் பட்டார் என்பதும், ஹர்ஷரும் சீனத்துப் பயணியின் மதமான

[1] **R. C.** மஜூம்தார், Ancient India - பக்கம் 263
S. K. பானர்ஜீ - I. H. Q. 27 (1951) 312-20

பௌத்த மதத்தை விரும்பியவர் என்பதோடு மட்டுமன்றி பௌத்தக் கருத்துகளை ஆர்வத்துடன் பின்பற்ற முயன்றார் என்பதும் ஆம். யுவான் சுவாங் பௌத்த மதத்தை அல்லது அம் மதத்தைச் சார்ந்த அரசர்களைப் பற்றி விளக்கும் சமயத்தில் காட்டுகின்ற ஆர்வம், ஹீனயான, இந்து அரசர்களைப் பற்றிய குறிப்புகளில் காட்டவில்லையென்றாலும், முற்றிலும் ஒரு சார்பான விளக்கங்களை மட்டும் தரவில்லை என்பதற்குத் தக்க எடுத்துக் காட்டுகள் பல உண்டு.

இந்திய அரசர்கள் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பின் கண்ணை மூடிக்கொண்டு புகழ்ந்து, வேறு மதத்தினரின் பெருமைகளை மறந்துவிடும் போக்கு யுவான் சுவாங்கின் குறிப்பு களில் காணப்படவில்லை என்பதற்குப் பல சான்றுகளைத் தரலாம். ஜலந்தரா (Jalandhara)[1], கோசலா (Kosala)[2], ஷி-ஷி-டு (Chih-Ch-To) என்ற ஜஜ்ஹோட்டி (Jajhoti)[3] முதலிய அரசுகளின் பௌத்தச் சார்புள்ள அரசர்களை நல்லொழுக்கமும், அறிவும், ஞானமும் மிக்கவர்கள் என யுவான் சுவாங் புகழ்கிறார். மஹேஸ்வரபுரா (Mahesvara-pura)[4], பாரியாத்ரா (Pariyatra)[5], உஜ்ஜயினி[6] ஆகிய நாடுகளை ஆண்டவர்கள் இந்துக்களாக இருப்பினும், வீரமும் கற்பதில் ஆர்வமும் மிக்கவர்கள் என அவரால் புகழ்ந்துரைக்கப் படுகின்றனர். ஹீனயானப் பிரிவிற்கு ஆதரவு நல்கிய ஹிரண்ய பர்வதம் (Hiranya Parvata)[7], கூர்ஜரம் (Gurjara)[8] முதலிய நாடுகளின் அரசர்கள் அறிவு சான்ற, நன்மை பயக்கும் ஆட்சி யாளர்கள் எனப் புகழப்படுகின்றனர். வலபியின் அரசர் துருவபட்டர், யுவான் சுவாங்கிற்கு ஆதரவு நல்கிய ஹர்ஷரின் மருமகனாக இருப்பினும், 'அறிவற்ற, அரசியல் உணராத, அவசர புத்தியுள்ளவர்'[9] என யுவான் குறிப்பிடுகிறார். பாருகச்சா (Bharu Kachchha) மக்களைப் பற்றி 'பெரிய பிரிவு (Great Vehicle), சதவீரா முறையைத் தழுவிப் பத்துச் சங்கராமாக்களைக் கொண்டு கொள்கைப்படி நடப்பவர்கள் எனினும் தவறு புரிபவர்கள் எனவும் பண்பாடும் ஆர்வமும் இன்றிக் குறுகிய மனப்பான்மையுடன் தீயவர் களாக விளங்கினர்' எனவும் கூறுகிறார்.[10] மதிபுரா மக்களைப்பற்றி யுவான் சுவாங் மிக உயர்வாகக் கூறுவதைக் காண்கிறோம். அங்கு இந்துக்களும், பௌத்தர்களும் சமவிகிதத்தில் காணப்பட்டாலும் இந்துக் கோயில்களும் சங்கராமாக்களும் 50:20 என்ற விகிதத்தில் காணப்பட்டன. அவர்கள் உண்மையும் நம்பிக்கையும் மிக்கவர்கள்

1 பீல் - i - பக்கம் 176
2 பீல் - ii - பக்கம் 209
3 பீல் - ii - பக்கம் 271
4 பீல் - ii - பக்கம் 271
5 பீல் - i - பக்கம் 179
6 பீல் - ii - பக்கம் 271
7 பீல் - ii - பக்கம் 187
8 பீல் - ii - பக்கம் 270
9 பீல் - ii - பக்கம் 267
10 பீல் - ii - பக்கம் 259

என யுவான் சுவாங் புகழ்ந்துரைக்கிறார். அவர்களிடம் காணப் பட்ட கற்கும் ஆர்வத்தைச் சீனப்பயணி மிகவும் சிறப்பித்துக் கூறுகிறார்.[1]

யுவான் சுவாங் மகாராஷ்ட்டிரத்தைப்[2] பற்றித் தரும் விளக்கத்தை இவ்விடத்தில் சிறப்பாகக் குறிப்பிடலாம். வாதாபி யின் அரசரான இரண்டாம் புலிகேசி புத்தரின் போதனைகளில் ஆர்வம் மிக்கவர் அல்லர்; மேலும் ஹர்ஷரைப் போல யுவான் சுவாங்கை வரவேற்றுப் பெருமையளிக்கவும் இல்லை; மாறாகச் சீனத்துப் பயணியின் அபிமானம் மிக்க ஹர்ஷரின் பகைவராகவும் விளங்கினார். இச் சூழ்நிலைகளில் யுவான் சுவாங் அவரைப்பற்றித் தரும் விளக்கம், பயணியின் நடுநிலையையும் குணநலனையும் குறிக்கின்றன. புலிகேசி மக்களுக்குச் செய்த நன்மைகளையும், எதிர்காலத்தை மனதிற்கொண்டு திட்டங்கள் வரையும் அவருடைய திறமையையும் அவருடைய நாட்டிற்கு வெகு தூரத்திற்கு அப்பால் வாழ்ந்த மக்களும் அறிவர். புலிகேசியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மக்கள் அவரிடம் மிகவும் நன்றியுடன் நடந்துகொண்டனர். 'சீலாதித்ய மகாராஜா கிழக்கிலும் மேற்கிலும் பல நாடுகளை வென்று, தன் போர்வலிமையைத் தூரப் பகுதியில் உள்ள அரசுகளும் உணருமாறு செய்தாலும்,புலிகேசியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மக்கள் ஹர்ஷருக்குப் பணியவில்லை' என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.[3]

கௌடாவின் அரசர், பழங்கால இந்தியாவில் மதத்துறையில் சகிப்புத்தன்மை கொண்டிராத ஒருசில அரசர்களுள் ஒருவர் எனலாம். புத்தரின் வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட புனிதப் பொருள்களுக்குத் தீங்கு இழைத்தவராகக் கௌடா அரசர் குறிப்பிடப்படுகிறார்.[4] பௌத்த மதத்தைத் தழுவியவர் என்ற முறையில் யுவான் சுவாங் அதை வரலாற்றில் குறித்துள்ளது தம்முடைய நம்பிக்கைகளைக் குறிப்பாக உணர்த்துவதற்கேயன்றி, சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது போலச் சசாங்கனை மிகக் கீழா கச் சிறுமைப்படுத்துவதற்கு அன்று எனக் கூறலாம்.[5] சசாங்கன் மதத்தின்மீது நம்பிக்கை அற்றவர் எனக் குற்றம் சாட்டி, அவருடைய கட்டளைப்படி புத்தரின் சிலை அழிக்கப்பட்ட செய்தியை

[1] பீல் - i - பக்கம் 192

[2] பீல் - ii - பக்கம் 255 ff
வாட்டர்ஸ் - ii - பக்கம் 239 ff

[3] யுவான் சுவாங் பயணக்குறிப்புகள் (Hsi-yu-chi) - மூலம் XI 12b ; பீல் - ii - பக்கம் 256; வாட்டர்ஸ்- ii - பக்கம் 239

[4] புத்தர் ஞானோதயம் பெற்ற போதி மரத்தைச் சசாங்கன் வீழ்த்தினார் என வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

R. C. மஜும்தார் - History of Bengal - i - பக்கங்கள் 62, 71-6

அறிந்தபின், நோயினுல் இறந்தார் எனக் கூறுமளவில் யுவான் சுவாங் கௌடாவின் அரசரைத் தாழ்த்திக் கூறுவதை நிறுத்திக் கொள்கிருர். ஹர்ஷரின் மூத்த சகோதரர் ராஜ்யவர்த்தனர் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி பற்றி பாணர் தரும் விளக்கங் களுடன் யுவான் சுவாங்கின் குறிப்புகளை ஒப்பிட்டால், சசாங்கனைப் பலமடங்கு பாணர் கடுமையாகத் தாக்குவதைக் காணலாம்.[1]

பயணக் குறிப்புகளை யுவான் சுவாங் சீனுவில் தொகுத்து எழுதினுர். அவற்றை எழுதுவதற்குச் சீனப் பேரரசர் அளித்த ஆதரவு மகத்தானது. ஆகவே, இந்திய அரசர்களின் விருப்பு வெறுப்புகளினுல் பாதிக்கப்பட முடியாத தூரத்தில் அவர் இருந்தமை புலனும். யுவான் சுவாங் ஹர்ஷரை மிகவும் மதித்துப் போற்றினுர் என்றுலும் இந்திய அரசர்களின் கட்டுப்பாட்டில் சீனத்துப் பயணி என்றும் இருந்ததில்லை. ஆகவே, இந்திய அரசர் களையும் மக்களையும் பற்றி உயர்வாகக் கூற வேண்டும் என்ற நிலை யுவான் சுவாங்கிற்குக் கிடையாது. அப்படித் தம்மைப் போற்றிய அரசர்களிடம் சீனப் பயணிக்கு உயர்வான எண்ணமும் மதிப்பும் இருந்ததன் காரணமாகச் [illegible]ான குறிப்புகளாகுமா என்று எண்ணும் அதே வேளையில், யுவான் சுவாங் மிகவும் விரும்பி நெடுங்காலமாகப் போற்றிவந்த பௌத்த மதத்தின் போதனைகள் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தை அவருக்கு உணர்த்தியே இருக்கும் என நம்பலாம். யுவான் சுவாங்கிற்கு இந்தியாவில் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்திற்குக் காரணம், பௌத்த மத போதனைகளை மேலும் கற்க வேண்டும் என்பதும், புத்தரின் புனிதத்தலங்களையும் பொருள்களையும் தரிசிக்க வேண்டும் என்பதுமேயன்றி, இந்திய அரசர்களை மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்பதோ, அவர்களிடமிருந்து தமக்கு வேண்டிய சலுகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதோ அல்ல. இந்தியாவில் அவர் தங்கி யிருந்த சமயம் பல தடவைகள் அரசர்களைச் சந்திப்பதற்கு மறுத்தும் தாமதப்படுத்தியும் அவர்களுடைய கோபத்திற்கு ஆளாகி இருக்கிருர்; மேலும், அவர்கள் விரும்பியபடி நெடுங்காலம் அரண்மனைகளில் தங்கி இருப்பதற்கும் மறுத்திருக்கிருர். சீனுவில் இருந்து இந்தியாவுக்கு வரும் சமயம் துர்பான்(Turfan)-ல் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். இந்தியாவிற்குச் செல்லக் கூடாது என்ற கட்டளையை அரசர் திரும்பப் பெற்றுத் தம்மை இந்தியா செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற முடிவை வலியுறுத்துவ

[1] ஹர்ஷ சரித்திரம் - மொழிபெயர்ப்பு - பக்கங்கள் 179-80

தற்காக யுவான் சுவாங் மூன்று நாள்கள் தொடர்ந்து உணவு உட்கொள்ள மறுத்தார்; இந்தியாவிலும் ஹர்ஷரின் அழைப்பை உடனே ஏற்றுக்கொள்ளவில்லை; தம் பணிகளைச் செவ்வனே முடிக்க வேண்டும் என்பதற்காக ஹர்ஷரின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவும் அவரைச் சந்திக்கவும் மறுத்தார் ; ஹர்ஷரின் இரண்டாவது வேண்டுகோளுக்கு இணங்கியே அவரைச் சந்தித்தார். அதே போன்று காமரூபத்திற்குச் செல்லவும் முதலில் யுவான் சுவாங் மறுத்தார். ஆனால், காமரூபத்தின் அரசர் குமாராவின் இரண்டாவது வேண்டுகோளுடனேயே சீனப் பயணி அதை ஏற்றுக்கொள்ளாமல் வர மறுத்தால் பௌத்த மதத் தொடர்புள்ளவைகளுக்குத் தீங்கு இழைப்பதாகத் தெரிவிக்கப்பட்ட அச்சுறுத்தலும் உடனிருந்தது. ஆகவே, இணங்குவதைத் தவிர வேறு வழியின்றி அங்குச் சென்றார்.

யுவான் சுவாங்கின் தாய்நாட்டுப் பற்றும், சீனப் பேரரசர் அளித்த அன்பு, ஆதரவினால், அவருடைய அன்பிற்குரியவராக நடந்துகொள்ள வேண்டும் என்ற யுவான் சுவாங்கின் விருப்பமும், ஹர்ஷரை மிக அதிகமாகப் புகழ்ந்து கூறுவதைத் தடுத்திருக்கும் எனலாம். மேலும் ஹர்ஷரும் சீனப் பேரரசரும் அரசாங்க முறையில் தொடர்பு கொண்டிருந்தமையால், சீனரான யுவான் சுவாங் வெளி நாட்டைச் சேர்ந்த அரசர் ஒருவரைப் புகழ்தல் அரசியல் பண்பாட்டுக்குப் புறம்பானதாகக் கருதப்பட்டு விடக்கூடும்.

யுவான் சுவாங்கின் பயணக்குறிப்புகளுக்கு, அவருடைய மாணாக்கர்களான ஹ்யூலி (Hui-li), என்சங் (Yent scung) ஆகிய இருவரும் எழுதிய 'லைப்', 'ரெக்கார்டு' தரும் விளக்கங்கள், ஏழாம் நூற்றாண்டின் இந்திய வாழ்க்கையைப் பற்றி மேலும் அறியத் துணை புரிகின்றன. பௌத்த விழாக்கள் பற்றிய விளக்கங்களில் ஆங்காங்கே ஹர்ஷரின் வாழ்க்கை பற்றிய குறிப்புகளும் 'லைப்'-ல் காணப்படுகின்றன. வேறு எந்த வழிகளிலும் அவற்றைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்கு இல்லை. 'ரெக்கார்டு'-ல் கொடுக்கப்பட்டிருக்கும் பல குறிப்புகளுக்கு, 'லைப்'-ம் ஆதாரமாகத் துணை புரிவதோடு, இடையே பல சமயங்களில் புதிய செய்திகளையும் தருகிறது. 'ரெக்கார்டு' குறிப்புகளைவிட மேலும் சில புதிய விளக்கங்கள் காணப்படுவதால், 'லைப்' மிகப் பயனுள்ளதாக விளங்குகிறது.

முதல் ஐந்து அத்தியாயங்களை ஹ்யூலி என்ற பௌத்தத் துறவி கி.பி. 648-649ஆம் ஆண்டுகளுக்கிடையே எழுதி முடித்தார். ஆறிலிருந்து பத்து வரை உள்ள அத்தியாயங்கள் யுவான் சுவாங்

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து, சீனுவிற்குத் திரும்பியபின் நடைபெற்ற நிகழ்ச்சிகளை விளக்குகின்றன. என்சங் அவற்றை எழுதி முடித்தார். ஏற்கெனவே எழுதி முடித்த குறிப்புகளைத் தொகுத்துச் சீர்படுத்தும் பணியையும் அவர் மேற்கொண்டார். ஹ்யூலி கி.பி. 670ஆம் ஆண்டு இறந்தார். 'லைப்'-ன் பத்து அத்தியாயங்களையும் கி.பி. 688-ல் என்சங் வெளியிட்டார்.

'ரெக்கார்டு'-ல் குறிக்கப்பட்டிருக்கும் விளக்கங்கள் அனைத்தையும் யுவான் சுவாங், தம் துணைவர்களின் உதவியுடன் தாமே தொகுத்துக் கண்காணித்தார். அப் பணியை மேற்கொண்ட குழுவில் ஹ்யூலியும் இருந்தார். ஆகவே, அவர் யுவான் சுவாங்கின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் சமயம் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 'லைப்' இரண்டாவது நபரால் எழுதப்பட்ட நூல் என்றும், தேவையான பல மாற்றங்களைக் கொண்டு விளங்குவதால் 'ரெக்கார்டு' குறிப்புகளினின்றும் சற்றுக் குறைந்த வரலாற்று ஆதாரமாக விளங்குகிறது.

இந்திய வரலாற்றுச் சான்றுகளில் காணப்படும் பலவீனங்களை விடுத்து, யுவான் சுவாங்கின் இரண்டு பெரும் வரலாற்று ஆதார நூல்களையும், அவற்றைத் தந்து உதவியவரின் சிந்தனைப் பாங்கையும், பின்னணிச் சூழ்நிலைகளையும் ஆராய்ந்து பார்க்குமிடத்து, அந் நூல்கள் மிகவும் பயனுள்ளவையாகவும் நம்பிக்கை மிகுந்த சான்றுகளாகவும் விளங்குகின்றன என்பது தெளிவாகின்றது.

ஹர்ஷரின் இறப்பிற்குப் பின் இந்தியாவிற்கும், சீனுவிற்கும் நல்லுறவை வளர்க்கச் சென்று வந்த தூதுக் குழுக்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிந்துகொள்ளப் பல சீன ஆதாரக் குறிப்புகள் பயனுள்ளவையாக விளங்குகின்றன.[1]

பாணரின் குறிப்புகள்

பாணர் ஹர்ஷரின் அவைப்புலவராக விளங்கினுர். ஆகவே, ஹர்ஷரைப் பற்றிய சார்பான புகழுரைகளை அவர் எழுதிய ஹர்ஷரின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் தந்திருக்கிறுர் எனப் பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆனுல், அந்நூலில் மிகையான புகழுரைக்குப்பின் ஹர்ஷரின் குண நலன்கள், சாதனைகள், அக்கால வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் தெளிவான விளக்கங்கள் முதலியன காணப்படுகின்றன.

1 D. தேவஹூட்டி - ஹர்ஷா - ஏழாம் அத்தியாயம் காண்க.

பொதுவான மிகையமிசங்களும், புகழுரைகளும் தவிர்க்க முடியாதவையாகவே கருதப்பட வேண்டும்.

பாணபட்டர் பிராமண குலத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை கல்வியறிவு மிக்கவர். இளவயதிலேயே பாணர் தம் தாயை இழந்தார். அவருக்கு வயது பதினான்கு நிரம்பிய சமயம் தந்தையும் இறந்தார். பாணரை அவருடைய தந்தை மிகவும் அன்பாக வளர்த்தார். எனினும், பல ஆண்டுகளை, அக்கால குருகுலக் கல்வி முறைப்படி, தம் ஆசிரியரின் இல்லத்திலேயே கழித்தார். தந்தை இறந்தபின் பாணர் வேளாண்மையில் ஈடுபட்டார். பலதரப்பட்ட வாழ்க்கை அனுபவங்கள் பாணருக்குக் கிடைத்தன. பல்வேறு குணமுடைய மக்களுடன் கலந்து பழகி உறவாடும் ஆர்வம் இயல்பாகவே பாணரிடம் காணப்பட்டது. எதையும் ஆராய்ந்து உணர்பவர் என்ற புகழுடன், அனுதாபத்துடன் மனித இயல்புகளைப் புரிந்துகொண்டு பொறுத்துக்கொள்ளும் குணநலனும் பாணரிடம் சிறந்து விளங்கின.

கவிஞர்கள், கருமான், முரசு ஒலிப்பவர், செப்பேடுகள் எழுதுபவர், பணியாள்கள், பாணரின் தந்தைக்குக் கீழ்க்குலப் பெண் ஒருத்தியின் மூலமாகப் பிறந்த இரு சகோதரர்கள்[1] ஆகியோரின் நட்பு ஒருபுறமும், வாலிபப் பருவமுள்ள பிராமணர்கள், கற்றுத் தேர்ந்த கல்வியாளர்கள், அரசவைப் பிரதிநிதிகள், எல்லார்க்கும் மேம்பட்ட அரசர் ஆகியோருடன் பழகும் வாய்ப்புகளும் பாணருக்குக் கிடைத்தன. பாணருக்குக் கிடைத்த இது போன்ற அனுபவங்கள் அவருக்குப் பிற்காலத்தில் பெரிதும் உதவின. சமூகத்தின் எல்லா நிலையைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையைப் பற்றி நேரே கண்டு பெற்ற அறிவும், அரச குலத்துடன் எளிதாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பும் பெற்றிருந்ததால், அவற்றைப் பற்றி விளக்கப் பாணர் தகுதி வாய்ந்தவரானார். ஹர்ஷ சரித்திரத்தின் பெரும்பகுதி ஹர்ஷரின் இளமை வாழ்க்கையையும், அவர் அரசு பொறுப்பு ஏற்றதையும் பற்றி விளக்குகிறது. அக்காலத்தில் பாணர் ஹர்ஷருடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. இருப்பினும், படையெடுப்பு ஆரம்ப விழா, இளவரசர் பிறப்பு, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளின் விளக்கங்களைக் காணும்போது, அதுபோன்ற நிகழ்ச்சிகளை ஹர்ஷரின் ஆட்சிக்காலத்தில் கண்டு களித்த அனுபவங்களைக்கொண்டுதான் விளக்கியிருக்க முடியும் எனக் கருதலாம். ராஜ்யவர்த்தனரின் இறப்பிற்குப் பின் ஹர்ஷர் அரச பதவியேற்றல், காமரூபத்தின் அரசருடன் உடன்படிக்கை செய்துகொள்ளுதல், துன்பமுற்ற தங்கையைத் தேடி அலைதல்

[1] ஹர்ஷ சரித்திரம் - மூலம் - பக்கம் 42; மொழிபெயர்ப்பு - பக்கம் 32

ஆகிய நிகழ்ச்சிகளை விளக்குவதற்கு பாணர், அரசவைப் பிரதிநிதிகளும், மக்களும் கூறுவதைக் கேட்டுத் தெரிந்துகொண்ட செய்திகளின் அடிப்படையில்தான் எழுதி இருக்க வேண்டும். இருப்பினும், பாணருக்கே உரிய எதையும் ஆராய்ந்து பார்க்கும் உணர்வும், மக்களுடன் எளிதாகக் கலந்து உறவாடும் ஆர்வமும், நாட்டின் நிகழ்ச்சிகள் பற்றி இச் செய்திகளைத் திரட்டுவதற்குப் பெரிதும் உதவின என பாணர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். அரசவைப் பிரதிநிதிகளின் 'அரட்டை'களிலிருந்தும் பாணர் தமக்குத் தேவையான செய்திகளை அறிந்துகொண்டார். ஹர்ஷ சரித்திரத்தின் பெரும்பாலான பகுதிகள், அவர் கேட்டு அறிந்து கொண்டவற்றின் மூலம் எழுதியவை எனினும், அவை உண்மையானவை என்பதற்கு வேறு வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன.

பாணர் தம்முடைய அறிவாற்றலை மிகச் சாதுரியமாக ஹர்ஷ சரித்திரத்தில் பயன்படுத்திக்கொள்கிறார். ஹர்ஷரின் புகழைப்பற்றி மிகையாகக் கூறுவது போல அன்றி, நிகழ்ச்சிகளை உண்மையுடன் தொடர்புபடுத்திக் கூறும் ஆற்றல் பாணருக்கு இருந்தது. தம்முடைய சொல்லாற்றலின் காரணமாக அவற்றை நடைமுறைக்கு ஏற்ப, தம்மைப் போற்றிக் காப்பவரும் தவறாக எடுத்துக்கொள்ள முடியாதபடி விளக்குவதில் வல்லவராக விளங்குகிறார். பாணரின் இத் திறமையை ஹர்ஷ சரித்திரத்தில் பல இடங்களில் காணலாம். கனோஜ் அரசைக் காக்கும் முயற்சியில் ராஜ்யவர்த்தனர் கொலை செய்யப்பட்டு இறந்தபின், ஹர்ஷர் அப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது வரை உள்ள குழப்பமான இடைக்காலத்தில் பண்டி, கனோஜ் அரசவைப் பிரதிநிதிகளிடம் ஹர்ஷரை அரசராக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந் நிகழ்ச்சியை பாணர் கீழ்க் காணுமாறு விளக்குகிறார்: 'ஹர்ஷரைச் செல்வத்தைக் கொடுக்கும் தேவதை (இலக்குமி) அணைத்துக்கொண்டாள்....... ஆகவே, விருப்பம் இல்லாத ஹர்ஷர் அரியணையில் அமரும்படி கட்டாயப் படுத்தப்பட்டார்.'[1] காமரூபத்தின் தூதுவருக்கும், ஹர்ஷருக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை ஹர்ஷ சரித்திரத்தில் காணப்பெறும் விளக்கங்களின் மூலம் அறியும்போது காமரூபத்தின் நட்பு, புதிதாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கும் ஹர்ஷருக்கும் மிகத் தேவையான ஒன்று என பாணரே உணர்வதை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. காமரூபத்தின் அரசர் பாஸ்கரவர்மனின் நட்பு ஹர்ஷருக்கு அத் தருணத்தில் மிகத் தேவையானது என்பதை நிலை நிறுத்த வேறு பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இருப்பினும், உடன்படிக்கை ஏற்றுக்

1 ஹர்ஷ சரித்திரம் - மூலம் - பக்கம் 70 ; மொழிபெயர்ப்பு-பக்கம் 57

கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளை ஹர்ஷரின் பெருமைகளுக்கு ஊறு விளைவிக்காத வகையிலும், அதே நேரத்தில் உண்மைகளை மறைத்து மறுக்காமல் விளக்குவதில் பாணரின் திறமை சிறந்து விளங்குகிறது.[1]

பாணர் அக்கால வழக்கப்படி மிகையான அலங்காரச் சொல் அடுக்குகளுடன் ஹர்ஷரின் வாழ்க்கை வரலாற்றை விவரித்தாலும், ஹர்ஷ சரித்திரத்திலிருந்து அப் புகழுரைகளை நீக்கி, வரலாற்றுப் பயனுடைய உண்மைகளை மட்டும் பிரித்தெடுப்பது கடினம் அன்று. ஹர்ஷரின் உருவத்தை பாணர் பல பக்கங்களில் விளக்கி இருக்கிறார்.[2] எனினும், ஹர்ஷரின் உருவ அமைப்பை முற்றிலும் சரியாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. வேறு சமஸ்கிருதக் கவிஞர்கள், தங்களுடைய கதைகளில் வரும் கதாநாயகனையும், கதா நாயகியையும் வழக்கமாகப் பயன்படுத்தும் உயர்வான சொற்றொடர்களினாலேயே பாணரும் ஹர்ஷரை மிகச் சிறப்பாக விளக்குவதைக் காண்கிறோம். அரசரின் உடை பற்றிய விளக்கங்கள் நம்பத் தகுந்தவையாகவே காணப்படுகின்றன. அதே போன்று நிர்கதா (Nirghata) என்ற வனத்துறை அதிகாரியின் தோற்றம், உடை பற்றியும் சிறப்பான விளக்கங்கள் காணப்படுகின்றன.

அரண்மனை, படையெடுப்புக் கூடாரம், விந்தியமலைப் பகுதியின் குடியிருப்புகள் ஆகியவை பற்றி பாணர் தரும் வர்ணனைகள், அக்காலத்தின் செயற்கையான நடையில் விவரிக்கப் பட்டிருப்பினும், தெளிவான விளக்கங்களாகக் காணப்படுகின்றன. அக்காலத்தில் அவை எப்படி இருந்தன என்பதை அப்படியே நாம் புரிந்துகொள்ளத்தக்க வகையில் அவ்விளக்கங்கள் அமைந்துள்ளன. பாணரின் நகைச்சுவை உணர்விற்கு ஹர்ஷ சரித்திரத்தில் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. எவரும் விரும்பி ஏற்றுக்கொள்ளக் கூடிய நடையில் உள்ள நகைச்சுவை உணர்விற்குச் சாதாரண வேலைக்காரனிலிருந்து அரசர்வரை எவரும் பாணரிடமிருந்து தப்ப வில்லை. திக்விஜயத்தை மேற்கொண்டு ஹர்ஷர் படைகளை நடத்திச் சென்ற சமயத்தில் படைவீரர்கள், மற்றும் வேலைக்காரர் களின் களிப்பு நிகழ்ச்சிகளை விளக்கும் பகுதிகளைவிட, வாழ்க்கையின் நடைமுறை உண்மைகளை அப்படியே எடுத்துக் காட்டக் கூடியவை வேறில்லை. படைகள் அணிவகுத்துச் செல்லும் சமயத்தில் வழியில் அமைந்திருந்த வயல்களிலிருந்து விரைவாகப் பயிர்களைக் கவர்ந்ததை, 'நாங்கள் சென்றபின் பயிர்களுக்கு ஏற்பட்ட கதியை யார் சொல்ல முடியும்?' எனப் படைவீரர்கள் கூறி விரைவதாகப்

[1] ஹர்ஷ சரித்திரம் - மூலம் - பக்கங்கள் 214-225: மொழிபெயர்ப்பு- பக்கங்கள் 211-223

[2] ஹர்ஷ சரித்திரம் - மூலம் - பக்கங்கள் 69-77: மொழிபெயர்ப்பு- பக்கங்கள் 56 - 64

பாணர் குறிப்பிட்டுள்ளார். 'நரகத்தின் அடித்தளத்திற்குப் போகட்டும்', 'நம் அடிமைகளுக்கு நல்ல வாய்ப்புக் கிட்டட்டும்', 'விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் ஏற்பட்ட இப் படையெடுப்பிற்கு விடையளிப்போம்', 'அரசர் தருமத்தின் அவதாரம்', 'அரசர் எங்கே?', 'அரசராக இருக்க அவருக்கு என்ன உரிமையுள்ளது',[1] என்ற பல சொற்றொடர்களில் பாணரின் அஞ்சாமை காணப்படுகிறது.

பாணரின் காதம்பரி என்ற புதினம், அவருடைய திறந்த மனத்திற்கும், திடமான முடிவுகளுக்கும் சான்றாக விளங்குகிறது. அரசரின் அன்பைப் பெற்றுக் கொடையை அனுபவித்து வரும் பாணர் அரசரை ஏளனம் செய்யும் பகுதியையும் காண முடிகிறது. ஒழுக்கமற்ற அரசவைப் பிரதிநிதிகளின் புகழுரைக்கு முட்டாள் அரசரே மயங்குவார் என்ற கருத்தை பாணர் தெரிவிக்கிறார். 'தெய்வமான இலக்குமியையும் தீண்டத்தகாதவளாக மாற்றி விடுவது வரை' எந்தக் கொள்கையையும் ஏற்றுக்கொள்பவராகவே பாணர் காணப்படுகிறார்.[2]

பாணர் ஹர்ஷரின் அரசவையில் பதவி வகித்து வந்திருப்பினும் தம்முடைய அறிவாற்றலையும், அஞ்சாமையையும், சுவையுள்ள கருத்துகளையும் தம்முடைய நூல்களில் தெரிவித்துள்ளார். பாணர் தம்முடைய படைப்புகளில் மிகைப்பட்ட புகழுரைகளைத் தாராளமாகப் பயன்படுத்தி இருப்பினும், அவற்றை விடுத்து ஆராயும் சமயத்தில், பொதுவாக, ஹர்ஷர் கால வரலாற்றையும், அக்கால நிலைகளையும் விளக்கும் பயனுள்ள நம்பத்தகுந்த ஆதாரமாக ஹர்ஷ சரித்திரம் விளங்குகிறது என்பதை அறியலாம்.

[1] ஹர்ஷ சரித்திரம் - மூலம் - பக்கங்கள் 211, 212; மொழிபெயர்ப்பு பக்கங்கள் 207, 208, 209.

[2] D. தேவஹூட்டி - ஹர்ஷா (Harsha) - பக்கம் 12

2. ஆறும் நூற்றுண்டின் பிற்பகுதியில் வட இந்தியாவில் நிலவிய அரசுகள்

குப்தர்களின் வீழ்ச்சி

ஆறும் நூற்றுண்டின் பிற்பகுதியில் சிறப்பு மிக்க குப்தப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. அதன் பின் ஒரு வலுவான அரசு தோன்றும் சூழ்நிலை உடனே தோன்றவில்லை. குப்தப் பேரரசிற்கு உட்பட்டிருந்த பல அரசுகள் குழப்பமிக்க சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தங்களை உரிமை உடைய நாடுகளாக அறிவித்துக்கொண்டு குப்தர்களின் வீழ்ச்சியால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பின.

ஸ்கந்த குப்தரின் காலந்தொடங்கி மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஹூணர்கள், குப்தப் பேரரசைத் தொடர்ந்து தாக்கி, நாட்டின் அமைதியை அழித்தனர். கி.பி. 455ஆம்[1] ஆண்டில் ஸ்கந்த குப்தர் ஹூணர்களைத் தாக்கித் துரத்துவதில் வெற்றி கண்டார். கி.பி. 510[2] இரேன் (Eran) குறிப்பு, பானு குப்தர் ஹூணர்களின் தலைவரான தோரமானருடன் தீவிரமாகப் போரிட்டதாகக் குறிப்பிட்டுள்ளது. தோரமானர் மகன் மிகிர குலரின் இந்தியப் படையெடுப்பு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தகுந்த வெற்றிகளும், படுதோல்விகளும் கலந்து காணப்படுகின்றன. பாலாதித்யரிடம்[3] மிகிரகுலர் தோல்வி அடைந்ததாக யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நரசிம்ம குப்தரையே இங்குச் சீனத்துப்பயணி பாலாதித்யர் எனக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 533ஆம் ஆண்டு மண்ட்சார் (Mandsor) குறிப்பும் யசோதர்மர் மிகிரகுலரை வெற்றி கண்டதாகக் குறிப்பிடுகிறது. 'யாருக்கும் தலை வணங்காத, புகழ்மிக்க மிகிரகுலர் யசோதர்மருக்கு அடிபணிந்து மரியாதை செலுத்தி அவமானத்திற்கு உள்ளானர்'[4] என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[1] C.I.I. iii - எண்கள் 13-14
[2] C.I.I. iii - எண் 20
[3] பீல்-i - பக்கம் 168; வாட்டர்ஸ்-i-பக்கம் 288
[4] C.I.I. iii - எண் 33

ஹூணர்களின் தொடர்ந்த படையெடுப்புகளும், யசோதர்மரின் புகழும் குப்தப் பேரரசின் அடித்தளத்தையே தாக்கின. ஸ்கந்த குப்தர் அரசப் பொறுப்பு ஏற்ற நிலையில் தோன்றிய குடும்பச் சண்டைகளும், பிரிவும் பிற்காலத்தில் மேலும் அதிகரித்துக் குழப்ப மிக்க சூழ்நிலை மேலும் பரவிற்று.

விஷ்ணு குப்த சந்திராதித்யரே குப்தப் பேரரசர்களின் வழி வந்த கடைசிப் பேரரசர் ஏன்பதை நாளந்தா முத்திரையிலிருந்தும்[1] அவருடைய தங்க நாணயங்களிலிருந்தும் அறிந்துகொள்கிறோம். அவருடைய நாணயத்தில் தங்கத்தின் கலப்பு குறைவாக உள்ளது.[2] கி.பி. 543-544ஆம் ஆண்டு தாமோதர்ப்பூர், ஐந்தாவது செப்பேட்டுக் குறிப்பு[3] பிரிதிவிபதிபரமதெய்வதா பரமபத்தாரக, மகாராஜாதிராஜ (Prithivipati Paramadaivata Parama bhattaraka and Maharajadhiraja) என்ற பட்டத்தை ஒரு குப்த அரசருக்கு அளிக்கிறது. ஆனால், அரசரின் பெயர் அதில் காணப்படவில்லை. அநேகமாக அது விஷ்ணுகுப்தர் காலச் செப்பேடாக இருக்க வேண்டும். கி.பி. 545ஆம்[4] ஆண்டு வலபிக் கட்டளையைக் குப்தப் பேரரசர்களின் தூர மாநிலங்களில் நிலவி வந்த பெயரளவு ஆளுமையைக் குறிக்கும் கடைசிக் குறிப்பு எனலாம். ஒரிசா மாநிலத்தின் கள்ளிக்கோட்டியிலுள்ள சுமந்தலா (Sumandala) என்ற கிராமத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்ட குறிப்பிலிருந்து[5] பிரிதிவி விக்ரகர் (Prithivi Vigrahar) என்ற அரசர் கலிங்கத்தைக் குப்த சகாப்தம் 250ஆம் ஆண்டு (கி.பி. 569-70) ஆண்டதாகத் தெரிகிறது. அவர் குப்தர்களுக்கு உட்பட்டிருந்தார். இதை அடிப்படையாகக்கொண்டு, குப்தப் பேரரசர்கள் கி.பி. 550-570 வரையிலும் அதிகாரத்துடன் விளங்கினர் என R. C. மஜும்தார் கருதுகிறர்.[6] கலிங்கத்தில் அரசு செலுத்திய அக்குடும்பம், குப்தர்கள் சிறப்புடன் ஆட்சி புரிந்து வந்த காலத்திலிருந்து அவர்களுக்கு நன்றியறிதலுடன் நடந்துகொண்ட குடும்பம் ஆகும். தொடர்ந்து வழக்கமாகக் குப்தப் பேரரசின் சகாப்தத்தை அவர்கள் குறித்து வந்தனர். குப்தர்களின் கட்டுப்பாட்டிலிருந்த மௌகாரிகளும், பிற்கால குப்தர்களும்

1 E I. XXVI-*235* ff

2 Rapson - Catalogue of Indian Coins - பக்கம் *26*. B. P. சின்ஹா (Eg. *80* Sinha) - Decline of the Kingdom of Magadha - பக்கம் *425*. ஸ்கந்த குப்தரின் தங்க நாணயத்தில் தங்கம் *78*·/. உள்ளது. விஷ்ணுகுப்தரின் தங்க நாணயத்தில் தங்கம் *43*·/. உள்ளது.

3 E.I. XVII - *193*

4 E I. XV - *114-115* ; XVII - *193*

5 I.H.Q - XXVI - *75*

6 H.C.I.P - iii - பக்கம் *44*

அதிகாரத்தை வளர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டாலும், அந் நிலையில் குப்தர்களின் அரசு முற்றிலும் சிறப்பிழந்து இழிவு மிக்கக் கடைசிக் கட்டத்தை அடைந்து விட்டது எனக் கூற இயலாது. மௌகாரிகளும், பிற்கால குப்தர்களும், குப்தர்களின் கட்டுப்பாட்டிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு, தனி அரசுகளை ஏற்படுத்திக் கொள்ளத்தக்க அளவில் பழைய குப்தப் பேரரசு ஆற்றல் அற்ற நிலையில் இருந்தபோதிலும் அது சற்று மதிப்புள்ளதாகவே இருந்து வந்தது. ஆகவே, குப்தப் பேரரசுக்கு உட்பட்டிருந்து, தூரத்தில் அமைந்திருந்த ஒரிசா போன்ற பகுதிகள்கூட, குப்தப் பேரரசின் ஆற்றல் அழிந்து ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்குப் பின்னும் தனி உரிமை பெறும் முயற்சி இன்றித் தொடர்ந்து நன்றியறிதலுடன் நடந்துகொண்டது. கயாவில் கண்டுபிடிக்கப்பட்ட, குமார அமாத்யா மகாராஜா நந்தரின் கி.பி. 551-52ஆம் ஆண்டுக் குறிப்பிடப்பட்ட நிலக் கொடை பற்றிய கட்டளை[1] மகதத்தின் நடுவில் அமைந்திருப்பினும் குப்தரின் ஆட்சி பற்றிய குறிப்பு எதுவும் அதில் காணப்படவில்லை. அக்கட்டளையில் குப்தப் பேரரசர்களைப் பற்றிய எவ்விதக் குறிப்பும் காணப்படவில்லை. ஆதலால், குப்தர்களின் வலுவான அதிகாரம் மகதத்தில் கி.பி. 550ஆம் ஆண்டே மறைந்து விட்டது என்பது தெளிவாகிறது என R.C. மஜூம்தார் கருதுகிறார்.[2] கயா கட்டளைக்குச் சற்றுக் காலத்திற்கு முன்புதான் குப்தர்களின் அதிகாரம் மகதத்தில் மறைந்தது. நந்தர் எளிய பட்டங்களை மட்டுமே கொண்டிருந்தது அதற்குச் சான்றாகும். அப்படியின்றி அதிக காலத்திற்கு முன்பே மகதம் உரிமை பெற்று இருந்திருப்பின் நந்தன அரசர் மிகப் பெரிய பட்டங்களைத் தமக்கு உரியதாக ஆக்கிக்கொண்டிருந்திருக்கக் கூடும்.

ஹரி வம்சம் என்ற சமணநூல் குப்தர்களின் ஆட்சி 231 ஆண்டுகள் நீடித்ததாகக் கூறுகிறது. கி.பி. 320ஆம் ஆண்டிலிருந்து குப்தர்களின் சகாப்தம் ஆரம்பம் ஆகி ஆறும் நூற்றாண்டின் பாதி வரை நீடித்தது என ஹரி வம்சத்திலிருந்து புலப்படுகிறது. பிளீட், ஹரி வம்சத்தில் காணப்படும் புள்ளி விவரங்கள் ஏறக்குறைய சரியானவை எனக் கருதுகிறார்.[3] குப்தர்களின் கட்டுப்பாட்டிலிருந்த பல குறுநில மன்னர்கள் ஒருவருக்கொருவர் போரிட்டுப் புதிய அரசுகளை ஏற்படுத்திக்கொண்டு, அதிகாரத்தை

[1] E.I. X - 49 ff
[2] H.C.I.P. iii - பக்கம் 44
[3] I.A. XV - 142

வளர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிகிறது. மகதத்தில் பிற்காலக் குப்தர்களும், உத்திரப் பிரதேசத்தின் கிழக்கு மாவட்டப் பகுதியில் மௌகாரிகளும், உத்திரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதி, கிழக்குப் பஞ்சாப் பகுதியில் வர்த்தனர்களும், காமரூபத்தில் வர்மனர்களும், வலபியில் மைத்ரேகர்களும், மாளவத்தில் காலச்சூரிகளும், வாதாபி அல்லது பதாமியில் சாளுக்கியர்களும் அவர்களுள் சில முக்கியமான அரசர்கள் ஆவர்.

பிற்கால குப்தர்கள்

கி.பி. 554ஆம் ஆண்டுக் குறிக்கப்பட்ட ஈசானவர்மர் மௌகாரியின்[1] ஹராஹா (Haraha) கல்வெட்டு, அவர் காலத்தில் ஆட்சி புரிந்த பிற்கால குப்தர்களின் நான்காவது அரசரான குமார குப்தரைப் பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து, குழப்பமான ஆட்சி நிலவிய அக் காலத்தில் தலைமுறைக்கு இருபது ஆண்டுகள் என்று ஒதுக்கிப் பின்னோக்கிப் பார்க்கும் வேளையில், பிற்கால குப்தர்களின் முதல் அரசரான கிருஷ்ண குப்தர் ஏறக்குறைய கி.பி. 500ஆம் ஆண்டு ஆட்சி செய்திருக்க வேண்டும் என முடிவு செய்யலாம். அவருடைய வழித்தோன்றிய அரசர்களின் பெயர்கள் அனைத்தையும் அப்ஸாடு குறிப்பில் ஆதித்யசேனர் குறித்துள்ளார்.[2] குமார குப்தருக்குக் கிருஷ்ண குப்தர் எப்படியோ அதுபோல ஈசானவர்மருக்கு மூன்று தலைமுறை முந்திய முதல் மௌகாரி அரசராக ஹரிவர்மர் இருந்தார். ஆகவே, ஹரிவர்மர் அரசியல் எழுச்சி பெற்ற காலம் கிருஷ்ண குப்தரின் ஆட்சிக் காலத்தில் ஆகும். அது நிகழ்ந்த காலம் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி காலமாகவோ அல்லது ஆறும் நூற்றாண்டின் ஆரம்ப காலமாகவோ இருந்திருக்க வேண்டும் எனலாம்.

குப்தர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக மௌகாரிகளும், பிற்கால குப்தர்களும் விளங்கினர் என்பதில் ஐயமில்லை. அப்ஸாடு (Aphsad) குறிப்பில், பிற்கால குப்தர்களின் அரச பரம்பரையைத் தோற்றுவித்த கிருஷ்ண குப்தர் ஒரு நல்ல அரச பரம்பரையான சத்வமிசத்தில் தோன்றியவர் எனவும், நிரிபா (Nripa), ஸ்ரீ (Sri) என்ற எளிய பட்டங்களைக்கொண்டிருந்தார் எனவும் காணப்படுகிறது. மூன்றாவது அரசரான ஜீவித குப்தர் க்ஷித்திச சூடாமணி (Kshitisa Chudamani) அல்லது அரசர்களில் உயர்ந்தவர் என அழைக்கப்பட்டார். பாணர் ஹர்ஷரின் குறுநில மன்னர்களைப் பற்றிக் குறிக்கப் பயன்படுத்தும் பல சொற்களில் ஒன்றான

[1] E. I. XIV - *110* ff
[2] C. I. I. iii - எண் *42*

க்ஷித்திபாலா (Kshitipala) என்ற சொல்லும், ஜீவித குப்தரின் பட்டமான க்ஷித்திச என்ற சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களாகும். பிற்கால குப்தர்களின் வேறு எந்தக் குறிப்பும், குப்தர்களின் அரச குடும்பத்துடன், அவர்களுக்கு எவ்வித உறவும் இருந்ததாகக் குறிப்பிடவில்லை. பிற்கால குப்த அரசர்களின் பெயர்கள் 'குப்தர்' என்று முடிவதும், பிற்கால குப்தர்களின் குறிப்புகளின் தன்மையும், நான்காம் நூற்றுண்டில் மிகச் சிறப்புடன் ஆட்சி புரிந்த குப்தர்களுடன் தொடர்பு கொண்டவர்கள் எனத் தவருக எண்ணுவதற்குக் காரணமாக அமைந்துவிடக் கூடாது. R. C. மஜூம்தார் கருதுவது போலப் பிற்கால குப்தர்கள் குப்தப் பேரரசு விட்டுச் சென்ற சொத்து[1] எனக் கூறலாம். போன நூற்றுண்டின் கடைசியில் பிளீட் அதைக் குறிப்பிட்டு எழுதும் சமயம் கிருஷ்ண குப்தரின் வமிசத்தை மகதத்தின் பிற்கால குப்தர்கள் எனக் கூறுகிருர்.[2]

அறுபது ஆண்டுகளாகப் பிற்கால குப்தர் பிறப்பிடத்தைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் வரலாற்று ஆசிரியர்களிடையே நிலவுகின்றன. குப்தர்களின் குடும்பத்தைச் சார்ந்த ஒரு பிரிவினரான கிழக்கு மாளவப் பகுதிகளில் ஆட்சி செய்தவர்களே பிற்கால குப்தர்கள் என ஹோயர்னல் (Hoernle) கருத்துத் தெரிவிக்கிருர். அவருடைய கருத்தை ஆதரிக்கும் மற்ற வரலாற்று ஆசிரியர்களுள் முக்கியமானவர் H. C. ராய் சௌத்திரி ஆவார். ஹர்ஷரின் எழுச்சிக்குமுன் மாளவம் பிற்கால குப்தர்களின் ஆட்சிப் பகுதியாக விளங்கியது. ஹர்ஷரின் இறப்பிற்குப்பின் அவ்வரசின் ஆற்றல் வளர்ந்து, ஆதித்யசேனரின் காலத்தில் தலைநகரை மகதத்திற்கு மாற்றிக்கொண்டனர்.[3] பிற்கால குப்தர்கள் பிறப்பிடம் மாளவம் என்பதற்கு மாருக மகதம் என்ற கருத்தும் நிலவுகிறது. அதன்படி பிற்கால குப்தர்கள் ஆரம்ப காலத்தில் மட்டுமே மாளவத்துடன் தொடர்பு கொண்டவர்கள் எனக் கூறலாம். குப்தப் பேரரசர் பானுகுப்தரின் காலத்தில் கிழக்குப் பகுதியில் ஆளுநர் அல்லது சிற்றரசராக முதல் அல்லது இரண்டாவது பிற்கால குப்த அரசர் பதவி வகித்து வந்திருக்க வேண்டும். மகாசேன குப்தர் கங்கைச் சமவெளிப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, மாளவத்தின் அரச பொறுப்பை ஏற்க நேர்ந்தது என்பர். இங்ஙனம் கூறப்படுவதற்குக் காரணம் ஆரம்ப காலத்தில் பிற்கால குப்தர்கள் மாளவத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்ற முக்கிய காரணத்தாலேயே ஆகும். பிற்கால குப்தர்கள்

[1] N. H. I. P - vi - பக்கம் 209
[2] C. I. I. - iii - அறிமுகம் பக்கம் 14
[3] P. H. A. I - 4வது பதிப்பு - பக்கங்கள் 492-3

ஆரம்ப காலத்திலேயே மகதத்தில் தங்களுடைய அதிகாரத்தை நிலை நாட்டினர்.[1] குப்தப் பேரரசு படிப்படியாக ஆற்றல் இழந்து கொண்டிருந்தது பல தகுதி மிக்க சிற்றரசர்கள் தங்களுடைய அதிகாரத்தை வளர்த்துக்கொள்ள ஊக்கமளித்தது. மகதத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவது, குப்தர்களின் அதிகாரத்தைப் பெருமளவு குறைக்கும் முயற்சியாகும். எனவே, மகதத்தைக் கைப்பற்றுவதில் கடும்போட்டி காணப்பட்டது. ஏற்கெனவே பேரும் புகழும் பெற்றிருந்த குப்தப் பேரரசர்களின் வமிசத்துடன் தாங்கள் குடும்ப உறவு கொண்டவர்கள் என மக்களுக்குக் காட்டிக்கொள்ளும் முயற்சியில், 'குப்தர்' என முடியும் பெயர்களைப் பிற்கால குப்தர்களும் பெருமையுடன் விரும்பிச் சேர்த்துக்கொண்டனர். அடுத்துப் பிற்கால குப்தர்கள் மாளவத்துடனும், மகதத்துடனும் தொடர்பு கொண்டவர்கள் என்ற இரண்டு கருத்திற்கான காரணத்தையும் ஆராயலாம்.

பிற்கால குப்தர்கள் மாளவத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்று கூறப்படுவதற்கு, ஹர்ஷ சரித்திரத்தில் குறிக்கப் பட்டுள்ள மாதவ குப்தரும், அப்ஸாடு குறிப்பில் உள்ள மாதவ குப்தரும் ஒருவரே என்பதும், அவர் மாளவ அரசரின் மகன்[2] என பாணர் குறிப்பிட்டுள்ளதும் முக்கிய சான்றுகள் ஆம். மேற் கூறிய கருத்தை, ஹர்ஷரின் ஆட்சிக் காலத்திற்குப் பின் ஆண்ட இரண்டாவது ஜீவித குப்தரின் தியோ பார்ணுக் (Deo Barnark) கட்டளை, பாலாதித்ய தேவனுக்குப்பின் சர்வ வர்மன், அவந்தி வர்மன் என்ற இரண்டு மௌகாரி அரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, பீகார் மாநிலம் ஷஹபாடு (Shahabad) மாவட்டத்திலுள்ள வருணிகா என்ற கிராமத்தைக் கொடை அளித்ததைத் தெரிவிப்பதன் மூலம் குறிக்கிறது. ஆகவே, அப்பகுதியில் குப்தர்கள் அல்லது மௌகாரிகள் ஆகிய இருவரைத்தவிர, வேறு எந்த அரசும் உரிமை கொண்டிருக்க இயலாது என்பது தெளிவாகிறது. மகதத்தில் ஏழாம் நூற்ருண்டில் யுவான் சுவாங் பயணம் செய்தார். அவருடைய மகதத்தைப்பற்றிய குறிப்புகளில் பூர்ணவர்மன், சசாங்கன் என்ற இரண்டு அரசர்களின் பெயர்களை மட்டும் தருகிருர்; ஆனுல் மாதவ குப்தரின் பெயரைக் குறிப்பிடவில்லை; மாதவ குப்தரைப் பற்றி வேறு சந்தர்ப்பங்களில்தான் குறிப்பிட்டுள்ளார்.[3]

[1] D. தேவஹூட்டி - ஹர்ஷா - பக்கம் 16

[2] ஹர்ஷ சரித்திரம் - மூலம் - பக்கம் 138; மொழிபெயர்ப்பு - பக்கம் 119

[3] குப்தர்களுக்குப்பின் மௌகாரிகள் மகதத்தின் அரசு பொறுப்பை ஏற்றனர் என E. A. பைர்ஸ் (Pires) கருதுகிருர். மேலும், குப்தரின் காலத்திற்கு முன்னும் மகதம் மௌகாரிகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனவும், முதலாவது சந்திர குப்தர் மௌகாரிகளிடமிருந்து மகதத்தைக் கைப்பற்றினுர் எனவும் கருதுகிருர். (The Maukhari - பக்கங்கள் 14 - 16)

மேலே கூறப்பட்ட எந்தச் சான்றும், பிற்கால குப்தர்கள் மகாசேன குப்தரின் ஆட்சியின் ஆரம்பக் காலம் வரை (கி.பி.562 ?)[1] மகதத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருந்தனர் என்பதைத் தவறு என நிரூபிக்கவில்லை. மேலும், மாளவமே அவர்களுடைய பிறப்பிடம் என்ற கருத்துக் கொண்டவர்களும் மகாசேன குப்தர் காமரூபத்தின் அரசரை லௌஹித்யா (Lauhitya) அல்லது பிரமபுத்திரா நதிக்கிடையில் நடைபெற்ற போரில் வென்றதைப் பற்றி ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கம் தரவில்லை. மாளவத்தின் யசோதர்மன் வெற்றி பெற்றதைப் போலவே மகாசேன குப்தரும் அவ்வெற்றியைப் பெற்றிருக்க வேண்டும் என ராய் சௌத்திரி கருத்துக் கொண்டிருக்கிறார். மேலும், 'குமார குப்தர் பிரயாகையை வென்று......அவருடைய மகன் தாமோதர குப்தர் மௌகாரிகளின் யானைப்படையை அழித்த வேளையில்......, கௌடா விரிவடைவதை ஏற்கெனவே ஈசான வர்மனின் வெற்றிகள் தடை செய்திருந்ததால்......, தாமோதர குப்தரின் மகன் மகாசேன குப்தர் லௌஹித்யா வரை படையெடுத்துச் செல்லத் தடையில்லை' என ராய் சௌத்திரி கூறுகிறார்.

ஆனால் அப்ஸாடு குறிப்பு, சில வரலாற்று ஆசிரியர்கள் விளக்கி இருப்பதைப் போன்று, பிற்கால குப்தர்கள் மிக்க ஆற்றலுடனும், சிறப்புடனும் விளங்கினார்கள் என்று அறியத் துணைபுரியவில்லை. அப்ஸாடு குறிப்பின்படி, குமார குப்தர், ஈசான வர்மர் மௌகாரியை வென்றிருப்பினும்கூட, அவரது காலத்திற்குப் பின்னும் மௌகாரிகள் ஆற்றலுடன் விளங்கினர் எனத் தெரிகிறது. மேலும், குமார குப்தர் வீரத்தைப் போற்றி வாய்மையைப் பின்பற்றியதால் (Saurya-Satyavrata)...பிரயாகைக்குச் சென்று, மலர்களைச் சூடி, எருக்களால் மூடப்பட்ட நெருப்பில் நீரில் குதிப்பது போன்று குதித்தார் எனவும் அப்ஸாடு குறிப்பு கூறுகிறது. ''பிரயாகைக்குச் சென்று' எனக் குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு, குமார குப்தரின் ஆதிக்கம் அங்குவரை பரவி இருந்தது எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். பிளீட் அடிக்குறிப்பில், குமார குப்தர் உயிருடன் இருக்கும் போதே பிரயாகை நெருப்பில் விழுந்திருக்க வேண்டும் எனக் கருதத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இது போன்ற பல நிகழ்ச்சிகள் இந்திய வரலாற்றில் காணப்படுகின்றன. அரசர்கள் தாங்கள் எண்ணிய குறிக்கோளை அடைய முடியாத நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தங்கள் உடைமைகள் அனைத்தையும் துறந்து,

[1] B. P. சின்ஹா - Decline of the Kingdom of Magadha - பக்கம் 175

மரணத்தையும் நாடும் நிகழ்ச்சிகளைக்கூடக் காண முடிகிறது. தம் சகோதரரைக் கொன்றவர்களைத் தண்டிக்கும் வரை வலதுகை உணவைத் தொடாது என்ற சபதத்தை ஹர்ஷர் மேற்கொண்டார் என அறிகிருேம். குமார குப்தரும் அது போலவே தம் வாழ்க்கையில் ஒரு குறிக்கோளை அடைய எண்ணியிருக்க வேண்டும்; தம் குறிக்கோள் நிறைவேருவிட்டால், உயிரை மாய்த்துக்கொள்வதாகச் சபதம் பூண்டிருக்க வேண்டும். தம் எதிரியான மௌகாரிகளை வென்று அவர்களுக்குக் கட்டுப்பட்டிருந்த ஏதோ ஒரு பகுதியைக் கைப்பற்ற வேண்டும் என குமார குப்தர் எண்ணிஞர். அப்ஸாடு குறிப்பு குமார குப்தர் ஈசான வர்மனை வென்றது பற்றிச் சற்று மிகைப்படுத்தியே கூறுகிறது எனத் தோன்றுகிறது. குமார குப்தர் எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருந்தாலும் அவருடைய குறிக்கோள் நிறைவேறவில்லை என்பதைச் சபதத்தை நிறைவேற்ற எண்ணித் தம் உயிரை மாய்த்துக்கொள்ள முடிவு செய்தது குறிக்கிறது. புனித நகரான பிரயாகையில் இறப்பவர்கள் சொர்க்கத்தை அடைவார்கள் என்ற அக்கால நம்பிக்கையே அவ்விடத்தைக் குமார குப்தர் தம் உயிரைத் துறக்கத் தேர்ந்தெடுக்கத் தூண்டியிருக்க வேண்டும். தம்முடைய ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருந்த பகுதியில் பிரயாகை அமைந்திருக்கக் கூடும். அல்லது பகைவரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்திருப்பினும், தம் சபதத்தை நிறைவேற்றுவதில் குமார குப்தருக்குத் தடை இருந்திருக்காது என்றே கருத வேண்டும். ஏனெனில், பிரயாகை புனிதமான தலம் என்ற தனிப்பட்ட அந்தஸ்தைப் பெற்றிருந்தது.

குமார குப்தரின் மகன் தாமோதர குப்தரும் மௌகாரிகளுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார்; மௌகாரி அரசரை வெல்லும் முயற்சியில் தீவிரமாகப் போர் புரிந்து அவருக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்திஞர். ஆனல், அம்முயற்சியில் தாமோதர குப்தர் தம் உயிரை இழந்தார்.

ஆகவே, ராய்சௌத்திரியின் கருத்துப்படி, தாமோதரகுப்தரின் மகன், ஏற்கெனவே பிரயாகை வரைப்பரவி இருந்த தம்முடைய மாளவ அரசிலிருந்து படையெடுத்துச் சென்று லௌஹித்யா ஆற்றங்கரையில் வெற்றி பெறுவதைத் தடுக்க எதுவும் இல்லை என்ற நிலை, மேலே குறிப்பிட்டுள்ளபடிப் பிற்கால குப்தர்கள் இன்னல் மிக்க சூழ்நிலைகளில் இருந்தனர் என்பதை ஏற்றுக்கொண்டால், சாத்தியமானது என்று தோன்றவில்லை. ராய் சௌத்திரி குறிப்பிட்டது போலப் பிற்கால குப்தர்கள் மாளவத்தில் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றிருந்திருப்பின் தூரத்தில் அமைந்திருந்த காமரூபத்தை வென்று தமக்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற

கவலை தேவையில்லை எனலாம். ஏனெனில், ஆற்றல் மிக்க மௌகாரிகளின் அரசு மாளவத்திற்கும்,காமரூபத்திற்கும் இடையே அமைந்துள்ளது. ஆகவே, மகாசேன குப்தர் சுஸ்தித வர்மனை எளிதாக வெல்ல முடிந்ததற்கு, அவருடைய அரசு காமரூபத்தின் மிக அண்மையில் அமைந்திருந்ததே முக்கிய காரணம் ஆகும். அவர் அரசிற்கு மேற்கில் மௌகாரிகளின் அரசு அமைந்திருந்ததால், காமரூபம் செல்ல அப்பகைவர்களுடைய பகுதியைக் கடந்து செல்லவேண்டிய தேவையில்லை என்பதை எளிதாக உணர முடியும்.

யுவான் சுவாங் தாம் பயணம் செய்த பகுதிகளில் மதத்தின் நிலை பற்றியும், அப்பகுதியில் அரசு புரிந்த மதத்திற்குத் துணை புரிந்த பக்தி மிக்க அரசர்களைப் பற்றியும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துக் குறிப்பிட்டிருப்பதால், மகதம் பற்றிய விளக்கத்தில் மாதவ குப்தரின் பெயரைக் குறிப்பிடவில்லை எனலாம். தியோ பாரின் குறிப்பும், அதை ஒட்டிய வாதங்களும் எடுத்துக்கொண்ட கருத்தை நிலைநிறுத்தக் கூடியவை அல்ல எனவே கருத வேண்டும். பாலாதித்யனுக்குப் பின் சர்வ வர்மன், அவந்தி வர்மன் என்று குறிப்பிட்டுள்ளது, சர்வ வர்மன் காலத்திலிருந்து மகதம் மௌ காரிகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதைக் குறிக்கிறது. மாதவ குப்தர், குமார குப்தர் ஆகிய இருவரும் மாளவ அரசரின் குமாரர்கள் என பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிட்டிருப்பது, மகாசேன குப்தர் தம் இரு புதல்வர்களையும் பிரபாகரவர்த்தனரின் அரண்மனைக்கு அனுப்பும் சமயத்தில், மாளவத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தார் என்பதையே உணர்த்துகிறது.

பிற்கால குப்தர்கள் பற்றிய நிலையை அப்ஸாட் குறிப்பு மேலும் விளக்குகிறது. பிற்கால குப்தர்களின் வரிசையில் மூன்றாவது அரசரான ஜீவித குப்தரை அக்குறிப்பு மிகவும் புகழ்ந்துரைக்கிறது. பகைவர்கள் இமயத்திலிருப்பினும் அல்லது கடலோரத்திற்குச் சென்றாலும், அச்சமிக்க கொடிய காய்ச்சலாக அவர்களுக்கு ஜீவித குப்தர் விளங்குவார் என அப்ஸாட் குறிப்பு கூறுகிறது. இங்குப் பகைவர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் கௌடாவில் வாழ்ந்த மக்களாகும். நான்காவது மௌகாரி அரசரான ஈசான வர்மனும், கடலோரப் பகுதிவாழ் மக்கள் மீது போர் தொடுத்து வென்று, அவர்களை அங்குள்ள தாழ்ந்த பகுதிகளில் தஞ்சம் புகச் செய்தார் எனக் குறிப்பிடுவதும் கௌடாக்களையே ஆகும். ஜீவித குப்தருக்கும், வங்காள அரசருக்கும் இடையே நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளைப் பற்றிக் காணும் சமயத்தில், அவருடைய அதிகாரம் விளங்கிய நடுப்பகுதி அதனை ஒட்டியே அமைந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

பிற்கால குப்தர்களின் அடுத்த அரசரான குமார குப்தர் மௌகாரி அரசரான ஈசான வர்மனைப் போரில் வென்று கடுமை யாகத் தண்டித்தார் எனவும் அப்ஸாடு குறிப்பிலிருந்து நாம் அறிந்துகொள்கிறேம். அப்போர் நிகழ்ச்சி விளக்கங்களில் வாழை மரங்களும், காட்டாற்று நீரும், மலையும் உவமைகளில் காணப்படுவதால், கௌடாவின் சுற்றுப்புறங்களிலேயே அப்போர் நடைபெற்றிருக்க வேண்டும். ஆகவே, பிற்கால குப்தர்களின் அதிகாரம் விளங்கிய நடுப்பகுதி இதுவே என்ற கருத்து மேலும் வலுப்படுகிறது.

பிற்கால குப்தர்களும், மௌகாரிகளும் கௌடாவை முதல் தாக்குதலுக்கு இலக்காகக் குறித்துத் தாக்கி, தென்கிழக்கு வங்காளப் பகுதிகளை இணைத்துக்கொண்டபின், அடுத்து வட மேற்கு வங்காளத்தையும் கைப்பற்ற விரும்பினர். கௌடாவைத் தர்ம ஆதித்யன் ஆண்ட காலத்தில் அந் நிலை தோன்றியது. கோப சந்திராவினுல் ஸ்தாபிக்கப்பட்ட வமிசத்தின்[1] இரண்டாவது அரசர் தர்ம ஆதித்யன் ஆவார். பிற்கால குப்தர்களும் மௌகாரி களும் இப்புதிய அரசை வீழ்த்தும் முயற்சியை மேற்கொண்டனர். வங்காள மாநிலம் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதோ அவருடைய ஆற்றலும், அரசியல் மதிப்பும் சிறந்து விளங்கியதே அதற்கு முக்கிய காரணம் ஆகும்.

குமார குப்தரின் மகன் தாமோதர குப்தரும் மௌகாரிகளுக்கு எதிராகப் போர் புரிந்தார். மௌகாரி அரசரான ஈசான வர்மன் அல்லது அவருடைய குமாரர்கள் தாமோதர குப்தருக்கு எதிராகப் படையை நடத்திச் சென்றனர். இருவரும் தீரத்துடன் போர் புரிந்தனர். ஏனெனில், இரு குடும்பத்தினருமே இறுதி வெற்றியைத் தாங்களே அடைய வேண்டும் என்ற தீர்மானத்துடன் இருந்தனர். அப்போரில் தாமோதர குப்தர் இறந்து போனுர். அப்போரிலும் எவ்விதத் தீர்க்கமான முடிவு ஏற்படவில்லை.

தாமோதர குப்தருக்குப் பின் மகாசேன குப்தர் அரசப் பொறுப்பு ஏற்றுர். மகாசேன குப்தர் தம்முடைய ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுத் தம் குடும்பத்தின் புகழை வளர்த்தார். மௌகாரிகளைவிட அரசியலில் சற்றுச் சிறப்பும் ஆற்றலும் பெற, மகாசேன குப்தர், புஷ்ப பூபதியினுல் ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்து வரும் வர்த்தன வமிசத்

[1] 1.A-xxxix-193-216, E.I-xviii-74 ff. கோப சந்திரா, தர்ம ஆதித்யன் சாமசாராதேவர் என்ற மூன்று அரசர்கள் பெயரால் ஆறு செப்பேடுகள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் கி.பி.-525-575வரை ஆட்சி புரிந்தனர். மூவரும் மகாராஜாதிராஜ என்ற பட்டமும் கொண்டிருந்தனர்.

துடன் மணத்தொடர்பு கொள்ள முயற்சி செய்து வெற்றியும் கண்டார்; தம் சகோதரி மகாசேன குப்த தேவியை ஹர்ஷரின் தாத்தாவான ஆதித்ய வர்த்தனருக்கு மணம் செய்து வைத்தார், இம்மணநிகழ்ச்சி மௌகாரிகளுக்குப் பெரும் இடையூறாக மாறியது எனலாம். இருபுறத்திலும் பகைவர்கள் காணப்பட்டனர். இது மண்டலக்கொள்கைக்குக் குறிப்பான எடுத்துக்காட்டாகும்.

இவ்வெற்றிக்குப் பின் மகாசேன குப்தர் காமரூபத்தின்மீது படையெடுப்பை மேற்கொண்டார். வங்காளத்தில் ஏறக்குறைய கி.பி. 575-ல் நிலவிய குழப்பமான சூழ்நிலையும், வலுவற்ற ஆட்சியும், மகாசேன குப்தர் அப்படையெடுப்பை மேற்கொள்ள ஊக்குவித்தது. அப்ஸாட் குறிப்பு அவ்வெற்றியைச் சற்றும் குழப்பமற்ற சொற்றொடர்களினால் விளக்குகிறது. அவருடைய முன்னோர்கள் பெற்ற வெற்றிகளைப் பற்றிய விளக்கங்களைக் காணும் சமயத்தில் அது விளங்கும். 'ஈசான வர்மனின் சிறப்பான படையை நெருங்க முடியாத பாற்கடலுடன் ஒப்பிட்டு, அதைக் கடந்து அல்லது மௌகாரிகளுக்குச் சொந்தமான யானைப் படையை முறியடித்து முன்னேறிப் பெருமை பெற்று' என்று கூறப்படுகிறது. இக்குறிப்பிற்குச் சற்று மாறுபட்டு, 'ஸ்ரீ சுஸ்தித வர்மனைப் போரில் வென்று பெருமை பெற்றார்'[1] என்று குறிப்பிடுவதன் மூலம் மகாசேன குப்தர் பெரும் வெற்றி பெற்றுப் புகழ் அடைந்தார் எனத் தெளிவாக அது விளக்குகிறது.

மிகச் சிறப்பான இவ்வெற்றிக்குப்பின் மகாசேன குப்தரின் மகிழ்ச்சி மிக்க நாள்கள் முடிவடைந்தன. மகதத்தைப் பல பகைவர்கள் அடுத்தடுத்துத் தாக்கத் தொடங்கினர். ஏற்கெனவே உள்ள பகைவர்களான மௌகாரிகளுக்கு அஃது ஒரு பெரும் வாய்ப்பாக மாறியது. ஆகவே, பிற்கால குப்தர்கள் மகதத்தை விட்டே வெளியேற நேர்ந்தது. கி.பி. 567ஆம் ஆண்டு முதல் 597ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்த சாளுக்கிய அரசரான கீர்த்தி வர்மர் தம் நாட்டின் எல்லையைத் தென்பகுதியில் விரிவுபடுத்தினர். மேலும் அங்கம் (Anga), வங்கம் (Vanga), கலிங்கம், மகதம் ஆகியவற்றையும் வென்றதாக மகாகூடர் குறிப்பு ஒன்று கூறுகிறது.[2] இக்குறிப்பை வழக்கமான மிகைபடுத்திக் கூறும் வகையைச் சேர்ந்தது என்று நாம் அறிந்துகொண்டாலும், சாளுக்கிய அரசர் மகாசேன குப்தரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த

1 C.I.I. iii எண் 42. சுஸ்தித வர்மன் என்று பெயர் முடிவதால், மௌகாரி அரசர் எனத் தவறாக எண்ணி விடுதல் கூடாது. க்ஷத்திரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 'வர்மன்' எனச் சாதாரணமாகச் சேர்த்துக்கொள்வது வழக்கம்,

2 I.A-XIX-7 ff-மகாகூடர் மங்கலிசா (Mangalesa) தூண் குறிப்பு

சில பகுதிகளைத் தாக்கி வென்ருர் என்ற அளவிற்குச் சான்ருகக் கொள்ளலாம். சாளுக்கிய அரசரின் வெற்றி மௌகாரிகளின் மனோநிலையில் புதிய போர் ஆர்வத்தைத் தூண்டியது. பிற்கால குப்தர்களின் வலு மேலும் குன்ற அது மற்ருெரு காரணமாக அமைந்தது. இத்தருணத்தில் திபேத்தியப் படையெடுப்பும் மகாசேன குப்தருக்கு மற்ருெரு பெரும் பிரச்சினையாக விளங்கிற்று. கி.பி. 581 முதல் 600 வரை ஸ்ராங் ஸ்டான் ஸ்காம் போ (Strong-bstan-sqam-po) என்ற ஆற்றல் மிக்க அரசர் திபேத்தை ஆட்சி புரிந்ததாகத் திபேத்திய வரலாறு குறிப்பிடுகிறது. அவர் மத்திய இந்தியப்[1] படையெடுப்பை மேற்கொண்டு, பீகார், உத்திரப் பிரதேசப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்ருர். திபேத்தியப் படையெடுப்பும் மகாசேன குப்தரின் நிலையை மேலும் வலுக் குன்றச் செய்தது. இச் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு நெடுநாள் பகைவர்களாகிய மௌகாரிகள் மகாசேன குப்தரைத் தாக்கத் தொடங்கினர். சர்வ வர்மர் மகாசேன குப்தர் அரசை அகற்றித் தம்முடைய அதிகாரத்தை நிலை நாட்டினுர். அச்சமயத்தில் நடைபெற்ற போரைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைத்தவரை உள்ள மௌகாரிக் குறிப்பு களில் காணப்படாவிட்டாலும், இரண்டாவது ஜீவித குப்தரின் தியோ பார்ளுக் குறிப்பு அதற்குச் சான்ருக விளங்கும் தகுதி பெற்றது எனக் கருதலாம். சர்வ வர்மரும் அவந்தி வர்மரும் மகதத்திலுள்ள வருணிகா கிராமத்தைக் கொடையளித்தது, மௌகாரிகள் சர்வ வர்மன் காலத்திலிருந்து மகதத்தில் நிலை கொண்டிருந்ததைக் குறிக்கிறது.[2]

இத்தருணத்தில் ஜெய நாகர் என்ற அரசர் வங்காளத்தில் சிறப்பான ஆற்றலுடன் வளர்ச்சி பெற்ருர். சசாங்கனின் முன்னோராக அவர் காணப்பட்டார். அவருடைய வப்பா கோஷா வாதா (Vappa-ghosha-vata) கட்டளையும்,[3] நாணயங்களும் சற்றேறக்குறைய இக்காலத்தைச் சேர்ந்தவை என்பதை நிரூபிக் கின்றன.

பகைச்சூழலின் காரணமாகத் தோல்வி கண்ட மகாசேன குப்தர் மாளவம் செல்ல நேர்ந்தது. ஆனுல், மாளவத்திலும் அவருடைய ஆட்சிக்குச் சிக்கல்கள் தோன்றின. காலச்சூரி அரசர்

[1] S. லெவி (Levi) - Le Nepal - பக்கம் 147 ff

[2] பிற்காலத்தில் ஹர்ஷரின் இறப்பிற்குப் பின் மௌகாரிகளின் அதி காரத்தை அழித்துப் பிற்கால குப்தர் ஆதித்யசேனர் தம் அதிகாரத்தை நிலை நாட்டினுர்.

[3] E. I-XVIII-60 ff

மகாசேன குப்தரின் அதிகாரத்தை எதிர்த்தார். சங்கரகாணுவின் கி.பி. 595-596[1] அப்ஹோனு (Abhona) செப்பேடு,[2] உஜ்ஜயினியின் வெற்றிக் கூடாரத்திலிருந்து வெளியிடப்பட்டது எனக் கூறப்படுகிறது. மாளவத்தின் தலைநகர் உஜ்ஜயினி ஆதலால், மகாசேன குப்தர், இவ்வெற்றிக்குப்பின் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும். அங்கிருந்து கிழக்குப் பகுதியில் உள்ள விதிசாவை நோக்கி அவர் சென்றுர். கி.பி. 601ஆம் ஆண்டில்[3] இறக்கும்வரை, மகாசேன குப்தர் அங்குதான் இருந்தார். கி.பி 608-9-ல் காலச்சூரிகள் விதிசாவையும் கைப்பற்றினர் என்பதைக் கி.பி. 608ஆம் ஆண்டு வாட்நர் (Vadner) கட்டளையிலிருந்து[4] நாம் அறிந்துகொள்ள முடிகிறது. கி.பி. 616-17ஆம் ஆண்டுகளில் வலபியின் மைத்ரேகர்கள் உஜ்ஜயினியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொணர்ந்தனர்.

மகாசேன குப்தரின் ஆட்சிக்குட்பட்ட மாளவப் பகுதிகள் எவை என்பது பற்றிப் பல கருத்துகள் நிலவுகின்றன. வாத்ஸ்யாயனரினுல் 5ஆம் நூற்றுண்டில் எழுதப்பட்ட காம சூத்திரத்தை விளக்க உரைக் குறிப்பிலிருந்து மாளவம் என்ற பெயர் முற்சேர்க்கையின்றிக் கிழக்கு மாளவத்தையே குறிக்கும் என அறிகிறேம். பாணர் மாளவம் என்று குறித்திருப்பது இன்றைய பில்சா மாவட்டத்தினையே என R.S. திரிபாதி[5], D.C. சர்கார் ஆகியோர் கருதுகின்றனர். சப்த மாளவம்[6] என்ற தொடரை ஆராய்ந்து, மகாசேன குப்தர் ஏறக்குறைய பூர்வ மாளவம் அல்லது கிழக்கு மாளவம் எனப்பட்ட இன்றைய உத்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளுடன் மகதத்தையும் சேர்த்து ஆண்டார் என H.C. ராய் சௌத்திரி கருதுகிறுர். B.C. லா(Law)வும் இதே கருத்துக் கொண்டிருக்கிறுர். மாளவம் எனக் குறித்து பாணர் எழுதியிருப்பவை எல்லாம் அப்பகுதிகளையே குறிக்கும் என முடிவு செய்யலாம். ஹர்ஷ சரித்திரத்திலும் காதம்பரியிலும் பல்வேறு

[1] வருஷம் 347-காலச்சூரி சகாப்தம் குறிக்கப்பட்டுள்ளது.

[2] E.I.ix-296

[3] ஹர்ஷர் கி.பி 606-ல் தனேஸ்வரத்தின் அரசராஞர். அதற்கு முன் பல நிகழ்ச்சிகள் 5 ஆண்டுகளில் நடந்து விட்டன. (ராஜ்யஸ்ரீயின் திருமணம், ராஜ்யவர்த்தனரின் ஹூணப் படையெடுப்பு, பிரபாகரவர்த்தனர் நோய்வாய்ப் படுதல், பின் அவருடைய இறப்பு, ராஜ்யவர்த்தனர் ஹூணப் படையெடுப்பிலிருந்து திரும்புதல், மாளவ அரசருக்கு எதிராகப் போர் புரிதல், அவர் கொலை செய்யப்படுதல்) கி.பி. 601-ல் குமார குப்தரும், மாதவ குப்தரும் தனேஸ்வர அரசரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அந்த ஆண்டு இளவரசர்களின் தந்தை மகாசேன குப்தர் இறந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

[4] E.I-XII-30 ff

[5] History of kanauj-பக்கம் 46

[6] P.H.A.I (4வது பதிப்பு)-பக்கம் 492-அடிக்குறிப்பு-4

சந்தர்ப்பங்களில் மாளவம் குறிக்கப்படுவதிலிருந்தும், அதுபற்றி அறியச் சில தடயங்கள் கிடைக்கின்றன. லதாக்கள், மாளவம், கூர்ஜரம் ஆகியவை பொதுவாகச் சேர்த்தே ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிடப்படுகின்றன.[1] ஆகவே, புவியியல் அடிப்படையில் அவை அடுத்தடுத்து அமைந்திருக்க வேண்டும். பாணர் உஜ்ஜயினி பற்றி விளக்கும் சமயத்தில் அழகு மிக்க மாளவத்தின் பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்கள் நகருக்கு எழிலும் அழகும் கூட்டினர் எனக் கூறுவதாக B.P. சின்ஹா காண்கிறார். காதம்பரியிலும், ஹர்ஷ சரித்திரத்திலும் குறிக்கப்படும் மாளவம் ஒன்றே எனும் நிலையில், மகாசேன குப்தர் வேறு சில நகரங்களுடன், உஜ்ஜயினிக்கும் அரசராக விளங்கினார் என அறிய முடிகிறது. பரந்த ஓர் அரசின் தலைநகர் என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளது அந்த உஜ்ஜயினியையே ஆகும். உஜ்ஜயினியிலிருந்து அடுத்த அரசிற்கு, அதாவது பண்டில்கண்டில்[2] உள்ள சி-சி-டு (Chih-chi-to) அல்லது ஜாஜ்ஹோட்டி (Jajhoti)க்கு உள்ள தூரம் 1000லி (சுமார் 200 மைல்)[3] எனக் குறிப்பிடுகிறார். ஆனால், இரு நகரங்களுக்கும் இடையே உள்ள தூரம் ஏறக்குறைய அதற்கு இருமடங்கு ஆகும். யுவான் சுவாங் 1000லி (சுமார் 200 மைல்) எனக் குறிப்பிட்டுள்ளது மாளவ அரசின் உஜ்ஜயினி மாநில எல்லையிலிருந்து ஜாஜ்ஹோட்டிக்குக் கணக்கிடப்பட்டுக் குறித்த தூரம் எனக் கொள்ளலாம். மகாசேன குப்தரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மாளவ அரசின் கிழக்கு எல்லை இன்றைய இரேன் (Eran) எனவும், அங்கிருந்து ஜாஜ்ஹோட்டி சுமார் 1000லி தூரம் என யுவான் சுவாங் குறித்திருக்க வேண்டும் எனவும் B. P. சின்ஹா கருதுகிறார்.[4] ஆகவே, மகாசேன குப்தரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதியில் விதிசாவும் அடங்கி விடுகிறது. பாணரால் விளக்கப்பட்ட மாளவத்தின் தலைநகரான உஜ்ஜயினியைக் கி.பி. 595-6 ஆம் ஆண்டில் காலச்சூரிகள் கைப்பற்றினர். ஆனால் மகாசேன குப்தர் கி.பி 601 ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார். கி.பி. 601-ல் அவர் இறக்கும் தறுவாயில் தம் குமாரர்களைத் தனேஸ்வரத்திற்கு அனுப்பி வைத்தார். அதுவரையிலும் மகாசேன குப்தரை மாளவத்தின் அரசர் எனவே பாணர் ஹர்ஷ

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 120; மொழிபெயர்ப்பு-பக்கம் 101

[2] கன்னிங்ஹாம் C.A.G.I - பக்கங்கள் 550 ff; வாட்டர்ஸ் அதைச் சித்தூர் எனக் கருதுகிறார். (வாட்டர்ஸ்-ii-பக்கம் 251) ஆனால், சித்தூர் வடமேற்கே அமைந்துள்ளது. யுவான் சுவாங் தென்கிழக்காகப் பயணம் செய்தார் எனத் தெரிகிறது. (லைப்-பக்கம் 150) நாட்டின் இயற்கை வளவிளக்கங்களைக் காணும் சமயம் அது பண்டில்கண்டைக் குறிக்கும் என H.C. ரே (Ray) கருதுகிறார். D.H.N.I-ii-பக்கங்கள் 669-70)

[3] வாட்டர்ஸ்-ii-பக்கம் 251

[4] Decline of the Kingdom of Magadha-பக்கம் 186

சரித்திரத்தில் குறித்துள்ளார். ஆகவே, மகாசேன குப்தர் மாளவ அரசின் தென்பகுதி நகர் ஒன்றில், அநேகமாக விதிசாவில், அரசு புரிந்திருக்க வேண்டும். ஏனெனில் கி.பி. 608-9ஆம் ஆண்டு வரை காலச்சூரிகள் விதிசாவைக் கைப்பற்றவில்லை என்பதை வாட்நர் (Vadner) கட்டளையிலிருந்து அறிகிறோம்.

வலபி அரசரால் ஆளப்பட்டு வந்த மோ-லா-போ (Mo-la-po) என்ற பகுதியைப் பற்றியும் சீனத்துப் பயணியின் குறிப்புகள் விளக்குகின்றன. யுவான் சுவாங் இவ்வாறு குறிப்பிட்டுள்ள பகுதி எது என்பது பற்றி V.A. ஸ்மித் தீர ஆராய்ந்து நீண்டதொரு விளக்கம் தந்துள்ளார். மோ-லா-போ என்ற பகுதியின் வடக்கில் பின்மால் (Bhinmal) கூர்ஜர அரசும், வடமேற்கில் வாட்நகர்(Vad-nagar)-ம், கிழக்கில் அவந்தி அரசும், மேற்கில் வலபியும், தெற்கில் மாகி (Mahi) ஆற்றின் சங்கமப் பகுதியும் அமைந்துள்ளன என ஸ்மித் குறிப்பிடுகிறார்.[1] ஆனால் ஸ்மித் குறிப்பிட்டுள்ள பகுதிகளின் பரப்பைவிட, மோ-லா-போவிற்கு யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ள பரப்பு அதிகமானதாக விளங்குகின்றது. எனினும், ஸ்மித்தின் முடிவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாகக் காணப்படுகிறது. சீனத்துப் பயணி மோ-லா-போ வின் பரப்பளவைக் குறிப்பிடும் சமயம், அதற்குட்பட்டிருந்த சிற்றரசுகளையும் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டும் என B. P. சின்ஹா கருதுகிறார்.[2] யுவான் சுவாங் மோ-லா-போ எனக் குறிப்பிட்டுள்ள பகுதி வலபியின் குறிப்பில் உள்ள மாளவகா ஹாரா (Malavaka - ahara) எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[3] யுவான் சுவாங் மோ-லா-போ, மற்றும் ஃபாலா-பி (Fa-la-pi) பற்றிய விளக்கங்களை ஆரம்பிக்கும் இடத்தில், இத்தொடர்பாகத் தந்துள்ள இரண்டு சிறு குறிப்புகளின் முக்கியத்துவத்தைப் பெரும்பாலான ஆசிரியர்கள் காணத் தவறி விடுகின்றனர் எனத் தோன்றுகிறது. சீனத்துப் பயணி அவ்விரு அரசுகளுக்கும் வழங்கிவந்த வேறு பெயர்களை அதில் குறிப்பிட்டுள்ளார். மோ-லா-போ என்பதற்குத் தெற்கு லோ (South-lo) அல்லது தெற்கு லோ லோ (South-lo-lo) எனவும், ஃபாலாபி (Fa-lou-pi-வலபி) என்பதற்கு வடக்கு லோ (North-lo) எனவும் குறிப்பிட்டுள்ளார். யுவான் சுவாங் மோ-லா-போ எனக் குறிப்பிட்ட பகுதியின் அரசர் சீலாதித்யரும், முதலாவது காரகிரகத்தின் மூத்த சகோதரரும் சீலாதித்யர் என்ற

1. E.H.I. பக்கங்கள் 343-344.

2 Decline of the Kingdom of Magadha-பக்கம் 183

3 C. A. G. I. பக்கம் 561; B. C. லா - Tribes in Ancient India-பக்கங்கள் 64 - 65

பெயரை உடைய வலபி அரசரும் ஒருவரே என அடையாளம் காணலாம். சீலாதித்யரின் பாதிரினியாகா[1] (Bhadreniyaka) கட்டளையில் சகோதரர்கள் இருவரும் இந்திரனுக்கும் உபேந்திரனுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளனர். அதில் சாதாரண நடைமுறைக்கு முரணாகச் சீலாதித்யரின் மகன் பெயர் வமிச வழித் தொடரில் காணப்படவில்லை. ஆகவே, சகோதரர்கள் இருவருக்கும் கருத்து வேறுபாடுகளினால் மோதல் நிகழ்ந்தது என அறிய முடிகிறது. அதில் சீலாதித்ய அரசர் தம் நாட்டின் கணிசமான பகுதியைக் காரகிரகருக்குக் கொடுக்க ஒப்புக் கொண்டதையும் அறிகிறோம்.[2] இவ்வாறாக வலபி அரசு வடக்கு, தெற்கு என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. சீலாதித்யர் மோ-லா-போவையும், அதனுடன் கூடிய சிற்றரசு களையும் தமக்காக வைத்துக்கொண்டார். காரகிரகர், வலபி அரசின் வடக்குப் பகுதியைத் தம் பங்கிற்குப் பெற்றுக் கொண்டார். இவ்விரு பிரிவுகளைத்தான் தெற்கு லோ-லோ எனவும், வடக்கு லோ எனவும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்; பீல் அதை லாரா (Lara) எனக் குறிப்பிட்டுள்ளார். லாரா என்பது லோ-லோ என்பதற்கு இணையான வடமொழிச் சொல்லாகும். வாட்டர்ஸ் அதை லதா (Lata) எனக் குறிப்பிட்டுள்ளது வட மொழிச் சொல்லுடன் எளிதாக அடையாளம் கண்டுகொள்ள உதவுகிறது.

பாணர் மாளவ ராஜபுத்திரர் எனக் குறிக்கும் குமார குப்தர், பிற்கால குப்தர்களின் ஆட்சி வரிசைப் பட்டியலில் சேர்க்கப்பட வில்லை. அவருடைய தம்பி மாதவ குப்தருக்கு முன்பே, பிற்கால குப்தர்களின் குடும்ப வரலாற்றில் குறிப்பிடத்தக்க எவ்விதப் பங்கும் வகிக்காமல் இறந்து போனதே அதற்குக் காரணம் ஆகும். அப்ஸாடு குறிப்பில் ஆதித்யசேனர் தம் தந்தை மாதவ குப்தருக்கு உரிய இடத்தை ஒதுக்கிச் சிறப்பித்திருக்கிறார். ஹர்ஷர் தம் ஆட்சியின் பிற்காலத்தில் மகதத்தின் அரசு பொறுப்பை மாதவ குப்தரிடம் ஒப்படைத்து இருக்க வேண்டும்.[3] மாதவ குப்தர் ஏன் மாளவத்தை விட்டு வெளியேறித் தனேஸ்வரத்தை ஆண்ட வர்த் தனர்களிடம் அடைக்கலம் புக நேர்ந்தது என்பதற்கும் அப்ஸாடு

[1] E.I. - xxi - *116* ff

[2] J. *பிளீட்*-C.I.I-iii-*39*

[3] ஹர்ஷர் மகதத்தின் ஆட்சிப்பொறுப்பை மாதவ குப்தரிடம் ஒப்படைத்தி ருந்தார் என்பதற்கு பாணரோ, யுவான் சுவாங்கோ குறிப்புகள் எதுவும் தர வில்லை. இருப்பினும், ஹர்ஷரின் இறப்பிற்குப்பின் மாதவ குப்தரின் மகன் ஆதித்யசேனர், மகத அரசு பொறுப்பைக் கைப்பற்றியது, ஹர்ஷரின் காலத்தி லேயே மாதவ குப்தர் மகதத்துடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்குச் சான்றாகும்.

குறிப்பு பெருமை மிக்க காரணத்தைத் தந்துள்ளது. 'பகைவர்களைக் கொன்று குவிக்கும் நோக்கம் வெற்றி பெற்றபின்...... போரைத் தவிர்த்த பின்...... மக்கள் கட்டுப்பாட்டு நடந்த...... போரில் பகைவர்களைக் கொன்றபின்...... அங்குத் தங்குவதற்கு எனக்கு என்ன உள்ளது?' என அவர் கூறுவதாகக் காணப்படுகிறது. ஆகவே, மாதவ குப்தர் தம்மைத் தேற்றிக்கொண்டு, 'பெருமை மிக்க ஹர்ஷ தேவருடன் இணையும் ஆசையுடன்' தனேஸ்வரத்தை ஆண்ட வர்த்தனர்களிடம் அடைக்கலம் கோரினர்.[1]

இவ்வாறாக அரை நூற்றாண்டு காலமாகப் பிற்கால குப்தர்களின் அரசியல் சிறப்பு ஹர்ஷரின் எழுச்சியால் குன்றியது. ஹர்ஷரின் இறப்பிற்குப் பின்னரே ஆதித்யசேனர் ஏறக்குறைய கி.பி. 650ஆம் ஆண்டில் மகதத்தைக் கைப்பற்றிப் பிற்கால குப்தர்களின் அரசை நிறுவினர்.

மௌகாரிகள் :

மௌகாரிகள் இந்தியாவின் ஒரு மிகப் பழைய இனத்தினர் ஆவர். அவர்களுடைய பிரிவினர் நாட்டின் பல பகுதிகளில் காணப்படுகின்றனர். பாணினி(Panini)யின் இலக்கண முறையை விளக்கிச் சிறப்புப் பெற்ற இடைக்கால[2] உரை ஆசிரியர்களான வாமன(Vamana)ரும், கையாட்டா(Kaiyata)வும் மௌகாரியரை (Maukharya) எடுத்துக்காட்டாகக் கொண்டு சில சொற்களின் அமைப்பு முறைகளைப் பற்றி விளக்குகின்றனர்; அச்சொல், 'முன்னோரிடமிருந்து பெறுதல்' என்பதைக் குறிக்கும் எனக் கூறுகின்றனர். அவ்வினத்தின் முன்னோர்களில் ஒருவர் மௌஹாரர் (Maukhara) அல்லது தலைவர் என்ற பெயரால் சிறப்பிக்கப்பட்டார் எனவும், அவ்வழி வந்தவர்கள் மௌகாரிகள் என அழைக்கப்பட்டனர் எனவும் ஹிராநந்த சாஸ்திரி கருதுகிறார்.[3] மௌகாரர் (Mauhara) என்பது கிரக வர்மரின் குடும்ப முன்னோர்களைக் குறிக்கும் என பாணரும் கருதுகிறார்.

மௌகாரிகள் பற்றிக் கிடைத்த முதல் வரலாற்றுச் சான்று ஒரு களிமண் முத்திரையே ஆகும். அதில் பிரகிரித பழங்குறிப்பு

[1] C.I.I-iii-எண் 42

[2] வாமனர் தம் விளக்கங்களை, இட்சிங்கின் இந்தியப் பயணத்தின் முன்பே (கி.பி. 671-695) எழுதினர். கீத்-History of Sanskrit Literature-பக்கம் 429. கையாட்டாவின் மகாபாஷ்ய (Mahabhasya) விளக்கங்கள் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படுகிறது; அதற்கு முந்தியதாகவும் இருக்கக்கூடும்.

[3] E. I. XIV - III

மோகலினம் (Mokhalinam) மௌரிய பிராமி முறையில் எழுதப் பட்டுள்ளது. கன்னிங்ஹாம் அம்முத்திரையைக் கயாவில் கண் டெடுத்தார். அதிலிருந்து மூன்றும் அல்லது நான்காம் நூற்றுண்டில் அங்கு ஒரு மௌகாரி இனத்தினர் வாழ்ந்தனர் எனத் தெரிய வருகிறது.[1] மௌகாரிகள் பற்றிய மேலும் மூன்று சிறிய குறிப்பு களை A. S. அல்டிகார்[2] கோட்டா மாநிலத்தில் கண்டெடுத்தார். அவற்றுள் 294 கிரித (Krita) சகாப்தம் குறிக்கப்பட்டுள்ளது. அதை மாளவ சம்வத்(Samvat)திற்கு இணையாகக் கொண்டு, கி.பி. மூன்றும் நூற்றுண்டின் நடுவில், மௌகாரிகள் சிறப்புப் பெற்றி ருந்தனர் என அறியலாம். யஜ்ன வர்மன் (Yajna Varman), சார்தூல வர்மன் (Sardula Varman), ஆனந்த வர்மன் என்ற மூன்று மௌகாரி அரசர்களைப் பற்றி மூன்று மௌகாரிக் குறிப்புகள் பராப(Barabar)ரிலும், கயாவிற்கு அருகிலுள்ள நாகார்ஜுனி மலைக் குகைகளிலும்[3] கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய ஆட்சிக்காலம் குப்தர்களுக்குப் பின்னும், ஹர்ஷர் காலத்திற்கு முன்னும் உள்ள காலமாக இருந்திருக்க வேண்டும் என இந்திரஜித், பூலெர், கில்ஹான் (Kielhorn), M. G. மஜும்தார் ஆகிய வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். மௌகாரி வரலாற்றை ஆர்வத்துடன் எழுதிய E. A. பைர்ஸ் (Pires) கௌமுடி மஹோத்சவ (Kaumudi Mahotsova) என்ற இலக்கியத்தில் தெளிவின்றிக் காணப்படும் ஆதாரங்களைக்கொண்டு, மகதம் குப்தர்களின் ஆட்சிக்கு உட்படுமுன், அதை மௌகாரிகள் ஆட்சி புரிந்தனர் என நிறுவ முயலுகிறுர். ஆனுல், பொதுவாக ஒப்புக்கொள்ளப் பட்ட கருத்துப்படி பைர்ஸின் வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.[4] க்ஷத்திர வர்மன் (Kshatra Varman)[5] என்ற மற்ருெரு மௌகாரி அரசரின் பெயர் ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. பாணர் யாரைக் குறிப்பிடுகிறுர் என்பதை அறிந்து நிலை நிறுத்த இயலவில்லை. பாணர் குறிப்பிட்டுள்ள க்ஷத்திர வர்மன்தான், சந்திர வல்லி(Chandra Valli)க் குறிப்பில் உள்ள படி, ஆரம்பக் காலக் கடம்ப (Kadamba) அரசரான மயூர சர்ம (Mayura Sarman)ஞல் தோற்கடிக்கப்பட்ட மௌரிய அரசன் என

[1] C.I.I-iii-முன்னுரை பக்கம் 14

[2] E.I-XXIII - 42 ff; XXIV - 251 ff

[3] C.I.I-iii - எண்கள் 48 - 150

[4] கௌமுடி மஹோத்சவத்தில் குறிப்பிடப்படும் ஆண்டுகளும், நிகழ்ச்சி களும் வரலாற்றுக்குப் பொருந்துவதாக நிரூபிக்க இயலாது. அதில் காணப் படும் சந்த சேஞு என்ற பாத்திரம் முதலாவது சந்திர குப்தரைக் குறிப்பிடும் என்பது பொருந்தவில்லை. சுந்தர வர்மன், கல்யாண வர்மன் என்ற இருவரும் மௌகாரிகள் என ஒப்புக்கொள்வதும் பொருத்தமற்றதாகவே உள்ளது. இது பற்றி Eastern and Indian Studies - (1939) - பக்கம் 115 ff-ல் ஜெகந் நாத் கூறியுள்ளார்.

[5] ஹர்ஷ சரித்திரம் - மூலம்-பக்கம் 199; மொழிபெயர்ப்பு-பக்கம் 194

பைர்ஸ் குறிப்பிடுகிறார். ஆனால், சந்திர வல்லிக் குறிப்பில் க்ஷத்திர வர்மனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. மோகாரி (Mokari) என்ற சொல் மட்டுமே அதில் காணப்படுகிறது. அத்துடன் அச் சொற்றொடர் நின்று விடுகிறது. சந்திர வல்லிக் குறிப்பில் மோகாரி என்ற சொல்லுக்கு முன் கர்நாடகா, பூனடா (Karnataka, Punata) என்ற சொற்கள் காணப்படுவதால், கர்நாடகத்தில் ஒரு மௌகாரி குடும்பம் வாழ்ந்தது என்பதை இக் குறிப்பு நிரூபிக்கிறது என B. A. சேலடோரே கருதுகிறார்.

ஆறும் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மௌகாரி அரசர்களைப் பற்றிப் பல குறிப்புகளிலிருந்தும், முத்திரைகளிலிருந்தும் அறிந்து கொள்கிறோம். கீழ்க் காணும் முறைப்படி அவர்களை வரிசைப் படுத்தலாம்:

அரசர்	அரசிகள்
1. மகாராஜ ஹரி வர்மர்	—ஜெய ஸ்வாமினி
2. மகாராஜ ஆதித்ய வர்மர்	—ஹர்ஷ குப்தா
3. மகாராஜ ஈஸ்வர வர்மர்	—உபா குப்தா
4. மகாராஜாதி ராஜ ஈசான வர்மர்	—லக்ஷ்மிவதி
5. மகாராஜாதி ராஜ சர்வ வர்மர்	—இந்திர பட்டாரிகா
6. மகாராஜாதி ராஜ அவந்தி வர்மர்	—
7. மகாராஜாதி ராஜ கிரக வர்மர்	—ராஜ்யஸ்ரீ[1]

மேலும், இரண்டு மௌகாரி அரசர்களின் பெயர்களும் இவ் வமிசப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். ஈசான வர்மரின் ஹராஹா குறிப்பு,[2] சூர்யவர்மன் மௌகாரி என்ற மற்றொரு மகன் ஈசான வர்மருக்கு இருந்ததாகக் குறிப்பிடுகிறது. மேலும் நாளந்தா முத்திரை[3] ஒன்றில் அவந்தி வர்மருக்குப்பின் அரசு பொறுப்பு ஏற்ற அவருடைய மகன் பெயரை, முதல் எழுத்து சு (su) எனத் தெளிவாகவும், அடுத்த எழுத்து வா (va) அல்லது சா (cha) எனவும் தெளிவின்றிக் குறிப்பிட்டுள்ளது.

மௌகாரி அரசர் பட்டியலில் காணப்படும் முதல் மூன்று அரசர்கள் மகாராஜா என்ற பட்டத்தை மட்டும் கொண்டிருந்தனர். அவர்கள் காலத்தில் ஆட்சி புரிந்த பிற்கால குப்தர்களைப் போலவே அம்மூன்று மௌகாரி அரசர்களும், குப்தர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக விளங்கினர். இரண்டாவது குறிப்

[1] ஹர்ஷரின் தங்கை
[2] E.I. XIV-110 ff
[3] E.I. XXIV-284-5

பிடப்பட்டுள்ள மெளகாரி அரசரின் மனேவியின் பெயரும், பிற் கால குப்தர்களின் இரண்டாவது அரசரின் பெயரும் ஒரே மாதிரி யாகக் காணப்படுவதால் இருவரும் உடன்பிறந்தவர்களாக இருக்கக் கூடும். மேற்கூறியதை ஒப்புக்கொள்ளும் நிலேயில், குப்தர்களின் வீழ்ச்சிக்குப்பின் வளர்ச்சி பெற்ற இவ்விரண்டு அரச குடும்பங்களும், ஆரம்ப காலத்தில், திருமணத் தொடர்பு கொள்ளும் அளவிற்கு நட்புக்கொண்டு விளங்கினர் என்பது தெளிவாக விளங்கும். மூன்ருவது மெளகாரி அரசரான ஈஸ்வர வர்மரின் ஜான்பூர்[1] குறிப்பு, அவர் ஆந்திரப் பிரதேச அரசர் களுடன் போரிட்டதைக் குறிக்கிறது. மெளகாரி அரசர் அப்போர் களில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் எதையும் பெறவில்லே என்பதை அவர் மகாராஜா என்ற தம்முடைய பட்டத்தை மாற்றிக் கொள்ளாததிலிருந்து அறிந்துகொள்ளலாம். அவருடைய மகன் ஈசான வர்மரின் ஆட்சி சற்று நீண்ட காலம் சிறப்புடன் விளங் கிற்று. ஈசான வர்மரின் ஆட்சிக்காலத்தில் பல குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஹராஹா குறிப்பிலிருந்து, ஈசான வர்மர், கெளடா அரசர் நாட்டை விரிவுபடுத்துதலேத் தடுத்துத் தமக்குட்பட்ட பகுதியிலேயே ஆட்சி புரியும் நிலேயை ஏற்படுத்தி, ஆந்திர அரசர்களேயும், சுலிக்கர்களேயும் வென்ருர் என்பதை அறிகிருேம். ஈசான வர்மர் கெளடா அரசரின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான முதல் படையெடுப்பை மேற்கொண்டி ருக்க வேண்டும். ஈசான வர்மரின் அப்போர் நடவடிக்கை பிற் கால குப்தரான குமார குப்தருடன் மோதல் நிகழ முக்கிய காரணம் ஆகும். ஏனெனில், குமார குப்தரின் அரசு கெளடாவை ஒட்டி அமைந்திருந்ததாலும், குமார குப்தரின் தந்தை முதலாவது ஜீவித குப்தர் கெளடாவைத் தாக்கிக் கைப்பற்றும் முயற்சியை மேற்கொண்டதாலும், ஈசான வர்மர் கெளடாவைத் தாக்கியதைக் குமார குப்தர் விரும்பவில்லே. ஈசான வர்மருக்கும் குமார குப்தருக்கும் நடைபெற்ற போரில், ஈசான வர்மர் தோல்வி அடைந்தாலும் பெரிய இழப்பு எதுவும் அவருக்கு ஏற்படவில்லே. ஈசான வர்மர் தம்முடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளின் அளவைப் பெருக்கிக்கொள்ளாவிட்டாலும், மெளகாரி குடும் பத்தின் புகழை வளர்த்து, தமக்கென ஓர் உயர்ந்த அந்தஸ்தை அடைந்து, மகாராஜாதி ராஜ என்ற பட்டத்தைப் பெற்றுத் திகழ்ந்தார் என்பதை ஹராஹா குறிப்பிலிருந்து அறிகிருேம். ஈசான வர்மரால் தோற்கடிக்கப்பட்ட ஆந்திர அரசர் விஷ்ணு குந்தின்[2] வமிச அரசரான முதலாவது மாதவ வர்மராகும். ஈசான

[1] C.I.I. iii-எண் 51

[2] P.H.A.I - 4வது பதிப்பு - பக்கம் 509

வர்மரிடம் தோல்வியடைந்த சுலிக்கர்களை அடையாளம் காண்பது சற்றுச் சிரமமாக உள்ளது. அவர்களை முலாக்கர்கள்,[1] சோழர்கள்,[2] ஆந்திராவின் சுற்றுப் பகுதியில் அரசு புரிந்தவர்கள்,[3] தென் கிழக்குக்கரையோர கலிங்கம், விதர்பம் (Vidarbha), சேடி[4] (Chedi) பகுதி வாழ்மக்கள் என வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கின்றனர். சுலிக்கர்கள் சாளுக்கியர்களே என H. C. ராய் சௌத்திரி அடையாளம் கொள்வது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.[5] சாளுக்கியர்கள் என்பதே சுலிக்கர் என மருவி வழங்கப் படுகிறது. மகாகூடர் தூண் குறிப்பில் சாளுக்கியர்கள் சாளிக்கியா (Chalikya) எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். குஜராத் குறிப்புகளில் சாளுக்கியர்களைச் சோலகி (Solaki) என்றும், சோலங்கி (Solanki) என்றும் குறிப்பிட்டுள்ளனர். மௌகாரிகள் அரசு புரிந்து வந்த நடுப்பகுதியிலிருந்து இப் பகுதிகள் வெகு தூரத்தில் அமைந்துள்ளபடியால், தோல்வியடைந்தாலும் மௌகாரி அரசின் பகுதிகளாக இணைக்கப்படவில்லை.

ஹராஹா குறிப்பில் கண்டுள்ள ஈசான வர்மரின் மகன் சூர்ய வர்மர், அரசப் பொறுப்பு ஏற்றதாக வரலாற்றில் குறிக்கப் படவில்லை. ஆகவே, சூர்ய வர்மர் தம் தந்தைக்கு முன்னரே இறந்திருக்க வேண்டும். அசிர்கார்,[6] நாளந்தா[7] முத்திரைகளிலும், சூர்ய வர்மரின் பெயர், மௌகாரி அரசக் குடும்ப வரிசையில் குறிக்கப்படவில்லை. ஈசான வர்மருக்குப் பின் சர்வ வர்மர் அரசப் பொறுப்பு ஏற்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது. சூர்ய வர்மர் மகதத்தை வென்று கைப்பற்றிய பெருமை பெற்ற, எவ்விதக் களங்கமும் அற்ற மௌகாரிகளின் குடும்பத்தில் பிறந்தவர் என அவருடைய மகள் வயிற்றுப் பேரரான மகாசிவ குப்தரால் சிர்பூர்க் கல்வெட்டில்[8] புகழப்பட்டு இருக்கிறார். அக்கல் வெட்டுக் குறிப்பின் தன்மைகளையும், காலத்தையும் ஆராய்ந்தவரின் குறிப்புப்படி, அஃது எட்டாவது அல்லது ஒன்பதாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என முடிவு செய்யப் பட்டாலும், மறுபடியும் தீர ஆராய்ந்து பார்க்கும் சமயத்தில், ஏழாம் நூற்றாண்டின் குறிப்புகளுக்கும், இதற்கும் உள்ள ஒற்று

1 T. G. ஆராவமுதன்—'The Kaveri. the Maukharis and the Sangam Age' - பக்கம் 97

2 H. ஹீராஸ் (Heras) - J.A.H.R.S - i-130-133

3 S. K. சாஸ்திரி - J.A.H.R.S - ii-180

4 ஹிராநந்த சாஸ்திரி - E.I - XIV - 110 ff

5 P.H.A.I - பக்கம் 509

6 C.I.I-iii-எண் 47

7 E.I-XXI-73 ff

8 E.I-XI-184 ff

மையைக் காண முடிகிறது.[1] ஹராஹா குறிப்பில் காணப்படும் இளவரசர் சூர்ய வர்மரே சிர்பூர்க் கல்வெட்டிலும் காணப்படும் சூர்ய வர்மராக இருக்க வேண்டும். மகாசிவ குப்தர், மாலார்[2] செப்பேடுகளில் தம்முடைய தாய்மாமாவான பாஸ்கர வர்மர் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். பாஸ்கர வர்மர் சூர்ய வர்மரின் மகன் ஆவார். மௌகாரி அரியணைக்குப் பாஸ்கர வர்மரின் உரிமையை அவருடைய சிற்றப்பா சர்வ வர்மருடைய மகனுன அவந்தி வர்மர் மறுத்துத் தாமே அரசப் பொறுப்பு ஏற்றுர் என்பதை வரலாற்றில் காண முடிகிறது.

ஈசான வர்மருக்குப்பின், அவருடைய இரண்டாவது மகனுன சர்வ வர்மர், மகாராஜாதி ராஜ என்ற பட்டத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுர். பிற்கால குப்த அரசரான மகாசேன குப்தரும், சர்வ வர்மரும் ஒரே காலத்தில் ஆட்சி புரிந்தனர். சாளுக்கியர்களும், திபேத்தியர்களும் மகதத்தின்மீது படையெடுத்து வென்றதால், மகாசேன குப்தர் மாளவத்திற்குச் செல்ல நேர்ந்தது. அந் நிலையில் மௌகாரி அரசரான சர்வ வர்மருக்குப் பிற்கால குப்தர்களால் விளைந்த தொல்லைகள் மறைந்தன. சாளுக்கிய, திபேத்திய படையெடுப்புகள் மகதத்திலிருந்து ஓய்ந்த பின். சர்வ வர்மர் மகதத்தைக் கைப்பற்றிக்கொண்டார். மௌகாரிகளின் கட்டுப்பாடான ஆட்சி மத்திய தேசத்தில் ஏற்பட்டது. அதற்குக் கனோஜ் தலைநகராக விளங்கியது. தியோர் பார்ளுக் குறிப்பும், நாளந்தா முத்திரைகளும் சர்வ வர்மரை எல்லா ஆதிக்கப் பட்டங்களுடன் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளன. சர்வ வர்மர் தம் பெயரில் நாணயங்களையும் வெளியிட்டார்.

சர்வ வர்மரின் முத்திரை ஒன்று அசிர்காரில் உள்ள நிமாடில் (Nimad) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மௌகாரிகளின் ஆதிக்கம், புர்ஹான்பூர் (Burhanpur) வரை பரவியிருக்க வேண்டும் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. சர்வ வர்மர் ஆந்திர அரசர்களுடனும், சாளுக்கியர்களுடனும் தற்காப்பிற்காகவே[3] போரிட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. ஏனெனில், அப்பகுதிகள் மௌகாரி அரசுடன் இணைக்கப்படவில்லை. ஆந்திராவில் விஷ்ணு குந்தின் வமிசத்தைச் சேர்ந்த முதலாவது மாதவ வர்மர் தம்

[1] C.I.I - iii-பக்கம் 235, 245. பிரவாரசேனு(Pravara-sena)வின் குறிப்பு முதலில் கி.பி. எட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்தது எனக் கருதப்பட்டுப் பின் கி.பி. ஐந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்தது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

[2] E. I - XXIII-113 ff

[3] Ancient History of Deccan-பக்கம் 92

நாட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டதற்குச் சான்றுகள் உள்ளன. அவர் கிழக்குப் பகுதிகளை வெல்லும் ஆர்வத்தால் கோதாவரி ஆற்றைக் கடந்து படையெடுப்புகளை மேற்கொண்டார் என ஜுவோ டுப்ரேல்[1] கருதுகிறார். சர்வ வர்மரின் மூத்த சகோதரரான சூர்ய வர்மர் மகாகோசலா(Maha Kosala)[2] அரசுடன் திருமணத் தொடர்பு கொண்டிருந்தார் என அறிகிறோம். சூர்ய வர்மரின் மகன் பாஸ்கர வர்மருக்கு மௌகாரி அரசின் மீதுள்ள உரிமையைச் சர்வ வர்மர் மறுத்து, அவந்தி வர்மரை அரசராக்கிய நிலையில் மௌகாரி, மகாகோசலா அரசக் குடும்பங்களுக்கிடையில் உள்ள உறவு சுமுகமாக இருந்திருக்கும் எனக் கொள்ள முடியாது. ஆகவே, மௌகாரிகள் நிமாடு மாவட்டத்தின் பகுதிகளைத் தங்களுடன் இணைத்துக்கொண்டிருக்க முடியாது எனலாம். ஏனெனில், மௌகாரிகளின் இரு பகையரசுகளான மாளவம், மகாகோசலா இரண்டிற்கும் இடையே உள்ள மலைப் பாங்கான பிரதேசத்தைக் கடந்துதான் நிமாடு பகுதிகளுக்குச் செல்ல வேண்டும். இது போன்ற அபாயம் மிக்க ஒரு முயற்சியைச் சர்வ வர்மர் துணிவுடன் மேற்கொண்டிருக்க இயலாது. மகாராஜா சிந்தியாவிற்குச் சொந்தமான அசிர்கார்ப் பகுதியில், அவருடைய சொத்துகள் அடங்கிய ஒரு பெட்டியில் சர்வ வர்மரின் முத்திரை கண்டெடுக்கப்பட்டதென பிளீட் தெரிவிக்கிறார்.[3] ஆகவே, சர்வ வர்மரின் அம்முத்திரை அசிர்காரில் கண்டெடுக்கப் பட்டதா, அல்லது மகாராஜா சிந்தியாவினுல் வேறு ஓர் இடத்திலிருந்து அவருடைய மற்ற சொத்துக்களுடன் அசிர்காருக்குக் கொண்டு வரப்பட்டதா என்ற ஐயப்பாடு எழுகின்றது. இது வரையுள்ள அக்கண்டெடுப்பு பற்றிய குறிப்புகள், அம்முத்திரை சர்வ வர்மரின் முத்திரையா அல்லது அதன் மாதிரியா என்று தெளிவாக விளக்கவில்லை எனவும் பிளீட் கருதுகிறார். முத்திரைகள் எங்கும் எளிதாக எடுத்துச் செல்லப்படலாம் என்ற உண்மையையும் மனதிற்கொள்ள வேண்டும். மௌகாரி அரசு, சர்வ வர்மர் காலத்தில் விந்திய மலையின் வடக்குப் பகுதிவரை பரவி இருந்த காலத்தில் அம் முத்திரை நிமாடுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். சர்வ வர்மர் ஆட்சிப் பகுதிகள் பண்டில் கண்டிலும் பரவி இருக்க வேண்டும் எனக் கருதுவதற்கு மேலும் ஒரு வரலாற்றுச் சான்று காணப்படுகிறது. காலின்ஜரா மண்டல (Kalinjara-Mandala)த்தில் உடும்பாரா (Udumbara) விஷயாவில் உள்ள ஒரு சிறு பகுதியைப் பரமேஸ்வர சர்வவர்ம தேவர் கொடை

1 Ancient History of Deccan-பக்கம் 92
2 E.I-XI-184 ff
3 C.I.I-iii-பக்கம் 219

யளித்ததாகக் கி.பி. 835-6[1] போஜ தேவரின் பராஹா செப்பேட்டுக் குறிப்பு ஊர்ஜிதப்படுகிறது. இக் குறிப்பில் காணப்படும் சர்வ வர்ம தேவர் என்பவர் மாரசர்வா[2] என ஹிராநந்த சாஸ்திரி[3] கருதுகிருர். மகாராஜ சர்வாவைக் குறிக்கும் என பண்டார்கர்[4] கருதுகிருர். இவர்கள் இருவருடைய கருத்தும் பொருந்தமுடைய தாகத் தோன்றவில்லை. இப் பிரச்சினையைத் தீர ஆராய்ந்து பராஹா குறிப்பில் உள்ள பரமேஸ்வர சர்வவர்ம தேவர் என்ற பெயர் தியோ பார்ஞக் குறிப்பில் உள்ள இதே பெயரையும், பட்டத்தையும் கொண்ட மௌகாரி அரசரான சர்வ வர்மரையே குறிக்கும் என B. P. சின்ஹா[5] கருதுகிருர்.

மேலும், உத்திரப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட மற்ருெரு குறிப்பும் சர்வ வர்மரைக் குறிப்பிட்டுள்ளது. ஏழாம் நூற்ருண்டின் தன்மையில் காணப்படும் மகாராஜா சமுத்திர சேனவின் நிர்மண்ட் (Nirmand) குறிப்பு மகாராஜா சர்வ வர்மரால் அளிக்கப்பட்ட நிலக்கொடைக்கட்டளை சமுத்திர சேனவால் புதிப்பிக்கப்பட்டதாக ஒரு செய்தியைக் குறிப்பிடுகிறது.[6] தனேஸ்வரத்திற்கு வடக்கே உள்ள பஞ்சாபின் காங்ரா மாவட்டமே நிர்மண்ட் ஆகும். மௌகாரிகளின் பகைவரும் பிற்கால குப்த அரசருமான தாமோதர குப்தர் ஹூணர்களின்மீது படையெடுத்து வென்ருர்[7] எனப் பெருமையுடன் குறிப்பிடுவது போன்றே சர்வ வர்மரும் ஒரு சிறிது காலமாவது பஞ்சாபில் மௌகாரி களின் ஆதிக்கத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும் என்பதும், நிர்மண்ட் குறிப்பில் உணர்த்தப்படும் மௌகாரி அரசர் சர்வ வர்ம ராகவே இருக்க வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே ஆகும். இச் சூழ்நிலைகளில் மௌகாரிகளைத் தவிர வேறு எந்த ஓர் அரசும் அது போன்ற நடவடிக்கையை மேற்கொண்டிருக்க இயலாது. மௌகாரி அரசர்களில் சர்வ வர்மரே இத் தருணத்தில் அதை மேற்கொண்ட ஆற்றல் மிக்க அரசராகவும் காணப் படுகிருர். அத் தருணத்தில் வர்த்தனர்கள் ஆற்றலுடன் விளங்க வில்லை. ஆகவே, ஆதித்ய வர்த்தனர் தமக்குள்ள குறைந்த அளவு படை வசதிகளுடன் ஹூணர்களைத் தண்டித்திருக்க இயலாது.

[1] E.I--xix-15 ff
[2] E.I.-vi-250
[3] E.I.-xix-15 ff
[4] E.I.-xviii-235 ff
[5] Decline of the Kingdom of Magadha-பக்கங்கள் 199-200
[6] C.I.I-iii-எண் 80
[7] அத்தருணத்தில் ஹூணர்களின் தொல்லைகள் இருந்தன என்பதை ஹர்ஷ சரித்திரமும் உறுதிப்படுத்துகிறது.

ஆகவே, ஹூணர்களைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பை, அந்நேரத்தில் ஆற்றலும் வளர்ச்சியும் கொண்டிருந்த மௌகாரி அரசர்களே ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அக்காலத்தில் வர்த்தன அரசராகிய ஆதித்ய வர்த்தனர் சிறிய பகுதிக்கே அரசராக விளங்கியதாலும், ஹூணர்களின் படையெடுப்பு கங்கைச் சமவெளிப் பகுதிகளில் அரசு புரிந்த மௌகாரிகளுக்கு விடத் தமக்கே பெரும் இழப்பை ஏற்படுத்தும் என்ற அச்சத்தின் காரணத்தாலும், அப்பொழுது புகழும், ஆற்றலும் பெற்றுத் திகழ்ந்த மௌகாரி அரசரைத் தங்களுடைய அரசைக் கடந்து சென்று ஹூணர்களை வெல்ல அனுமதித்திருக்க வேண்டும். ஆதித்ய வர்த்தனர் சர்வ வர்மருக்கு ஹூணப் படையெடுப்பு முயற்சிகளில் உதவியும் செய்திருக்கக் கூடும். ஆனால், சர்வ வர்மர் இத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு வர்த்தன அரசை வென்று கட்டுப்படுத்தியதாக வரலாற்றில் காணப்படவில்லை. ஆதித்ய வர்த்தனர் பிற்கால அரசரான மகாசேன குப்தரின் தங்கையைத் திருமணம் செய்து கொண்டு, அவர்களுடன் நல்லுறவு கொண்டு இருந்தது ஆதித்த வர்த்தனருக்கு ஒரு வாய்ப்பாக விளங்கியதால், மௌகாரிகள் வர்த்தனர்களுடன் சீரான உறவை ஏற்படுத்திக்கொள்ளவே விரும்பினர். மேலும், மௌகாரிகள் பக்கத்து நாடான தனேஸ்வரத்துடன் முன்யோசனையாக நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டு ஹூணர்களுக்கும் தங்களுக்கும் இடையே ஓர் இடைப்பட்ட பகுதியைத் தோற்றுவித்துத் தங்களைக் காத்துக்கொண்டனர்.

சர்வ வர்மருக்குப் பின் அவந்தி வர்மர் கனோஜின் அரசப் பொறுப்பை ஏற்றார். நாளந்தா முத்திரையில் கண்டபடி அவந்தி வர்மர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதால், மௌகாரி அரசர்களின் வரிசை முற்றிலுமாக நிறுவப்பட்டு விட்டது.[1] சர்வ வர்மரின் பரந்த அரசிற்கு வாரிசாகிப் பல ஆதிக்கப் பட்டங்களையும் தமக்கு உரியதாக்கிக்கொண்டார்.[2] தம் முன்னோர்களைவிட மேலும் அதிகமான நாணயங்களை அவந்தி வர்மர் வெளியிட்டார். ஆனால், மௌகாரி நாணயங்களில் குறிக்கப்பட்டுள்ள ஆண்டுகள் மிகவும் சந்தேகத்திற்கு இடமுள்ளவையாகக் காணப்படுகின்றன. மௌகாரி அரசர்களின் வரிசையைக் குறிக்கக்கூடிய அளவிற்கு, அவை வரலாற்றுப் பயன் உள்ளனவாக இல்லை.

அவந்தி வர்மரின் ஆட்சி, அவருடைய தந்தையின் காலத்தைப் போன்று, ஆர்வமிக்க நிகழ்ச்சிகள் நிறைந்தனவாகக் காணப்படவில்லை. அமைதி மிக்கதாகக் காணப்பட்டாலும், மௌகாரி அரசக்

[1] E.I-xxiv-283 ff

[2] E.I-xxiv-283 ff; C.I.I-iii-எண் 46

குடும்பத்தின் சிறப்பு அவந்தி வர்மர் வாழ்ந்து வந்த காலம் வரையிலும் குறையவில்லை. அவந்தி வர்மரின் மகன் கிரக வர்மரைப் பற்றி ஹர்ஷ சரித்திரத்தில் பல குறிப்புகள் காணப்படுகின்றன. பிரபாகர வர்த்தனர், மௌகாரிகள்மீது பெரும் மதிப்புக் கொண்டிருந்ததாக அவை உணர்த்துகின்றன. அவந்தி வர்மரின் அமைதியான ஆட்சிக் காலத்தில் பிரபாகர வர்த்தனர் தம்முடைய ஆற்றலைப் பெருக்கிக்கொண்டு, வர்த்தனர் அரசக் குடும்பச் சிறப்பையும் வரலாற்றில் நிலை நிறுத்திக் கொண்டார். கிரக வர்மர் மௌகாரியே தங்களுடைய மகளுக்குச் சரியான இணையாக விளங்கும் தகுதியுடையவர் என அரசி யசோமதி தேவியிடம் பிரபாகர வர்த்தனர் கூறியதாக பாணர் குறிப்பிடுகிருர். மேலும். 'மௌகாரிகள் மற்ற அரசக் குடும்பத்தினரை விடச் சிறந்து விளங்கினர். உலகமே சிவனுடைய அடிச்சுவட்டை வணங்குவது போல மற்றவர்கள் மௌகாரிகளைப் போற்றினர்'[1] என பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிடுகிருர். பாணரின் குருவான பாட்சு (Bhatsu) அல்லது பார்வா (Bharva), 'முடி சூடிக்கொண்ட மௌகாரிகளால் கௌரவிக்கப்பட்டார்'[2] என பாணர் காதம்பரியில் குறிப்பிட்டுள்ளார். அவந்தி வர்மர் ஏறக்குறைய கி.பி. 600ஆம் ஆண்டில் இறந்திருக்க வேண்டும்.

ஈசான வர்மர், சர்வ வர்மர், அவந்தி வர்மர் ஆகிய மூவரின் ஆட்சிக் காலத்தைத் தீக்ஷித் மௌகாரி நாணயங்களைப் பகுத்து ஆராய்ந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் கீழ்க் காணுமாறு R. C. மஜும்தார் அமைத்துள்ளார்.[3]

ஈசான வர்மர் (சுமார்) கி.பி. 550 முதல் 576 வரை
சர்வ வர்மர் (சுமார்) கி.பி. 576 முதல் 580 வரை
அவந்தி வர்மர் (சுமார்) கி.பி. 580 முதல் 600 வரை

முன்பே குறிப்பிட்டபடி, மௌகாரி நாணயங்களிலிருந்து அவ்வரசர்களின் ஆட்சிக்காலத்தை வரிசைப்படுத்துவது சற்றுக் கடினமாகும். ஏனெனில், அதில் குறிப்பிட்டுள்ள ஆண்டுகள் குழப்பம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. தீக்ஷித்தின் கணிப்புப்படி, புகழ் மிக்க அதிக நிகழ்ச்சிகள் நடந்த சர்வ வர்மரின் ஆட்சிக்காலம் மிகக் குறுகியதாக உள்ளது. சர்வ வர்மர் சற்று அதிக காலம் ஆட்சி புரிந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுவதால், பின் வருமாறு அது மாற்றப்படலாம்:

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 141; மொழிபெயர்ப்பு-பக்கம் 122
2 காதம்பரி-மொழிபெயர்ப்பு-பக்கம் 1
3 H.C.I.P. iii-பக்கம்-70

ஈசான வர்மர் (சுமார்) கி.பி. 550 முதல் 560-5 வரை
சர்வ வர்மர் (சுமார்) கி.பி. 560-5 முதல் 585 வரை
அவந்தி வர்மர் (சுமார்) கி.பி. 585 முதல் 600 வரை

ஈசான வர்மரின் ஹராஹா குறிப்பு கி.பி. 554-ல் குறிக்கப்பட்டுள்ளது.[1] இக்குறிப்பில் கண்டுள்ள வெற்றிகள் ஈசான வர்மர், குமார குப்தரால் தோற்கடிக்கப்படுவதற்கு முன்பு பெற்ற வெற்றிகள் ஆகும். ஏனெனில், பிற்கால குப்தர்களின் அப்ஸாடு குறிப்பு, 'அவர்களுள் திங்களைப் போன்று ஈசான வர்மர் சிறப்பு மிக்கவர்'[2] எனப் புகழ்கிறது. இவ்விரண்டு அரசர்களுக்கும் இடையே நடைபெற்ற போர், கி.பி. 554ஆம் ஆண்டிற்குப் பின் நடைபெற்றது. ஏனெனில், அது பற்றி மிகச் சிறிய அளவில் உணர்த்தக்கூடிய சான்றுகூட மௌகாரிகளின் குறிப்புகளில் காணப்படவில்லை.

சர்வ வர்மர் மௌகாரி அரசின் மூன்று திசைகளிலும் நாட்டை விரிவு படுத்தியதால், உறுதியாகச் சற்று அதிக காலமே நாட்டை ஆண்டிருக்க வேண்டும். அவரது அசிர்கார் முத்திரையும், நாணயங்களும், அவரைப் பற்றிய மற்ற அரசர்களின் குறிப்புகளும் சர்வ வர்மரின் ஆட்சிக் காலத்தில் பல குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. ஆகவே, இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் அவரது ஆட்சி நீடித்திருக்க வேண்டும் என நம்பலாம்.

பிரபாகர வர்த்தனர், மகாசேன குப்தர் காலத்தில் ஆட்சி புரிந்த அவந்தி வர்மர் தம்முடைய இளமைப் பருவத்தைக் கடந்த நிலையில் மௌகாரி அரசு பொறுப்பை ஏற்றார். அவரது ஆட்சி, சர்வ வர்மரின் ஆட்சிக்காலத்தைவிடச் சற்றுக் குறைவாக 15 ஆண்டுகளே நீடித்திருக்கக் கூடும். அவந்தி வர்மரின் மூத்த மகன் கிரக வர்மருக்கும், ராஜ்யஸ்ரீக்கும் கி.பி. 603-4-ல் திருமணம் நடைபெற்றதாக ஹர்ஷ சரித்திரத்தில் பாணர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு முன்பே அவந்தி வர்மர் இறந்திருக்க வேண்டும். ஏனெனில், பாணரின் ராஜ்யஸ்ரீ திருமணவிழா பற்றிய விளக்கங்களில், அவந்தி வர்மர் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. அவர் உயிரோடு இருந்திருப்பின், திருமண விழா பற்றிய நீண்ட விளக்கத்தில் பாணர் நிச்சயம் அவரைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பார். எனவே, அவந்தி வர்மர் ஏறக்குறைய கி.பி. 600ஆம் ஆண்டில் இறந்திருக்க வேண்டும்.

[1] E.I-xlv-110 ff
[2] CI.I.-iii-எண் 42

அவந்தி வர்மருக்குப் பின் அவருடைய மகன் கிரக வர்மர் கனேஜ் அரசிற்கு மட்டும் அரசராஞர். நாளந்தாவில் கண்டெடுக் கப்பட்ட அவந்தி வர்மரின் முத்திரையிலிருந்து மகதமும் கனேஜும் ஒரே மௌகாரி அரசரால் ஆளப்பட்டு வந்ததைப் போன்று காணப்பட்ட போதிலும், அவர் இறக்கும் தறுவாயில், சில முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. நாளந்தாவில் கண்டெடுக்கப் பட்ட மற்றெரு முத்திரையில் பரம மகேஸ்வர (மகாரா) ஜாதி ராஜ, மௌகாரி அவந்தி வர்மரின் மகன் பர...........ராஜா (தி) ராஜ ஸ்ரீ சுவா (Suva) அல்லது (சுகா-Suca) எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.[1] நமக்குக் கிடைத்துள்ள மற்றக் குறிப்புகளின்படி, கிரக வர்மர் அவந்தி வர்மரின் மூத்த மகன் எனத் தெரிவதால், சுவா அல்லது சுசா (Sucha) என்பவர், அவரது இளைய குமாரர் களில் ஒருவராக இருத்தல் வேண்டும். அவந்தி வர்மரின் இறப் பிற்குப் பின் பட்டத்திற்கு உரிய கிரக வர்மருக்குக் கனேஜ் அரசப் பொறுப்பு முறைப்படிச் சென்ருலும், பாணர் குறிப்பிட்டது போல அவரது இளம் மனைவியைப் பகைவர்கள் சிறைப்படுத்திய தால், அவரும் அகால மரணமடைந்தார்.

அவந்தி வர்மர் இறப்பிற்குப்பின் ஏற்பட்ட மாற்றங்கள் கிரக வர்மருக்கும், சுவாவுக்கும் இடையே அமைதியான சூழ் நிலையைத் தோற்றுவிக்கவில்லை. அவந்தி வர்மரின் இளைய குமாரன் சகோதரனை எதிர்த்துக் கலகம் புரிந்தவராகவே காணப் படுகிருர். அப்படி இருந்திராவிட்டால், ஆரிய மஞ்சு ஸ்ரீ மூல கல்பா[2]வில் சுவ்ரதா (Suvrata) என்று குறிக்கப்பட்ட சுவா, குறிப் புகளில் தம்முடைய பெயருடன், தம் மூத்த சகோதரனுடைய பெயரையும் உரிய மரியாதையுடன் சேர்த்துக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவந்தி வர்மர் ஆட்சிக் காலத்திலேயே சுவா மகதத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். தந்தை இறந்தவுடன் சுவா தம்மை உரிமை மிக்க அரசராகப் பிரகடனம் செய்துகொண்டார். மௌகாரிகளின் பரம்பரை அரசு பிரிக்கப்பட்டது. அவர்களின் குடும்பச் சிறப்பும், ஆற்றலும் முற்றிலுமாக அழியக் காரணம் ஆகும். ஏனெனில், குப்தர்களின் சிறப்பான ஆட்சிக்குப் பின், வட இந்தியாவின் பல பகுதிகளிலும் தோன்றிய சிறிய அரசுகள் படிப்படியாகத் தங்களுடைய ஆட்சிப் பகுதிகளில் ஆற்றல் பெற்று வளர்ந்து நிலை நிறுத்திக்கொண்டு விட்டனர். அடுத்ததாக ஆற்றலும் திறமையும் மிக்க ஓர் அரசர் அவற்றை வென்று, ஒரு பெரிய பேரரசைத் தோற்றுவிப்ப தற்கான தக்க தருணம் உருவாகி இருந்தது.

1 E.I - XXIV - 283 ff

2 மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-மொழிபெயர்ப்பு-பக்கம் 57 ff

கிரக வர்மருக்கு முன்பே சுவா இறந்திருக்க வேண்டும். ஏனெனில், அவரைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ள ஒரே சான்று நாளந்தா முத்திரையே ஆகும். மிகக் குறுகிய காலமே அவர் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அவருடைய கட்டுப்பாட்டிலிருந்த மகதம் மறுபடியும் மௌகாரிகளின் அரசின் பகுதியாக இணையா மலேயே போயிற்று. ரோத்தாஸ்கார் மலைக்கோட்டையின் கல்லில்[1] வெட்டப்பட்டுள்ள மகா சாமந்தா சசாங்கனின் முத்திரை அச்சு, அவர் கௌடாவில் உரிமை பெறுமுன்பே மகதத்தின்மீது உரிமை கொண்டிருந்தார் என்பதைக் குறிக்கிறது. சசாங்கன் கி.பி. 605-6ஆம் ஆண்டிலேயே, அதாவது பிரபாகர வர்த்தனர் இறக்கும் சமயத்திலேயே அவ்வுரிமை பெற்றிருந்தார் என பாணரின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

இத்தருணத்தில் மேற்கு இந்தியாவிலும் பிற்கால குப்தர்களின் இளவரசரான மாளவத்தின் அரசரும் நாட்டின் எல்லைகளைப் பெருக்கிக்கொள்ளும் ஆவலுடன் காணப்பட்டார்.

ராஜ்யஸ்ரீக்கும் கிரக வர்மருக்கும் திருமணம் நடைபெற்ற வுடன், வயது முதிர்ந்த பிரபாகர வர்த்தனர் தம் மூத்த குமாரர் ராஜ்ய வர்த்தனரிடம், இளைய குமாரர் ஹர்ஷரின் துணையுடன், ஹூணப் படையெடுப்புப் பொறுப்பை ஒப்புவித்து அனுப்பி வைத் தார். இத்தருணத்தில் மாளவத்தின் அரசரும், கௌடாவின் அரச ரும் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்களது இரு நாடுகளுக்கும் இடையில் அமைந்திருந்த கனோஜ் அரசையும், தனேஸ் வரத்தையும் ஒரே சமயத்தில் கைப்பற்ற முடிவு செய்தனர்.[2] வட இந்திய ஆட்சிப் பொறுப்பைத் தாங்கள் இருவரும் பகிர்ந்து கொள்ளத் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டனர். பிரபாகர வர்த்தனர் நோய்வாய்ப்பட்டு, பின் அவர் இறந்த வேளையில், தங்களின் குறிக்கோளை நிறைவேற்றத் தருணம் வந்து விட்டதாகக் கருதினர். ராஜ்ய வர்த்தனரும் ஹர்ஷரும் ஒருவருக்குச் சார்பாக மற்றவர் அரியணையை விட்டுக்கொடுக்க வாதம் புரிந்து கொண்டிருந்த வேளையில், மாளவத்தின் கொடிய அரசர், கனோஜ் அரசின்மீது படையெடுத்து, அதை வென்று, கிரக வர்மரைக் கொன்ற செய்தி தனேஸ்வரத்திற்குக் கிடைத்தது. மேலும் ராஜ்யஸ்ரீயைக், 'கொள்ளைக்காரனின் மனைவி போன்று, விலங்கு பூட்டிச் சிறையில் அடைத்த' செய்தியும் எட்டியது. அச் செய்தி கொண்டு வந்த தூதுவர், பகைவர்கள் தனேஸ்வரத்தையும்

[1] C.I.I-iii-எண் 78

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 183, 186; மொழிபெயர்ப்பு 173-178

தாக்கிக் கைப்பற்ற எண்ணியுள்ளார்கள் என்பதையும் தெரிவித்தனர்.[1] இவ்வாருகக் கடைசி உரிமையுள்ள மௌகாரி அரசரின் குறுகிய ஆட்சிக்காலம் துயர நிகழ்ச்சியுடன் முடிவடைந்தது.

ராஜ்ய வர்த்தனர் உடனே மாளவத்தின் அரசரைத் தண்டிக்க விரைந்தார். அவரது படைகள், மாளவ அரசரின் படைகளை, 'எள்ளி நகையாடத் தக்க வகையில் மிகக் குறைந்த காலத்தில்'[2] வென்றன. ஆனுல் அவரது வாழ்விற்கே மாளவ அரசரின் துணைவரான சசாங்கன் முடிவு கட்டினுர். ஒரு பெரிய சக்கரவர்த்தியாகத் திகழும் தகுதிகளையும், வாய்ப்புகளையும் சசாங்கன் பெற்றிருந்தாலும், ஹார்ஷரும், அவரது ஆலோசகர்களும் நிலைமையை மிகச் சாதுரியமாகவும் திறமையாகவும் சமாளித்ததால், அவரது திட்டங்கள் நிறைவேருமற்போயின. ஹார்ஷர் கனோஜ் அரசைக் கைப்பற்றி, காமரூப அரசருடன் நட்பு உடன்படிக்கை செய்துகொண்டதால், சசாங்கன் கைப்பற்றிய பகுதிகளை விட்டு வெளியேறித் தம் நாட்டை மட்டுமே ஆட்சி செய்யும் நிலை ஏற்பட்டது.

வங்காளமும் சசாங்கனும்

கோப சந்திரா, தர்ம ஆதித்யர், சாமசரா தேவர் வமிசத்தின்[3] வலுவற்ற ஆட்சியில் நீடித்து வந்த தெற்கு-கிழக்கு வங்காளம் பகுதிகளே வங்கம் (Vanga) எனக் குறிக்கப்பட்ட பகுதியாகும். கிழக்கு வங்காளத்திற்குச் சாமதத்தா என்ற பெயரும் வழக்கில் இருந்து வந்தது. யுவான் சுவாங் பயணக் குறிப்புகளிலும் வங்காளம் சாமதத்தா என்றே குறிக்கப்பட்டுள்ளது.[4] இக்காலத்தில்[5] வடமேற்கு வங்காளம் கௌடா எனக் குறிப்பிடப்பட்டது. சசாங்கனின் எழுச்சிக்குப்பின் கௌடா முக்கியத்துவம் பெற்றது. தென் பகுதியிலும் கௌடா மக்கள் காணப்படுவதிலிருந்து, அங்கிருந்து அவர்கள் மற்றப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியிருக்க வேண்டும் எனவும் கருதப்படுகிறது. பிற்கால குப்தர்கள், மௌகாரி அரசர்கள் ஆகியோரின் குறிப்புகள், கௌடா கடல்பகுதியை ஒட்டி அமைந்திருந்தது என்பதை உணர்த்துகின்றன.

[1] ஹார்ஷ சரித்திரம்-பக்கம்-183; மொழிபெயர்ப்பு-பக்கம்-173

[2] ஹார்ஷ சரித்திரம் - மூலம் - 186; மொழிபெயர்ப்பு - பக்கம் 178

[3] பரித்பூர் செப்பேடுகள் - I.A-XXXIX - 193 ff, காணயக் குறிப்புகள் B. M. C - பக்கம் C vi ff

[4] வாட்டர்ஸ்-ii-பக்கம் 187 ff

[5] ஈசான வர்மரின் ஹராஹா குறிப்பில் தான் கௌடா என முதல் முறையாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (E.I-XIV-110 ff)

தென் மேற்கு பீகாரில் உள்ள ரோத்தாஸ்கார் மலைக் கோட்டைக் கல்லில் வெட்டப்பட்டுள்ள முத்திரைகளிலிருந்து, சசாங்கன் மகா சாமந்தா[1] என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார் என அறிகிறோம். ஆகவே, சசாங்கன் மகதத்தில் ஒரு சிற்றரசராக அரசியல் வாழ்வு தொடங்கியிருக்க வேண்டும். குப்தர்களின் நாணயங்களுக்கும், சசாங்கனின் நாணயங்களுக்கும் ஒற்றுமை காணப்படுவதாலும், நரேந்திர குப்தர் என்ற மற்றொரு பெயரும் சசாங்கனுக்கு இருந்ததாக ஹர்ஷ சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளதாலும்,[2] சில வரலாற்று ஆசிரியர்கள் சசாங்கன் குப்தப்பேரரசர்கள் அல்லது பிற்கால குப்தர்களின் பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.[3] இக்கருத்துகளை நிறுவப் போதுமான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. சசாங்கனின் நாணயங்கள் மற்றொரு கௌடா அரசரான ஜெயா அல்லது ஜெய நாதாவின் நாணயங்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன என J. அலென் (Allan) குறிப்பிடுகிறார்.[4] வேறு எவ்வித ஆதாரமும் இன்றி, 'குப்தர்' என முடியும் பெயரை மட்டும் கொண்டு, சசாங்கன் குப்த பரம்பரையைச் சேர்ந்தவர் என்ற வாதம் சிறிதும் பொருளற்றது.

சசாங்கன் யாருடைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட சிற்றரசராக மகா சாமந்தா என்ற பட்டத்துடன் விளங்கினார் என்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. சசாங்கன் மகாசேன குப்தருக்கு உட்பட்ட குறுநில மன்னராக அரசியல் வாழ்வு தொடங்கியிருக்க வேண்டும் என K. L. பருவா,[5] R. C. மஜூம்தார் ஆகியோர் கருதுகின்றனர். ஆனால், மகாசேன குப்தர் பல்வேறு படையெடுப்புத் தொல்லைகளினால் கி.பி.586-90 ஆண்டுகளுக்கிடையில் மகதத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. அதன் பின் அப்பகுதியை அவந்தி வர்மர் மௌகாரிகளின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். அவந்தி வர்மரின் மகன் 'சுவா' வின் முத்திரை நாளந்தாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதில் 'சுவா' பல பெருமையுடைய பட்டங்களால் குறிக்கப்படுவதால், அம்முத்திரை கி.பி.600ஆம் ஆண்டு அவந்தி வர்மர்

1 C,I.I.iii-எண் 78

2 பூலெர்-E.I-i-70

3 சசாங்கன், மகதத்தின் குப்த வமிசத்தைச் சேர்ந்தவர் என R. D. பானர்ஜி (History of Orrisa-i-பக்கம் 129) குறிப்பிடுகிறார். சசாங்கன் மகா சேன குப்தரின் மகன் என வித்யாவினோதா (Kamarupa Sasanavali-முன்னுரை பக்கம் 85) கூறுகிறார்.

4 B, M. C - பக்கம் C.V

5 'Early History of Kamarupa' - பக்கங்கள் 58 - 59

இறந்த பின்னரே வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அதுவரை 'சுவா', தந்தையினுல் நியமிக்கப்பட்ட மகதத்தின் ஆளுநராக, நீடித்து இருக்க வேண்டும். சசாங்கனின் அரசியல் வாழ்வு ஏறக் குறைய கி.பி.600-ல் தொடங்கியிருக்க வேண்டும் எனக் கருதப் படுவதால், அவர் பிற்கால குப்தருக்கு உட்பட்டவர் எனக் கருத வாய்ப்பில்லை. ஆகவே, சசாங்கன் மௌகாரிகளுக்கு உட்பட்ட சிற்றரசராகவே இருந்திருக்க வேண்டும்.

B. P. சின்ஹா கூறுவது போல,[1] சசாங்கன் ஜெயநாகாவிற்குக் கட்டுப்பட்ட சிற்றரசராகவும் விளங்கி இருத்தல் இயலாது. சசாங்கன், கர்ன சுவர்ண அரசர் என்பதை யுவான் சுவாங்கின் குறிப்புகள் தெளிவு படுத்துகின்றன. ஜெயநாகாவும் அவ்வமிசத் தைச் சேர்ந்தவர் என்பதை, வப்ப கோஷ வாத குறிப்பும் நிலை நிறுத்துகிறது. ஆகவே, அவர்கள் இருவருக்கும் பல தொடர்புகள் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் இரு வராலும் வெளியிடப்பட்ட நாணயங்கள் ஒரே மாதிரியாகக் காணப் படுகின்றன. வங்காளத்தில் ஜெயநாகாவின் அரசைச் சசாங்கனே பெற்ருர். ஆனுல், ஜெயநாகா வங்காளத்தைக் கட்டுப்படுத்தி யிருந்தார் என்பதற்குச் சான்றுகள் இல்லை.[2] மிகப் பழைய வமிசத்தைச் சேர்ந்த ஆற்றல் மிக்க மௌகாரிகளே அதைக் கட்டுப் படுத்தி வந்திருக்க வேண்டும். ஆகவே, சசாங்கன் ஜெயநாகாவிற்கு உட்பட்ட சிற்றரசராக விளங்கியிருக்க வாய்ப்புகள் இல்லை.

சசாங்கன், அவந்தி வர்மருக்கு உட்பட்டு இருந்த மகதத்தில் மகா சாமந்தா என்ற பட்டம் பெற்ற சிற்றரசராக விளங்கினுர் எனவும், அம்முறையில் கயாவிலுள்ள வர்மர் இனத்தினர்களையும் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும் எனவும் B. C. சென் (Sen) கருதுகிருர். அவந்தி வர்மர் சாளுக்கியர்களால் தோற்கடிக்கப் பட்ட பின், தம்மை மகதத்தின் தலைவராகச் சசாங்கன் ஆக்கிக் கொண்டார். மகாசேன குப்தர் இறந்தவுடன் தம் ஆதிக்கத்தைப் புந்ரவர்த்தனு வரை விரிவுபடுத்திக்கொண்டார் எனவும் அவர் குறிப்பிடுகிருர்.[3] மௌகாரி அரசர்களான அவந்தி வர்மர், கிரக வர்மர் ஆகியோர் மகதத்தை ஆண்ட காலத்தில் சசாங்கன் ஓர் உயர் சிற்றரசராக விளங்கினுர் என D. C. கங்கூலி கருதுகிருர்;

[1] Decline of the Kingdom of Magadha-பக்கம் 222 ff

[2] ஜெயாவின் முத்திரை அச்சு ஒன்று நாளந்தாவில் கண்டெடுக்கப்பட்ட திலிருந்து, அவர் மகதத்தைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் எனக் கூறுவது வலுவான வாதமாகாது (A.S.I A.R-1935-36-பக்கம் 52). வேறு எந்த ஓர் உறுதியான வரலாற்றுச் சான்று இன்றி எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய நாணய அச்சுச் சான்றை வைத்து மட்டும் ஒரு கருத்தை வலி யுறுத்த இயலாது எனலாம்.

[3] Some Historical Aspects of the Inscriptions of Bengal-பக்கம் 261

பிற்காலத்தில் சசாங்கன் மகதத்தை வென்று, பின் கௌடாவையும் கைப்பற்றிக்கொண்டார் எனக் குறிப்பிடுகிறார். ஆகவே, சசாங்கன் மகதத்தச் சேர்ந்தவர் என்றும், பிற்காலத்தில் கௌடாவைக் கைப்பற்றியவர் என்றும் கங்கூலி கருதுகிறார்.[1]

சசாங்கன், அவந்தி வர்மர் மௌகாரிக்கு உட்பட்ட ஒரு சிற்றரசராக விளங்கினார் என்பதும், முதலில் மகதத்தை வென்று, பின் கௌடாவைக் கைப்பற்றினார் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. பிற்கால குப்தர்கள், மௌகாரிகளின் வரலாற்றை ஆராய்ந்த அடிப்படையில், எச்சூழ்நிலைகளில் சசாங்கனின் அதிகாரம் ஆரம்பமாகி வளர்ச்சியுற்றது என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால், சசாங்கன் மகதத்தைச் சேர்ந்தவர் என்ற கங்கூலியின் கருத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. ஹர்ஷ சரித்திரம், யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள், மஞ்சு ஸ்ரீ மூல கல்பா ஆகியவற்றில் சசாங்கன், கௌடாவைச் சேர்ந்தவர் எனவும், கௌடாவின் அரசர் எனவும் பல முறைகள் விளக்கப்பட்டிருக்கிறார். சசாங்கன் மகதத்துடன் கொண்டிருந்த உறவுகள் சிறப்பானவையாக இருந்திருப்பின், அல்லது மகதத்துடன் சசாங்கன் கொண்டிருந்த தொடர்பு அவர் இறக்கும் வரை நீடித்தது என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருது வது போல இருந்திருப்பின், சசாங்கனின் சொந்தக் குறிப்புகளில் அல்லது அக் காலத்தைச் சேர்ந்த மற்றக் குறிப்புகளில் நிச்சயமாக அது விளக்கப்பட்டிருக்கும். ஏனெனில், மகதத்தின் ஆட்சிப் பொறுப்பு வகிப்பது, உயர் அதிகாரத்தைக் குறிப்பதாக அக்கால அரசர்களால் கருதப்பட்டது. எடுத்துக்காட்டாக, ஹர்ஷர் தனேஸ்வரம், கனோஜின் அரசர் என்ற சிறப்பைப் பெற்றிருப்பி னும், மகதத்தின் அரசர் எனச் சீனக் குறிப்புகளில் சிறப்பிக்கப் பட்டிருக்கிறார்.

கோப சந்திராவிலிருந்து சசாங்கன் வரை வங்காளத்தை ஆட்சி புரிந்த அரசர்களின் வரிசையையும், அவர்களின் காலத்தை யும் காணுதல், அவரது பூர்விகத்தை நிலைநிறுத்தப் பயன்படும். அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் மற்றும் செப்பேட்டுக் குறிப்பு களின் அடிப்படையிலேயே இதைச் சரியாகக் குறிக்க இயலும். வரலாற்று ஆசிரியர்கள் பொதுவாக ஏற்றுக்கொண்டதன் அடிப் படையில், கோப சந்திரா, குப்தர்களின் ஆட்சி வீழ்ந்த சமயத்தில் கி. பி. 525ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றார் எனக் குறிக்கலாம். அவ்வரிசையின் அடுத்த அரசர் தர்ம ஆதித்யர் ஆவார். அதற்கு அடுத்தபடியாகச் சாமசரா தேவர் ஆட்சிப்

[1] I.H.Q-XII-456 ff

பொறுப்பேற்றார். சாமசரா தேவரின் ஆட்சி கி.பி. 575ஆம் ஆண்டு வரை நீடித்தது. 'ஜெயா' என்பவரின் உறவினராகச் சசாங்கன் காணப்படவில்லை. மேலும், அவர்கள் இருவரும் முதலாவது குறிப்பிட்ட மூன்று அரசர்களின் உறவினர்களாகவும் காணப்படவில்லை. நரேந்திர ஆதித்யர் என்ற பெயரும் கொண்டிருந்த சாமசரா தேவரின் நாணயங்களை 'ஜெயா', சசாங்கன் நாணயங்களுடன் ஒப்பிட்டுக் காணும்பொழுது, கௌடாவை ஆண்ட அடுத்த இரண்டு அரசர்கள் 'ஜெயா'வும், சசாங்கனும் என அறிகிறோம்.

966

சாமசரா தேவரின் நாணயத்தில் அம்பு எய்வது போன்ற ஓர் உருவமும், எருதுக் கொடியும் பொறிக்கப்பட்டுள்ளன. நிறை 148·2 மணிகள் ஆகும். நாணயத்தின் முன்புற இடப் பக்கத்தில் அரசர் தம் இடக்கையில் வில்லும், வலக் கையில் அம்பும் கொண்டு நிற்கிறார். அதற்குப் பக்கத்தில் நந்தியின் உருவம் காணப்படுகிறது. கீழே ஷஹ சா (Shaha Cha) எனக் குறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் இலக்குமியின் உருவம் தாமரையில் அமர்ந்திருப்பதைப் போன்று காணப்படுகிறது. இலக்குமி தன் இடக்கையில் தாமரையுடனும், வலக்கையில் அணிகலனுடன் ஸ்ரீ நரேந்திரப் பழங்கதையுடனும் தெய்வீகமாக வீற்றிருப்பது காணப்படுகிறது.[1]

இந்த நாணயத்துடன் வங்காளத்தில் கண்டெடுக்கப்பட்ட மற்ற ஜெயாவின் நாணயங்களை ஒப்பிட்டு, கர்ன சுவர்ண வப்ப கோஷ வாத கட்டளையில் மகாராஜாதி ராஜ ஜெயநாக எனக் குறிக்கப்பட்டவர் ஜெயாவே என அடையாளம் காணலாம். ஜெயாவின் நாணயங்களைக் கீழ்க் காணுமாறு விளக்கலாம்: முன்புறத்தில் இடப் பக்கம் அரசர் இடக்கையில் வில், வலக் கையில் அம்புடன் தெய்வீகக் குறிப்புகள் கொண்டு காணப்படுகிறார். சக்கரக் (Cakra) கொடியும், இடப் பக்கம் சற்றுக் கீழே 'ஜெய' என்ற எழுத்துகளும் காணப்படுகின்றன. பின்புறம் இலக்குமியின் உருவம் தாமரையில் அமர்ந்த நிலையில் தாமரையை இடக் கையிலும், வலக் கையில் அணிகலனையும் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது அதற்கு மேலே சற்று இடப் பக்கம் யானை துதிக்கையைத் தூக்கி நீர் தெளிக்கும் நிலையிலும் ஸ்ரீ பிரகாந்த யஷா (Sri-Prakandayasah?) என்ற எழுத்துகள் தெளிவின்றியும்[2] காணப்படுகின்றன.[2] ஒரு யானை அல்லது இரண்டு யானைகள் இலக்

[1] V. A.ஸ்மித்-Catalogue of Coins at the Indian Museum, Calcutta-i-பக்கங்கள் 120, 122; N. K பட்டாசாலி (Bhattasali) இதைச் சாமசரா தேவரின் நாணயம் எனக் குறிப்பிடுகிறார்.

[2] B.M.C-பக்கம் 150

குமிக்கு நீர் தெளிக்கும் நிலையில் உள்ள கஜலெட்சுமியின் தெளிவற்ற உருவம் ஜெயநாகாவின் வப்ப கோஷ வாத கட்டளையிலும் காணப்படுகிறது.

சசாங்கனின் நாணயத்தில் முன்புறம் சற்று இடப்புறம் தள்ளி நந்தியும், சிவன் அடையாளம் காணமுடியாத ஒரு பொருளை இடக்கையில் கொண்டு உயர்த்திய நிலையிலும், அதற்கு இடப்புறம் சந்திரனும் (சசாங்கன்) காணப்படுகிறது. வலப்புறம் ஸ்ரீசா எனவும், சற்றுக் கீழே ஜெயா எனவும் காணப்படுகிறது. பின்புறம் இலக்குமி தாமரையில் அமர்ந்த நிலையில் இடக்கை முழங்காலின் மீது தாங்கிய நிலையில் தாமரையுடனும், வலக்கை விரிக்கப்பட்ட நிலையில் வெறுமையாகவும், இருபுறங்களின் மேலே யானைகள் நீர் தெளிக்கும் நிலையிலும் காணப்படுகின்றன. வலப்பக்கத்தில் ஸ்ரீ சசாங்கா என்று குறிக்கப்பட்டுள்ளது.[1]

சாமசரா தேவ நரேந்திராதித்யா, 'ஜெயா' பிரகாந்தயஷா நாணயங்களுக்கிடையே காணப்படும் ஒரே வேற்றுமை என்னவென்றால், சாமசரா தேவரின் நாணயத்தில் நந்தி காணப்படுகிறது. 'ஜெயா'வின் நாணயத்தில் சக்கரக்கொடி காணப்படுகிறது. சாமசரா தேவரின் நாணயங்கள் 'ஜெயா'வின் நாணயங்களைவிடப் பழமையானவை என நம்பப்படுகிறது.

ஜெயா, சசாங்கன் ஆகியோரின் நாணயங்களின் பின்புறம் ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. ஆனால், சசாங்கனின் நாணயத்தின் பின்புறத்தில் நந்தியும் சந்திரனும் காணப்படுகின்றன. இவ்விரண்டும் பாணர் சசாங்கனைப் பற்றி விளக்கும் சமயத்தில் உவமையாகத் தவறாது ஹார்ஷ சரித்திரத்தில் காணப்படுகின்றன.[2]

பின்புறம் 'நரேந்திராதித்யா' எனக் குறிப்பிடப்பட்டுள்ள நாணயங்கள் சசாங்கனின் நாணயங்களுக்கு முந்தியவை என அலென் கருத்துக் கொண்டுள்ளார்.[3] ஜெய பிரகாந்த யஷா எனக் குறிக்கப்பட்டுள்ள நாணயமும், சசாங்கனின் ஸ்ரீசா, 'ஜெயா' எனக் குறிக்கப்பட்ட நாணயத்திற்கு முந்தியதாகவே இருக்க வேண்டும். அப்படியிராத நிலையில், சசாங்கனின் நாணயத்தில் 'ஜெயா' என்று குறிக்கப்பட்டுள்ளதற்கு, ஜெயநாகா, சசாங்கன் ஆகிய இருவரின் நாணயங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை அவற்றுள்

[1] B.M.C-பக்கம் 147

[2] ஹார்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 178,258; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 168, 260

[3] B.M.C. முன்னுரை பாகம் 67-69, PI-XXIV

ஒன்றிற்கு ஒன்று தொடர்பு கொண்டவையாக இருத்தல் வேண்டும் என்று அலென் கூறியுள்ள நிலையில், என்ன விளக்கம் கூற முடியும்? ஜெயாவின் பாரம்பரியத்தைச் சசாங்கன் உரிய வாரிசு உரிமையின்றி, போர் ஆற்றலினுலேயே அபகரித்துக்கொண்ட நிலையில், தம் நாணயங்களில் முன் அரசர்களுடன் நல்லுறவு கொண்டிருந்ததைக் காட்டிக்கொள்வதன் மூலம், தம்முடைய உரிமையை நிலைநாட்டிக்கொள்ள விரும்பியிருக்க வேண்டும்.

சசாங்கனுக்குப்பின் ஜெயநாகா பொறுப்பேற்றிருக்க வேண்டும் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[1] அக்கருத்தும் ஆராயப்பட வேண்டிய ஒன்றே ஆகும். அவர்கள் சசாங்கனுக்குப்பின் ஜெயநாகா எனக் குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம், மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில் காணப்படும் வரிசையே ஆகும். முதலிலேயே சசாங்கனின் வாழ்க்கை பற்றிய விளக்கங்களும், பின்னுல் கௌடாவில் நாகராஜா என்பவரின் ஆட்சி பற்றியும் கொடுக்கப்பட்டுள்ளன.[2] ஆகவே, சசாங்கனுக்குப்பின் நாகராஜா என அவர்கள் வரிசைப் படுத்துகின்றனர். ஆனுல், மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் குறிப்பிடப் பட்டிருக்கும் நாகராஜாவே ஜெயநாகா எனக் கொள்வது மிகத் தவறுகும். பாரசிவாக்களுக்கு[3] உட்பட்ட நாகாக்களின் ஆட்சியையே மஞ்சு ஸ்ரீ மூல கல்பா குறிக்கும் என K. P. ஜெயசுவால் கருத்துத் தெரிவிக்கிறுர். மஞ்சு ஸ்ரீ மூல கல்பா விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட பாத்திரங்களின் உண்மையான குணநலன்களைப் பல பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்தி மறைத்து விடுவதால், பின்வரும் வரிகளுடன் நாணயச் சான்றுகளை இணைத்து ஆராயும் நிலையில், 'ஜெயா என்ற நாகம் (ஜெயநாகா) தென்கிழக்குப் பகுதி மக்களை வென்றது. கேசரி(சிங்கம்)யும், சோமா (சசாங்கன்) என்ற பெயருடையவரும் அரசராஞர்கள். (இது) கௌடா அரசைப் பிரித்தது,'[4] அவை மறைமுகமான உவமைகளால் ஜெயநாக சசாங்கனைக் குறிப்பிடுகிறது எனலாம். ஜெயாவின் நாணயங்கள் சசாங்கனின் நாணயங்களைவிடத் தரத்திலும் எடையிலும் குறைந்து காணப்படுகின்றன. சசாங்கனின் நாணயங்கள் சராசரி 145·8 மணி எடையும், ஜெயாவின் நாணயங்கள் 136 மணி எடையும் உள்ளது. நாணயங்களின் எடைக் குறைவு, அது பிற்காலத்தில் ஆட்சி புரிந்தவருடையது என்பதைக்

[1] R. C. மஜும்தார்-History of Bengal-i-பக்கம் 79

[2] மஞ்சு ஸ்ரீ மூல கல்பா அத்தியாயம் 53-பகுதி 33-7-715-50ஆம் அடிகள்; மொழிபெயர்ப்பு-An Imperial History of India-பக்கம் 53-5

[3] மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-மொழிபெயர்ப்பு, விளக்கவுரை-பக்கங்கள் 47, 52

[4] மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-பக்கம் 66

குறிக்கும் எனப் பொதுவாகக் கருதப்படுவதால், சசாங்கனுக்கு ஜெயா பிந்தியவர் என பட்டாசாலி கருதுகிறார்.

ஆனால் சசாங்கனின் ஆட்சிக்காலத்தில் ஹர்ஷரின் அதிகாரம் வளர்ந்துகொண்டிருந்தபடியால், சசாங்கனின் இறப்பிற்குப் பின், வேறு ஒரு கௌடா அரசர், அது குறுகிய காலமாக இருப்பினும் கூட, அரசு புரிய அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டார் என முடிவு செய்வதே பொருத்தமாகும். ஆனால், ஜெயநாகாவின் நாணயங்களும் மற்ற வரலாற்றுச் சான்றுகளும் அவர் சற்று நீண்ட காலமே ஆட்சி புரிந்தார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் காணப்படும் விளக்கங்கள், சசாங்கனின் இறப்பிற்குப்பின் கௌடா பிரிக்கப்பட்டு ஆற்றல் இழந்த நிலையைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. சசாங்கனின் இறப்பிற்குப்பின் வடக்கு, மத்திய ஒரிசாப் பகுதிகளில் அரசு புரிந்த சிற்றரசர்கள் ஹர்ஷரின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டனர் என்பதற்கு வலுவான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. ஆற்றல் மிக்க எதிரியான ஹர்ஷர், இப்பகுதிகளை வெல்ல வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்ற, சசாங்கன் இறக்கும் வரை பொறுத்திருந்தார் எனத் தோன்றுகிறது.

ஜெயநாகாவின் காலம், சசாங்கனின் காலத்திற்கு முந்தியது என்பதை உறுதிப்படுத்திய நிலையில் (மிகக் குறைவான சான்றுகளே உள்ள) அவருடைய ஆட்சிக்கால முக்கிய நிகழ்ச்சிகளைக் காண்போம். மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் குறிப்பிட்டுள்ளபடியே ஜெயநாகா தென்கிழக்கு வங்காளம் அல்லது கிழக்கு வங்காளப் பகுதிகளை வென்று, தம் ஆட்சிக்காலத்தைத் தொடங்கி இருக்க வேண்டும். முன்பு குறிப்பிட்டது போலத் தென்கிழக்கு வங்காளம் ஆறும் நூற்றாண்டின் ஆரம்பத்திலாவது கௌடாக்களின் தாயகமாக இருந்திருக்க வேண்டும். ஜெயநாகா தெற்கு வங்காளத்தை வென்றதன் காரணமாகவே சாமசரா தேவருக்குப்பின், கௌடாவின் அரசு பொறுப்பேற்றார். கிழக்குப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள தங்கக் காசுகள் அவருடைய பகையரசர்களுடையவை ஆகும். அவர்களில் பிரிதுவீரா (Prithuvira), சுதானி ஆதித்யர்[1] என்ற இருவரைப் பற்றிக் காசுகளில் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதைக் காண முடிகிறது. ஜெயநாகாவின் வப்ப கோஷ வாத கட்டளை, அவர் 'மகாராஜாதி ராஜ' என்ற பட்டம் கொண்டிருந்ததைக் குறிக்கிறது. மேலும், அவர் கர்ன சுவர்ண வமிச பரம்பரையைச் சேர்ந்தவர் எனவும் அது கூறுகிறது.

[1] B.M.C-எண் 620; Numismatic Chronicle (1934) பக்கம் 235; S. K. சக்ரபோர்தி (Chakkraborthy). Transactions of the International Numismati Congress (1936)-பக்கம் 405

ஜெயநாகாவின் ஆட்சி காமரூபத்திற்கும் பரவி இருந்தது என்பதை நிறுவச் சான்றுகள் உள்ளன. காமரூபத்தின் அரசர் சுஸ்தித வர்மன் இறந்த உடன் கௌடாவின் அரசர் காமரூபத்தைத் தாக்கினூர். அச் சமயம் காமரூபத்தின் சு-பிரதிஷ்தித வர்மன் (Su-Pratishthita Varman), பாஸ்கர வர்மன் என்ற இரு இளவரசர்கள் கௌடாக்களுக்கு எதிராகத் தீரத்துடன் போரிட்டனர் எனத் தூபி (Doobi) தகடுகளில் குறிக்கப்பட்டுள்ளது.[1] காமரூபத்தின் இளவரசர்கள் கௌடா அரசரின் தாக்குதலே முறியடித்து வெற்றி பெற்றனர் என, அதோடு தொடர்புடைய ஐந்தாவது தகட்டில் குறிக்கப்பட்ட சொற்றெடர்களே ஆராய்ந்து P. D. சௌத்திரி கருத்துத் தெரிவிக்கிறுர். ஆனுல் கௌடா அரசரை எதிர்த்துப் போரிட்ட சு-பிரதிஷ்தித வர்மனும், பாஸ்கர வர்மனும் தீரத்துடன் போரிட்டாலும், பகைவரால் கைது செய்யப்பட்டு, கௌடாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனினும், பிற்காலத்தில் சகோதரர்கள் தங்களுடைய சிறப்பான குணநலன்களால் இழந்த அரசை மீண்டும் பெற்றனர்[2] என D. C. சர்கார் கூறுகிறுர். அவருடைய கருத்து பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

மாளவத்தின் அரசர் என்பதைவிடக் கௌடாவின் அரசர் எனக் கருதப்பட்ட மகாசேன குப்தர் கௌடாவின் படைகளே நடத்திச் சென்றதைத் தூபி குறிப்பு உணர்த்துகிறது என R. C. மஜூம்தார்,[3] P. C. சௌத்திரி ஆகிய வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். மகாசேன குப்தருக்குப் பிறகு ஆட்சியைக் கைப்பற்றிய சசாங்கன் காமரூபத்தின்மீது தம் அதிகாரத்தை நிலேநிறுத்த விரும்பி இருக்க வேண்டும். ஆகவே, சசாங்கன் காமரூபத்தின்மீது படையெடுத்ததை அது குறிக்கிறது என B. P. சின்ஹா[4] கருதுகிறுர். ஆனுல், மேலே குறிப்பிட்ட இருவரும் அத் தருணத்தில் காமரூபத்தின்மீது படையெடுப்பை மேற்கொண்டிருக்க முடியாது என்பதையும், அவர்கள் இருவருக்கும் இடைப்பட்ட காலத்தில் வங்காளத்தை ஆண்ட ஜெயநாகா அதை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதையுமே தூபி தகடுகள் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பதைச் சான்றுகளுடன் விளக்கலாம்.

மகாசேன குப்தர் மகதத்தை ஆண்ட காலத்தில் பல தொல்லேகளினுலும், வெளிநாட்டுப் படையெடுப்புகளினுலும் துன்பம்

1 J.A.R.S-XII-எண் 1-2,16 ff
2 I.H.Q-XXVI-241 ff
3 H.C.I.P-iii-பக்கம் 76, 92
4 The Decline of the Kingdom of Magadha-பக்கம் 243

அடைந்தார் என்பதை முன்பே நாம் கண்டோம். அந் நிலையில் ஓர் அக்கிரமிப்பு நடவடிக்கையை மகாசேன குப்தர் மேற்கொண்டிருக்க முடியாது எனலாம். மேலும், காமரூபத்தின்மீது படையெடுத்து வெற்றி கண்ட சாதனை நிகழ்ந்திருப்பின், அஃது ஆதித்ய சேனரின் அப்ஸாட் குறிப்பில் மிகச் சிறப்பித்துப் புகழப்பட்டு, சுஸ்தித வர்மனை வென்றது நிலை நிறுத்தப்பட்டிருக்கும். காமரூபத்தின்மீது படையெடுப்பு முயற்சியை மேற்கொண்டவர்கள் கௌடாக்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாசேன குப்தரின் மகத, வங்காள அரசைப் பெற்ற சசாங்கன் கௌடா என அழைக்கப்படுவதால், மகாசேன குப்தரும் கௌடா என அழைக்கப்படலாம் என்ற மஜும்தாரின் வாதம் பொருத்தம் உடையதாகத் தோன்றவில்லை. மகதத்திற்கும் கௌடாவிற்கும் அரசராக உள்ள ஒருவர் முந்தியதையே பெருமையாகக் கொண்டு, மகதத்தின் அரசர் எனக் குறிப்பிடுவதையே விரும்புவார். அவரால் வெல்லப்படும் அரசர்களும் கௌடா அரசரிடம் தோல்வியடைந்தனர் என்பதைவிட மகதத்தின் மன்னரிடம் வீழ்ந்ததையே ஒப்புக் கொள்வர் என்பதற்குச் சிர்பூர்த்தூண் குறிப்பு[1] ஒரு சான்றாகும்.

சசாங்கன் காமரூபத்தின்மீது படையெடுத்து வென்றார் என்ற **B. P.** சின்ஹாவின் கருத்தும் பொருத்தமானதாகக் காணப்படவில்லை. தூபி குறிப்பில் கண்டுள்ள படையெடுப்பு நிகழ்ச்சி சசாங்கன் வங்காளத்தின்மீது உரிமை பெறுவதற்கு முன்பே நடைபெற்றதாகும். மேலும், அது மிகத் தேவையான படையெடுப்பாகவும் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. தூபி குறிப்பின் ஐந்தாவது தகட்டில் காணப்படும் போர் சுஸ்தித வர்மனின் இறப்பிற்குப் பின் நடைபெற்றது. ஆகவே, அது கி.பி. 590-595ஆம் ஆண்டுகளுக்கிடையே நடைபெற்றிருக்க வேண்டும். முன் உள்ள விளக்கங்களின்படி மகாசேன குப்தரின் மகத ஆட்சி அத் தருணத்தில் முடிந்து விட்டது. அந் நிலையில் மகதம் மௌகாரிகளின் ஆட்சிக்கு உட்பட்டது. மௌகாரிகளுக்கு உட்பட்ட சிற்றரசராகச் சசாங்கன் ரோத்தாஸ்கார் மாவட்டத்தை ஆண்டு வந்தார். சசாங்கன் கி.பி. 600-ல் 'சுவா' இறக்கும் வரையில் தனி உரிமை பெற்ற அரசராக மாறவில்லை. 'சுவா'வின் இறப்பிற்குப்பின் சசாங்கன் மகதத்தையும், ஜெய நாகாவின் இறப்பிற்குப்பின் கௌடாவையும் கைப்பற்றிக் கொண்டார். ஆகவே, சசாங்கன் காமரூபத்தைத் தாக்குவது என்பது கி.பி. 604-5ஆம் ஆண்டுகளுக்குமுன் நடைபெற்றிருக்க

[1] மௌகரிகளைப் பற்றிய சிர்பூர்த் தூண் குறிப்பில், 'மௌகாரிகள் மகதத்தை ஆண்டதால் பெருமை பெற்றனர்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. (E.I-XI-184 ff)

முடியாது. ஆனுல், தூபி குறிப்பில், ஆறும் நூற்றுண்டின் இறுதியில், ஏழாம் நூற்றுண்டுக்கு முன் அப்போர் நடைபெற்றிருக்க வேண்டும் எனத் தெளிவாகக் காணப்படுவதால், ஜெய நாகாவின் காலத்திலேயே அது நடைபெற்றிருக்க வேண்டும் எனலாம்.

மேலும், சசாங்கன் தம் ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் பாஸ்கர வர்மனை வென்றிருக்கக்கூடிய நிலையில், அந் நிகழ்ச்சியை நிச்சயமாக பாணர் குறிப்பிட்டிருப்பார் என நம்பலாம். மஞ்சுஸ்ரீ மூல கல்பாவிலும் சசாங்கனின் ஆட்சி காசிவரை நீடித்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, காமரூபத்தின்மீது படையெடுத்த நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

ஆகவே, ஜெயநாகாவே தூபி குறிப்பில் கண்டுள்ள படையெடுப்பை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பது சரியாகப் பொருந்துகிறது. ஆறும் நூற்றுண்டின் இறுதியில் ஜெயநாகா கௌடாவின் ஆட்சித் தலைவராக விளங்கிய போது, காமரூபத்தின் அரசர் இறந்த செய்தி எட்டியவுடன், காமரூபத்தின்மீது படையெடுத்து, தம் ஆதிக்கத்தை மேலும் பரப்ப விரும்பினுர். காமரூபத்தின் இளவரசர்களைக் கைது செய்து, அரியணையைக் கைப்பற்ற அவருக்கு அதிர்ஷ்டம் துணை புரிந்தது. ஆனுல், மறுபடியும் காமரூபத்தின் இளவரசர்கள் அரியணையைத் திரும்பக் கைப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. ஜெயநாகாவின் படை ஆற்றல் குறைவையே அது குறிக்கிறது. காமரூபம் அளவில் பெரியதாக விளங்கியதால், பேரரசராகிய ஜெயநாகாவினுல் காமரூபத்தின் மீது மிகக் குறைவான கட்டுப்பாட்டினையே கொண்டிருக்க முடிந்தது. இக் காரணத்தையே அதன் இளவரசர்கள் வாய்ப்பாக மாற்றி அரசைத் திரும்பக் கைப்பற்றிக்கொண்டனர்.

இந் நிகழ்ச்சிக்குப் பின் ஜெயநாகா அதிக காலம் வாழவில்லை. கி.பி. 602-3-ல் அவர் இறந்தார். அவ்வாறு நாம் முடிவு செய்வதற்குக் காரணம், கி.பி. 606ஆம் ஆண்டு ஹர்ஷர் அரசப் பொறுப்பேற்ற சமயம் சசாங்கன் கௌடாவில் தம் அதிகாரத்தை நன்ருக நிலைநாட்டிக்கொண்டிருந்த நிலைமையை வைத்தே ஆகும். பிரபாகர வர்த்தனருக்குப் பின், ஹர்ஷரின் மூத்த சகோதரரும் அரசப் பொறுப்பை ஏற்க உரியவரும், முறைப்படி அரசராகப் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னரே இறந்து போனவருமான ராஜ்யவர்த்தனருக்கு முன்பே, சசாங்கனின் வாழ்க்கை மஞ்சுஸ்ரீ மூல கல்பாவில் விளக்கப்பட்டுள்ளது. தம்முடைய மௌகாரி மேலரசர் இறந்தவுடன், சசாங்கன் உரிமையுள்ள அரசராகும் முயற்சியில் ஈடுபட்டுச் சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வெற்றி

யும் பெற்றார். மகதத்தில் இயங்கிக்கொண்டிருந்த பௌத்த மடங்களை அவர் தாக்கி அழித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், பௌத்த மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளைச் சசாங்கன் சிறிது காலத்திற்குப் பின்னர்த் தொடங்கியிருக்க வேண்டும் எனக் கருதப் படுகிறது. கனோஜ் அரசைத் தாக்கி மாளவத்துணைவருடன் சேர்ந்துகொள்ளச் சென்ற சமயம், சசாங்கன் பௌத்த மதத்திற்கு எதிரான கொள்கையைப் பின்பற்றியிருக்க வேண்டும். எப்படியும் ஹர்ஷர் பதவி ஏற்பதற்கு முன்பே, சசாங்கன் பௌத்தர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், ஹர்ஷர் கனோஜின் அரசப் பொறுப்பை ஏற்பதற்குமுன், அவலோகிடேஸ்வரா போதி சத்துவரின் அறிவுரையை நாடிச் சென்றதாகவும், பௌத்த மதத்திற்குத் தீங்கிழைத்த சசாங்கனைத் தண்டிக்கும் 'நல்ல கர்மத்தை' புத்தரின் வாக்குப்படி நிறைவேற்றவே, கனோஜின் அரசப் பொறுப்பை ஒப்புக்கொண்டதாகவும் யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் தெளிவாகக் காணப்படுகிறது. மேலும், சசாங்கன் பௌத்த மதத்திற்குத் தீங்கிழைத்ததாகப் பல இடங்களில் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். பழங்காலத்தில் இந்தியாவிலும் மதச் சகிப்பின்மை காணப்பட்டதற்குச் சசாங்கன் மேற்கொண்ட நடவடிக்கைகள் அரிய சான்றுகளாம்.

சசாங்கன் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிய வரலாற்றைக் காண்போம். காசி, குசி நகரம் (Kusi Nagara), கயா, பாடலிபுத்திரம்[1] ஆகியவற்றை வென்று, மகதத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றியபின், சசாங்கன் தம் கவனத்தைக் கௌடாவின்மீது திருப்பினார். ஜெயநாகா இறந்ததால் கௌடாவைக் கைப்பற்றுவது சசாங்கனுக்கு எளிதாகவே இருந்தது. கௌடாவையும் கைப்பற்றிய நிலையில் சசாங்கன் ஆற்றல் மிக்கவராக விளங்கினார் என்பதில் ஐயமில்லை. ராஜ்யவர்த்தனரும், ஹர்ஷரும் தந்தை இறந்த துயரத்துடன் இருக்கும் வேளையில், சசாங்கனின் ஆற்றல் வளர்ச்சியைச் 'சூழும் இருளுடன்' ஒப்பிட்டு, ஹர்ஷ சரித்திரத்தில் பாணர் விளக்கியுள்ளார். சைவத்தைப் பின்பற்றும் ஹர்ஷரின் பகைவருக்குத் 'திங்கள்' என்ற பெயரும் உண்டு. 'மேலுலகத்தில் சந்திரன் சிவனுக்குக் கட்டுப்பட்ட நந்தியின் திமிலைப் போன்று உயர்ந்து ஒளி விடும்பொழுது, அதன் கொம்பினால் வாரியிறைக்கப்பட்ட சகதியினால் கறை படிந்து காணப்படுகிறது'[2] என பாணர் குறிப்பிட்டுள்ளார். மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவிலும் ராஜ்யவர்த்தனர், 'சோமா(சசாங்கன்)வைப்போன்று ஆற்றல் மிக்கவர்' எனக்

1 மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-715ஆம் அடி
2 ஹர்ஷ சரித்திரம் மூலம்-பக்கம் 178; மொழிபெயர்ப்பு-பக்கம் 168

குறிப்பிடப்படுகிருர்.[1] பௌத்த மத இலக்கியங்களில் சசாங்கனின் ஆற்றல் ராஜ்யவர்த்தனரைவிடக் குறைவாகவே குறிக்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்தினர் சசாங்கனே வெறுக்கும் காரணம் அனைவரும் அறிந்ததே.

பிரபாகர வர்த்தனர் இறந்த நிலையில் வர்த்தன அரசக் குடும்பத்தின் எதிர்காலமே இருண்டு காணப்பட்டது. தந்தை இறந்த நிலையில் அரச பொறுப்பை ராஜ்யவர்த்தனர், ஹர்ஷர் இருவரில் யார் ஏற்பது என்ற முடிவு காணப்படாமல் இருந்தது. இக் குழப்பமான நிலையை வாய்ப்பாகக் கொள்ள எதிரிகள் முடிவு செய்தனர். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, கனோஜ் அரச பொறுப்பு முதிர்ச்சி அடையாத அரசரிடம் இருந்ததாலும், அதற்குத் துணைநின்ற பிரபாகர வர்த்தனர் இறந்து போனதாலும், ஒரே சமயத்தில் கனோஜ், தனேஸ்வரம் ஆகிய இரு அரசர்களையும் வீழ்த்த, மாளவம், கௌடா அரசர்கள் திட்டமிட்டனர். மாளவத்தின் அரசருக்கும், கிரக வர்மருக்கும் நடைபெற்ற போரில் மௌகாரி அரசர் கொல்லப்பட்டார். அவரது மனைவி ராஜ்யஸ்ரீ கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். மற்றப் பிரச்சினைகள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டுத் தங்கையின் கணவனைக் கொன்றவர்களைப் பழிவாங்கும் படையெடுப்பை ராஜ்யவர்த்தனர் மேற்கொண்டார். ஆனால், அம் முயற்சியில் அவர் சசாங்கனால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார். அந் நிலையில் ஹர்ஷர் துடிப்புடனும், துணிவுடனும் உடனே எடுத்துக்கொண்ட முடிவும், தனேஸ்வரத்திற்கும் காமரூபத்திற்கும் எதிர்பாராமல் ஏற்பட்ட நல்லுறவும் கனோஜ், தனேஸ்வர அரசின் முதிர்ந்த அரசியல் வல்லுநர்களின் அறிவுரைகளும் சேர்ந்து வரலாற்றை ஹர்ஷருக்குச் சாதகமாக மாற்றி அமைத்தன. இல்லாவிட்டால், மாளவம், கௌடாவின் இணைப்பு, வட இந்தியாவில் எத்தடையுமின்றி, ஓர் ஆற்றல் மிக்க அரசைத் தோற்றுவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. கனோஜ், தனேஸ்வரத்தின் கூட்டுப்படைகள் ஹர்ஷருக்குக் கட்டுப்பட்டு விசுவாசமும், திறமையும் மிக்க தளபதிகளால் வழி நடத்தப்பட்டு, வரலாற்றின் போக்கை முற்றிலுமாக மாற்றி அமைத்தன. ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படும் கடைசிப் பகுதிகளில் பாணர் ஹர்ஷர் படைகளை நடத்திச் செல்வதை விளக்கியுள்ளார். அதில் காணப்படும் உவமைகள் அப்பொழுது தான் ஹர்ஷர் ஒரு பெரும்போரில் ஈடுபட்டு, வெற்றியடைந்ததை மறைமுகமாக உணர்த்துகின்றன.[2] 'ஹர்ஷரால்

[1] மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-720ஆம் அடி. சசாங்கன் 'சோமா' எனவும், ராஜ்யவர்த்தனர் 'ரா' எனவும், ஹர்ஷர் 'ஹர' எனவும் குறிக்கப்பட்டுள்ளனர்.

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 257-8; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 259-60

வெல்லப்பட்ட சோமா, தம் நாடான கௌடாவை விட்டு வெளியேற முடியாதவாறு தடுக்கப்பட்டார்'[1] என மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவிலும் குறிப்பிட்டிருப்பது, பாணரின் விளக்கங்கள் வலுமிக்க வரலாற்று ஆதாரங்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள செய்திகள் யுவான் சுவாங்கின் பயணக்குறிப்புச் சான்றுகளுடன் சசாங்கன் இறக்கும்வரை மகதத்தின்மீது ஆட்சி உரிமை கொண்டிருந்தார் என்ற கருத்தை[2] முற்றிலுமாகத் தவறு என நிரூபிக்கின்றன.

சசாங்கன், பௌத்த மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என யுவான் சுவாங் பயணக் குறிப்புகளில் ஐந்து இடங்களில் காணப்படுகின்றது.[3] அவை அனைத்தும் சீனத்துப் பயணி அங்குச் சென்றதற்கு நெடுங்காலத்திற்கு முன் நடைபெற்றதாகவே காணப்படுகின்றன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு, கி.பி. 637ஆம் ஆண்டு யுவான் சுவாங் மகதத்தில் உள்ள புனித பௌத்த இடங்களுக்குச் சென்ற காலத்திற்குச் சற்று முன் வரை சசாங்கன் மகதத்தில் ஆட்சிப் பொறுப்பு வகித்து வந்தார் எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கருதுவது வியப்பாகவே உள்ளது.[4]

ஹர்ஷர் கனோஜ் அரச பொறுப்பு ஏற்பதற்கு முன், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட போதி சத்துவத்தின் அறிவுரையை நாடிய நிகழ்ச்சியும், அது தந்த அறிவுரையும் சசாங்கன் பௌத்த மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளைக் கி.பி. 606ஆம் ஆண்டிற்கு முன்னரே மேற்கொண்டிருந்தார் என்பதைத் தெளிவாகக் குறிக்கின்றன.

இரண்டாவதாக, சசாங்கன் குசி நகரத்தில் வாழ்ந்த பௌத்தர்களைத் துன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. 'உடனே

[1] மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-அடி-725

[2] R. C. மஜூம்தார்-H.C.I.P-iii-பக்கம் 80; R. K. முகர்ஜி-ஹர்ஷா-பக்கம் 63, 73

[3] வாட்டர்ஸ்-i-பக்கம் 343; ii-பக்கங்கள் 43, 92, 115-116, 192

[4] C.A.G.I-(1924)-பக்கம் 646; R. C. மஜூம்தார்-H.C.I.P-iii-பக்கம் 107; கி.பி. 637ஆம் ஆண்டு யுவான் சுவாங் மகதம் செல்வதற்குச் சற்று முன், 'பௌத்த மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட சசாங்கன் இறந்தார்' என 'ரெக்கார்டு' குறிப்பிடுவதால், 'ஹர்ஷர், சசாங்கனைப் புனர வர்த்தனவில் வென்று................திரும்பினார்...........மறுபடியும் சசாங்கன் மகதத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றினார் என அறியலாம்' என மஜூம்தார் கருதுகிறார்.

சசாங்க ராஜா பௌத்தக் கோட்பாடுகளை அழித்தார். துறவிகள் துணையற்றுப் போயினர். ஆண்டுகளும், திங்கள்களும் விரைவாகக் கடந்தன.'[1]

மூன்ருவதாக, மகதத்தில் அசோகரின் பக்தி மிக்க பௌத்தப் பணிகளைப் பற்றிய நீண்ட விளக்கத்திற்கு அடுத்து சசாங்கனின் செயல்கள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது:

'அசோகர் அரியணை ஏறிய சமயம்...........அடிக்கடி நேரில் சென்று புனிதக்கல்லை வழிபட்டார். அதற்குப்பின் பல்வேறு நாட்டு அரசர்களும் அதைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பினுர்கள். ஆனுல்........அதை அவர்கள் அவ்விடத்திலிருந்து அசைக்கவே முடியவில்லை.'

'பின்னுல் சசாங்க ராஜா பௌத்தக் கோட்பாடுகளை அழிக்க முற்பட்ட சமயம்...........கல்லை வெட்டி எடுத்து, அதன் புனித அடையாளங்களை அழித்து, அதைக் கங்கையில் எறிந்தார். ஆனுல், அது மறுபடியும் பழைய இடத்திற்கு வந்து சேர்ந்தது.'[2]

பின்னுல் எனக் குறிப்பிட்டிருக்கும் சொல்லுக்குச் சீன மொழியில் எந்த ஒரு வரையறை செய்யப்பட்ட காலமும் உணர்த்தப் படவில்லை. அசோகருடன் ஒப்பிடும் சமயத்தில் சசாங்கன் மிகவும் பிந்தியவர் என்பதில் ஐயமில்லை. அதனுல் யுவான் சுவாங் 'பின்னுல்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கக் கூடும். அல்லது தாம் அங்குச் சென்ற காலத்திற்கு முன்னுல் என்ற பொருளிலும் பயன்படுத்தியிருக்கக் கூடும். அவருடைய பயணத்திற்குச் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் எனப் பொருள் கொள்ளலாம்.[3]

நான்காவதாகச் சசாங்கனின் செய்கைகளை அசோகருடன் தொடர்பு படுத்திக் குறிப்பிடுகிருர்:

'அசோகர் புனித போதியின் வேர்களை நீராட்டி......அதைச் சுற்றிலும் கற்சுவர் ஒன்றைக் கட்டினுர்...........பிற்காலத்தில் சசாங்க ராஜா புத்தரின் மதத்தைத் தூற்றி... .. பௌத்த மடல்களை அழித்து, புனித போதியை வெட்டி வீழ்த்தினுர்.....'

'சில மாதங்களுக்குப்பின் மகதத்தின் அரசரான பூர்ண வர்மர்...........போதிக்குப் புனித நீராட்டி மறுபடியும் தழைக்கச் செய்தார்........'[4]

[1] Hsi-yu-chi-மூலம்-VI-21 b
[2] Hsi-yu-chi-மூலம்-viii-5 a
[3] D. தேவஹூட்டி-ஹர்ஷா-பக்கம் 41
[4] Hsi-yu-chi-viii-19 a; மகதத்தின் ஆளுநராகப் பூர்ண வர்மர் (ஹர்ஷரால்) நியமிக்கப்பட்டிருக்கலாம்.

கடைசியாக, மிக அழகுள்ள புத்தரின் உருவச் சிலை ஒன்று எவ்வாறு அங்கு அமைக்கப்பட்டது என்பதை யுவான் சுவாங் விளக்குகிறார்: 'சசாங்கன் புனித போதியை வெட்டி வீழ்த்திய பின், புத்தரின் சிலையையும் அழிக்க முயன்றார்; ஆனால், அதன் அழகையும் சிறப்பையும் கண்டபின் அவருடைய மனம் அமைதியும், முடிவும் இன்றித் துன்பமுற்றபின் தமது நாட்டிற்குத் திரும்பினார்.'[1]

மறுபடியும் சசாங்கன் தம் அதிகாரிகளில் ஒருவரை அழைத்து, புத்தரின் சிலையை அகற்றிவிட்டு, அவ்விடத்தில் சிவனின் சிலை ஒன்றை அமைக்கும்படி கட்டளையிட்டார். அந்த அதிகாரி புத்தரின் சிலையை மறைத்துச் சுவர் எழுப்பிவிட்டு, கட்டளை நிறைவேற்றப்பட்டு விட்டது எனச் சசாங்கனிடம் தெரிவித்தார். அந்நிலையில் சசாங்கன் தெய்வத்தால் தண்டிக்கப்பட்டு நோயுற்று இறந்தார்.

மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் குறிப்பிட்டுள்ளபடி, ஹர்ஷரால் வெல்லப்பட்டு, கௌடாவை விட்டு வெளியேறத் தடைசெய்யப் பட்டிருப்பினும், மேலே காணும் விளக்கங்களைக்கொண்டு, 'சசாங்கன் மகதத்தைத் திரும்பக் கைப்பற்றினார்'[2] என R. C. மஜூம்தார் குறிப்பிடுகிறார். ஆனால், யுவான் சுவாங்கின் எந்த ஒரு விளக்கமும் சசாங்கன் மகதத்தைக் கைப்பற்றியதாக உணர்த்தவில்லை எனலாம். அதற்கு மாறாகச் சீனத்துப் பயணியின் விளக்கங்களிலிருந்து சசாங்கன் புத்தரின் புனிதப்பொருள்களை நாசம் செய்த பின், மகதத்தை விட்டு வெளியேறினார் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. புத்தரின் சிலைக்கு ஊறு விளைவித்த உடனே சசாங்கன் நோயுற்று இறந்தார் என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனெனில், தம் நம்பிக்கையை வலியுறுத்துவதற்காக அதை யுவான் சுவாங் கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சியாக்கிக் கூறியிருக்கக்கூடும். இதே போன்ற ஒரு கதை பௌத்த மதத்திற்கு எதிரான கொள்கையைப் பின்பற்றிய மற்றோர் அரசரான புஷ்யமித்ர சுங்காவிற்கும் கூறப்படுவதுண்டு. வடக்கு பௌத்த ஆதாரங்களில் அக்கதை காணப்படுகிறது. அதன்படி மக்கள் கொண்டு வரும் ஒவ்வொரு பௌத்தத் துறவியின் வெட்டப்பட்ட தலைக்கும் 100 தினராக்கள் (Dinaras) அளிக்கப்படும் என்ற சாகலாச் (Sakala) சட்டத்தைப் பறைசாற்றியவுடன், புஷ்யமித்ர சுங்கா தம் படையுடன் நிலை குலைந்தார் எனக் கூறப்படுகிறது. இக் கதை முற்றிலும் தவறு

[1] Hsi-yu-chi-viii-21 a
[2] H-C-I-P-iii-பக்கம் 107

என்பது போலவே, யுவான் சுவாங் சசாங்கனைப் பற்றிக் கூறும் கதையும் உண்மைக்கு மாருக இருக்கக்கூடும். புஷ்யமித்ர சுங்கா பற்றிய பழங்கதையை நிச்சயம் யுவான் சுவாங் அறிந்தே இருக்க வேண்டும். ஏனெனில், சீனத்தில் அக்கதை பல விதங்களில் நிலை பெற்றுள்ளது. ஆகவே, யுவான் சுவாங் புஷ்யமித்ர சுங்காவின் முடிவை மனதிற்கொண்டு, சசாங்கனுக்கும் அது போன்ற ஒரு சாபக்கேட்டை ஏற்படுத்த இந் நிகழ்ச்சியை எழுதியிருக்கக் கூடும். சசாங்கன் ஒரு மாதத்திற்கு மேலாகக் கடுமையான காய்ச்சலினுல் அவதியுற்று இறந்தார் என மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் குறிக்கப் பட்டுள்ளது.[1] அதிலிருந்த கௌடாவின் அரசர் சசாங்கன் மிக ஆபத்தான ஒரு நோயினுல் பீடிக்கப்பட்டு இறந்ததை யுவான் சுவாங், அம்மன்னருடைய பௌத்தமத நம்பிக்கைக்குப் புறம் பான செய்கைகளுடன் தொடர்பு படுத்தியிருக்க வேண்டும் என்பதேயன்றி, சசாங்கன் மகதத்தைக் கைப்பற்றி இறந்து போனுர் என்பதற்குச் சான்ருகக் கொள்வதற்கு இல்லை. சசாங்கன் மகதத் தைக் கைப்பற்றிய பின் கௌடாவை வென்று, அங்கிருந்து தம் படைகளுடன் கனேஜுக்குப் படையெடுத்துச் சென்ருர். ஹர்ஷர் தம் தங்கையின் கணவரையும், சகோதரரையும் கொன்றவர்களைப் பழி வாங்கும் முயற்சியில் வெற்றி அடைந்ததால், சசாங்கனின் திட்டங்கள் இறுதியாகத் தோல்வியடைந்தன. ஹர்ஷர் தம் படையாற்றலால் சசாங்கனைக் கௌடாவை விட்டு வெளியேருத வாறு தடுந்துக் கட்டுப்படுத்தினுரேயன்றி முற்றிலும் வென் ெருடுக்கவில்லை. இந் நிகழ்ச்சிகளுக்குப் பின்னும் சசாங்கன் கௌடாவில் தம் ஆட்சியைப் பல ஆண்டுகள் தடையின்றி நடத்திய தற்கு மஞ்சு ஸ்ரீ மூல கல்பா குறிப்பிடும் காரணம் 'முற்பிறவியில் சசாங்கன் பௌத்தராக வாழ்ந்து செய்த நற்செயல்களின் பயனே' என்பதாகும். சசாங்கனின் அரசு கி.பி. 606—620ஆம் ஆண்டு களுக்கிடையில் தென்மேற்குப் பகுதியில் ஒரிசாவை ஒட்டிப் பரவியது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சசாங்கனுக்கும் ஹர்ஷருக்கும் மோதல்கள் நிகழ்வதற்கு முன்பே வங்காளத்தின் பெரும்பகுதி சசாங்கனின் கட்டுப்பாட்டில் இருந்தது. மஞ்சு ஸ்ரீ மூல கல்பா சசாங்கனை வங்காளத்தின் வட பகுதியில் உள்ள புந்ரவர்த்தனுவுடன் தொடர்பு படுத்துகிறது.[2] யுவான் சுவாங்கின் குறிப்பில் உள்ளபடி சசாங்கன் கர்ன சுவர்ணு வைத் தலைநகராகக் கொண்டிருந்தார். அது மேற்கு வங்காளத் தில் உள்ளது. சசாங்கன் தெற்கு வங்காளத்தையும் கட்டுப்

1 மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-மொழிபெயர்ப்பு-பக்கம் 50
2 மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-மூலம்-723ஆம் அடி

படுத்தியிருந்தார் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், பிற்காலத்தில் அவர் அரசு ஒரிசாவிலுள்ள கஞ்சம் மாவட்டம் வரைப் பரவியிருந்தது. சசாங்கனின் ராஜலீலா (Raja-lila) வகை நாணயங்கள் ஜெஸ்ஸோருக்கு அருகில் உள்ள மகமத்பூரி[1]யில் கண்டெடுக்கப்பட்டிருப்பினும்கூட, கிழக்கு வங்காளம் அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது ஐயத்திற்கு உரியதாகவே உள்ளது. ஏனெனில், நாணயங்கள் எங்கும் எளிதாக எடுத்துச் செல்லப்படலாம். இவ்வாறாக ஹர்ஷரால் 'கௌடாவை விட்டு வெளியேறாது!' தடுக்கப்பட்ட சசாங்கன், தம் நாட்டை ஒரு பரந்த நாடாக்கி ஆட்சி புரிந்தார். மேற்குப் பகுதியில் நாட்டை விரிவு படுத்தும் முயற்சியில் தோல்வி அடைந்தாலும், மகதத்தை இழக்க நேர்ந்தாலும் நாட்டை விரிவு படுத்த வேண்டும் என்ற சசாங்கனின் ஆர்வம் குன்றவில்லை; மாறாகத் தம் நாட்டை வேறு திசைகளில் விரிவு படுத்தினார். கௌடாவின் வடக்கிழக்குப் பகுதி அரசரான காமரூபத்தின் பாஸ்கர வர்மன், ஹர்ஷருடன் உடன்படிக்கை செய்துகொண்டு, தன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டு விட்டபடியால், சசாங்கன் தம் கவனத்தைச் சற்று எளிதாக வெல்லக்கூடிய ஒரிசா அரசைக் கைப்பற்றக் கவனம் செலுத்தினார்.

ஒரிசாவின் வடக்குப் பகுதியும், நடுப்பகுதியும் கி.பி. 597 முதல் 602-3 வரை மான அரசர்களின் (Manas) ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை A. சோரோ[2] (Soro) செப்பேடு, பட்டியகில்லா கட்டளை[3](Patiakella Grant)யில் குறிக்கப்பட்டுள்ள ஆண்டுகள் குறிப்பிடுகின்றன. A. சோரோ செப்பேடு மகாராஜ சம்புயாசஸ்(Sambu-yasas)ஸினுடையதும், பட்டியகில்லா கட்டளை மகாராஜ சிவராஜாவினுடையதும் ஆம். உத்ராவிற்குத் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கொங்கோட அரசை செயில் ஒத்பவா (Sail Odbhava) வமிசத்தினர் ஆண்டு வந்தனர். செயில் ஒத்பவா அரசர்கள் சில காலத்திற்கேனும் மான அரசர்களுக்கு உட்பட்டு ஆட்சி புரிந்தனர். இவ் வமிசத்தை ஸ்தாபித்தவரின் கொள்ளுப்பேரன் இரண்டாவது மாதவ ராஜா ஆவார். அவர் கி.பி. 619ஆம் ஆண்டிற்குச் சற்று முன் ஆட்சி பொறுப்பேற்றார். குப்த சகாப்தம் 300 என ஆண்டு குறிக்கப்பட்ட மாதவ ராஜாவின் கஞ்சம் செப்பேடு, மகாராஜாதி ராஜ சசாங்கன் ஆண்ட காலத்தில் வெளியிடப்பட்டதாகும்.[4] கி.பி. 606-7ஆம் ஆண்டில்,

1 B.M.C-பக்கம்-CXXVII
2 E.I-XXIII-197 ff
3 E.I-IX-285 ff
4 E.I-VI-143 ff

சசாங்கன் தம் நாட்டை மேற்குத் திசையில் விரிவு படுத்துவது ஹர்ஷரால் தடைப்படுத்தப்பட்டபின், ஒரிஸாவின் நடு, வடக்குப் பகுதி முழுவதும் தென்பகுதியில் கஞ்சம் மாவட்டம் வரையிலும் சசாங்கனுல் கைப்பற்றப்பட்டு ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டன.

தண்டபுத்தியும், உத்கலாவும் கௌடாவிற்கு உட்பட்டிருந்தது என்பதை மிட்ஞபூரில் (Midnapur) கண்டெடுக்கப்பட்ட, சசாங்கனின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட இரண்டு செப்பேடுகளிலிருந்து அறியலாம். எண் 2 எனக் குறிக்கப்பட்ட மிட்ஞபூர் செப்பேட்டில் 8ஆம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. மகாபிரதிகாரா சுபகீர்த்தி(Subhakirti)யின் மேலரசர் ஸ்ரீ சசாங்கனின் ஆட்சிக்காலத்தை அது குறிக்கிறது எனலாம். கி.பி. 603ஆம் ஆண்டு சசாங்கன் தம்முரிமை பெற்ருர் என ஏற்றுக்கொண்டு கணக்கிட்டால், மிட்ஞபூர் எண் 2 செப்பேடு, சசாங்கன் வடக்கு ஓரிசாவில் உள்ள தண்டபுத்தியைக் கி.பி. 611 ஆம் ஆண்டு வென்ருர் என்பதைக் குறிக்கிறது எனலாம். மிட்ஞபூர் எண் 1 செப்பேட்டில் 13ஆம் ஆண்டு அல்லது குப்த சகாப்தம் 303 குறிக்கப்பட்டுள்ளது.[1] இதிலிருந்து கி.பி. 616ஆம் ஆண்டிற்குள் சசாங்கன் தண்டபுத்தி, உத்கலா ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் அரசராக விளங்கினர் என்பது தெளிவாகிறது.

ஓரிசாவிலுள்ள பாலாசோர் மாவட்டத்தில் உள்ள சோரோவில் கண்டெடுக்கப்பட்ட அக்காலத்தைச் சேர்ந்த மேலும் நான்கு செப்பேடுகளை ஒன்ருேடு ஒன்றுடனும், மிட்ஞபூர் எண் 1 செப்பேட்டுடனும் ஒப்பிட்டு ஆராயும் வேளையில், சசாங்கன் இன்றைய பாலாசோர், மிட்ஞபூர் மாவட்டங்களாகிய உத்தரா தொசாலீ (Uttara Tosali)யையும் கி.பி. 608ஆம் ஆண்டே கைப்பற்றி ஆட்சி புரிந்தார் என்பதையும் உறுதிப்படுத்தலாம்.[2] அதாவது, மிட்ஞபூர் எண் 2 செப்பேட்டில் குறிக்கப்பட்டதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னே சசாங்கன் அப்பகுதியைக் கைப்பற்றி விட்டார் என்பதற்கு மேலே குறிப்பிட்ட செப்பேடுகள் சான்ருக விளங்குகின்றன.

[1] R. C. மஜும்தார் அதை 19ஆம் ஆண்டு அல்லது குப்த சகாப்தம் 309 எனக் கருதுகிருர். ஆனல் B. P. சின்ஹா(Decline of the Kingdom of Magadha-பக்கங்கள் 236-8), மற்றும் பல வரலாற்று ஆசிரியர்கள் அதை 3ஆம் ஆண்டு எனக் கருதுகின்றனர் (G. பூலெர், D C. சர்கார்). ஆனல், அது சசாங்கனின் ஆட்சியிலிருந்து 13ஆம் ஆண்டாகவே இருக்க வேண்டும்; 303 குப்த சகாப்தமாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், பாலாசோரில் உள்ள சோரோவில் கண்டுபிடிக்கப்பட்ட செப்பேடுகள், சசாங்கன் அப்பகுதியில் ஆட்சி புரிந்ததை, அவரது ஆட்சிக்காலத்திலிருந்து கணக்கிட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன.

[2] I.H.Q-xi-611 ff; E.I-xxiii-197 ff

ஆண்டு 5 மார்கா (Margga) நான்காவது நாள் குறிக்கப் பட்டுள்ள பாலாசோர் செப்பேடு,[1] மகாபிரிதிகார மகாராஜ சாமந்தா (Maha-prathihara-maharaja Samanta) ஸ்ரீ பானு (Bhanuh), ஸ்ரீ பரமபத்தாரக பாத(Sri-parama-bhataraka pada) விற்கு உயர்ந்த மத அந்தஸ்தை அளிக்க, பிரியமித்ர ஸ்வாமின் (Priya-mitra-Svamin), சாட்டு மித்ர ஸ்வாமின் (Chatu-mitra-Svamin), துருவ மித்ர ஸ்வாமின் (Dhruva-mitra-Svamin), ஆருக மித்ர ஸ்வாமின் (Aruha-mitra-Svamin) என்ற மகாமகாதாராக் (Maha-mahattaras)களுக்கு நிலக்கொடை அளித்தார் எனக் குறிப்பிடுகிறது.

ஆண்டு 5 பல்குண (Phalguna) 17ஆம் நாள் குறிக்கப் பட்டுள்ள சோரோ D செப்பேடு, மகா பிரதிகார மகாராஜ பானுதத்தா(Maha-prathihara-maharaja Bhanudatta)விஞல் பிரிய மித்ர ஸ்வா மின், வாத மித்ர ஸ்வாமின் (Vata-mitra-Svamin), துருவ மித்ர ஸ்வாமின், ஆருங்க மித்ர ஸ்வாமின் (Arunga-mitra-Svamin) ஆகியோருக்குக் கொடுக்கப்பட்டதாகும்.

ஆண்டு 15 வைசாக (Vaisakha) 13ஆம் நாள் குறிக்கப்பட்ட சோரோ B செப்பேடு, மகாபால் அதிகிரிதா(Maha-baladhikrita), அன்டரங்கா(Antaranga), மகாசாந்தி விக்ரஹிகா(Maha-santhi Vigrahira), சோமதத்தா(Somadatta)விஞல் துருவ மித்ர ஸ்வாமின், ஆருங்க மித்ர ஸ்வாமின் ஆகியோருக்குக் கொடுக்கப்பட்டதாகும்.

ஆண்டு 15 மகா (Magha) 24ஆம் நாள் குறிக்கப்பட்டுள்ள சோரோ C செப்பேடு, சோமதத்தாவிஞல் துருவ மித்ர ஸ்வாமின், ஆருங்க மித்ர ஸ்வாமின் ஆகியோருக்குக் கொடுக்கப் பட்டதாகும்.

சோரோ செப்பேடுகள் B, Cயில் குறிக்கப்பட்டுள்ள சோம தத்தாவே, மிட்னுபூர் எண் 1 செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள சோமதத்தா என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆகவே, சோரோ செப்பேடுகளில் பெயர் குறிக்கப்படாதிருக்கும் மேலரசர், கி.பி. 608ஆம் ஆண்டில் உத்தரா தொசாலியில் ஆதிக்கத்தை ஏற்படுத்திய சசாங்கனே என முடிவு செய்யலாம்.

பாலாசோர் செப்பேட்டில் பானு எனக் குறிக்கப்பட்டவரே, சோரோ செப்பேடு Dயில் பானுதத்தா எனக் குறிக்கப்பட்டவர் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை. பரமபத்தாரகவிற்கு உயர்ந்த மத அந்தஸ்தை அளிக்க மகாராஜா சாமந்தா பானு

[1] I.H.Q-XI-611 ff

5ஆம் ஆண்டு நிலக்கொடை அளித்தார் என்பது கி.பி. 608ஆம் ஆண்டு வடக்கு ஒரிஸாவைக் கைப்பற்றிய சசாங்கனுக்காகவே இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை,

உத்கலாவின் ஆளுநராகச் சோமதத்தாவிற்குப் பின் பானு தத்தா பொறுப்பேற்ருர் என R.C. மஜூம்தார்[1] கருதுகிருர். ஆனல் சோமதத்தாவின் செப்பேடுகளில் ஆண்டு 15 எனக் குறிக்கப்பட்டிருப்பதாலும், பானுதத்தாவின் செப்பேடுகளில் ஆண்டு 5 எனக் குறிக்கப்பட்டிருப்பதாலும், பானுதத்தாவிற்குப் பிறகு சோமதத்தா ஆளுநர் பொறுப்பேற்றிருக்க வேண்டும். பானுதத்தாவின் செப்பேடுகளில் நிலத்தைப் பெற்றதாகக் குறிக்கப்பட்டிருப்பவர்களின் முதல் இரண்டு பெயர்கள், சோம தத்தாவின் செப்பேடுகளில் காணப்படாததும் அதற்கு மேலும் ஒரு சான்ருகும்.

செயில் ஒத்பவா வமிசத்தைச் சேர்ந்த இரண்டாவது மாதவ ராஜாவின் கஞ்சம் செப்பேட்டில், மகா ராஜாதிராஜ சாரங்க ராஜா கொங்கோடாவை[2] வென்று, தம் அதிகாரத்தை நிலை நாட்டினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குப்த சகாப் தத்தைப் பின்பற்றிக் குறிக்கப்பட்டுள்ள ஆண்டு 300 என்பது கி.பி. 619-20ஆம் ஆண்டு ஆகும்.

சசாங்கனின் ஆட்சி பதினேழு ஆண்டுகளும், சில வாரங்களும் நீடித்தது என மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் குறிப்பிடப்பட்டி ருக்கிறது. பல்வேறு வமிச ஆட்சிக் காலத்தின் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு, சசாங்கனின் உரிமையுள்ள ஆட்சி கி.பி. 603ஆம் ஆண்டு தொடங்கியது என்ற முடிவிற்கு வரலாம். மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு செப்பேட்டுக் குறிப்பு ஆதாரங் களும் இம்முடிவை நிலைநிறுத்தப் பயனுள்ளவையாக இருக்கின்றன. கி.பி. 619-20ஆம் ஆண்டு கஞ்சம் செப்பேட்டுக் காலத்திற்குச் சற்றுப் பின் இரண்டாவது மாதவ ராஜா உரிமை மிக்க அரசராகி இருக்க வேண்டும். ஏனெனில், ஆண்டு 13 (கி.பி. 623) குறிக்கப் பட்ட பூரி செப்பேட்டில்,[3] அவர் தம் ஆட்சியின் பதின்மூன்ருவது ஆண்டிற்குள்ளாகவே, அஸ்வமேத யாக விழா நடத்தியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முன் வெளியிட்ட செப்பேடுகளில் குறிப்பிட்டது போல இதில் எந்த மேலரசரும் குறிப்பிடப்பட

[1] H.C.I.P-iii-பக்கம் 94

[2] E.I-VI-143 ff

[3] E.I-XXIV-*151-3*. அதில் குறிக்கப்பட்டுள்ள ஆண்டு 23 என்ற ஐயப் பாடு உள்ளது. D. C. சர்கார் அதில் குறிப்பிட்டுள்ள ஆண்டு 13 என இறுதி முடிவு செய்துள்ளார். I.H.Q-XXVII-*166-67*.

வில்லை. ஆகவே, சசாங்கனின் உரிமையுள்ள ஆட்சி கி.பி. 603 முதல் 620 வரை நீடித்திருக்க வேண்டும் என முடிவு செய்யலாம்.

'சசாங்கனின் இறப்பிற்குப் பின் கௌடாவின் அரசியல் நிலை ......ஒருவருக்கொருவர் பொறாமையும், நம்பிக்கையின்றிப் போர் முயற்சி செய்வதும் காணப்பட்டது....... ஒரு வாரத்திற்கு ஓர் (அரசர்); அடுத்த மாதத்திற்கு வேறு ஒருவர்; பின் ஒரு குடியரசு அரசியல் நிலை, இவை கங்கைக் கரையில் அமைந்திருந்த நாட்டின் அன்றுடச் சூழ்நிலையாக இருந்தது......அதன் பின் சோமாவின் மகன் மாணவா(Manava)வின் ஆட்சி எட்டு மாதங்களுக்கு நீடித்தது[1] ....' என மஞ்சு ஸ்ரீ மூல கல்பா குறிப்பிடுகிறது.

இதிலிருந்து சசாங்கன் இறந்தவுடன், கௌடாவைக் கைப் பற்ற ஹர்ஷர் அங்கு விரைந்து செல்லவில்லை என்பதை அறி கிறோம். ஹர்ஷர் தம் பேரரசின் மற்றொரு பகுதியில் வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தது அதற்குக் காரணமாக இருக்கலாம். மேலும், சசாங்கனின் இறப்பிற்குப் பின் இது போன்ற குழப்பநிலை அங்கு நிலவும் என்று ஹர்ஷர் எதிர்பார்த்திருந்ததைப் போன்றும் காணப்படுகிறது. தன்னுடைய துணைநாடான காமரூபத்தின் அரசன் பாஸ்கர வர்மன், அல்லது ஒரிசாவின் பகுதிகளை ஆண்ட சிற்றரசர்களில் எவரும் கௌடாவைத் தாக்கிக் கைப்பற்றிக் கொள்ள மாட்டார்கள் என்று ஹர்ஷர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததைப் போன்றும் காணப்படுகிறது. ஹர்ஷர் எப்பொழுது வங்காளத்தை வென்று தமது ஆட்சிக்கு உட்படுத் தினர் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாவிட்டாலும், நிச்சயமாகக் கி.பி. 643ஆம் ஆண்டு ஒரிசாவிலுள்ள கொங்கோடா வைத் தாக்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே அதை வென்று கட்டுப்படுத்தினர் என்பதில் ஐயமில்லை. சசாங்கன் இறந்த பின் மாணவாவைக் கௌடாவின் அரசராக ஹர்ஷர் நியமித்திருக்கக் கூடும். ஏனெனில், அது போன்ற நியமனம், அக்கால வழக்கத் திற்கு முரண்பட்டதல்ல. மாணவா இறந்த பின், அல்லது அவரை ஆட்சியிலிருந்து இறக்கிவிட்டு, ஹர்ஷர் கௌடா மா நிலத்தை மத்திய அரசின் நேரடியான பிரிதிநிதிகளால் ஆண்டார். கர்ன சுவர்ணவிலிருந்து பாஸ்கர வர்மன், கர்ன சுவர்ண வெற்றிக் கூடாரத்திலிருந்து அளித்த நிலக்கொடைக் கட்டளைகளை ஆதார மாகக்கொண்டு பாகீரதி(Bhagirathi)யின் கிழக்கில் அல்லது பத்மா ஆற்றின் வடக்கில் உள்ள வங்காளப் பகுதிகளைப் பாஸ்கர வர்மன் தன் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தான் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்துக் கொண்டிருக்கின்றனர். சசாங்கன் இறந்த

1 மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-மொழிபெயர்ப்பு-விளக்கவுரை-பக்கம் 51

பின், பத்மா நதியின் தெற்குப் பகுதியையே ஹர்ஷர் கைப்பற்ற முடிந்தது எனவும் அவர்கள் கருதுகின்றனர்.[1] இவ்வாறு முடிவு செய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. ஹர்ஷரின் படையெடுப்புகளைப் பற்றிய விளக்கத்தில் எவ்வாறு சசாங்கனின் இறப்பு, ஹர்ஷருக்குப் புதிய படையெடுப்புகளை மேற்கொள்ள வாய்ப்பாக விளங்கியது என்பதை விரிவாகக் காணலாம்.

வலபியின் மைத்ரேகர்கள்

ஸ்கந்த குப்தரின் காலத்தில் (கி.பி.457-67) மேற்குக் கரையையொட்டி அமைந்திருந்த பேரரசின் ஒரு முக்கியமான மா நிலமாக விளங்கிய சௌராஷ்டிரத்தின் நிருவாகம், குப்தப் பேரரசால் நியமிக்கப்பட்ட பாணதத்தர் என்ற காப்பாளரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. ஸ்கந்த குப்தரின் இறப்பிற்குப் பின் குப்தர்களின் குடும்பத்தில் விளைந்த சச்சரவுகளால் அரசர் அற்ற குழப்ப நிலை நிலவியது. அக்காலத்தில் சற்றுத் தூரத்தில் அமைந்திருந்த சௌராஷ்டிர மாநிலத்தின் நிருவாகம், பேரரசின் கட்டுப்பாட்டிலிருந்து தளர்ந்தது. புத்த குப்தரின் காலத்தில் (கி.பி. 477-500)[2] மைத்ரேகத் தலைவர் பட்டார்கா தம் வமிசத்தின் ஆட்சியை அப்பகுயில் ஏற்படுத்தினுர். இருப்பினும், பட்டார்காவும், அவருடைய மகன் முதலாவது தாரசேனுவும் சேனுபதி என்ற எளிய பட்டத்தையே கொண்டிருந்தனர்.

புத்த குப்தரின் இறப்பிற்குப் பின்னும், மறுபடியும் குடும்பச் சச்சரவுகள் தோன்றின. வாரிசுத் தகருறுகள் பேரரசின் பிரிவினைக்குக் காரணமாக அமைந்தன. மேலும், வட இந்தியாவின் பல பகுதிகளை ஹூணர்கள் தாக்கி வென்றனர். லதா, அவந்தி பகுதிகளை வக்காடகா அரசர் ஹரிசேனு (கி.பி. 475-500) வென்றுர். யசோதர்மர் மாளவத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றினுர். மண்ட்சார் குறிப்பு குப்தப்பேரரசின் பல பகுதிகளை யசோதர்மர் கைப்பற்றியதாகக் கூறுகிறது.[3] வட இந்தியாவின் பல பகுதிகளிலும் அதிகாரத்தைக் கைப்பற்றிப் பல அரசுகள் முயன்றது, அவர்களையே பலவீனப்படுத்தியது. வக்காடகா அரசர் ஹரிசேனுவே அவ்வமிசத்தின் கடைசி அரசராகவும் காணப்படுகிருர். அவருக்குப்பின் வாரிசுப் பொறுப்பு ஏற்றவரைப் பற்றி வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை. யசோதர்மரும் குப்தப் பேரரசர் நரசிம்ம குப்தரும் ஹூணப் படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்தினர்.

1 R. C. மஜும்தார்-H.C.I.P-iii-பக்கம் 107
2 R. C-மஜும்தார்-H.C.I.P.iii-பக்கம் 61-அடிக்குறிப்பு-2
3 C.I.I-iii-பக்கம்142 ff

ஆனால், யசோதர்மரின் அரசியல் வாழ்வும் திடீரென முடிந்து விட்டதாகக் காணப்படுகிறது. புத்த குப்தரின் சகோதரர் நரசிம்ம குப்தர், குப்தர்களின் அதிகாரத்தை மறுபடியும் நிலை நிறுத்துவதில் ஓரளவு வெற்றி கொண்டார்.

வட இந்தியாவில் நிலவிய குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, முதலாவது தாரசேனாவின் சகோதரரும், மைத்ரேக வமிசத்தின் மூன்றாவது அரசருமான துரோண சிம்மா, மகாராஜா என்ற அந்தஸ்துடன் நாட்டை ஆண்டார். பானு குப்தர் அநேகமாக இரேன் (Erane) போர்க்களத்தில் இறந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. பானு குப்தரின் இறப்பு, துரோண சிம்மாவின் ஆற்றல் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். தமக்குட்பட்டிருந்த பகுதியை முற்றிலும் தம்முரிமை பெற்றதாக அறிவித்து, மைத்ரேக வமிசத்தைச் சிறப்பு மிக்கதாக்கினார். குப்தப் பேரரசரான நரசிம்ம குப்தர், வளர்ந்து வரும் துரோண சிம்மாவின் ஆற்றல் வளர்ச்சியை முன் யோசனையுடன் ஒப்புக் கொண்டு, அவருக்குப் புதிய அந்தஸ்தைக் கொடுத்தார். 'பரந்து விரிந்த மொத்த உலகத்திற்கும் ஒரே அதிபதி, நேரில் துரோண சிம்மாவிற்கு அரசர் அந்தஸ்தை அளித்து அபிஷேக விழாவை நடத்தி வைத்தார்' என மகாராஜா இரண்டாவது தாரசேனாவின் மலியா செப்பேடுகள் குறிப்பிட்டுள்ளன.[1] இச் செப்பேட்டில் 'ஒரே அதிபதி' என யசோதர்மரே குறிக்கப்பட்டுள்ளார் என பிளீட் கருதுகிறார்.[2] ஆனால் கி.பி. 502ஆம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ள துரோண சிம்மாவின் கட்டளை ஒன்றில் அபிஷேக விழா, அந்த ஆண்டு அல்லது அதற்குச் சற்றுமுன் நடைபெற்றது எனக் குறிக்கப் பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பின்தான் யசோதர்மரின் ஆற்றல் வளர்ந்தது என்பதால், அதில் குறிப்பிடப்பட்டவர் யசோதர்ம ராக இருக்க முடியாது. வலபிக் கட்டளையில் ஒரே அதிபதி எனக் குறிப்பிடப்பட்டிருப்பவரும், துரோண சிம்மாவிற்கு மகாராஜா என்ற பட்டத்தைத் தந்தவரும் குப்தப் பேரரசராக இருக்க முடியாது. அவர் வாகாடகா அரசர் ஹரிசேனாவே என K. J. விர்ஜி[3] கருதுகிறார். ஏனெனில் ஹரிசேனா லதா, அவந்திப் பகுதிகளை வென்றார் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாலும், உஜ்ஜயினியின் ஓர் அரசர் தம் மகளை வலபி புரதத்தின் முதலாவது துருவசேனா விற்கு மணம் முடித்துக் கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டதில் உள்ள உஜ்ஜயினி அரசர், வக்காடகா அரசர் என முடிவு செய்யப் படுவதாலும், வலபிக் குறிப்பில் உள்ள மேலரசர் ஹரிசேனாவே

[1] C.I.I-iii-எண் 38

[2] I.A-XV-187

[3] Ancient History of Saurashtra-பக்கம் 29

என அவர் கருதுகிருர். இம் முடிவிற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. வலபிக் குறிப்பின்படி, துரோண சிம்மாவின் ஆட்சிக் காலம் கி.பி. 500-520 எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனுல், கி.பி. 500ஆம் ஆண்டே ஹரிசேனுவின் ஆட்சிக்காலம் முடிந்து விடுகிறது. ஆனுல் விர்ஜி, ஜெயசுவால் கணித்துள்ள ஹரிசேனுவின் ஆட்சிக்காலத்தைப் (கி. பி. 490-520)[1] பின்பற்றியுள்ளார். ஜுவோ டுப்ரேல்[2] (Jouveau Dubreuil) ஹரிசேனுவின் ஆட்சிக் காலத்தைக் (கி.பி. 500-530) குறித்துள்ளதை விர்ஜி மேற்கோள் காட்டித் தாமும் அவ்வாறே அவருடைய ஆட்சிக் கால முடிவு ஆண்டைச் சற்றுத் தள்ளிக் குறித்துக்கொண்டு ஊகித்த முடிவாகவே இருக்க வேண்டும். மிக அண்மையில் வக்காடாக்களின் அஜந்தாக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு ஹரிசேனு கி.பி. 475ஆம் ஆண்டிலிருந்து 500 வரையே ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என V. V. மிராஷி குறிப்பிட்டுள்ளார். ஆகவே, ஹரிசேனு, துரோண சிம்மாவின் மேலரசராக இருந்தார் என எண்ணுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

மைத்ரேகக் குறிப்பில் குப்தப் பேரரசரே மேலரசராகக் குறிக்கப்பட்டிருக்கிருர் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், துரோண சிம்மாவின் சந்ததிகள் சுமார் 90 ஆண்டுகளுக்குப்பின் வேறு எந்த ஒரு வமிசத்தின் அரசருடன் கொண்டிருந்த தொடர்பையும் மிகப் பெருமையாகக் கருதிக் குறித்திருக்க முடியாது. மேலும், எல்லா வலபிக் குறிப்புகளும் குப்தப் பேரரசின் சகாப்தத்தைக் கொண்டே குறிக்கப்பட்டுள்ளன. குப்தர் காலக் குறிப்புகளுக்கும், துரோண சிம்மாவின் கட்டளைகளுக்கும் குறிப்பிடத் தகுந்த ஒற்றுமைகள் காணப்படுகின்றன. புத்த குப்தரே இரண்டாவது தாரசேனுவின் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள மேலரசர் எனக் கன்னிங்ஹாம் கருதுகிருர். ஆனுல், புத்த குப்தரின் ஆட்சியின் கடைசிக் காலம் கி.பி. 494-5[3] ஆதலால், நரசிம்ம குப்தப் பேரரசரே அதில் குறிப்பிடப்பட்ட மேலரசராக இருத்தல் வேண்டும். அவருடைய ஆட்சி ஆரம்பமாகியதிலிருந்து நடுக் காலம் வரை பல தொல்லைகள் ஏற்பட்டன. ஆகவே, இதுவரை சிற்றரசராக நீடித்து வந்த ஓர் அரசிற்குத் தாமே உரிமையளிக்க முன்வந்து, அவ்வமிசத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்பி இருக்க வேண்டும்.

[1] K. P. ஜெயசுவால்-History of India-(நாக-வக்காடகா ஆதிக்க காலம்) பக்கங்கள் 79, 103

[2] ஜுவோ டுப்ரேல்-Ancient History of Deccan-பக்கம் 76

[3] D. தேவ ஹுட்டி-ஹர்ஷா-பக்கம் 48

மகாராஜா துரோண சிம்மாவிற்குப் பின், அவருடைய சகோதரர், மகாசாமந்தா மகாராஜ முதலாவது துருவ சேனு ஆட்சிப் பொறுப்பேற்றூர். கி.பி. 525[1] ஆம் ஆண்டு குறிப்பிடப் பட்ட அவருடைய கட்டளை ஒன்றில், 'அரியணையைப் போர் ஆற்றலால்' கைப்பற்றியதாகக் காணப்படுகிறது. ஆனுல், அரசு பொறுப்பு ஏற்பதில் குடும்பச் சச்சரவு ஏற்பட்டதாக அக்குறிப்பு உணர்த்தவில்லை. கி.பி. 533ஆம் ஆண்டு[2] மண்ட்சார் கட்டளையில் குறிக்கப்பட்ட யசோதர்மரின் வீழ்ச்சிக்குப்பின், மைத்ரேகர்களின் அதிகாரத்தை நிலை நாட்டுவதில் வெற்றி பெற்றூர் என்பதே அதன் பொருளாகக் காணப்படுகிறது. மிகச் சிறந்த பேரரசரின் தாள் பணிந்து தியானிக்கும் துருவசேனு, மகா பிரதிகாரா, மகா தண்ட்நாயகா, மகா கார்த்திகா[3] என்ற பட்டங்களைப் பெற்றிருந் தார். இங்கும் மிகச் சிறந்த பேரரசர் எனக் குறிப்பிடப் பட்டிருப்பது குப்தப் பேரரசரையே ஆகும். துருவ சேனுவின் ஆட்சிக் காலத்தில் மைத்ரேகர்களின் ஆற்றல் மேலும் வளர்ந்தது. ஏனெனில், கி.பி. 549ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஒரு செப் பேடு, காருலகா (Garulaka) அரசரும், கிர்னுரின்(Girnar) இரண்டாவது வராஹதாச(Varaha-dasa II)ரும் துருவசேனுவின் மேலதிகாரத்தை ஏற்றுக்கொண்டிருந்ததைக் குறிப்பிட்டுள்ளது என R. C. மஜூம்தார்[4] குறிப்பிடுகிறூர். துருவசேனுவைப் பற்றிக் கிடைத்துள்ள மிகப் பழைய கட்டளையில் கி.பி. 525[5] ஆம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டிருப்பதால், அவரது ஆட்சி குறைந்தது 25 ஆண்டுகளாவது நீடித்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

முதலாவது துருவ சேனுவிற்குப் பின் அவருடைய வயது முதிர்ந்த இளைய சகோதரர் தாரபட்டா (Dharapatta) ஆட்சிப் பொறுப்பேற்றூர். ஆனுல், அவருடைய ஆட்சிக்காலம் சிறிது காலமே நீடித்திருக்க வேண்டும். ஏனெனில், தாரபட்டாவின் மகன் குகசேனு(Guhasena)வின் கி.பி. 559[6]ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட கட்டளை ஒன்று அவருடைய பெரியப்பா முதலாவது துருவசேனுவின் கடைசிக் கட்டளையின் காலத்திற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின் காணப்படுகிறது. இருப்பினும், தாரபட்டா வலபி அரியணை ஏறியதாகக் கூறப்படுவதை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில், அவரது பேரர் இரண்டாவது தார

[1] E.I-XI-106 ff
[2] C.I.I-iii-எண் 35
[3] E.I-XI-106 ff
[4] H.C.I.P-iii-பக்கம் 63; I.H.Q-IV-463
[5] E.I-XI-106 ff; I.A-XXXIX-129 ff
[6] I.A-vii-67 ff

சேஞவின் குறிப்புகளில்,[1] தாரபட்டா மகாராஜா எனக் குறிக்கப் பட்டிருப்பினும், அவரது மகன் குகசேஞவின் கட்டளைகளில்[2] அவருடைய பெயரே குறிப்பிடப்படவில்லை.

குகசேஞவின் முதல் கட்டளையில் கி.பி. 559[3] என ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற வரின் கட்டளையில் கி.பி. 571[4] என ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. எனவே, குகசேஞ பத்து ஆண்டு காலமே ஆட்சி புரிந்திருக்க வேண்டும். குகசேஞ மகாசாமந்தா என்பதை நீக்கிவிட்டு, மகா ராஜா என்ற பட்டத்தை மட்டும் கொண்டிருந்தது, அக்காலத்தில் மைத்ரேகர்களின் ஆற்றல் மேலும் வளர்ந்ததைக் குறிப்பிடுகிறது. அவருடைய குறிப்புகளில் குகசேஞவின் செல்வம், பராக்கிரமம், நல்லரசு ஆகியவற்றைப் பற்றிப் பல இடங்களில் விளக்கங்கள் காணப்படுகின்றன. குகசேஞ அளித்த கொடை பற்றிய கட்டளைகள், சிவன், புத்தர் ஆகிய இருவரிடத்தும் அவர் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்ததை விளக்குகின்றன.

குகசேஞவிற்குப் பின் அவருடைய மகன் இரண்டாவது தார சேஞ ஆட்சிப் பொறுப்பேற்ருர் என்பதை அவர் கி.பி. 571லிருந்து 589ஆம் ஆண்டுவரை அளித்துள்ள பல கட்டளைகளிலிருந்து அறிந்துகொள்கிருேம். அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற வரின் கட்டளையில் கி.பி. 605[5] என ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இரண்டாவது தாரசேஞ சற்று நீண்ட காலம் சுமார் 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அவருடைய ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவையும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. கி.பி. 571[6] என ஆண்டு குறிக்கப்பட்டுள்ள அவருடைய கட்டளைகளில் சாமந்தா என்ற எளிய பட்டம் குறிப் பிடப்பட்டுள்ளது. கி.பி. 573[7] என ஆண்டு குறிக்கப்பட்டுள்ள கட்டளை அவரை மகாராஜா எனக் குறிப்பிடுகின்றது. கி.பி. 588, 589[8]ஆம் ஆண்டுகளில் குறிக்கப்பட்டுள்ள கட்டளைகளில் சாதாரண பட்டங்களான மகாசாமந்தா, மகாராஜா என்பவற் றைக் கொண்டிருக்கிருர். அரசரது கையெழுத்து உள்ள இடத்தில் மகாதிராஜா (Maha-adhiraja) எனக் காணப்படுகிறது.

1 I.A-XV-187 ff
2 I.A-IV-174; K. J. விர்ஜி (Ancient History of Sauraashtra) பக்கம் 36
3 I.A-VII-67 ff
4 I.A-XV-187 ff
5 E.I-XI-115; I.A-I-45
6 I.A-XV-187
7 E.I-XXI-179
8 I.A-VI-11

காருலகா வமிசத்தைத் தோற்றுவித்த மகாராஜா சூரா[1] (Sura)வின் கொள்ளுப் பேரனும், இரண்டாவது வராகதாசரின் மகனுமான சிம்மாதித்யா இரண்டாவது தாரசேனுவின் காலத்தில் ஆட்சி புரிந்தவராவார். அவருடைய கி.பி. 574ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட செப்பேடு, மைத்ரேகர்களின் செப்பேடுகளுடன் பாலிடானு(Palitana) என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சிம்மாதித்யாவின் கட்டளைகளில் மைத்ரேக மகாராஜா எவரும் குறிக்கப்படவில்லை. அவருக்கு முன் ஆட்சி புரிந்த வராகதாசரின் கட்டளைகளில் மைத்ரேகர் மேலரசராகக் குறிப்பிடப்பட்டிருக் கிறார். சிம்மாதித்யா, இரண்டாவது தாரசேனு ஆகிய இரண்டு வமிச அரசர்களின் கட்டளைகள் ஒரே இடத்தில் கண்டெடுக்கப் பட்டிருப்பதாலும், பின்னால் குறிப்பிடப்பட்டிருப்பவர் மகாதிராஜ என்ற பட்டத்தைக் கொண்டிருந்ததாலும் காருலகா அரசர்கள் மைத்ரேகர்களிடம் விசுவாசத்துடன் நடந்துகொண்டனர் என்று அறியலாம்.

இரண்டாவது தாரசேனு கி.பி. 590ஆம் ஆண்டு இறந்த தற்குப் பின் அவருடைய மகன் முதலாவது சீலாதித்ய தர்மாதித்யா (Siladitya Dharmaditya) ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவரையே யுவான் சுவாங் தம் குறிப்புகளில் பௌத்த மதத்தின்மீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட, மோ-லா-போ(Mo-la-po)வின் அரசர் சீலாதித்யர் என விளக்கியுள்ளார். சீலாதித்யரின் ஆட்சி ஏறக் குறைய 25 ஆண்டுகள் நீடித்தது. ஏனெனில், அவருக்கு முன் ஆட்சி புரிந்தவரின் கடைசிக் கட்டளையில் கி.பி. 589[2]ஆம் ஆண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது. சீலாதித்யருக்குப் பின் ஆட்சி புரிந்த அவருடைய சகோதரர் முதலாவது காரகிரகரின் முதலாவது கட்டளையில் கி.பி. 616 என ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. சீலாதித்யரின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஆட்சிப் பொறுப்பைத் தம் சகோதரர் முதலாவது காரகிரகருடன் இணைந்து மேற்கொண்டார். அவர்கள் இணைந்து ஆட்சி புரிந்தனர் என்பதற்கு அக்காலக் குறிப்புகளிலும், யுவான் சுவாங் கின் பயணக் குறிப்புகளிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஐந்தாவது சீலாதித்யரின் அலினு செப்பேடுகள் (Alina Copper Plates), முதலாவது சீலாதித்ய தர்மாதித்யா காரகிரகரிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார் எனவும், அவர் இந்திரனைப் போலவும், சகோதரன் உபேந்திரனைப் போலவும்[3] நடந்து

[1] E.I-XI-17
[2] I. A-VI-11
[3] C. I.I-iii- எண் 39-பக்கங்கள் 181-82

கொண்டனர் எனவும் குறிப்பிடப்படுகின்றன. இப்புராணக்[1] கதைப்படி, இந்திரனுக்கும், அவர் தம்பி உபேந்திரனுக்கும் நடைபெற்ற பந்தயத்தில் உபேந்திரன் வென்று அண்ணனிடமிருந்து உரிய ஒப்புதலைப் பெற்றுர் என்பதால், இந்த உவமை சிறப்பாகக் காணப்படுகிறது. காரகிரகரின் முக்கியத்துவம் மிக உயர்ந்து காணப்பட்டது. கி.பி. 609ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள சீலாதித்யரின் ஏழாவது குறிப்பில், காரகிரகர் அரச வமிச வழித் தொடர்புடன் குறிக்கப்பட்டிருக்கிறுர்.[2] மூன்றுவது துருவசேனுவின் காலத்திற்குப் பின் வெளியிடப்பட்ட செப்பேட்டுக் குறிப்புகளில் அனைத்தும் முதலாவது சீலாதித்யருக்கு, 'சாயாவிற்கும் விந்திய மலைக்கும் இடையே உள்ள பகுதிகளின் தலைவன்' என அழைக்கப் பட்ட தேரபட்டா என்ற ஒரு மகன் இருந்தார் எனவும், அவர் தம் தந்தையின் காலத்திலேயே அப்பகுதிகளை வென்றுர் எனவும் குறிக்கின்றன. தம் தாத்தாவின் பெயராகிய சீலாதித்யர் என்ற பெயரைக்கொண்ட தேரபட்டாவின் மகனைப் பற்றியும், 'பூமியின் அதிபதி' எனவும், 'விந்தியமலைகள் அதன் அங்கங்கள்' எனவும் அக்குறிப்புகளில் காணப்படுகின்றன. ஏனெனில், இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் (Aihole) குறிப்பில் ஆரம்பத்தில் நிலவிய இருண்ட காலத்தைப் பற்றி, 'உலகம் முழுவதுமே பகைவர்கள் என்ற இருளால் சூழப்பட்டுள்ளது'[3] என்று காணப்படுவதால், புலிகேசிக்கும், மங்கலீசாவிற்கும் உள்நாட்டுப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த ஆற்றல் குறைந்த வேளையில், வலபியின் அரசர் இதனை வென்றிருக்க வேண்டும் என அறியலாம்.

யுவான் சுவாங்கின் பயணக் குறிப்பு மூலநூலில் மோ-லோ-போ (Mo-lo-po) என்பது, தெற்கு லோ (South-lo) எனவும், ஃபா-லா-பி (Fa-la-pi) என்பது வடக்கு லோ (North-lo) எனவும் இரண்டு குறிப்புகள் காணப்படுகின்றன. பயணக் குறிப்புகளின் விளக்கவுரை ஆசிரியர்கள்கூட இதைக் குறித்து எழுதியிருக்கக் கூடும்.[4] இவ்வாறு நாட்டை இரு பிரிவுகளாகப் பிரித்துக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து அரசு புரிந்த குடும்பப் பிரிவினர்கள் நாட்டைப் பிரித்து ஆண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது எனலாம். சீலாதித்யரின் சகோதரர் காரகிரகர் தனி உரிமை பெற வேண்டி, நாட்டின் சில பகுதிகளுக்குத் தம்மை அரசராக அறிவித்து, கி.பி. 610ஆம் ஆண்டு வரைத் தமது முழுக்கட்டுப்பாட்டுடன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். இதுவே

1 விஷ்ணு புராணம்
2 G. V. ஆச்சார்யா-The Historical Inscriptions from Gujarat-எண் 51
3 I. A-viii-237; E. I-VI-Iff
4 வாட்டர்ஸ்-ii-பக்கங்கள் 243, 246

முதலாவது சீலாதித்யரின் வழி அரசர்கள், அவருடைய இறப் பிற்குப் பின் 35 ஆண்டுகள் வரை வலபியில் அரசு புரியவில்லை என்பதற்குக் காரணமாக இருக்க வேண்டும். முதலாவது சீலாதித்யர் ஹர்ஷர் அரசு புரிந்த முதல் ஏழு ஆண்டுகள் வரை வாழ்ந்தார்.

மாளவத்தின் அரசுரிமையைக் கைப்பற்ற வர்த்தனர்களும், மைத்ரேகர்களும் முயன்றனர். பிரபாகர வர்த்தனர் லதாவை ஆண்ட காலச்சூரிகளுக்கும், மாளவத்தை ஆண்ட தேவகுப்தருக்கும் எதிராகப் போர் முயற்சிகள் மேற்கொண்ட நினைவு, ஹர்ஷரும் மாளவத்தை இணைக்கப் போர் முயற்சி மேற்கொள்ளக் காரண மாகும். தேவகுப்தர் மௌகாரிகளுக்கு எதிராகப் படையெடுத்து, ஹர்ஷரின் தங்கை கணவரான கிரகவர்மரைக் கொன்றதால், மாளவப் படையெடுப்பு, அரசியல் நிமித்தம் என்பதிலிருந்து குடும்பத்தின் சிறப்பைக் காப்பாற்றிப் பழிவாங்கும் படையெடுப் பாக மாறிற்று. ஆனால், தேவ குப்தரின் கனோஜ் நகரப் படை யெடுப்பினால் விளைந்த அரசியல் குழப்பத்தையும், சாளுக்கியர்களுக் கிடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரையும் மைத்ரேகர்கள் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, கி.பி. 610ஆம் ஆண்டில் தற்காலிகமாக உஜ்ஜயினியைக் கைப்பற்றினர். முதலாவது காரகிரகரின் விர்தி கட்டளை (Virdi Grant) கி.பி. 616 ஆம் ஆண்டு உஜ்ஜயினியிலிருந்து அறிவிக்கப்பட்டதாகும். உஜ்ஜயினியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த காலச்சூரி வமிசத்தின் ஆட்சி கி.பி. 610ஆம் ஆண்டு வீழ்ந்தது. காலச்சூரி வமிச அரசரான புத்த ராஜாவின் சரஸ்ஸவானி (Sarasavani) செப்பேடு களே[1] அவ்வமிசத்தைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள கடைசிச் சான்றுகள் ஆகும்.

முன்னாள் அரசர்கள் பெரிதும் விரும்பிய உஜ்ஜயினி நகரம் மைத்ரேகர்களின் கட்டுப்பாட்டில் சாளுக்கியர்கள் ஆதிக்க வளர்ச்சி காலம் வரை நீடித்தது. இரண்டாம் புலிகேசி லதா, மாளவம், கூர்ஜரம் ஆகிய அரசுகளை வென்று கைப்பற்றிய சமயம், உஜ்ஜயினியையும் தமது ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தார். சாளுக் கியர்கள் இப் பகுதியின்மீது படையெடுப்பைக் கி.பி. 623ஆம் ஆண்டு மேற்கொண்டார். ஏனெனில், மூன்றாவது தாரசேனாவின் கெடாகாக் (Khetaka) குறிப்பில், மைத்ரேக அரசருக்குப் பரம மகேசுவரா என்ற மத அடைமொழி மட்டுமே குறிக்கப்பட்டிருக் கிறது.[2] ஹர்ஷப் பேரரசின் எல்லையை ஒட்டி அமைந்திருந்த இவ்

[1] E.I-VI-297
[2] E.I-XXI-181 ff

வரசின் காரணமாகவே வர்த்தன சாளுக்கியப் பேரரசர்களுக் கிடையே போர் உண்டாயிற்று. இது பற்றிய முழு விவரத்தை ஹர்ஷரின் படையெடுப்புகள் என்ற பகுதியில் காணலாம்.

கி.பி. 615ஆம் ஆண்டு வலபியை ஆண்ட சீலாதித்யருக்குப் பின் முதலாவது காரகிரகர் ஆட்சிப் பொறுப்பேற்ருர். சகோதரரின் ஆட்சிக் காலத்திலேயே அவர் உயர்ந்த அந்தஸ்தை வகித்தார். காரகிரகரின் ஆட்சிக் காலத்தில் மைத்ரேகர்களின் ஆட்சிச் சிறப்போ, ஆற்றலோ குன்றவில்லை. நமக்குக் கிடைத் துள்ள காரகிரகரின் இரண்டு கட்டளைகளில் ஒன்று சிறப்பு மிக்க உஜ்ஜயினிக் கூடாரத்திலிருந்தும், மற்ருென்று வலபியிலிருந்தும் அளிக்கப்பட்டவையாம். ஹர்ஷரின் மைத்ரேகர்களைப் பற்றிய சிந்தனை, காரகிரகரின் காலத்திலேயே தொடங்கியிருக்க வேண்டும். ஆனுல், அதை அவர் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. காரகிரகரின் ஆட்சியும் குறுகிய காலமே நீடித்தது. ஏனெனில், அவருக்கு அடுத்து ஆட்சி புரிந்த மூன்ருவது தாரசேனுவின் கி.பி. 623 என ஆண்டு குறிக்கப்பட்ட கட்டளை ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.[1]

மூன்ருவது தாரசேனு, முதலாவது காரகிரகரின் மகனுவார். தாரசேனுவின் ஆட்சியும் குறுகிய காலமே நீடித்தது. ஏனெனில், அடுத்து ஆட்சி புரிந்த மைத்ரேக அரசரான இரண்டாவது துருவ சேனு பாலாதித்யரின் கி.பி. 629 என ஆண்டு குறிக்கப்பட்ட ஒரு செப்பேட்டுக் கட்டளை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[2] இரண்டாம் புலிகேசி சாளுக்கியத்தை ஆண்ட காலத்தில் வலபியைப் பாலா தித்யர் ஆண்டார். அவர், புலிகேசியால் தாக்கப்பட்டு, நாட்டின் பெரும்பகுதியை இழந்தார். புலிகேசியின் ஐஹோல் குறிப்பில், 'அவருடைய (புலிகேசி) ஆற்றலால் லதா, மாளவம், கூர்ஜரம் ஆகிய அரசர்கள் வெல்லப்பட்டு' தோற்கடிக்கப்பட்ட அரசர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை மற்றவர்களுக்குக் கற்றுத்தரும் ஆசிரியர்கள் ஆனுர்கள்' எனக் கூறப்பட்டுள்ளது.[3] மூன்ருவது தாரசேனு ராஜ்யத்தின் தென்பகுதியிலுள்ள கிடாகா (இன்றைய கெய்ரா)விலிருந்து நடவடிக்கைகளை மேற்கொண் டார். ஏனெனில், அவரது ஆட்சி பற்றி நமக்குக் கிடைத்துள்ள ஒரே கட்டளை கிடாகாவிலிருந்துதான் வெளியிடப்பட்டிருக்கிறது.[4] கி.பி. 623ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட இச் செப்பேட்டில் தார

[1] E.I-i-86
[2] I.A-VI-12 ff
[3] E.I-VI-10
[4] E. I-XXI-181 ff

சேனுவிற்கு அரசு தொடர்புள்ள எந்தப் பட்டமும் காணப் படவில்லை. ஆகவே, புலிகேசி மைத்ரேகர்களின் வடமேற்குப் பகுதியை அந்த ஆண்டு தாக்கியிருக்க வேண்டும். மாளவப் பகுதிகள் அனைத்தையும் மைத்ரேகர்கள் இழந்தனர். அவர்களின் சிறப்பும் ஆற்றலும் அழிந்தது. தாரசேனுவும், அவருக்குப்பின் ஆட்சி புரிந்த துருவசேனுவும் சிறப்பான பட்டங்கள் எதுவும் கொண்டிருக்கவில்லை. தாரசேனு புலிகேசியால் தாக்கப்பட்டும், துருவசேனு ஹர்ஷரால் தாக்கப்பட்டும் தோல்வி கண்டு சிறப்பிழந்தனர்.

மூன்ருவது துருவசேனு கட்டளையளித்த அதே இடமான கிடாகாவில் கி.பி. 643ஆம் ஆண்டு சாளுக்கிய ராஜாவான விஜய ராஜா[1] விஜயபுரத்திலிருந்து அளித்த கட்டளை கண்டு எடுக்கப் பட்டுள்ளது. அக் கட்டளையின்படி, இன்றைய சூரத், பரோச் ஆகிய மாவட்டங்களில் உள்ள இரண்டு கிராமங்கள் கொடையளிக்கப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து புதிதாக வெல்லப்பட்டுச் சாளுக்கிய அரசின் வடமேற்கு மாநிலமாக விளங்கிய இப்பகுதிக்கு, புலிகேசி, விஜயராஜாவை அரசப் பிரதிநிதியாக நியமித்திருந்தார் என்பதை அறிகிறோம். விஜயராஜாவின் வமிசக் குறிப்பு அட்டவணையின்படி, முதலில் ஜெயசிம்மராஜாவும், அடுத்து அவருடைய மகன் வல்லப ராணவிக்ராந்த ராஜ புத்த வர்மனும் (Vallabha Ranavikranta Raja-buddha-varman), அவருடைய மகன் சாளுக்கிய ராஜா விஜயராஜா எனவும் குறிக்கப்பட்டிருக்கிறது. வல்லப ராண விக்ராந்த ராஜ புத்த வர்மனைச் சாளுக்கிய அரசர் புலிகேசி அப்பகுதிக்கு முதல் அரசப் பிரதிநிதியாக நியமித்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

மூன்ருவது தாரசேனுவிற்குப் பின் அவருடைய இளைய சகோதரர் இரண்டாவது துருவ சேனு பாலாதித்யர் வலபியின் அரசப் பொறுப்பை ஏற்ருர். நமக்குக் கிடைத்துள்ள பாலாதித்யாவின் முதல் குறிப்பில் கி.பி. 629[2] எனவும், கடைசிக் குறிப்பில் கி.பி. 640[3] எனவும் ஆண்டு காணப்படுகிறது. ஆகவே, ஹர்ஷரின் ஆட்சிக் காலத்திலேயே பாலாதித்யரின் ஆட்சிக் காலம் முழுவதும் அடங்குகிறது. யுவான் சுவாங்கின் வலபிப் பயணக்குறிப்புக்களில் துலு போ போ ட (T'u-lu-p'o-po-t'a) என இவரையே குறிப்பிட்டுள்ளார். மேலும் துருவபட்டா, சீலாதித்ய தர்மாதித்யாவின் சகோதரனின் மகன் எனவும், ஹர்ஷ சீலாதித்

[1] I. A-vii-241 ff
[2] I.A. VI-12 ff
[3] E.I-viii-196

யரின் மருமகன் எனவும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[1] இரண்டாவது துருவசேனு தம் ஆட்சிக் காலம் முழுவதும் ஹர்ஷருக்கு உட்பட்ட சிற்றரசராகவே விளங்கினர். வலபியின் அரசர் ஹர்ஷரால் கி.பி. 643ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பிரயாகை பேரவையில் பங்கு கொண்டார் என யுவான் சுவாங் மேலும் குறிப்பிட்டுள்ளார். அப் பேரவையின் மேற்கே அமைந்திருந்த 'கொடைப்பகுதி'யின் காப்பாளராகத் துருவசேனு விளங்கினர். துருவசேனுவின் குறிப்புகளிலிருந்து முன்னோர்களைப் போன்றே அவரும் இருபெரும் மதங்களாகிய இந்து மதம், பௌத்த மதம் ஆகிய இரண்டிற்கும் தாராளமாகக் கொடையளித்துச் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொண்டார் எனத் தெரிகிறது. குறிப்புகளில் தம்மைப் பரம மகேசுவரா அதாவது சிவ பக்தர் என்று மட்டுமே குறிப்பிட்டுக்கொண்டுள்ளார். கூர்ஜரக் குறிப்புகளிலிருந்தும் சிறப்பு மிக்க ஹர்ஷ தேவரால் வெல்லப்பட்ட வலபியின் அரசர் இரண்டாவது துருவசேனுவே என்பதை அறிகிறோம். அவர் தத்தா[2] அரசரிடம் தஞ்சம் புகுந்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது தத்தாவே கூர்ஜரக் குறிப்புகளில் தத்தா எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். இரண்டாவது தத்தாவின் ஆட்சிக்காலம் கி.பி 629ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 641ஆம் ஆண்டு வரை நீடித்திருக்கக் கூடும். ஏனெனில், 629ஆம் ஆண்டின் அவருடைய முதல் குறிப்பும், 641ஆம் ஆண்டின் கடைசிக் குறிப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[3]

இரண்டாம் புலிகேசியின் கி.பி. 630ஆம் ஆண்டு லோனர், கி.பி. 634ஆம் ஆண்டு ஐஹோல் குறிப்புகளிலிருந்து, ஹர்ஷர் அந்த ஆண்டுகளுக்குள் மேல்திசை படையெடுப்பை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதை அறியலாம்.[4] ஏனெனில், லோனர் குறிப்பில் ஹர்ஷருக்கும், புலிகேசிக்கும் மோதல்கள் நடைபெற்றதாகக் குறிக்கப்படவில்லை. ஆனல், ஐஹோல் குறிப்பில் சாளுக்கிய அரசரின் போர் ஆற்றலும், சாதனைகளும் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சாளுக்கிய அரசர் லதா, மாளவம், கூர்ஜரம் ஆகிய அரசுகளையும், ஹர்ஷரையும் போரில் வென்றதாகக் காணப்படுகிறது. புலிகேசிக்கும், ஹர்ஷருக்கும் போர் நடைபெறக் காரணமாயிருந்தவர் ஹர்ஷரே ஆவார்.

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 247

[2] I.A. xiii-77-79 கூர்ஜர அரசர் மூன்ருவது ஜெயபட்டாவின் கி.பி.736ஆம் ஆண்டுக் குறிப்பில் இந் நிகழ்ச்சி முதன்முறையாகக் குறிக்கப்பட்டுள்ளது.

[3] E. I-XXIV-179

[4] H.C.I.P. iii-பக்கம் 235; E. I-VI- ff; A. S. அல்டேகர் (A.B.O.R.I) XIII 300 ff

மைத்ரேகர்களுக்குப்பின், சாளுக்கியர்களையும் தாக்கிப் போரைத் தொடங்கியவரும் ஹர்ஷரே. ஹர்ஷர் வலபியைத் தாக்கியதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. தெற்குப் படையெடுப்பை மேற்கொள்ள வசதியாக உள்ள பகுதியைக் கைப்பற்றுவதும், கடற்கரையோரப் பகுதி வணிகத்தைப் பெருக்கிப் பொருளாதார ஆதிக்கம் பெறுவதுமே அவருடைய நோக்கங்கள் ஆகும்.

இரண்டாவது துருவசேனுவின் மூன்றுவது கட்டளை குறிக்கப் பட்ட கி.பி. 632ஆம் ஆண்டில் அவர் கூர்ஜரத்தில் தஞ்சம் புகுந்திருக்க வேண்டும். அதை அடுத்து நான்கு கட்டளைகள் காணப்பட்டாலும், அவை ஆறு ஆண்டுகால இடைவெளிக்குப் பின் அளித்தவை ஆம். ஆற்றல் மிக்க வலபி அரசரை, அவரை விட ஆற்றல் மிக்க எதிரியான ஹர்ஷரிடமிருந்து, ஒரு சிற்றரசர் எவ்வாறு பாதுகாக்க முடிந்தது என்ற பிரச்சினை இயல்பாக எவருக்கும் தோன்றக் கூடியதாகும். இதற்கான விடை காண்பதற்கு முன் மைத்ரேக அரசர்களின் அன்றைய நிலையைப் புரிந்து கொள்ளுதல் பயனளிக்கும். சாளுக்கியர்களின் தீவிரப் படையெடுப்பின் விளைவாக மைத்ரேக அரசர்களின் ஆற்றல் முற்றிலும் அழிந்திருந்தது. ஆனல், கூர்ஜரத்தின் நிலை அதற்கு மாறுனதாகும். சாளுக்கியர்களின் தாக்குதலால் உரிமையை இழந்திருப்பினும், சாளுக்கிய மேலதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, தன் படை வலிமையைப் பெருக்கிக்கொண்டிருந்தது. வலபியின் அரசர் சாளுக்கிய மேலதிகாரத்திற்குக் கூர்ஜரத்தின் சிற்றரசரான இரண்டாவது தத்தாவின் மூலமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார் என்பதே உண்மையான நிலையாகும். இந் நிலை ஹர்ஷருக்கும், சாளுக்கியருக்கும் இருந்த பகையுணர்வை மேலும் தூண்டக்கூடிய ஒன்றுகும். மைத்ரேக அரசர் கூர்ஜரத்தின் அரசில் குறுகிய காலமே தங்கி இருந்தார் என அறியப்படுகிறது. மேலும் அவர் எதிர்பார்த்தபடி, சாளுக்கியர்களின் உதவியும் கிடைப்பதாக இல்லை. அந் நிலையில் ஹர்ஷருக்கும் மைத்ரேக அரசருக்கும் ஆரம்பப் பேச்சு வார்த்தைகள் கூர்ஜர அரசு மூலமாகத் தொடங்கின. இரண்டாவது தத்தா தம்முடைய குறிப்புகளில் வலபியின் மைத்ரேக அரசருக்குத் தஞ்சம் அளித்ததைப் பெருமையாகக் கூறிக்கொள்ள இயலவில்லை. அவர் சாளுக்கிய அரசின் மேலதிகாரத்திற்கு உட்பட்டிருந்ததே அதற்குக் காரணமாகும். அதைப் பற்றிப் புலிகேசியின் ஐஹோல் குறிப்பிலும் எதுவும் கூறப்படவில்லை. ஏனெனில், அச்சமயத்தில் ஹர்ஷர் வலபியின் அரசரைத் தம் பக்கம் ஈர்த்துக்கொள்வதில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். இந் நிகழ்ச்சி பற்றிய செய்திகள் கி.பி. 736ஆம் ஆண்டில்தான் ஜெயப்பட்டாவின் குறிப்புகளில்

காணப்படுகின்றன. அந் நேரத்தில் கூர்ஜர அரசர்கள் தங்களைப் புகழ்ந்துகொள்வதை யாரும் தடுக்க முடியாத நிலையை அடைந் திருந்தனர்.

மைத்ரேக அரசக் குடும்பத்துடன் திருமணத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டது ஹர்ஷரின் சிறந்த அரசியல் அறிவைக் குறிக்கிறது எனலாம். இது போன்ற தொடர்பின் விளைவாகக் கிடைத்த பாதுகாப்பை முழுவதுமாக ஏற்றுக்கொண்டது புலிகேசியின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறத் துருவ சேனுவிற்குப் பெரிதும் துணை புரிந்தது. சாளுக்கியர்களிடமிருந்து எதிர்பார்ப்பதைவிட உறுதியாக அதிக அரசியல் உரிமையை ஹர்ஷரிடமிருந்து எதிர்பார்க்க முடியும் எனத் துருவசேனு எண்ணினுர். துருவசேனுவின் ஆட்சிக்காலம் முழுவதும் மைத்ரேக அரசரின் முழுமையான ஒத்துழைப்பும், விசுவாசமும் ஹர்ஷருக்குக் கிடைத்தன. ஹர்ஷப் பேரரசின் மேற்கு எல்லைப் பாதுகாப்புப் பிரச்சினை மிக எளிதாகத் தீர்க்கப்பட்டது. ஹர்ஷர் மேற்குப் படையெடுப்பை மேற்கொண்டு முன்னேறும் சமயம் மாளவத்தின் பகுதிகளைக் கைப்பற்றி இருக்க வேண்டும். அவ்வாறு கைப்பற்றிய பகுதிகளை ஹர்ஷர் இரண்டாவது துருவசேனுவிற்கு அளித்தார். துருவசேனுவின் கி.பி. 639, 640ஆம் ஆண்டுகள் குறிக்கப்பட்ட இரண்டு கட்டளைகள், ரத்லமி(Ratlam)ற்கு வடக்கே பத்து மைல் அப்பால் உள்ள நொகாவா(Nogava)வில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.[1] சாளுக்கியர் தாக்குதல்களின் சமயம் மைத்ரேகர்கள் இழக்க நேர்ந்த மாளவத்தின் அப் பகுதிகள் கி.பி. 639ஆம் ஆண்டு மைத்ரேக அரசரின் கட்டுப்பாட்டிற்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டதை அக்கட்டளைகளிலிருந்து அறிகிருேம். மாளவத்தின் அப் பகுதிகளைத் துருவசேனு தாமே கைப்பற்றிக்கொள்வது என்பது, அன்றைய மைத்ரேக அரசரின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். ஹர்ஷருக்கு அதைக் கைப்பற்றுவதே முதல் பணி ஆகும். வலபிப் படையெடுப்பின் சமயம் வழியில் அமைந்திருந்த மாளவத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டும். ஏனெனில், தேவ குப்தரின் இறப்பிற்குப் பின், மாளவம் சாளுக்கியர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. மாளவத்தை இரண்டாவது துருவசேனுவிற்கு அளித்ததும் ஹர்ஷரின் தேர்ந்த அறிவைக் குறிக்கிறது எனலாம். மாளவத்தைத் துருவசேனுவிற்கு அளித்த தன் மூலமாகச் சாளுக்கியர்களுக்கும், மைத்ரேகர்களுக்கும் பிரச்சினைக்குரிய பகுதியைத் தோற்றுவித்து, இழந்த பகுதிகளைத் திரும்பப் பெற வேண்டும் என்ற துருவசேனுவின் விருப்பத்தை நிறைவேற்றினுர். மைத்ரேகர்களின் துணையைத் தேவையான

[1] E, I-viii-190 ff; A.S.I.A.R. (1902-3) 232 ff

மிகச் சரியான வேளையில் பெற்றுக்கொண்டதும் ஹர்ஷரின் ஆழ்ந்த அரசியல் அறிவிற்குச் சான்று ஆகும். இந் நிலையில் ஹர்ஷரின் ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தம்முடைய தேர்ந்த அரசியல் ஆற்றலினால் உணர்ந்து, தம்முடைய படை ஆற்றலைப் பெருக்கிக்கொள்ளும் முயற்சியில் இரண்டாம் புலிகேசி முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்க வேண்டும்.

நொகாவாக் கட்டளைகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமும், அதன் காலமும், ஹர்ஷரின் வலபிப் படையெடுப்பை, அவர் கி.பி. 640ஆம் ஆண்டிற்குப் பின், அதாவது இரண்டாவது துருவசேனு விற்குப் பின் அரசு புரிந்த நான்காவது தாரசேனுவின் காலத்தி லேயே மேற்கொண்டிருக்க வேண்டும் என முடிவு செய்யத் தூண்டுகின்றன என R. C. மஜும்தார் கருதுகிறார்.[1] அவ்விதம் இரண்டாவது துருவசேனுவிற்கும் ஹர்ஷருக்கும் பகை ஏற்பட்டி ருப்பின், யுவான் சுவாங் தம் பயணக் குறிப்புகளில் உறுதியாக அதைக் குறிப்பிட்டிருப்பார் எனவும் வாதிடப்படுகிறது. ஆனால், கூர்ஜரக் கட்டளையில் குறிப்பிட்டுள்ள தஞ்சம் புகுந்த மைத்ரேக அரசர் இரண்டாவது துருவசேனுவா என ஐயப்படுவதற்குத் தகுந்த சான்றுகள் இல்லை. பௌத்த மதத்தைத் தழுவிய இரண்டு அரசர்களிடையே நிகழ்ந்த ஒரு கவலை மிக்க நிகழ்ச்சியை, யுவான் சுவாங் தம் பயணக்குறிப்புகளில் முக்கியத்துவம் அளித்துக் குறித்திருக்க மாட்டார். மேலும் அவர்கள் இருவரும் உறவினர் என்பதாலும், சிக்கலில் ஈடுபட்டிருப்பவர் யுவான் சுவாங்கைப் போற்றிக் காப்பவர் என்பதாலும் அதை நாம் எதிர்பார்க்க முடியாது. இரண்டாவது துருவசேனு தஞ்சம் புகுந்ததாகக் கூறப்படும் இரண்டாவது தத்தாவின் கடைசிக் குறிப்பின் காலம் கி.பி. 641ஆம் ஆண்டு ஆகும். தவிர, இரண்டாவது தத்தாவிடம் தஞ்சம் புகுந்தவர் இரண்டாவது துருவசேனுவின் மகன், நான்கா வது தாரசேனு என்பதைவிட இரண்டாவது துருவசேனுவே என்பதற்கு மூன்று அரசர்களின் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சிகளின் காலத்தைக்கொண்டே உறுதிப்படுத்த முடியும். இரண்டாவது துருவசேனு, இரண்டாவது தத்தா ஆகிய இரு அரசர்கள் நிலக் கொடை பற்றிய கட்டளைகளைக் கடைசியாக அளித்த ஆண்டுகள் முறையே கி.பி. 640, 641 ஆகும். ஆனால், நான்காவது தார சேனு தம்மைச் சக்கரவர்த்தி என அழைத்துக்கொண்ட முதல்

[1] R. C. மஜும்தார்-H.C.I.P-iii-110.147.'கி.பி. 644ஆம் ஆண்டு வலபியின் அரசு பொறுப்பை நான்காவது தாரசேனு பெற்றார்; சக்கரவர்த்தி என்ற பட்டத்துடன் தம்மை அழைத்துக்கொண்டார். இவ்வாறு அவர் தம்மை அழைத்துக்கொண்டது ஹர்ஷரின் பகைக்குக் காரணமாகும். பின் ஹர்ஷரின் ஆற்றலுக்கு அஞ்சி நந்திபுரியின் இரண்டாவது தத்தாவிடம் அவர் தஞ்சம் புக நேர்ந்திருக்கக் கூடும். இதுபற்றி உறுதியாகக் கூறுவதற்கும் இல்லை'';

குறிப்பின் காலம் கி.பி. 645-6 ஆகும்.[1] நான்காவது தாரசேனு கி.பி. 644ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றிருக்க வேண்டும். ஏனெனில், அவருடைய தந்தை இரண்டாவது துருவசேனு கி.பி. 643 ஆம் ஆண்டுப் பிரயாகைப் பேரவையில் வலபியின் பிரதிநிதியாகச் சிறப்பான பங்கு பெற்றதாக யுவான் சுவாங் பயணக் குறிப்பு களில் காணப்படுகிறது. கி.பி. 645-6-ல் நான்காவது தாரசேனு தம்மைச் சக்கரவர்த்தி என அழைத்துக்கொண்டதிலிருந்தும் கி.பி. 649-ல்[2] பழைய கூர்ஜரத்தின் முக்கியமான பரோச்(Broach)சைக் கைப்பற்றி, அங்கிருந்து மேலும் இரு கட்டளைகள் அளித்திருப்ப தாலும், கூர்ஜர அரசரிடம் தஞ்சம் புகுந்தவர் நான்காவது தார சேனுவாக இருக்க முடியாது எனலாம். அரியணை ஏறிய பின் நான்காவது தாரசேனுவின் ஆற்றல் வளர்ச்சி பெற்று, மைத்ரேக வமிசத்தின் சிறப்பு ஓங்கியது. சாளுக்கியர்களின் ஆற்றல் குன்றி யதால், மைத்ரேகர்களின் ஆற்றல் வளர்ந்தது. குஜராத் பகுதி யின் சாளுக்கிய ஆளுநர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை தோன்றி யது. மேலும், ஹர்ஷரின் ஆட்சிக் காலமும் முடிவடையும் தறுவாயிலிருந்தது. ஆகவே, கூர்ஜரக் கட்டளையில் குறிப்பிட்டுள்ள தஞ்சம் புகுந்த வலபி அரசர், நான்காவது தாரசேனுவாக இருக்க முடியாது; அவர் இரண்டாவது துருவசேனுவே என முடிவு செய்யலாம்.[3]

அடுத்தபடியாக வலபியின் ஆட்சிப் பொறுப்பேற்ற அரசர் இரண்டாவது துருவசேனு பாலாத்தியரின் மகன் நான்காவது துருவ சேனு ஆவார். அவர் மைத்ரேக வமிசத்தின் பன்னிரண்டாவது அரசர் ஆவார். அவரால் அளிக்கப்பட்டு, நமக்குக் கிடைத் துள்ள முதல் கட்டளையில் கி.பி. 645-6[4] ஆம் ஆண்டும், கடைசிக் கட்டளையில் கி.பி. 649ஆம்[5] ஆண்டும் காணப்படுகின் றன. மைத்ரேகர்களின் வரலாற்றில் பரம பத்தாரக, மகாராஜாதி ராஜ, பரமேஸ்வர, மற்றும் சக்கரவர்த்தி என்ற பட்டங்களை முதன்முதலாக அவரே பெற்ருர். ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் வலபியில் அவர் ஆட்சி புரிந்தார். ஹர்ஷரின் ஆட்சிக் கால இறுதியில்தான் அப்பட்டங்களை நான்காவது தாரசேனு ஏற்ருர். ஹர்ஷரால் அமைக்கப்பட்டிருந்த பேரரசின் நிருவாகம் சற்றுத் தளர்ந்த நிலையில் மைத்ரேக அரசர் வலுப்பெற்ருர் என் பதையே அது குறிக்கிறது. கி.பி. 642-ல் இரண்டாம் புலிகேசியின்

[1] I. A-I-45
[2] I. A-XV-335
[3] C. V. வைத்யா-H.M.H.I-i-பக்கங்கள் 242-43; A. S. அல்டேகர்-A.B.O.R.I-XIII-304
[4] I. A-I-45
[5] I. A-XV-339

இறப்பிற்குப்பின், சாளுக்கிய அரசின் ஆற்றல் குன்றியிருந்த காலத்தில் தாரசேனு வலபியில் ஆட்சி புரிந்தார். புலிகேசி இறந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே, முதலாவது விக்கிர மாதித்யரின் காலத்தில் சாளுக்கியர்களின் ஆற்றல் மறுபடியும் வளர்ந்தது. நான்காவது தாரசேனு ஹர்ஷரின் பேரர் என்ற காரணத்திற்காகவே ஆதிக்கப் பட்டங்களை மேற்கொண்டிருக்க வேண்டும் என K. P. ஜெயசுவால் கருதுகிறார். இக் கருத்திற்குப் போதுமான சான்றுகள் இல்லை எனலாம். ஏனெனில், இரண்டாவது துருவசேனுவிற்கும், ஹர்ஷரின் மகளுக்கும் கி.பி. 632ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. தாரசேனு ஹர்ஷரின் மகளுக்குப் பிறந்திருப்பின், தந்தை இறந்தபொழுது சிறுவராகவே இருந்திருப்பார். தாரசேனு தம் ஆட்சிக்காலத்தில் பெற்ற சிறப்புகளையும், சாதனைகளையும் காணும் சமயத்தில், அவர் துருவசேனுவின் மூத்த அரசிக்குப் பிறந்தவராகவே இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. நான்காவது தாரசேனு கி.பி 650ஆம் ஆண்டு இறந்தார்.

3. ஹர்ஷரும் அரச பதவியும்

தலைநகர்

வட இந்தியாவில் கிழக்குப் பஞ்சாபில் உள்ள தனேஸ்வரம் ஏழாம் நூற்றாண்டில் ஒரு பெரிய பேரரசின் தலைநகராக விளங்கிய சிறப்பைப் பெற்றிருந்தது. பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் அதைப் பற்றிய சிறப்பான விளக்கம் காணப்படுகிறது. ஆனால், யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளை மொழி பெயர்த்துள்ள பீல், 'மேற்கு உலகத்தின் பௌத்தக் குறிப்புகள்' (Buddhist Records of the World) என்ற நூலிலும், அக் குறிப்புகளை மொழி பெயர்த்துள்ள வாட்டர்ஸ், 'யுவான் சுவாங்கின் இந்தியப் பயணக் குறிப்புகள்' (On Yuan Chwang's Travels in India) என்ற நூலிலும் தனேஸ்வரத்தைப் பற்றிச் சிறு குறிப்புகளே குறித்துள்ளனர். அவற்றில் தனேஸ்வரம் ஹர்ஷரின் தந்தை வழி நாடு என்ற சிறப்பைச் சீனப்பயணி புறக்கணித்து விட்டாற்போலக் காணப்படுகிறது. யுவான் சுவாங் தனேஸ்வரத்தை சாட் அனிசு ப லோ (Sa-t'a-ni-ssu-fa-lo) எனக் குறித்துள்ளார்.

தனேஸ்வரம் மதுராவிற்கு வடமேற்கே 500லி (5லி-ஒரு மைல்)[1] தூரத்தில் இருந்தது. அவ்வரசு 7000லி சுற்றளவு உடையது. தலைநகர் 20லி சுற்றளவில் அமைந்திருந்தது. 200லி சுற்றளவுள்ள தர்ம க்ஷேத்திரம் என்ற மாவட்டத்தின் நடுவில் தலைநகர் அமைந்திருந்தது. தர்ம க்ஷேத்திரம் ஒரு புனிதத் தன்மையுள்ள இடமாகும். ஏனெனில், அதுதான் மகாபாரதப் போர் நடைபெற்ற இடமாகும்.[2] ஸ்தனு (Sthanu) என்று அங்குச் சிவனைக் குறித்த சொல்லும், ஈஸ்வர (Isvara) அல்லது கடவுள் என்ற சொல்லும் இணைந்து தனேஸ்வரம் (Sthanesvara) என்ற பெயர் வழங்குவதாக V. A. ஸ்மித் கருதுகிறார்.[3] பாணர் தனேஸ்வரத்தை ஜனபத விசேஷா (Janapada Visesha) என ஸ்ரீ கந்த ஜனபதா(Sri Kantha Janapada)வில் குறிப்பிடுகிறார்.[4] மோனியர் வில்லியம்ஸின் சமஸ்கிருத ஆங்கில அகராதி ஜனபதா

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 1

[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 314; பீல்-1-பக்கம் 184

[3] E. H. I. V. A. Smith (4வது பதிப்பு)-பக்கங்கள் 24,28

[4] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 96; மொழிபெயர்ப்பு-பக்கம் 81

என்பதற்கு ஒரு சமூகம், தேசம், மக்கள் (அரசை எதிர்ப்பவர்கள்,) பேரரசு, மக்கள் வாழும் நாடு எனப் பொருள் தருகிறது. ஜனபதா விசேஷா என்பதற்குப் பொருள் குறிக்கப்படவில்லை விசேஷம் என்பதற்குச் சிறப்பு எனப் பொருள் கொண்டு இணைத்து, ஸ்ரீ கந்தாவின் சிறப்பான தேசம் என்ற பொருள் காணுவது பொருத்தமுடையதாகும். ஹர்ஷ சரித்திரத்தில் காணும் குறிப்புகள் தலைநகரான தனேஸ்வரம் சரசுவதி ஆற்றின் கரையில் அமைந்திருந்தது என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றன.[1] இந்திய சீன விளக்க ஆதாரங்களை ஒருங்கே ஆராய்ந்து பார்த்தால், வர்த்தனர்களின் அரசு மேற்கே சட்லெஜ் ஆற்றிலிருந்து கிழக்கே கங்கை ஆற்றின் கடைசி வரை தனேஸ்வரத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கியது எனத் தெரிகிறது. மேலும், ஸ்ரீகந்த என்ற நாக அரசரின் பெயர் அவ்விடத்திற்கு வழங்கப்பட்டது.[2]

இயற்கையழகு

பாணர் அப் பகுதியின் செழிப்பையும் இயற்கை அழகையும் ஹர்ஷ சரித்திரத்தில் விளக்குகிறார். அப் பகுதி மண்வளம் மிக்கது ஆகையால், கோதுமை, அரிசி, கரும்பு, மொச்சை, மூலிகை வகைகள் முதலியன மிக அதிகமாக வளர்ந்தன. இன்று இமயமலையின் கீழ்ச்சரிவுப் பகுதிகளில் அரிசியும், கிழக்குப் பகுதிகளில் கரும்பும் விளைவது போலவே ஹர்ஷர் காலத்திலும் விவசாயம் நடைபெற்றிருக்க வேண்டும். தென்னை, வாழை, திராட்சை, ஈச்சம், குங்குமப்பூ, எலுமிச்சை, மாதுளை முதலிய மரம், செடி கொடிகளும் அங்கு மிக அதிகமாக வளர்ந்தன என பாணர் குறிப்பிடுகிறார். ஆனால், ஸ்ரீ கந்தாவில் நிலவி வரும் பருவநிலை தென்னை மிக அதிகமாக வளர ஏற்றதாக இல்லை என்பதைக் காணும்போது, பாணர் சற்று மிகைப்படுத்தி, தென்னையையும் சேர்த்துக் கூறி இருப்பதாகக்கொள்ளலாம். பசு, எருமை, ஆடு, குதிரை, ஒட்டகம், குரங்கு, கிளி, குருவிகளைப்பற்றி அப் பகுதி வளர் பிராணி, பறவைகள் என பாணர் குறிக்கிறார்.[3]

பொருளாதார வாழ்க்கை

யுவான் சுவாங்கின் தனேஸ்வரத்தைப் பற்றிய விளக்கத்திலும், பாணரின் நிலவளம் பற்றிய குறிப்புகளிலும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. குறிப்பாகப் பருவ நிலை, மண் வளம், அபரி

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 102, 203; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 86,198

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம் பக்கம்-12; மொழிபெயர்ப்பு-பக்கம் 94

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 94-5; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 79-80; cf.C.A.G.I. பக்கம் 377 ff

மிதச் சாகுபடி ஆகிய துறைகளை இருவரும் சிறப்பாக விளக்கி இருக்கின்றனர். இருப்பினும், மக்கள் விவசாயத்தைவிட அதிக அளவில் வாணிகத்தில் ஈடுபட்டிருந்ததாக யுவான் சுவாங் கூறு கிறார். மேலும், தனேஸ்வரத்தின் செல்வந்தர்கள் வேற்று நாட்டுச் சிறப்பு மிக்க ஆடம்பரப்பொருள்களைச் சேகரிப்பதில் போட்டியிட்ட னர் எனவும், மக்களின் பழக்க வழக்கங்களில் குறுகிய மனப்பண்பு இருந்ததையும், சகிப்புத் தன்மை இல்லாததையும் குறிப்பிடுகிறார்.[1] இப்பகுதியின் பொருளாதாரச் சிறப்பியல்புகளைப் பற்றி பாணர் குறிப்பிடாததன் காரணம், பேரரசின் இப் பகுதியில் ஹர்ஷரின் மேற்குத் திசை படையெடுப்பிற்குப் பின்தான் வாணிகம் சிறப்புப் பெற்று வளர்ந்தது. அப் படையெடுப்பின் பயனாக அரபுக்கடலின் வாணிக வழிகளைப் பயன்படுத்த உள்நாட்டு வணிகர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. வடமேற்குப் பகுதிகளுடனும், ஆப் கானிஸ்தானம், பாரசீகத்துடனும் இந்தியர்கள் வாணிகத் தொடர்பு ஏற்படுத்த ஹூணப் படையெடுப்பு பற்றிய அச்சம் நீங்கியதும் மற்றொரு காரணமாகும்.

தனேஸ்வரத்தின் சுற்றுப்புறத்தில் வாழ்ந்த மக்களின் ஆதரவு பெற்ற மதத்தைக் குறிப்பிடுகையில் யுவான் சுவாங் மகிழ்ச்சியுடன் காணப்படவில்லை; பெரும்பான்மை மக்கள் புத்த மதத்தைத் தழுவாதவர்கள் எனவும், தனேஸ்வரத்தில் இருந்த மூன்று புத்த மடங்களில் எழுநூறு ஹீனயானப் பிரிவு பௌத்தர்களே காணப் பட்டார்கள் எனவும் கூறுகிறார்; ஆனால், நூற்றுக்கும் அதிகமான இந்துக் கோயில்கள் காணப்பட்டன என்றும் குறிப்பிடுகிறார். 'பல உளிகளால் எவ்வாறு கற்களை உடைத்துச் சீர்படுத்தப்பட்டுக் கோயில்கள் அமைக்கப்படுகின்றனவோ அது போலத் தீமைகளை உடைத்து எறிந்து, குல தர்மங்கள் குழப்பமற்ற முறையில் பின் பற்றப்பட்டன' என பிராமண குலத்தைச் சேர்ந்த பாணர் நாட்டைப் பெரிதும் மதித்துப் போற்றிக் கூறுகிறார்.[2]

மேலும், அவர் தனேஸ்வரத்தைப் பற்றிய வரலாற்றை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். 'அந்நாட்டில் புஷ்பபூதி (Puspabhuti) என்ற அரசர் தோன்றினார். அவர் சூரியன், சந்திரனுக்கு அடுத்த படியாகப் புகழ் பெற்றார்; ஓர் ஆற்றல் மிக்க அரச பரம்பரையைத் தோற்றுவித்தார். அப்பரம்பரையில் ஹர்ஷர் என்ற அரசர் தோன்றினார். அவர் மண்டாத்ரி(Mandhatri)க்கு அடுத்தபடியாக

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 314

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 94, 96; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 79, 81

உலகை வெல்வார்'[1] என பாணர் பெருமையாகக் கூறியுள்ளார். புஷ்பபூதி தம் காலத்தில் சில நாடுகளை வென்றார். மக்கள், மன்னரைச் சார்ந்தோர், ஆலோசனைக் குழு அங்கத்தினர்கள், வெல்லப்பட்டுக் குறுநில மன்னர்களாக மாறிய பக்கத்து நாட்டு அரசர்கள் முதலியோர்[2] புஷ்பபூதியைப் பெரிதும் மதித்துப் போற்றினர். சூர சூரசேன கிரமான (Sura Surasenakramane)[3] என்ற பட்டத்தை பாணர் அவருக்கு அளித்துப் புகழ்கிறார். சூரசேனா என்பது இன்றைய மதுராவின் சுற்றுப்புறமாகும். கிரமான என்பதற்கு 'வெல்லும்', 'அழிக்கும்', 'படையெடுக்கும்' எனப் பொருள். ஆகவே, சூரசேனாவைப் படையெடுத்து வெல்லும் வீரர் என்பது அப்பட்டத்தின் பொருளாகும்.

வர்த்தன வமிசத்தின் அரசைத் தோற்றுவித்தவர் யார் என அறிந்துகொள்வது மிகவும் கடினம். பாணர் கூறும் குறிப்புகள் புஷ்பபூதி அநேகமாகக் குப்தப் பேரரசின் ஆரம்ப காலத்தில் ஆட்சி புரிந்தார் என நம்பச் செய்கின்றன. மதுராவில் கண்டெடுக்கப் பட்ட நாக அரசின் நாணயங்கள்[4] காலமான நான்காம் நூற்றாண் டின் ஆரம்ப ஆண்டுகளில் ஆட்சி புரிந்த நாகர்கள், சூரசேனா என்று பாணரால் பட்டம் கொடுக்கப்பட்ட புஷ்பபூதியைவிடச் சிறப்பான புகழ்பெற்ற ஆட்சியை நடத்தினர். ஸ்ரீகந்தா என்ற நாக அரசரின் பெயரால் நாக நாட்டின் அண்மையில் அமைந்திருந்த பகுதிக்குப் பெயர் வழங்கியது. ஸ்ரீகந்தாவைப் புஷ்பபூதி மற்போரில் (Dual) தோற்கடித்தார் என பாணர் குறிப்பிடுகிறார்.[5] இந் நிகழ்ச்சி யிலிருந்து மதுராவின் நாக அரசருக்கும் வர்த்தனர்களுக்கும் பகை யுணர்வு நீடித்து வந்ததும், வர்த்தன அரசர்கள் நாக அரசர்களை வென்று நாகப் பிரதேசத்தைக் கைப்பற்ற முயற்சி செய்தனர் என்பதும் தெரிகிறது. புஷ்பபூதியோ அல்லது அவருக்குப் பின் ஆட்சி புரிந்தவரோ புதிதாக வென்ற நாகப் பிரதேசத்தை அதிக காலம் தங்கள் கட்டுப்பாட்டில் நிலைநிறுத்திக்கொள்ள இயலாதவாறு தடைகள் தோன்றின. ஆற்றல் மிக்க சமுத்திர குப்தரின் ஆட்சியில் சீனாப் (Chenab) நதிக்குக் கிழக்கே உள்ள பகுதிகள் அனைத்தும் குப்தர்களின் ஆட்சிப் பகுதியாக மாறின.[6] புஷ்பபூதியின் தனேஸ்வரம், நாகர் ஆற்றல் மிக்கவர்களாக

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 98,115; மொழிபெயர்ப்பு-பக்கங் கள் 83, 97

[2] Op.cit-பக்கம் 100; மொழிபெயர்ப்பு-பக்கம் 85

[3] Op.cit-பக்கம் 100; மொழிபெயர்ப்பு-பக்கம் 84

[4] A. S. அல்டேகர் - N.H.I. P-பக்கங்கள் 36-37

[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 112-113; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 94-5

[6] C.I.I.-iii-எண் 1

இருந்த சமயத்தில், நாக அரசின் பகுதியாகவும், பின் சமுத்திர குப்தர் ஆட்சியில் நாக அரசர்களின் பகுதியுடன் சேர்ந்து குப்தப் பேரரசின் கிழக்கு எல்லையாகவும் இருந்திருந்தது. ஹர்ஷர் வாழ்ந்த காலத்தில் புஷ்பபூதி சிறப்பான புராண வீரரைப் போன்று மதிக்கப்பட்டார் என்பதை பாணரின் குறிப்புகளில் காண்கிறோம். அதற்குப் புஷ்பபூதி செய்து வந்த சைவ பூசைகளும்[1] துணை புரிகின்றன. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மனிதராக விளக்கப்படும் நாக அரசருக்கும், புஷ்பபூதிக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுக்கு அவர்கள் வேறுபட்ட மதப்பிரிவுகளின்மீது கொண்டிருந்த பற்றே காரணம் எனவும் கூறப்படுகிறது. ஆனால், ஹர்ஷரின் செப்பேட்டுக் குறிப்புகளில் புஷ்பபூதியைப் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

ஹர்ஷரின் தந்தை பிரபாகர வர்த்தனர் ஆட்சிச் சிறப்புப் பெற்றதை பாணர் கீழ்க்காணுமாறு விளக்குகிறார்: 'புஷ்பபூதியின் பரம்பரையில் புகழ் மிக்க அரசர்கள் தோன்றினர்......அவர்கள் சிறப்பாக ஆட்சி புரியப் பிறந்தவர்கள்......படையாற்றலால் நாட்டைக் காப்பர்......உலகையே வெல்லும் ஆற்றல் பெற்றவர்கள்......அந்த வரிசையில் காலப்போக்கில் அரசருக்கு அரசரான பிரபாகர வர்த்தனர்[2] என்ற பெயர் கொண்டவர் தோன்றினார்......' பிரபாகர வர்த்தனருக்கு மூன்று தலைமுறைகளுக்கு முந்தியவர் நர வர்த்தனர் (Nara Vardhana) என்பதை ஹர்ஷரின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். நர வர்த்தனர் ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். முற்கால குப்தர்களின் ஆற்றல் வளர்ந்து, கங்கை தோயாப் (Gangetic Doab) பகுதிகளில் அவர்கள் ஆட்சி ஏற்பட ஆரம்பித்த காலத்திற்குப்பின் புஷ்பபூதி வமிச ஆட்சியின் தொடர்ச்சியை ஏறக்குறைய 150 (நூற்றைம்பது) ஆண்டுகளுக்குக் குறிக்க முடியவில்லை. குப்தப் பேரரசு சிறப்பாக விளங்கிய காலத்திலிருந்து கடைசியில் வர்த்தனர் என்ற பெயரைச் சேர்த்துக்கொண்ட அரசர்கள் காலம் வரை தனேஸ்வரத்தின் அரசர்கள் சிறிதும் சிறப்பற்றவர்கள் என்பது வரலாற்று உண்மையாகும். ஆகவே, குப்தர்கள் காலத்தில் சிறப்பற்ற அரசர்களாக? வாழ்ந்த பலரை பாணர் முற்றிலும் புறக்கணித்தார் எனக் கூறலாம். மேலும், ஹூணர்களின் படையெடுப்பும், மாளவத்தின் யசோதர்மர் (Yasodharmar) புகழும், வர்த்தன அரசின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்திருக்க வேண்டும். அவை பற்றி வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை எனினும், வர்த்தனர்களின்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 109 ff; மொழிபெயர்ப்பு-பக்கம் 91 ff

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 119-120; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 100-101

சிறப்பற்ற நிலைக்கு அவையே காரணமாகும். ஹூணப் படையெடுப்பை எல்லா இந்திய அரசர்களும் பொதுவான இடையூருகவே கருதினர்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. குப்தர்களும், யசோதர்மரும், மௌகாரிகளும், பிரபாகர வர்த்தனரும் ஹூணப் படையெடுப்பை முறியடிக்க முயற்சி எடுத்துக்கொண்டனர் என்பதிலிருந்து ஹூணர்கள் இந்தியா முழுவதற்கும் தீங்கு விளைவிப்பவர்களாகக் கருதப்பட்டனர் என்பது ஐயத்திற்கு இடமின்றி விளங்குகிறது.

மதுபான்,[1] பன்ஸ்கீரா[2] செப்பேட்டுகளில் பிரபாகர வர்த்தனரின் அரசக் குடும்பத்தின் முன் மூன்று தலைமுறைகளும் அவர்களுடைய அரசிகளின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. அவை யாவன:

மகாராஜ நர வர்த்தனர்—வஜ்ரினி தேவி

மகாராஜ முதலாவது ராஜ்ய வர்த்தனர்—அப்ஸரா தேவி

மகாராஜ ஆதித்ய வர்த்தனர்—மகாசேன குப்த தேவி

ஹர்ஷர் பதவி ஏற்ற ஆண்டான 606லிருந்து பின் நோக்கிச் சென்று ஒவ்வோர் அரசரும் சுமார் 25 ஆண்டுகள் ஆண்டார்கள் என்ற கணக்கில் பார்த்தால் நர வர்த்தனர் ஆட்சி செய்த காலம் கி.பி. 505லிருந்து 530 வரை என யூகிக்கலாம். அவர் மகாராஜா என்ற பட்டத்தை மட்டுமே பெற்றிருந்தார். அவருடைய மகன் முதலாவது ராஜ்ய வர்த்தனர் கி.பி. 530ஆம் ஆண்டிலிருந்து 555ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார் என நம்பலாம். நர வர்த்தனரின் பேரர் ஆதித்ய வர்த்தனர் கி.பி. 555லிருந்து 580 வரை ஆண்டதாகக் கொள்ளலாம். ஆதித்ய வர்த்தனரின் மனைவி மகாசேன குப்தா தேவி பிற்கால குப்தரான மகாசேன குப்தரின் தங்கையாக இருந்திருக்க வேண்டும். மகாசேன குப்தர் கி.பி. 570 லிருந்து 575க்குள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்க வேண்டும். மகாசேன குப்தர், மௌகாரி அரசர்களிடமிருந்து தம் அரசைப் பாதுகாத்து ஆற்றல் மிக்கதாகச் செய்ய வர்த்தனர்கள் குடும்பத்துடன் திருமணத் தொடர்பு கொள்ள முயற்சித்து, தம் தங்கையை ஆதித்ய வர்த்தனருக்கு மணமுடித்துக் கொடுத்தார் எனலாம்.

ஆதித்ய வர்த்தனரின் மகன் பிரபாகர வர்த்தனர், பிரதாப சீலர் (Pratapa Sila) எனவும் அழைக்கப்பட்டார். வர்த்தனர் பரம்பரையில் முதலில் பரம பத்தாரக மகாராஜாதி ராஜ என்ற

[1] E. I-67
[2] E. Ii-v-208

பட்டம் பெற்றவரும் பிரபாகர வர்த்தனரே ஆவார். பன்ஸ்கேரா செப்பேடுகள், பிரபாகர வர்த்தனரின் 'புகழ் நான்கு கடலையும் கடந்து பகையரசர்களை வீரத்தாலும், நேசத்தாலும் அடி பணிய வைத்தது' எனப் புகழ்ந்துரைக்கின்றன. பிரபாகர வர்த்தனர் சிறப்பான பல வெற்றிகள் பெற்றார் என பாணர் புகழ்கிறார். 'ஹூண மான்களுக்குச் சிங்கம், சிந்து அரசருக்குக் கொதிக்கும் காய்ச்சல், கூர்ஜர அரசருக்குத் தூக்கத்தைக் கெடுக்கும் கொடிய கனவு, யானை போன்ற காந்தார அரசருக்குக் கொடியநோய்' எனப் பிரபாகர வர்த்தனர் விளங்கினார் என்று பாணர் புகழ்ந்து சிறப்பிக்கிறார். 'லதாக்களின் திறனை அழித்து, மாளவ அரசர்கள் அதிர்ஷ்டங்களைப் பெறவெட்டாது தடுக்கும் கோடரி'யாகவும் பிரபாகர வர்த்தனரை பாணர் புகழ்கிறார்.[1] ஆனால், இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் பகையரசர்கள் யாரும் தங்களுடைய ஆட்சிப் பகுதியின் ஒரு சிறிய அளவைக்கூடப் பிரபாகர வர்த்தன ரிடம் இழந்ததாகத் தெரியவில்லை. பாணர் பிரபாகர வர்த்தனரை மிகவும் ஏற்றிப் புகழ்வதிலிருந்து, சிறிய காரணங்களுக்காகக்கூட அவர் வேற்று நாட்டு அரசர்களுடன் போரிட்டார் எனத் தெரிகிறது. தனேஸ்வர அரசைப் பெரியதாகவும், ஆற்றல் மிக்க தாகவும் ஆக்க வேண்டும் என்ற பிரபாகர வர்த்தனரின் விருப்பத் தையே அது குறிக்கும். போர் செய்வதை ஒரு வாய்ப்பாக அவர் கருதினார். காலப்போக்கில் பிரபாகர வர்த்தனர் தாம் எண்ணிய தைச் சிறப்பாக அடைய முடியாவிட்டாலுங்கூட அக்கால அரசர் களில் சற்று உயர்ந்த இடத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றார் எனலாம். 'எல்லாத் திசைகளிலும் படையெடுப்பை மேற் கொண்டார், மலை, காடு, குகைகளைக் கடந்து' வென்றார். பழங்காலத்தில் மேலே கூறப்பட்டவை நாடு, மாவட்டங்களின் எல்லையைக் குறிக்க உதவின என்பதிலிருந்து எல்லை கடந்து தாக்குதல் நடத்தினார் என்பதே கருத்தாகும்.

பாணரின் மிகைப்படுத்தப்பட்ட விளக்கங்களிலிருந்து வர லாற்று நிகழ்ச்சிகளைத் தொகுக்கும் முயற்சியில் ஹூணர்களுக்கு எதிரான படையெடுப்புகளில் பிரபாகர வர்த்தனரின் பங்கைக் காண்போம். பிரபாகர வர்த்தனரின் காலத்தில் ஹூணர்கள் ஒரு பெரும் அபாயமாக விளங்கவில்லை எனலாம். இருப்பினும், அவர் களுடைய அழிவுச் செயல்கள் முற்றிலும் அகன்று விடவில்லை. சட்லெஜ் நதிக்கரையின் மலைப்பாங்கான காங்கரிப் (Gangri) பகுதி களில் ஹூணர்கள் நிலை கொண்டிருந்தனர். பிரபாகர வர்த்தனர் தம் மகன் ராஜ்ய வர்த்தனரை ஹூணர்களை விரட்டும் பணியில்

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 120; மொழிபெயர்ப்பு-பக்கம்-101

ஈடுபடுத்தினர். அப்பொழுது ஹூணர்கள் 'கைலாசரின்[1] அருள் பொழியும் மலைப்பகுதிகளில்' காணப்பட்டனர். கைலாசமலை காங்கரி மலைத்தொடரின் அடிவாரத்தின் தென்மேற்கில் அமைந்துள்ளது.[2] இளவரசர் ராஜ்யவர்த்தனர் ஹூணப் படையெடுப்பில் பல வெற்றிகளைப் பெற்றார்.[3] அவ்வெற்றியைக் குறிக்கும் வகையில் பாணர் பிரபாகர வர்த்தனருக்கு 'ஹூண ஹரின-கேசரி' (Huna-Harina-Kasari)[4] என்ற பட்டத்தைக் கொடுத்தார். அதற்கு 'ஹூணர்கள் என்ற மான்களுக்குச் சிங்கம்' என்று பொருள். ஹர்ஷரின் காலத்தில் ஹூணப் படையெடுப்புகளைப் பற்றிய நிகழ்ச்சிகளை நாம் காண முடியவில்லை. ஆகவே, ஹூணர்களை வென்று விரட்டும் முயற்சியில் ராஜ்ய வர்த்தனர் வெற்றி பெற்றார் எனக் கருதலாம்.

சிந்து

பிரபாகர வர்த்தனருக்கும் சிந்து தேச அரசருக்கும் இடையில் பல சச்சரவுகள் தோன்றின. சிந்து எனக் குறிக்கப்படும் பகுதி காலத்திற்குக் காலம் மாறுபட்டு வந்திருக்கிறது. யுவான் சுவாங் தரும் விளக்கங்களின் ஆதாரப்படி, சட்லெஜ், இந்து நதிகளுக்குக் கீழே கடல் வரை உள்ள பகுதிகள் முழுவதும் அரசியல் வழக்கில் சிந்து எனக் குறிக்கப்படும் நாடு எனத் தெரிகிறது.[5] யுவான் சுவாங் அதைச் சின்-து (Sin-tu)[6] எனக் குறிப்பிடுகிறார். சிந்து சுமார் 2000 மைல் சுற்றளவு கொண்டது என சீனத்துப்பயணி குறிப்பிடுகிறார். தலைநகரின் பெயரைப் பி ஷன் போ பு லா (Pi-shan-p'o-pu-lo)[7] என யுவான் சுவாங் குறிப்பிடுவதைக் கன்னிங்ஹாம்[8] அபிஜானவ பூரா அல்லது அலோர் (Abhijanava-pura or Alor) ஆக இருக்கக் கூடும் எனக் கருதுகிறார். பாணர் சிந்து எனக் குறிப்பிடும் பகுதி தனேஸ்வரத்திற்குத் தென்கிழக்கில் உள்ள தக்கா (Takka), சிந்து, கூர்ஜரம் என்ற மூன்று பகுதிகளில் ஒன்று ஆகும். கூர்ஜரம் தனேஸ்வரத்தின் மேற்கு எல்லையை ஒட்டி அமைந்திருந்தது. ஹர்ஷர் தம் காலத்தில் சிந்துவின் அரசை வீழ்த்திப் பெரும்புகழ் பெற்றார் எனக் குறிப்பிடப்படுகிறது.[9]

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம்-150; மொழிபெயர்ப்பு-பக்கம் 132
2 G. D. A. M. I-பக்கம் 82
3 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 176; மொழிபெயர்ப்பு-பக்கம் 165
4 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 120; மொழிபெயர்ப்பு-பக்கம் 101
5 வாட்டர்ஸ்-ii-பக்கம் 256-61
6 வாட்டர்ஸ்-ii-பக்கம் 252
7 வாட்டர்ஸ்-ii-பக்கம் 252-4
8 C. A. G. I-பக்கங்கள் 286-87; 296-97
9 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 91; மொழிபெயர்ப்பு-பக்கம் 76

பிரபாகர வர்த்தனரை எதிர்த்துப் போரிட்ட சிந்துவின் அரசர், ராய் (Rai) அரச வமிசத்தைச் சேர்ந்த ராய் ஸஹாஸி(Rai Sahasi) யின் மகன் இரண்டாவது ராய் ஸிராஸ் (Rai Sihras II) ஆவார். யுவான் சுவாங் கி.பி. 640ஆம் ஆண்டில் சிந்துப் பகுதிகளில் பயணம் செய்தார். அந்த நாட்டை ஆண்ட அரசன் ஒரு சூத்ரன் என அவர் குறிப்பிடுகிறார். சந்திர குப்த மௌரியரின் முன்னோர்கள் இப்பகுதியிலேயே ஆட்சி செய்து வந்தனர் எனவும் கருதப் படுகிறது.[1] சந்திர குப்த மௌரியரைச் சூத்ரர்[2] பிரிவைச் சேர்ந் தவர் எனவும் கருதுகின்றனர். சூத்ரர் என்ற ஜாதிப் பிரிவு தோன்றுவதற்குக்கூட இது காரணமாக இருந்திருக்கும் எனவும் கருதப்படுகிறது. ஏனெனில், ராய் அரசர்கள் ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள் அல்ல.[3]

கூர்ஜரம்

பிரபாகர வர்த்தனர் சண்டையிட நேர்ந்த மற்றொரு நாடு கூர்ஜரம் என்பதாகும். அப் பகுதி இன்றைய ராஜஸ்தானில் உள்ளது. கூர்ஜரர்களின் முன்னோர்கள் பற்றிய விளக்கங்களில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. K. M. முன்ஷியின் கருத்துப்படி கூர்ஜர ;தேச மக்கள் இன்றைய குஜராத், குஜார்கான் (Gujar Khan) அல்லது குஜரன் வாலா (Gujaran Vala) என வழங்கும் பகுதிகளிலும், அதன் சுற்றுப் பகுதிகளிலும் வாழ்ந்தவர்கள் எனத் தெரிகிறது. பல வரலாற்று ஆசிரியர்கள் கூர்ஜரா என்பது அப் பகுதி வாழ் மக்களைக் குறிக்கும் பெயர் என்றும், இன்றும் அப் பெயரை குஜார் (Gujars) என்ற மக்கள் கொண்டுள்ளதே அதற்குச் சரியான சான்று என்றும் கருதுகின்றனர். மேலும், கூர்ஜரர்கள் என்ற மக்கள் பிரிவினர் வெளிநாட்டிலிருந்து வந்த வர்கள் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் நம்புகின்றனர். வின் சென்ட் ஸ்மித் கூர்ஜரர்கள் ஹூண இனத்தின் மிக முக்கிய பிரிவி னர் என்று கூறுகிறார்.[4] ஹூணர்கள் சிறப்பு இழந்த பின்னும், கூர்ஜரர்கள் சிறப்புடன் நாட்டை ஆளும் இனமாக மாறினர். ஆறும் நூற்றாண்டில் கூர்ஜரர்கள் அரசியலில் சிறப்புப் பெற்று, தனியே ஓர் அரசைத் தோற்றுவித்தனர்; தங்களுடைய பழைய இனச் சிறப்புகளைப் போற்றிக் கூறிக்கொண்டனர். K. C. மஜூம் தாரின் கருத்துப்படி இவர்களைப் பற்றிய கருத்து வேறுபாடுகளை

1 D. H. N. I-H. C. Roy-i-பக்கம் 5
2 P. H. A. I-பக்கங்கள் 266-7
3 A. S. I. A. R-ii-பக்கங்கள் 8 ff
4 E. H. I-V. A. ஸ்மித்-4வது பதிப்பு-பக்கம் 427

எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படும் வரலாற்றுச் சான்றுகள்தான் தீர்த்து வைக்க இயலும்.[1]

வரலாற்றில் நாம் காணும் முதல் கூர்ஜர அரசு மண்டவ்யாபுர (Mandavyapura) அரசாகும். ஜோத்பூருக்கு வடக்கே ஐந்து மைல் தொலைவில் உள்ள மந்தோர் (Mandor) என்பதே அதுவாகும். 550ஆம் ஆண்டு ஹரிச்சந்திரா என்பவர் அவ்வரசை நிறுவினர். ஹரிச்சந்திராவிற்கு நான்கு குமாரர்கள் இருந்ததாக ஜோத்பூரில் கண்டெடுக்கப்பட்ட பிரதிஹர புக்காவின் குறிப்பு விளக்குகிறது.[2] ஹரிச்சந்திராவின் மூன்றுவது மகன் பெயர் ரஜீலா (Rajjila) என்பதாகும். அவருக்கு நரபட்டா (Narabhata) என்ற மகனும், நாகபட்டா (Nagabhata) என்ற பேரனும் தோன்றினர். இக்காலம் கி.பி. 550லிருந்து 640ஆம் ஆண்டு வரை இருக்கும் என R. C. மஜூம்தார் கருதுகிருர். ரஜீலா ஆட்சியின் இறுதிக் காலத்தில் அல்லது அவரது இறப்பிற்குப்பின் கி.பி. 590-ல் பிரபாகர வர்த்தனர் கூர்ஜர நாட்டைத் தாக்கியிருக்க வேண்டும்.

காந்தாரம்

பிரபாகர வர்த்தனரின் மற்ருெரு பகைநாடு காந்தாரம் ஆகும். இந்து ஆற்றின் மேற்குக் கரையில் அந்நாடு அமைந்திருந்தது. சீனப் பயணக் குறிப்புகளை மொழிபெயர்த்துள்ள வாட்டர்ஸ், யுவான் சுவாங் காந்தாரத்தைக் காந் தோ லோ (Kan-to-lo) எனக் குறித்துள்ளதாக எழுதுகிருர்.[3]

காந்தாரத்தின் தலைநகர் புருஷபுரம் (Purushapura) ஆகும். இன்று அதற்குப் பெஷாவர் என்று பெயர் வழங்குகிறது. அது கபிசா(Kapisa)விற்கு உட்பட்டிருந்தது. காந்தாரத்திற்கும், தனேஸ்வரத்திற்கும் இடைப்பட்ட வடக்குப்பகுதி (இன்றைய மேற்குப் பஞ்சாபும், வடமேற்கு எல்லை மாநிலமும்) யுவான் சுவாங்கின் பயணக்காலத்தில் அதாவது கி.பி. 631ஆம் ஆண்டு காஷ்மீருக்கு உட்பட்டிருந்தது.[4] ஆனல், பிரபாகர வர்த்தனர் ஆண்ட காலத்தில் பஞ்சாபின் அரசியல் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருக்க வேண்டும். கார்கோட (Karkota) வமிசத்தைச் சேர்ந்த துர்லப வர்த்தனர் (Durlabha Vardhana) கி.பி. 606ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னரே காஷ்மீரத்தின் ஆற்றல் வளர்ந்தது. யுவான் சுவாங்கின் பயணக் காலத்தில்

1 H. C. I. P-iii-பக்கம் 65
2 E.I. xviii-87 ff
3 வாட்டர்ஸ்-i-பக்கம் 198; பீல்-I-பக்கம் 97
4 வாட்டர்ஸ்-1-பக்கம்-240

காஷ்மீர் அரசின் ஒரு பகுதியாக விளங்கிய அப்பிரதேசம், முன் காலத்தில் கபிசாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அவை காந்தாரத்தின் எல்லையை ஒட்டிய மாநிலத்தின் பகுதிகளாக விளங்கின.[1]

தக்கா, பஞ்சாபின் மற்றோர் அரசாகும். யுவான் சுவாங் அதைச் செக்-கா (Chak-ka) எனக் குறிப்பிடுகிறார். பியாஸ், சிந்து ஆகிய இரு நதிகளுக்கு இடையே தென் மேற்கே பரவியுள்ள பகுதியே 'தக்கா' என அழைக்கப்பட்டது. பிரபாகர வர்த்தனரின் படையெடுப்பு நிகழ்ச்சிகளில் இப் பகுதி எங்கும் குறிக்கப்படவில்லை. காந்தாரத்தின் பகுதியாக அது கருதப்பட்டு விடப்பட்டிருக்க வேண்டும். பாணர் காந்தாரத்தைப் பற்றிய தகவல்களை விருப்பமாகத் தராததன் காரணம், தனேஸ்வரத்தின் வடமேற்குப் பகுதியில் பிரபாகர வர்த்தனர் சிந்துப் பகுதிகளை வென்றதுமே, இந்தியாவின் மொத்த வடமேற்குப் பகுதியையும் வென்று விட்ட மன நிறைவு பாணருக்கு ஏற்பட்டு இருக்க வேண்டும்.

லதாக்கள்

பாணர் பிரபாகர வர்த்தனரைப் புகழ்ந்து 'லதாக்களின் திறனை அழித்தவர்' எனக் கூறுகிறார். லதா என்று குறிக்கப்படுவது மாஹி, தப்தி நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியாகும். பிரபாகர வர்த்தனரின் காலத்தில் அப் பகுதி காலச்சூரிகள் (Kalachuris) கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. காலச்சூரிகளின் ஆற்றல் ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ந்தது. கொங்கணத்தில் மௌரியர்கள் காலச்சூரிகளின் ஆட்சியைப் பின்பற்றிச் சகாப்தத்தைக் குறித்தது, (கி.பி. 248-9) அவர்களின் ஆற்றலை ஒப்புக் கொண்டதைக் குறிக்கிறது எனலாம். இரண்டாவது காலச்சூரி அரசரான சங்கரகாண(Sankaragana)தான் வெற்றி பெற்ற சமயத்தில் உஜ்ஜயினி கூடாரத்திலிருந்து கி.பி. 595ஆம் ஆண்டு ஒரு கட்டளையை அறிவித்ததாக அப்ஹோண ஏடு குறிக்கிறது.[2] அரசை இழந்த பல அரசர்களுக்குச் சங்கரகாண மறுபடியும் ஆட்சிப் பொறுப்பை மீட்டுக் கொடுத்தார். பிற்காலக் குப்தரான மகாசேன குப்தரைக் காலச்சூரிகள் வென்று, உஜ்ஜயினியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். காலச்சூரிகளை எதிர்ப்பதற்காக மகாசேன குப்தர் தம் தங்கை மகனை பிரபாகர வர்த்தனரின் உதவியைப் பெற்றதாகத் தெரிகிறது. பிரபாகர வர்த்தனர் லதாக்களுக்கு எதிராக அனுப்பிய ஒரு சில

1 D.H.N.I-i-பக்கம் 59-63
2 E. I. IX-296

படைப்பிரிவுகளை பாணர் மிகவும் புகழ்ந்துரைக்கிறார். தம்மைக் காப்பவரின் தந்தையைப் புகழ்ந்துரைக்க வேண்டும் என்ற நோக்கமே அதற்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும்.

மாளவம்

'மாளவ அரசர்கள் அதிர்ஷ்டங்களைப் பெறவொட்டாது தடுக்கும் கோடரி'யாக பிரபாகர வர்த்தனர் விளங்கினார் என பாணர் புகழ்ந்ததை நாம் கண்டோம். ஹர்ஷரின் குறிப்புகள் மாளவத்தின் அரசரான தேவகுப்த(Devakupta)ரை 'மாளவத்தின் தீய தலைவர்' என இகழ்ந்துரைக்கின்றன. அதற்குக் காரணம் கிரகவர்மரை தேவகுப்தர் கொன்றதே ஆகும்.[1] காலச்சூரி அரசரான சங்கரகாணாவினால் மகாசேன குப்தரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைத் திரும்பப் பெற்ற பலரில் மாளவத்தின் தேவகுப்தரும் ஒருவர். மகாசேன குப்தர் மகதத்திலிருந்து வெளியேற்றப் பட்டபின் மாளவத்தில் அரசு புரிந்தார். மகாசேன குப்தரின் குடும்பத்தை ஒட்டிய மற்றொரு பிரிவு மாளவத்தில் நெடுங்காலமாக இருந்து வந்தது. தேவகுப்தர் அப்பிரிவைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். காலச்சூரி அரசரான சங்கரகாணாவின் உதவியைப் பெற்று மகாசேன குப்தரிடமிருந்து அரசைக் கைப்பற்ற தேவகுப்தர் முயற்சி செய்தார். அதில் அவர் வெற்றியும் பெற்றார். மாளவத்தின் அரசுரிமையை இழந்த மகாசேன குப்தர் அதைத் திரும்பப் பெறும் முயற்சியில் பிரபாகர வர்த்தனரின் உதவியை நாடினார். மகாசேன குப்தர் வயது முதிர்ந்து ஆற்றல் அற்றவராக இருப்பினும், தம்முடைய மாமாவிற்கு உதவுவதன் மூலமாக, மாளவத்தின்மீது தம் உரிமையை நிலை நாட்டலாம் என்ற எண்ணத்தில், பிரபாகர வர்த்தனர், மாளவத்திற்குப் படைப்பிரிவுகளை அனுப்பி வைத்தார். தேவகுப்தருடன் நடைபெற்ற போர்களில் முடிவான விளைவுகள் எதுவும் தோன்றவில்லை. எனினும், பாணரின் புகழுரைக்கு அம் முயற்சிகள் காரணமாக இருக்க வேண்டும். இக்கட்டான இச் சூழ்நிலைகளில்தான் மகாசேன குப்தர் தம் குமாரர்கள் இருவரையும் தனேஸ்வரத்தின் அரசவைக்கு அனுப்ப முடிவு செய்தார். அவற்றைப் பற்றிய செய்திகள் ஹர்ஷ சரித்திரத்திலும்[2] ஆதித்யசேனரின் அப்ஸாடு (Aphsad) கல்வெட்டுகளிலும் குறிக்கப்பட்டுள்ளன.

பிரபாகர வர்த்தனர் சூரிய வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவராகக் காணப்படுகிறார்.[3] பிரபாகர வர்த்தனருக்கு

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம்-183; மொழிபெயர்ப்பு 173
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 138; மொழிபெயர்ப்பு-119
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-123; மொழிபெயர்ப்பு-104

பல மனைவியர்[1] இருந்தனர். இருப்பினும், யசோவதி என்ற யசோமதி தேவியே அரசி என்ற மதிப்பைப் பெற்றிருந்தார் என்பதைச் சோன்பட் முத்திரையில் குறிக்கப்பட்டுள்ள சொற்றொடர்கள் விளக்குகின்றன.[2] யசோமதி சிறப்பான அரச குடும்பத்தைச் சார்ந்தவராகக் காணப்படவில்லை. அவ்வாறு இருந்திருப்பின், கண்டிப்பாக பாணரின் மிகவும் பெரிய சிறப்பான புகழுரை ஒன்று நமக்குக் கிடைத்திருக்கும்.

யசோமதியின் குடும்பச் சிறப்பு பற்றி A.F.R. ஹோயர்ன (Hoernel)[3]லும், R. K. முகர்ஜியும்[4] ஒரே கருத்துக் கொண்டிருக்கின்றனர். மாளவத்தின் அரசரான யசோதர்மரின் மகள் என அவர்கள் இருவரும் கருதுகின்றனர். அவ்வாறு அவர்கள் எண்ணுவதற்குப் பெயரில் உள்ள ஒற்றுமை காரணமாக இருக்கலாம். ஆனால், அது தவறாக இருக்கும் என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. மாளவத்தின் அரசர் யசோதர்மர் கி.பி. 533க்குப் பிறகு அரசியலில் காணப்படவில்லை என்பதும், யசோமதியின் தாய்தந்தையர் நெடுங்காலம் உயிர் வாழ்ந்தனர் என்று ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகிறது[5] என்பதும் அக் காரணங்களாகும்.

பிரபாகர வர்த்தனரின் தனி அபிமானத்தை யசோமதி பெற்றிருந்தார் என்பதில் ஐயமில்லை. வேறு எந்த மனைவியின் மூலம் பிறக்கும் எந்தக் குழந்தைக்கும் பிரபாகர வர்த்தனர் அரச முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை. யசோமதிக்குக் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகப் பிரபாகர வர்த்தனர் கடவுளை வழிபட்டுக்கொண்டார். 'சூரிய உதயத்திலும், நடுப்பொழுதிலும், மாலைப்பொழுதிலும் பிரபாகர வர்த்தனர் கடவுளை வழிபட்டார்' என ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகிறது.[6] வழிபாட்டின் பயனாகப் பிரபாகர வர்த்தனருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனர்.

மூத்த மகவிற்கு ராஜ்ய வர்த்தனர் எனப் பெயர். கி.பி. 586ஆம் ஆண்டின் இறுதியில் ராஜ்ய வர்த்தனர் பிறந்தார். ராஜ்ய வர்த்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-126, 133, 167; மொழிபெயர்ப்பு-107, 114, 151, 154

[2] C. I. I-iii-எண் 52

[3] J. R. A. S. (1903)-556

[4] ஹர்ஷா-R. K. முகர்ஜி-61, 64

[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 166; மொழிபெயர்ப்பு-பக்கம் 152

[6] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 123; மொழிபெயர்ப்பு-பக்கம் 104

தனர் ஆறு வயதை[1] நெருங்கும்போது கி.பி. 590ஆம் ஆண்டு ஹர்ஷர் பிறந்தார். ஜுன் 4ஆம் தேதி கி.பி.590ஆம் ஆண்டு ஹர்ஷர் பிறந்தார் என C. V. வைத்யா கூறுகிறார்.

ராஜ்ய வர்த்தனரும் ஹர்ஷரும் பிறந்த சமயம் தலைநகர் விழாக் கோலம் பூண்டிருந்தது. ராஜ்ய வர்த்தனரின் பிறப்பைவிட ஹர்ஷரின் பிறப்பை பாணர் மிகவும் சிறப்பாக விளக்குகிறார். ஹர்ஷர் கருவுற்ற நேரமும், பிறந்த வேளையும் சிறப்பானது எனக் கூறப்படுகின்றன. ஹர்ஷர் ஸ்ரவண (Sravana) மாதத்தில் கருவுற்றார் எனவும், ஜெயஸ்தா (Jyeshtha) மாதத்தில் பிறந்தார் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. 'உலகத்தை ஆளும் ஒருவர் பிறப்பதற்கு அறிகுறியுள்ள கிரகச்சேர்க்கைகள் அனைத்தும் உள்ள வேளையில்' ஹர்ஷர் பிறந்தார் என மாகா (Maga) வானியல் வல்லுநர் அரசரிடம் கூறினார்[2] என ஹர்ஷ சரித்திரத்திற்கு விளக்க உரை எழுதியுள்ள P.V. கேன் (Kane) கூறுகிறார். ஹர்ஷ சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி ஹர்ஷர் பிறந்த வேளையின் இயற்கைச் சிறப்பியல்கள் ஐயத்திற்குரியனவாகும். ஹர்ஷரின் பிறப்பைப் புகழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவை எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஹர்ஷர் பிறந்தவுடன் தலைநகர மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.[3] தலைநகர் விழாக் கோலத்தை பாணர் சுவைபட விளக்குகிறார். 'கைதிகள் விடுவிக்கப்பட்டனர். கடைகளில் உள்ள பொருள்களை மக்கள் மகிழ்ச்சியினால் கவர்ந்து சென்றனர்' என பாணர் கூறுகிறார்.[4] இம்மாதிரி வேளைகளில் கடைக்காரர்களுக்கு ஏற்படும் இழப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நஷ்ட ஈடு அளிப்பது வழக்கம். சிற்றரசர்களின் மனைவியர் பல பரிசுகளை அளித்தனர். மலர்களும், வாசனைப் பொருள்களும் அவற்றில் சிறப்பாகக் காணப்பட்டன. 'தலைநகரின் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியினால் நடனமாடினர்' என பாணர் குறித்துள்ளார்.

பிரபாகர வர்த்தனரின் இளைய குழந்தையின் பெயர் ராஜ்யஸ்ரீ ஆகும். ராஜ்யஸ்ரீ கி.பி. 592ஆம் ஆண்டு பிறந்தார்.[5] பிரபாகர வர்த்தனருக்குக் கிருஷ்ண என்ற மற்றொரு மகன் பிறந்ததாகவும்

[1] $4\frac{3}{4}$ வயதை அடைந்ததுமே குழந்தை ஆறு வயதை நெருங்குகிறது எனக் கூறுவது இந்தியாவின் பழைய வழக்கமாகும்.

[2] P. V. கேன்-Notes on Harsha Charita-அத்தியாயம் IV-பக்கம் 23

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 110-மொழிபெயர்ப்பு-பக்கம் 110

[4] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 111-அடிக்குறிப்பு-2

[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 134; மொழிபெயர்ப்பு-பக்கம் 115

ஹர்ஷ சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.[1] கிருஷ்ணு, ஹர்ஷரின் சிற்றன்னையான பிரபாகர வர்த்தனரின் மற்றொரு மனைவிக்குப் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

கி.பி. 592ஆம் ஆண்டு ராஜ்யஸ்ரீ பிறந்த சமயம் ராஜ்ய வர்த்தனருக்கு வயது ஆறு ஆகும். ஹர்ஷருக்கு 2 வயது. யசோவதியின் சகோதரர், எட்டு வயது நிரம்பிய தம் மகன் பண்டி(Bhandi)யை வர்த்தன இளவரசர்களுக்குத் துணையாகப் பணி புரிய அனுப்பி வைத்தார்.[2] பிரபாகர வர்த்தனரின் நல்லெண்ணத்தைப் பெற வேண்டும் என்ற விருப்பமும்; வர்த்தன இளவரசர்களுடன் தம் மகனும் சிறந்த கல்வியையும், அரச குலத்திற்குத் தேவையான போர்ப் பயிற்சிகளையும் பெற வேண்டும் என்ற விருப்பமுமே அதற்குக் காரணமாகும். புதிதாகச் 'சேர்த்துக்கொள்ளப்பட்ட மகன்' பண்டியைப் பிரபாகர வர்த்தனர் தம் பிள்ளைகளைப் போலவே நேசித்தார் என பாணர் குறிப்பிடுகிறார்.[3] மூன்று இளவரசர்களும் அரச கலைகளான வில்வித்தை, கத்திச்சண்டை போன்றவற்றிலும், ஏனைய கலைகளிலும் சிறந்த, தீவிரப் பயிற்சியை மேற்கொண்டனர். பண்டி அரண்மனையில் மிக முக்கியமான அந்தஸ்தைத் தம் திறமையினாலும் விசுவாசம் மிக்க சேவையினாலும் பெற்றார்.[4] பண்டி பிற்காலத்தில் ஹூணப் படையெடுப்பின் பொழுது இளவரசர்களுடன் துணையாகச் சென்றார். ஹர்ஷர் இமயமலைச் சாரலில் வேட்டைக்குச் செல்லும்பொழுதும் உடன் இருந்தார். ராஜ்ய வர்த்தனர் மாளவத்தின்மீது படையெடுத்துச் சென்ற சமயமும் பண்டி உடன் சென்றார்; ஹர்ஷரின் கட்டளைப் படிக் கௌடா அரசரிடமிருந்து கனோஜைக் காக்கச் சென்றார். யுவான் சுவாங் பண்டியைப் போணி (Po-ni) எனக் குறித்தார். யுவான் சுவாங்கின் குறிப்புப்படி பண்டி கனோஜ் அரசப் பிரதிநிதிகளை நோக்கி, ஹர்ஷரை அரசராக ஏற்றுக்கொள்ளுமாறு அறிவுரை கூறினார் எனவும் அறிகிறோம். இவற்றிலிருந்து பண்டி வர்த்தனர்களுக்கு ஆற்றிய சிறப்பான பணியைப் புரிந்துகொள்ளலாம்.

கி.பி. 601ஆம் ஆண்டு ராஜ்ய வர்த்தனரும், ஹர்ஷரும் முறையே 15, 11 வயது நிரம்பியிருந்த சமயம், இரண்டு மாளவ அரச குமாரர்கள்-அதாவது குமார குப்தர், மாதவ குப்தர் என்பவர்கள். வர்த்தனர் அரண்மனையில் குடி புகுந்தனர். ஹர்ஷருடன்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 52; மொழிபெயர்ப்பு-பக்கம் 40
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 135, மொழிபெயர்ப்பு 116
[3] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 117
[4] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 135

சேர்ந்து சிறப்புப் பெற வேண்டும் என்ற விருப்பமே அதற்கு முக்கிய காரணமாகும். மகாசேன குப்தரின் மூத்த மகனுன குமார குப்தர் பிற்கால குப்தர்களின் ஆட்சிப் பட்டியலில் காணப்படவில்லை. குமார குப்தர் இளமையிலேயே மரணமடைந்ததே அதற்குக் காரணமாகும். வர்த்தனரின் அரண்மனைக்கு வந்து சேர்ந்த சமயம் குமார குப்தருக்கு வயது 18. அவர் அதிக உயரமின்றியும், குட்டையாக இல்லாமலும் காணப்பட்டார். இளையவரான மாதவ குப்தருக்கு வயது 16. அவர் மலை போன்ற உருவமும், அரசருக்கு உரிய தோற்றமும் கொண்டிருந்தார்.[1] ஆனால், பண்டிக்கு அளிக்கப்பட்ட மதிப்பும் கௌரவமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.[2] ஹர்ஷர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற வேளையில் பண்டி விசுவாசத்துடனும், திறமையுடனும் தொடர்ந்து அரசாங்கத்திற்குத் தம் கடமையைச் செய்தார். மாளவ இளவரசர்களும் தங்களுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை ஹர்ஷரின் அரண்மனையில் கழித்தனர். இளையவரான மாதவ குப்தர் நீண்ட நாள்களுக்குப்பின் மகதத்தின் ஆளுநராக நியமிக்கப் பட்டார். பாணரின் குறிப்புகள் மாதவ குப்தரைச் சற்று அதிக மாகவே புகழ்ந்து உரைக்கின்றன. ஹர்ஷர் முதல் படையெடுப்பை மேற்கொண்ட சமயம் மாதவ குப்தரும் உடன் சென்றார்; பின் ஹர்ஷர் விந்திய மலைக் காடுகளில் ராஜ்யஸ்ரீயைத் தேடித் திரியும் சமயத்திலும் ஹர்ஷருக்குத் துணை புரிந்தார். 'ஹர்ஷருக்குப் பிரியமான, மாளவ அரசரின் புதல்வர்' என பாணர் மாதவ குப்தரைப் புகழ்ந்துரைக்கிறார். பாணர் ஹர்ஷரை முதலில் காணச் சென்ற சமயம் மாதவ குப்தரும் அரசருக்குப்பின் அமர்ந்தி ருந்தார். பூர்ணவர்மர் இறந்தபின் ஹர்ஷர் மாதவ குப்தரை மகதத்தின் ஆளுநராக நியமித்தார். மாதவ குப்தரின் மகன் ஆதித்ய சேனர், ஹர்ஷரின் இறப்பிற்குப் பின், பிற்கால குப்தரின் ஆட்சியை மகதத்தில் நிலை நிறுத்தினார்.

மாதவ குப்தரின் மூத்த சகோதரர் குமார குப்தர் மிகக் குறுகிய காலமே வாழ்ந்து வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறாமல் இளமையிலேயே இறந்திருக்க வேண்டும்.

ஹர்ஷர் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை யானையிட மிருந்து காப்பாற்றியதாக ஹர்ஷ சரித்திரத்தில்[3] காணப்படுகிறது.

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள்-138-9; மொழிபெயர்ப்பு-120-1

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள்-135; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 115-117

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 91; மொழிபெயர்ப்பு-பக்கம் 76

அவ்விளக்கத்தில் காப்பாற்றப்பட்டவரின் பெயர் குமாரர்[1] என்று மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. குமார குப்தரையே குமாரர் என பாணர் இவ்விடத்தில் குறித்திருக்க வேண்டும் எனக் கருதப் படுகிறது.

ராஜ்ய வர்த்தனர், ஹர்ஷர், பண்டி, குமார குப்தர், மாதவ குப்தர் ஆகிய ஐவரும் அரண்மனையில் போர்க்கலையைத் தீவிரமாகக் கற்றுத் தேர்ந்து முதிர்ச்சி பெற்று வரும் வேளையில், ராஜ்யஸ்ரீ இசை, நடனம் முதலிய கலைகளைக் கற்றுத் தேர்ந்து வளர்ந்து கொண்டிருந்தாள். 'சற்றுக் குறுகிய காலத்திலேயே ராஜ்யஸ்ரீ பருவமடைந்தாள்'[2] என பாணர் குறிப்பிடுகிறார். திருமணம் செய்யத் திட்டமிட்ட சமயம் ராஜ்யஸ்ரீக்குப் பதினொரு வயதுக்கு மேல் இராது. திருமணப் பந்தலில் அமர்ந்திருந்த ராஜ்யஸ்ரீயை வர்ணிக்கும் பாணர், முற்றிலும் பெண்மை அடையாத சிறுமி என்பதை உணர்த்த முற்படுகிறார்.[3] ராஜ்யஸ்ரீயை மணம் செய்ய விரும்பிய பல இளவரசர்களில் மௌகாரிக் குடும்பத்தின் கிரக வர்மரைப் பிரபாகர வர்த்தனர் விரும்பித் தேர்ந்தெடுத்தார். சிறப்பு மிக்க கனோஜ் அரச குடும்பத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற பிரபாகர வர்த்தனரின் ஆர்வமே இளவயதிலேயே ராஜ்யஸ்ரீக்குத் திருமணம் நடக்கக் காரணமாகும். 'மௌகாரிகள் மற்ற அரசகுலத்தினரைவிடச் சிறந்து விளங்கினர். உலகமே சிவனின் அடிச்சுவட்டை வணங்குவது போல மௌகாரிகளை மற்ற வர்கள் போற்றினர்' என பாணர் புகழ்ந்து உரைக்கிறார்.[4] அவந்தி வர்மரின் (Avanti Varmar) மூத்த மகனே கிரகவர்மர் ஆவார். அவந்தி வர்மருக்குப் பிறகு கிரகவர்மர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றார். ராஜ்யஸ்ரீயின் திருமண விழாவை பாணர் விவரிப்பதிலிருந்து அன்றைய இந்தியாவின் சமூகப் பழக்க வழக்கங் களை அறிந்துகொள்ளலாம். அக்கால வாழ்க்கையைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள பாணர் உதவுகிறார். 'சிற்றரசர்களும், அவர்களுடைய அரசிகளும் விழா சிறப்பாக நடப்பதற்கு உதவி புரிந் தனர்.[5] அவ்வரசர்கள் வரிந்து கட்டிக்கொண்டு, அலங்காரப் பொருள்களைக்கொண்டு அரசர் பணித்த வேலைகளைச் செய்வதில் ஈடுபட்டிருந்தனர்' என பாணர் கூறுகிறார். ராஜ்யஸ்ரீ 12 வயதை அடைந்த நிலையில் கி.பி. 603-4-ல் அவருக்குத் திருமணம் நடந் திருக்க வேண்டும்.

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 64-5; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 51-6

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 140; மொழிபெயர்ப்பு-பக்கம் 121

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 146; மொழிபெயர்ப்பு-பக்கம் 128

[4] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 141; மொழிபெயர்ப்பு-பக்கம் 122

[5] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 124

ஒரு பெரிய குடும்பப் பொறுப்பு நிறைவேறி அரசியல் ரீதியில் ஒரு முக்கியமான நண்பரைப் பெறும் முயற்சி வெற்றியளித்ததும் பிரபாகர வர்த்தனர் தம் கவனத்தை வேறு அலுவல்களில் செலுத்தினர். ராஜ்யஸ்ரீயின் திருமணம் நடந்து முடிந்தவுடன் ராஜ்ய வர்த்தனர் ஹூணர்களுக்கு எதிரான படையெடுப்பை மேற்கொண்டார். கவசம் தாங்கிப் போர்புரியும் பருவத்தை அடைந்த நிலையில் பிரபாகர வர்த்தனர் தம் மூத்த மகனை ஹூணர்களுக்கு எதிராகப் போரிட அனுப்பி வைத்தார். ராஜ்ய வர்த்தனருக்கு அப்போது பதினெட்டு வயது நிரம்பியிருந்தது. நாம் முன்பு கண்டது போல, பாணரின் குறிப்புகளிலிருந்து ராஜ்ய வர்த்தனர் ஹூணர்களை வெல்லும் முயற்சியில் வெற்றி பெற்றார் எனத் தெரிகிறது. மேலும், ஹர்ஷரின் காலத்தில் ஹூணர்களின் தொல்லையே இல்லாமலிருந்ததும், ராஜ்ய வர்த்தனரின் வெற்றிக்கு மற்றொரு சான்றாகும்.

ராஜ்ய வர்த்தனரும், ஹர்ஷரும் ஹூணப் படையெடுப்பு காரணமாகவும், வேட்டை நிமித்தமாகவும் தனேஸ்வரத்தில் இல்லாத நேரத்தில் பிரபாகர வர்த்தனர் திடீரென நோய்வாய்ப் பட்டு உடல் நலன் மிகவும் குன்றிப் போனார். உடனே தூதுவர்கள் மூலம் இளவரசர்களுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. இமயமலை அடிவாரப் பகுதிகளில் வேட்டையாடிக் களித்துக்கொண்டிருந்த ஹர்ஷர் தந்தையின் உடல் நலம் குன்றிய செய்தி கிடைத்த உடனே தனேஸ்வரத்திற்குத் திரும்பினார். ஆகவே, தந்தையின் இறுதி அறிவுரைகளைக் கேட்டுக்கொள்ளும் வாய்ப்பு ஹர்ஷருக்குக் கிடைத்தது எனலாம். தொலைவில் இருந்த ராஜ்ய வர்த்தனர் ஹூணப் படையெடுப்பை மேற்கொண்டிருந்ததால், உடனே வர இயலவில்லை; படையெடுப்பின் குறிக்கோளைப் பூர்த்தி செய்த பின்னரே தலைநகர் திரும்பினார். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக ராஜ்ய வர்த்தனர் திரும்புவதற்குள்ளாகவே பிரபாகர வர்த்தனர் இறந்தார். ராஜ்ய வர்த்தனர் தலைநகருக்குத் திரும்பும் வழியில் அச் செய்தி கிடைக்கப் பெற்றார். தந்தை இறந்த பல வாரங்கள் கழித்தே ராஜ்ய வர்த்தனர் தலைநகர் திரும்ப முடிந்தது என்பதை பாணரின் விளக்கங்களிலிருந்து அறிய முடிகிறது.

பிரபாகர வர்த்தனர் நோயுற்ற சமயத்திலிருந்தே அரசு பொறுப்பை ராஜ்ய வர்த்தனரை விடுத்து ஹர்ஷர் ஏற்பதற்கான சூழ்நிலை உருவாகி வருவதைப் பாணர் குறிப்பாக உணர்த்துகிறார். அவரது முயற்சி சாதுரியமானது. தீர்க்கமான தம் முடிவை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தின் அடிப்

படையில் அவ்விளக்கங்கள் காணப்படுகின்றன.[1] அதுபற்றி வரலாற்று ஆசிரியர்கள் மேலும் ஆராயாமல் இருப்பது வியப்பான தாகவே இருக்கிறது. அரியணையைக் கைப்பற்ற ஹர்ஷர் தவமுன வழியைப் பின்பற்றினரா என்பதற்குச் சரியான விளக்கங்கள் தரப் படவில்லை. இக் கேள்வி வரலாற்றில் மிகவும் முக்கியமானதாக இல்லாவிட்டாலும் இதை ஆராய்வது ஹர்ஷரின் குணநலனை மேலும் விளக்கப் பயன்படக் கூடும்.

ஹர்ஷரின் குறிப்புகளும், யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளும், மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவும் பிரபாகர வர்த்தனருக்குப் பின் ராஜ்ய வர்த்தனர் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டதாகக் கூறுகின்றன. பாணரின் ஹர்ஷ சரித்திரம் அதை ஒப்புக்கொண்ட தாகத் தெரியவில்லை. மற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி மிகத் தெளிவாக உவமைகளுடன் விளக்கும் பாணர் ஏன் ராஜ்ய வர்த்தனர் அரசு பொறுப்பு ஏற்ற நிகழ்ச்சியைப் புறக்கணித்தார் என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

பாணரது ஹர்ஷ சரித்திரக் குறிப்புகளின் அடிப்படையிலேயே ஹர்ஷர் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற வரலாற்றை அறிந்துகொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனலாம். பிரபாகர வர்த்தனர் இறக்கும் தருவாயில் மூத்த மகன் ராஜ்ய வர்த்தனர் அரசு பொறுப்பை ஏற்பதற்கு உரியவர் என்பதைக் குறிப்பிடாதது வெளிப்படையாகத் தெரிகிறது. இறந்துகொண்டிருக்கும் பிரபாகர வர்த்தனர் அதைப்பற்றியே குறிப்பிடாதது வியப்பிற்குரியது ஆகும். பிரபாகர வர்த்தனர் அதுபற்றிக் கவலைப்பட்டதாகக்கூடத் தெரியவில்லை. மேலும் தந்தை, ஹர்ஷரிடம் ராஜ்ய வர்த்தனருக்கு விசுவாசமாக நடந்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டதாகவும் காணப்படவில்லை. மாமுகத் தந்தை ஹர்ஷரை அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும்படி கோரியதாகக் காண்கிறோம். 'நான், என் மகிழ்ச்சி, ஆட்சி, வாரிசு உரிமை, வாழ்வு, மக்கள் அனைத்தும் உனக்கு உரியது. நான்கு கடலுக்கும் நீயே அரசன். நாட்டைக் காக்கும் பொறுப்பு உன்னுடையது.'[2] 'அரசு சுமையைத் தாங்கி, மக்களைக் காப்பாற்று' எனப் பிரபாகர வர்த்தனர் ஹர்ஷரைக் கேட்டுக்கொண்டதாகப் பாணர் கூறுகிறார்.[3]

பிரபாகர வர்த்தனர் இவ்வாறு கூறியதை ஹர்ஷரும் ஏற்றுக் கொண்டார் எனக் காணப்படுகிறது. தம் மூத்த சகோதரர்

[1] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 154-176

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 158; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 142-3

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 168-9, மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 155-6

ஆட்சிப் பொறுப்பை ஏற்க விரும்ப மாட்டார் என ஹர்ஷர் எண்ணியதாகப் பாணர் விளக்குவது முற்றிலும் இயற்கைக்குப் புறம்பானதாகக் காணப்படுகிறது. 'கடவுளே, என் சகோதரன், தந்தை இறந்த செய்தியைக் கேட்டவுடன் காவி உடை தரிக்கா திருக்க வேண்டுமே! உலகை வெறுத்துத் துறவி ஆகாதிருக்க வேண்டுமே!'[1] என ஹர்ஷர் எண்ணியதாகப் பாணர் கூறுகிறார்.

அரசவைப் பிரதிநிதிகளின் நம்பிக்கையும் ஒப்புதலையும் ஹர்ஷர் பெற்றுவிட்ட காரணத்தால், தாமே அரசு உரிமையை ஏற்க வேண்டும் என்ற எண்ணம் ஹர்ஷருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.[2] பிரபாகர வர்த்தனர் இறந்து, ராஜ்ய வர்த்தனர் தனேஸ்வரம் திரும்பும் வரை உள்ள காலத்தை ஹர்ஷர் இதற்காகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். இச் சதித்திட்டங்கள்[3] ராஜ்ய வர்த்தனர் தலைநகர் திரும்பியதால் சிதறியது. ராஜ்ய வர்த்தனர் அரசு உரிமையை ஏற்றார்[4] என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

பாணரின் விளக்கப்படி ஹர்ஷர் அரசு உரிமையை ஏற்ற வரலாறு சற்று மாறுபட்டது என்பதை நாம் அறிவோம். ராஜ்ய வர்த்தனர் தலைநகர் திரும்பியவுடன், ஹர்ஷர் எப்படி நினைத்தாரோ அதையே கூறினார். ராஜ்ய வர்த்தனர், எல்லா அரசர்கள் முன்னிலையிலும் தாம் அரசு பொறுப்பை ஏற்க அஞ்சுவ தாகவும், அந் நினைவு கலக்கத்தைத் தருவதாகவும் தெரிவித்து, மன அமைதி பெறத் தனிமையை நாடும் விருப்பத்தைத் தெரிவிக் கிறார். அரசு பொறுப்பை ஹர்ஷர் ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவிக்கையில் 'நான் கத்தியைத் தீண்டப் போவதில்லை'[5] என்று ராஜ்ய வர்த்தனர் கூறியதாகப் பாணர் கூறுகிறார்.

ஹர்ஷர் இதற்கு மறுப்புத் தெரிவிக்கவே இல்லை; வழக்கமாக அரசு உரிமை ஏற்கும் முறைக்கு மாறுபட்டது என்பதை உணர்ந்து கவலை தெரிவித்ததாகவும் இல்லை. பாணரின் சொற்களிலிருந்து ஹர்ஷர் தனிமையில் மனதிற்குள்ளே சூழ்நிலையினால் அரசு பொறுப்பு ஏற்க நேர்ந்த 'வேதனையை' அனுபவித்தார் என அறிகிறோம்.

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 173-4; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 162-3

[2] E.H.I-V. A. Smith-பக்கம் 349 (4வது பதிப்பு)

[3] E.H.I-V. A. Smith-பக்கம் 349 (4வது பதிப்பு)

[4] E.H.I-V. A. Smith-பக்கம் 350 (4வது பதிப்பு)

[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 179-80; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 169-70

இக் குழப்பமான நிலையில் முற்றிலும் எதிர்பாராத ஒரு செய்தி கனோஜ் நகரிலிருந்து வந்தது. பிரபாகர வர்த்தனர் நோயுற்று நலிவுறுகிறார் என்ற செய்தி எட்டிய உடனேயே மாளவத்தின் அரசர் தேவ குப்தர், மௌகாரி அரசரான கிரகவர்மரைத் தாக்கிக் கொன்று, அவருடைய இளம் மனைவி ராஜ்யஸ்ரீயைக் கைது செய்து சிறை வைத்த செய்தியை வர்த்தனர்களுக்குத் தூதுவர் தெரிவித்தனர். மேலும், தனேஸ்வரத்தின் குழப்பமான நிலையைப் பயன் படுத்தி, அதையும் தாக்கி வெல்ல தேவகுப்தர் திட்டமிட்டதையும் அறிந்தனர்.[1] சூழ்நிலையினால் உந்தப்பட்டு அரசப் பொறுப்பை விடுத்து, துறவியாக விரும்பிய ராஜ்ய வர்த்தனர் உடனே நேரத்தின் தேவைகளை நிறைவேற்றத் தலைப்பட்டார்; துறவி யாகும் எண்ணத்தைக் கைவிட்டு வர்த்தனர்களுக்குத் தீங்கு இழைத்தவர்களைப் பழி வாங்கத் துடித்தார்; 'அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள், அரசவை, நாடு, மக்களைக் காக்கும்' பொறுப்பை மேற்கொள்வதாக ஹர்ஷரிடம் கூறுகிறார். 'சிற்றரசர்களும் யானைப் படையும் உன்னுடன் இருக்கட்டும். 10000 குதிரைகள் கொண்ட படையுடன் பண்டி என்னைத் தொடரட்டும்' என ராஜ்ய வர்த்தனர் கூறுகிறார்.[2]

வர்த்தன குடும்பத்ினருக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க ராஜ்ய வர்த்தனர் எவ்வாறு கொதித்தெழுந்தார் என்பதைப் பாணர் வழக்கம் போல உவமைகளுடன் விளக்குகிறார்.[3] 'கோபக்கனலில் புருவம் வளைந்து, கன்னம் சிவந்து, வெறிகொண்டு படையெடுக்க முனைந்தார்' என பாணர் கூறுகிறார். ராஜ்ய வர்த்தனர் சற்று முன்னர் அரசு உரிமையை விடுத்து, துறவு பூண விரும்புவதாக அறிவித்ததைப் பொறுமையுடன் அமைதியாகக் கேட்டுக்கொண்ட ஹர்ஷர், இப்போது உடனே அதற்கு மறுப்புத் தெரிவிப்பதைக் காண்கிறோம். தம்மை அப்படையெடுப்பில் சேர்த்துக்கொள்ள ராஜ்ய வர்த்தனர் விரும்பவில்லை அல்லது அனுமதிக்கவில்லை என்ற உணர்வினால் ஹர்ஷர் உந்தப்பட்டு வெளிப் படையாக அதை எதிர்ப்பதைக் காண முடிகிறது. ராஜ்ய வர்த்தனர் உடனே ஹர்ஷரைத் தேற்றிப் பகைவர் மீதுள்ள கோபத்தைப் பகிர்ந்துகொள்ளாததற்கு மன்னிக்குமாறு கோரியதைப் பாணர் விளக்குகிறார்.[4]

வரலாற்றில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றத்தை நாம் காண முடிகிறது. பிரபாகர வர்த்தனர் உடல் நலமில்லாமல் இருந்ததி

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 183; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 173
2 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 184; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 174-5
3 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 183-84; மொழிபெயர்ப்பு-பக்கம் 174
4 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 185; மொழிபெயர்ப்பு-பக்கம் 176

லிருந்து ராஜ்ய வர்த்தனரின் இறப்பு வரையுள்ள, நாம் ஏற்கெனவே அறிந்துள்ள, நிகழ்ச்சிகளை பாணர் எவ்வளவு சாதுரியமாக விளக்கி இருப்பினும், அவர் போற்றிப் புகழும் தலைவரான ஹர்ஷரின் குணநலனில் அஃது ஒரு கறையாகவே காட்சி அளிப்பதை எவரும் மறுக்க முடியாது. பிரபாகர வர்த்தனரே வெளிப்படையாக ஹர்ஷரை அரசப் பொறுப்பு ஏற்கும்படி கூறியிருப்பினுங்கூட, மூத்த மகனை ராஜ்ய வர்த்தனருக்கு உரிய ஒன்றைப் பெற விடாது, தடையான எண்ணங்கள் அவர் மனதில் ஏன் தோன்றின என்பதற்கான காரணங்களை அறிந்துகொள்வது மிகக் கடினம். பிரபாகர வர்த்தனர் ஹூணப் படையெடுப்புப் பொறுப்பை ராஜ்ய வர்த்தனருக்கு அளித்ததும், அதை அவர் வெற்றிகரமாக நிறைவேற்றியதையும் கொண்டு, ராஜ்ய வர்த்தனர் எந்த வகையிலும் ஹர்ஷரைவிடத் திறமையும் நம்பிக்கையும் குறைந்தவர் அல்ல என்பது தெளிவாகிறது.

'ராஜ்ய வர்த்தனர், ஹர்ஷரை அரசு பொறுப்பை ஏற்குமாறு அரசர்கள் நிறைந்த அவையில் கூறும்போது, ஏன் ஹர்ஷர் மூத்தவருக்கு உரிய ஒன்றைத் தாம் அடைய விரும்பவில்லை என்ற மறுப்பை அல்லது பாணர் கூறுவது போலத் தம் 'மன வேதனை'யைத் தெரிவிக்கவில்லை? ராஜ்ய வர்த்தனர் கூறிய கருத்தை ஏன் ஒரு முறைகூட எதிர்க்கவில்லை? வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வரும் முறையை மாற்ற வேண்டிய காரணத்தை ஹர்ஷர் ஏன் வினவவில்லை? தவிர, ராஜ்ய வர்த்தனர் கனோஜ் படையெடுப்பை மேற்கொண்ட சமயம் மட்டும் ஏன் உடனே மறுப்புத் தெரிவித்தார்? 10000 குதிரைகள் உள்ள படையையும், பண்டியின் துணையையும் கொண்டு மாளவ அரசனைப் பழி வாங்கத் துடித்த ராஜ்ய வர்த்தனரை மறுத்துப் பேசியது ஏன்?' என்ற சில நியாயமான கேள்விகளுக்கு உண்மையான பதில்கள் கிடைக்குமாயின், பிரபாகர வர்த்தனர் நோயுற்றதிலிருந்து ராஜ்ய வர்த்தனர் இறந்த வரையில் உள்ள வரலாறு நிறைவு பெறும்.

'ஹர்ஷர் அரச பதவி ஏற்கப் பண்டியின் துணையை நம்பி இருந்தாரா?[1] தந்தை இறந்த பின், ராஜ்ய வர்த்தனர் தலைநகர் திரும்பும் வரையிலுள்ள இடைக்காலத்தில் தமக்குச் சாதக

[1] அரசவைப் பிரதிநிதி என்ற முறையில் பண்டியின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட இயலாது. ராஜ்ய வர்த்தனர் இறப்பிற்குப் பின் கனோஜ் படையெடுப்பைப் பண்டியே மேற்கொண்டார். யுவான் சுவாங்கினால் போணி (Po-ni) எனக் குறிக்கப்படுபவர் பண்டியே எனக் கொண்டால், கனோஜ் அரசப் பொறுப்பை ஹர்ஷர் ஏற்கவும் பண்டியின் திறனே காரணம். கனோஜ் அரசவைப் பிரதிநிதிகள் மௌகாரிகளை விடுத்து ஹர்ஷரை அரசராக ஏற்றுக்கொள்ளப் பண்டியின் அறிவுரையே காரணம். பீல்-i-பக்கம் 210-11

மான சூழ்நிலையைப் பண்டியின் உதவியுடன் ஏற்படுத்திக் கொண்டாரா? அது போன்ற ஒரு சூழ்நிலையினால் ராஜ்ய வர்த்தனர் உந்தப்பட்டு ஹர்ஷரை அரசப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் படிக் கேட்டுக்கொள்ள நேர்ந்ததா? பின் வாய்ப்புக் கிடைத்தால், அரசப் பொறுப்பைக் கைப்பற்றிக்கொள்ளலாம் என்ற எண்ணம் ராஜ்ய வர்த்தனருக்கு இருந்ததா? கனோஜ் விவகாரச் சூழ்நிலைகளை ராஜ்ய வர்த்தனர் தமக்கு வாய்ப்பாக மாற்றிக்கொள்ளக் கருதிப் படையெடுப்பை மேற்கொள்ள நினைத்தாரா? பண்டியின் உதவி யுடன் குறிப்பிட்ட படைகளைக்கொண்டு தம் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள நினைத்தாரா?' என்பவை இயல்பாக எழக்கூடிய வினாக்கள் ஆகும். ஏனெனில், பண்டியின் உதவி இத் தருணத்தில் மிக முக்கியமான ஒன்று ஆகும்.

மாளவ அரசரை வெல்லும் நிலையில் ராஜ்ய வர்த்தனரின் நிலையும் அந்தஸ்தும் மிகவும் உயர்ந்து விடும் என்பதில் ஐயமில்லை. இக் கேள்விகளில் எதற்கும் உரிய பதில் அளிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. பாணர் தரும் விளக்கங்களிலிருந்து மிகக் குழப்பமான தெளிவற்ற சூழ்நிலை நிலவியது என்பது மட்டும் புரிகிறது.

இக் குழப்பங்கள் அனைத்தும் மிக எளிதாகத் தீர்த்து வைக்கப் பட்டன. கனோஜ் படையெடுப்பை மேற்கொண்ட ராஜ்ய வர்த்தனர் உயிர் துறக்க நேர்ந்தது. ஹர்ஷர் தனேஸ்வரத்தின் உரிமையை முறைப்படிப் பெற ராஜ்ய வர்த்தனரின் இறப்பு உதவியது. இறந்துவிட்ட சகோதரருக்கு உரிய இடத்தைக் குடும்பக் குறிப்புகளிலும், அரசக் கட்டளைகளிலும், செப்பேட்டுக் குறிப்புகளிலும் ஹர்ஷர் அளித்தார். ஹர்ஷர் எவ்வாறு அரசப் பொறுப்பு ஏற்கும் நிலை தோன்றியது என்ற ஐயங்கள் மறக்கப்பட்டு ஈடு கட்டப்பட்டு விட்டன எனலாம். அதற்குச் சூழ்நிலைகள் உதவின. மிகக் குறுகிய காலத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளும், அவை நடந்து முடிந்த வேகமும், அரசு பொறுப்புப் போட்டி யில் ஈடுபட்டவரின் இறப்பு அனைத்தும் மிக இயற்கையாக ஹர்ஷருக்கு உதவின எனலாம். யுவான் சுவாங் அல்லது மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவின் ஆசிரியர், ஹர்ஷர் தனேஸ்வரத்தின் பொறுப்பு ஏற்றதில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏதும் காணப்பட்டதாகக் குறிக்கவில்லை என்பது மட்டுமின்றி, ராஜ்ய வர்த்தனரைப் பிரபாகர வர்த்தனருக்கும் ஹர்ஷருக்கும் இடையே குறுக்கிட்ட ஒருவராக நாம் நினைக்கும் அளவிற்கு பாணர் விளங்குகிறார். யுவான் சுவாங்கும் ஹர்ஷர் அரசப்பதவி ஏற்ற சமயத்தில் நிலவிய குழப்

பங்களை அறிந்தவராகவே காணப்படுகிறார். கனோஜ் அரசை ஹர்ஷர் ஏற்றுக்கொண்ட தொடர்பில் அவற்றைக் குறிக்கிறார்.[1]

ராஜ்ய வர்த்தனரின் இறப்பு

'ராஜ்ய வர்த்தனர் கனோஜ் படையெடுப்பில் மாண்டார். அவர் மரணம் போர்க்களத்தில் நிகழவில்லை என்பது அவர் தோன்றிய குலத்திற்கு ஓர் இழுக்காகும். தாம் மேற்கொண்ட படையெடுப்பில் பெரும் வெற்றி பெற்று, மாளவப் படைகளைச் சிதறி ஓடச் செய்தார்; இருப்பினும், கௌடா அரசரின் பொய்யான நடத்தைகளை நம்பி, அவர் வலையில் வீழ்ந்து, ஆயுதம் எதுவுமின்றித் தனியாக அவரைச் சந்திக்க முற்பட்டார்' என பாணர் குறிக்கிறார்.[2] இங்கு கௌடா அரசர் என்று குறிக்கப்படுபவர் சசாங்கன் ஆவார். சசாங்கன் தேவ குப்தரின் நண்பர். முதலில் கனோஜ் அரசரையும், பின் தனேஸ்வரத்தையும் கைப்பற்றி இருவரும் முயற்சி திட்டமிட்டனர். தேவ குப்தருக்கும், ராஜ்ய வர்த்தனருக்கும் நடைபெற்ற அப்போர் அநேகமாகக் கனோஜ் நகரிலேயே நடைபெற்றிருக்க வேண்டும். அப் போரில் தேவ குப்தர் கொல்லப் பட்டார் எனக் கருத வேண்டும். ஏனெனில், தேவ குப்தரைப் பற்றிய செய்திகள் அதற்குப்பின் வரலாற்றில் குறிக்கப்படவில்லை. இந் நிலையில் ராஜ்ய வர்த்தனருடன் நேரடியாகப் போரிடுவதைத் தவிர்த்து, சூழ்ச்சியின் மூலமாக எதிரியை வீழ்த்த சசாங்கன் முயற்சித்தார் என பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் குறித்துள்ளார். அச் செய்திகளை ஊர்ஜிதம் செய்ய வேறு வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன.

'கொடுத்த வாக்கை நிறைவேற்றும் முயற்சியில் எதிரியின் மாளிகையில் தம் உயிரைக் கொடுத்தார்' என ராஜ்ய வர்த்தனரின் இறப்பு பற்றி ஹர்ஷரின் குறிப்புகள் கூறுகின்றன.[3] யுவான் சுவாங்கின் குறிப்புகளின்படி 'சசாங்கனும் அவருடைய அமைச்சர்களும் ராஜ்ய வர்த்தனரைப் பேசுவதற்கு அழைத்துச்

[1] கனோஜ் அரசப் பொறுப்பை ஏற்க ஹர்ஷர் தயங்கினார் என்பது வரலாற்றில் தெளிவாகக் காணப்படுகிறது. அதற்கு அவர் ஆற்றல் குறைவு என்பது காரணம் இல்லை. மௌகாரிகளுக்கு உரிய அரசப் பதவியைத் தாம் கைப்பற்றிக்கொள்வதிலுள்ள சிரமங்களை ஹர்ஷர் உணர்ந்திருந்ததே அதற்குக் காரணமாகும். மேலும், பூர்ணவர்மர் கனோஜ் அரசப் பொறுப்பை ஹர்ஷர் ஏற்பதற்கு ஒரு தடையாக விளங்கினார். அது போன்ற ஒரு சூழ்நிலையில் அதிகாரத்தைக் காட்டுவதை விடுத்து, கௌரவமாக நடந்து கொண்டதன் மூலமாகவும், அரசவைப் பிரதிநிதிகளின் ஒப்புதலைப் பெறுவதன் மூலமாகவும் கனோஜ் அரசைத் தமதாக்கினார் எனலாம். பண்டி அப் பொறுப்பை நிறைவேற்ற உதவினார் எனக் கூறப்படுகிறது; வாட்டர்ஸ் -i- பக்கம் 343

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 186; மொழிபெயர்ப்பு-பக்கம் 178

[3] E. I. I-72-4

சென்றனர்'[1] என அறிகிறோம். யுவான் சுவாங் வேறு ஓர் இடத்தில் 'அமைச்சர்கள் செய்த தவறுகளின் காரணமாக, ராஜ்ய வர்த்தனர் எதிரியின் கையில் சிக்கிக்கொண்டார்' எனத் தெரிவிக்கிறார். யுவான் சுவாங் வாழ்க்கையை எழுதியுள்ள பீல், சசாங்கன் ராஜ்ய வர்த்தனரின் படைத்திறமையைக் கண்டு அஞ்சி, கொலை செய்யச் சூழ்ச்சி செய்தார்' எனக் குறிப்பிடுகிறார். ஹர்ஷ சரித்திரத்தை எழுதிய பாணரின் குறிப்புகள் முற்றிலும் நம்பத் தகுந்தவை அல்ல. ஏனெனில், நிகழ்ச்சி நடந்து முடிந்து பல காலத்திற்குப் பின் அவற்றை பாணர் எழுதியுள்ளார். 'ராஜ்ய வர்த்தனருக்குத் தம் மகளை மணமுடித்துத் தருவதாகச் சசாங்கன் ஒற்றன் மூலம் செய்தி அனுப்பித் தம் இருப்பிடத்திற்கு வரச் செய்து, அரசர் தம் அவைப் பிரதிநிதிகளுடன் விருந்தில் உண்டுகொண்டிருக்கையில், கௌடா அரசர் மாறு வேடத்தில் ராஜ்ய வர்த்தனரைக் கொன்றார்' எனக் கூறுகிறார்.[2]

சசாங்கனின் நடத்தை எவ்வளவு கீழானது என்பது ஐயத்திற்கு இடமின்றிக் காணப்பட்டாலும், சசாங்கனின் அழைப்பை ராஜ்ய வர்த்தனர் ஏற்றுக்கொண்ட நம்பிக்கை அல்லது மடமை பற்றிக் கூறாமல் இருக்க முடியாது. சசாங்கனின் அழைப்பை ராஜ்ய வர்த்தனர் நம்பி ஏற்றுக்கொண்டது அவரது உயிரைப் பறித்த தோடு மட்டுமன்றி, வர்த்தனரின் படைகளையும் சிதறச் செய்தது எனலாம். அவமானம் மிக்க அந் நிகழ்ச்சிகளை பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் குறிக்கவில்லை. ஹர்ஷரின் செப்பேட்டுக் குறிப்பு களிலும் அது புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. யுவான் சுவாங்கும், மற்றவர்களும் ஏறக்குறைய சற்று வேறுபட்ட சொற்களைப் பயன்படுத்தினாலும் அதே முறையைத்தான் பின் பற்றி இருக்கின்றனர்.

விளக்காமல் விட்டுப்போன இந் நிகழ்ச்சிகளைப் பற்றி R. C. மஜூம்தார்[3] சில கருத்துகளைத் தெரிவிக்கிறார். ராஜ்ய வர்த்தனரின் இறப்பு ஐயத்திற்குரிய சூழ்நிலையில் காணப்படுகிறது எனப் பொதுவாகக் கருதி அனுதாபப்பட்டாலும், அதில் சசாங்கனை இகழ்வதற்கு ஏதும் இல்லை எனக் கருதுகின்றனர். ஏனெனில், அன்று நிலவிய போர்க்கால நீதிகளின்படி எதிரியைக் கொல்லச் சதி செய்தல் ஒப்புக்கொள்ளப்பட்ட முறையாகும். சசாங்கன் நினைத்ததைச் செய்து முடிக்கும் திறனைப் பெற்றிருந்ததையே அது குறிக்கிறது. போர்க்களத்தில் தேவ குப்தர்

[1] பீல்-i-பக்கம் 210
[2] H. C. I. P-iii-பக்கம் 112
[3] H.C.IP.-iii-பக்கம்121 ff

தோல்வி கண்ட நிலையில் இறந்துபட்ட கனோஜ் அரசரின் மைத்துனர் ராஜ்ய வர்த்தனர் அகற்றப்பட வேண்டிய ஒருவர் என்ற உணர்வே சசாங்கனின் சதிக்குக் காரணமாகும். ராஜ்ய வர்த்தனரின் படைகளைச் சசாங்கன் வெல்வது இயலாத ஒன்று. ஆகவே, சதி நடவடிக்கையைப் போர் ஆற்றல் அற்ற சசாங்கன் மேற்கொண்டது நேரத்தின் தேவையைப் பொறுத்துச் சரியானதே எனச் சசாங்கனின் நிலையை ஆதரிப்போர் கருதுகின்றனர்.

ஆயினும், சசாங்கனின் சிக்கல்கள் அத்தோடு முடிந்து விடவில்லை. ஒரு முக்கிய எதிரியை அகற்றிவிட்டதால், அவருடைய நிலை ஆற்றல் மிக்கதாக மாறிவிடவில்லை. தம் நண்பரை ராஜ்ய வர்த்தனரின் படைகள் ஏற்கெனவே அழித்து விட்டன; ராஜ்ய வர்த்தனரின் கொலை நிகழ்ச்சிக்குப் பின் கனோஜ் அரசவைப் பிரதிநிதிகள் மேலும் அதிகமாகச் சசாங்கனை வெறுத்தனர்; ராஜ்ய வர்த்தனரின் மறைவிற்குப் பின் அவருடைய இளைய சகோதரர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடந்தவற்றிற்குப் பழிவாங்கும் முயற்சியை உடனே மேற்கொண்டார். சசாங்கனின் நாட்டையொட்டி அமைந்திருந்த காமரூபத்தின் (Kama-rupa-Assam) அரசர் பாஸ்கர வர்மர் சசாங்கனின் ஆற்றல் வளர்ச்சியினால் அச்சமடைந்து, வர்த்தனர்களுடன் நட்புக் கொள்ள முயற்சித்தார்; தூதுவர்களை அனுப்பி ஹர்ஷருடன் தொடர்பு கொண்டார்; தனேஸ்வரத்திலிருந்து கனோஜ் நகருக்கு ஹர்ஷர் படையுடன் வருகையில் பாஸ்கர வர்மரும், ஹர்ஷரும் சந்தித்தனர். பாஸ்கர வர்மர் கௌடாவைத் தாக்கக் கூடும் என்ற அச்சம் சசாங்கனுக்குத் தோன்றியவுடன், சூழ்நிலை தமக்கு எதிராக மாறிவிட்டதை உணர்ந்த சசாங்கன் கனோஜ் அரசைக் கைப்பற்றும் ஆசையைக் கைவிட்டு விட்டுத் தம் தலைநகருக்குத் திரும்ப நேர்ந்தது.

ஹர்ஷர் போரில் ஈடுபடுதல்

சகோதரரின் இறப்புச் செய்தி ஹர்ஷருக்கு எட்டிய உடனே பகைவர்களைப் பழி வாங்கும் படையெடுப்பை மேற்கொண்டார்; திக்விஜயத்தை அறிவித்து நான்கு திசைகளிலும் வெற்றிகளைப் பெற விரும்பினார். இது போன்ற ஒரு துணிவு மிக்க படையெடுப்பு நிகழ்ச்சி நீண்ட நாள்கள் ஆட்சி செய்து பயிற்சியும் ஆற்றலும் பெற்ற அரசர்களுக்கே உரியது ஆகும். 'திக் விஜயம்' என்ற சொல்லுக்கு உரிய உண்மையான பொருள் சற்றுக் குறைந்து, சாதாரணப் படையெடுப்பையும் சற்று மிகைப்படுத்தி, 'திக் விஜயம்' என அழைக்கும் நிலை ஹர்ஷர் காலத்தில் தோன்றி விட்டது எனலாம். பாணர் ஹர்ஷரின் வட இந்தியப் படையெடுப்பைத் 'திக் விஜயம்' எனக் குறிப்பிடுகிறார். பாணரின்

முற்றுப்பெறாத ஹர்ஷ சரித்திரத்'திலும், யுவான் சுவாங்கின், பயணக் குறிப்புகளிலும் 'ஐந்து இந்தியா' (Five Indies) என்று குறித்த பகுதிகளை ஹர்ஷர் வென்று புகழ் பெற்றார் எனக் காணப் படுகிறது. ஆகவே, குறிப்பிடத்தகுந்த வெற்றிகளையும், சாதனை களையும் நிகழ்த்திய ஓர் அரசரைக் கவிஞர் பாணர் மிகப் புகழ்ந்து உரைப்பதில் வியப்பில்லை.

போர்த்திட்டங்களுக்குப் படைத் தளபதிகளின் ஊக்கமும் முழு ஆதரவும் பெற்றுத் திகழும் பெரும் வாய்ப்பு ஹர்ஷருக்குக் கிட்டியது. சிம்ம நாடர் (Simha Nada) என்ற வயதில் முதிர்ந்த, தலை சிறந்த, தனேஸ்வரத்தின் அரசியல் வல்லுநரின் உதவியும் ஹர்ஷருக்குக் கிடைத்தது. சிம்ம நாடர் சிறந்த படைத் தளபதி யாகவும் விளங்கினார். சிம்மநாடர், ஹர்ஷரைப் பெரும்படை யெடுப்புத் திட்டங்களை மேற்கொள்ளுமாறு ஊக்குவித்தார். 'கௌடா அரசரை வீழ்த்துவதில் மட்டுமன்றி, வேறு எவரும் பின் பற்ற இயலாத அளவிற்குத்' திட்டங்கள் தீட்ட ஆர்வமளித்தார் ஹர்ஷரும் அதை ஏற்றுத் தம்முடைய போர், அமைதிப் பணி அமைச்சர்களுக்குக் கட்டளைகள் அனுப்புமாறு பணித்தார். வேற்று நாட்டு அரசர்கள், ஹர்ஷருக்குப் பணியும்படி அல்லது போரிடும்படி கட்டளையிடப்பட்டனர். படையின் மிக முக்கிய மான பகுதியாகிய யானைப் படையின் தளபதிக்குப் படையை விரைவாகத் திரட்டும்படி கட்டளையிடப்பட்டது.

மகத்தான இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஹர்ஷர் பெரும் வெற்றி பெற்றார். போரிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிரிகளின் அரசியல், போர் வலிமையைச் சரியாகக் கணித்தது போரின் வெற்றிக்கு ஒரு சிறப்பான காரணம் ஆகும் மேலும், சூழ்நிலைகளும் ஹர்ஷருக்கு வாய்ப்பாகக் காணப்பட்டன. துன்பம் மிக்க சூழ்நிலையில் நேர்ந்த ராஜ்ய வர்த்தனரின் இறப்பு கனோஜ் அரசைப் பொறுத்த வரை, ஹர்ஷருக்கு அனுதாபம் மிக்கச் சூழ் நிலையைத் தோற்றுவித்து உதவின. சசாங்கனின் கௌரவம் முற்றிலும் அழிந்திருந்தது. மேலும், சசாங்கனின் பக்கத்து நாட்டைச் சேர்ந்த பாஸ்கர வர்மர் தாமாக வலிய வந்து ஹர்ஷ ருக்கு உட்பட்டிருக்க ஒப்புக்கொண்டதும் ஹர்ஷருக்குக் கிடைத்த பெரியதொரு வாய்ப்பாகும். பாஸ்கர வர்மரின் நட்புக் கிடைத்த வேளையும், அவர் நாடு அமைந்திருந்த இடமும் சசாங்கனுக்கு எதிரான ஹர்ஷரின் முயற்சிகள் வெற்றி பெற உதவின எனலாம்.

ஹர்ஷ சரித்திரத்தின் ஏழாவது பகுதி வர்த்தனரின் கிழக்குப் படையெடுப்பை விளக்குகிறது. ஹர்ஷர் காமரூபத்தின் தூது வருக்குப் பேட்டியளித்த நிகழ்ச்சியும் குறிக்கப்பட்டுள்ளது.

அதற்குக் காமரூப அரசர் பாஸ்கர வர்மரின் 'குடைப் பரிசு என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. குடை, அரசர்களுக்கு உரிய சின்னமாகும். இந்தியப் பழக்க வழக்கங்களின்படி அரசனின் அந்தஸ்தையும் அதிகாரத்தையும் குடை குறிப்பாக உணர்த்தும். தலைமுறை வழி வந்த சொத்தாகவும், கதிரவனின் வெப்பத்திலிருந்து மக்களைக் காப்பதும், குளுமை அளிப்பதும் போன்ற பல சிறப்புகள் 'குடைக்கு' உரியது. முற்றிலுமாக அதை ஹர்ஷருக்குத் தானமளித்துவிடக் காமரூப அரசர் முடிவு செய்ததிலிருந்து, சசாங்கன், பாஸ்கரவர்மருக்கு எவ்வளவு பெரிய அபாயமாக விளங்கி இருக்க வேண்டும் என்பதும், அதைச் சமாளிக்க ஹர்ஷரின் நட்பு எவ்வளவு தேவையானது என பாஸ்கர வர்மர் நினைத்ததும் தெரிகிறது. பாஸ்கர வர்மர் அதற்காகத் தம் அந்தஸ்தையும் இழக்கத் தயாராக இருந்தார். ஹர்ஷருக்கும் அத் தருணத்தில் பாஸ்கர வர்மரின் நட்பும், உடன்படிக்கையும் இன்றியமையாதனவையாயிருந்தன. ஹர்ஷர் கொண்ட மகிழ்ச்சியையும், மனநிறைவையும் பாணர் இந் நிகழ்ச்சிகளை விளக்கும் சமயத்தில் குறிப்பிடுகிறார். பாஸ்கர வர்மர் ஹர்ஷரின் நட்பை நாடி அனுப்பிய தூதுவரிடம், 'உயர்ந்த எண்ணம் கொண்ட ஒருவரின் அன்பிற்கு என்னைப் போன்ற மனம் கொண்ட ஒருவர் எவ்வாறு கனவில்கூட விருப்பமின்மையைக் காட்ட முடியும்?' என ஹர்ஷர் கூறியதாக பாணர் குறிப்பிடுகிறார்.[1] பாஸ்கர வர்மரின் வேண்டுகோளை ஹர்ஷர் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்த தூதுவர், அது போன்று ஹர்ஷரின் துணையை நாட ஏற்பட்ட சூழ்நிலைகளையும் விளக்குகிறார். பாணர் தரும் இவ் விளக்கங்களில் கவிஞரின் உரிமை உணர்வுக் கருத்துகள் பிரதிபலிக்கக் காண்கிறோம். முழு உரிமையையும் ஈந்து கீழ்ப்படிய விருப்பமில்லாத நிலை ஹர்ஷருக்குக் கோபத்தை உண்டாக்கும் என்ற எண்ணத்தில் ஹம்சவேகர் (Hamsa Vega) என்ற தூதுவர் ஹர்ஷரை மிகப் புகழ்ந்தும், பாஸ்கர வர்மரின் நிலையைத் தாழ்த்தியும் கூறக் காண்கிறோம். 'ஒருவரை மற்றவர் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வமே, துன்பத்தைத் தரும் நினைவாக உள்ளது' என பாணர் கூறுகிறார்[2].

இவ்வாறு இருவராலும் பெரிதும் விரும்பி எதிர்பார்க்கப்பட்ட சந்திப்பு, சசாங்கனைத் தம் நாட்டிற்குத் திரும்பக் கட்டாயப் படுத்திய ஹர்ஷரின் கிழக்குப் படையெடுப்பு வெற்றிக்குப்பின் நடைபெற்றிருக்க வேண்டும். ஹர்ஷரும், வெற்றிபெற்ற பேரரசர்கள்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 221; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 218-19

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 221; மொழிபெயர்ப்பு-பக்கம் 219

நடந்துகொள்வதைப் போல, இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு பாஸ்கர வர்மரைக் காமரூபத்தின் அரசராக அரியணையில் முறைப்படி அமர்த்திஞர். அது போன்ற விழாக்கள் மிகச் சிறப்பானவை ஆம். ஏனெனில், சிற்றரசர் ஒரு பேரரசரின் மேலாண்மையை ஒப்புக்கொள்ளும் நிகழ்ச்சி, அச் சிற்றரசருக்குப் பேராசை மிக்க பக்கத்து நாட்டு அரசரிடமிருந்து தம்மைக் காப் பாற்றிக்கொண்டதன் நினைவு ஏற்படவும், அதே வேளையில் பேரரச ரின் பெருமையைச் சிறப்பிக்கவும் பயன்படும். காமரூபத்தின் அரசரைச் சிற்றரசர் நிலையை ஏற்கச் செய்தது ஹர்ஷரின் சாதனை களில் சிறப்பானது என பாணர் கூறுகிருர். குமாரர் என்று அழைக்கப்பட்ட பாஸ்கர வர்மரை அரியணையில் அமர்த்திய விழா சாதாரணமாக இந்தியாவில் பின்பற்றப்படும் அரசியல் வழக்க மாகும்.

காமரூபத்தின் அரசர் ஹர்ஷரின் மேலாண்மையை அத் தருணத்தில் ஒப்புக்கொள்ளவில்லை என R. C. மஜூம்தாரும், R. S. திரிபாதியும் கருதுகின்றனர். யுவான் சுவாங்கின் குறிப்பு களின்படி பாஸ்கர வர்மர் பிராமண குலத்தைச் சார்ந்தவர் எனவும், நாராயண தேவர் என்பவரின் பரம்பரையில் தோன்றிய வர் எனவும் தெரிகிறது. 1000 தலைமுறைகளுக்கு மேலாக அரசுரிமை வகித்து வரும் பெருமையை அக் குடும்பம் கொண்டிருந்தது.[1] ஆற்றல் மிக்க சசாங்கன், பாஸ்கர வர்மருக்குப் பெரும் இடையூருக விளங்கியதில் ஐயமில்லை. ஆகவே, காம ரூபத்தின் அரசர் ஹர்ஷரின் நட்பை[2] வலிய வேண்டிச் சென்ருர் எனக் கூறப்படுகிறது. R. K. முகர்ஜியின் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் காரணத்தைக் கூறுகையில் R. S, திரிபாதி, 'தாமாக வலிய விசுவாசத்துடன் இருக்க ஒப்புக்கொண்டார்' என்பது ஒரு சுயேச்சை வாய்ந்த அரசருக்குப் பொருத்தமானதா என வினவு கிருர். மேலும், பாணர் இவ் விடத்தில் குறிப்பது மாதவ குப்தராக இருக்க வேண்டும் எனவும் அப்ஸாடுக் குறிப்பை[3] அதற்குச் சான்ருகக் கொள்ளலாம் எனவும், பிற்காலத்தில்தான் காம ரூபத்தின் அரசர் ஹர்ஷரின் மேலாண்மையை ஒப்புக்கொண்டார் எனவும் R. S. திரிபாதி கூறுகிருர்.

எப்பொழுது பாஸ்கர வர்மர் ஹர்ஷருக்குப் பணிந்தார் என்பது பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவினுலும், காம

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 186
[2] R .S. திரிபாதி-History of Kanauj-பக்கம் 104
[3] C. I. I-iii-எண் 42

ரூபத்தின் அரசர் ஹர்ஷரின் மேலாண்மையை ஒப்புக்கொண்டார் என்பது ஐயத்திற்கு இடமின்றி விளங்குகிறது. ஹர்ஷரின் ஆற்றலும் புகழும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்தது. பாஸ்கர வர்மர் உள்நாட்டு நிருவாகத்தைப் பொறுத்த அளவில் உரிமைகள் உடையவராக விளங்கினார் என்பதும், ஹர்ஷரின் மாநில நிருவாக அமைப்பு முறைகளின் தன்மைப்படி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கட்டுப்பட்டு, பேரரசில் அங்கம் வகித்துத் திறை கட்டி வரும் மாநிலமாகவே காமரூபம் விளங்கியது என்பதும் தெளிவாக விளங்குகிறது. ஹர்ஷரின் ஆட்சியின் கடைசிக் காலத்தில் பாஸ்கர வர்மருக்கும் ஹர்ஷருக்கும் இடையே நடைபெற்ற ஒரு சுவையான நிகழ்ச்சியை யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷர் ஒரிஸா படையெடுப்பிலிருந்து திரும்பும் சமயம் யுவான் சுவாங் காமரூபத்தின் அரசர் பாஸ்கர வர்மரின் விருந்தினராக இருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டார்; தம்மைக் காண மறுத்த யுவான் சுவாங் தம்மை விடக் குறைந்த அந்தஸ்து பெற்ற பாஸ்கர வர்மரைச் சந்தித்ததால் வெகுண்டார். படையெடுப்புக் கூடாரத்திலிருந்து ஹர்ஷர், சீனப்பயணியை அங்கு அனுப்பி வைக்கும்படி, காமரூபத்திற்குத் தூதுவர் மூலம் செய்தி அனுப்பினார். 'என் தலையைப் பெற்றுக்கொள்ளலாம். கலைகள் கற்றுணர்ந்த அறிஞரை அல்ல' என்ற பதிலை பாஸ்கர வர்மர் ஹர்ஷருக்கு அனுப்பி வைத்தார். அதைத் தமக்கு இழைக்கப்பட்ட அவமானமாகக் கருதிய ஹர்ஷர், ' தலையை அனுப்பவும்; நான் உடனே அதைப் பெற வேண்டும்' என்று மறுமொழி அனுப்பினார்.[1] தம் தவற்றை உணர்ந்த பாஸ்கர வர்மர் உடனே ஹர்ஷர் தங்கியிருந்த கஜன்கலாவிற்கு அருகில் உள்ள ராஜ்மஹாலுக்கு அவரால் பெரிதும் விரும்பப்பட்ட பௌத்த அறிஞருடன் புறப்பட்டார். ராஜ்மஹாலில் ஹர்ஷர் பாஸ்கர வர்மரை ஏதும் நடந்திராதது போல வரவேற்றார். ஹர்ஷரின் பண்பாட்டிற்கு அந் நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டு எனக் கூறலாம். இதுவே ஹர்ஷரின் ஆளுமையைக் காமரூபத்தின் அரசர் ஏற்றுக்கொண்ட தருணம் என **R. S.** திரிபாதி கருதுகிறார்.

ஹர்ஷருக்கும், காமரூபத்தின் அரசரால் அனுப்பப்பட்ட ஹம்சவேகர் என்ற தூதுவருக்கும் கிழக்குப் படையெடுப்பை ஹர்ஷர் மேற்கொண்ட சமயத்தில் சந்திப்பு நிகழ்ந்தது. அப்பொழுது ஆரம்பித்த படையெடுப்பு இடைவிடாது தொடர்ந்தது எனலாம். தனேஸ்வரத்திலிருந்து கனோஜுக்குச் செல்லும் வழியில் ஹர்ஷர் பண்டியைச் சந்தித்தார். ராஜ்ய வர்த்தனரால் கைப்பற்றப்பட்ட மாளவ அரசரின் மொத்தப் படைகளுடன் பண்டி

1 **Life**-பக்கம் 172

திரும்பிக்கொண்டிருந்தார். ராஜ்ய வர்த்தனர் கைப்பற்றிய வற்றில் பெண்கள், யானைகள், குதிரைகள், நகைகள், அணிகலன்கள், அரசருக்கு உரிய பொருள்களான அரியணை, சாமரம், குடை முதலியவையும் அடங்கும். ராஜ்ய வர்த்தனரின் படையெடுப்பு, வெற்றி, அதன்பின் நடந்தவை அனைத்தையும் பண்டி ஹர்ஷருக்கு விளக்கிக் கூறினர். 'ராஜ்ய வர்த்தனர் மோட்சத்தை அடைந்தார். கன்யா-குப்ஜாவை குப்தர் என்ற பெயர் கொண்டவர் கைப்பற்றினர். அரசி ராஜ்யஸ்ரீ சிறையிலிருந்து தப்பித் தோழிகளுடன் விந்திய மலைப் பகுதிக்குச் சென்றார்[1]' என பண்டி தம் விளக்கத்தைக் கூறி முடித்ததாக பாணர் கூறுகிறார். மற்றோர் இடத்தில், 'கன்யா-குப்ஜாவிலிருந்து கௌடா தொல்லைகளின்பொழுது குப்தர் என்ற பெயர் கொண்ட பிரபுவினல் ராஜ்யஸ்ரீ சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு அனுப்பப் பட்டார்[2]' எனக் கூறுகிறார். இந்த இடத்திலும் 'குப்தர் என்ற பெயர் கொண்ட' என்று காணப்படுகிறது. அவை இரண்டும் வேறுபட்ட இரு மனிதர்களைக் குறிக்கும் எனக் கருதப்படுகிறது. மாளவத்தின் தேவகுப்தரும், சசாங்கனும் திட்டமிட்டுக் கன்யா-குப்ஜாவைத் தாக்க முற்பட்டனர் என்பதை நாம் அறிந்தோம். முதன்முதலாகக் கனோஜ் நகரைக் கைப்பற்றி, கிரகவர்மரைக் கொன்று ராஜ்யஸ்ரீயைச் சிறையில் அடைத்தவர் மாளவத்தின் தேவகுப்தர் என்பதில் எவ்விதக் குழப்பமும் இல்லை. இருப்பினும், மேலே முதலில் குறிப்பிட்ட பண்டியின் விளக்கத்தில் குறிக்கப்படும் குப்தர், சசாங்கனைக் குறிப்பதாகும். ஏனெனில், ராஜ்ய வர்த்தனரின் இறப்பிற்குப்பின் கனோஜ் சசாங்கனல் கைப்பற்றப் பட்டது. சசாங்கனுக்கு நரேந்திர குப்தர் என்று மற்றொரு பெயரும் உண்டு. அடுத்து 'கன்யா-குப்ஜாவிலிருந்து கௌடா தொல்லைகளின்பொழுது குப்தர் என்ற பெயர் கொண்ட பிரபுவினல்' என்று குறிக்கப்படும் குப்தர் யார் என்று சற்றுக் குழப்பமாகவே உள்ளது. இதற்குப் 'பிரபு' என்பது குலபுத்ரா என்ற பட்டத்தைக் கொண்ட சசாங்கனைக் குறிக்கும் எனக் கொண்டு ஆராய்ந்தால், சசாங்கன் தம்மை அரசர் என்று அறிவித்துக் கொண்டது தடையாக உள்ளது. ஆகவே, இங்கு குப்தர் என்று குறிக்கப்படுவது கனோஜ் அரசக் குடும்பப் பிரபுக்களில் ஒருவராக இருக்க வேண்டும். அல்லது சசாங்கனுடன் இருந்த நல் இதயம் கொண்ட ஒரு பிரபுவாக இருக்க வேண்டும். சசாங்கன் ராஜ்ய ஸ்ரீயைச் சிறையில் அடைத்துக் கொடுமை செய்வதைத் தவிர்க்க விரும்பி, அவர் ராஜ்யஸ்ரீயைத் தப்பச் செய்திருக்கக் கூடும். அல்லது

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 226; மொழிபெயர்ப்பு-பக்கம் 224

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 249; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 250-251

ராஜ்யவர்த்தனரைக் கொன்று கனோஜ் நகரைக் கைப்பற்றிய சசாங்கன், ஹர்ஷரின் கவனத்தை வேறு திசையில் திருப்ப ராஜ்யஸ்ரீயை விடுதலை செய்திருக்க வேண்டும்.[1] சசாங்கன் எதிர் பார்த்தபடியே ஹர்ஷர் தாமே தங்கையைத் தேடிச் சென்றார். ஆனால், காமரூப அரசர் ஹர்ஷருடன் கொண்ட நட்பும், ஹர்ஷரின் போர்த்திறனும் சசாங்கன் கனோஜ் நகரிலிருந்து வெளியேறித் தம் தலைநகர் செல்லக் காரணமாக அமைந்தன.

இச் சூழ்நிலையில் படைத்தலைமைப் பொறுப்பைப் பண்டியிடம் ஹர்ஷர் ஒப்படைத்தார். அதற்குப் பண்டியின் அறிவுரையே காரணமாக இருக்கக் கூடும். தங்கையைத் தேடும் முயற்சியைத் தாமே மேற்கொண்டார். இவ்வாறு செய்ய முடிவு செய்யப் பட்டதற்கு அரசியல் தேவைகளும், மனிதாபிமானம் மிக்க குடும்பப் பொறுப்பும் காரணமாகும். படைப் பொறுப்பைப் பண்டி ஏற்றதும் மிகவும் நன்மை பயக்கக்கூடிய ஒன்று எனக் கருதலாம். ஏனெனில், தங்கையைத் தேடுவதை விடுத்து ஹர்ஷர் கனோஜ் செல்லுதல் மிகவும் இக்கட்டானது ஆகும். தவிர, ஹர்ஷருக்குச் சார்பான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க, பண்டியின் முயற்சிகளுக்கு அது காலத்தையும் வாய்ப்பையும் அளிக்கும். மேலும், இறந்து பட்ட மௌகாரி அரசரின் மனைவியான ராஜ்யஸ்ரீயை ஹர்ஷர் மீட்டு வந்தால் கனோஜ் நாட்டில் அவருடைய மதிப்பு வளருவதற்கும் அது முக்கிய காரணமாக இருக்கும்.

வழக்கமாக எடுத்துக்கொள்வதற்கும் குறைவான நாள்களில், விரைவான குதிரைகளின் துணையினால், வெகு தூரத்திலிருக்கும் விந்தியந் மலைப்பகுதிகளை ஹர்ஷர் அடைந்தார். ஆரிய இனத்தைச் சாராத சபாராக்கள் என்ற குறுநிலத் தலைவர்கள் ஹர்ஷருக்கு உதவினர்; திவாகர மித்ரர்[2] என்ற பௌத்தத் துறவியின் மடத்திற்கு ஹர்ஷரை அழைத்துச் சென்றனர். திவாகர மித்ரரின் சீடர்களில் ஒருவர் ஹர்ஷரை ராஜ்யஸ்ரீயிடம் அழைத்துச் சென்றார். ராஜ்யஸ்ரீ வாழ்க்கையில் நேர்ந்த துன்பங்களைப் பொறுத்துக்கொள்ள இயலாத நிலையில் தீக்குளித்து உயிரை மாய்த்துக்கொள்ளவிருந்த தறுவாயில் ஹர்ஷர் தம் தங்கையைக் கண்டார். தக்க நேரத்தில் ஹர்ஷர் வந்து சேர்ந்தது ராஜ்யஸ்ரீயின் உயிரைக் காத்தது. அந் நிலையில் ர்ாஜ்யஸ்ரீ ஒரு பௌத்தத் துறவி

[1] History of Ancient India-R. S. திரிபாதி-பக்கம் 293-94

[2] திவாகர மித்ரர் ஒரு பௌத்தத் துறவியாக இருப்பினும், பல மதத்தைச் சேர்ந்தவர்களும் அவருடைய சீடர்களாக இருந்தனர். சமணர், வைணவர்களும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வந்த பல மதப் பிரிவினரும் அவருடைய மடத்தில் காணப்பட்டனர். ஹர்ஷ சரித்திரம்-மூலம்-236-37; மொழிபெயர்ப்பு-பக்கம் 236

யாக மாற விரும்பினர். கணவரை இழந்து, குழந்தையும் இல்லாத நிலையில் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவது பொருள் அற்றது என அவர் எண்ணினர். அந் நிலையில் ஹர்ஷருக்காக திவாகர மித்ரர் ராஜ்யஸ்ரீயைத் தேற்றி அறிவுரை வழங்கினர்; ஹர்ஷரின் வேண்டுகோளை ஏற்று நாட்டுக்குத் திரும்புமாறுக் கேட்டுக்கொண்டார்.

ஹர்ஷர் தாம் செய்து முடிக்க வேண்டியவை பற்றிக் குழப்ப மற்ற முடிவுகளைக் கொண்டிருந்தார்; திட்டமிட்டபடி திக் விஜயத்தை மேற்கொண்டு, தம் சகோதரரை நயவஞ்சமாகக் கொன்ற எதிரிகளை அழித்துத் தம் சபதத்தை நிறைவேற்றிப் பழி வாங்க விரும்பினர்;[1] தம் தந்தையின் மரணத்தால் கவலை கொண்டுள்ள மக்களுக்கு ஆறுதல் அளித்து,[2] சீரான நிருவாகத்தை ஏற்படுத்தி நல்லாட்சி நடத்த விரும்பினர்; அரசரின் வழக்கமான ராஜ்யப் பொறுப்புகளைக் கவனித்துக் கடமையை நிறைவேற்றுவதுடன், ராஜ்யஸ்ரீயும் தம்முடன் இருக்க வேண்டும் என விரும்பினர். தங்கைக்கு ஆறுதல் அளிக்க ஹர்ஷர் விரும்பினர். பௌத்தக் கருத்துகளை ராஜ்யஸ்ரீ விரும்பிக் கற்கட்டும் என ஹர்ஷர் வேண்டிக்கொள்வதைக் காண்கிறோம். ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப்பின் கஜன்கலாவில் ஹர்ஷர் தங்கியிருந்த சமயம் ஒருநாள் யுவான் சுவாங் ஹர்ஷரின் அரசவையில் பௌத்தக் கருத்துகளை விளக்கினர். அப்பொழுது ராஜ்யஸ்ரீ ஹர்ஷருக்குப் பின் அமர்ந்திருந்ததாக யுவான் சுவாங் குறிப்பிடுகிறர். ஹர்ஷர் ஒரிஸாப் படையெடுப்பை மேற்கொண்டு திரும்பிய வழியில் கஜன் கலாவில் சிறிது காலம் தங்கியிருந்தார். ராஜ்யஸ்ரீ அங்கிருந்தார் என யுவான் சுவாங் குறிப்பிடுவதிலிருந்து ஹர்ஷர் தம்முடன் ராஜ்யஸ்ரீயை அழைத்துச் செல்வது வழக்கம் எனத் தெரிகிறது. ஹர்ஷர் அரசு நிருவாகப் பொறுப்புகளை விதவையான தம் தங்கையுடன் இணைந்து நிறைவேற்றினர் என ஃபேங்ஷி (Fang-chih) குறிப்பிடுகிறது.[3] ஃபேங்ஷி தரும் தகவல் உண்மையானதாக இருப்பின், ஹர்ஷரின் குணநலனை விளக்குவதற்கு மிகப் பயன்படும் ஆதாரமாக அது விளங்கும் எனலாம். ஹர்ஷர் தம் தங்கை பௌத்தத் துறவியாக மாறுவதைத் தடுக்க வேண்டும் என்ற உணர்ச்சி வசப்பட்ட நிலை மட்டுமன்றி, எதிர்காலத் தேவைகளையும் ஓரளவிற்கு உணர்ந்தே தங்கையைத் தம்முடன் அழைத்து வர முடிவு செய்திருக்க வேண்டும் எனக் கூறலாம். ஹர்ஷரின் ஆட்சியின் ஆரம்பத்தில் மௌகாரி அரசியான ராஜ்யஸ்ரீ

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 256; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 257-8
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 256; மொழிபெயர்ப்பு-பக்கம் 258
[3] வாட்டர்ஸ்-I-பக்கம் 345

ஹர்ஷருடன் சேர்ந்தே காணப்பட்டது, கனோஜ் அரசை ஹர்ஷர் கைப்பற்றிக்கொண்டார் என்ற பழி வராமலும், கனோஜ் மக்களின் வெறுப்புத் தோன்றுமலிருந்ததற்கும் சிறப்பான காரணம் எனலாம். அதன் பயனுக மௌகாரிகளுக்கு உரிய அரியணையை ஹர்ஷர் தம்முடையதாக ஆக்கிக்கொண்டாலும், மக்கள் ஹர்ஷரை விரும்பி ஏற்றுக்கொண்டனர். பிற்காலத்தில் ராஜ்யஸ்ரீ அவையில் தம் சகோதரருடன் காணப்படுவது சாதாரண வழக்க மாகி விட்டது எனலாம். ராஜ்யஸ்ரீயின் சிறந்த அறிவாற்றல், பல வகைகளில் ஹர்ஷருக்குச் சிறந்த துணையாக இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. கூட்டு அரசு என்ற கொள்கையை எவரும் ஏற்றுக்கொள்ளத் தயங்கினுலும், மேற்கூறிய கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதில் ஐயமில்லை.

ஹர்ஷர் ராஜ்யஸ்ரீயை விந்திய மலைப் பகுதிகளிலிருந்து மீட்டு, கங்கைக்கரையை ஒட்டிக் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த தம் படைகள் இருந்த இடத்திற்கு அழைத்து வந்தார். பாணரின் விளக்கங்கள் இவ்விடத்தில் முடிவடைகின்றன. அதன்பின் ஹர்ஷரும் ராஜ்யஸ்ரீயும் கனோஜ் நகர் சென்றிருக்க வேண்டும். சசாங்கன் ஏற்கெனவே கனோஜ் நகரிலிருந்து வெளியேறித் தம் நாட்டிற்குச் சென்றுர் என்பதை முன்பே கண்டோம். ஆகவே, நிரப்பப் படாதிருக்கும் கனோஜ் அரியணைக்குப் புதிய வாரிசை நியமிக்கும் தேவை ஏற்பட்டது. பாணரின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷர் அரசு பொறுப்பை ஏற்க மிகவும் தயங்கினுர் எனக் கண்டோம்.[1] பாணர் அங்குக் குறித்த விளக்கம் தனேஸ்வரத்தைப் பற்றியது என்றுலும், கனோஜ் அரசு பொறுப்பை ஏற்றலும் அதைவிடச் சிக்கல் நிறைந்தது என்பது நாம் அறிந்ததே.

கனோஜ் வரலாறு

யுவான் சுவாங் கனோகுஷி (Kano-ku-she) எனப் பெயரிட்டு அழைக்கும் கன்யா-குப்ஜா என்பது கனோஜைக் குறிப்பது ஆகும். அத் தலைநகரின் மேற்குப் புறத்தில் கங்கை ஆறு ஓடியது. நகரம் நான்கு மைல் (20லி) நீளமும் ஒரு மைல் அகலமும் கொண்டது. நகரம் மிகவும் பாதுகாக்கப்பட்டிருந்தது. எங்கும் பெரிய கட்டடங்கள் காணப்பட்டன. நகரம் அழகிய தோட்டங்களையும், தூய நீர் கொண்ட ஏரிகளையும் கொண்டிருந்தது. நகர மக்கள் செல்வந்தர்களாக வசதி மிக்க வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். கனி வகைகளும், பூக்களும் மிகுந்து இருந்தன. மக்களின் தோற்றம் கண்ணியம் மிக்கதாகக் காணப்பட்டது. பளபளப்புள்ள பட்டு

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 70; மொழிபெயர்ப்பு-பக்கம் 57

ஆடைகளை அணிந்திருந்தனர். கலைகளை நன்கு கற்று வல்லவர்களாக விளங்கினர். கனோஜ் நகரத்தையும், அதன் மக்களையும் பற்றிய இக் குறிப்புகளை நாம் யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காண முடிகிறது. மேலும், அவர் ஹர்ஷர் காலத்தில் அங்குக் காணப்பட்ட பௌத்த மடங்களைப் பற்றியும் குறித்துள்ளார், ஏறக்குறைய நூறு பௌத்த மடங்களில் பத்தாயிரம் துறவிகளும் மாணவர்களும் (ஹீனயானம், மஹாயானம் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள்) பயின்றனர். இருநூறுக்கும் அதிகமான கோயில்கள் (Deva Temples) இருந்தன. பல ஆயிரக்கணக்கான மக்கள் பௌத்த மதத்தைச் சாராதவர்களாயிருந்தனர். கனோஜ் நகரத்திற்குக் கன்யா-குப்ஜா என்ற பெயரே சரியானது என்ற கருத்துக்கொண்டிருந்த யுவான் சுவாங் கனோயீ(Ka-nao-yi) என்ற பெயரும் மக்களிடையே பழக்கத்தில் இருந்ததாகக் கூறுகிறார். கன்யா-குப்ஜா என்ற பெயர் தோன்றக் காரணமாயிருந்த பழங் கதை ஒன்றையும் குறிப்பிடுகிறார். கன்யா-குப்ஜா என்ற அச் சொல்லுக்குக் கூன் விழுந்த பெண்களின் நகரம் (City of Hunch-backed Maidens)[1] என்ற பெயர் பொருளாகிறது.

ஒரு காலத்தில் பிரம்ம தத்தர் என்பவர் அந் நாட்டை ஆண்டு வந்தார். மக்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்ந்தனர். அச் சமயம் அந் நகரத்திற்குக் குஷுமபுரம் என்பது பெயர். (மலர் அரண்மனை அல்லது மலர் நகரம்.) பிரம்ம தத்தர் சிறந்த போர் வீரராகவும், வலிமை மிக்க அரசராகவும் விளங்கினார். அவருக்கு ஆயிரம் பிள்ளைகளும், நற்பண்புடைய அழகிய நூறு பெண்களும் இருந்தனர். அக் காலத்தில் கங்கை நதிக்கரையில் ஒரு ரிஷி நெடுங்காலமாகத் தவம் செய்து வந்தார். அவருக்குப் பெரிய மர ரிஷி (Great Tree Rishi) என்ற சிறப்புப் பெயர் உண்டு. ஏனெனில், பறவை எச்சமிட்ட ஓர் ஆலம் விதை அவர்மீது விழுந்து வேர் பூட்டு வளர்ந்து மரமாகி, அதில் பறவைகள் கூடு கட்டி வாழ்ந்த நிலையிலும் அவர் தவ நிலையில் ஆழ்ந்திருந்தார். தவம் முடிந்து கண் விழித்தபோது, நதிக்கரையில் அரசருடைய குமாரிகள் ஒருவரை யொருவர் ஓடிப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தனர். அவர் உடல் இச்சைகளால் உந்தப்பட்டு, அவர்களுள் ஒருத்தியை மணம் முடித்துத் தருமாறு மன்னரைக் கட்டாயப்படுத்தினார். ஆனால், இளவரசிகள் யாரும் ரிஷியை மணம் புரிந்துகொள்ள மறுத்தனர். மன்னருக்கு அச்சமும் துன்பமும் உண்டாயிற்று. இந் நிலையில் ரிஷியின் கோபத்திலிருந்து அரசரையும், நாட்டையும் காக்க இளவரசிகளில் ஒருத்தி ரிஷியை மணக்க ஒப்புக்கொண்டாள்.

[1] ஜவஹர்லால் நேரு எழுதிய Glimpses of World History-அத்தியாயம் 43-பக்கம் 124

இச் செய்திகள் ரிஷிக்குத் தெரிய வந்த நிலையில், தம்மை இளவரசிகள் புரிந்துகொள்ளாததால் வெகுண்டு, அவர்களுக்குக் கூன் ஏற்படுமாறு சாபமிட்டார். சாபத்தின் விளைவாக தொன்னூற்று ஒன்பது அரச குமாரிகளுக்கும் கூன் விழுந்தது. ஆகவே, அந் நாட்டின் தலைநகருக்கு அதுவே பெயராயிற்று.

இதே கதையைப் பிராமணர்கள் ரிஷியை வாயு பகவானுடன் தொடர்பு படுத்திக் கடவுளின் இச்சைக்குப் பணிய மறுத்த பெண்களைக் கூனர்களாகச் சபித்ததாகவும் கூறுவர்.

மேலும், யுவான் சுவாங் 'கனோஜ் அரசரை'ப் பற்றிக் கீழ்க் காணும் விளக்கத்தைத் தருகிறார்: 'கனோஜ் அரசர் ஹர்ஷ வர்த்தனர் வைசிய சாதியைச் சேர்ந்தவர். பிரபாகர வர்த்தனர் இறந்தவுடன் ராஜ்ய வர்த்தனர் அரசரானார். அவர் கர்ன சுவர்ண அரசர் சசாங்கனால் வஞ்சகமாகக் கொலை செய்யப் பட்டார். முக்கிய மனிதரான பாணி (Bani) அல்லது வாணி (Vani), ராஜ்ய வர்த்தனரின் தம்பியை அரசராகும்படி அழைத்தார். ஆனால், வேண்டுகோளை ஏற்று அரசராகும் விருப்பம் ஹர்ஷருக்கு இல்லை. மறுபடியும் அமைச்சர்கள் ஹர்ஷரை அமைச்ச ராகும்படி வேண்டிக்கொண்டனர். ஹர்ஷர் போதி சத்துவரின் அறிவுரையைப் பெற விரும்பினார். கனோஜ் அரசராதல் 'நல்ல கர்மம்' (Good Karma) என்ற பதில் கிடைத்தது. கர்ன சுவர்ண அரசரால் நலிவுறும் பௌத்தத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என ஹர்ஷருக்குப் போதி சத்துவம் கட்டளையிட்டது. பேரரசு ஏற்படும் என்றும் அது கூறியது. மேலும், ஹர்ஷருக்கு இரகசியமாக உதவப் போதி சத்துவம் முன் வந்தாலும், ஹர்ஷர் உண்மையில் அரியணை ஏறி மகாராஜா என்ற பட்டத்தை ஏற்கக் கூடாது என எச்சரித்தது. ஆகவே, ஹர்ஷர் ராஜபுத்திரர்களின் பாணியில் கனோஜ் ராஜாவாகி, சீலாதித்யர் என்ற பட்டம் பெற்றார்' என யுவான் சுவாங் விளக்குகிறார்.

வரலாற்று ஆசிரியர்கள் கருதுவது போலப் 'பாணி அல்லது வாணி ராஜ்ய வர்த்தனரின் தம்பியை அரசராகும்படி அழைத் தார். ஆனால், வேண்டுகோளை ஏற்று அரசராகும் விருப்பம் ஹர்ஷ ருக்கு இல்லை' என்பது கனோஜ் அரசைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். ஏனெனில், தனேஸ்வரத்திற்கு அரசராகும்படி ஹர்ஷரைப் பாணி கேட்டுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இல்லை. அரசப் பொறுப்பை ஏற்கும் உரிமை ராஜ்ய வர்த்தனர் இறந்ததுமே ஹர்ஷருக்கு வந்து சேருகிறது. ஆகவே, வேண்டுகோளை மறுப்பதற்குக் காரணங்கள் இல்லை. ஆனால், அது கனோஜ் சூழ் நிலைக்குப் பொருந்துகிறது. மௌகாரி அரசர் கிரகவர்மர் இறந்த

வுடன் ஹர்ஷரை அரசராகும்படி பண்டி வேண்டிக்கொண்டார். ஹர்ஷரைப் புதிய அரசராக ஏற்றுக்கொள்ளும்படி தனேஸ்வரப் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொள்ளத் தேவையில்லை. ஆகவே, கனோஜ் அரசவைப் பிரதிநிதிகளைத்தான் பண்டி அவ்விதம் வேண்டிக் கொண்டார் எனக் கருத வேண்டும். ஹர்ஷர் வேண்டுகோளை ஏற்கத் தயங்கியது இயல்பானதே ஆகும். மௌகாரிகளுக்கு உரிய ஒன்றைத் தாம் ஏற்பது சிக்கல்கள் உள்ளது என்பது தெரிந்ததே. ஆகவே, போதி சத்துவ அறிவுரைப்படி ஹர்ஷர் ராஜ்யஸ்ரீக்குச் சார்பாக ஆண்டார் என்பதே பொருந்தும்.

யுவான் சுவாங் குறிப்பிடுவதற்கும், மேலே குறிப்பிட்டவற்றிற்கும் இடையே உள்ள குழப்பத்திற்குக் காரணம் யுவான் சுவாங் வர்த்தனர்களைக் கனோஜ் அரசக் குடும்பமாகக் கருதி விட்டதே ஆகும். தனேஸ்வரத்தைப் பற்றிய யுவான் சுவாங்கின் குறிப்புகளில் வர்த்தனர்கள் பற்றிக் கூறப்படவில்லை. ஆகவே, மேலே குறிப்பிட்ட விளக்கங்கள் எந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தும் என்பதை நாமே முடிவு செய்துகொள்வதே நலம். மேலும், யுவான் சுவாங் போணி (Po-ni) எனக் குறிப்பது பண்டியை அல்ல[1] என்றும் கருதப்படுகிறது. அப்பெயரில் காணும் ஒற்றுமையால் அம்முடிவிற்கு வருதல் தவறு. போணி என்பது ஒரு கனோஜ் அரசவைப் பிரதிநிதியைக் குறிக்கும் என R. S. திரிபாதி கருதுகிறார்.

கனோஜ் வாரிசுச் சிக்கலில் ஹர்ஷர் மிகத் திறமையுடன் நடந்துகொண்டார் என்பது தெளிவாக விளங்குகிறது. அதற்கு போணி (Po-ni) அல்லது வாணி அல்லது பண்டியின் உதவியும் பங்கும் சிறப்பானது. ஹர்ஷரின் ஆற்றலும் புகழும் பல மடங்கு உயர அது முக்கியக் காரணமாகும். படிப்படியாக மேலும் பல படையெடுப்புகளை ஹர்ஷர் மேற்கொண்டார். வட இந்தியாவின் பெரும்பகுதி அவருடைய கட்டுப்பாட்டில் இருப்பினும், அரசை மேலும் விரிவுபடுத்த ஹர்ஷர் ஆட்சிக்கால இறுதி வரை தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். வெல்லப்பட்ட பகுதிகளின் பெரும்பகுதிகள் ஹர்ஷரின் நேரடி நிருவாகத்தில் இருந்தன. சற்று ஆற்றல் மிக்க நாடுகள், ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு பேரரசின் ஓர் அங்கமாக விளங்கியது எனலாம்.

[1] R. S. Tripathi-History of Kanauj-பக்கம் 75-அடிக்குறிப்பு-1

4. ஹர்ஷர் மேற்கொண்ட படையெடுப்புகள்

திக் விஜயம்

பல இந்திய அரசர்கள் விரும்பியோ அல்லது மேலும் வேறு பகுதிகளை வெல்லும் வழியின்றியோ தங்களுடைய கட்டுப்பாட்டில் விடப்பட்ட பகுதிகளில் நிருவாகத்தைச் சீராக்கும் முயற்சியில் ஈடு பட்டு மனநிறைவு கொண்டனர். ஆனால், புதிதாக அரியணை ஏறிய ஓர் அரசரிடம் எவ்வளவு பெரிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பு அவருக்கு உரியதாக இருப்பினும், மேலும் நாட்டை இயற்கையான எல்லைகள் வரை விரிவுபடுத்த வேண்டும் என்ற ஆர்வம் பொது வாகக் காணப்பட்டது. பெரும்பாலான அரசர்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் புவியியல் அடிப்படையில் அவர்களுக்கென வாய்த்த பகுதியை ஆட்சி செய்து வந்தனர். இருப்பினும், சிலர் தங்களுடைய அரசியல் செல்வாக்கை அதிகரித்துக்கொண்டு, நாட்டின் எல்லையை இயற்கையான எல்லைகளைக் கடந்து மத்திய ஆசியாவிலும் ஆதிக்கத்தைப் பரப்பினர். அவர்களில் சோழர்களின் ஆற்றல் மிக்க கப்பற்படை ஸ்ரீவிஜயாவைத் தாக்கி வென்றது வரலாற்றில் தனிச்சிறப்புள்ள நிகழ்ச்சியாகும். ஸ்ரீவிஜயா என்பது மலேயாவையும், இந்தோனேசியாவையும் குறிக்கும். கடல் கடந்து தங்களுடைய ஆதிக்கத்தைப் பரப்பியவர்கள் என்ற முறையில் இந்தியாவிற்கு இருக்கும் ஒரே வரலாற்றுச் சிறப்பு சோழர்களின் சாதனையாகும்.

ஹர்ஷர் திக் விஜயம் மேற்கொள்ளக் காரணம்

ஹர்ஷரைப் பொறுத்தவரை மகாராஜாதி ராஜ என்ற அரசர் களுக்கு அரசர் பட்டத்திற்குரிய தகுதி பெறுவது, பெருமளவில் படையெடுப்புகளை மேற்கொண்டு வெற்றி பெறுவதன் மூலமாக முடியும் என்ற கருத்துக்கொண்டிருந்தார். ஹர்ஷர் கி.பி. 606ஆம் ஆண்டு அரசப் பொறுப்பு ஏற்ற சமயம் கிழக்குப் பஞ்சாபிலுள்ள ஒரு சிறிய அரசு மட்டுமே அவருக்கு உட்பட்டிருந்தது. பிரபாகர வர்த்தனரால் வெல்லப்பட்டவர்கள் எனக் கூறப்படும் அண்டை நாட்டு அரசர்கள் ஹர்ஷரின் அரசைச் சுற்றிலும் சற்று அச்சம் கலந்த மரியாதையுடன் காணப்பட்டனர். ஹர்ஷர் பதவி ஏற்ற வுடன், பெருமளவிற்குப் படையெடுப்பு முயற்சிகளை மேற்

கொள்ளப் பேரரசராக ஆக வேண்டும் என்ற அவரது விருப்பமும், படைத்தளபதிகளின் சீரிய அறிவுரைகளும், ஊக்கமும் மட்டுமே காரணங்களாக அமைந்து விடவில்லை. வர்த்தன மௌகாரி அரசக் குடும்பங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கும், அநீதிகளுக்கும் பழி வாங்கி அக் குடும்பங்களின் சிறப்பை நிலை நிறுத்துவது என்ற உணர்ச்சி வசப்பட்ட குறிக்கோள்களும் அடிப்படைக் காரணங்களாக அமைந்து விட்டன எனலாம்.

கனோஜ் அரசு வர்த்தனர் கட்டுப்பாட்டில் வந்த சமயத்தில் ஹர்ஷர் தம் தலைநகரைக் கனோஜுக்கு மாற்றிக்கொண்டார். படை ஆற்றல் மேலும் பல மடங்கு அதிகமாக்கப்பட்டது. சீலாதித்யர் என்ற பட்டம் பெற்ற ஹர்ஷர் கிழக்கு நோக்கிப் படையெடுத்தார்; கௌடாவிற்கும் கனோஜ் அரசிற்கும் இடைப்பட்ட பகுதிகளை வென்றார். பாணர் ஹர்ஷ சரித்திரத்தின் இறுதிப் பகுதியில் சசாங்கனின் திட்டங்களை அழித்து, குழப்பத்தில் ஆழ்த்திய ஹர்ஷரின் கடும் போர்களைச் சூரிய அஸ்தமன உவமைகளுடன் விளக்குகிறார். எதிர்காலம் என்ற தேவதை ஹர்ஷருக்குத் தூதுவரை அனுப்பி, ஏழு கடல்களையும் வெல்ல ஊக்கமளித்தது என பாணர் கூறுகிறார்.[1] சசாங்கன் தோற்கடிக்கப்பட்டு, 'தம் நாட்டை விட்டு வெளியே செல்லவொட்டாது' தடுக்கப்பட்டார். ஹர்ஷர், மிலேச்சர்(Mlechchha)களின் நாட்டில் பெருமைகளைப் பெற்றுத் திரும்பினார் என ஆரிய மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் குறிக்கப் பட்டுள்ளது.[2] ஹர்ஷர் கனோஜ் நகரிலிருந்து புறப்பட்டு, வழியில் அமைந்திருந்த அரசுகளை ஆட்சி செலுத்தி வந்த சிற்றரசர்களை வென்று உட்படுத்தி, அவர்களின் விசுவாசத்தைப் பெற்றபின் கௌடாவை அடைந்து சசாங்கனைப் போர்க்களத்தில் தோற்கடித்தார். தம்முடைய படை ஆற்றலின் மூலம் பகைவர்களை வீழ்த்துதல் மூலமாக மட்டுமே ஹர்ஷரின் குறிக்கோள் நிறைவு பெற்றுவிடவில்லை. இரண்டு படைகளும் போர்க்களத்தில் சந்தித்துப் போரிட்டது பௌத்தக் கருத்துகளுக்கும் பொருத்தமான ஒன்றாக ஆக்கப்படுவதைக் காண்கிறோம். உயிர்களைக் கொல்லுதல் பௌத்தக் கருத்துகளுக்கு முரண்பட்டதாயினும், ஹர்ஷர் போர் செய்து வெற்றி பெற வேண்டியதன் தேவையை அவை உணர்த்துகின்றன. அன்பு கொண்ட உள்ளத்துடன், மத நீதிகளுக்குக் கட்டுப்பட்ட, கற்றுத் தேர்ந்தவராக இருப்பினும், க்ஷத்திரியர்களுக்கே உரிய கடமையைச் செய்வதும் தமக்கு இழைக்கப்பட்ட தீங்கினால் கோபமுற்று, ஆக்கிரமிப்புச் செய்யும் அற்பப்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 258; மொழிபெயர்ப்பு-பக்கம் 260
[2] மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-725-26 அடிகள்

பிராணிகளைக் கொல்லுதல், புனிதமான கடமையை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக் கருதப்படும்.[1]

யுவான் சுவாங்கினல் குறிக்கப்பட்டிருக்கும் ஹர்ஷரின் ஆரம்ப காலப் படையெடுப்பு நிகழ்ச்சிகளும் வெற்றிகளும், பாணர் எழுதியிருப்பவையும், மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் கூறப்பட்டிருப்பவையும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. யுவான் சுவாங்கின் குறிப்புகளின்படி சீலாதித்யர் அரசப் பொறுப்பு ஏற்றவுடன் ஒரு பெரிய படையைத் திரட்டிக்கொண்டு, தம் சகோதரர் வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டதற்குப் பழி வாங்கவும், ஏனைய நாடுகளை வென்று தம்முடைய கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் எண்ணத்தை நிறைவேற்றவும் போரில் ஈடுபட்டார்; கிழக்கு நோக்கிப் படையுடன் அணி வகுத்துச் சென்ற சமயம் தமக்குக் கட்டுப்பட்டு விசுவாசமாக இருக்க மறுத்த நாடுகளைத் தாக்கினர்; மேலும் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் போரில் ஈடுபட்டு 'ஐந்து இந்தியா'வையும் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்.

ஹர்ஷரின் திக் விஜயப் படையெடுப்பில் முதல் கட்டமாகக் கௌடாவின்மீது படையெடுக்க வேண்டிய சூழ்நிலைகளையும், தேவைகளையும் நாம் ஏற்கெனவே அறிந்ததே. அக் கிழக்குப் படையெடுப்பின் மற்ற நிகழ்ச்சிகளை விளக்குவதற்கு முன் யுவான் சுவாங் பயன்படுத்தியுள்ள 'ஐந்து இந்தியா' என்பதன் பொருளைப் பற்றிச் சற்று ஆராயலாம்:

இந்தியாவின் பூகோள அடிப்படையில் பகுதிகளைக் குறிப்பாக உணர்த்துவதற்கு 'ஐந்து இந்தியா' என்று யுவான் சுவாங் இந்தியாவைப்பற்றிய குறிப்பிலும், கனோஜ், மகாராஷ்டிர நாட்டுப் பொதுவான விளக்கத்திலும் குறைந்தது மூன்று முறைகள் பயன் படுத்தியுள்ளார். அச் சொல்லை யுவான் சுவாங் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கிற்கு உட்பட்டுப் பயன்படுத்தாததால், சற்றுக் குழப்பம் விளைகிறது எனலாம். இந்தியாவைப் பற்றிய பொதுவான குறிப்புகளில் இந்தியத் துணைக்கண்டத்தை விளக்க 'ஐந்து இந்தியா' என யுவான் சுவாங் பயன்படுத்தி இருக்கிறார். இந்து (Indu) என்ற சொல் குறிக்கும் நாடுகள் பொதுவாக 'ஐந்து இந்தியா' எனக் கூறப்படுகின்றன. அந் நாட்டின் மூன்று பகுதிகளும் கடலால் சூழப் பட்டிருக்கின்றன. வடக்குப் பகுதியில் பனி படர்ந்த மலை அதற்கு எல்லையாக விளங்குகிறது என யுவான் சுவாங் இந்தியாவைப் பற்றிய பொதுவான விளக்கத்தில் குறிப்பிடுகிறார். மகாராஷ்டிர,

[1] மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-723-4

கனோஜ் நாட்டு விளக்கக் குறிப்புகளில் ஹர்ஷரின் கட்டுப்பாட்டிலிருந்த இந்தியத் துணைக்கண்டத்தின் வட பகுதிகளை மட்டும் குறிப்பதற்கு அதைப் பயன்படுத்துகிறார்.

யுவான் சுவாங் குறித்துள்ளதைப் போன்றே ஏனைய சீனத்துப் பயணிகளும் இந்தியாவை ஐந்து சிறப்பான பகுதிகளாகவே பிரித்துக் கண்டனர் என வாட்டர்ஸ் கூறுகிறார். வடக்கு, கிழக்கு, மேற்கு, மத்திய, தெற்குப் பகுதிகள் என இந்தியா ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்படுவதைக் காண்கிறோம்.[1] இந்தியச் சான்றுகளிலும், புராணங்களிலும்[2] இது போன்ற பிரிவுகள் காணப்படுகின்றன. புவன கோசா(Bhuvana Kosha)வில் மத்திய தேசம் (Madhya Desa), யுதிச்சா (Udichya), பிரச்யா (Prachya), தக்ஷிணபாதம் (Dakshinapatha), அபராந்தா (Apranta) என இந்தியா ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சில வேளைகளில் இமயமும் விந்தியமலைப் பகுதிகளும் இப் பட்டியலில் சேர்த்துக் காணப்படுகின்றன. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ராஜசேகராவின் காவிய மீமாம்சா(Kavya Mimamsa)வில் பூர்வதேசம் (Purvadesa), தக்ஷிணபாதம் (Dakshinapatha), பாஸத் தேசம் (Paschad Desa), உத்தரபாதம் (Uttarapatha) என்ற பிரிவுகள் காணப்படுகின்றன. பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சக்தி சங்கமா (Sakti Sangama) என்ற தந்திரக் கதை நூலும் இந்தியாவை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கின்றது. அவை ஒரு தந்திரக் கலைஞர் கண்ணோக்கில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, யுவான் சுவாங் ஐந்து இந்தியா என்பதன் மூலமாக மொத்த இந்தியாவையும் குறிப்பிடுகிறார் என்பது விளங்கும். ஐந்து இந்தியாவும் ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனக் காணப்படும் இடத்தில் அது எதைக் குறிக்கிறது என்பது குழப்பமாகவே உள்ளது. அலங்காரச் சொல் வழக்கைப் பின்பற்றி யுவான் சுவாங் அவ்வாறு குறித்திருக்கக் கூடும். அல்லது குறிப்புகளை எழுதித் துணை புரிந்தவரின் எழுத்துப் பிழையாக இருக்கக் கூடும்.

ஹர்ஷர் கனோஜ் அரசப் பொறுப்பு ஏற்ற ஆறு ஆண்டுகளுக்குள் அவர் ஐந்து இந்தியாவையும் தம் படை ஆற்றலால் வென்றார்.

[1] இட்சிங், இந்தியாவை மேற்கு (West), இந்தியரின் ஐந்து நாடுகள் (Five Countries of India), ஆரிய தேசம் (Arya Desa), மத்திய தேசம் (Madhya Desa), பிரம்மராஷ்டிரம் (Brahmarashtra) எனப் பிரித்திருப்பதைக் காணலாம். A Record of the Buddhist Religious-மொழிபெயர்ப்பு-தககாகசு (Takakasu)-பக்கம் II. பாஹியான்-Record of Buddhist Kingdoms-மொழிபெயர்ப்பு-J. லெகி (J. Legge)-பக்கம் 42-மத்திய அரசு அல்லது மத்திய தேசம்(Madhya Desa) எனக் குறிப்பிட்டுள்ளார்.

[2] இந்தியச் சான்றுகள் பற்றிய செய்திகள் D. C. சர்கார் எழுதியுள்ள Geography of Ancient and Medieval India என்ற நூலிலிருந்து அறியப்படுகின்றன. பக்கம் 73

புலிகேசி என்ற மகாராஷ்டிர அரசருடன் போரிட 'ஐந்து இந்தியா' வின் படைகளையும் சேகரித்தார் என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். ஆனால், புலிகேசியை வெல்லும் ஹர்ஷரின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஐந்து இந்தியா என்பதற்கு மாறாக 'ஐந்து கௌடா' என ஒரு சீன மூலநூல் குறிப்பிடுவதாகக் கௌரி சங்கர் சட்டர்ஜி தம்முடைய ஹர்ஷ வர்த்தன என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். 'ஐந்து கௌடா' என்பது இவ்விடத்திற்கு மிக அழகாகப் பொருந்துகிறது. விந்திய மலைக்குத் தெற்கே உள்ள பகுதியாகிய தக்ஷிணபாதம் என்ற பகுதியைக் குறிக்கத் திராவிடம் என்ற சொல் வழங்குவதைப் போன்று வடக்கே உத்தரபாதம் என்ற பகுதியைக் குறிக்கக் கௌடா என்ற சொல் வழங்கியது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. இவ் விடத்தில் சப்த கல்பதுரும (Subda-kalpa-druma) ஸ்கந்த புராணத்தில் இருந்து மேற்கோள் காட்டியுள்ள இரண்டு செய்யுள்களைக் குறிப்பிடலாம். அவற்றில் வடக்கு, தெற்கு இந்தியப் பகுதிகளிலிருந்து வந்த ஐந்து பிரிவு பிராமணர்களை முறையே பஞ்ச கௌடா (Pancha Gauda), பஞ்ச திராவிடா (Pancha Dravida) என்ற அணியில் விளங்கினர் எனக் கூறப்பட்டுள்ளது. அதில் பஞ்ச கௌடா என்று குறிக்கப் பட்ட அணியின் ஐந்து பிரிவுகள் சரஸ்வதா (Sarasvata-கிழக்கு பஞ்சாப்), கன்யா-குப்ஜா, கௌடா, மிதிலா, உத்கலா முதலியன ஆகும். கி.பி. 926ஆம் ஆண்டுக் குறிப்பு ஒன்றில் ஒரு பஞ்ச கௌடா (Pancha Gauda) சமூகத்தைப் பற்றிய விளக்கம் காணப் படுகிறது. அதில் அக்கால வழக்கப்படி மிகைப்படுத்திக் கூறும் வகையில், கி.பி. பதினோராம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மாளவத்தின் அரசரான போஜரின் (Bhoja) ஆட்சிக்குக் கௌடாவும், தக்ஷிணபாதமும் உட்பட்டிருந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குக் 'கௌடா' என்பது 'வட இந்தியா முழுவதும்' என்ற பொருளை உணர்த்தும் நோக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.[1] ஓர் அரசர் உத்தரபாதம் அல்லது தக்ஷிணபாதத்தின் பகுதிகளை வென்று, தம் ஆட்சிக்கு உட்படுத்தினால் ஏறக்குறைய சக்கரவர்த்தி என்றபட்டத்திற்குத் தகுதி பெறுகிறார் என்பது இங்குக் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. சிற்றரசர்கள் தங்கள் குடும்ப வழக்கப்படி உயர்வாகப் புகழ் படுத்திக்கொள்ளும் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்துக் குறிக்கப்பட்ட பகுதிகளையும், அவற்றை ஆண்ட அரசர்களின் பட்டங்களையும் ஆராய்ந்து பார்க்கும் சமயத்தில், பொதுவாக வடக்கு அல்லது தெற்குப் பகுதிகளை இந்தியத் துணைக் கண்டத்தின் நான்கு புறத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லைகள் வரை வென்றவர்களை மட்டுமே சக்கரவர்த்தி என்ற பட்டத்துடன்

1 D.H.N.I-ii-பக்கம் 858

குறிப்பது வழக்கம் என அறியலாம். அது போன்ற அரசர்கள் மட்டுமே உண்மையிலேயே வடக்குப் பகுதி அல்லது விந்தியத்திற்குத் தெற்கே உள்ள பகுதிகளுக்கு அரசர்களாக விளங்கினர்.

இந்தியாவின் நான்கு எல்லை வரையிலும் ஆட்சியை நிலை பெறச் செய்ய வேண்டும் என்பது அக்கால அரசர்களின் குறிக்கோளாக இருப்பினும், அதை நிறைவேற்றப் பல இன்னல்கள் தோன்றி வடபுலம் அல்லது தென்புலத்திற்கு மட்டுமே வலிமை மிக்க அரசராகும் நிலை தோன்றியது. 'சாதவாகன அரசர்கள் மூன்று கடல்களிலிருந்து பெற்ற நீரைக் குடித்து வந்ததாகப் பெருமையுடன் அறிவிக்கின்றன.'[1] பதாமி(Badami)யின் சாளுக்கியர்களும் மூன்று கடல்கள் வரையுள்ள பரப்பில் ஆதிக்கம் செலுத்தினர் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[2] ஹர்ஷரை 'உத்தரபாதம் முழுவதிற்கும் அரசர்' எனப் புலிகேசி குறிப்பிட்டு உள்ளார். அவர் ஹர்ஷரை அப்படி புகழ்ந்திருப்பதன் மூலமாக, அப்படி ஒரு பெரிய அரசர் தம்மை வெல்ல முடியவில்லை என்பதை உணர்த்தப் பயன்படுவதுடன், தம்மைத் தென்புலத் தலைவர் என அறிவித்துக்கொண்டதைப் போன்று காணப்படுகிறது.

'ஐந்து கௌடா'[3]வின் ஒரு பகுதியாகிய உத்கலாவை வெல்லுவதற்கு முன்பே யுவான் சுவாங் ஐந்து கௌடாவிற்கும் தம் அதிகாரத்தை நிலை நாட்டினுர் எனக் குறிப்பிடுகிறுர். இதற்கு யுவான் சுவாங் வரலாற்றைச் சரியாகக் குறிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தம் குறிப்புகளை எழுதவில்லை என்ற காரணத்தை விடையாகத் தரலாம். பௌத்த மதத்தைப்பற்றி அறிந்துகொள்ளவே யுவான் சுவாங் இந்தியாவில் பயணம் செய்தார். தவிர, ஹர்ஷர் புலிகேசியைத் தாக்கும் சமயத்தில் வட இந்தியா முழுவதையும் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தும் படையெடுப்பை மேற்கொண்டு வெற்றி பெற்றிருந்தார். ஹர்ஷரின் ஒரிஸா வெற்றிக்குப் பின்னரே யுவான் சுவாங் இந்தியாவிலிருந்து புறப்பட்டுத் தாயகம் திரும்பினுர். ஆகவே, யுவான் சுவாங் குறிப்புகள் தவறு எனக் கூற இயலாது. ஆனுல், வெற்றிகளை அடைந்ததற்குப் பல காலத்திற்கு முன்பே அதைப் பெற்று விட்டதாகக் குறிப்பிட்டு விட்டார்.

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 251; மொழிபெயர்ப்பு-பக்கம் 252; சாதவாகன அரசர்கள் மூன்று கடல்களையும் ஆண்டனர் என பாணர் கூறுகிறுர்.

[2] E. I. XIX-64 ff

[3] யுவான் சுவாங்கின் மகாராஷ்டிர, கனோஜ் விளக்கங்களில் காணப்படும் 'ஐந்து இந்தியா' என்ற சொற்களுக்குப் 'பஞ்ச கௌடா' என்ற பொருத்தமான தொடரை ஏற்றுக்கொண்ட அடிப்படையில் இது பயன்படுத்தப்படுகிறது

யுவான் சுவாங்கின் மகாரஷ்டிர, கனேஜ் குறிப்புகளில் உள்ள படி 'ஐந்து இந்தியா' என்றே நாம் எடுத்துக்கொண்டால், அதைக் கற்பனைச் சொல் அலங்காரத் தொடர் என்று முடிவு செய்யலாம். ஹர்ஷரைச் 'சக்கரவர்த்தி' என விளக்குவதற்காக அப்படிக் கூறி யிருக்க வேண்டும். 'ஐந்து இந்தியா' என்பதன் மூலமாக உணர்த்தப் படும் பொருளை மிக நன்றாக யுவான் சுவாங் அறிந்திருந்தாலும், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஹர்ஷருக்கு உட்பட்டிருந்தது என்ற பெருமையை அளிக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரண மாக அப்படிக் கூறியிருக்கலாம்.

சசாங்கனுல் ராஜ்ய வர்த்தனர் கொலை செய்யப்பட்டதற்குப் பழி வாங்க ஹர்ஷர் மேற்கொண்ட கிழக்குப் படையெடுப்பின் சமயத்தில் வென்ற பகுதிகளைப் பற்றிய பெயர்களை யுவான் சுவாங் குறிப்பிடவில்லை. அவை அநேகமாக யுவான் சுவாங் கனேஜ் நகரி லிருந்து வங்காளத்திற்குப் பயணம் செய்தபோது சென்ற நாடு களாகவே இருக்க வேண்டும். அப் பயணத்தில் யுவான் சுவாங் கீழ்க்காணும் வரிசைப்படி பல நாடுகளுக்குச் சென்றுர்: அயோத்யா, ஹயமுகா, பிரயாகை, கொசாம்பி, விசோகா, ஸ்ராவஸ்தி, கபில வஸ்து, ராம கிராமம், குசீநகரம், வாரணுசி, சாஞ்சூ (Chanchu) வைசாலி, விர்ஜி, மகதம், இராணபர்வதம், சம்பா, கஜன்கலா. இந் நாடுகளின் அரசியல் அந்தஸ்து பற்றி யுவான் சுவாங் எதுவும் கூறவில்லை. கபிலவஸ்து போன்ற ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் விளக்கம் கூறப்பட்டிருக்கிறது. இருப்பினும், அவற்றை ஆண்ட அரசர்களின் பெயர்கள் கொடுக்கப்படாத நிலையில் அப் பகுதிகள் ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருந்தன எனவும், அரசரின் பெயர் கொடுக்கப்பட்ட இடங்கள் மறைமுகமாக ஹர்ஷருக்குக் கட்டுப்பட்டிருந்தன எனவும் கொள்ளலாம்.

அழிந்துகொண்டிருந்த 'கபிலவஸ்து'வில் ஒவ்வொரு நகரத் திற்கும் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததைத் தவிர, அதற்கென அரசர் யாரும் இல்லை. அவ் விடங்களில் குடியரசு போன்ற அரசு நிலவி வந்ததை புத்தரின் புனித பூமி என்ற காரணத்தால் ஹர்ஷர் அனுமதித்திருக்க வேண்டும். மேலும், வெகு காலமாக அங்கு நீடித்து வந்த அதிகாரம் பிரித்துக் கொடுக்கப்பட்ட தனி ஆட்சி மரபை மாற்ற ஹர்ஷர் விரும்பவில்லை.

மகதம்

'அசோகரின் கடைசி வழித் தோன்றலான' பூர்ணவர்மர் மகதத்தை ஆட்சி புரிந்து வந்தார் எனக் கூறப்படுகிறது. ஆனல் பூர்ணவர்மர் மௌரிய வழித் தோன்றல் என்பதைவிட மௌகாரிக்

குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதே பொருந்தும். இந்தப் பிரச்சினையை, ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக வணங்கப்பட்டுப் பின் வேற்று மதத்தினரால் நாசப்படுத்தப்பட்டும் நிலைத்து நின்ற புனித போதி மரத்தைப் பற்றிய யுவான் சுவாங்கின் விளக்கத்தை ஏற்றுக் கொள்வதாக இருப்பின், எளிதாகத் தீர்த்து வைக்கலாம். சசாங்க ராஜா காலத்தில் பௌத்த மதம் இழி நிலைக்குள்ளாகியது. பௌத்த மடங்கள் நாசப்படுத்தப்பட்டன. புனித போதி மரம் வெட்டி வீழ்த்தப்பட்டது. அதற்குச் சில மாதங்களுக்குப் பின் 'அசோக ராஜாவின் கடைசி வழித் தோன்றலான' மகதத்தின் அரசர் பூர்ண வர்மர், போதி மரத்தின் அடிகளைப் புனித நீராட்டி நட்டு மறு படியும் தழைக்கச் செய்தார்'[1] என அவர் குறித்துள்ளார். புனித போதி மரம் அடிக்கடி வெட்டப்பட்டு, ஊறு விளைவிக்கப்பட்டு, பின் அரசர்களின் சீரிய முயற்சியினால் தழைத்தது. இதற்குப் பல சான்றுகள் உள்ளன. அசோக ராஜா தம் காலத்தில் போதி மரத் தைத் தழைக்கச் செய்து வழிபாடு செய்து போற்றினார். அப்படிப் புனித போதி மரத்தைப் போற்றியவர்கள் வரிசையில் கடைசியாக மகதத்தின் பூர்ண வர்மரை யுவான் சுவாங் கருதியிருக்கலாம். மேலும், பூர்ண வர்மர் மௌகாரிக் குடும்பத்தைச் சேர்ந்தவர் எனக் கூறப்பட்டதை மௌரியர் எனப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். இது போன்று ஏற்பட்டிருக்கக் கூடும் எனக் கருதுவதற்குக் காரணம், அக் காலப் பேச்சு வழக்கில் மௌகாரிகா (Maukharika) என்ற அப் பெயரைக் கடைசியில் உள்ள 'கா'விற்குக் கொடுக்கும் அழுத்தத் தைக் குறைத்து மொகாரியா (Mohariya) எனக் குறிப்பிட்டனர் என்பதும், அங்கு வாழ்ந்தவர்களை மேலும் மொகாரி (Mohari) எனக் குறித்தனர் என்பதும் ஆகும்.

ஹர்ஷர் கனோஜ் பொறுப்பை ஏற்றவுடன், மௌகாரிக் குடும் பத்தைச் சேர்ந்த பூர்ண வர்மரை அமைதிப்படுத்தி மகதத்தின் ஆளுநராக நியமித்தார். பூர்ண வர்மர் மௌகாரி சுவா(Suva) வின் வழித்தோன்றலாகவும் இருக்கக் கூடும். நாளந்தாவில் கண்டு பிடிக்கப்பட்ட முத்திரை அதற்குச் சான்று ஆகும். சசாங்கன் கனோஜ் நகரிலிருந்தும், பின் மகதத்திலிருந்தும் பின் வாங்கி, கௌடாவிற்குத் திரும்பிய நிலையில் பூர்ண வர்மர் மகதத்தைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். ஆனால், சசாங்கனின் ஆற்றல் வீழ்ச்சிக்குப்பின் ஹர்ஷரின் ஆதிக்கம் வளர்ந்தது. ஆகவே, ஹர்ஷரின் மேலதிகாரத்தைப் பூர்ண வர்மர் ஏற்றுக்கொண்டி ருக்க வேண்டும். ஹர்ஷர் தாம் வென்ற நாட்டு அரசர்களைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ள அனுமதித்து

[1] பீல்-ii-பக்கம் 118

வந்ததைக் காண முடிகிறது. அப்படியிருக்க, மௌகாரிகளிட மிருந்து கனோஜ் அரசைத் தாமே ஏற்றுக்கொண்ட நிலையில் பூர்ண வர்மரை அரசப் பொறுப்பிலிருந்து நீக்கவோ, தொந்தரவு செய்வதோ சாதாரணமாக நடக்கக்கூடியது அல்ல எனலாம். பல சீனத்தூதுவர்கள் சீலாதித்யரை மகதத்தின் அரசர் எனக் குறிப்பிட்டிருப்பதால், மகதத்தின் ஆட்சியை ஹார்ஷர் தம் ஆட்சியின் இறுதியில் தாமே ஏற்றுக்கொண்டார் எனக் கருத இயலாது. ஆனல், அது போன்ற நிலை கி.பி. 637ஆம் ஆண்டிற்குப் பிறகு தோன்ற ஆரம்பித்தன என்பதற்குக் கீழ்க்காணும் காரணங் களைத் தரலாம்: சசாங்கனை ஹார்ஷர் புந்ரவர்த்தன (Pundra-vardhana) என்ற இடத்தில் போரிட்டு வென்றதாக மஞ்சு ஸ்ரீ மூல கல்பா[1] கூறுகிறது. புந்ரவர்த்தனவிற்கு ஹார்ஷர் மகதத்தைக் கடந்துதான் சென்றிருக்க முடியும். ஆகவே, திக் விஜயத்தின் சமயம் மகதம் ஹார்ஷருக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இது ஹார்ஷரின் ஆட்சியின் ஆரம்பக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். கஜன்கலாவில் அரசவையை நடத்தவும் ஹார்ஷர் மகதத்தைக் கடந்தே சென்றிருக்க வேண்டும். மேலும், ஹார்ஷர் மகதத்தில் அமைந்திருந்த நாளந்தாவில் ஒரு வெண்கல விஹார(Vihara)த்தை அமைத்தார் எனவும் கூறப் படுகிறது. இவ் விரண்டு நிகழ்ச்சிகளும் அநேகமாகப் பூர்ண வர்மர் இறந்தபின் நடைபெற்றிருக்க வேண்டும். பூர்ண வர்மர் கி.பி. 637-ல் இறந்தார். யுவான் சுவாங் நாளந்தாப் பல்கலைக் கழகத் திற்கு அந்தச் சமயந்தான் சென்றார்; அப்பொழுது அங்குள்ள ஒரு சிலையைப்பற்றி அது பூர்ண வர்ம ராஜாவின் கடைசிக் காலத்தில் அமைக்கப்பட்டது எனக் குறித்துள்ளார்.

மகதம், கபிலவஸ்து என்ற இரண்டிலும் தவிர, கனோஜ், புந்ர வர்த்தனவிற்கு இடையில் வேறு எந்தப் பகுதியிலும் ஆட்சி யாளர்கள் இருந்ததாகக் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, அப் பகுதிகள் அனைத்தும் கனோஜ் நகரில் உள்ள ஹார்ஷரின் மத்திய அரசு நிருவாக அதிகாரிகளின் பொறுப்பில் இருந்தது. அவை ஹார்ஷரின் அரசு பகுதிகளாக விளங்கின என்பதற்குப் புதைபொருள் சான்றுகள் உள்ளன. ஃபிஸாத்பாது (Fyzadbad) மாவட்டத்தி லுள்ள பிதாவ்ரா (Bhitaura) என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சீலாதித்யரின் காசுகள், அயோத்தியா ஹார்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதற்குச் சான்றாகும் என R. பர்ன் (Burn) கருதுகிறார். பிரயாகையில் ஹார்ஷர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பல பௌத்தப் பேரவைகளை நடத்தியதாக யுவான் சுவாங்

1 மஞ்சு ஸ்ரீ மூல கல்பா-723ஆம் அடி

குறிப்பிடுகிறார். ஆறுவது பேரவையில் சீனத்துப் பயணி கலந்து கொண்டார். அதிலிருந்து பிரயாகை ஹர்ஷ வர்த்தனரின் அரசில் ஒரு பகுதியாக விளங்கியது என்பது தெளிவாகிறது. மதுபான் செப்பேடுகள் சிரஸ்வஸ்தி(Srasvasti)யில் கண்டெடுக்கப்பட்டன. ஆகையால், அப் பகுதி வர்த்தன அரசின் அங்கமாக விளங்கியது எனலாம். மதுபான் செப்பேடு அந் நகரத்தில் நிலத்தை ஹர்ஷர் கொடையளித்ததாகத் தெரிவிக்கிறது. இராணபர்வதத்(Irana Parvata)தின் அரசரைப் பதவியிலிருந்து இறக்கியவர் பக்கத்து நாட்டு அரசர் என ஹர்ஷரைத்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. அதற்குத் 'தலைநகரைப் பௌத்தத் துறவிகளுக்கு அளித்து இரண்டு பெரிய மடங்களையும் கட்டி முடித்தார்,'[1] என்ற சொற்றொடரே காரணமாகிறது. இச் சொற்றொடர் ஹர்ஷரையன்றி வேறு அரசரைக் குறிக்கும் எனக் கொள்ள இயலாது. கிழக்கு இந்தியாவில் முன்னேறும் சமயம் கஜன்கலாவில் ஹர்ஷர் தற்காலிகமாகத், தங்கி இருந்து பலவித அரசாங்க அலுவல்களைக் கவனித்தார் என்பதிலிருந்து அப் பகுதியும் ஹர்ஷரின் கட்டுப்பாட்டில் இருந்திருக்க வேண்டும் என அறிகிறோம்.

கஜன்கலாவிற்கு அப்பால் மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவில் குறிப்பிட்டுள்ளபடி ஹர்ஷருக்கும் சசாங்கனுக்கும் போர் நடைபெற்ற இடமான புந்ரவர்த்தன இருக்கிறது. இப் போரில் ஹர்ஷர் வெற்றி பெற்றதால், வட இந்தியாவின் ஆற்றல் மிக்க அரசராக விளங்கினார். இப் போர் கி.பி. 606-7ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்றிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இப் போரில் சசாங்கன் தோல்வி அடைந்தாலும் வங்காளத்தில் தம் ஆட்சியைத் தமக்கெனக் காப்பாற்றிக்கொண்டார். அந் நிலையில் அவர் இரு புறமும் எதிரிகளின் அச்சத்தில் அரசு புரிய நேர்ந்தது எனலாம். மேற்கே ஹர்ஷரும், கிழக்கே ஹர்ஷரின் துணைநாடான காமரூபத்தின் அரசர் பாஸ்கர வர்மரும் சசாங்கனின் நாட்டை விரிவுபடுத்தும் திட்டத்திற்குப் பெரும் தடைகளாக விளங்கினர். தென்கிழக்கு ஒரிஸாப் பகுதியிலும் சசாங்கனின் ஆதிக்க வளர்ச்சி சிறப்பானதாக இல்லை. கி.பி. 620-ல் சசாங்கன் இறந்ததாகக் கருதப்படுகிறது. சசாங்கனுக்குப் பின் அரசு வலுவிழந்தது. பிரிவுபட்டுக் கிடந்த அவ் வரசை ஹர்ஷர் தம் அரசுடன் இணைத்துக்கொண்டார்.

கனோஜ் நகரிலிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்ட ஹர்ஷரின் திக் விஜயத்தின் முதல் கட்டம் புந்ரவர்த்தனப் போரில் கிடைத்த வெற்றியுடன் முடிவடைந்தது. அப் படையெடுப்பினால் ஹர்ஷர்

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 178

சசாங்கனை வென்றதோடு மட்டுமன்றி, அவர் சென்ற வழியில் அமைந்திருந்த நாடுகளை ஆண்ட பல சிற்றரசர்களை வென்று அவர்களது விசுவாசத்தையும் பெற முடிந்தது. சசாங்கனின் கொடுமைகளைக் கண்டு அஞ்சி, ஹர்ஷரின் ஆற்றலைக் கண்டு வியந்த கிழக்குப் பகுதிச் சிற்றரசர்கள் ஹர்ஷர் தம் பணியை நிறைவேற்றும் பொருட்டுத் தங்களுடைய பகுதியைக் கடந்து செல்ல அனுமதி அளிக்க முன் வந்தனர்; படையெடுப்பின் குறிக்கோளைப் பூர்த்தி செய்து திரும்பி வரும் சமயம் ஹர்ஷருடன் விரும்பி நட்புப் பூண்டுக் கீழ்ப்படிந்தனர். கிழக்குக் கங்கைச் சமவெளியின் ஆட்சிப் பொறுப்பு மிகக் குறுகிய காலத்தில் மௌகாரிகளிடமிருந்து சசாங்கனிடம் சென்று, பின் ஹர்ஷரிடம் வந்து அடைந்தது. புந்ரவர்த்தனுவிலிருந்து கனோஜ் திரும்பும்போது ஹர்ஷர் அளவற்ற புகழைப் பெற்றுத் திகழ்ந்தார். 'ஐந்து கௌடா'க்களைக் கைப்பற்றும் குறிக்கோளில் கனோஜ் அரசுக்கு மேற்கே அமைந்துள்ள பகுதிகளை வெல்லுவதற்குரிய முயற்சியை மேற்கொள்வதே ஹர்ஷரின் அடுத்த நடவடிக்கையாயிருந்தது. சட்லஜ் ஆற்றிற்கும், கங்கைக்கும் இடைப்பட்ட பகுதிகள் ஹர்ஷர் தம் தந்தை வழியில் பெற்ற தனேஸ்வரத்தின் அரசு உரிமைக்கு உட்பட்ட ஒரு பகுதியாகும். ஆனால், தேவ குப்தர், சசாங்கனின் நடவடிக்கைகளின் விளைவாக அங்கு வர்த்தன அரசர்களின் புகழ் குன்றிக் காணப்பட்டது. மௌகாரி அரசரைக் கொன்ற மாளவத்தின் அரசர் தேவ குப்தரை ராஜ்ய வர்த்தனர் போரில் வென்று பழி வாங்கினாலும், ஹர்ஷர் சசாங்கனை வென்று பெரும் வெற்றிச் சிறப்புகளைப் பெற்றாலும் மேற்குத் திசையில் ஓர் ஆய்வு அணி வகுப்பு மிகத் தேவையானதாகவே கருதப்பட்டது. அப்பொழுதுதான் அப் பகுதிகளில் இருந்த சாமந்தாக்களின்[1] மீது ஹர்ஷர் தம் அதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்ளவும், பகை உணர்வு உள்ளவர்களை ஒழிக்கவும், அதற்கு அப்பால் அமைந்திருக்கும் வெல்லப்படாத பகுதிகளின் மீது அதிகாரத்தை வளர்த்துக்கொள்ளவும் எளிதாகும்.

கனோஜ் நகருக்கு மேற்கே அமைந்திருந்த 'அரசு'களின் பட்டியல் யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காணப்படுகின்றன.

கபிதா-(இன்றைய சங்கிசா-Sankisa)

பிலோஷன்ன (Pi-lo-shan-na)-(இன்றைய அத்ரான்ஜி-கிர (Atranji-khera)

[1] சாமந்தாக்களைப் பற்றிய விளக்கம்-ஹர்ஷரின் நிருவாகம் என்ற பகுதி காண்க.

அகிசிச்சட்ரா (Ahichchhatra)-(இன்றைய கிழக்கு ரோஹில் கண்டு)

கோவிஸனு (Govisana)-(காசிப்பூருக்குச் சமீபம்)

பிரமபுரா (Brahmapura)-(ஹரித்துவாரத்திற்கு வடகிழக்கு மலைப்பகுதியில் உள்ளது.)

மதிபுரா (Mathipura)-(இன்றைய மடவார் - Madawar)

ஸ்ருக்னு (Srughna)-(இன்றைய சுஹ் (Sugh) தனேஸ்வரம், மதுரா

பாரியாத்ரா-(வடக்கு ஜெய்பூர்)

சதத்ரு (Satadru)-(இன்றைய சிர்கிண்ட் (Sirhind)

குலுதா (Kuluta)-(இன்றைய குல்லு)

ஜலந்தரா, சைனு புக்தி (China Bhukti)-(கிழக்குப் பஞ்சாபில் உள்ளது.)

தக்கா (மேற்குப் பஞ்சாப்) என்பவை முக்கியமான பகுதிகளாகும்.

இவற்றைத் தவிர, வேறு 'அரசு'கள் இருந்திருப்பின், அவை வட இந்தியாவில் ஆட்சி புரிந்த வேறு அரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. சீனப்பயணி மேலே குறித்துள்ள பகுதிகளின் வழியாக ஹர்ஷர் தம் ஆய்வு அணிவகுப்பை மேற்கொண்டு தம் ஆட்சியை நிலை நிறுத்தினுர் எனலாம். மேலே குறிப்பிட்ட பகுதிகளின் பெயர்களில் பல இன்றும் நிலைத்து வழக்கில் உள்ளன.

மதிபுரா

மேலே குறிப்பிடப்பட்டவையில் ஒன்றுன மதிபுரா என்ற பகுதி இன்றைய மடவார் என A. கன்னிங்ஹாம் குறிப்பிடுகிருர். மேலும், அது மண்டவார் (Mandawar) என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. அது மேற்கு ரோஹில்கண்டில் பிஜ்னூருக்கு அருகில் உள்ளது. மதிபுராவைச் சூத்ர குல அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். பௌத்த மதத்தில் அவருக்குப் பற்று கிடையாது; தேவர்களை (இந்து தெய்வங்கள்) வழிபட்டு வந்தார்.

மதுரா

மதுராவைப் பௌத்த மதத்தைச் சேர்ந்த ஓர் அரசர் ஆட்சி புரிந்து வந்தார். அவரும் அமைச்சர்களும் பௌத்த மதப் பணிகளுக்குத் தங்களை அர்ப்பணித்தனர். கனேஜ், தனேஸ்வர அரசுகளுக்கு மிக அருகில் மதிபுராவும், மதுராவும் அமைந்திருந்ததால், அவற்றின் அரசர்கள் ஹர்ஷருக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருந்திருக்க வேண்டும்.

பாரியாத்ரா

வடக்கு ராஜஸ்தானில் அமைந்திருந்த பாரியாத்ரா வைசியர் ஒருவரால் ஆளப்பட்டு வந்தது. வீரமும் சுறுசுறுப்பும் மிக்க போரில் விருப்பம் உடைய அரசர் ஒருவர் அதை ஆண்டார். ஆகவே, அவர் ஹர்ஷருக்குப் பெயரளவில் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்திருக்க வேண்டும். பாரியாத்ராவைப் பற்றிய விளக்கம் ஹர்ஷ சரித்திரத்திலும் காணப்படுகிறது. ஹர்ஷரின் ஆட்சியின் ஆரம்பக்காலத்தில் பாரியாத்ராவை வெல்ல வேண்டும் என்று அவருக்குத் தளபதிகள் ஆலோசனை கூறினார்கள். ஆனால், ஹர்ஷர் பாரியாத்ராவைத் தம்முடைய ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் தாக்கவில்லை. வலபிக்குச் செல்லும் வழியில் உள்ள மேற்கு மத்தியப் பகுதிகளை ஹர்ஷர் கைப்பற்றிய சமயத்தில் பாரியாத்ராவும் ஹர்ஷருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், அது ஹர்ஷரின் நேரடியான ஆட்சிக்கு உட்பட்டிருக்கவில்லை.

ஜலந்தரா

யுவான் சுவாங் ஜலந்தராவைப் பற்றி எழுதியுள்ள குறிப்புகளில், 'ஹர்ஷர் காலத்திற்கு முன் அதைப் பௌத்த மதத்திற்கு மாறிய ஒருவர் ஆட்சி செய்தார்' எனக் காணப்படுகிறது. மேலும் மத்திய இந்தியாவின் அரசர், அவரை ஐந்து இந்தியாவின் மதத் துறை அலுவல்களின் (மூன்று இரத்தினங்கள்-Three Gems) ஒரே ஆய்வாளராக (Inspector) நியமித்தார் எனச் சீனப்பயணி குறிப்பிட்டுள்ளார். ஜலந்தராவை ஆண்ட அந்த அரசர், யுவான் சுவாங் ஊடி (Wu-ti) என அழைக்கும் உதித்தா அல்லது புத்தி (Buddhi) என்பவராவர். 'மத்திய இந்தியாவின் அரசர் ஹர்ஷர், யுவான் சுவாங் தாய்நாட்டிற்குச் செல்லும் சமயம் இந்திய எல்லை வரை உதித்தாவை உடன் செல்லுமாறு பணித்தார்' என 'லைப்' கூறுகிறது. 'முன் ஆண்ட அரசர்' என யுவான் சுவாங் ஊடியைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். சீனப்பயணி விஜயம் செய்த சமயத்தில் ஐந்து இந்தியாவின் மதப்பணிகளுக்கு உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த உதித்தா முன்பு ஜலந்தராவை ஆண்ட அரசராக இருக்க வேண்டும்.

பிரமபுரா

அலெக் நந்தா, கர்னலி ஆறுகளுக்கிடையே, மலைப் பாங்கான பகுதியில் பிரமபுரா அமைந்துள்ளது. அப் பகுதி வெகு காலமாகப் பெண்களால் ஆளப்பட்டு வந்தது; தனேஸ்வரத்திற்கு மிக அருகில் அமைந்திருந்ததால் ஹர்ஷருக்கு உட்பட்டிருந்தது.

இவற்றைத் தவிர, ஏனைய அரசுகளின் அரசியல் அந்தஸ்தை யுவான் சுவாங் தம் பயணக் குறிப்புகளில் குறிப்பிடவில்லை. அவை சந்தேகத்திற்கு இடமின்றி ஹர்ஷரின் நேரடிக் கட்டுப் பாட்டில் நிருவகிக்கப்பட்டன. தவிர, தக்கா, குலுதா என்ற இரு நாடுகளும் நெடுந்தொலைவில் அமைந்திருந்ததால், ஹர்ஷரின் மேலதிகாரத்தை ஏற்றுக்கொண்ட நிலையில் நிருவாகப் பொறுப்பு களை உள்நாட்டு ஆட்சியாளர்களே மேற்கொண்டிருந்தனர்.

யுவான் சுவாங் தம் பயணக் குறிப்புகளில் தக்கா என்பது ஒரு பெரிய நாடு எனக் குறிப்பிடுகிறார். பியாஸ் நதியிலிருந்து இந்து நதி வரை பரவி உள்ள பகுதியே தக்கா என அழைக்கப் படுகிறது. தனேஸ்வரத்திற்கும் காஷ்மீருக்கும் இடையே அது அமைந்திருப்பதால், தக்கா ஹர்ஷரின் மேலதிகாரத்திற்கு உட் பட்டே இருந்திருக்க வேண்டும். ஏனெனில், காஷ்மீரமே ஹர்ஷரின் ஆற்றல் மிக்க படையினால் தன் சிறப்பை இழக்க நேர்ந்தது. மேலும், யுவான் சுவாங் தம் பயண அனுபவங்களை விளக்கும் சமயத்தில் நூல்களைப் பகுதிகளாகப் பிரித்த விதம் மேலே கூறிய கருத்திற்கு ஆதாரமாகப் பயன்படுகிறது. சீனப்பயணி வடமேற்குப் பகுதிகளிலுள்ள எட்டு சிறிய அரசுகளைப் பற்றித் தம்முடைய மூன்றாவது நூலில் விளக்குகிறார்; தக்காவை, அடுத்த புதிய நூலில் விளக்குகிறார். அது பற்றி வாட்டர்ஸ் குறிப்பிடு கையில் 'தக்கா இந்தியாவில் இருந்த ஓர் அரசாகக் குறிக்கப் படவில்லை' எனக் கூறுகிறார். அதிலிருந்து அவர் உணர்த்த விழைவது தக்கா ஹர்ஷரது ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இல்லை என்பதாகும். மேலும், தக்கா ஓர் அயல் நாட்டின் பகுதியாகை யால், அதன் விளக்கம் பயணியின் கடைசி சூஅ(Chuan)னில் பொதுவான விளக்கத்துடன் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகிறார். அதே காரணத்தைக்கொண்டுதான் ஹர்ஷர் தக்காவுடன் மிக நெருங்கிய நேரடித் தொடர்பு கொண்டிருந்தார் எனக் குறிப்பிடவில்லை. தக்கா ஹர்ஷரின் ஆளுமையை ஒப்புக் கொண்டிருப்பினும் அது உள்நாட்டு நிருவாக உரிமையுடனேயே விளங்கிற்று.

மேற்குப் பகுதியில் ஹர்ஷர் மேற்கொண்ட ஆய்வுப் படை யெடுப்பு வர்த்தனர்களின் அதிகாரத்தை நிலைநிறுத்த உதவியது. மேலும், அதிக ஆர்வமும் ஆற்றலும் பெற வேண்டும் என்ற ஆர்வத் தால் உந்தப்பட்டுப் புதிய படையெடுப்புகளை மேற்கொண்டு நான்கு பகுதிகளையும் வெல்வது என்ற 'திக் விஜயம்' முடிந்தது எனக் கருதலாம். ஹர்ஷர் ஐந்து இந்தியாவை வெல்லும் முயற்சியில் இடைவிடாது போர் செய்தார் எனக் கிழக்கு, மற்றும்

மேற்குப்படையெடுப்பு நிகழ்ச்சிகளை மனதிற்கொண்டு யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 612ஆம் ஆண்டிற்குள் ஹர்ஷர் கிழக்கில் புந்ரவர்த்தன(வடமேற்கு வங்காளம்)விலிருந்து மேற்கே பியாஸ் நதி வரையிலுள்ள பகுதிகளை இணைத்துத் தமது ஆட்சிக்கு உட்படுத்தினர். வட இந்திய அரசியலில் ஓர் உயர்ந்த ஆற்றல் மிக்க இடத்தைக் கைப்பற்றிய பின் அடுத்த சில ஆண்டுகளுக்கு ஹர்ஷர் தம் கவனத்தை, வென்ற பல வகைப்பட்ட பகுதிகளை ஒருங்கே இணைத்து நிலை நிறுத்தி, நிருவாகத்தைச் சீரமைத்துப் பேரரசாக்கும் பணியில் திருப்பினர்; மேலும், மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றவும் ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை ஹர்ஷ சரித்திரத்திலிருந்தும், யுவான் சுவாங் பயணக் குறிப்புகளிலிருந்தும் தெரிந்துகொள்கிறோம். அதே நேரத்தில் காமரூபம், தக்கா போன்ற எல்லை மாநிலங்களின் அரசியல் நிலை பற்றியும் விழிப்புடன் கவனித்து வந்தார். மேலும், தமது பேரரசிற்கு அப்பால் அமைந்திருந்த சசாங்கன் ஆட்சி புரிந்த வங்காளம், சிந்து, சௌராஷ்டிரம் போன்ற அரசுகளின் நிலையையும் அவ்வாறே கவனித்து வந்திருக்க வேண்டும் என ஹர்ஷரின் பிற்கால வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து அறிகிறோம்.

ஹர்ஷர் சிந்து அரசரை வென்றது பற்றி பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் சிலேடையாகக் குறித்துள்ளார்.[1] பஞ்சாபிலுள்ள ஆறுகள் இணையும் பகுதி வரைப் பரவியுள்ள சிந்து அரசு, ஹர்ஷப் பேரரசுக்கு அண்மையில் அமைந்திருந்ததால், சிந்து அரசுமீது படையெடுப்பு மேற்கொள்வது ஹர்ஷருக்குக் கடினமானது அல்ல. சீன வரலாற்றுக் குறிப்புகளின்படி இந்திய அரசுகளில் கி.பி. 618 முதல் 627வரை குழப்ப நிலை நிலவியது எனத் தெரிகிறது. அரசர் சீலாதித்யர் போர் முயற்சிகளை மேற்கொண்டு அதற்குமுன் கண்டிராதவாறு போர்க்களங்களில் வென்றார் எனவும் சீனக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. வங்காளம், சிந்து பகுதிகளில் நிலவிய சூழ்நிலைகளைக்கொண்டு சீனக் குறிப்புகள் அவ்வாறு கூறியிருக்க வேண்டும். அந்தச் சமயத்தில்தான் ஹர்ஷர் முதலில் சிந்து படையெடுப்பை மேற்கொண்டு, பின் வங்காளத்தை வென்று தம்முடைய ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்திருக்க வேண்டும். கிழக்குப் பகுதியில் ஆட்சி புரிந்து வந்த சசாங்கன் ஏறக்குறைய கி.பி. 620ஆம் ஆண்டில் இறந்திருக்க வேண்டும். அவருடைய இறப்பிற்குப் பின் ஓராண்டுக் காலம் நாட்டில் குழப்ப நிலை காணப்பட்டது. ஒரிசாவில் செயில் ஒத்பவா (Sail Odbhava) அரசர்கள் உரிமை பெற முயற்சித்தனர். அச் சமயம் ஹர்ஷர் சிந்துப் படையெடுப்பை மேற்கொண்டிருந்ததால், பேரரசின் எதிர்த் திசை எல்லைப் பகுதியில்

1 ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 76

அமைந்திருந்த கௌடாவிற்கு உடன் வர இயலவில்லை. சசாங்கனின் இறப்பிற்குப்பின் ஏறக்குறைய ஓராண்டுக் காலம் கழித்து ஹர்ஷர் கிழக்குப் பகுதியில் மறுபடியும் படையெடுப்பை மேற்கொண்டார். சசாங்கனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த வளம் மிக்க சாமதத்தா, தாமரலிப்தி, கர்னசுவர்ணப் பகுதிகள் ஹர்ஷப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. புந்ரவர்த்தன ஏற்கெனவே இணைக்கப் பட்டிருந்தது நாம் அறிந்ததே. யுவான் சுவாங் இப் பகுதிகளில் பயணம் செய்த சமயம் அவ் வரசுகளின் அரசியல் அந்தஸ்தைப் பற்றிய செய்திகளைக் குறிக்கவில்லை. யுவான் சுவாங் அவற்றைப் பற்றிக் குறிக்காமல் இருப்பதே அப் பகுதிகள் ஹர்ஷர் ஆட்சியின் பிற்காலத்தில் அவருக்கு உட்பட்டிருந்தன என்பதற்குச் சான்று ஆகும். மற்றச் சூழ்நிலைகளும் அதற்குச் சான்று பகர்கின்றன. ஹர்ஷர் ஆட்சிப் பொறுப்பேற்ற 22 ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 628-9-ல் குறிக்கப்பட்ட பன்ஸ்கீரா செப்பேடு, ஹர்ஷர் வெற்றி பெற்றபின் தங்கியிருந்த வர்த்தமான கோடி கூடாரத்திலிருந்து வழங்கப்பட்டது. வங்காளத்தில் தினஜ்பூர் மாவட்டத்திலுள்ள பர்தான் கோடி(Bardhan Koti)யே வர்த்தமான கோடி எனக் குறிக்கப்பட்டது. சசாங்கனின் இறப்பிற்குப் பின் காமரூபத்தின் அரசர் பாஸ்கரவர்மர் கௌடாப் பகுதிகளைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தியிருக்க வேண்டும் என D. C. கங்கூலி, R. C. மஜூம்தார், K. L. பரூவா போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். பாஸ்கர வர்மர் அப் பகுதிகளைத் தடையின்றி எளிதாகத் தம் படைகளுடன் கடந்து ஹர்ஷரைக் கஜன்கலாவில் சந்தித்ததைக் காட்டி அவ்வாறு குறிப்பிடுகின்றனர். அவர்களின் கருத்து உண்மையானதாக இருக்க முடியாது என்பதற்கு ஹர்ஷரும் பாஸ்கர வர்மரும் நட்புக்கொண்டிருந்ததைச் சான்றாகக் கூறலாம். மேலும், ஹர்ஷரைக் கண்டு செல்ல வேண்டும் என்ற பாஸ்கர வர்மரின் நல்லெண்ணப் பயணத்தைத் தடுத்து இடையூறாக ஹர்ஷரின் படைவீரர்கள் நடந்துகொண்டிருக்க முடியாது எனலாம்.

இப் படையெடுப்பின் சமயத்தில் ஹர்ஷர் ஒரிசாமீதும் படையெடுத்து வென்றார் எனக் குறிக்க இயலவில்லை. ஹர்ஷர் கி.பி. 640ஆம் ஆண்டு கொங்கோடா(Kongoda)மீது தாக்குதல் தொடுத்தார் என யுவான் சுவாங் குறித்திருப்பதே அதற்குக் காரணமாகும். அத் தருணத்தில் யுவான் சுவாங் காமரூப அரசரின் விருந்தினராக இருந்தார். செயில் ஒத்பவா அரசரான இரண்டாவது மாதவ ராஜாவின் குறிப்புகள் ஹர்ஷர் கி.பி. 620-லிருந்து 630 வரை ஒரிசாவை வென்று தம்முடைய ஆட்சிக்கு உட்படுத்தவில்லை என்ற கருத்துக்குச் சான்று ஆகும். கி.பி.

623ஆம் ஆண்டு பூரி(Puri)ச் செப்பேடுகள் மாதவ ராஜா அஸ்வ மேத விழாவைத் தம் ஆட்சியின் பதின்மூன்றும் ஆண்டிற்குள்ளாகவே கொண்டாடியதாகக் குறிப்பிடுகின்றன. ஆண்டு குறிப்பிடப்படாத குர்தா(Khurda)ச் செப்பேடு மாதவ ராஜா கலிங்கப்பகுதி முழுவதன்மீதும் அதிகாரம் கொண்டிருந்தார் எனக் குறிக்கிறது. அக் கட்டளை மாதவ ராஜா போரில் வெற்றி பெற்ற பின் கொங்கோடாவில் தங்கி இருந்த சமயம் அளிக்கப்பட்டது. மாதவ ராஜாவின் ஆட்சி சிறிது காலமே நீடித்தது. ஹர்ஷர் கலிங்கத்தின்மீது படையெடுத்துப் பெரும்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டதாக யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் பல இடங்களில் தெரிவிக்கின்றன.

சிந்துவைத் தம் மேலாண்மைக்கு உட்படுத்திய பின், பேரரசின் எல்லையை விரிவு படுத்தும் முயற்சியை ஹர்ஷர் மேற்கொண்டார். கௌடாவை வெற்றி கொண்டதும் மேலும் பேரரசின் வலிமை பெருகிற்று. ஆகவே, இவ் வெற்றிகள் மேலும் படையெடுப்புகளை மேற்கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டின. வலபியை வெல்வது, தெற்கே வளர்ந்து வரும் சாளுக்கியர்களின் ஆற்றல் வளர்ச்சியைத் தடுக்க உதவும். வலபியின் உதவியுடன் சாளுக்கியர்களைத் தாக்க வேண்டும் என்பதே ஹர்ஷரின் குறிக்கோள் ஆகும். ஹர்ஷர் வங்காளத்தைக் கி.பி. 623ஆம் ஆண்டில் தம்முடன் இணைத்தார்.[1] அதன் பின் ஹர்ஷர் வலபியைத் தாக்கினார். வலபியின் அரசர் மூன்றுவது தாரசேனு கி.பி. 629-ல் இறந்தார். அவருடைய இளைய சகோதரர் இரண்டாவது துருவசேனு அல்லது துருவ பட்டர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றார். ஹர்ஷர் ஏறக்குறைய கி.பி. 630-ல் வலபியின்மீது படையெடுத்தார். வலபி தோற்கடிக்கப்பட்டது. சாளுக்கியத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டன.[2] அதிலிருந்து இரண்டாவது துருவசேனு பாலாதித்யர் என்ற துருவபட்டர் ஹர்ஷருக்குக் கட்டுப்பட்டு விசுவாசத்துடன் நடந்துகொண்டார்; ஹர்ஷரின் மகளையும் மணம் புரிந்துகொண்டார். இந் நிகழ்ச்சிகள் முன் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இவ் வெற்றிகளுக்குப் பின் சாளுக்கிய அரசரான இரண்டாம் புலிகேசியுடன் போரிட ஹர்ஷர் முடிவு செய்திருக்க வேண்டும்.[3]

ஏறக்குறைய கி.பி. 610ஆம் ஆண்டில் சாளுக்கிய பதாமியின் அரசுரிமையை இரண்டாம் புலிகேசி ஏற்றார். அதற்கு முன் நடை-

1 D. தேவஹூட்டி-Harsha-பக்கம் 92
2 D. தேவஹூட்டி-Harsha-பக்கம் 92
3 D. தேவஹூட்டி-Harsha-பக்கம் 92

பெற்ற உள்நாட்டுப் போரில் புலிகேசி வெற்றி பெற்றார். அவருடைய சிற்றப்பா மங்கலீசா தம் மகனைச் சாளுக்கிய அரசராக்க விரும்பினார். புலிகேசி மங்கலீசாவை வென்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். உள்நாட்டுப் போரினால் நாட்டில் தோன்றியிருந்த குழப்பமான அரசியல் நிலையைப் புலிகேசி பதவி ஏற்றவுடன் திறமையாகச் சமாளித்துத் தம் அதிகாரத்தை நிலை நிறுத்தினார்; அடுத்துப் புதிய பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியை மேற்கொண்டார். தென் பகுதியில் கடம்பர்கள் (Kadambas), காங்கர்கள் (Gangas), அளுப்பர்கள் (Alupas), கொங்கணத்தின் மௌரியர்கள் (Mauryas of Konkan) ஆகியோரின் அரசுகளையும், வடபகுதியில் லதா, மாளவம், கூர்ஜரம் ஆகிய அரசுகளையும் வென்றதாகப் புலிகேசியின் ஐஹோல்(Aihole)[1] குறிப்பு கூறுகிறது. புலிகேசி வடக்குப் பகுதியில் பெற்ற வெற்றிகள் ஹர்ஷருக்குப் பெரும் இடையூறுகளாக விளங்கின. அப்பொழுது இந்தியாவில் ஆட்சி புரிந்த இரண்டு பெரிய அரசர்களுக்கும் இடையே பெரிய மோதல் ஏற்பட அதுவே காரணமாகும். வெற்றிகளையே பெற்று வந்த ஹர்ஷரின் அரசியல் வாழ்க்கையில் ஒரு பெரிய தோல்வியும் காணப்படுகிறது. வட பகுதியின் பேரரசரால் தென்பகுதியின் சாளுக்கிய மன்னரான புலிகேசியின் ஆற்றல் வளர்ச்சியைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. புலிகேசியை வீழ்த்துவதற்குத் தலைசிறந்த தளபதிகளுடன் ஹர்ஷர் தாமே படைகளுடன் புறப்பட்டார். அம் முயற்சி தோல்வி அடைந்தது. தென்பகுதியின் அரசர் நர்மதையின் வழியை அடைத்துக் காவல் புரிந்தார். ஹர்ஷர் வருந்தித் திரும்ப நேர்ந்தது. நர்மதை ஆறு இரு அரசுகளுக்கும் எல்லைக்கோடாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இப் படையெடுப்பு கி.பி. 620-ல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என V. A. ஸ்மித் கூறுகிறார்.[2]

கி.பி. 634ஆம் ஆண்டின் ஐஹோல் குறிப்பு ஹர்ஷரின் அளவற்ற அதிகாரமும், மகிழ்ச்சியும் புலிகேசியின் அச்சத்தால் கரைந்து போயிற்று எனக் குறிக்கிறது. மேலும், நிர்பான் (Nirpan),[3] கர்னூல்[4], தொகர்சிடு (Togarcedu)[5] குறிப்புகளும் புலிகேசியின் மகத்தான வெற்றியைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இக் குறிப்புகள் புலிகேசி ஹர்ஷரை வென்று, பரமேஸ்வரா (Parameswara) என்ற பட்டத்தைப் பெற்றார் எனக் கூறுகின்றன; ஹர்ஷரைக் குறிப்பிடும் சமயத்தில் 'வடபகுதி முழுவதற்கும் அரசர்'

[1] E. I-VI-9-10
[2] V. A.ஸ்மித்-E.H.I-பக்கம் 353-4-வது பதிப்பு
[3] I. A-ix-124-5
[4] I. A-xi-66
[5] I. A-vi-85 ff

(Sakal Ottara Pathesvara) எனச் சிறப்பித்துக் கூறி, புலிகேசியிடம் தோல்வி அடைந்தார் எனக் குறிப்பிடுகின்றன.

ஹர்ஷரின் ஆறு ஆண்டு இடையருப் போர் நடவடிக்கைகளால் ஐந்து இந்தியாவும் அவருக்குக் கட்டுப்பட்டது என்ற யுவான் சுவாங்கின் குறிப்பை[1] ஆதாரமாகக் கொண்டு R. K. முகர்ஜி ஹர்ஷரின் படையெடுப்புகள் அனைத்தும் கி.பி. 612ஆம் ஆண்டிற்குள் முடிந்து விட்டன எனக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, வலபி, சாளுக்கிய படையெடுப்புகள் கடைசியாக 612ஆம் ஆண்டு நிகழ்ந்தன[2] என்பதே சரியானது என R. K. முகர்ஜி கருதுகிறார். அவருடைய கருத்து சரியானது அல்ல என்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். யுவான் சுவாங்கின் குறிப்பு தவருக இருக்கலாம் என்பதையும், அவர் 'ஐந்து இந்தியா' என்பதன் மூலம் 'ஐந்து கௌடா'வைக் குறித்திருக்க வேண்டும் என்பதையும் முன்பே கண்டோம். அடுத்ததாக 'ஆறு ஆண்டு' என்பது, யுவான் சுவாங்கின் குறிப்பு கி.பி. 606ஆம் ஆண்டிலிருந்துதான் கணக்கிட்டிருக்கும் என்று நிச்சயமாகக் கூற முடியாது. மேலும், சற்றேறக்குறைய கி.பி. 609-ல் உள்நாட்டுப் போருக்குப் பின் அரசப் பொறுப்பை ஏற்ற புலிகேசி இரண்டு ஆண்டிற்குள் வட இந்தியா முழுவதையும் ஆண்ட ஹர்ஷரின் முயற்சியை முறியடிக்க வல்ல படையை ஏற்படுத்திக்கொண்டிருக்க முடியாது எனக் கூறலாம்.

புலிகேசியின் கி.பி. 612ஆம் ஆண்டு ஹைதராபாத் கட்டளைப் படி பகை அரசர்களை வென்று புலிகேசி பரமேஸ்வரா என்ற பட்டத்தைப் பெற்றதாகத் தெரிகிறது.[3] பிளீட் அதை ஆதார மாகக் கொண்டு புலிகேசி ஹர்ஷரை வென்றிருக்க வேண்டும் எனக் கருதுகிறார். அதில் குறிப்பாக ஹர்ஷரின் பெயர் குறிப்பிட வில்லை என்பதைக் காணும் சமயத்தில் கி.பி. 612-ல் புலிகேசி வென்ற பகை அரசர்களில் ஹர்ஷரும் இருக்க மாட்டார் எனக் கருத இடம் உள்ளது. ஏனெனில், ஹர்ஷரைப் போன்ற புகழ் மிக்க அரசரை வென்ற நிலையில் அவர் பெயரைக் குறிப்பிடாமல் இருந்திருக்க முடியாது. கி.பி. 634ஆம் ஆண்டின் ஐஹோல் குறிப்பு, 'வடபகுதி முழுவதற்கும் அரசராக விளங்கிய' ஹர்ஷரைப் புலிகேசி வென்றதாகக் குறிப்பிட்டுள்ளது என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். ஆகவே, பிளீட்டின் கருத்துப்படி புலிகேசிக்கும் ஹர்ஷருக்கும் இடையே கி.பி. 612-ல் போர் நடை

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 343
2 R. K. முகர்ஜி-ஹர்ஷா-பக்கம் 36
3 R. S. திரிபாதி-History of Kanauj-பக்கம் 125

பெற்றிருக்க வாய்ப்புகள் இல்லை. மேலும், ஹைதராபாத் குறிப்பில் உள்ளபடி புலிகேசி பரமேஸ்வரா பட்டம் பெற்றது, அக் காலத்தில் சாதாரணமாகப் பின்பற்றப்பட்ட வழக்கத்தையே குறிக்கிறது. ஆதிக்கக் கொள்கையைப் பின்பற்றும் அரசர்கள் சில வெற்றிகள் பெற்றதும் பரமேஸ்வரா என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டனர். மௌகாரி அரசர்களான சர்வ வர்மர், அவந்தி வர்மர்,[1] வலபியின் தாரசேனு ஆகியோர் பரமேஸ்வரா என்று அழைக்கப்பட்டது இதற்குச் சான்றாகும். பதாமி அரசின் அதிகாரத்தைக் கைப்பற்றி நிலை நிறுத்திய வேளையில் அடைந்த வெற்றிச் சிறப்புகளுக்காகப் பரமேஸ்வரா பட்டத்தைப் புலிகேசி ஏற்றிருக்க வேண்டும். அவர் ஹர்ஷரை வென்ற பின் உண்மையிலேயே அப்பட்டத்திற்குச் சிறப்பு அதிகரித்தது.

யுவான் சுவாங்கின் மற்றொரு குறிப்பிற்கும் நாம் பொருள் காணுதல் மேற்கூறிய கருத்தை வலியுறுத்த உதவும். 'ஹர்ஷர் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது முப்பது ஆண்டுகள் அமைதியாக ஆட்சி புரிந்தார்' என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[2] வாட்டர்ஸ் மொழிபெயர்த்துள்ள இத் தொடர் யுவான் சுவாங்கின் கருத்தை முற்றிலும் சரியாகத் தரவில்லை.[3] ஹர்ஷர் 'முப்பது ஆண்டுகள் போரில் ஈடுபட்டுப் பின் அமைதியாக நிருவாகம் செய்தார்'[4] என பீல் தரும் இவ் விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியது என R. S. திரிபாதி கருதுகிறார். வாட்டர்ஸ் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் கி.பி. 643ஆம் ஆண்டு ஹர்ஷரின் கொங்கோடாப் படையெடுப்பைப் பற்றி என்ன சமாதானம் கூற முடியும்? ஆகவே, தாம் இந்தியாவில் பயணம் செய்த சமயத்தில் காணப்பட்ட அமைதியைக் குறித்தே யுவான் சுவாங் அவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும். ஹர்ஷரின் சீரான நிருவாகத்தால் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் இந்தியா நல்ல நிலையில் இருந்தது என்பது வரலாற்று உண்மை.

புலிகேசி அரசப் பொறுப்பேற்ற சில ஆண்டுகளுக்குள் ஹர்ஷரை வெல்லும் வலிமை பெற்றிருக்க முடியாது என்பதாலும், கி.பி.606-லிருந்து 612வரை ஹர்ஷர் கனோஜ், தனேஸ்வர அரசப் பொறுப்புகளை நிலை நிறுத்தியும், கிழக்கு, மேற்குப் படையெடுப்புகளை (திக் விஜயம்) மேற்கொண்டு, 'ஐந்து கௌடா'வைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததை வரலாற்றில்

1 தியோ-பார்னுக் (Deo-Baranark)-குறிப்பு C. I.I-iii-பக்கங்கள் 214-18

2 வாட்டர்ஸ்-i-பக்கம் 343

3 R. S. திரிபாதி- History of Kanauj-பக்கம் 127

4 பீல்-i-பக்கம் 213

தெளிவாகச் சான்றுகளுடன் காணுவதாலும் ஹர்ஷருக்கும் புலிகேசிக்கும் நடைபெற்ற மோதல் கி.பி. 630[1] அல்லது கி.பி. 633[2]ஆம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டும் எனலாம். மேலும், வலபியின் மைத்ரேகர்களின் அரசியல் செல்வாக்கு கி.பி. 610-620ஆம் ஆண்டுகளுக்கிடையே சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. கி.பி. 630ஆம் ஆண்டு லோனர் (Lohner) குறிப்பும் ஹர்ஷர், புலிகேசி ஆகிய இருவருக்கும் மோதல் நடைபெற்றதாகக் குறிக்கவில்லை. ஏறக்குறைய கி பி. 623-ல் புலிகேசி லதா, மாளவம், கூர்ஜரம் படையெடுப்புகளை மேற்கொண்டார். ஆகவே, கி.பி. 630ஆம் ஆண்டு ஹர்ஷர் வலபியின்மீது படையெடுத்தார்; வலபிப் படையெடுப்பு வெற்றி துருவசேனனைச் சாளுக்கியக் கட்டுப் பாட்டிலிருந்து பிரித்தது. அதன் பின் ஹர்ஷர் புலிகேசியைத் தாக்க முற்பட்டார். ஹர்ஷர் ஆக்கிரமிப்புப் படையெடுப்பை மேற்கொண்டதால், போர் சாளுக்கிய மண்ணில் நடைபெற்றிருக்க வேண்டும். ஹர்ஷர் சாளுக்கியத்திற்குக் கட்டுப்பட்டிருந்த மாளவப் பகுதியையும் வலபிப் படையெடுப்புச் சமயத்தில் வென்றார். ஆகவே, புலிகேசி ஹர்ஷரை நர்மதை ஆற்றின் கரையில் சந்தித்திருக்க வேண்டும். V. A. ஸ்மித் கூறியதைப் போலவே ஹர்ஷர் வெற்றியின்றி நர்மதை ஆற்றை எல்லைக்கோடாக ஏற்றுத் திரும்ப நேர்ந்தது.[3]

சிறப்பான இப்போரைப் பற்றி யுவான் சுவாங்கும் குறிப்புகள் தருகிறார். சீனப்பயணி கி.பி. 640-ல் மகாராஷ்டிரத்தில் பயணம் செய்தார். ‘கிழக்கு, மேற்குப் படையெடுப்புகளில் வெற்றி பெற்ற சீலாதித்ய மகாராஜா தூரத்திலும் பக்கத்திலும் வாழும் மக்களைத் தமக்கு உட்படச் செய்தார்; ஆனால் மகாராஷ்டிரத்தில் வாழ்ந்த மக்களை மட்டும் தம் ஆட்சிக்கு உட்படுத்த முடியவில்லை; ஆகவே, ‘ஐந்து இந்தியா’வின் படைகளைச் சேர்த்துக்கொண்டு அவர்களை வெல்ல முயன்றார். ஆனால், ஹர்ஷர் அந் நாட்டவர் களின் படையை வெல்ல முடியவில்லை’ என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.[4] ஆற்றல் மிக்க யானைப்படை ஒன்றைப் புலிகேசி நிருவகித்து வந்தார். போர்க்களத்திற்குச் செல்லுமுன் யானை களுக்கு மதுவெறியூட்டி, மூர்க்கமாகப் போர் புரியச் செய்யும் வழக்கத்தையும் சீனப்பயணியின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். ஹர்ஷரின் படையில் யானைப்படைப்பிரிவு மிகவும் ஆற்றல் மிக்கது என்பதைப் பாணரின் குறிப்புகளிலிருந்து அறியலாம்.

1 R. S. திரிபாதி-History of Kanauj-பக்கம் 129
2 D. தேவஹூட்டி-Harsha-பக்கம் 93
3 E. H. I-பக்கம் 353; R. C. மஜூம்தார்-H. C.I. P-iii-பக்கங்கள் 105-6
4 வாட்டர்ஸ் ii-பக்கம் 239

ஐஹோல் குறிப்புகளும் ஹர்ஷரின் சிறப்பான யானைப் படையைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. ஆகவே, நர்மதைப் போரை யானைப்படைகளுக்கிடையே நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க போர் எனக் குறிக்கலாம். வர்த்தனரின் படை முன்னேற்றத்தைத் தடுத்து, தம் நாட்டின் அரசுரிமையைத் தமக்காகக் காப்பாற்றிக்கொள்வதில் புலிகேசி மாபெரும் வெற்றி பெற்றார். ஹர்ஷர் தென்பகுதியிலும் தம் ஆதிக்கத்தை விரிவு படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகள் படுதோல்வியடைந்தன என்றாலும், இந்தியா முழுவதையும் ஓர் ஆட்சிக்கு உட்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தைப் பழைய இந்திய அரசர்கள் விரும்பியதை அது குறிக்கிறது. மௌரியர்களும், குப்தர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகச் சற்று வலுவற்ற இந்தியப் பேரரசு தோன்றியது எனினும், ஆற்றல் மிக்க ஓர் அரசை ஏற்படுத்தி இந்தியாவை இணைக்க வேண்டும் என்பதே அவர்கள் நோக்க மாகும். புலிகேசியின் நாட்டு வளமும், போர் ஆற்றலும், பகைவரின் அறிமுகமில்லாத மண்ணில் போரிட வேண்டிய நிலையில் காணும் அபாயங்களும், சாளுக்கிய எல்லையை ஒட்டி அமைந்திருந்த மலைப்பாங்கான பிரதேசமும், அகன்ற ஆறும் ஹர்ஷரின் 'சாளுக்கியர்களை வெல்லும்' எண்ணத்தைத் தடுக்கக் கூடியவை யாக இல்லை. ஆனால், ஹர்ஷர் மேற்கொண்ட துணிவான முயற்சி இறுதியாகத் தோல்வி கண்டது. நர்மதை ஆறு, இரு அரசுகளின் எல்லைக்கோடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பண்டில்கண்டு, குவாலியர், உஜ்ஜயினி, கூர்ஜரம்

மேலே குறிக்கப்பட்ட நான்கு அரசுகளைப் பற்றியும், அவற்றின் அந்தஸ்து பற்றிய விளக்கங்களும் யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காணப்படுகின்றன. சரஸ்வதி, கங்கை, நர்மதை ஆறுகளுக்கிடையில் அவை அமைந்துள்ளன. பண்டில்கண்டு, குவாலியர், உஜ்ஜயினி, கூர்ஜரம் ஆகிய நான்கு பகுதிகளும் அவற்றிற்குரிய அரசர்களால் ஆளப்பட்டு வந்தன என யுவான் சுவாங்கின் குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஹர்ஷப் பேரரசின் அருகில் இந் நான்கு அரசுகளும் அமைந்திருந்தமையால், அவை ஹர்ஷரின் நேரடியான அல்லது மறைமுகக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்க வேண்டும். இந் நான்கு அரசர்களும் ஹர்ஷருடன் எவ்விதத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது பற்றிய தெளிவான விளக்கங்களோ, சான்றுகளோ இல்லை. சி-சி-டு (Chih-chi-to) என்று யுவான் சுவாங் ஜெஜகா புக்தி(Jejaka-bhukti)யை அதாவது பண்டில்கண்டைக் குறித்துள்ளார். அதை ஒரு பிராமண அரசர் ஆண்டு வந்தார். ஹர்ஷரின் தலைநகருக்கு மிக அண்மையில் அது அமைந்திருந்ததால், வர்த்தன அரசர்களின் மேலாண்மையை

ஏற்று ஆட்சி புரிந்திருக்க வேண்டும். மோ-ஹி-சூ-ப-லோ-பு-லோ (Mo-hi-ssu-fa-lo-pu-lo) என்று சீனப்பயணி குவாலியர் அருகில் உள்ள மஹேஸ்வரபுரத்தைக் குறிக்கிறார். அப் பகுதியும் ஒரு பிராமண அரசருக்குக் கட்டுப்பட்டிருந்தது. அதன் அரசியல் அந்தஸ்தும் பண்டில்கண்டைப் போன்றதே ஆகும். ஊ-ஷி-யென்-ன (Wu-she-yen-na) என அழைக்கப்படுவது உஜ்ஜயினி ஆகும். அந் நகர் வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளில் அதன் ஆட்சிப் பொறுப்பு பலர் கைக்கு மாறியது. இருப்பினும் அதன் அரசு, நிருவாகப் பொறுப்பு மாறாமல் அந்நாட்டு 'அரசரின்' கட்டுப்பாட்டிலேயே நீடித்து வந்தது. ஹர்ஷர் மேற்குப் படையெடுப்பை மேற்கொண்ட சமயம் உஜ்ஜயினியை வென்றாலும் அதன் பிரதேச அமைப்பையும், வரலாற்று அடிப்படையில் மைத்ரேகர்களுக்கு அந்நகர் மீதிருந்த உரிமையையும் மதித்து வலபி அரசின் பகுதியாக நீடித்து வர அனுமதித்தார். கி.பி. 639, 640-ல் இரண்டாவது துருவசேன னின் கட்டளைகள் உஜ்ஜயினிக்கு மிக அருகிலிருந்த இடங்களி லிருந்து வெளியிடப்பட்டன. உஜ்ஜயினி அரசு பொறுப்பை அதன் 'அரசரி'டத்திலேயே நீடித்து வர ஹர்ஷர் அனுமதித்த போதிலும், மைத்ரேகர்களை ஓரளவிற்குத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். மைத்ரேகர்களே வட இந்தியாவில் பரவி இருந்த ஹர்ஷரின் அரசியல் செல்வாக்கையும் மேலாண்மையையும் ஒப்புக்கொண்ட நிலையில், அவர்களுடைய கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளும் ஹர்ஷரைப் பேரரசராக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. கு-சி-லோ (Ku-che-lo) என யுவான் சுவாங் கூர்ஜரத்தைக் குறித்துள்ளார். பி-லோ-மோ-லோ (Pi-lo-mo-lo) அதாவது பின்மால்(Bhinmal)[1] அதன் தலைநகராகும். யுவான் சுவாங்கின் குறிப்பின்படி கூர்ஜரம் இருபது வயது நிரம்பிய ஒரு க்ஷத்திரிய அரசரால் ஆளப்பட்டு வந்தது. அவர் போன்ற அரசர் ஒருவரே கூர்ஜரத்தின் அரசப் பொறுப்பு ஏற்பதை ஹர்ஷர் விரும்பினார் எனலாம். அதிக வருவாயைத் தரக்கூடிய வகையில் கூர்ஜரம் இல்லாவிடினும், தம்முடைய மேலாண்மையை ஏற்றுக்கொண்ட நட்பு நாடாகத் திகழ்வதையே ஹர்ஷர் விரும்பினார்.

நர்மதை ஆற்றை எல்லையாக ஏற்றுக்கொண்டதன் விளைவாக மேற்கு வழி தடைபட்டதன் காரணமாகச் சில ஆண்டுகளுக்குப் பின் ஹர்ஷர் கிழக்குப் புறமாகத் தென்னகப் படையெடுப்பை மேற் கொண்டார் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

[1] வெகு காலமாகப் பின்மால் கூர்ஜரர்களின் தலைநகராக விளங்கியது. N. H. I. P-VI-பக்கம் 400; வாட்டர்ஸ்-ii-பக்கம் 250; C. A. G. I-பக்கம் 357

இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என தேவ ஹூட்டி கருதுகிறார்.[1] அதற்கான காரணங்களை ஹர்ஷரின் பிற் காலப் படையெடுப்புகளை விளக்கும் சமயத்தில் காணலாம்.

தெற்குப் படையெடுப்பிற்குப் பின் ஹர்ஷரின் அடுத்த போர் நடவடிக்கை காஷ்மீரப் படையெடுப்பாகும். யுவான் சுவாங் குறிப்புகளின்படி ஹர்ஷர் காஷ்மீரத்தில் கி.பி. 631ஆம் ஆண்டி லிருந்து 633ஆம் ஆண்டு வரை தங்கி இருந்தார் எனத் தெரிகிறது. காஷ்மீரம் பல சிற்றரசுகளைக் கொண்ட ஒரு சிறப்பான அரசாக விளங்கியது. கல்ஹணு(Kalhana)வின் ராஜதரங்கினி (Raja-tarangini), காஷ்மீரத்தின் அரசராக அப்போது துருலப வர்த்தனர் (Drulabha Vardhana) என்பார் விளங்கினார் எனத் தெரிவிக்கிறது. சீனப் பயணி காஷ்மீரத்திற்குச் சென்றிருந்த சமயம் சிறப்பு மிகுந்த ஸ்தூபத்திற்குச் சென்று, அங்குப் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த புத்தரின் பல்லை வணங்கினார். 'அஃது ஒன்றரை அங்குல நீளத்தில் மஞ்சள் கலந்த வெள்ளை வண்ணத்தில் காணப்பட்டது' எனவும், 'புனித நாள்களில் அப் பல்லிலிருந்து பிரகாசமான ஒளி வந்தது,'[2] எனவும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். இப் புனிதப் பொருளை ஹர்ஷர் சில ஆண்டு களுக்குப்பின் விரும்பி எடுத்துச் சென்றார்.[3]

கனோஜ் பேரவை கி.பி. 642ஆம் ஆண்டு இறுதியில் நடை பெற்றது. பேரவை நிகழ்ச்சிகள் 'லைப்' எனும் பயணக் குறிப்பு நூலில் விளக்கப்பட்டுள்ளன. அரசரின் பயண மாளிகைக்கு மேற்கே ஒரு சங்கராமா அமைந்திருந்தது. அதற்கு ஹர்ஷர் ஆதரவு அளித்து வந்தார். இங்குதான் 'ஒன்றரை அங்குல நீளமுள்ள மஞ்சள் கலந்த வெள்ளை நிற புத்தரின் புனிதப் பல் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டிந்தது. அது எப்பொழுதும் பிரகாசமான ஒளி வீசியது'[4] என யுவான் சுவாங் குறித்துள்ளார். ஹர்ஷர் புத்தரின் புனிதப்பல்லைக் காஷ்மீரிலிருந்து கொண்டு வந்த நிகழ்ச்சியும் லைப்-ல் விளக்கப்பட்டுள்ளது.

'காஷ்மீரத்தில் புத்தரின் புனிதப்பல் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியைச் சீலாதித்ய ராஜா கேள்விப்பட்டார்; உடனே அங்குச் சென்று அதைக் கண்டு வணங்க வேண்டும் எனக் காஷ்மீரத்து அரசரிடம் அனுமதி கோரினார்.

[1] D. தேவஹூட்டி-Harsha-பக்கம் 95
[2] பீல்-i-பக்கம் 158
[3] வாட்டர்ஸ்-i-பக்கம் 279
[4] லைப்-பக்கம் 181

மதத்துறையினர் அப் புனிதப் பொருளைத் தாங்களே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆர்வத்தால் கலக்க மடைந்து, அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க விரும்பாமல் புனிதப் பொருளை மறைத்து வைத்தனர். ஆனால், காஷ்மீரத்தின் அரசர் சீலாதித்யரின் உயர்ந்த குணநலனுக்கு அஞ்சி, அதைத் தேடிக் கண்டுபிடித்து ஹர்ஷருக்கு அளித்தார். அதைக் கண்ட சீலாதித்யர் பக்தி மேலிட்டுத் தம்முடன் அப் பல்லை எடுத்துச் சென்று உரிய வணக்கத்தைச் செலுத்தினார்.[1]

போற்றி வணங்கப்பட்ட புத்தரின் பல்லைக் கண்டு வழிபட வேண்டும் என்று ஹர்ஷர் கூறினாலும், அப் புனிதப் பொருளை எவ் வழியிலாவது கைப்பற்றிக்கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அவர் காஷ்மீருக்குச் சென்றார். காஷ் மீரத்து அரசர் ஹர்ஷரின் குணநலனால் கவரப்பட்டு, அவரது ஆசையை நிறைவேற்றினார் என்பதைவிட, அவரது ஆற்றலுக்கு அஞ்சியே புத்தரின் புனிதப் பொருளை அவரிடம் ஒப்படைத்தார் என்பது வெளிப்படை.

பல சிற்றரசுகளைக் கொண்ட முக்கியமான ஒரு நாட்டின் அரசர் ஹர்ஷரின் ஆற்றலுக்கு அஞ்சிக் கீழ்ப்படிய ஒப்புக்கொண்ட தென்பது ஹர்ஷரின் ஆற்றலையும், புகழையும் குறிக்கிறது. கி.பி. 633-ல் யுவான் சுவாங் காஷ்மீரத்தை விட்டுச் சென்றபின், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் கழித்து இந் நிகழ்ச்சி நடை பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், கி.பி.640 ஆம் ஆண்டிற்குள் ஹர்ஷர் ஒத்ரா (Odra) என்ற வடக்கு ஒரிசாவை வென்றார்.[2] கி.பி. 637-ல் ஆரம்பித்து 642 வரை ஐந்தாண்டுகளுக்கு ஹர்ஷரின் ஒரிசா படையெடுப்பு நீடித்தது.[3] ஆகவே, காஷ்மீரத்திற்குச் சென்று, புத்தரின் புனிதப் பொருளைக் கி.பி. 635-ல் அவர் பலவந்த மாகக் கைப்பற்றியிருக்க வேண்டும்.[4] அச்சுறுத்தல் மூலமாகத் தம் குறிக்கோளை அடைந்த ஹர்ஷர், பனிமலைப் பிரதேசமான காஷ்மீரத்திலிருந்து திரும்பிய பின், காஷ்மீரத்துடன் அரசியல் தொடர்புகள் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. மேலும்,

[1] லைப்-பக்கம் 183

[2] லைப்-பக்கம் 154; ஹர்ஷர் ஜெயசேனாவிற்கு ஒரிசாவில் எண்பது கிராமங்களின் வருவாயைக் கொடையாக அளித்தார். ஜெயசேனா அதை மறுத்து விட்டார். ஜெயசேனாவுடன் யுவான் சுவாங் நாளந்தாவிற்கு அருகில் உள்ள இருக்கையில் இரண்டு ஆண்டுகள் தங்கினார்.

[3] லைப்-பக்கம் 172; கொங்கோடாப் படையெடுப்பிலிருந்து திரும்பும் வழியில் யுவான் சுவாங் குமாராவுடன் தங்கியிருந்த செய்தியை ஹர்ஷர் அறிந்தார் எனக் குறிப்பிடுகிறது. யுவான் சுவாங் 642-ல் பாஸ்கரவர்மருடன் தங்கி இருந்தார்.

[4] R. C. மஜூம்தார்-I.H.Q.(1929)- 233 ff

காஷ்மீரத்தின் அரசரான துருலப வர்த்தனர் ஹர்ஷரைக் காண வந்ததாகச் செய்திகள் காணப்படவில்லை. அல்லது ஹர்ஷருக்கும் காஷ்மீரத்தின் அரசருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டதாகவும் கூற இயலாது. தூரத்தில் பேரரசின் எல்லையையொட்டி அமைந்து இருந்த அரசுகளைத் தம்மைப் பற்றிய அச்சமும் மரியாதையும் கலந்த நிலையில், எல்லா உரிமைகளையும் அனுபவித்து வர அனுமதித்துவிடும் நல்ல கொள்கையை ஹர்ஷர் பின்பற்றி வந்தார் என்பது விளங்குகிறது. ஆகவே, காஷ்மீரம் ஹர்ஷப் பேரரசின் ஒரு மண்டலமாக இல்லாவிட்டாலுங்கூட, ஹர்ஷரின் ஆற்றலைக் கண்டு அஞ்சி, அவருடைய பகையைத் தேடிக்கொள்ளத் துணியவில்லை.

ஒரிசா

மேலும் பல புதிய பகுதிகளை வென்று, தம் ஆட்சிக்கு உட்படுத்த வேண்டும் என்ற தணியாத விருப்பம் ஹர்ஷரிடம் காணப்பட்டது. அடுத்ததாக ஒரிசா ஹர்ஷரின் கவனத்தை ஈர்த்தது. ஒரிசாவின் அரசர் இரண்டாவது மாதவ குப்தர் இறந்தபின் ஹர்ஷர் ஒரிசாப் படையெடுப்பை மேற்கொண்டார். ஆண்டு குறிக்கப்படாத இரண்டாவது மாதவ ராஜாவின் குர்தாக் (Khurda) கட்டளை,[1] கலிங்கம் முழுவதையும் அவர் வென்று தம் ஆட்சிக்கு உட்படுத்தியபின், செங்கோடா வெற்றிக் கூடாரத்திலிருந்து அளிக்கப்பட்டதாகும். அதன் காலம் மாதவ ராஜாவின் கி.பி. 623ஆம் ஆண்டின் பூரிக் கட்டளைக்கும், புலிகேசியின் கி.பி.635ஆம் ஆண்டு மேற்கொண்ட கலிங்கப் படையெடுப்பிற்கும் இடைப்பட்டதாகும். ஏனெனில், ஹர்ஷருக்கும் புலிகேசிக்கும் நடைபெற்ற நர்மதைப் போர் வெற்றிக் குறிப்புகளுக்குப்பின் கோசலமும், கலிங்கமும் கி.பி. 634ஆம் ஆண்டு ஐஹோல் பிரசாஸ்தி(Prasasti)யில் குறிக்கப்பட்டுள்ளது. தோல்வி கண்ட சில ஆண்டுகளில் மாதவ ராஜா இறந்தார்.

குர்தாச் செப்பேட்டுக் குறிப்பு, ஆதித்யசேனரின் அப்ஸாடுக் கட்டளையை ஒத்துக் காணப்படுகிறது. அதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அதன் காலத்தை, வரலாற்று ஆதாரத்துடன் கி.பி. 630 முதல் 640 எனக் குறிக்கலாம். ஹர்ஷர், சசாங்கன் ஆகியோர் காலத்தில் வாழ்ந்த மாதவ ராஜா, பல காலம் வாழ்ந்திருந்து சாளுக்கியர்களிடமிருந்து கலிங்கத்தைத் திரும்பக் கைப்பற்றி, அதற்குப்பின் கலிங்கம் முழுவதிலும் தம்முடைய மேலாண்மையைக் குறிக்கக்கூடிய மதக்கட்டளை ஒன்றை அளித்திருக்க முடியாது எனலாம். ஏழாம்

[1] R. D. பானர்ஜி-History of Orissa-i-பக்கங்கள் 122,130

நூற்றண்டின் பிற்பகுதியிலும், இப் பகுதியின் ஆட்சி உரிமையைக் கிழக்குச் சாளுக்கியர்களே தொடர்ந்து கட்டுப்படுத்தி வந்தனர்.

ஹர்ஷர் ஒரிசாவில் பெற்ற வெற்றிகளின் விளைவாக, அம் மாநிலத்தின் வடக்கு மத்தியப் பகுதிகள் விரிவடைந்தன. அப் பகுதிகளை ஊட்டு (Wu-t'u) என ஒத்ராவையும், குங் யூ டு (Kung-yu-t'o) எனக் கொங்கோடாவையும்[1] யுவான் சுவாங் குறிப்பிடுகிறார் கா லெங் கா (Ka-leng-ka) என்ற கலிங்கம் சாளுக்கியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தால், ஹர்ஷர் அதைத் தாக்க முயற்சிக்கவில்லை. வடபகுயில் ஒத்ரா எனக் குறிக்கப்பட்ட பகுதி இன்றைய மிட்னபூர், பாலாசோர், கட்டாக் மாவட்டங்கள் ஆகும். சத்தார்பூர், கஞ்சம் பகுதிகள் கொங்கோடா எனக் குறிக்கப்பட்ட பகுதியாகும். அதன் மேற்குத் திசையில் மகா கோசலா அரசு அமைந்திருந்தது. அது புலிகேசியின் தாக்குதலுக்கு உள்ளாகி இருந்தது. ஒத்ராவும். கொங்கோடாவும் முறையே 7000லி, 1000லி சுற்றளவு உள்ளது எனக் குறிக்கப்பட்டுள்ளன. கலிங்கம் 5000லி சுற்றளவு உடையது ஆகும். தென்கிழக்கு மாநிலத்தின் பெரும்பகுதிகளையும், அதன் சிறப்பான கடல் பகுதிகளையும் ஹர்ஷர் கைப்பற்றித் தம்முடைய ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தார்.

ஹர்ஷரின் ஒரிசாப் படையெடுப்பு வெற்றிகளைப் பற்றி 'லைப்'-ல் நான்கு குறிப்புகள் காணப்படுகின்றன. ஹர்ஷர் ஜெயசேனு[2] என்ற பௌத்தத் துறவிக்கு எண்பது பெரிய கிராமங்களின் வருமானத்தைக் கொடையாக அளித்தார் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. ஹர்ஷர் கொங்கோடாவை வென்று, ஒத்ரா வழியாகத் திரும்பியது இரண்டு இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.[3] ஒத்ராவில் ஹர்ஷர் தங்கியிருந்த சமயம் சில சிறிய பௌத்தப் பிரிவு(Lesser Vehicle)த் துறவிகளுடன் கருத்து பரிமாறிக்கொண்டதாக லைப்-ல் குறிப்புகள் காணப்படுகின்றன.[4] ஹர்ஷர் ஒரிசாவின்மீது பல படையெடுப்புகளை மேற்கொண்டு ஒரிசாவின் பகுதிகளை வென்றிருக்க வேண்டும் என்பதை ஒத்ரா வழியாக ஹர்ஷர் திரும்பியதாகப் பல குறிப்புகள் காணப் படுவதால் அறியலாம். அப்படி இல்லாவிடின், ஜெயசேனுவிற்கு ஹர்ஷர் கி.பி. 640ஆம் ஆண்டுக்கு முன் நிலக்கொடை அளித்திருக்க இயலாது என்பதை மற்றொரு காரணமாகக் கொள்ளலாம். ஹர்ஷர் கி.பி. 637-8-ல் ஒத்ராவை வென்ற பின்

1 வாட்டர்ஸ்-ii-பக்கங்கள்-193-8
2 லைப்- பக்கம் 154
3 லைப்- பக்கம் 159, 172
4 லைப்-பக்கம் 159

பிரயாகை பேரவைக்கு வந்தார்.[1] அத் தருணத்தில் ஹர்ஷர் அளித்த நிலக்கொடையைத் தூய துறவியாரான ஜெயசேனு பெற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.[2]

கொங்கோடா ஹர்ஷப் பேரரசின் தெற்கு மாநிலமாக விளங்கியது.[3] ஹர்ஷர் தெற்குப் பகுதியில் மேலும் படையெடுப்புகளை மேற்கொண்டு வென்றார் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்; மைசூரில் சிமோக மாவட்டத்தில் கடெமெனே[4] (Gaddemane) என்ற கிராமத்திற்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட பழைய கன்னட மொழியில் தொகுக்கப் பட்டிருக்கும் ஒரு குறிப்பை அதற்குச் சான்றாகக் கருதுகின்றனர். அது ஒரு போர் வீரன் இறந்ததை நினைவு படுத்தும் வீரக்கல் (Virakal) அமைப்பு ஆகும். பழமை ஆராய்ச்சியின்படி அஃது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரிகிறது. 'ஒளி மிக்க, ஆற்றல் கொண்ட, வீரமிக்கவர்களுக்கும் தொல்லை தரும் ஸ்ரீ சீலாதித்யர் அரியணை ஏறினார். பேட்டானி சத்யங்கா (Pettani Satyanka) என்ற போர் வீரர் பெத்ரா ராயா(Bedara Raya)வின் துணையுடன் கடும் போரில் ஈடுபட்டு, பகைவர்களைக் கொன்று, மகேந்திரரை கலக்கத்தில் ஆழ்த்தி விட்டுச் சொர்க்கத்தை அடைந்தார்' என்பதே அதில் குறிக்கப்பட்டுள்ள[5] கருத்தாகும். அதில் சீலாதித்யர் என்ற பெயர் எழுத்துப் பிழைகளுடன் காணப்படுகிறது. ஹர்ஷர் தென்பகுதி வரை வென்றார் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளும் வரலாற்று ஆசிரியர்கள் சீலாதித்யர் என்பதை ஹர்ஷராகவும், மகேந்திரர் என்பதை ஹர்ஷர் காலத்தில் ஆட்சி புரிந்த முதலாவது மகேந்திர வர்மராகவும் அடையாளம் காண்கின்றனர்; மேற்கூறிய கருத்தை நிலைநிறுத்த, ஹர்ஷரின் அரசவையில் இருந்த பாணரின் உறவினரான மயூராவின் சமஸ்கிருதக் கவிதையை மேற்கோள்

[1] கி.பி. 643-ல் ஆறாவது பேரவைக் கூட்டம் நடைபெற்றது. அதில் யுவான் சுவாங் பங்கு கொண்டார்; லைப்-பக்கம் 184

[2] R. D. பானர்ஜி-History of Orissa-1 பக்கம் 129-30; லைப்-ல் காணப் படும் ஹர்ஷர் நிலக்கொடை அளித்த நிகழ்ச்சி அவர் ஒரிசாமீது கொண்டிருந்த ஆளுமையைக் குறிக்காது எனக் கருதுகிறார்.

[3] D. தேவஹூட்டி-ஹர்ஷா-பக்கம் 98

[4] S. ஸ்ரீகந்த சாஸ்திரி-J.R.A.S. (1926) 487; நிரஞ்சன் ரே-I.H.Q. (1927) 788; ஆட்ரிஸ் சந்திர பானர்ஜி J.A.H.R.S-vi-(1931-2)-பக்கங்கள் 147-58

[5] R. S. திரிபாதி(History of Kanauj-பக்கம் 122)யும், R. C மஜூம்தாரும் (H.C.I.P-iii-பக்கம் 106-அடிக்குறிப்பு) இதைக் குறிப்பிட்டிருப்பினும், தென் மாநிலங்களின்மீது படையெடுத்தார் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, மேலும், கனோஜிலிருந்து அல்லது ஒரிசாவிலிருந்து நீண்ட பயணத்தை ஹர்ஷர் மேற்கொண்டு, போர் நடைபெற்ற இடத்தை அடைந்ததைக் குறிக்கும் எந்தச் சொல்லும் அதில் காணப்படவில்லை. ஆகவே, 'சிலாதித்யர் தெற்குமீது படையெடுத்தபோது' என்று R. S. திரிபாதி (History of Kanauj-பக்கம் 122) காணப்படும் தொடருக்குப் பொருள் இல்லை என D. தேவஹூட்டி கருதுகிறார்,

காட்டுகின்றனர்.[1] பூமியை அரசருடன் இணைத்துக் காட்டும் வழக்கமான உவமையுடன் சிலேடையாகவும், நாட்டின் பல பகுதிகளை ஹர்ஷர் வென்ற நிகழ்ச்சிகளை மயூரா அதில் விளக்கியுள்ளார். அங்க தேச(Anga)மும், மத்ய தேச(Madyadesa)மும் ஹர்ஷப் பேரரசின் மாநிலங்களாக விளங்கின. அவற்றுடன் குந்தளம், காஞ்சி, சோழர்களின் ராஜ்யம் ஆகியவையும் ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார் மயூரா என்பார் ஹர்ஷர் ஆட்சி செய்த காலத்தில் வாழ்ந்தவர் ஆதலால்,அது ஒரு சிறிய பாடலாக இருப்பினும், உயரிய பொருளைக் கொண்டிருக்க வேண்டும் எனப் பலர் கருதுகின்றனர். மயூரா ஹர்ஷரைப் புகழ வேண்டும் என்று நினைத்த போது ஏன் நாட்டின் இப் பகுதிகளையும் சேர்த்துக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது புதிராக இருக்கிறது. ஹர்ஷரின் காலத்தில் தென்னகத்தில் ஆட்சி புரிந்த மூன்று சிறப்பு மிக்க அரசர்களைக்[2] குறிப்பிட்டு, ஹர்ஷர் அவர்களையும் வென்று அப் பகுதிகளைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தக் கூடியவர் என்றும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் வர்த்தனுவின் கட்டுப்பாட்டில் வரும் என்றும் அவர் கருதியதாலேயே அப் பகுதிகளையும் சேர்த்து வென்றதாக ஹர்ஷரைப் புகழ்ந்து அப் புலவர் பாடி இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஹர்ஷர் அவ் வெற்றிகளையும் எதிர்காலத்தில் பெறுவார் என்ற நம்பிக்கையுடன் வேண்டுமென்றே ஹர்ஷரைப் புகழ்ந்து பாடியிருக்க வேண்டும். வெற்றிகளைப் பெறுமுன், திக் விஜயத்தைத் தொடங்கிய சமயம் சிற்றரசர்கள் ஹர்ஷரைச் சிறப்பித்துக் கூறிய நிகழ்ச்சியை பாணர் குறிப்பிட்டுள்ளார். 'வீரத்தால் தக்காணத்தை எளிதாக வெல்லலாம் ...... மலைய மலையும் (Mount Malaya) ...... தார்துரா (Dardura) மலையும் .... மகேந்திராவுங்கூட' என பாணரின் ஹர்ஷ சரித்திரம் குறிக்கிறது.[3] மயூராவின் பாடலின் அடிகள் ஹர்ஷர் புலிகேசியை வெல்வதற்குப் படையெடுத்துச் சென்ற சமயத்திற்குச் சற்று முன், ஹர்ஷர் தாம் சாதிக்க நினைத்திருந்த வெற்றிகளை மனதிற்

[1] The Sanskrit Poems of Mayura-பக்கம் 20-1; G. P. குவாக்கென் போஸ் (Quackenbos) வல்லப தேவாவின் சுபாஷிதவளி-பக்கம் 28-9. பிரபாந்த சிந்தாமணி-C. H. தானி (Tawney)-மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 25-6

[2] குந்தளம் சாளுக்கியர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. சோழ அரசர்கள் சாளுக்கியர்களுடன் நட்புக்கொண்டிருந்தனர். காஞ்சியில் பல்லவர்களின் ஆட்சி நிலவியது.

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 214; மொழிபெயர்ப்பு-பக்கம் 211; தக்ஷிணபாதம் என்பது விந்திய மலைக்குத் தெற்கே உள்ள பகுதியாகும். மலைய மலை எனப்படுவது மலைய கிரி ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் காவேரிக்குத் தெற்கே உள்ள பகுதி மலைய கிரி எனக் குறிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மலை தார்துரா மலை எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஒரிசாவிலிருந்து மதுரா வரையுள்ள பகுதி மகேந்திரா எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

கொண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும்[1] எனக் கருதலாம். M. L இட்டிங் ஹௌசன் கூறியுள்ள கருத்து ஈண்டு பொருத்தம் உடையதாகக் காணப்படுகிறது. ஆகவே, ஹர்ஷர் தென்பகுதிகளின் மீது படையெடுத்தார் என்பதை மெய்ப்பிக்கும் மயூராவின் பாடலைச் சான்றாகக்கொள்வது அவ்வளவு பொருத்தமான தாயில்லை. கடெமெனே வீரக்கல்லில் (Gaddemane Viragal) காணப் படும்சீலாதித்யர், மற்றும் மகேந்திரர் என்ற பெயர்கள் முறையே ஹர்ஷரையும், முதலாவது மகேந்திரப் பல்லவரையும் குறிக்கும் என முடிவு செய்வதும், ஹர்ஷர் தக்காணத்தின்மீது படை எடுத்தார் என்பதற்கு அதுவே சான்று எனக் கொள்வதும் திருப்திகரமானதாகவும், நம்பக் கூடியதாகவும் இல்லை. கடெமெனே வீரக்கல்லில் குறிப்பிட்டிருப்பது ஏழாம் நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகளில் சாளுக்கியத்தை ஆண்ட சரயாஸ்ரய சீலாதித்ய(Srayasraya Siladitya)ருக்கும், இரண்டாவது மகேந்திர வர்மப் பல்லவருக்கும் நடைபெற்ற போர் ஆகும்.[2]

வீரக்கல் குறிப்பு காணப்படும் கடெமெனே கிராமத்தின் இடமும், அதில் குறிக்கப்பட்டிருக்கும் திராவிட இனத்திற்கும் பழமையானதாகக் கருதப்படும் கர்நாடக அங்கத்தினர்களான பீடாக்களும்,[3] சீலாதித்யருக்கும், மகேந்திரருக்கும் தக்காணத் தின் நடுவே போர் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை மிகத் தெளிவாக உணர்த்துகின்றன. ஹர்ஷர் பதவி ஏற்பதற்கு முன்னும் அரசரான பின்னும் இப் பகுதியின் அரசியல் வரலாற்றை மனதில் கொண்டு, ஹர்ஷரின் அரசியல் நிகழ்ச்சிகளையும், சூழ்நிலை களையும் ஆராயும் சமயத்தில் புலிகேசியுடன் மோதல் நிகழ்ந்ததற்கு முன்னோ அல்லது பின்னோ ஹர்ஷர் இப் பகுதிகளில் படையெடுப்புகளை மேற்கொண்டு தாக்கி இருக்க முடியாது எனத் திட்டமாகக் கூறலாம்.

கி.பி. 566 முதல் 597 வரை ஆண்ட புலிகேசியின் தந்தை கீர்த்தி வர்மர் காலத்திலேயே கர்நாடகத்தில் கடம்பர்கள் ஆண்டு வந்த பகுதி, சாளுக்கியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கீர்த்தி வர்மருக்குப் பின் சாளுக்கிய ஆட்சிப் பொறுப்பை அவருடைய தம்பியான மங்கலீசா ஏற்றார். 608ஆம் ஆண்டு வரை நீடித்திருந்த மங்கலீசாவின் ஆட்சி இரண்டாம் புலிகேசியுடன் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் தோல்வியால் மறைந்தது.

1 ஹர்ஷவர்த்தன-M. L. Etting Hausen-பக்கம் 47

2 D. தேவஹூட்டி- ஹர்ஷா- பக்கம் 100

3 R. S. முகாஜி-The Heritage of Karnataka-பக்கம் 30; நர்மதை ஆற்றுக்கும், துங்கபத்ராவிற்கும் இடையே உள்ள பகுதியைக் கர்நாடகம் என்ன குறித்துள்ளார்.

சாளுக்கியத்தின் அரசப் பொறுப்பை ஏற்ற இரண்டாம் புலிகேசி, கடம்பர்களையும். ஏனைய பக்கத்து நாடுகளையும் மறுபடியும் வென்று தம் அதிகாரத்தை நிலை நிறுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்தார். காங்கா, அளுப்பா, கொங்கணத்தின் மௌரியர் போன்ற அரசுகள் மிக முக்கியமானவை ஆகும். இவை அனைத்தையும் பற்றிய விளக்கங்கள் ஐஹோல் குறிப்பிலும் காணப்படுகின்றன. காங்கா தெற்கு மைசூரைச் சேர்ந்த பகுதியாகும். அங்குதான் கடெமெனே குறிப்பு கண்டு பிடிக்கப்பட்டது. புலிகேசியால் வெல்லப்பட்டவர்களின் பட்டியலில் முதலிலேயே மேலே குறிப்பிட்டுள்ள அரசுகளின் பெயர்கள் காணப்படுவதால், ஏறக்குறைய கி.பி. 620ஆம் ஆண்டிற்குள்ளாகவே தென் பகுதியின் மத்திய அரசுகளும், மைசூரும் சாளுக்கியர்களின் கட்டுப் பாட்டிற்கு உள்ளாக்கப்பட்டு, அதிகாரம் நிலை நிறுத்தப்பட்டு விட்டது எனலாம். இவ்வெற்றிகளுக்குப்பின் புலிகேசி குஜராத் படையெடுப்பை மேற்கொண்டு லதா, மாளவம், கூர்ஜரம் ஆகிய அரசுகளையும் வென்று தம் ஆட்சிக்கு உட்படுத்தினர்; அதன்பின் கி.பி. 633ஆம் ஆண்டில் ஹர்ஷருடன் போரிட்டுப் பெரும் வெற்றி கண்டார்.

கடெமெனே குறிப்பில் சீலாதித்யரின் தளபதிகளான பேட்டானி சத்யங்காவும், பெத்ரா ராயாவும் சீலாதித்யர் அரியணை ஏறியபோது மகேந்திரரின் படைகளைத் தோற்கடித்தனர் எனக் காணப்படுகிறது. கி பி. 606-ல் அரியணை ஏறிய ஹர்ஷருக்குப் பதவி ஏற்ற ஆரம்ப காலத்தில் பல சிக்கல்கள் இருந்தன என்பதை நாம் முன்பே கண்டோம். அவற்றைத் தவிர்த்து 'ஐந்து இந்தியா'வை வெல்லுவதற்கு ஹர்ஷருக்கு ஆறு ஆண்டுகள் பிடித்தன. ஆகவே, அச் சமயத்தில் ஹர்ஷர் இப் பகுதியின்மீது படையெடுத்திருக்க முடியாது. ஏனெனில், அச் சமயம் இப் பகுதிகள் அனைத்தும் சாளுக் கியர்களின் வலுவான ஆற்றலுக்கு உட்பட்டிருந்தன. ஒரு வேளை ஹர்ஷர் புலிகேசியிடம் தோல்வி கண்ட நிலையில் தக்காணத்தின் மீது படையெடுத்துக் குந்தளம், காஞ்சி, கடம்பர்கள், சோழ அரசுகளைத் தாக்கி இருக்கக் கூடும் என்றால், அக்காலத் தென் இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளும், உண்மைகளும் அக் கருத்திற்கும் முரணாகவே உள்ளன.

கடெமெனே குறிப்பில் உள்ள மகேந்திரர் என்பவரை முதலாவது மகேந்திர பல்லவர் என ஏற்றுக்கொண்டால், அதில் குறிக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி நிச்சயமாகக் கி.பி. 633ஆம் ஆண்டிற்குப் பின் நடைபெற்றதாக இருக்க முடியாது. ஏனெனில், முதலாவது மகேந்திர பல்லவர் கி.பி. 630ஆம் ஆண்டு வரையே

ஆட்சி புரிந்தார். மயூராவினால் குறிப்பிடப்படும் குந்தளம், காஞ்சி, சோழ அரசுகள் முதலியன சாளுக்கியர்களின் கட்டுப் பாட்டில் இல்லாத அச் சமயம் தீபகற்பத்தில் வளர்ந்து சிறப்புக் கொண்டிருந்த பல்லவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இது வரைத் தோல்வியே இன்றி வெற்றிச் சிறப்புடன் விளங்கி வந்த இரண்டாம் புலிகேசியைக் கொன்று அவருடைய ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பல்லவ அரசரான முதலாவது நரசிம்மவர்மரே காரணமாவார். கி.பி. 654ஆம் ஆண்டுவரை தக்காணத்தில் பல்லவர்களின் ஆற்றல் ஓங்கி இருந்தது. அது போன்ற சூழ்நிலையில் ஹர்ஷர் தக்காணப் படையெடுப்பை மேற்கொண்டு மயூராவினால் குறிப்பிட்ட அரசுகளைத் தாக்கியிருக்க முடியாது எனலாம். ஹர்ஷர் புகழும் ஆற்றலும் பெற்றிருந்த பல்லவர்களை, அவர்களுடைய தலைநகரமான காஞ்சி வரை சென்று தாக்க வாய்ப்புகள் நிச்சயமாக இல்லை. ஆகவே, மயூராவின் பாடல் தம்மைப் போற்றியவரின் புகழ்பாடும் நோக்கம் கொண்டது என்பது தெளி வாகிறது, மேலும், பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் சிற்றரசர்கள் ஹர்ஷரைப் புகழ்பாடுவது போலவே, தம்மைக் காப்பாற்றும் அரசர் இந்தியா முழுவதையும் வென்று புகழ் பெற வேண்டும் என்ற புலவரின் விருப்பத்தை வரலாற்று ஆதாரமாகக் கொள்வது இயலாது. கடெமெனே குறிப்பு ஹர்ஷரின் புகழைக் குறிப்பதும் அல்ல. அதில் சீலாதித்யர், மகேந்திரர் எனக் குறிப்பிடப்பட்டி ருப்பவர்கள் தக்காணத்தில் ஏழாம் நூற்றாண்டில் ஆற்றலும் சிறப்பும் பெற்று விளங்கிய சாளுக்கிய, பல்லவ அரசர்களே ஆவர்.

B. A. சேலடோரே (Saletore), G. H. மொரைய்ஸ் (Moraes) என்ற வரலாற்று ஆசிரியர்கள் கடெமெனே வீரக்கல்லில் குறிக்கப் பட்டுள்ள சீலாதித்யர் வலபியின் இளவரசரான தேரபட்டா (Derabhata) எனக் கருதுகின்றனர். அவருடைய வமிசக் குறிப்பு ஒன்று தேரபட்டாவை மிகச் சிறப்பித்து, பூமியின் அதிபதி எனவும், சஹ்யா(Sahy)வும், விந்தியமும் அப்பூமியின் இரு அங்கங்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது.[1] தேரபட்டாவின் அரசு கர்நாடகத் திற்கும் அப்பால் விரிவடைந்து பரவி இருந்ததால், வீரக்கல் காணப் படும் மைசூரில் ஒரு பகைவருடன் அவர் போரிட்டு வென்றிருக்கக் கூடும் என அவர்கள் கருதுகின்றனர். சீலாதித்யர் போரிட்ட பகை யரசர் நொலம்பா (Nolamba) மகேந்திர பல்லவர் என சேலடோரே கருதுகிறார். ஆனால், அவர் இரண்டாவது மகேந்திர பல்லவர் என மொரைய்ஸ் கருதுகிறார். சேலடோரே குறித்துள்ளது போலவே, நொலம்பா மகேந்திர பல்லவர் அரசு பொறுப்பு ஏற்பதற்கு முன்னும், கி.பி. 668 முதல் 670 வரை ஆட்சி புரிந்த இரண்டாவது

[1] C. I. I-iii-எண் 39

மகேந்திரவர்ம பல்லவருக்கு முன்னும், தேரபட்டா இறந்து விட்டார் என L. ரைஸ் (Rice) கருதுகிறார். மேலும், தேரபட்டா வைச் சீலாதித்யர் என அவ்விருவரும் கருதுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. தேரபட்டாவின் தந்தையும், மகனும் வலபிக் குறிப்பில் சீலாதித்யர் என்ற பெயரைக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர் சீலாதித்யர் என எவ்விடத்திலும் குறிக்கப்படவில்லை. காஞ்சியின் பல்லவ அரசரும், நொலம்பா பல்லவரும் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே தேரபட்டா இறந்து விட்டார். 'பூமியின் அதிபதி' எனவும், 'விந்திய மலைகள் அதன் அங்கங்கள்'[1] எனவும் புகழ்பாடும் குறிப்பு அவருடைய மகன் சீலாதித்யரைப் பற்றியதாகும் என்பதைக் கி.பி. 627-641 வரை ஆட்சி புரிந்த இரண்டாவது துருவசேனுவின் குறிப்பில் கி.பி. 638ஆம்[2] ஆண்டிற்குப் பின் வமிச வழித்தொடர்பு விட்டுப்போன தால், சீலாதித்யர் என அழைக்கப்பட்ட தேரபட்டாவின் மகன் அதே ஆண்டு இறந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. பல்லவர்களின் ஆட்சிக்கால வரிசைப்படி இரண்டாவது மகேந்திர வர்மர் கி.பி. 668-670-ல் ஆட்சி புரிந்ததாக வரலாற்றில் குறித் துள்ளபடியாலும், இரண்டாவது துருவசேனுவின் குறிப்புப்படி கி.பி. 638ஆம் ஆண்டு தேரபட்டாவின் மகன் சீலாதித்யர் வமிச வழித் தொடர்பு விட்டுப் போய் விட்டதாக அறிவதாலும் B. A. சேலடோரே, G. H. மொரைய்ஸ் ஆகியோரின் கருத்து சரியானது என நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, G. H. மொரைய்ஸ் குறிப்பிட்டது போலக் கடெமெனே குறிப்பில் உள்ள மகேந்திரர் என்பவர் இரண்டாவது மகேந்திர வர்மர் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து ஆகும்.

விந்திய மலையை ஒட்டிய பகுதிகளை ஆட்சி[3] புரிந்த வலபி இளவரசரான சீலாதித்யர் (தேரபட்டாவின் மகன்) என்பவரே கடெமெனே வீரக்கல் குறிப்பில் காணப்படும் சீலாதித்யர் என விர்ஜி கருதுகிறார். நான்காவது தாரசேனுவுடன் அவர் இணைந்து ஆட்சி புரிந்திருக்கலாம் என விர்ஜி மேலும் கருதுகிறார். ஆனால், மேலே குறிக்கப்பட்டபடி சீலாதித்யரின்[4] (தேரபட்டாவின் மகன்) பெயர் கி.பி. 638ஆம் ஆண்டிற்குப் பின் இரண்டாவது துருவ சேனுவின் கட்டளைகளில் காணப்படாததாலும், வலபியின் மைத் ரேக வமிச ஆட்சிக் கால வரிசை அட்டவணையின்படி சீலாதித்யரின் தம்பி இரண்டாவது காரகிரகர் ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும்

[1] C. I. I-iii-பக்கம் 185
[2] K. J. விர்ஜி-Ancient History of Saurashtra-பக்கம் 80
[3] Ancient History of Saurashtra-இணைப்பு D-பக்கம் 134
[4] Ancient History of Saurashtra-பக்கம் 77 ff

என அறிவதாலும், நான்காவது தாரசேனுவின் மகன் தன் தந்தைக்குப் பின் ஆட்சி ஏற்கவில்லை என அறியலாம். இதிலிருந்து நான்காவது தாரசேனு பொறுப்பை ஏற்கக்கூடிய முதிர்ச்சி பெறாத நிலையில்[1] அவருடைய தந்தையான இரண்டாவது துருவசேனுவிற்கு முன்னரே, சீலாதித்யர் இறந்திருக்க வேண்டும் என நாம் அறிந்து கொள்ள முடிகிறது. விர்ஜி முன்பு குறிப்பிட்டபடி, சீலாதித்யரும் நான்காவது தாரசேனுவும் இணைந்து ஆட்சி புரிந்திருக்கலாம் என்ற கருத்திற்கு மேலே கூறிய கருத்து முற்றிலும் மாறுபட்டது. நான்காவது தாரசேனுவின் காலத்தில் சீலாதித்யர் வாழ்ந்திருந் தால், குடும்பத்தின் உயர்ந்த பட்டங்களைப்[2] பெற்றிருந்த நான்காவது தாரசேனு, தம்முடைய குடும்பத்தைச் சார்ந்த, உரிமை யுடன் அரசு பொறுப்பை ஏற்கக்கூடிய சீலாதித்யருடன் அதிகாரங் களைப் பகிர்ந்துகொண்டிருக்க வேண்டும். ஆகவே, சரயாஸ்ரய சீலாதித்யர் ஒரு சிறிய சாளுக்கிய அதிகாரியாக விளங்கினார்; ஆனால், வலபி இளவரசரான சீலாதித்யர் ஒரு பெரிய அரசைக் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது என்ற விர்ஜியின் கருத்து[3] ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. விந்திய மலைப் பகுதிகளை ஆண்ட சீலாதித்யரும், குஜராத் பகுதிகளை ஆண்ட சீலாதித்யரும் தங்களுக்கு உறவினரான முறையே சாளுக்கியப் பேரரசர், வாதாபிப் பேரரசர்களுக்கு உட்பட்டு ஏறக்குறைய ஒரே அந்தஸ் துடன் ஆட்சி புரிந்து வந்தனர். 'இரண்டாவது துருவசேனுவின் மகன் நான்காவது தாரசேனுவுடன் இணைந்து, சீலாதித்யர் ஆட்சி புரிந்தார்' என்ற விர்ஜியின் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்படாவிட்டாலும், 'கி.பி. 638ஆம் ஆண்டிற்குப் பின் சீலாதித்யரின் பெயர் இரண்டாவது துருவசேனுவின் கட்டளை களில் காணப்படாமலும், அவருக்குப் பதிலாக அவருடைய இளைய சகோதரர் இரண்டாவது காரகிரகரின் பெயர் காணப்படுவ தாலும் சீலாதித்யர் அந்த ஆண்டு இறந்திருக்க வேண்டும் எனக் காணப்படுகிறது' என்ற விர்ஜியின் மற்றொரு கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஆகவே, கடெமெனே குறிப்பில் காணப் படும் மகேந்திரர், இரண்டாவது மகேந்திர வர்மப் பல்லவர் என்று விர்ஜி முடிவு செய்வதால், சீலாதித்யர் எனக் குறிப்பிடப் பட்டது தேரபட்டாவின் மகன் என்று அவர் கருதுவது முரண் பட்டதாகி விடுகிறது. ஏனெனில், இரண்டாவது மகேந்திர வர்மருக்கு வெகு காலத்திற்கு முன்பே சீலாதித்யர் இறந்திருக்க வேண்டும் என்பதே விர்ஜி முன் கூறிய கருத்தாகும். கடெமெனே வீரக்கல்லில் காணப்படும் சீலாதித்யர் வலபியின் சீலாதித்யர்

1 Ancient History of Saurashtra-பக்கம் 80

2 I. A-i-பக்கம் 14; vii-பக்கம் 73 ff; xv-பக்கம் 339 ff

3 Anicent History of Saurashtra-பக்கம் 135

என வாதிடும் சமயத்தில், அவர் தம் தந்தையைப் போன்று சிறப்பாக ஆட்சி புரியாமல், கர்நாடகத்தின் எல்லை ஆரம்பிப்பதற்கு முன்பே முடிந்துவிடும் விந்திய மலைக்கு அருகே உள்ள பகுதிகளை மட்டும் ஆட்சி புரிந்தார் என்பதை அவர்கள் மறந்து விடுகின் றனர். வலபியைப் பிற்காலத்தில் ஆண்ட அரசர்களின் குறிப்பு களில் தேரபட்டா, அவருடைய மகன் சீலாதித்யர் ஆகியோர் பெற்றதாகக் குறிக்கப்பட்டுள்ள வெற்றிகள் மிகைப்படுத்தப்பட்டு எழுதப்பட்டவையாகவே இருக்க வேண்டும். ஏனெனில், அவை புலிகேசி ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன் நிலவிய குழப்பமான காலத்தின் இறுதியில் நடத்தப்பட்ட சிறிய தாக்குதல்களாக இருக்க வேண்டும். மேலும், வலபிக் குறிப்புகளிலிருந்து மைத் ரேகர்கள் கர்நாடகப் பகுதிகளை வென்று கட்டுப்படுத்தியிருந்தது மிகக் குறுகிய காலமே நீடித்தது என்பதை அறிகிறோம். ஏனெனில், அவற்றில் தேரபட்டா விந்தியப் பகுதிகளுக்கும், சஹ்யா(Sahya) விற்கும் அரசர் எனவும், அவருடைய மகன் சீலாதித்யர் விந்தியப் பகுதிகளுக்கு மட்டும் அரசர் என்றும் குறிப்பிட்டு உள்ளது.

மைத்ரேகர்களில் பலர் சீலாதித்யர் என்ற பெயரைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் காணப்பட்டனர் என்பதை ஏழு மைத்ரேக அரசர்களும், அக்குடும்பத்தைச் சார்ந்த வேறு பலரும் அப் பெயரைக் கொண்டிருந்தனர் என்பதிலிருந்து அறியலாம். அக் காலத்தில் வேறு நாடுகளை ஆட்சி புரிந்த சீலாதித்யர்களுடன் ஏழு மைத்ரேக சீலாதித்யர்களை இணைத்துக் குழப்பும் தவறு வரலாற்றில் பல இடங்களில் காணப்படுகிறது. முன்பு குறிப்பிட்டது போல B. A. சேலடோரேயும், G. H. மொரைய்ஸும் தேரபட்டா, சீலாதித்யர் என்ற பட்டம் பெற்றி ருந்தார் எனத் தவருகப் புரிந்துகொண்டு கடெமெனே குறிப்பில் உள்ள சீலாதித்யர் தேரபட்டா எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இங்குச் சீலாதித்யர் என்பது யாரைக் குறிக்கும் என்பதில் ஏற்படும் குழப்பங்களை விளக்கி அண்மையில் R. C. மஜூம்தார் கருத்துத் தெரிவித்துள்ளார்.[1] ஆனுல், இவ் விளக்கங்களை மூன்ருவது சீலாதித்யரின் ஆட்சிக் காலத்தைப் பற்றி ஆராயும் சமயத்தில் குறிப்பிட்டு உள்ளதால், அவர் மூன்ருவது சீலாதித்யரையே சேலடோரே, மொரைய்ஸ் ஆகியோர் தேரபட்டா என்று குறிப் பிட்டுள்ளனர் எனத் தவருகப் புரிந்துகொண்டுள்ளார் எனத் தெரிகிறது. தேரபட்டா, வலபிக் குறிப்புகளில் சீலாதித்யர் எனக் குறிக்கப்படவில்லை என்பதை மஜூம்தார் கவனிக்கத் தவறி விட்டார் எனவே தோன்றுகிறது. மஜூம்தாரால் மூன்ருவது

[1] H. C. I. P-iii-பக்கம் 148-9

சீலாதித்யர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவரையே விர்ஜி இரண்டாவது சீலாதித்யர் எனக் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், வலபியை அரசு புரிந்த சீலாதித்யர்களுக்கும், அக் குடும்பத்தைச் சேர்ந்த அதே பெயரைக் கொண்ட மற்ற இளவரசர்களையும் விர்ஜி பகுத்து உணர்கிறார். விர்ஜியின் பகுப்பு முறையே சரியானது எனலாம்.

கடெமெனே வீரக்கல் குறிப்பில் உள்ள மகேந்திரர், இரண்டாவது மகேந்திர வர்மர் எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கருதுவதால், அவரது ஆட்சிக் காலத்திலேயே (கி.பி. 668-670) மைத்ரேக இரண்டாவது சீலாதித்யர் (கி.பி. சுமார் 658-685) ஆட்சி புரிந்ததாகக் கருதப்பட்டாலும், கீழ்க்காணும் விளக்கங்களில் உள்ள சான்றுகளின் காரணமாக வீரக்கல்லில் குறிப்பிடப் பட்டுள்ள சீலாதித்யர் அவரே எனக் கூற முடியாது.

சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்யரின் சகோதரர் தராஸ்ரய ஜெயசிம்ம வர்மர் (Dharasraya Jayasimha Varmar) கி.பி. 666ஆம் ஆண்டு வெளியிட்ட நாசிக் செப்பேட்டில் மாகிக்கும் நர்மதை ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் வஜ்ஜடா(Vajjada)வின் மொத்தப் படைகளையும் அவர் வென்றதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஒரு காலத்தில் ஹர்ஷரையும், வஜ்ரதா (Vajrata) வையும் வென்ற சாளுக்கியர்களைத் தாங்கள் வென்று கட்டுப்படுத்தியதாகப் பிற்காலத்தில் பல ராஷ்டிரகூடக் குறிப்புகள் பெருமை கொள்கின்றன. ராஷ்டிரகூடக் குறிப்புகளில் வஜ்ரதா எனக் குறிப்பிடப்பட்டவரே தராஸ்ரய ஜெயசிம்ம வர்மரின் குறிப்பில் வஜ்ஜடா எனக் குறிப்பிடப்பட்ட அரசராவார். அவர் ஓர் ஆற்றல் மிக்க அரசராக விளங்கினார். மாகிக்கும் நர்மதை ஆற்றிற்கும் இடையில் உள்ள பகுதியை அவர் ஆட்சி புரிந்து வந்தார். மேலும், போர் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு (கி.பி. 666) வஜ்ரதா என்ற பெயரில் குறிக்கப்பட்டவர் இரண்டாவது சீலாதித்யராகவே இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. இருப்பினும், நர்மதை ஆற்றிற்கு வடக்கில் உள்ள பகுதியை மைத்ரேகர்கள் திரும்பக் கைப்பற்றினர் என்பதைக் கிடாகா (Khetaka), பாருகச்சா(Bharu-Kachchha)வில் வழங்கப்பட்ட அவர்களுடைய கட்டளைகளிலிருந்து அறிகிறோம். கி.பி.705[1]ஆம் ஆண்டு பாருகச்சா விஷயாவின் ஆட்சிப் பொறுப்பைச் சாளுக்கியர்களுக்கு உட்பட்டிருந்த கூர்ஜர சிற்றரசர்கள் பெற்றனர்.

முதலாவது விக்கிரமாதித்யரின் காலத்தில் சாளுக்கியர்கள் இரண்டு ஆற்றல் மிக்க பகைவர்களைச் சமாளிக்க நேர்ந்தது. வட பகுதியில் மைத்ரேகர்களும், தென்பகுதியில் பல்லவர்களும்

[1] மூன்றாவது ஜெயபட்டாவின் நவசாரிக் கட்டளை-I-A-xiii-70 ff

தொல்லைகளை விளைவித்தனர். முதலாவது விக்கிரமாதித்யர் தம் சகோதரர் தராஸ்ரய ஜெயசிம்ம வர்மர், அவருடைய மகன் சரயாஸ்ரய சீலாதித்யரின் உதவியுடன் அவ்விரு பகைவர்களையும் வென்றார். தராஸ்ரய ஜெயசிம்மர் கி.பி. 666ஆம் ஆண்டு இரண்டாவது சீலாதித்யர் என்று அழைக்கப்பட்ட வஜ்ரதாவை வென்றதாகக் குறிப்பிடப்படுவதால், இரண்டாவது சீலாதித்யரும் கி.பி. 668-670-ல் ஆட்சி புரிந்த இரண்டாவது மகேந்திர பல்லவரும் மைசூர்ப் பகுதியில் போரிட்டிருக்க முடியாது. மைத்ரேக இரண்டாவது சீலாதித்யர் மைசூர் வரை படையெடுத்து வந்து இரண்டாவது மகேந்திர பல்லவருடன் போரிட்டார் என்று வாதத்திற்கு ஒப்புக்கொண்டாலும், மைத்ரேகர்கள் பல்லவர்கள் ஆகிய இருவருக்கும் பொதுவான எதிரியாகிய சாளுக்கியர்களுக்குச் சாதகமாக அவர்கள் இருவரும் போரிட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்ற வினா தோன்றுகிறது.

சாளுக்கிய அரசர்களான விக்கிரமாதித்யர், வினயாதித்யர் (Vinayaditya) ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த சாளுக்கிய இளவரசரான சரயாஸ்ரய சீலாதித்யரே, கடெமெனே வீரக் கல்லில் குறிக்கப்பட்டிருக்கும் சீலாதித்யராக இருக்க வேண்டும் என்ற மஜூம்தாரின் கருத்து[1] பொருத்தமானதாகக் காணப் படுகிறது. சரயாஸ்ரய சீலாதித்யரின் தந்தை தராஸ்ரய ஜெயசிம்ம வர்மரின் ஆற்றல் வளர்ச்சிக்கு விக்கிரமாதித்யரே காரணம் என சரயாஸ்ரய சீலாதித்யரின் கி.பி. 671 நவசாரி, கி.பி. 692 சூரத் குறிப்புகள் புகழ்ந்துரைக்கின்றன. ஜெயசிம்ம வர்மர், 'தம்முடைய தடையற்ற பராக்கிரமத்தால் பல்லவர்களை வென்று, மேலும் கணக்கற்ற போர்களில் வெற்றிகளை அடைந்து மாசற்ற புகழும் பெற்றார்' என அவை புகழ்ந்துரைக்கின்றன. தராஸ்ரய ஜெயசிம்ம வர்மரும், அவர் மகன் சரயாஸ்ரய சீலாதித்யரும் பல வெற்றிகளைப் பெற்றனர். குஜராத்தில் கணிசமான பகுதிகளை அவர்கள் கட்டுப்படுத்தி வந்தனர் என்பது, சரயாஸ்ரயவின் நவசாரி, சூரத் கட்டளைகளில் அவர் கொடையளித்த சில கிராமங்களின் பெயர்களிலிருந்து தெரிகிறது. இருப்பினும், அவர்கள் ஆதிக்கப் பட்டங்கள் பெற்றிருக்கவில்லை. சாளுக்கிய அரசர்களின் ராஜப் பிரதிநிதிகளாகவே நீடித்து வந்தனர் என்பது அக் கட்டளைகளிலிருந்து தெளிவாகக் காணப்படுகிறது. சாளுக்கிய அரசர் அவ்விருவர்களுக்கும் ஆளுநர் பொறுப்பை அளித்துக் கௌரவித்ததால், பல்லவர்களையும் மைத்ரேகர்களையும் வென்று கட்டுப்படுத்தி விக்கிரமாதித்யருக்கு அவர்கள் பெரிதும் உதவினர்.

[1] I.H.Q-v-பக்கம் 235
H.C.I.P-iii-பக்கம் 106-அடிக்குறிப்பு 1

விக்கிரமாதித்யருக்காக சரயாஸ்ரய சீலாதித்யர் பல்லவர்களுக்கு எதிராக மேற்கொண்ட பல வெற்றிப் போர் நிகழ்ச்சிகளில் ஒன்றையே கடெமெனே வீரக்கல் குறிப்பு உணர்த்துகிறது. ஜெயசிம்ம வர்மரும் அவருடைய மகனும் அளித்த கொடைகளின் காலமும், இரண்டாவது மகேந்திர வர்மரின் காலமும், கடெமெனே வீரக்கல் குறிப்பின் சொற்றொடர் அமைப்பும் சாளுக்கிய இளவரசரான சரயாஸ்ரய சீலாதித்யரையே வீரக்கல் குறிப்பில் சீலாதித்யர் எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வரச் செய்கின்றன. ஜெயசிம்மரின் நாசிக் செப்பேடுகளின்[1] காலம் கி.பி. 606 ஆகும். நமக்கு இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களின்படி ஜெயசிம்மரின் மகன் சரயாஸ்ரய சீலாதித்யரின் முதல் கட்டளையின் காலம் கி.பி. 671 ஆகும். அதிலிருந்து ஜெயசிம்மர் கி.பி. 666லிருந்து கி.பி. 671ஆம் ஆண்டிற்குள் இறந்து, சரயாஸ்ரயர் அப் பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும் என அறியலாம். இரண்டாவது மகேந்திரவர்ம பல்லவரின் இரண்டு ஆண்டுகால ஆட்சியும் இதே காலத்தில் நடைபெற்றது. கடெமெனே குறிப்பின்படி மகேந்திர வர்மர் தோல்வி அடைந்தது 'ஸ்ரீ சீலாதித்யர் தம் நாட்டின் அரியணை ஏறிய சமயம்' ஆகும். முன் குறிப்பிட்டுள்ள இரண்டு கட்டளைகளிலிருந்து அது நிகழக் கி.பி. 666ஆம் ஆண்டிற்குப்பின் அதிக காலமாகவில்லை என அறிகிறோம். இரண்டாவது மகேந்திரரின் ஆட்சி கி.பி. 668ஆம் ஆண்டு ஆரம்பமாயிற்று. அதில் சரயாஸ்ரய சீலாதித்யர் 'ஸ்ரீ' என்ற எளிய பட்டத்தை மட்டுமே கொண்டிருக்கிறார். 'யுவராஜா'வாக இருந்த சீலாதித்யருக்கு அது பொருத்தமானதாகக் காணப்படுகிறது. அந்த எளிய பட்டம் ஹர்ஷருக்கோ, மைத்ரேக அரசர் போன்ற அந்தஸ்து கொண்டவருக்கோ பொருந்தவில்லை. ஆகவே, கடெமெனே வீரக்கல் ஹர்ஷப் பேரரசின் பரப்பை உணர்த்தும் சான்று என்பதைப் புறக்கணிப்பதே நலம்.[2]

நேபாளம்

நேபாளம் ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்ற கருத்து பல வரலாற்று ஆசிரியர்களிடையே நிலவுகிறது. பூலெர், பகவன்லால் இந்திராஜி, பிளீட், ஸ்மித் போன்றவர்கள் ஹர்ஷர் நேபாளத்தைக் கட்டுப்படுத்தி இருந்தார் என்ற கருத்தை ஆதரிக்கின்றனர்.

யுவான் சுவாங்கினால் நி போ லோ (Ni-po-lo) எனக் குறிப்பிடப்பட்ட நேபாளம் க்ஷத்திரிய லிச்சாவிகளால் ஆளப்பட்டு

[1] கார் (Khare)-Sources of the Medieval History of Dcccan-i-பக்கம் 8 ff; மிராசி I.H.Q.-XX-353 ff

[2] D. தேவஹூட்டி-ஹர்ஷா-பக்கம் 105

வந்தது. அதன் அரசர்கள் பௌத்தக் கருத்துகளில் நம்பிக்கை கொண்டவர்களாக விளங்கினர். அம்ச வர்மர் என்ற நேபாள அரசர் தமக்கென ஒரு புதிய வரலாற்றைக் குறிக்கும் முறையே மேற்கொண்டார் எனவும் சீனத்துப் பயணி குறிப்பிட்டுள்ளார்.[1]

நேபாளம் ஹர்ஷருக்கு உட்பட்டிருந்தது என்ற கருத்தை லெவியும், இட்டிங் ஹௌசனும் மறுக்கின்றனர் இது ஒரு முக்கியப் பிரச்சினையாக இருப்பதால் நமக்குக் கிடைத்திருக்கும் ஆதாரங்களையும் சான்றுகளையும் மிகக் கவனத்துடன் ஆராய்வது அவசியம் எனலாம்.

முதலில் நேபாளம் ஹர்ஷருக்கு உட்பட்டிருந்தது என விளக்கும் சில குறிப்புகளையும் சான்றுகளையும் காண்போம்: நமக்குக் கிடைத்துள்ள சம்வத் (Samvat) 34, 39, 45 எனக் குறிக்கப்பட்டுள்ள நேபாளக் குறிப்புகள்[2] அம்ச வர்மர் என்ற அரசரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அக் குறிப்புகள் அம்ச வர்மரை ஒரு சாமந்தா அல்லது மகா சாமந்தா எனக் குறிப்பிட்டுள்ளன. ஆகவே, எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றிப் பேரரசரைத் தவிர வேறு எவரும் தனக்கென வரலாற்றைக் குறிக்கும் முறையைக் (Samvat) கொண்டிருக்க முடியாது[3] எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதால், அஃது அம்ச வர்மரின் ஆட்சிக் காலத்தைக் குறிக்காது எனக் கருதப்படுகிறது. அம்ச வர்மரின் குறிப்புகளின் தன்மையைக் காணுமிடத்து அவை ஆறும் நூற்றுண்டின் கடைசியில் அல்லது ஏழாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் குறிக்கப்பட்டவை எனத் தெரிகிறது.[4] ஆகவே, அந்த சகாப்தம் ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பது போலக் காணப்படுகிறது. அச் சகாப்தம் பெரிதும் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்பட்டாலும் நேபாளத்தைத் தவிர வேறு எந்த அரசும் அதைப் பின்பற்றவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.[5] உரிமையுடைய எந்த ஓர் அரசும் வேறு ஓர் அரசர் தோற்றுவித்த சகாப்தத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது; எனவே, கனோஜுக்கு உட்பட்டு இருந்ததால் தான் நேபாளம் ஹர்ஷ சகாப்தத்தைப் பின்பற்றியது எனக் கருத இடமிருக்கிறது. ஓர் இந்திய அரசர் வேறு ஓர் அரசின் சகாப்தத்தைப் பின்பற்றும் வேளையில், அதைப் பெற்றுக்கொண்டவர் அதை ஏற்படுத்தியவருக்கு உட்பட்டு இருந்திருக்க வேண்டும்[6] என்பதே மரபாகும்.

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 84; பீல்-ii-பக்கம் 81
[2] I.A.IX-பக்கம் 169 ff-எண்கள் 6,7,8
[3] I.A-XIII-பக்கம் 420
[4] I. A-XIII-பக்கம் 420
[5] I. A-XIII-பக்கம் 421
[6] I. A-XIX-பக்கங்கள் 40-41

அடுத்ததாக, ஹர்ஷ சகாப்தம் நேபாளத்தில் பின்பற்றப் பட்டது என்பதற்குக் குறிப்பு எண் 15 மேற்கோள் காட்டப் படுகிறது. அதில் சம்வத் 153ஆம் ஆண்டு[1] குறிக்கப்பட்டுள்ளது. அதில் 'ஜெயதேவரின் தாய் வத்ச தேவி மௌகாரி இளவரசரான யோக வர்மரின் மகள்' எனவும், 'மகதத்தின் அரசரான ஆதித்யசேனரின் பேத்தி' எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. மகதத்தின் ஆதித்யசேனர் பற்றி ஆண்டு 66 என்ற 'ஏதோ ஒரு சகாப்தத்தைப் பின்பற்றிக் குறிக்கப்பட்டுள்ள' ஷாபூர் (Shahpur)[2] கல்வெட்டுக் குறிப்பிலிருந்து நாம் அறிந்தவரை உள்ள ஆதித்யசேனரின் வரலாறு ஹர்ஷரின் சகாப்தத்திலிருந்தே குறிப்பிட்டு இருக்க வேண்டும்[3] எனக் கருதப்படுகிறது. ஆதித்ய சேனருக்கும் அவருடைய கொள்ளுப்பேரர் ஜெயதேவருக்கும் இடைப்பட்ட காலம் 87 ஆண்டுகள் ஆகும் அல்லது மூன்று தலை முறைக் காலமான சுமார் 78 ஆண்டுகள் எனக் கொள்ளலாம்.[4] இக் குறிப்பின் காலத்தை ஆராயும் சமயத்தில் ஹர்ஷரின் சகாப் தத்தையே அவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும் எனக் கூறலாம்.[5]

அம்ச வர்மர் அரச பதவி ஏற்பதற்குச் சற்றுக் காலத்திற்கு முன் விக்கிரமாதித்யர் நேபாளத்திற்கு வந்து சென்றதாக வமிசா வழி என்ற நேபாள வரலாற்று நூல் கூறுகிறது. விக்கிரமாதித்யர் தம்முடைய சகாப்தத்தை அங்கு நிறுவச் சென்றார் எனவும் கூறப் படுகிறது. இங்கு விக்கிரமாதித்யர் எனக் கூறப்படுவது ஹர்ஷரைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது எனக் கருதப்படுகிறது. ஏனெனில், அக் காலத்தில் ஹர்ஷரைத் தவிர வேறு சிறப்புப் பெற்ற அரசர் யாரும் வட இந்தியாவில் ஆட்சி புரியவில்லை.

அடுத்ததாக, ஹர்ஷரின் இனத்தைச் சேர்ந்த பைஸ் (Bais) ராஜபுத்திரர்கள் நேபாளத்தில் காணப்படுகின்றனர் என வமிசா வழியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய அரசர்கள் படை யெடுப்பில் வெற்றி பெற்ற சமயங்களில் வெல்லப்பட்ட பகுதிகளில் உள்ள நிலத்தைத் தம் இனத்தைச் சார்ந்தவர்களுக்குக் கொடை யாக அளிப்பது சாதாரணமாக நிலவி வந்த வழக்கம் எனப் பல பழங்காலக் கல்வெட்டு, செப்பேட்டுக் குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது.[6] நேபாளத்தில் பைஸ் ராஜபுத்திரர்கள் காணப்படுவது

[1] I. A-ix-பக்கங்கள் 178, 181
[2] C. I. I-iii-பக்கங்கள் 209-10
[3] C. I. I-iii-பக்கம் 120
[4] I. A-xiii பக்கம் 417
[5] I. A-xiii-பக்கம் 421
[6] I. A-xiii-பக்கம் 421

ஒரு காலத்தில் பைஸ் அரசரின் அதிகாரம் நேபாளத்தில் நிலவியதைக் குறிக்கிறது. அந்த பைஸ் அரசர் ஹர்ஷராகவே இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. அதற்கு யுவான் சுவாங், ஹர்ஷர் பைஷி (Feishi) இனத்தைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிட்டுள்ளதும், அதுவே பைஸ் (Bais) ராஜபுத்திரர்கள் என A. கன்னிங்ஹாமும் கருதுவதே காரணம் ஆகும்.[1]

அடுத்ததாக பாணரின் குறிப்பு மேற்கோள் காட்டப்படுகிறது. ஹர்ஷர் 'எளிதில் செல்ல முடியாத பனி படர்ந்த மலைப்பகுதி அரசிடமிருந்து திறை பெற்றார்'[2] என பாணர் குறிப்பிட்டிருப்பது நேபாளத்தைத்தான் எனக் கருதுகின்றனர்.

அம்ச வர்மர் பின்பற்றியுள்ள சகாப்தத்தை அறிந்துகொள்வதில் பல சிக்கல்கள் உள்ளன. அதற்கு மிக முக்கியமான காரணம் நேபாளத்தில் பின்பற்றப்பட்டு வந்த இரட்டை அரசு முறை எனலாம். நேபாளத்தை ஆண்ட சட்ட பூர்வமான அரசர் மான கிரகர் (Mana Griha) என்பவராவார். ஆனால் மகா சாமந்தா அல்லது சாமந்தா அந்தஸ்து வகித்து வந்த அம்ச வர்மர் நேபாளத்தை உண்மையிலேயே ஆட்சி புரிந்து வந்தார். அம்ச வர்மரும் அவருடைய வழிவந்தவர்களும் 30-லிருந்து 194ஆம் ஆண்டு வரை சம்வத் (Samvat) எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அம்ச வர்மர் மான தேவர் என்பவரைக் கி.பி. 576ஆம் ஆண்டு பதவியில் அமர்த்தினர். மானதேவருக்குப் பிறகு குணகாம தேவர் என்பவரும், அவருக்குப்பின் சிவ தேவர் என்பவரும் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டனர். சிவ தேவரைக் கி.பி. 606-ல் அம்ச வர்மர் பதவியிலிருந்து நீக்கினர்; அல்லது அவர் இறந்திருக்க வேண்டும். அம்ச வர்மர் சட்டபூர்வ ஆட்சிப் பொறுப்பைக் கி.பி. 606ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டார். அம்ச வர்மர் அதிலிருந்து தம் சகாப்தத்தைக் குறிப்பதற்குப் பதில் தாம் உண்மையிலேயே அதிகாரத்தைக் கைப்பற்றிய கி.பி. 576-லிருந்து குறிக்க விரும்பி, கி.பி. 606 என்பதை 30[3] எனக் குறித்தார். அவரது அடுத்தடுத்த குறிப்புகள் 32 (கி.பி. 608[4]), 34 (கி.பி. 610[5]), 39 (கி.பி. 615[6]), 45 (கி.பி. 621[7]) ஆம் ஆண்டுகளில் குறிக்கப்பட்டன. அவற்றில்

[1] C. A. G. I. பக்கங்கள் 432-33
E. I. I-பக்கம் 68-எண் 4

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 91; மொழிபெயர்ப்பு-பக்கம் 76

[3] Levi-எண் 13; Gnoli-எண் 35

[4] Levi-எண்கள் 14, 15; Gnoli-எண்கள் 36, 37

[5] பென்டால் (Bendall)-எண்-2; இந்திரஜி-எண் 6; Gnoli-எண்கள் 38, 39

[6] இந்திரஜி-எண் 7; Gnoli-எண் 41

[7] இந்திரஜி-எண் 8; Gnoli-எண் 48

முதல் மூன்றிலும் அம்ச வர்மர் ஸ்ரீ மகா சாமந்தா எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கி.பி. 637-ல் யுவான் சுவாங் வைசாலி சென்ற சமயம் அம்ச வர்மர் இறந்து போய், நேபாளம் உதய தேவர் என்ற லிச்சாவி அரசரால் ஆளப்பட்டது[1] என அறிகிறோம். அவருக்குப் பின் மேலும் இரண்டு அரசர்கள் பதவியேற்று ஆண்ட பின்னரே அவருடைய மகன் நரேந்திர தேவர் அரியணையைக் கைப்பற்றினார். திபேத்தியர்களின் ஆற்றலும் துணையும் கி.பி. 641ஆம் ஆண்டு அரசைக் கைப்பற்ற அவருக்கு உதவின. நரேந்திர தேவரின் 69 (கி.பி. 645), 82 (கி.பி. 658)ஆம் ஆண்டுக் குறிப்புகள் சீனப் பயணி நேபாளத்திற்குச் சென்ற ஆண்டைச் சரியாகக் கணிக்க உதவுகின்றன. ஆகவே, ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தைப் பின்பற்றிக் குறிப்பதாக இருப்பின் சிக்கல்கள் தோன்றுவதிலிருந்து, நேபாள அரசர்கள் தமக்கென ஒரு சகாப்தத்தைத் தேர்ந்தெடுத்துக் குறித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

அம்ச வர்மர் தமக்கென ஒரு சகாப்தத்தைப் பின்பற்றினார் என்று ஏற்றுக்கொண்டால் ஜெயதேவரின் எண் 15 குறிப்பு வலுவிழந்து விடுகிறது. கி.பி. 576ஆம் ஆண்டும், சம்வத் 153-ம் கி.பி. 729ஆம் ஆண்டைக் குறிக்கிறது. ஷாபூர் குறிப்பில் உள்ள ஆண்டு 66, பிளீட் குறிப்பிடுவது போல ஹர்ஷரின் சகாப்தத்தைக் குறிக்கும் எனின், ஆதித்யசேனருக்கும் அவரது கொள்ளுப் பேரர் ஜெயதேவருக்கும் உள்ள இடைக்காலம் 57 ஆண்டுகள் என ஆகிறது. அதாவது, இரண்டு இந்தியத் தலைமுறைக் காலத்திற்குச் சற்று அதிகம் எனலாம்.[2] ஆனால், முன் கூறியபடி அது 87 ஆண்டுகள் ஆகும். ஆகவே, தவறுகள் வெளிப்படை யாகவே காணப்படுகின்றன. எனவே, அம்ச வர்மர் தனியொரு சகாப்தத்தையே பின்பற்றியிருக்க வேண்டும் என உறுதியாகக் கூறலாம்.

வமிசாவழியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி வரலாற்றுப் பூர்வமாக ஆதாரமற்றது எனவே கொள்ள வேண்டும். அதற்குச் சில எடுத்துக்காட்டுகளைத் தரலாம். அம்ச வர்மர் கலியுகம் 3000[3] ஆண்டில் (கி.மு. 101) பதவியேற்றதாக வமிசாவழி கூறுகிறது. யுவான் சுவாங் குறிப்புகளுக்கும், மற்றுமுள்ள சான்றுகளுக்கும் அஃது எவ்வளவு முரண்பட்டது என்பதை

1 வாட்டர்ஸ்-ii-பக்கம் 84; பீல்-ii-பக்கம் 81

2 ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகளின் புள்ளி விவரக் குறிப்புகளின்படி மூன்று தலைமுறைக் காலம் 78 ஆண்டுகளாம்.

3 I.A-xiii-பக்கம் 418

எளிதாக அறிந்துகொள்ளலாம். அடுத்ததாக, அம்ச வர்மரின் ஏழாவது தலைமுறை அரசர் வீரதேவர் கலியுகம் 3623(கி.பி. 522)-ல் ஆட்சி புரிந்ததாக வமிசாவழி கூறுகிறது. அம்ச வர்மருக்கும் ஏழாவது தலைமுறைக்கும் இடைக்காலம் ஏறக்குறைய 600 ஆண்டுகள் ஆகின்றன. வமிசாவழியை வரலாற்று ஆதாரமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்பதற்கு இவை போன்ற பொருத்தமற்ற செய்திகளே சான்றுகள் ஆகும்.

ஹர்ஷர் விக்கிரமாதித்யர் என எவ்விடத்திலும் குறிப்பிடப் படவில்லை. பொதுவாக இந்தியப் பேரரசர்கள் அதிகார வளர்ச்சி பெற்ற நிலையில் ஏற்றுக்கொள்ளும் பட்டமாக விக்கிரமாதித்யர் விளங்கினாலும், பாணர் ஓர் இடத்தில்கூட அப் பட்டத்துடன் ஹர்ஷரைக் குறிப்பிடவில்லை. ஆகவே, விக்கிரமாதித்யர் என ஹர்ஷரைக் குறிப்பிடுவது குழப்பத்தையே விளைவிக்கிறது. தவிர, விக்கிரமாதித்யர் நேபாளம் சென்று தம்முடைய சகாப்தத்தை ஏற்படுத்தினார் என்று கூறுவதன் மூலமாக வமிசாவழியின் ஆசிரியர்கள், நேபாளத்தின் சகாப்தத்தைப் புகழ் பெற்றுத் திகழ்ந்த விக்கிரமாதித்ய சகாப்தத்துடன் இணைக்க முயன்றிருக்க வேண்டும்.

அடுத்த சிக்கல் பைஷி (Feishi) எனக் குறிப்பிடப்பட்டுள்ள இனம் பைஸ் ராஜபுத்திரர்கள் (Bais Rajputs) என அடையாளம் காண்பதில் உள்ளது. யுவான் சுவாங் ஹர்ஷரை பைஷி எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஹர்ஷர் பைஸ் ராஜபுத்திர அரசர் எனக் கன்னிங்ஹாம் கருத்துக் கொண்டுள்ளார். ஆனால், சீனக் குறிப்புகள் அவ்வாறு கருதுவதற்கு இடம் தரவில்லை. யுவான் சுவாங் பைஷி எனக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் ஹர்ஷர் வைசியர் என்பதைக் குறிக்கிறார் எனவும் கருதப்படுகிறது. பைஸ் ராஜ புத்திரர்கள் நேபாளத்தில் காணப்படுவதைக்கொண்டு நேபாளம் ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனக் கொள்வது தவறாகும் என R. S. திரிபாதி கருதுகிறார். அஃது ஒரு 'வலுவற்ற வாதம்' என தேவஹூட்டியும் கருதுகிறார்.[1]

மேலும், ஹர்ஷ சரித்திரத்திலுள்ள 'பனி படர்ந்த மலை' என்ற பாணரின் குறிப்பு, ஹர்ஷர் நேபாளத்தின்மீது அரசியல் உரிமைகள் கொண்டிருந்தார் என்பதற்குப் போதுமான சான்று இல்லை எனக் கருதப்படுகிறது. அது நேபாளத்தைக் குறிக்காது; துக்காரா(Tukhara)வைக் குறிக்கும்[2] என M.L. இட்டிங் ஹௌசன்

1 D. தேவஹூட்டி -ஹர்ஷா (Harsha)-பக்கம் 109
2 ஹர்ஷ வர்த்தனர்-பக்கம் 47

கருதுகிறார். ஹர்ஷர் பனி படர்ந்த மலைப்பகுதிவாழ் ஆற்றல் மிக்க துர்கா இன இளவரசியை மணந்த நிகழ்ச்சியை அது குறிக்கிறது என R. S. திரிபாதி கருதுகிறார். இமயமலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த பல அரசுகள் ஹர்ஷருக்கு உட்பட்டிருந்தன. ராஜ்யவர்த்தனர் ஹூணப் படையெடுப்பை மேற்கொண்டு படையை நடத்திய சமயம் இது போன்ற பல அரசுகளைக் கடந்து சென்றார். பாணரின் குறிப்பு, ஹர்ஷர் புத்தரின் புனிதப் பல்லை எடுத்துவர விரும்பிக் காஷ்மீரம் சென்றதையும் தம்முடைய ஆற்றல் அச்சுறுத்தல் மூலமாகவே காஷ்மீர அரசரைப் பணியச் செய்து புனிதப் பொருளைக் கொண்டு வந்த நிகழ்ச்சியையும் குறிக்கும்.

நீண்ட விவாதங்களும், தரப்பட்ட சான்றுகளும் ஹர்ஷர் நேபாளத்தின்மீது அதிகாரம் கொண்டிருந்தார் என்பதையோ, அவருடைய சகாப்தம் அங்குப் பின்பற்றப்பட்டது என்பதையோ நிரூபிக்க இயலவில்லை. ஆகவே, கனோஜின் அதிகாரக் கட்டுப் பாட்டிலிருந்து நேபாளத்தையும் விலக்கி விடுவதே ஏற்புடையது.

5. ஹர்ஷரின் அரசாங்க நிருவாகம்

ஹர்ஷர் காலத்திய வரலாற்றுக் குறிப்புகளைக்கொண்டு அவரது அரசாங்க அமைப்பையும், பல்வேறு துறைகளில் அதன் நிருவாகத்தையும் விளக்கமாக அறிந்துகொள்ள முடிகிறது.

மக்கள் ஆக்கமுடைய சிந்தனைத் திறன் உடையவர்களா யிருந்தனர். அவர்கள் மகிழ்ச்சியாக மாற்றங்களை வரவேற்று, ஒரே கருத்தில் ஊறிப் போகாதவர்களாக விளங்கினர். இருப்பினும், அவர்களிடம் குப்த காலத்து முன்னேற்ற நிலை காணப்படவில்லை. எளிமையும், தூய்மையும், வீரமும் சற்றுக் குறைந்து ஆடம்பரங் களுக்கு இடமளித்தனர். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டாக வலுவான அரசு இன்மையின் காரணமாகச் சற்று செல்வநிலை குன்றி இருந்தது. குப்தர்களின் காலத்திய சிறப்பான சட்ட ஒழுங்கு முறைகள் ஹர்ஷர் காலத்து இல்லை எனலாம். சீனத்துப் பயணி யுவான் சுவாங்கின் குறிப்புகளும், வாட்டர்ஸ், பீல் ஆகியோரின் மொழி பெயர்ப்புகளும் ஹர்ஷரின் காலத்து நிலையைப்பற்றிய முழு விளக் கங்களைத் தருகின்றன.[1]

கல்வி

புத்த மத இலக்கியங்களைக் கற்றலும் சேகரித்தலும் யுவான் சுவாங்கின் குறிக்கோளாக இருப்பினும், தாம் இந்தியாவில் கண்ட மற்ற அமிசங்கள் பற்றியும் அவர் விளக்கம் தருகிறார். மக்களி டையே கல்வியறிவு அதிகமாகக் காணப்பட்டது. பலர் கல்வி வல்லுநர்களாக விளங்கினர். இலக்கணம், தர்க்கம் (Logic), அறிவியல், கலை முதலியவற்றில் அவர்கள் சிறந்து விளங்கினர். ஹர்ஷரின் காலத்தில் வட இந்தியாவில் காஷ்மீரம், வலபி, காசி, நாளந்தா முதலியவை பெரும் கல்வி நிலையங்களாக விளங்கின. அவற்றிற்கு அடுத்தபடியாகக் கனோஜும், பிரயாகையும், ஜலந்தராவும் கல்வி, அரசியல் சமயத் துறைகளில் சிறப்புப் பெற்று விளங்கின. இதே போன்ற சிறப்பான கல்வி நிலை பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிவரை பக்த்யார் கில்ஜி(Bakhtyar Khilgi)யின் படைகள் கிழக்குக் கல்விச் சாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் அழிக்கும் வரை நீடித்து வளங்கொழித்தது. அண்மையில் லியாங்

[1] இந் நூலின் பதினைன்றாம் அத்தியாயம் காண்க.

சி-சோவ் (Liang-chi-chao) என்ற அறிஞர் சீனக் குறிப்புகளை ஆராய்ந்து ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரை ஏறக்குறைய 162 சீனப் பயணிகள் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துள்ளனர் என்று கூறியுள்ளார்.[1] பயணிகளின் வருகை தொடர்ந்து நீடித்தது. நாளந்தாவைப் பற்றிய யுவான் சுவாங்கின் குறிப்புகளை மற்றச் சீனக் குறிப்புகளுடன் சேர்த்து நோக்குகையில் இந்தியாவின் கல்வி முறைகளைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.[2]

மாணவர்கள் ஆசிரியர்களிடம் மதிப்பும், அன்பும் பெறுவதற்கு எப்பொழுதும் விழிப்பாக இருந்தனர். தீர அறிந்து கொள்ளும் ஆர்வமும், சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளும் துடிப்பும் அவர்களிடம் காணப்பட்டன. நாளந்தாவின் பாடத் திட்டங்கள் புத்த இந்து மதங்களைப் பற்றியதும், உலகியல் பற்றியதும் ஆம். இவை பழங்கால இந்தியாவின் கல்வி நிலையங்களில் வெகு காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த பாடத் திட்டங்கள் எனலாம்.[3] காஷ்மீர், நாளந்தா, காஞ்சி முதலிய இடங்களி லிருந்த கல்வி நிலையங்கள் இந்தியாவிலும் வெளி நாடுகளிலுமிருந்த ஆர்வம் மிக்க மாணவர்களைக் கவர்ந்தன.

பொருளாதாரத் தொடர்புகள்

உள்நாட்டு வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளுக்குப் பொதுவாக அக் காலத்தில் அதிக இடையூறுகள் தோன்ற வில்லை. ஹர்ஷரின் சிறப்பான ஆட்சியால் பல பகுதிகள் அரசியல் ஒற்றுமைப்பட்ட நிலை, எளிதான வணிகத் தொடர்பிற்குப் பெரிதும் உதவிற்று. ஹர்ஷர் ஒரிசாவின்மீதும், வாதாபி, காமரூபம் (அஸ்ஸாம்) மீதும் படையெடுப்புகளை மேற்கொள்ளப் பொருளா தாரக் குறிக்கோளும் காரணமாகும். ஹர்ஷரின் காலத்திய குறிப்புகளில் இதற்குப் பல சான்றுகள் உள்ளன.

அக் காலத்தில் வரி விதிப்பு குறைவாகவே இருந்ததை யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். சுங்கவரிச் சாவடிகள் இருந்ததையும் நாம் அறிய முடிகிறது.[4] நகரங்களின் வணிகப் பொருள்களையும், விலை யுயர்ந்த பொருள்களைப் பற்றியும் பல முறைகள் குறிப்பிடுகிறார்; காசி நகரத்தைப் பற்றிக் கூறுகையில், அங்கு மக்கள் தொகை

[1] S. தத் (S. Dutt)-2500 ஆண்டுகளில் பௌத்தம் (2500 years of Buddhism)-185ஆம் பக்கம் காண்க.

[2] இந் நூலின் ஏழாம் அத்தியாயம் காண்க.

[3] வாட்டர்ஸ்-அத்தியாயம் 1-பக்கம் 154-60

[4] வாட்டர்ஸ்-i-பக்கம் 176

மிருந்திருந்தது எனவும், நகரம் அளவற்ற செல்வத்தையும், விலையுயர்ந்த பொருள்கள் நிறைந்த பெரிய வீடுகளையும் கொண்டது எனவும் விளக்குகிறார். மேலும், பல நாடுகளின் அபூர்வப் பொருள்களைக் கனோஜ் கொண்டிருந்தது என நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.[1]

உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்பு

கங்கை நதி வர்த்தகப் போக்குவரத்துக்குப் பயன்பட்டது. அதன் கரையை ஒட்டிப் பல வணிக நிலையங்கள் இருந்தன. கடற்பயணத்தை மக்கள் விரும்பினர். சூ-லா-சா (Su-la-cha-சூரத்) நகர விளக்கக் குறிப்பில் யுவான் சுவாங், நகரம் கடலை ஒட்டி அமைந்திருந்தது எனவும், மக்கள் வணிகத்திற்குக் கடலைப் பயன்படுத்தினர் எனவும் தெரிவிக்கிறார். உரோமானியப் பேரரசின் அரசவைக்கு இந்திய அரசர்கள் அரசியல் தூதுவர்களை அனுப்பி வந்தனர். இறுதியாக ஜஸ்டீனியன் (Justinian) அரசவைக்குக் கி.பி. 530, 552ஆம் ஆண்டுகளில் இருமுறை தூதுவர்கள் சென்றனர். அதற்குப் பின்னரே உரோமானியப் பேரரசு வீழ்ந்ததைத் தொடர்ந்து தூதுவர்களை அனுப்புதல் நின்றது. மிக நெடுங் காலத்துக்கு முன்பிருந்தே பாரசீகத்துடன் போ-லா-சீ (Po-la-see-பெர்ஸியா) இந்தியா தொடர்பு கொண்டிருந்தது. அத் தொடர்பு பல காலம் நீடித்தது. பாரசீகத்துக்கு உட்பட்டிருந்த பகுதியான லாங்-கீ-லோ (Long-kie-lo) என்ற பகுதியில் இந்து மதமும் பௌத்த மதமும் தழைத்து இருந்தன.[2] அங்கு மக்களிடையே பழக்கத்திலிருக்கும் பேச்சு வழக்கம், எழுத்து வழக்கம் இந்திய முறைகளிலிருந்து சற்றே மாறுபட்டதாக உள்ளன. பாரசீகப் பயணக் குறிப்புகளில் இருந்து அங்குக் கோயில்கள் (Deva Temples) அதிகமாகக் காணப்பட்டன என்பது தெரிய வருகிறது. கோயில் என்ற சொல் பொதுவாக இந்துக்கள் கோயிலைக் குறிப்பதாயினும், இவ்விடத்தில் சொராஸ்ட்ரீயன் (Zoroastrian) வழிப்பாட்டுக் கூடங்களையும் சேர்த்தே குறிப்பதாகக் கொள்ள வேண்டும். பௌத்த மதம் முன் காலத்திலேயே பாரசீகத்திற்குப் பரவி விட்டது என்பதைப் புத்தத் துறவிகள் பலர் அங்குக் காணப்பட்டதிலிருந்தும், சர்வாஸ்தி வாதின் (Sarvasti-Vadin) என்ற பிரிவில் சேரப் பல புத்தத் துறவிகள் காட்டிய விருப்பத்திலிருந்தும் அறிந்துகொள்ளலாம். அப் பகுதியில் நீண்ட காலமாகப் பௌத்தமதப் பழக்க வழக்கங்கள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்திருப்பதை நிரூபிக்கப் புதைபொருள் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. முதன்முதலாக அன்-சீ-கோ (An-shih-kao) என்ற பார்த்தீய (Partian) இளவரசர்

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 340
[2] வாட்டர்ஸ்-ii-பக்கம் 257-8

கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் புத்தரின் போதனைகளைச் சீனத்தில் மொழிபெயர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டார். மணிக்கேயிஸத்தை (Manichaeism) நிறுவிய மணி (Mani-கி.பி. மூன்றும் நூற்றுண்டு) புத்தரின் போதனைகளால் கவரப் பட்டார். பாரசீக, துருக்கிய மொழிகளிலுள்ள மணிக்கேயின் (Manichaean) பிரதிகள் புத்தரின் போதனைகளைக் கொண்டுள்ளன. பத்தாம் நூற்றுண்டின் முஸ்லீம் அறிஞராகிய அல்பேருனியின் குறிப்புகள் கொராஸான் (Khorasan), பாரசீகம், இராக், மற்றும் அவற்றின் அண்மை நாடுகளை ஒட்டிச் சிரியா வரை பௌத்த மதம் பரவி இருந்ததைக் கூறுகின்றன.

முதலாவது குஸாரு (கி.பி. 531-579), 2வது குஸாரு (கி.பி. 591-628) காலத்தில் பாரசீகத்துக்குச் சென்ற தூதுக்குழு பற்றி அராபிய வரலாற்று ஆசிரியர் தபாரி(Tabari-கி.பி. 831-923)யும், பாரசீகக் கவி பிர்தாஸி(Firdausi-10ஆம் நூற்றுண்டு)யும் பழைய பஹ்லவி (Pahalavi) மத்திய பாரசீக ஆதாரங்களைப் பின்பற்றிக் குறித்துள்ளனர். ஆறும் நூற்றுண்டில் மேற்குத் திசை நாடுகளில் பஞ்சதந்திரம் என்ற சமஸ்கிருதக் கதை நூல் பரவ ஆரம்பித்தது. அது முதலில் பஹ்லவி மொழியிலும், பிறகு சிரிய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. அராபிய, பாரசீக வரலாற்று ஆசிரியர்கள் பாரசீக வளைகுடாவிலும், செங்கடலிலும், மத்திய தரைக்கடலிலுங்கூட இந்தியக் கப்பல்கள் காணப்பட்ட மையைக் குறித்துள்ளனர். முஸ்லீம் கப்பற்படை முதன்முதலாக 636ஆம் ஆண்டு இந்தியக் கடலில் காணப்பட்டது. இஸ்லாம் மத வளர்ச்சிக்குப்பின் அராபியர்கள் சுறுசுறுப்புடன் இந்திய வணிகர் களுடன் போட்டியிட ஆரம்பித்தனர். மத்திய ஆசியாவை ஒட்டியும் தென்கிழக்கு ஆசியாவிலும் காணப்பட்ட அதிக வர்த்தகத் தொடர்பிற்கு பாஹியான், சுங் யுன் (Sung-Yun), யுவான் சுவாங், இட்சிங் போன்றோர் பயன்படுத்திய நில வழியும் நீர் வழியும் உதவின. பஞ்சாபிலிருந்து அஸ்ஸாம் வரை வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய, தோலினுல் செய்யப்பட்ட கவசமான கார்டா-ரங்கா(Karda-ranga)வைப் பற்றி பாணர் இரண்டு முறை குறிப்பிட்டிருக்கிறுர்.[1] அத் தோலை இந்தியர்கள் இந்தோனேசியத் தீவுக் கூட்டங்களிலுள்ள ஒரு தீவிலிருந்து பெற்றனர். தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் கொண்ட வர்த்தகத் தொடர்பின் காரணமாக நாம் பெற்ற நூதன பொருள்களின் பெரிய பட்டியலில் இக் கவசத் தோலும் சேர்கிறது.[2]

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 207, 217

[2] கார்டா-ரங்கா என்பது இந்தோனேசியாவிலுள்ள ஒரு தீவின் பெயர் இன்று அதற்குச் சார்மரங்கா (Charmaranga) என்ற பெயர் வழங்குகிறது. V. S. அகர்வாலா-பக்கம் 156

சீன வர்த்தகத் தொடர்பு

காளிதாஸர் சாகுந்தலத்தில் சின் அம்சுகா (Chin-Amsuka) என்ற ஒரு வகை சீனப்பட்டைப் பற்றிக் குறித்திருக்கிறார். பாணரும் அதை அடிக்கடி கூறி வந்திருப்பதால், அப் பொருள் வர்த்தகம் நடைபெற்றிருக்கிறது என அறியலாம்.[1] சைஞ் சோலாகா (China Cholaka) என்ற ஒருவகை மேலாடை(Coat)யும் மத்திய ஆசியா வழியாகச் சாகர்(Saka)களுடன் இந்தியாவிற்கு வந்திருக்கிறது.[2] பெரும்பாலும் இந்தியத் துணி வகைகளிலேயே அஃது ஆக்கப்பட்டாலும், சில சீனப் பொருள்களும் கலந்தே ஆக்கப் பட்டது. அவ்வுடைகளைப் பணக்காரர்கள் பெரிதும் விரும்பினர். மத்திய ஆசியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தொடர்பான குதிரை வியாபாரம் நடைபெற்று வந்தது. கம்போஜம் (Kamboja) பாமிர் (Pamir), ஆக்ஸஸ் (Oxus), பாரசீகம், சசானிய-இரான் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட உயர்ந்த ஜாதிக் குதிரைகள் ஹர்ஷரின் குதிரைப் படையில் இடம் பெற்றிருந்தன.[3] அக் குதிரைகளை வனாயு (Vanayu), ஆரட்டா (Aratta-பஞ்சாப்), பராத்வஜா (Bharadvaja) முதலிய இந்திய உயர்ஜாதிக் குதிரை களுக்கு மாற்றாகவோ அல்லது விலைக்கோ ஹர்ஷர் பெற்றிருக்க வேண்டும்.

புத்த அறிஞர் தீபங்கர ஸ்ரீ ஜனன பன்னிரண்டாவது நூற்றாண்டில் திபேத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் காலம் வரை திபேத்துடன் இந்திய வர்த்தகத் தொடர்பு அதிகமிருக்க வில்லை. தந்தின் (Dandin) எழுதிய பத்து இளவரசர்களின் வீரச் செயல்கள் (தஸ குமார சரித்திரம்) என்ற நூல் ஹர்ஷர் காலத்தில் ஆப்பிரிக்காவுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளுக்கு இலக்கியச் சான்று பகர்கிறது. ரத்னுவளி என்ற ஹர்ஷரின் கதை இலங்கையுடன் வர்த்தகத் தொடர்பு சிறந்த முறையில் இருந்த தைக் குறிக்கிறது.

ஹர்ஷர் காலத்துச் செல்வமிக்க நிலையைச் சீனக்குறிப்புகள் விளக்குகின்றன. பல தங்கப் புத்த விக்கிரகங்களைக் கண்டதாக யுவான் சுவாங் குறிப்பிட்டிருக்கிறார். துறவிகளின் வசதிகளுக்காகச் சங்கராமாக்கள் (Sangharamas) கட்டித் தரச் சாதாரண மக்களும் முன் வந்ததாகக் காண்கிறோம். சீனப்பயணி யுவான் சுவாங்கிற்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பும் வெகுமதிகளும் கிடைத்தன. தூய புத்தத் துறவி ஆதலால், அவர் வெகுமதிகளை

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 36, 167, 242
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 207
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 62; மொழிபெயர்ப்பு-பக்கம் 50

ஏற்கவில்லை. சீனப்பயணி ஒவ்வொரு நகரத்திலும் பல புத்த இந்து கோயில்களுக்குச் சென்று, மத சமூகக் கல்விப் பணிகளுக்கு அவை எவ்வாறு உதவின என்று கண்டு குறித்துள்ளார். அந் நிலையங்கள் காலப்போக்கில் விரும்பத்தகாத முறையில் செல்வமிக்கதாக மாறியதென்றும், ஏராளமான ஆண்பெண் ஏவலாளர்களைக் கொண்டிருந்தனவென்றும், களஞ்சியங்களிலுள்ள உணவு மக்கிப் பயனற்றுப் போயும், பணமும் விலையுயர்ந்த பொருள்களும் பயனற்ற முறையில் தேங்கியும் கிடந்தன என்றும் இட்சிங் கூறுகிறார்.[1]

கட்டடக் கலை

பாணர் எழுதிய ராஜ்யஸ்ரீயின் திருமண விழாக் குறிப்புகள் மூலம் நாட்டில் பல சிறப்பான கலையும் கைத்தொழில்களும் நிலவி வந்தன என்பது தெளிவாகிறது. நகர அமைப்பையும் கட்டடக் கலையையும் பற்றிய விளக்கம் அதில் காணப்படுகிறது. ஹர்ஷ சரித்திரத்தில், குறிப்பாக, பிரபாகர வர்த்தனரின் தலை நகரைப் பற்றிய விளக்கம் காணப்படுகிறது. அங்கு வீடுகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளைக்கொண்டிருந்தன; வெள்ளை யடிக்கப்பட்டும் வண்ணக் கலவையால் ஆன வேலைப்பாடுகளுடன் கூடியதாகவும் விளங்கின. அரண்மனையின் தரையைச் சிவப்பு வண்ணக் கலவையால் வழுவழுப்பாக்குவது வழக்கம். அரண்மனைச் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. பொதுவாகத் திருவிழாக் காலங்களிலும், மண விழாவின்பொழுதும் சிறப்பாக அலங்காரங்கள் செய்யப்பட்டன.

காட்டுப் புறங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை

பாணர் காதம்பரி என்ற நூலில் உஜ்ஜயினியைப் பற்றிய விளக்கத்தில் நகர மக்களின் வாழ்க்கையையும், ஹர்ஷ சரித்திரத்தில் விந்திய மலைப் பகுதியில் வாழ்ந்த மக்களின் குடும்ப வாழ்க்கையையும் நுணுக்கமாக விளக்குகிறார்.[2] இப் பகுதியின் மக்கள், அடர்ந்த காட்டுப் பகுதியின் நடுவே கடுமையாக உழைத்து வாழ்ந்தனர். கிராமப் பொருளாதாரம் சீராக இருந்தது. பரவலான விவசாயம், வேட்டையாடுதல், உலோக வேலைப்பாடுகள் முதலிய வேலைகள் ஒருங்கே நடைபெற்றன. சீரான அரசாங்க நிருவாகம் காணப்பட்டது. நிழல் மிக்க பொது இளைப்பாறும் இடங்களையும், செல்வமிக்க கிராமங்களையும் மாற்றார் அணுகாதபடி அரசாங்கக் காவலர்கள் காவல் புரிந்து வந்தனர். ஆயினும், அடர்ந்த காடுகளில் மரங்களை வெட்டும் அதிகாரிகள் திருடர்

[1] இட்சிங்-பக்கம் 194
[2] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 210

பயத்துடனேயே வாழ்ந்தனர். மக்கள் நடமாட்டமில்லாத பகுதிகளில் நிலவி வந்த திருட்டுகள் பற்றியும் சீனப்பயணி யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். குப்தர் காலத்தைப் பற்றிய சீன இந்தியக் குறிப்புகளிலிருந்து அக் காலத்தில் மக்கள் பாதுகாப்பாக வாழ்ந்தனர் என்பதையும், அப் பேரரசு அழிந்ததைத் தொடர்ந்து பாதுகாப்பற்ற நிலை தோன்றியது என்பதையும் காண்கிறோம். ஹர்ஷப் பேரரசின் தூரப் பகுதிகளில் இந்நிலை மோசமாகவே இருந்து வந்தது.

மிகப் பழைய காலத்திலிருந்து அண்மையில் மக்களாட்சி தோன்றிய காலம் வரை திறமை மிக்க நிருவாகத்திற்கும் அரசாங்கத்தின் சிறப்பிற்கும் நாட்டை ஆட்சி செய்தவரின் குணநலன்கள் பெரிதும் காரணமாக இருந்து வந்திருக்கின்றன. ஆகவே, ஹர்ஷர் ஒரு மனிதர் என்ற முறையிலும், அரசர் என்ற முறையிலும் அவருடைய குண நலன்களை ஆராய்ந்து பார்த்தல் நன்மை பயக்கும். ஹர்ஷர் அரசர் என்ற முறையில் குறிப்பிடத்தக்க புகழ் பெற்று இருப்பினும், அக் காலத்தின் சற்றுத் திறமையுள்ள வேறு எந்த அரசரும் ஏறக்குறைய அதே போன்ற புகழைப் பெற்றிருக்கக் கூடும்.

இளவரசர்கள் வழக்கமாகக் கற்றுத் தேறும் கலைகள் யாவையும் கற்றுத் தேர்ந்த முன்னேறும் இளைஞராக ஹர்ஷரைப் பாணர் தம் ஹர்ஷ சரித்திரத்தில் விளக்குகிறார். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஆரம்ப காலத்திலேயே அமைச்சர்களிடம் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் பெறும் அளவுக்கு ஹர்ஷரின் திறமை விளங்கியது. காலியாக இருந்த சிம்மாசனத்தை நிரப்பி அரசை ஹர்ஷர் ஏற்கக் கனோஜ் அமைச்சர்களின் ஒப்புதலை பண்டி (Bhandi) பெற்றுக்கொண்டிருந்த அதே வேளையில் சிம்ம நாடர் (Simha Nada) என்ற சிறந்த தளபதி பெருமளவிற்குப் படையெடுப்புத் திட்டத்தையும் மேற்கொள்ளுமாறு அறிவுரை கூறினர்.

மௌகாரி (Maukhari) அரசைப் பொறுத்த அளவில் ஹர்ஷர் மிகவும் சாதுரியமாக நடந்துகொண்டார். ஹர்ஷர் குடும்பப் பற்றினாலும், உடனடித் தேவையினாலும், இறந்துபட்ட கனோஜ் அரசரின் மனைவியும், சிறைப்பிடிக்கப்பட்ட தம் தங்கையுமான ராஜ்யஸ்ரீயை மீட்கும் முக்கியப் பொறுப்பிற்கு முதலிடத்தை அளித்து, தாமே அதை ஒப்புக்கொண்டார்; ஹர்ஷரின் படைகள் கனோஜ் நகரம் மாளவத்தின் பிடியில் சிக்குவதைத் தவிர்த்த பின்னரே, மிகவும் நிதானத்துடன் மக்களின் அன்பைப் பெற்று, தெய்வ ஆதரவுடன் மௌகாரி ராஜ்யத்தின் பொறுப்பை ஒப்புக் கொண்டார். அதே நேரத்தில் துரதிர்ஷ்ட நிலையடைந்த ராணி

யையும் பாதுகாப்பாகத் தலைநகருக்குத் திருப்பிக் கொண்டு வரும் பொறுப்பையும் புறக்கணித்து விடவில்லை. ராஜ்யஸ்ரீயின் கணவர் இறந்த பின், அவருடைய நாட்டைக் காக்கும் பொறுப்பை ஹர்ஷரே ஏற்ருர். யுவான் சுவாங் ஹர்ஷரின் குடும்பத்தின்மீது கொண்டிருந்த பற்றின் காரணமாகக் கனோஜின் சிம்மாசனத்திற்கு ஹர்ஷரே வாரிசாவதற்கு ஆதரவளிக்கிருர்.

ஹர்ஷர் மிகவும் கடுமையாக உழைக்கும் அரசர். யுவான் சுவாங் தமது குறிப்புகளில் ஹர்ஷரின் தினசரி வாழ்க்கையின் மூன்று பிரிவுகளைத் தெளிவாகக் குறித்துள்ளார். ஒரு பகுதி அரசாங்க அலுவல்களைக் கவனிக்கவும், இரண்டாவது பகுதி சமயம் பற்றிய அலுவல்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. அரசாங்க நிருவாகம் பெரும்பாலும் சமயச் சார்பற்றதாகக் குறிக்கப் பட்டாலும், பலதரப்பட்ட அரசியல் அலுவல்கள் சமயத்தோடு ஒட்டியவையாகவே கருதப்பட்டன. மருத்துவமனை நிருவாகம், கல்வி நிலையங்கள், சாலை ஓரத்தில் இளைப்பாறும் விடுதிகள், குடிநீர்ப் பந்தல்கள் முதலியன அமைத்தல், நிழலையும் பழங்களையும் தரும் மரங்களை நடுதல், தத்துவக் கருத்தரங்குகளை அமைத்தல், ஒழுக்க நெறிகளை விளக்கும் நாடகங்களை நடத்துதல், தர்மம் செய்தல் போன்றவை பெரும்பாலும் சமயத்தை ஒட்டிய அலுவல்களாகவே கருதப்பட்டன. சீனப்பயணி ஹர்ஷரின் கடுமையான உழைப்பையும், பக்தியையும் வெகுவாகப் பாராட்டு கிருர். அரசர் உணவையும் தூக்கத்தையும் மறந்து கடமைகளுக்குத் தம்மை அர்ப்பணித்தார். சோர்வு அடையாத உழைப்புத் திறன் கொண்ட அவருக்கு நாள் மிகவும் குறுகியதாக இருந்தது.[1] மேற்காணும் விளக்கங்கள் சற்று மிகைப்படுத்திக் கூறப்பட்டன என்று கொண்டாலும், உழைக்கும் திறனுடனும், இலக்கியம், கலை முதலிய துறைகளில் மிக்க ஆர்வத்துடனும் அரசாங்கத்தின் கடமைகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றிய அரசராகவே ஹர்ஷர் காணப்பட்டார் என்பது தெளிவு.

அரசரின் அவையைப்பற்றிய பாணரின் விளக்கத்தில், 'நூற்றுக்கணக்கான குறுநிலத் தலைவர்கள் மன்னரைக் காண வெகு நேரம் காத்திருந்தனர்' எனக் காணப்பட்டாலும், பிரயாகையில் (அலகாபாத்) ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பேரவையில் நடந்த பெரிய ஊர்வல நிகழ்ச்சியில் ஹர்ஷர் மக்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டவராகக் காணப் பட்டார் என்றும், தமக்கு உட்பட்ட மண்டல அரசர்களையும் தம்மை அணுகாதவாறு தடுக்கவில்லை என்றும் யுவான் சுவாங்

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 344

கூறுகிறார்; மேலும், மன்னர் அடிக்கடி மாறுவேடத்தில் நகர் சோதனைக்குச் சென்றதாகவும் குறித்துள்ளார். முக்கிய நிகழ்ச்சி களின்பொழுது அரசர் தான தருமங்கள் செய்வதும், முக்கிய அரசாங்கச் சட்டங்களை அறிவித்தலும் வழக்கம். ஆகவே, ஹர்ஷர் சாதாரண மக்களுடனும், மாநில நிருவாக அதிகாரிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் எனக் கூறலாம்.

ஹர்ஷரின் படை ஊர்வலத்தைப் பாணர் தெளிவாக விளக்கு கிறார். அவ்விழா நிகழ்ச்சிகளை, அரசரை வாழ்த்தவும், தங்கள் குறைகளைக் கூறவும் மக்கள் பயன்படுத்திக்கொண்டனர். தங்களுடைய பயிர்களைக் கொள்ளைகளினால் இழந்தவர்களையும், மன்னரிடம் குறை இருப்பதையுங்கூட[1] இந் நிகழ்ச்சிகளில் காண முடிந்தன. படைவீரர்கள் அல்லது படையுடன் செல்லும் ஏவலர் களின் ஒழுங்கின்மையை மன்னர் அறிய இவ் வாய்ப்புகள் உதவும். இரண்டாவதாக, அச் செய்திகளை மன்னர் அறிந்துகொள்வார் என்ற அச்சத்தின் காரணமாகத் தவறுகள் தடுக்கப்படவும், இறுதி யாக மக்கள் துணிவுடன் குறைகளை மன்னனிடம் கூறவும், அவற்றை அரசர் வரவேற்றுக் கவனிப்பார் என்ற எண்ணம் நிலவுவதற்கும் இவ்விழாக்களில் வாய்ப்புகள் இருந்தன என்பதும் விளங்குகிறது. பாணரின் குறிப்புகளை ஏற்றுக்கொண்டால், ஹர்ஷர் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் நடந்த இது போன்ற நிகழ்ச்சிகளால் மக்களுக்கும் மன்னருக்கும் இடையே இது போன்ற தொடர்புகள் நிலவியதை அறியலாம். ஹர்ஷர் மக்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புகளைத் தர இது போன்ற வழக்கங்களைத் தாமே முதலில் ஏற்படுத்தவில்லை எனினும், அவற்றை ஒப்புக் கொண்டு பின்பற்றினார் என்று நம்பலாம். ஹர்ஷர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் அவரைக் கொல்லுவதற்கு நடைபெற்ற முயற்சி யினால் அவர் கோபமடையவோ, அச்சமடையவோ இல்லை. மாறாக, குற்றவாளியை விசாரித்து மன்னித்தது அவருடைய குண நலனையும், அரசர் மக்களை எவ்விதமாக மதித்தார் என்பதையும் குறிப்பாக விளக்குகிறது.

பாணரும் ஹர்ஷரும் சந்தித்த நிகழ்ச்சி அரசரின் அன்பு உள்ளத்தையும், மனிதாபிமானத்தையும் குறிக்கிறது. தமக்கு ஊறு விளைவிக்காதவர்கள் என்ற ஐயம் நீங்கிய பின் தமது பகை வர்களோடும் கலந்து உறவாட அவர் ஆவல் கொண்டவராய் இருந்தார். ஹர்ஷருக்குக் கற்பதிலிருந்த ஆர்வமே கவிஞருடன் நட்புக்கொள்வதற்குக் காரணமாயிருந்தது. இந் நிகழ்ச்சியும் மன்னர் மக்களை மதித்த விதத்தைக் குறிக்கிறது.

1 ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 209

யுவான் சுவாங்கைச் சந்திப்பதற்கும் மன்னர் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். சீனத்துப் பயணி அரசரின் வேண்டுகோளைப் புறக்கணித்து முதலில் அவரைச் சந்திக்க மறுத்த சமயம் ஹர்ஷர் அதைப் பெருந்தன்மையுடன் வாளா விட்டு விட்டார். ஆனால், அவர் ஹர்ஷருக்கு உட்பட்ட ஒரு குறுநில மன்னரைச் சந்தித்த சமயம் ஹர்ஷருக்கு அடங்காத கோபம் ஏற்பட்டது. அக் கோபத்தினால் யுவான் சுவாங்கிற்கும் தீங்கு ஏதும் ஏற்படவில்லை. ஆனால், குறுநில மன்னரின்மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது, பிற்காலத்தில் ஹர்ஷர் யுவான் சுவாங்கைச் சந்தித்தபொழுது மிக்க அன்புடன் நடந்துகொண்டார். யுவான் சுவாங்கை அனுப்ப மறுத்த குறுநில மன்னரைச் சந்தித்தபொழுதும் எதுவுமே நடந்திராதது போல அவர் காட்டிக்கொண்டார்.

ஹர்ஷர் தம் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைப் பற்றித் தாமே நேரடியாக அறிந்து வைத்திருந்தார். அச் செய்திகள் அவருடைய நிருவாகத் திறமையை அதிகரித்தன. பல்வேறு பகுதிகளின் புவியியல் அமைப்பு, மக்களின் வாழ்க்கை ஆகியவை பற்றிய அறிவு அப் பகுதிகளுக்குத் தக்க திறமையுடைய ஆளுநர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது. ஹர்ஷர் இளவரசராக இருந்த காலத்தில் ஹூணர்களை விரட்டத் தம் சகோதரரின் படையில் ஒரு பிரிவின் தளபதியாக வடமேற்குப் பகுதியில் பயணம் செய்தார்; தனேஸ்வரத்தின் அரசரானவுடன் தம் சகோதரியைத் தேடி விந்திய மலைக்காடுகளில் அலைந்து திரிந்தார்; அரசப் பொறுப்பு ஏற்ற முதல் ஆறாண்டுகளில் ஐந்து இந்தியப் படைகளுடன் (5 Indians) கிழக்கிலிருந்து மேற்கு வரைத் தம் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளை ஆய்ந்து (Inspect), பல அரசர்களை வென்று, தம் ஆட்சிக்கு உட்படுத்தினார்; தம் ஆட்சிக்கால இறுதி வரை அவ்வப்பொழுது புதிய பகுதிகளின்மீது படையெடுத்தார். தம் பயணத்தின் சமயங்களிளெல்லாம் ஆட்சிப்பகுதிகளை ஆய்ந்து புதிய கட்டளைகள் இடுவது அவரது வழக்கம். மணிதாராவும்[1], தனேஸ்வரத்திலிருந்து கனோஜுக்குச் செல்லும் வழியில் ஆற்றங்கரையை ஒட்டி இருந்த சில கிராமங்களும்[2], வர்த்தமான கோடியும்[3], பிந்திகாவும்[4] ஹர்ஷர் தங்கிய இடங்களாகும். ஒரிசாவின்மீது படையெடுத்து வெற்றி பெற்றுத் திரும்புகையில் கஜன்கலாவிலும்[5] சிறிது காலம் தங்கியிருந்தார். பிரயாகையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

[1] ஹர்ஷ சரித்திரம்-பக்கம் 57; மொழிபெயர்ப்பு-பக்கம் 46

[2] ஹர்ஷ சரித்திரம்-பக்கம் 203, 225; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 198, 223

[3] பன்ஸ்கீராச் செப்பேடு-E. I. IV-208 ff

[4] மதுபான் செப்பேடு-E. I-i-67 ff

[5] வாட்டர்ஸ்-புத்தகம் 1-பக்கம் 348; புத்தகம் 2-பக்கம் 183

பேரவை தவருமல் நடைபெற்றது. அரசாங்க அலுவல்கள் செவ்வனே நடைபெறுதல் அவசியம் ஆதலால், தூதுவர்களும் அரசாங்க அதிகாரிகளும் அரசரைக் காண வந்தும், கண்டு திரும்பிக்கொண்டும் இருந்தனர். மன்னரும் பல ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டார். பயணங்களின்போது அரசர் தங்குவதற்கு நிலையான கட்டடங்களைக் கட்டிக்கொள்வது வழக்கமில்லை; அலுவல்களை நிலையற்ற சாதாரண (Temporary) இருக்கைகளிலிருந்தே கவனித்து வந்தார்.[1]

ஹர்ஷர் காலத்தில் எழுதப்பட்ட குறிப்புகளிலிருந்து அவர் அடிக்கடி அரசாங்க முறையில் பயணங்களை மேற்கொண்டார் என்பதற்குச் சான்றுகள் காணப்பட்டாலும் அவற்றை நினைவு படுத்த, 'பயண கால அரண்மனை'(Travelling Palace)யின் இடிபாடுகள்கூட இன்று இல்லாதது வருந்தத் தக்கது. அவை விரைவில் அழிந்து போகக் கூடிய பொருள்களால் கட்டப்பட்டன. கஜன்கலாவில் ஹர்ஷர் அரசவை கூட்டிய சமயம் அமைக்கப்பட்ட நிலையற்ற சாதாரண அமைப்புகள் அவர் அங்கிருந்து புறப்பட்ட உடனே எரிக்கப்பட்டன.[2] பீல் மொழி பெயர்த்துள்ள யுவான் சுவாங் பயணக் குறிப்பில் இரண்டு பெரிய கூரை வேயப்பட்ட மண்டபங்கள் கட்டப்பட்டன என்றும், அவை ஒவ்வொன்றும் சுமார் ஆயிரம் பேர் அமரக் கூடியனவாயிருந்தன என்றும் காணப் படுகிறது. அம் மண்டபங்களில் பல்வேறு மதப் பிரிவுகளைச் சேர்ந்த அறிஞர்கள் யுவான் சுவாங்குடன் விவாதித்தனர். பிரயாகையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பேரவைக்கென ஒரு முழு நிலையற்ற நகரமே கட்டப்பட்டது. பாணரும் யுவான் சுவாங்கின் வாழ்க்கையை எழுதியவரும் அதைப் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் பின்பற்றப்படும் கவர்ச்சி மிக்க சடங்குகளை விளக்குகிறார்கள். பிரயாகை பேரவையை விளக்கி எழுதும் ஹ்யூலீ (Hui-li) ஹர்ஷரின் வருகையை மற்ற அரசர்களின் வருகைகளிலிருந்து மாறுபடுத்தி உயர்த்தும் சிறப்பான முறையை விளக்குகிறார். பல நூற்றுக்கணக்கான தங்க முரசுகள் அரசர் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் சமயத்திலும் முழங்கின. 'வேக ஒழுங்கு முரசுகள்'[3] (Regulating Pace Drums) என அழைக்கப்பட்ட அம் முரசுகள் எப்பொழுதும் அரசருடன் சென்றன.

[1] வாட்டர்ஸ்-புத்தகம் 1-பக்கம் 344; ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 203; மொழிபெயர்ப்பு-198

[2] பீல்-ii-பக்கம் 193

[3] ஷை-பக்கம் 173

சிற்றரசர்களுடன் தொடர்பு

குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின் நடந்த பல வகைப் பட்ட அவைகளில் சிற்றரசர்களும், அவைப் பிரதிநிதிகளும், எல்லா வகுப்பைச் சேர்ந்த சாதாரண மக்களும் பங்கு கொண் டனர். அவை பல காரியங்களுக்கு உதவின. நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பல தொழில்கள் புரிந்த மாறுபட்ட நம்பிக்கை உடைய மக்கள் அங்கு ஒன்று கூடினர். அக் கூட்டங்கள் மக்களுடன் தொடர்புகொள்ள விரும்பும் மன்னரின் விருப் பத்திற்குத் துணை புரிந்தன. வழக்கமாக அழைக்கப்படும் குறுநில மன்னர்கள் அங்குக் கூடி, கூட்டங்கள் அறிவித்த முடிவுகளுக்கு மாறுபட்டு நடப்பதில்லை என அறிவித்தனர். மேலும், எல்லாரையும் விட அரசரே தனித்தலைமை பெற்றவர் என்பதை அது போன்ற அவைகள் உணர்த்தின. விழாக்கால ஊர்வலங்களில் குறுநில மன்னர்கள் தங்கள் தகுதிக்கேற்ற இடத்தை வகிக்க மன்னரின் கட்டளையைப் பெற்றுக்கொண்டனர். அரசர், காலம் தவறாமல் முக்கிய குறுநில மன்னர்களைக் காணுதல் அரசாங்க நிருவாகத்திற்கு மிகப் பயனுள்ளதாக இருந்தது. ஏனெனில், குறுநில மன்னர்களின் பல அரசியல் பொறுப்புகள் ஓர் அதிகாரம் மிக்க மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் பொறுப்புகளில் இருந்து வேறு பட்டவை அல்ல. கி.பி. 643ஆம் ஆண்டில் மட்டும் இருபதுக்கும் அதிகமான இது போன்ற அவைகள் நடைபெற்றுள்ளன. பல தளபதிகளுக்கும், அவைப் பிரதிநிதிகளுக்கும், நிருவாக அதிகாரி களுக்கும், ஒழுங்காகத் திரை கட்டி வந்த பல குறுநில மன்னர் களுக்கும் சாமந்தா (Samanta), மகா சாமந்தா (Maha Samanta) என்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. பாணர் தாமே நேரில் சென்று கண்ட மணிதாராக் (Mani-tara) கூட்டத்தில் பல வகைக் குறுநில அரசர்கள் கலந்துகொண்டதை விளக்கி ஹர்ஷ சரித்திரத் தில் எழுதியுள்ளார். ஹர்ஷரால் வெல்லப்பட்டுப் பின் அவர் ஆதரவைப் பெற்ற தளபதிகளும் மகா சாமந்தாக்கள் ஆவர். ஹர்ஷரின் படையாற்றலால் வீழ்த்தப்பட்ட சிற்றரசர்கள் அவருக்கு விசுவாசம் செலுத்த வந்திருந்தனர். வேறு சிலர் அரசரின் மீது கொண்ட அன்பினாலும் பற்றினாலும் காண வந்தவர்கள் ஆவர்.[1] ஹர்ஷ சரித்திரத்தில் விளக்கப்படும் இக் காட்சியை V. S. அகர்வாலா[2] சமுத்திர குப்தரின் பிரயாகை(Prayaga)க் குறிப்பில் காணப்படும் வர்ணனைகளுடன் ஒப்பிடுகிறார்.

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 72; மொழிபெயர்ப்பு-59
[2] ஹர்ஷ சரித்திரம்-V. S. அகர்வாலா-பக்கம் 45

ஹர்ஷர் தமக்குட்பட்ட சிற்றரசர்களுடன் சீரான அளவில் உறவைக் கொண்டிருந்தார். அவர்களுக்கு உரிய கௌரவத்தையும் சிறப்பையும் ஹர்ஷர் அளித்தார்; இருப்பினும், அவர்களை மிக நெருங்கிப் பழக அனுமதிப்பதில்லை. இக் கொள்கை காமரூப அரசரின் சிறப்பான கொள்கை என பாணர் கூறுகிறார். அக் காலத்தில் அரசரும் அவருக்கு உட்பட்ட குறுநில மன்னரும் எவ்வித அரசியல் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அது விளங்கியது. அதே கொள்கையையே ஹர்ஷரும் பின்பற்றினார். ஹர்ஷருக்கும் காமரூபத் தூதுவருக்கும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகிறது. ராஜதந்திரப் பேச்சுகளில் சாதுரியமான பகுதியாக அது உள்ளது.[1] காமரூபத்தின் குமாராவிற்கும் ஹர்ஷருக்கும் இடையே ஹர்ஷரின் ஆட்சிக்கால இறுதி வரை நிலவிய தொடர்பையும் அது குறிக்கிறது. யுவான் சுவாங் குறிப்புகளை மொழி பெயர்த்துள்ள பீல், காமரூப அரசருக்கும் ஹர்ஷருக்கும் இடையே ஒரு சிக்கல் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறார். அது பற்றி நாம் மேலே விவரித்தோம். இந் நிகழ்ச்சி நடந்த சில காலத்திற்குப் பின் காமரூப அரசர் குமாராவிற்குப் பிரயாகைப் பேரவை ஊர்வலத்தில் தம் பக்கத்தில் நடந்து வரும் பெருமையை ஹர்ஷர் அளித்தார்.

குமார குப்தர், மாதவ குப்தர் என்ற மாளவத்தின் இளவரசர்களை ஹர்ஷர் மிகக் கண்காணிப்பாக நடத்தினார். ஆகவே, பிற்காலக் குப்தர்களின் சிறப்புப் பற்றி ஹர்ஷரின் இறப்பு வரை அறிந்துகொள்ள இயலவில்லை. ஹர்ஷர் புத்தரின் புனிதப் பொருள்களைக் காஷ்மீர் அரசரிடம் இருந்து போர் அச்சுறுத்தல்களின் மூலமாகவே பெற்றார். அது ஹர்ஷரின் ராஜதந்திர வெற்றியாகும். ஹர்ஷர் பக்கத்து நாட்டு அரசர்களின் வெறுப்பு உணர்ச்சியைத் தேடிக்கொள்ளாதவாறு சாதுரியமாக நடந்து கொண்டார். மேலும், ஒரு முழுப் படையெடுப்பினால் ஏற்படும் வீண் அழிவை ராஜதந்திரத்தால் தடுத்துக்கொண்டார் எனலாம். வலபியுடன் ஹர்ஷர் கொண்ட தொடர்புகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. வலபியின் புவியியல் அமைப்பின் கண்ணோட்டத்தில் அஃது எவ்வாறு வணிகம், போர், நடவடிக்கைகளுக்கு இன்றியமையாதது என அவர் உணர்ந்திருந்தார். ஹர்ஷர் தம் மகளைத் துருவபட்டருக்கு மணம் முடித்துக் கொடுத்து வலபியுடன் சீரான தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். மேலும், ஹர்ஷர் எல்லையை ஒட்டி அமைந்திருந்த மற்ற நாட்டு அரசர்களுடனும் நட்புக்கொண்டிருந்ததாகத்

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-219 ff

தெரிகிறது. யுவான் சுவாங்கிற்குப் பயணம் செய்யவும், தங்கவும் தக்க வசதிகளைச் செய்து கொடுக்குமாறு பக்கத்து நாட்டு அரசர்களை வேண்டி ஹர்ஷர் பல கடிதங்களை எழுதியுள்ளார். மோ-கோ-தாலோ (Mo-ho-talo) என்று சீனப் பயணி பெயரிட்ட மஹாதாரா (Maha-tara) என்ற நான்கு அதிகாரிகள் பயணியுடன் சென்றனர். அவர்கள் ஹர்ஷரால் அனுப்பப்பட்ட தா-குவான் (Ta-kwan) என்ற வழிகாட்டி அதிகாரிகளுமாவர். பருத்தியால் ஆன மெல்லிய பொருள்களில் அரசரின் கடிதங்கள் எழுதப்பட்டன. அவை சிவப்பு மெழுகால் முத்திரையிடப்பட்டன. எந்தெந்த நாட்டில் யுவான் சுவாங் பயணம் செய்கிறாரோ அந் நாட்டு அரசர்களிடம் அக் கடிதங்களைக் காட்டும்படி வழிகாட்டி அதிகாரிகளுக்கு ஹர்ஷர் கட்டளையிட்டிருந்தார். அந் நாட்டு அரசர்கள் அவர்களுக்குப் பயண வசதிகளும், வண்டி ஏற்பாடுகளும் செய்து கொடுத்துப் பயணம் தொடர உதவினர். இது போன்ற வசதிகள் யுவான் சுவாங் சீன எல்லையை அடையும் வரை கிடைத்தன. மேலும், ஹர்ஷர் சீனப் பேரரசுடன் ராஜ்யத் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

போர் நீதிகளின் அறிவையும், வீரத்தையும் ஹர்ஷர் பெற்றிருந்தார். ஒரு முறை யானையின் பிடியில் சிக்கியிருந்த ஓர் அரசரை ஹர்ஷர் காப்பாற்றியதாக பாணர் கூறுகிறார். அதிலிருந்த ஆபத்தையும் ஹர்ஷர் பொருட்படுத்தவில்லை.[1] ஹர்ஷரைக் கொலை செய்ய முயற்சி நடந்த நிகழ்ச்சிகளை ஏற்கெனவே யுவான் சுவாங் விளக்கியுள்ளார். அப்பொழுது ஹர்ஷரின் மன நிலையையும் தொடர்ந்து மன்னிப்பு அளித்த பெருந்தன்மையையும் நாம் அறிந்ததே.

ஹர்ஷருக்கு இலக்கியம், கலை முதலியவற்றில் திறமையும், கற்றலில் ஆர்வமும் மிகுந்திருந்தன. தம் வாழ்நாள்களில் அவர் மூன்று நாடகங்களையும், ஓர் இலக்கண நூலையும், பல கவிதை நூல்களையும் இயற்றியுள்ளார். அவற்றில் இரண்டு கவிதை நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. பாணரும் பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெயதேவரும், மற்றும் பல எழுத்தாளர்களும் ஹர்ஷரின் கவித்திறனைச் சிறப்பித்துப் போற்றுகின்றனர். பன்ஸ்கீரா, மதுபான் செப்பேட்டுச் சொற்றொடர்களை ஹர்ஷரே எழுதியிருக்கக் கூடும். பன்ஸ்கீராச் செப்பேட்டில் காணப்படும் பூ வேலைப்பாடு மிக்க கையெழுத்தை ஹர்ஷர் தாமே வெட்டியது எனத் தெளிவாகக் கூறப்படுகிறது. அது ஹர்ஷர் அழகாகக்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 91; மொழிபெயர்ப்பு-76

கையெழுத்திடும் கலையில் சிறந்து விளங்கியிருந்தார் என்பதைக் குறிக்கிறது.[1] ஓரளவிற்குப் புகழ் பெற்ற புல்லாங்குழல் வாசிக்கும் இசை வல்லுநராகவும் ஹர்ஷர் விளங்கினார் என்பதை பாணரின் குறிப்புகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.[2] ஹர்ஷர் நாகானந்தா (Naganandа) என்ற நாடகத்தைக் கவியழகு மிளிரும் இசை நாடகமாக அமைத்து நடத்தி மக்களிடையே புத்தரின் போதனைகளைப் பரப்பினார் என இட்சிங் கூறுகிறார்.[3] அந் நாடகத்தை நெறிப்படுத்தித் (Direct) தயாரிக்கும் பொறுப்பை ஹர்ஷரே மேற்கொண்டார். விஸ்வாந்த்ரா (Visvantara) இசைக் கோவையின் பெரும்புகழையும் சீனப் பயணி குறிப்பிடுகிறார். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த சந்திரா அதை இயற்றினார். புத்தரின் போதனைகளைப் போதிக்கும் எளிய முறைகளால் கவரப்பட்ட இட்சிங், நாகானந்தா இசை நாடகத்தைச் சீனாவிற்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும். அவ்விசை நாடகம் சீனாவிலிருந்து ஜப்பானுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந் நாடகம் புகாகு (Bugaku) நாடக அரங்கின் ஒரு பகுதியாக இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; உலகத்தின் மிகப் பழைய இசை நிகழ்ச்சியாக ஏறக்குறைய பதினான்கு நூற்றாண்டுகளுக்குப் பின் இன்றும் நடைபெறுகிறது. அதிலிருந்து நாகானந்தாவின் சிறப்பு அளவிட முடியாதது என அறியலாம். ஹர்ஷரின் அழியாச் சிறப்பிற்கு அது ஒரு சான்று ஆகும்.[4]

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 66; மொழிபெயர்ப்பு-பக்கம் 53

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 73, 75; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 61,63

[3]. இட்சிங்-பக்கம் 163

[4] ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 12ஆம் நூற்றாண்டு வரை ஜப்பானிய இசைக் கலைஞர்கள் சைனாவிற்கும், கொரியாவிற்கும் அடிக்கடி சென்று அந் நாட்டு இசையை நன்றாகப் பயின்று தேர்ச்சி பெற்றனர். 612ஆம் ஆண்டு மிமாஷி (Mimashi) என்ற கொரியர் ஜிகாகு (Gigaku) என்ற இசை நாட்டியத்தை ஜப்பானுக்குக் கொண்டு சென்றார். ஜிகாகு இசை நாட்டியத்தை அவர் சீனாவில் கற்றுக்கொண்டார். அந் நிகழ்ச்சியில் சிங்க உருவிற்கும், கருடனைப் பாம்பு விழுங்கும் காட்சிக்கும் அடிக்கடி மேடையில் தோன்ற வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இசையையும் மற்ற அமிசங்களையும் காணுகையில் ஜிகாகு இசை நாடகம் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்குச் சென்றது என்பதைத் தெளிவாக உணர முடிகிறது என தேவஹூட்டி கருதுகிறார். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ககாகு (Gagagu) இசைப்பள்ளி புகாகு (Bugagu) நாட்டிய முறையுடன் மேலும் இந்திய அமிசங்களையும், பௌத்த மதப் போதனைகளையும் அவற்றை மக்கள் விரும்பும் வகையில் மாற்றி அமைத்தனர். 752ஆம் ஆண்டு நாரா (Nara) விலுள்ள தொடோய்ஜி (Todaiji) ஆலயத்தில் பெரிய புத்தரின் சிலை அமைக்கப்பட்ட புனித விழாவில் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு இசை நிகழ்ச்சிகளை நடத்தினர். அந் நிகழ்ச்சியின்பொழுது பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகளும் முகமூடிகளும் (Mask) இன்றும் நாராக் கோயிலில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அரண்மனை அரங்குகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இதற்கு முக்கிய பங்கு உண்டு. இன்று ஜப்பானில் வழக்கத்தில் இருந்து வரும் புகாகு ரை யோ (Bugagu-Ryo-O) என்ற இசை நாட்டியத்தின் கருத்து நாகானந்தாவின் ஒரு பகுதியே எனத் தகாகசு (Takakusu) கூறுகிறார்.

ஹர்ஷர் தம் ஆட்சிக் காலத்தில் இலக்கியப் படைப்புகளுக்கு மிகுந்த ஆதரவு அளித்தார் என்பதற்கு இட்சிங்கின் குறிப்புகளில் ஆதாரங்கள் உள்ளன. இலக்கியத்தில் அளவு கடந்த பற்று உடைய ஷர்ஷர் ஒருமுறை, 'யார் கவிதைகளில் விருப்பமுடைய வர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் தாங்கள் எழுதி வைத்திருப்பவை யுடன் மறுநாள் அரசரைக் காண வேண்டும்' எனக் கட்டளையிட்டார். எனவே, மறுநாளே அரசரிடத்தில் 'ஐந்நூறு கட்டு இலக்கியப் படைப்புகள்' சேர்ந்தன எனவும் இட்சிங் கூறுகிறார். அவை பெரும்பாலும் கவிதைகளும் ஜாதகக் கதை களும் (Jataka) ஆகும். அவை கலையழகு மிளிர அமைக்கப்பட்டன. அவற்றை மக்கள் இசை பாடியும் நாடகங்களாகவும் நடித்தனர். புத்தரின் போதனைகளைச் சாதாரண மக்கள் அவர்கள் தரத்திற்கு ஏற்ப எளிதான வழிகளில் புரிந்துகொள்ள இசை நாடகம் பயனுள்ளது என்பதை இட்சிங் புரிந்துகொண்டார்.

கல்வி கேள்விகளில் தலைசிறந்த பெரியோர்களைக் கொண்ட ஒரு குழு ஹர்ஷரின் அரசவையில் இருந்தது. கவிஞர்களில் பாணரும், அவர் உறவினர் மயூரா(Mayura)வும் சிறப்பானவர்கள். மாதங்க திவாகரர் (Matanga Divakara) என்பவரும் அக் குழுவில் இருந்தார் எனக் கி.பி. 900 ஆண்டில் வாழ்ந்த ராஜசேகரர் என்ற நாடகாசிரியர் கூறுகிறார். மாதங்கா சந்தலா (Matanga Chandala) என்பவர் கீழ்க்குடியில் பிறந்தவர். அவர் ஹர்ஷரின் அரசவையில் பங்கு பெற்றது, கீழ்க்குடியைச் சேர்ந்த திறமை மிக்கவர்கள் புறக் கணிக்கப்படவில்லை என்பதை நிரூபிக்கிறது. சில சமயங்களில் மற்றவர்கள் மாதங்காவைப் பற்றிக் கேலியாகவும், வேடிக்கை யாகவும் பேசிக்கொண்டாலும், அவ் வேடிக்கைப் பேச்சுகளில் அவரும் கலந்துகொண்டார். மேலும், அவைப் பிரதிநிதிகள் அனைவரும் மாதங்காவைத் தங்களுக்குச் சமமானவராகவே ஒப்புக் கொண்டனர். ஹர்ஷரும் மாதங்காவை அவருடைய இலக்கியத் திறனுக்காகப் பாராட்டிக் கௌரவித்தார்.

ஒழுக்கத்தில் சிறந்தவர்களுக்கும், மேம்பட்ட திறமை மிக்க வர்களுக்கும் ஹர்ஷர் பல வகைகளில் மதிப்பளித்துப் போற்றினார். அதுபற்றிச் சீனத்துப் பயணி பெரியதொரு விளக்கத்தையே தருகிறார். மிக உயர்ந்த கௌரவம் எனக் கருதப்படும் சிம்மா சனத்திற்கு (Lion's Throne) அருகே அரசரிடம் செல்லும் பெருமை அவர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் மன்னருக்கு ஆலோசனை அளிக்கும் வாய்ப்பையும் பெற்றனர். ஹர்ஷர் அறிவாற்றல் மிக்கவராதலால், தூய மேலான வாழ்க்கை நடத்தியவர்களுக்குக் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக இல்லாதிருப்பின், மதிப்பு அளிக்கப்பட்டதே தவிர உயர்ந்த கௌரவங்கள் வழங்கப்பட

வில்லை. கற்றவர்களுக்கும் பக்தி மிக்கவர்களுக்கும் பரிசளிக்கும் உயர்ந்த பண்பை ஹர்ஷர் பெற்றிருந்தார். பீல் மொழி பெயர்த்துள்ள யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளிலிருந்து ஹர்ஷர் தனித் திறனுடன் விளங்கிய ஜெயசேனுவுக்கு எண்பது பெரிய கிராமங்களின் வரி வருவாயைப் பரிசாக அளித்தார் என்றும், யுவான் சுவாங்கிற்குப் பத்தாயிரம் பொற்காசுகளையும், அவற்றைப் போல மூன்று பங்கு பெறுமான வெள்ளி, மற்றப் பொருள்களையும் வெகுமதியாக அளித்தார் என்றும் தெரிகிறது. பொருள்களைத் தேடி அலையாத எளிய வாழ்க்கையில் நம்பிக்கை கொண்ட ஜெயசேனு, யுவான் சுவாங் ஆகிய இருவரும் அரசரின் அன்பைப் போற்றி அவ் வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டனர்.

ஹர்ஷர் எழுதிய நாடகங்கள் அக் காலப் பொதுவான நிலையை விளக்கும் முக்கியச் சான்றுகளாகும். மேலும், அதன் ஆசிரியரின் குணநலன்களையும் நம்பிக்கைகளையும் அறியும் வழிகாட்டிகளுமாம். ரத்னுவளி, பிரியதர்சிகா என்ற நாடகங்களின் அமைப்பு முறை ஒரே மாதிரியாகவும் எளிமையாகவும் காணப்படுகின்றது. சிவன், விஷ்ணு, இந்திரன் ஆகிய கடவுள்களின் அருளைப் பெற வேண்டி வணங்குதல் அந் நாடகங்களில் காணப்படுகிறது. நாகானந்தா என்ற நாடகம் அரசரின் எழுத்தாற்றல் முதிர்ச்சியைக் காட்டுகிறது. ஹர்ஷர் அதைக் கடைசியாக எழுதித் தொகுத்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. அதன் முக்கிய கருத்து புத்தரின் போதனையைப் பற்றியதாகும். புத்தரைத் தெய்வமாக்கி, அவருடைய அருளை வேண்டி வணங்குவது இந் நாடகத்தில் காணப்படுகிறது. இது சமஸ்கிருத நாடகங்களில் சாதாரணமாகக் காணப்படாத ஒன்றாகும். கௌரி என்ற வரங்கொடுக்கும் இந்து தேவதை இந் நாடகத்தின் ஒரு பாத்திரமாக விளங்குவது இந்து பௌத்த மதம் இரண்டிலும் ஹர்ஷர் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. மேலும், அக் காலத்திய சமயப் பொறைக்கும் தாராள மனப் பண்பிற்கும் இஃது ஒரு சான்றாகும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஹர்ஷர் கூட்டிய பேரவை நிகழ்ச்சிகள் அவர் இந்து மதம் பௌத்த மதம் இரண்டையுமே தழுவியிருந்தார் என்பதைக் குறிக்கின்றன. மேலும், இரண்டு சமயங்களும் சந்தித்து ஒன்றுபடுவதற்கான அறிகுறிகளாக அவை காணப்பட்டன. ஹர்ஷரின் பேரவைகள் புத்த மத வழக்காறுகளை அடிப்படையாகக்கொண்டிருந்தன.[1] ஆனால்,

[1] பீல்-i-பக்கம் 214; லைப்-பக்கம் 184; பாஹியான் பயணங்கள் (The Travels of Fa-hsien-பக்கம் 22. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பேரவை கூட்டுவது பௌத்தர்களின் முறை எனக் கருதுகிறார்கள். அசோகர் முதன் முதலாக அவ் வழக்கத்தைப் பின்பற்றினர் எனப் பௌத்த மத நூல்கள் கூறுகின்றன. சூத்ஹில் (Soothhill) அதற்கு இணையான சமஸ்கிருதச் சொல்லான பஞ்ச வர்சிகா (Pancha Varshika) அல்லது பஞ்ச பரிஷத் Pancha Parishad) என்ற சொற்களைத் தருகிறார்.

அப் பேரவைகள் புனித இந்து தலமான பிரயாகையில் (அலகாபாத்) நடைபெற்றது. அக் கூட்டத்தில் அரசர் செய்த தான தருமங்களினுல் எல்லாச் சமயத்தைச் சேர்ந்தவர்களும் பயனடைந்தனர். ஹர்ஷர் அது போன்ற ஆறு பேரவைகளை நடத்தியது இளமைக் காலத்திலிருந்தே அவருக்குப் பௌத்த சமயத்தின்மீது இருந்த பற்றை நிரூபிக்கிறது.

சிறந்த நாடக ஆசிரியராக விளங்கிய ஹர்ஷர் எழுதிய மூன்று நாடகங்களும் அவர் தம் நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டவர் என்பதை நிரூபிக்கின்றன. ரத்னுவளி நாடகத்தின் முதல் கடைசிப் பகுதிகளில் அரசரும், மக்களும் கடவுள் அருளைப் பெற வேண்டி நிற்கின்றனர். மற்ற இரு நாடகங்களின் இறுதிப் பகுதிகள் நாட்டுக்கும் மக்களுக்கும் கடவுளின் அருளை வேண்டி நிற்கும் வழிப்பாடாகக் காணப்படுகின்றன. நாகானந்தா நாடகத்தில் ஹர்ஷர் கீழ்க்காணும் வரத்தைத் தேவதையிடம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிருர்: 'மேகங்கள் குறித்த காலத்தே மழை பொழியட்டும். மக்கள் நிலத்தில் தொடர்ந்து சாகுபடி செய்து பச்சை ஆடையை நிலத்திற்கு அணிவிக்கட்டும். எல்லா மக்களும் நற்செயல்களைச் செய்து குவிக்கட்டும். எல்லா அழிவிலிருந்தும் நாடு விடுபடட்டும். மக்கள் பொருமையற்ற உள்ளங்களுடன் களிக்கட்டும். உறவினர், நண்பர்களினுல் இடையூறற்ற இன்பத்தைச் சுவைக்கட்டும்.'

அரசரின் திறமையான நிருவாகத்தின் பயனை மக்கள் அனுபவித்து மகிழ வேண்டும் என்பதே முற்கால இந்திய அரசர்கள் வழக்கமாகப் பின்பற்றி வந்த கொள்கையாகும். அது போன்ற கொள்கையை ஹர்ஷரும் பின்பற்றினுர்.

ஹர்ஷர் காலத்திய வரலாற்றுச் சான்றுகள் அனைத்தையும் கூட்டாக ஒப்பிட்டு ஆராய்ந்தால் ஹர்ஷர் அரசர்களுள் ஓரளவிற்குச் சற்று உயர்ந்த இடத்தை வகிக்கிருர் என்பது தெளிவாகும். அறிவாற்றலும், பல்வேறு சமயங்களைப் புரிந்துகொள்ளும் திறனும், தர்ம சிந்தனைகளும், கற்கும் ஆர்வமும், கலை இலக்கியத் துறையில் சாதனைகளும் ஒருங்கே ஹர்ஷரிடம் காணப்படுவதால், மற்ற அரசர்களைவிட அவர் உயர்ந்த தகுதி உடையவர் என்பது தெளிவாகிறது. ஹர்ஷரிடம் பேரரசர் ஆகும் ஆர்வம், சுறுசுறுப்பு, அயராத போர்த்திறன், நிருவாகத் திறன் முதலிய சீரிய பண்புகள் காணப்பட்டன. தமக்கென்று புதிய கொள்கைகள் எதையும் உருவாக்கிச் செயல்படுத்துவதை ஹர்ஷரிடம் காண முடியவில்லை. ஆடம்பரத்தையும் விழாக்களையும் ஹர்ஷர் விரும்பினுர். சுருக்கமாக அதிகாரத்தின் திண்மையும், சமய நம்பிக்கைகளால் பெற்ற

அனுபவமிக்க முதிர்ச்சியும், கலே, இலக்கிய ஆர்வமும் ஹர்ஷரின் உயர்ந்த குணநலனேச் சிறப்பிக்கின்றன.

கபிலவஸ்து

அக்கால அரசியல் அமைப்பையும், அரசியல் நிருவாகத்தின் அன்ருட விவரங்களேயும் அறிந்துகொள்வது ஹர்ஷரைப் பற்றி மதிப்பிடுவதற்கு உதவும். யுவான் சுவாங் பயணக் குறிப்புகளிலிருந்து ஹூணர்கள் படையெடுப்புக் காலம் வரை 'குடியரசு'கள் நிலவி வந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டாலும், ஏழாம் நூற்ருண்டில் தலேமுறை வழியாக ஆட்சிப் பொறுப்பை வகித்து வந்த மன்னராட்சியே இந்தியாவில் காணப்பட்டது என்று தெரிகிறது. யுவான் சுவாங் குறிப்பிடும் 'குடியரசு'கள் சமுத்திர குப்தரின் காலத்தில் நிச்சயமாக இயங்கி வந்தன. அவற்றை அழிப்பதற்குச் சமுத்திர குப்தர் முயற்சிக்கவில்லே எனத் தெரிகிறது. கபிலவஸ்துவின் நிருவாகத்தை யுவான் சுவாங் விளக்குகையில் அங்குத் தலேமை ஆட்சியாளர் யாரும் இல்லே என்றும், ஒவ்வொரு நகரமும் அதன் ஆட்சியாளரை நியமித்துக்கொண்டது என்றும் கூறுகிருர்.[1] அது போன்ற பழைய உள்நாட்டு அரசாங்க முறைகள் கபிலவஸ்துவில் நீடித்து வர அனுமதிக்கப்பட்டதன் முக்கிய காரணம் அது புத்தர் பிறந்த புனித பூமியாக விளங்கியதே ஆகும். உரிமையுடன் அங்கு இயங்கி வந்த அரசியல் உறுப்புகளின் சிறப்புகள் பல காலப்போக்கில் அண்டை நாடுகளின் வலுவான மன்னராட்சி நிருவாகத்தின் விளேவாகச் சிதைந்து போயின. ஹர்ஷப் பேரரசின் எல்லேக்குள்ளாகவே கபிலவஸ்து இருந்தாலும், அதன் சிறப்பான உள்நாட்டு நிருவாகம் நீடித்து வர அவர் அனுமதித்தார். இருப்பினும், கபிலவஸ்து ஏழாம் நூற்ருண்டில் சிறப்பிழந்த சிறிய ஒரு நகரமாகும். மிகக் குறைந்த மக்களே அங்கு வாழ்ந்ததாக யுவான் சுவாங் குறிப்பிடுகிருர்.

பாணர் எழுதிய ஹர்ஷ சரித்திரத்தின் குறிப்புகளும் சீனப் பயணியின் குறிப்புகளும் விவரித்துள்ள அரசருக்கும் மக்களுக்கும் இடையே கொண்ட தொடர்புகள், அர்த்த சாஸ்திரம், மனுநீதியில் கூறப்பட்டிருக்கும் அரசரின் இலக்கணம், அரசியல் முறைகளுடன் தொடர்பு கொண்டவையாகும். ஆனல், பாணர் இயற்றியுள்ள காதம்பரியில் அரசரும் மக்களும் கொண்டிருந்த மற்ருெரு வகையான உறவு நிலேயையும் பற்றி விளக்குகிருர். அவ் வகையான உறவு மனுநீதியில் கூறப்பட்டிருக்கும் கருத்துகளுக்கு மாறுபட்டதாகும். 'வலுவற்ற முட்டாள் அரசர்களே அவைப் பிரதிநிதிகளின்

[1] பீல்-புத்தகம் 2-பக்கம் 14

கீழான ஏமாற்றுப் புகழ்ச்சியில் மயங்குவர். மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விதிப்பயனால் கடவுளுடைய அருளைப் பெற்று உலகத்திற்கு வந்து சேர்ந்த புனித அரசனாகத் தன்னை நினைத்துக்கொண்டு, இவ்வுலக இன்னல்களை அனுபவித்து அல்லல்படும் ஒருவன் மக்களின் வெறுப்பைத்தான் பெற நேரிடும்,' எனப் பாணர் கூறுகிறார்.[1]

ஹர்ஷர் காலத்தில் கீர்த்தி மிக்க பெரிய அரசர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பட்டம் பரமபத்தாரக மகா ராஜாதி ராஜ என்பதாகும். அதற்குப் பெருமை மிக்க அரசர்களுக்கு அரசர் என்று பொருள். இப் பட்டம் குப்தர்கள் காலத்திலிருந்தே பழக்கத்தில் இருந்தது. ஆனால், ஏழாம் நூற்றாண்டில் ஆண்ட அரசர்கள் பட்டங்களைப் பெற்றிருந்தாலும் அதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் நிலவிய குப்தர்கள் காலத்திற்போன்று உண்மையான பெருமைகளை அடிப்படையாகக்கொண்டதாக இல்லை. ஹர்ஷர் காலத்தில் சிறிதளவுகூடப் புகழ் பெற்றிராத அரசர்களும் தங்களை மிகப் பெருமைப்படுத்தும் பல பட்டங்களைச் சுமந்துகொண்டிருந்தனர். 'பரமபத்தாரக மகா ராஜாதி ராஜ' என்ற பட்டத்தை ஹர்ஷரின் தாத்தாவும், தந்தையும், சகோதரரும் கொண்டிருந்தது, அக் காலத்தில் அரசர்களுக்குப் பட்டங்களில் இருந்த விருப்பத்தைக் குறிக்கிறது. ஹர்ஷரின் பிற்காலச் செப்பேட்டுக் குறிப்புகளில் இச் செய்திகளை நாம் அறிய முடிகிறது. இப் பட்டங்களைத் தம் குடும்பத்தினருக்கு அவர்கள் மறைவிற்குப் பின் தம்முடைய காலத்தில் கொடுத்திருந்தார். தம் குடும்பத்தின் சிறப்பை உயர்த்திக் காட்ட வேண்டும் என்ற எண்ணமே அதற்கு அடிப்படையாகும். எப்படி இருப்பினும், ஏழாம் நூற்றாண்டில் அரசர்கள் எதிரிகளை வென்று வெற்றி வீரராகத் திகழ வேண்டும் என்ற விருப்பத்தில் சிறிதளவு ஈடேறியவுடன் பெரிய பட்டங்களைத் தமக்கு அளித்துக் கொண்டனர். 'பரம பத்தாரக மகா ராஜாதி ராஜ' என்ற பட்டத்தை ஹர்ஷர் பெற்றிருந்தது முற்றிலும் அவரது தகுதிகளுக்காகவே ஆகும். காலத்திற்கு ஏற்றபடி எல்லோரையும் போலவே அவரும் பட்டத்தைப் பெற்றிருந்தார் எனத் தவறாக நினைத்துவிடக் கூடாது. ஹர்ஷரின் வெற்றிகளையும் பேரரசின் பரந்த எல்லைகளையும் எண்ணிப் பார்த்தால் இவ் வுண்மையை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். ஹர்ஷரின் எதிரியான இரண்டாம் புலிகேசி 'வடபுலத் தலைவர்' (The Lord of entire North-Sakal-Ottara-Pathesvara) என்று ஹர்ஷருக்குப் பட்டம் அளித்ததன் மூலம் தம்மைத் 'தென்புலத் தலைவர்' என்று

[1] காதம்பரிச் சுருக்கம்-பக்கம் 81, 82

உணர்த்திக் காட்டினாலும், ஹர்ஷர் ஆற்றல் மிக்கவர் என்பதற்கு இஃது ஒரு சிறப்பான சான்று ஆகும்.

அரசு உரிமை பொதுவாக மூத்த மகனுக்கு உரியது. வயது நிரம்பப் பெற்றவுடன் இளைய ராஜா (Yuvaraja) என்று அழைக்கப் பட்டு, அரசர் மறைவிற்குப் பின் பொறுப்பை ஏற்கும் உரிமையைப் பெறுவார். சில வேளைகளில் இளைய மகனும் அரசின் வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்படுவதுண்டு. அதற்கு இளைய மகனின் ஆற்றலும் திறமையும் மூத்த மகனைவிடச் சிறப்பாக விளங்கியது காரணமாகும். மேற்கு இந்தியப் பகுதிகளில் உடன்பிறந்தவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் வழக்கம் நிலவி வந்தது. அரசருக்கு உடன்பிறந்தவர் யாரும் உயிருடன் இல்லாதிருப்பின், மூத்த சகோதரரின் மூத்த மகன் ஆட்சிப் பொறுப்பேற்றார்.[1] க்ஷத்ரபர்களிடம் (Kshatrapas) இவ் வழக்கம் காணப்பட்டது. வலபியின் மைத்ரேகர்களும் சில சமயங்களில் இவ் வழக்கத்தைப் பின்பற்றினர். அரசக் குடும்பத்தில் பெண்கள் அரசியல் பொறுப்புகளில் முக்கிய பங்கு வகிப்பது ஒருபொழுதும் வழக்கமில்லை.

ஹர்ஷர் விதவையான தம் தங்கை ராஜ்யஸ்ரீக்கு உதவியாக அவரது நாட்டின் அரசியல் நிர்வாகத்தைத் தாமே கவனித்தார்[2] என்ற விஷயம் அக் காலத்தில் பின்பற்றப்பட்ட வழக்கத்திற்கு மாறானதாகும். அப்படி வேறு ஒரு நாட்டிற்காகப் பொறுப்பு ஏற்ற நிலை, வேறு வழியின்றித் தங்கைக்கு உதவுவதற்காக ஹர்ஷர் மேற்கொண்ட செயல் ஆகும். கனோஜ் அரசின் இராணி ராஜ்யஸ்ரீயும் தன் கணவன் வழி உறவினர்களைவிட, தன் தந்தை வழி உறவினர்களை உதவிக்காக நாடிய நிலையில் கனோஜுக்குத் தனிப்பட்ட அந்தஸ்தை வழங்குவதே சிறந்தது என ஹர்ஷர் முடிவு செய்தார். யுவான் சுவாங் குறிப்புகளை மொழிபெயர்த்துள்ள பீல், 'ராஜ்யஸ்ரீ நுட்பமான அறிவுடையவர்......... அரசருக்குப்பின் அமர்ந்திருந்தார்......மகாயான பிரிவின் கொள்கைகளை மன்னர் விளக்குவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்......மகிழ்ச்சி பொங்கப் புகழ்ந்து உரைப்பதை அவரால் நிறுத்த இயலவில்லை' என்று கூறுகிறார்.[3] இச் சொற்றொடர்கள் ராஜ்யஸ்ரீ அரசாங்கத்தில் வகித்து வந்த சிறப்பான இடத்தையும், அவரது சமயப் பற்றையும் விளக்குகின்றன. எதிர்பாராத சூழ்நிலைகளால் தம்மைச் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட ராஜ்யஸ்ரீக்கு ஹர்ஷர்

[1] ராப்ஸன் (Rapson)-இந்திய நாணயங்களின் தொகுப்பு (Catalogue of the Indian Coins)-பக்கம் C. L-iii

[2] வாட்டர்ஸ்-புத்தகம் 1-பக்கம் 345

[3] பீல்-பக்கம் 176

அரசகுலப் பெண்டிர்களில் புதியதொரு சிறப்பான இடத்தை அளித்தார்.

அக் காலத்தில் சிறிய பகுதிகளை அரசு புரிந்து வந்தவர்களும் ராஜா, மகாராஜா என அழைக்கப்பட்டனர். தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளை அவர்கள் உரிமையுடன் நிருவாகம் செலுத்தி வந்தனர்; ஆனால், ஒரு பெரிய அரசருடைய ஆளுகைக்கு உட்பட்டு விசுவாசத்துடன் நடந்துகொண்டனர். சீனத்துப் பயணி யுவான் சுவாங் தாம் சென்ற நாடுகளைப் பற்றித் தரும் விளக்கங்கள் அந் நாடுகளின் அரசாங்க அமைப்பு, ஆட்சியாளர்கள், அவர்களுக்கு உட்பட்டிருந்தவர்கள் முதலியன பற்றி நாம் அறிந்துகொள்ள உதவுகின்றன. ஹர்ஷருக்கு உட்பட்டிருந்த சிற்றரசர்களை ராஜா (Raja), பூபால (Bhupala), பார்திவ (Parthiva), குமார (Kumara), க்ஷிதிபால (Kshitipala), லோகபால (Lokapala), நிரிபதி (Nripati) எனப் பாணர் குறிக்கிறார். சாமந்தா, மகா சாமந்தா என்ற பட்டங்களும் அக் காலத்தில் நிலவி வந்த சாதாரண பட்டங்களாகும். ஹர்ஷர் காலத்து இலக்கிய நூல்களில் இப் பட்டங்களைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டிருக்கின்றன. பொதுவாக அவை ராஜ, மகாராஜ என்பவற்றிற்கும் கீழாகக் கருதப்பட்டவையே ஆகும். ஆனால், ஆற்றல் மிக்கவர்களும் சாமந்தா, மகா சாமந்தா என்ற பட்டங்களைப் பெற்றிருந்தனர். சாமந்தாவிலிருந்து மகாராஜா வரை உள்ள பட்டங்களைப் பெற்றிருந்தவர்களின் அந்தஸ்தும், அதிகாரமும் பல வகைகளில் வேறுபட்டிருந்தன. மேலும், அவை காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டிருந்தன. ஆகவே, சாமந்தாவிலிருந்து மகா ராஜா வரை பட்டங்களைப் பிரித்துப் பாகுபடுத்தி அறிந்து கொள்வது சற்றுக் கடினம். குப்தர்கள் காலத்திற்குப் பின் அரசியல் நிருவாக அமைப்பு முறைகளில் மாற்றங்கள் மிக விரைவாகத் தோன்றின. அதிகாரிகளின் அதிகாரங்களும், கடமைகளும் அடிக்கடி மற்ற அதிகாரிகளின் பொறுப்புகளுடன் சிறிதோ அல்லது அதிகமாகவோ கலந்து புதிய நிருவாக அமைப்புகள் தோன்றிக் கொண்டே இருந்தன. ஆகவே, ஒரு குறிப்பிட்ட பதவியின் தன்மை, அதிகாரம், பொறுப்புகளை வரையறை செய்து விளக்குவது கடினம். ஹர்ஷருக்குக் கீழ்ப்பட்டிருந்த சிற்றரசர்கள் பல வகைப்பட்டவர்கள் ஆவர். காமரூபத்தின் அரசர் பாஸ்கா வர்மரும், வலபி அரசர் இரண்டாவது துருவசேனு அல்லது பாலாதித்யர் அல்லது துருவபட்டர்[1] ஆகிய இருவரும் ஹர்ஷரின் மிக முக்கியமான நட்பு அரசர்கள் ஆவர். ஹர்ஷரின் மகளைத் துருவபட்டர் மணந்திருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்

[1] இரண்டாவது துருவசேனு பாலாதித்யர்

தக்கது. யுவான் சுவாங்கின் பிரயாகைப் பேரவை பற்றிய விளக்கங்களில் இதைக் காணலாம்.

ஹர்ஷப் பேரரசின் எல்லையின் இருகோடிகளில் அமைந்திருந்த இரண்டு ராஜ்யங்களை ஆட்சி செய்த சசாங்கனும், இரண்டாம் புலிகேசியும் ஹர்ஷரின் முக்கிய எதிரிகளாக விளங்கினர். ஹர்ஷருக்கு உட்பட்டு முக்கிய இடத்தை வகித்த மற்ற அரசர்களில் பூர்ணவர்மர், உதித்தா, மாதவ குப்தர் முதலியவர்கள் முக்கியமானவர்களாவர். மௌகாரிக் குடும்பத்தின் இளையவர் எனக் கருதப்படும் மகதத்தின் பூர்ணவர்மர் திறமை மிக்கவர் ஆதலால், அவரிடம் ஒரு முக்கிய மாநிலத்தின் நிருவாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஹர்ஷப் பேரரசின் எல்லையை ஒட்டி அமைந்திருந்த வட இந்தியாவின் அரச நகரம் (The Royal City of North India) என்று அழைக்கப்பட்ட ஜலந்தராவின் அரசர் உதித்தாவும், குப்தர்களின் இளவரசர் மாதவ குப்தரும் முக்கிய சிற்றரசர்கள் ஆவர். ஹர்ஷரின் மறைவுக்குப் பிறகே மாதவ குப்தரின் குடும்பம் அரசியலில் செல்வாக்குப் பெற்றது. இவர்கள் ஒவ்வொருவரும் மத்திய அரசுடன் வெவ்வேறு வகைப்பட்ட உறவைக் கொண்டிருந்தனர் என நாம் நம்ப வேண்டியிருக்கிறது. மாதவ குப்தர் அரசரின் உற்ற துணைவராகவும் ஆலோசகராகவும் விளங்கினார். ஜலந்தராவின் நிருவாகப் பொறுப்பைப் பொறுத்தவரை தம்முரிமை பெற்றவராக உதித்தா விளங்கினார்; பௌத்த மத விவகாரங்களில் ஹர்ஷருக்கு அமைச்சராகப் பணி புரிந்தார். பூர்ணவர்மர் மகதத்தின் செல்வம் மிக்க மாநிலத்தின் நிருவாகப் பொறுப்பினராக விளங்கினார். ஹர்ஷரின் மத்திய அரசின் நிருவாக முறைகளையே பூர்ணவர்மர் பெரிதும் பின்பற்றி நிருவகித்தார். வலபி, காமரூபத்தின் அரசர்கள் ஹர்ஷருக்கு அடிக்கடி வெகுமதிகளையும், சிறப்பான வர்த்தக உரிமைகளையும் அளித்து வந்தனர். மேற்கூறியவற்றிலிருந்து மாறுபட்ட திறை(Tribute)யையும் சேவையையும் ஜலந்தராவின் அரசர் ஹர்ஷருக்கு அளித்து வந்தார் என அறியலாம். மகதத்தின் அரசர் தம் நாட்டின் நில வருவாயில் வழக்கமான பகுதியை ஹர்ஷருக்குச் செலுத்தி வந்தார். கனோஜ் பேரவை நிகழ்ச்சிகளின் விளக்கங்களிலிருந்து ஹர்ஷரின் பேரரசில் முக்கிய அந்தஸ்து வகித்து வந்த ஏறக்குறைய இருபது குறுநில மன்னர்கள் பங்கு பெற்றனர் என்பதைக் காண முடிகிறது. மேலும், பக்கத்து நாட்டைச் சேர்ந்த இளவரசர்களும், அவர்களுடைய முதல் மந்திரிகளும் நற்செயல்கள் புரியும் ஆர்வத்திற்காக அவ்வப்பொழுது கௌரவிக்கப்பட்டனர்.[1] அவர்கள் ராஜா, மகாசாமந்தாக்களுக்கு அடுத்த இடத்தை வகித்தனர்.

[1] வாட்டர்ஸ்-புத்தகம்1-பக்கம் 344

விந்திய மலைப்பகுதி வனத்தலைவர்கள் ஹர்ஷப் பேரரசுக்கு உட்பட்ட மற்றொரு பிரிவினர் ஆவர். அம்மலைப் பகுதிகள் ஹர்ஷப் பேரரசுக்கு உட்பட்ட அட்டாவி ராஜ்யம்[1] எனப் பல இடங்களில் பாணர் குறிக்கிறார். அட்டாவி ராஜ்யத்துடன் ஹர்ஷர் கொண்டிருந்த தொடர்பும், அதன் தன்மையும், அவர்கள் எந்த அளவுக்கு ஹர்ஷருக்கு உட்பட்டிருந்தனர் என்பதும் அப் பகுதியின் புவியியல் வரலாற்று, பண்பாட்டு, பொருளாதாரச் சூழ் நிலைகளைப் பொறுத்திருந்தன. நாட்டின் முக்கிய இடத்தில் அமைந் திருந்த விந்திய அட்டாவியைப் பற்றிய குறிப்புகள் ஹர்ஷரின் முன்னோர்கள் பாதுகாத்து வைத்திருந்த பிரதிகளில் காணப்படு கின்றன. சமுத்திர குப்தர் தம் காலத்தில் அட்டாவிகா ராஜாக் களை வென்று உட்படுத்தியதாக அலகாபாத் குறிப்பில்[2] பதித்துள் ளார். அதை நாம் மிக முக்கியமாகக் கருதுவதற்குக் காரணம், அட்டாவிகா ராஜாக்களை வென்ற ஆண்டும், அட்டாவி ராஜ்யம் எந்த இடத்தில் அமைந்திருந்தது என்பதும், அதை ஆண்ட மன்னர் களைப் பற்றிய குறிப்புகளும் அதில் காணப்படுவதேயாகும். ஹர்ஷ சரித்திரத்தில் பாணர் அட்டாவிகா சாமந்தாக்களை விந்திய மலைப் பகுதிகளுடன் தொடர்புபடுத்திக் கூறுகிறார். மோனியர் வில்லி யம்ஸ் தமது சமஸ்கிருத ஆங்கில அகராதியில் விந்திய அட்டாவி என்ற சொல் ஒரு காலத்தில் மதுராவிலிருந்து நர்மதை ஆற்றுக் கரைப்பகுதி வரைப் பரந்திருந்த காட்டுப்பகுதி எனக் கூறுகிறார். V. S. அகர்வாலா அட்டாவி ராஜ்யம் என்பது சம்பல் ஆற்றுப் பகுதியின் மேற்குப் பகுதி என விளக்குகிறார்.

குப்தப் பேரரசின் ஆரம்பக் காலத்திலிருந்தே விந்திய வன ராஜ்யங்கள் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டிருந்தன என அறியலாம். வேலியற்ற வயல் வெளிமுறைச் சாகுபடி அங்குக் காணப்பட்டாலும் கூடவே மர உற்பத்தித் தொழிலும் இருந்து வந்தது.[3] அப் பகுதியின் தனிமைப் பற்றியும் மக்களின் வாழ்க்கை பற்றியும் ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படும் விளக்கங்களை எண்ணிப் பார்க்கையில் அவர்களின் பொருளாதாரச் சூழ்நிலைகள் அக் காலத்திய வன வாழ்க்கையை ஒத்ததாகவே காணப் படுகின்றன. அட்டாவி ராஜ்யத் தலைவர்கள் ஆரியப் பண் பாடுகளைக் கொண்டவர்களாயினும் விந்தியர்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்களல்லர். ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்புக்குப் பின்னும் (Cultural-Invasion) விந்தியர்கள் தங்களுடைய சிறப்பான

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 58; மொழிபெயர்ப்பு-பக்கம் 46

[2] C. I. I-iii-எண் 1

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 227-230; மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 225-229

சமூக அமைப்பைக் காப்பாற்றிக்கொண்டிருக்க வேண்டும். சபாரா (Sabara) தளபதி ஒருவர் தம்மை விந்தியத்தின் தலைவர் எனவும், தாமே கிராமத் தலைவர்களை வழி நடத்திச் செல்பவர் எனவும் கூறிக்கொண்டதிலிருந்து உள்துறை நிருவாகத்தில் ஓரளவுக்கு அவர்கள் உரிமை பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. அரசவையில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப் பட்டதிலிருந்து வனத் தலைவர்களும் வழக்கமான அரசியல் முறைகளை ஒப்புக்கொண்டு பின்பற்றினர் என ஓர் அட்டா காவிகா சாமந்தாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் பாணர் கூறுகிறார். மத்திய அரசின் பொருளாதார ஆக்கத்திற்கு அவர்கள் தங்கள் பங்கைச் செலுத்தி உதவினர். மத்திய அரசுக்குக் கொடுத்து உதவிய பொருள்களில் யானைகள் முக்கிய இடத்தை வகித்தன. படையில் விந்திய வனப்பகுதி யானைகள் முக்கிய இடத்தை வகித்தன. இன்றும் விந்திய மலைப் பகுதிகள் யானைகள் வாழும் ஒரு முக்கியப் பகுதிகளாக விளங்கி வருகின்றன.

மண்டலப் பிரிவு

ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டு நட்பு பூண்ட ஒரு சில முக்கிய மானவர்களும், உயர்ந்த அந்தஸ்துப் பெற்ற இருபதிற்கும் மேற் பட்ட சிற்றரசர்களும், நூற்றுக்கணக்கான சாமந்தா, மகா சாமந்தாக்களும், ஹர்ஷ வரலாற்று ஆதார நூல்களிலிருந்து நண்பர்கள் என அறியப்படுபவர்களும், ஹர்ஷர் வேற்று நாடு களுடன் கொண்டிருந்த தொடர்பு முறைகளை நான்கு அல்லது ஐந்து பிரிவுகளாகப் பிரிக்க உதவுகிறார்கள். இவர்களில் பெரும் பான்மையோர் ஹர்ஷருக்கு உட்பட்டும், சிலர் சற்று இணையான ஆற்றலுடனும் காணப்படுகின்றனர். மகா சாந்தி விக்ரகிகா (Maha Sandhi Vigrahika) என்று அழைக்கப்பட்ட வெளிநாட்டு உறவு அமைச்சர் இப் பொறுப்பை செவ்வனே நிருவகித்தார். அந்தக் காலத்தில் மிகவும் நுட்பத்துடனும் அறிவாற்றலுடனும் விளங்கிய ஒருவரையே ஹர்ஷர் இப் பதவிக்கு நியமித்திருக்க வேண்டும். அயல் நாட்டுக்குத் தூதர் குழுக்களை அனுப்புவதற்கும், அந் நாட்டுக்குழுக்கள் வர அனுமதிப்பதற்கும் அரசருக்கு அவரே தக்க ஆலோசனைகள் கூறி இருக்க வேண்டும்.

ஹர்ஷரின் மண்டலங்களில் (Mandala) சம அந்தஸ்து உடைய நட்பு நிலைகளைக் காண இயலவில்லை. அவர்கள் ஆளும் இடத்தைப் பொறுத்து ஹர்ஷருக்குப் பல விதங்களில் பொருளாக அல்லது பணமாகத் திறை கட்டினர். சிற்றரசர்கள் ஹர்ஷரின் எதிரி களுடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளுதல் கூடாது என்ற உடன்

படிக்கையை அவர்கள் மதித்துப் பின்பற்றி வந்தனர்; போர்க்களத்தில் தற்காப்பிற்கும், எதிர்த்துத் தாக்குவதற்கும் ஹர்ஷருக்கு உதவ ஒப்புக்கொண்டனர். மேலும், ஹர்ஷரின் படைகள் அவர்களுடைய நிருவாகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தடையின்றிக் கடக்கவும் உதவினர்.[1] ஹர்ஷருக்கு உட்பட்ட சில சிற்றரசர்கள் அவரிடத்தில் தொடர்ந்து விசுவாசத்தைக் காட்டும்பொருட்டுச் சிறப்பான விழாக்கால நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதே போதுமானதாக இருந்தது. ஏனைய சிலர் ஹர்ஷரின் குடும்பத்துடன் திருமணத் தொடர்பும் கொண்டனர். இது வலபி, காமரூப அரசருடன் ஹர்ஷர் கொண்ட தொடர்புகளைக் குறிக்கிறது.[2] வேறு சிலர் ஹர்ஷரிடம் தோல்வி கண்ட நிலையில் தங்களுடைய ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வாரிசுகளை ஹர்ஷரின் மேற்பார்வையில் வளர ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற பழக்கமும் இருந்து வந்தது. மாளவ இளவரசர்கள் குமார குப்தர், மாதவ குப்தர் இருவரும் ஹர்ஷரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது இதற்குச் சான்று ஆகும். திறை கட்டுதலுடன் வெகுமதிகள் அளித்தலும் மற்றும் சிலர் பின்பிற்றி வந்த முறைகளாம். காமரூபத்தின் அரசர் பாஸ்கர வர்மர் ஹர்ஷருக்கும் வெகுமதிகள் அளித்தது பற்றிப் பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிடுகிறார்.[3] சிற்றரசர்கள் நட்பு உடன்படிக்கையை வேண்டி நின்ற சமயம் தூதுவர்கள் மூலம் அன்பளிப்புகளை அனுப்பினர். பாஸ்கர வர்மர், துருவ பட்டர், மற்றும் ஏனைய ஹர்ஷருக்கு உட்பட்ட அரசர்கள் அவ்வப்போது வெகுமதிகளை அனுப்பிக்கொண்டிருந்தனர். ஹர்ஷரின் தங்கை ராஜ்யஸ்ரீயின் மணவிழாவின் சமயம் பல அரசர்கள் அன்பளிப்பு வழங்கியதாக ஹர்ஷ சரிதத்தில் குறிக்கப்படுகிறது. ஹர்ஷரின் முன்னோர்களில் ஒருவர் மகா சாமந்தாக்கள் காரடிகிரதா (Karadikrta) என்ற வரி கட்டி வர வேண்டும் எனப் பணித்ததாகக் காணப்படுகிறது.[4] ஆனால், அந்த வரியின் தன்மையைப் பற்றித் தெளிவான விளக்கம் குறிக்கப்படவில்லை. மேலும், ஹர்ஷருக்கு உட்பட்ட சிற்றரசர்கள் ஹர்ஷப் பேரரசின் காலத்திலிருந்து (Harsha Era) வரலாற்றைக் குறித்தல் வேண்டும்; அல்லது ஹர்ஷர் எவ்வாறு குறித்து வருகிறாரோ அந்த முறையைப் பின்பற்றுதல் வேண்டும். ஆனால், எல்லாச் சிற்றரசர்களும் அதைப் பின்

[1] இது போன்ற உடன்படிக்கைகள் இருந்து வந்தன என்பதற்குத் தெளிவான சான்றுகளைக் காட்ட இயலவில்லை எனினும், ஹர்ஷரின் எதிரியான சசாங்கனை வீழ்த்தக் காமரூபத்தின் அரசரும், இரண்டாம் புலிகேசியை எதிர்க்க வலபியின் அரசரும் உதவினார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

[2] D. தேவஹுட்டி-ஹர்ஷா-பக்கம் 162-அடிக்குறிப்பு-எண் 4

[3] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-அத்தியாயம் vii

[4] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 100

பற்ற வேண்டும் என்று ஹர்ஷர் எதிர்பார்க்கவில்லை எனலாம்.[1] தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் வேளைகளில் சிலர் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற நிலை காணப்பட்டது. வேறு சிலர் தங்கள் விருப்பப்படிச் சிற்றரசுகளுக்கு நிதி ஒதுக்கி ஆட்சிச் செலுத்த அனுமதிக்கப்பட்டனர். சாமந்தா என்ற சாதாரணப் பட்டத்தைப் பெற்றிருந்தாலும் சிலர் கட்டளையிடும் அதிகாரத்தையும், பண ஒதுக்கீடு செய்யும் அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். ராஜாக்கள் என்று சிறப்பாக அழைக்கப்பட்டாலும் சிலர் மத்திய அரசின் நிருவாக அதிகாரிகளைப் போலவே காணப்பட்டனர்.

மைத்ரேகர்கள் சாமந்தாக்கள் என்ற பட்டத்தைப் பெற்று இருந்தாலும் பல அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். சசாங்கன் மகா சாமந்தா என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். ஜலந்தராவின் மன்னர் உதித்தா ராஜா என அழைக்கப்பட்டாலும் பௌத்த மதத் துறை ஆய்வாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

சாமந்தா-அரசியல் நிருவாகப் பிரிவு முறை

எல். கோபால் சாமந்தாக்களைப் பற்றி அண்மையில் நடத்திய ஆராய்ச்சிக் குறிப்புகளிலிருந்து சாமந்தா என்ற சொல், கிராம அளவில் விவசாயிகள், தங்கள் பக்கத்தில் வாழ்ந்தவரையும் அரசாங்க அளவில் பக்கத்து நாட்டை ஆண்டு வந்த மன்னரையும் குறிக்க வழங்கி வந்த சொல் என்பதை அறிகிறோம்.[2]

சாமந்தா-வெல்லப்பட்ட அரசர்கள்

காலப்போக்கில் அச் சொல் பக்கத்து நாட்டு அரசர்கள் என்ற சொல்லிலிருந்து சற்று மாறி வெல்லப்பட்ட பக்கத்து நாட்டு அரசர்களைக் குறித்தது. இந்தியாவில் நிலவி வந்த அரசியல் முறைகளையும், அதனை ஆண்ட பேரரசர்களின் இலக்கணத்தைப் பற்றியும் ஆராயும் நிலையில் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தின் பேரரசராக விளங்க விரும்பும் ஒருவர் வேற்று நாட்டு அரசர்களுடன் நட்புக் கொண்டு அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளுதலும், பணிய மறுப்பவர்களை வென்று கட்டுப்படுத்துதலும் அவசியம் என

1 மகா பிரதிகார மகா சாமந்தா பானுதத்தாவின் பாலாசோர் (Balasore) செப்பேடுகளில் (E.I-xxiii-197 ff) அவரை ஆண்ட சசாங்கனின் சமயக் கொள்கை சிறப்புகள் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அவற்றில் காணப்படும் வரலாற்றைக் குறிக்கும் காலம் சசாங்கனின் ஆட்சிக் காலத்தைப் பின்பற்றிக் குறிக்கப்பட்டதாகும்.

2 மோனியர் வில்லியம்ஸ்-சமஸ்கிருத ஆங்கில அகராதியில் சாமந்தா என்பதற்கு எல்லையை ஒட்டிய, பக்கத்தில் வாழும், எல்லாப்புறங்களிலும் எனப் பொருள் கொள்கிறார்.

அறிகிறோம். இருப்பினும், வெல்லப்பட்டவர்கள் கப்பம் கட்டிவரும் சிற்றரசர்களாக நீடிக்க அனுமதிப்பதும் அவசியம். மேற்கூறிய இரண்டு நிலைகளும் சாந்தி (Sandhi), அமைதி அல்லது கூட்டு (Alliance) என்ற உடன்படிக்கைகள் மூலமாக ஏற்படுத்தப்படும். வெல்லப்பட்ட அண்டை நாட்டு அரசர்கள் அல்லது சாமந்தாக்கள் முதலில் தோல்வியின் சுமையை உணர்ந்தாலும் பின் திறை கட்டும் சிற்றரசர்களாக நீடித்து வர ஒப்புக்கொண்டனர். நாள்கள் செல்லச் செல்லச் சாமந்தா என்ற சொல் வென்று உட்படுத்தப்பட்ட பக்கத்து நாட்டை அரசு புரிந்தவர்களை மட்டுமன்றித் தோற்கடிக்கப்பட்ட தூரநாட்டு அரசர்களையும், அந்த அரசர்களுக்கு இணையான அந்தஸ்தும் அதிகாரமும் உடைய வேறு அரசர்களையும் குறித்தது.

சாமந்தா-அரசாங்க அதிகாரி

வெல்லப்பட்டு மறுபடியும் பதவியில் அமர்த்தப்பட்ட சாமந்தாக்கள் பொதுவாக மத்திய அரசின் நிருவாக அதிகாரிகளாக நீடித்தனர். மத்திய அரசின் கட்டளைகளைப் பெறும் அதிகாரிகள் பட்டியலில் குமார் அமாத்யா (Kumar Amatya), விஷயபதி (Visayapati), போகிகா (Bhogika) போன்றவர்களுக்கு முன் ராஜாக்களுடன் சாமந்தாக்களும் சேர்த்துக் காணப்படுவதைச் செப்பேடுகளில் காணலாம். ஆளுநர்களையும் (Governors), மற்ற உயர் அதிகாரிகளையும் குறிப்பதற்கு முன்னே சாமந்தாக்களைக் குறித்திருப்பது அவர்களுடைய அந்தஸ்தைக் குறிக்கிறது என எல். கோபால் மதிப்பிடுகிறார்.

சாமந்தா-கௌரவப் பட்டம்

தவிர, சாமந்தா என்பது கௌரவத்திற்காகவும் அளிக்கப்பட்டது. சாமந்தா, மகா சாமந்தாக்களைப் பற்றிய அக்காலச் செப்பேடுகளில்[1] ஒன்றுக்கும் மேற்பட்ட அதிகாரப் பொறுப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததையும், அது தவிரச் சாமந்தாக்கள் பெற்ற வேறு சில அதிக ஊதியங்களைப் பற்றியும், கௌரவப் பதவிகளைப்பற்றியும் நமக்கு அறிவிக்கின்றன. அதாவது சாமந்தா என்ற பட்டம் பரம்பரையாக வழங்கப்படும் நிலையும் தோன்றியது. உள்நிருவாக அதிகாரிகளுக்கு நில ஒதுக்கீடுகள் பற்றிய அரசரின் கட்டளைகளை எடுத்துக் கூறும் உயர் அதிகாரியாக அல்லது பிரதிநிதியாக அவர் விளங்கினார்.

1 ஹர்ஷரின் மதுபான் செப்பேடு (E.I-vii-எண் 22); முதலாவது மைத்ரேக துருவசேன கல்வெட்டுக் குறிப்பு-I.A-iv-105

சாமந்தா-அவைப் பிரதிநிதி

புவனதேவர் எழுதியுள்ள அபராஜிதா-பிரிச்சா என்ற கட்டடக் கலையைப் பற்றி விளக்கும் 12ஆம் நூற்ருண்டு நூலில் உள்ள ஒரு குறிப்பில் மகா ராஜாதி ராஜ பரமேஸ்வர என்ற பட்டம் பெற்ற அரசரின் அவையை எத்தனை சிற்றரசர்களும், மற்ற அதிகாரிகளும் அலங்கரிக்க வேண்டும் என்பது பற்றிக் காணப்படுகிறது. சுமார் பதினறு மகா சாமந்தாக்களும், 32 சாமந்தாக்களும், 160 லாகு சாமந்தாக்களும் இடம் பெற்றிருக்க வேண்டும் என அக் குறிப்பு விளக்குகிறது. பிற்காலத்தில் அரசு புரிந்த பெருமை மிக்க அரசர்கள் கொண்டிருக்க வேண்டிய குறைந்த அளவு எண்ணிக்கையைக் குறிப்பதாக மேற்கண்ட குறிப்பு இருக்க வேண்டும். ஹர்ஷரின் அரசவையில் அவர்களின் எண்ணிக்கை உயர்ந்து காணப்படுகிறது. பாணர் காதம்பரியில் சாமந்தாக்களின் எண்ணிக்கையையும், அரண்மனையில் அவர்களுக்குக் கிடைத்த மதிப்பு பற்றியும், இசை, கவியரங்கு, ஓவியக்கலை, சதுரங்கம் ஆகியவற்றுடன் பெண்டிருடன் வேடிக்கை விளையாட்டுகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்ததையும் விளக்குகிருர். சாமந்தாக்கள் அரண்மனையில் இத் தகுதியையும் சலுகைகளையும் பெற்றிருந்தது அவர்கள் வகித்து வந்த உயர்ந்த இடத்தைக் குறிக்கிறது. இதிலிருந்து அதிகாரமிக்க அரசர்கள் பெருமைக்காகவே இத்தகைய அரசர் பின் சுற்றும் அதிகாரிகளை நியமித்தார்கள் என்பதையும், ஆடம்பரமும் கேளிக்கையும் மிக்க வாழ்க்கை நடத்தும் பெருமை மிக்க சமூக அந்தஸ்து கொண்டதாக அப் பதவிகளைக் கருதித் தாங்களாகவே முன் வந்து அல்லது அரசரின் விருப்பத்திற்காக அவற்றை அவ்வதிகாரிகள் பெற்றுக் கொண்டனர் என்பதையும் அறிகிருேம்.

பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் சாமந்தாக்களைப்பற்றி ஏராள மான குறிப்புகள் காணப்படுகின்றன. சில சாமந்தாக்கள் தேவைப்படும் நேரங்களில் ஹர்ஷருக்குச் சேவை செய்யவும், முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும் தலைநகர் சென்றனர். ராஜ்ய வர்த்தனரின் காலத்தில் சாமந்தாக்கள் தங்கள் குடும்பத் துடன் நெடுந்தூரம் பயணம் செய்து ராஜ்யஸ்ரீயின் திருமண விழா ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றனர்.[1] மன்னர் நோய்வாய்ப் பட்டிருந்த வேளையிலும் சாமந்தாக்கள் தலைநகர் சென்றனர்.[2] மேலும், அரண்மனையிலேயே வாழும் சாமந்தாக்கள் முன் குறிப் பிட்டவர்களைவிட உயர்ந்த இடத்தை வகித்தனர். அவர்களுடைய விருப்பங்கள் அரசரால் பெரிதும் மதிக்கப்பட்டன.[3] அவர்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம்143; மொழிபெயர்ப்பு-பக்கம் 124
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-ப்க்கம் 155; மொழிபெயர்ப்பு-பக்கம் 138
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 178; மொழிபெயர்ப்பு 168

களில் சிலர் மன்னருக்கு ஏவல் வேலை செய்து வந்தனர்; கையில் சாமரத்துடன் காவல் பணி புரிந்தனர். வெல்லப்பட்ட பல மகா சாமந்தாக்கள் அரசனுடைய கூடாரத்தில் புதிய பொறுப்புகளை ஏற்கக் கட்டளைகளுக்காகக் காத்திருந்தனர் எனப் பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் கூறுகிறார். மகா சாமந்தாக்களை மிகவும் மரியாதையுடன் நடத்துவதே சாதாரணமாக ஒப்புக்கொள்ளப் பட்ட வழக்கம் ஆகும்.[1] இருப்பினும், அவர்கள் போரில் தோற்ற பின் ஹர்ஷரை முதலில் சந்திக்கும் நிலையை மிகவும் கீழானதாகவும் அவமானம் மிக்கதாகவும் உணர்ந்திருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய உயர்ந்த அந்தஸ்தை இழந்து விட்ட நிலையில் தொங்கிய முகத்துடனும், குமுறிய மனத்துடனும், சவரம் செய்து கொள்ளாத முகத்துடன் கையில் சாமரத்துடன் கத்தியைக் கழுத் தில் தொங்க விட்டுக்கொண்டு காணப்பட்டனர்.[2] ஹர்ஷ சரித்திரத் தில் மற்றோர் இடத்தில்[3] பாணர் பிரதி சாமந்தா (Prati-Samanta) என்ற சிலரைக் குறிக்கிறார். இது பெரும்பாலும் பகை அரசர்களின் சாமந்தாக்களை மட்டும் குறிக்கும் பெயராக இருத்தல் வேண்டும்.

சாமந்தா-படையின் ஆற்றலைக் கூட்டுபவர்கள்

சாமந்தாக்கள் போர்க்காலத்தில் மன்னருக்கு உதவக் கடமைப் பட்டவர்கள்.[4] மகா சாமந்தாக்கள் ஹூணப் படையெடுப் பின்பொழுது ராஜ்ய வர்த்தனருக்கு உதவினர். இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் (Aihole) குறிப்பு ஹர்ஷர் பல சிற்றரசர் களின் துணையுடன் புலிகேசியைத் தாக்க முற்பட்டார் எனக் கூறுகிறது.[5] ஆனால் போர்க்களத்தில் அரசருக்கு உதவுவதற்காக மட்டுமே அவர்கள் நியமிக்கப்பட்டவர்கள் அல்லர். அரசர் எப்பொழுதும் நிருவகித்து வந்த நிலையான படையைத் தவிர, போர்க்காலத் தேவைக்கும், உள்நிருவாகக் காவல் துறைத் தேவைக்கும் புதிய வீரர்களை நியமித்துக்கொண்டார். அவர் களுக்குத் தக்க ஊதியம் அளிக்கப்பட்டது.[6]

மகா சாமந்தாக்கள் அல்லது சிற்றரசர்(Rajas)களின் பிள்ளைகளைப் பாணர் குல புத்திரர்கள் (Kulaputras) என்று பெய ரிட்டு அழைக்கிறார். குறுநில மன்னர்கள் ஏற்கெனவே ஒப்புக் கொண்ட உடன்படிக்கையின்படிக் குல புத்திரர்கள் ஹர்ஷரின் அரண்மனையில் வாழ்ந்து வந்தனர்.

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 60; மொழிபெயர்ப்பு 48
2 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 60; மொழிபெயர்ப்பு 48
3 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 200
4 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 150; மொழிபெயர்ப்பு 132
5 E. I-vi-i
6 வாட்டர்ஸ்-i-பக்கம் 176-177

நிலத்தையோ, அல்லது நிலத்திலிருந்து கிடைக்கும் வரி வருமானத்தையோ மதப்பணிக்காக நன்கொடையாக அளிக்கும் வழக்கம் நிலவியது. வேறு பணிகளுக்கும் ஹர்ஷரின் காலத்தில் கொடைகள் அளிக்கப்பட்டன. அவ் வழக்கம் சாமந்தா பதவிக்கும் ஆக்கமளித்தது எனக் கூறலாம். இருப்பினும், மன்னர் அளவின்றி நிலத்தை நன்கொடையாகத் தருவது இயலாது. அது சிக்கல் நிறைந்தது. ஏனெனில், ஸ்மிருதி விளக்க உரை ஆசிரியர்களும், சபாராக்களும், ஏழாம் நூற்றாண்டின் வியவகாரா மயுக்கா (Vyavahara Mayukha)வை எழுதிய நீல கந்தாவும் (Nila Kantha) நிலத்தின் உரிமை அதில் விவசாயம் செய்பவனுக்கு என்றும், மன்னர் அவனைப் பாதுகாப்பதால் உற்பத்தியின் ஒரு பகுதியைப் பெறுவதற்கும் உரியவர் என்றும் கூறுகின்றனர். ஆகவே, வரி வசூல் செய்யும் உரிமையை மட்டும் அரசர் கொண்டிருக்கையில் நிலத்தைத் தானமளிப்பது ஒரு வரம்புக்கு உட்பட்டே இயலும்.

அசல் அர்த்த சாஸ்திரத்தைத் தீர்க்கமாக விளக்கும் பட்ட ஸ்வாமின் (Bhatta Svamin), நிலமும் நீரும் அரசரின் உரிமைப் பொருள்கள் எனக் கூறுகிறார். மேலும், அவர் நிலத்தை அரசருக்குச் சொந்தமான நிலம், மற்றவருக்கு உரிய நிலம் என இரு பகுதிகளாகப் பிரிக்கிறார்.[1]

பொதுவாகத் தரிசு நிலம் அல்லது சாகுபடி செய்யப்படாத நிலம் அரசுக்குச் சொந்தம். குப்த காலத்துக் குறிப்புகள், அரசு சாகுபடி செய்யும் நிலப் பரப்புகளைப் பற்றிக் கூறுகின்றன. அவற்றிக்கு ராஜ்ய வஸ்து (Rajya Vastu) எனப் பெயர்.[2] அனுபவிக்கும் உரிமைத்தொடர் விட்டுப் போன நிலையிலும் (Line of Inheritance), வரி கட்டத் தவறியபொழுதும் அல்லது அரசரே நிலத்தை உரியவரிடமிருந்து விலைக்கு வாங்கிக்கொண்ட சமயத்திலும் நிலம் அரசரின் சொத்தாகும். அவ் வகை நிலங்களை மன்னர் அடிக்கடி தானமாக அளித்தார். மன்னரிட மிருந்து நிலத்தைக் கொடையாகப் பெற்றாலுங்கூட வரி கட்டா திருக்கும் சலுகை கிடையாது. தவிர, அரசர் மொத்தமாகக் கிராமங்களைத் தானம் செய்தார் என்றாலுங்கூட அவர் உண்மை யிலேயே தானமாகக் கொடுத்தது அங்கு வரி வசூல் செய்து கொள்ளும் உரிமைகளையே ஆகும் என அல்டேகர் (Altekar) கூறுகிறார்.[3]

[1] அர்த்த சாஸ்திரம்-புத்தகம் II-பக்கம் 24

[2] E. I-viii-235

[3] N.H.I.P-பக்கம் 361

மனுவும், பிரகஸ்பதியும் ஒரு நல்ல அரசாங்கத்தின் சிறப்பியல்புகளையும், வழக்கங்களையும் விளக்குகிறார்கள். அவை குறிப்பாகப் பிற்காலத்தில் அரசாங்க நிருவாக அதிகாரப் பொறுப்புகளுடன் பட்டங்களும் சாமாந்தாக்கள் என்ற பதவியில் இணைந்து ஆக்கம் பெற்று வளர்ந்தன. மனுவில் கூறப்பட்டிருப்பதன்படி அரசர் ஒன்று, பத்து, இருபது, நூறு, ஆயிரம் அதிகாரிகளை நகரங்களுக்கு நியமித்தல் அவசியம். நகரப் பிரிவுகள் 'குல' (Kula) என்ற அளவு அடிப்படையிலும் நிலவின. அரசர்களுடைய மந்திரிகளில் ஒருவர் அத் தலைவர்களை மேற்பார்வையிட்டு மக்களைத் தவருக நடத்துவதிலிருந்து தவிர்த்துக் காக்கும் பணியைச் செய்து வந்தார். குப்தர்கள் காலத்தில் இது போன்ற முறைகள் பின்பற்றப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் காணப்படவில்லை எனினும், பாலிமொழியிலுள்ள கல்வெட்டுகளில் தாச கிராமிகா (Dasa-Gramika) என்ற எட்டுக் கிராமங்களுக்குத் தலைவர் என்ற பதவியைப் பற்றிய குறிப்புகள் கூறுகின்றன.

சாமந்தா-சிற்றரசர்களின் அந்தஸ்தைக் குறிப்பது

இடைக்காலத்தின் பிற்பகுதியில் சாமந்தா என்ற பட்டம் அரசர்களைப் பகுக்கும் முறையில் சிறப்பானதாக இல்லாவிடினும் நிலை நிறுத்தப்பட்ட ஒன்ருக மாறிவிட்டது எனலாம். மனசாரா (Mana-Sara), அமார கோஷா (Amara Kosha),[1] அனிகார்த்த சாமுச்சயா (Anekartha Samuchchaya)[2] போன்ற பழைய கலைக் களஞ்சியங்களில் சாமந்தாவைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. ஆனல், அரசர்களின் மதிப்பை விளக்கும் பிற்கால அபராஜித பிரிச்சா (Aparajita Prichchha), சுக்ர நீதிசாரா போன்ற நூல்களில் சாமந்தா என்பது இடம் பெற்றிருக்கிறது. பிற்காலக் குறிப்புகளில் நிலத்தின் உரிமையும் அரசியல் அந்தஸ்தும் மிக நெருங்கி இணைந்திருந்தன எனத் தெளிவாகக் காண்கிறோம். பதினேராம் நூற்றாண்டைச் சேர்ந்த காத்த சரித் சாகரா(Katha Sarit Sagara)வில் சாமந்தாக்களுக்கு அரசர் கிராமங்களையும் தங்கத்தையும் தம்முடைய சிறப்புப் பொருள்களான குடை, வாகனங்கள் முதலியவற்றையும் கொடுத்ததாகப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. மன்னரின் ஆதரவை இழந்த சாமந்தாக்கள் தங்களுடைய பதவிகளை இழக்க நேரிட்டது. சுக்ர நீதிசாராக் குறிப்புகளிலிருந்து தவறு இழைத்த சாமந்தாக்கள் தங்களுடைய

[1] முற்காலக் குப்தர்கள் காலத்தில் எழுதப்பட்டது. அமாரா பழங்கதைபின்படி 'அமார கோஷா'வின் ஆசிரியர், விக்கிரம ஆதித்யாவின் (Vikrama Aditya) அரசவையில் நவரத்தினங்களில் ஒருவராக விளங்கியவர் எனக் கருதப்படுகிறது. ஆனல், அவர் பிற்காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும்,

[2] காலம் ஆரும் அல்லது ஏழாம் நூற்ருண்டு கே. ஜி. ஓகா (K. G. Oka) இக் கருத்தைத் தெரிவிக்கிருர்.

மதிப்பை இழந்தனர் என்றும், வேறு சிலர் அதிகாரங்களையும் கௌரவங்களையும் இழந்தாலும் நிலைமையை ஓரளவுக்குச் சமாளித்துக்கொண்டனர் என்றும் அறிகிறோம்.

சாமந்தாக்களின் வருவாய்

அபராஜித பிரிச்சாவில் சாமந்தாக்களின் வருவாய் 10000 கர்ஷ பணம் (Karsha Pana) எனக் கூறப்பட்டுள்ளது. சுக்ர நீதி சாராவில் (100000) இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் (300000) வெள்ளிக் கர்ஷ பணம் என்று குறிக்கப்பட்டுள்ளது. நிலத்தின் அளவைப் பொதுவாக 'உழவு'[1] எனக் குறித்தனர். குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள எருதுகள் எவ்வளவு நிலத்தை உழுமோ அதுவே 'உழவி'ன் அளவாகக் கொள்ளப்பட்டது. அரசர் நில வருவாயைத் தானம் செய்யும் சமயம் நிலத்தின் 'உழவு' அளவைக் குறித்தனர்.[2] சாமந்தாக்களின் வருவாயின் அளவு அவர்கள் பெற்றிருந்த அதிகாரத்தையும், கட்டுப்பாட்டிலுள்ள 'உழவை'யும் பொறுத்ததாகும். 10000 கர்ஷ பணம் அதே அளவு 'உழவி'லிருந்து வரியாக வசூல் செய்யப்படும்.[3] அந்த அளவைச் சுக்ர நீதிசாரா 1250000000 முழங்கை அளவாக, அல்லது 625000000 சதுர கஜமாக, அல்லது 133333 ஏக்கராகக் கொள்ளலாம் என விளக்குகிறது. சாமந்தாக்களின் வருவாயைச் சுக்ர நீதிசாராவில் கூறப்பட்டுள்ள அளவுகளுடன் ஒப்பிட்டால், 12 அல்லது 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, பதவி வகித்த சாமந்தா ஒருவர் 10000 பணத்தை 13333 ஏக்கரிலிருந்து பெற்றார். ஏழாம் நூற்றாண்டில் பதவி வகித்த சாமந்தா 1333 ஏக்கரிலிருந்து வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்று, 1000 கர்ஷ பணம் வருவாய் பெற்றார். இதற்குப் பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் ஆதாரம் காணப்படுகிறது.

ஹர்ஷரின் நிலக் கொடை

ஹர்ஷர் தம் காலத்தில் நற்பணிகளுக்குப் பல நிலக் கொடைகளைச் செய்ததாகக் காணப்படுகிறது. பன்ஸ்கீரா, மதுபான் செப்பேடுகள் அரசர் சமயப் பணிகளுக்காகப் பல கொடைகள் அளித்ததாகக் குறிக்கின்றன.[4] ஹர்ஷர் போர் நடவடிக்கைகளை மேற்கொண்ட சமயம் 1000 'உழவு' அளவுள்ள நூறு கிராமங்களைப் பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கினார் என ஹர்ஷ சரித்திரத்தில் பாணர் குறிக்கிறார்.[5] அவருடைய பிற்கால ஆட்சியில்

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 203; மொழிபெயர்ப்பு 199
2 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 203; மொழிபெயர்ப்பு-பக்கம் 199
3 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கங்கள் 193-195
4 E. i. i-No II; iv-No 29
5 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 203; மொழிபெயர்ப்பு 199

குறிப்பாக ஒரிசா வெற்றிப் படையெடுப்புக்குப் பின் ஜெயசேனு வுக்கு மிகப் பெரிய கொடை அளித்ததாகவும், ஆனால் ஜெயசேனு அதைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டதையும் முன்பே நாம் கண்டோம்.

யுவான் சுவாங்கின் இந்தியப் பயணக் குறிப்புகளை மொழி பெயர்த்துள்ள வாட்டர்ஸ் மதத்துறை அல்லாதவற்றிற்கும் ஹர்ஷர் மிகவும் தாராளமாகக் கொடையளித்தார் எனக் குறிப் பிடுகிறார். இந்தியாவில் நிலவி வந்த அரசாங்க நிருவாக முறை களைப் பற்றியும் பல குறிப்புகள் காணப்படுகின்றன. அவை குறிப்பாக ஹர்ஷரின் நிருவாக அமைப்புகளை விளக்குவனவாகவே கொள்ளலாம். அரசருக்குச் சொந்தமான நிலங்கள் நான்கு வகைப்படுத்தப்பட்டன என யுவான் சுவாங் குறிப்புகளிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். அவற்றின் வருவாய் குறிப்பிட்ட நான்கு துறைகளுக்கு ஆகும் செலவிற்காக ஒதுக்கப்பட்டது. ஒரு பகுதி அரசாங்க நிருவாகம், விழா, மற்றும் வழிபாட்டுச் செலவுக்கும், இரண்டாவது பகுதி அமைச்சர்களின் நலனுக்கும், மூன்றாவது அறிஞர், கல்வியாளர், திறமையாளருக்குப் பரிசு அளிப் பதற்கும், நான்காவது மதத்துறையில் தேர்ந்த துறவிகளுக்குக் கொடையளிக்கவும் செலவிடப்பட்டது.[1] அமைச்சர் நலனுக்கு என இரண்டாவதாகக் குறிப்பிட்ட பிரிவு மூலம் கிடைக்கும் வருவாய் மட்டும் போதுமானதாக இராது. ஆகையால், தங்களுக் கென நில ஒதுக்கீடும் பெற்றனர்.[2] பல்வேறு பொறுப்புகளை நிருவகித்து வந்த இந்தியாவிற்கே உரிய சாமந்தாக்களின் அதி காரங்களும், அப் பதவியின் அமைப்பும் சீனப்பயணியைச் சற்றுக் குழப்பி இருக்க வேண்டும். நாம் முன் அறிந்தபடி நாட்டின் பல முக்கிய நிருவாக அதிகாரிகள் சாமந்தாக்கள் ஆவர். அவர்களுக் கென அளிக்கப்பட்ட நிலப்பரப்பைக் கட்டுப்படுத்தி வந்தனர். மத்திய அரசு அளித்த சலுகைகளின்படிச் சில சாமந்தாக்கள் தாங்கள் பெற்ற வருமானத்தை அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவைக்கு அளிக்கப்பட்ட சம்பளமாகக் கொண்டனர். இதைப் போன்றிருந்த சிலரைத் தவிரப் பெரும்பான்மையான சாமந் தாக்கள் தாங்கள் வசூலித்ததில் அரசின் பங்கை ஒழுங்காகச் செலுத்தி வந்தனர். அவற்றைத் தங்கமாகவும், விலை மதிப்புள்ள பொருள்களாகவும், யானைகளாகவும், போர்க்களத்தில் தேவைப் படும் உதவிகளாகவும் செலுத்தி வந்ததையும் காண முடிகிறது. சில சாமந்தாக்கள் தங்கள் குடும்பத்தினரைப் பணயமாக (Hostage) ஹர்ஷரின் அவைக்கு அனுப்பிச் சேவை புரிவதன் மூலமாகவும்

[1] வாட்டர்ஸ்-பக்கம் 176
[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 177

செலுத்தினர். வேறு சிலர் தங்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்யும் உரிமை பெற்று மன்னருக்கு ஏனையோரைப் போல உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கை வரியாகச் செலுத்தி வந்தனர். இதிலிருந்து ஹர்ஷர் சாமந்தாக்களுக்கு உயர்ந்த அந்தஸ்தும் மதிப்பும் அளித்தாலும், வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதிலும் சற்று விழிப்புடன் இருந்ததைக் காண முடிகிறது. ஹர்ஷர் சம்பளம் கொடுத்து வந்த உயர் அதிகாரிகளுக்குப் பட்டங்களையும், நிலத்தையும் அளித்துக் கௌரவப்படுத்தினாலுங் கூட நிலவரியை அரசாங்கத்திற்குச் செலுத்துமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டு அவர்களையும் சாமந்தாக்களுக்கு இணையாக நடத்தினார்.

ஹர்ஷரின் மத்திய, உள்நாட்டு அரசாங்க நிருவாக இயந்திரங்களைப் பற்றிய சீரான விளக்கங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, பரந்து சிதைந்து கிடக்கும் செய்திகளிலிருந்தும், வரலாற்று ஆதாரக் குறிப்புகளிலிருந்தும் ஏழாம் நூற்றாண்டிலும் அரசாங்கத்திற்குச் சிறப்பான எடுத்துககாட்டாக விளங்கும் குப்த கால நிருவாக அமைப்பு முறைகளிலிருந்தும் பகுத்து ஹர்ஷரின் நிருவாகத்தை அறிதல் அவசியம். யுவான் சுவாங்கின் பயண நினைவுக் குறிப்புகளில் ஒரு வெளிநாட்டவருக்கு நிலைகளைப் புரிந்து கொண்டு விளக்குவதில் இயல்பாக இருக்கும் தொல்லைகளும், வெளிநாட்டவர் என்பதால் அவர் கூறுவதை நாம் நம்புவதற்குக் காரணமாக உள்ள நிலை ஆகிய இரண்டும் உண்டு. பொதுவாக நிருவாக அமைப்பு முறைகளைப் பற்றிய பெயர்கள் காணப் பட்டாலும் அவை எவ்விதம் இயங்கின என்ற விளக்கங்கள் காணப் படவில்லை. அவை பற்றிய ஆதாரக் குறிப்புகளைப் பாணரின் ஹர்ஷ சரித்திரத்திலிருந்து அறிகிறோம். அதிகாரிகளின் பெயர், பட்டங்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பொறுப்புகள் பற்றிய பாணரின் விளக்கங்கள் மிகவும் இன்றியமையாதவை ஆம். சட்டம், நீதி, நிருவாக முறைகள் பற்றி மனு தெளிவாகக் கூறியுள்ளார். அக் கால நிருவாக முறைகளை அறிந்துகொள்ள ஹர்ஷர் காலச் செப்பேட்டுச் சான்றுகளும் ஆதாரமாக விளங்கித் துணை புரிகின்றன.

அன்றாட அரசாங்க நிருவாக நடவடிக்கைகளை விளக்கும் குறிப்புகள், ஓர் இடத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்ததாக யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். அதற்கென ஓர் அதிகாரி தனியாக நியமிக்கப்பட்டிருந்தார். நல்ல அல்லது துன்பம் மிக்க செய்திகளைக் குறித்து வைப்பது அவர்களுடைய கடமையாகும். நாட்டிற்கு நேர்ந்த நல்ல நிலைகளையும், அதே

நேரத்தில் தீமைகளையும் குறித்து வைக்கும் வழக்கம் இருந்ததை நாம் அறிகிறோம். அக் குறிப்புகள் நமக்குக் கிடைக்காமல் அழிந்து விட்டன. யுவான் சுவாங் அரசாங்கக் குறிப்புகளை நி லோ பி து (Ni-lo-pi-t'u) எனக் குறிப்பிடுகிறார்.[1] நிலபிடா (Nila-pita) என்று அவர் உணர்த்துவது நீலப் பெட்டியையே ஆகும். குறிப்புகளின் தன்மையை அவை வைக்கப்பட்டிருக்கும் பெட்டியின் வண்ணத்தால் குறிப்பாக அறிவது அன்று பின்பற்றப் பட்டு வந்த வழக்கமாகும். அவ் வழக்கத்தை முதன்முதலாகப் பௌத்தர்கள் பின்பற்றினர். பௌத்த இலக்கியங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு மூன்று வண்ணப் பெட்டிகளில் (Tripitaka) சேகரித்துக் காக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தொடர்பு விட்டுப் போய்ப் புதிராக விளங்கும் இடங்களை ஓரளவு நிறைவு செய்வதற்கு ஏற்ற வகையில் ஹர்ஷரின் நிருவாக முறைகள் பற்றிய போதுமான செய்திகள் கிடைத்துள்ளன. அவற்றில் சில அரசாங்கப் பிரிவுகளையும், அதிகாரிகளையும் மிக நன்றாக விளக்குகின்றன. அதே சமயத்தில் மேலும் பல புரிந்து கொள்ள இயலாத புதிய செய்திகள் பற்றியும் நாம் அறிகிறோம். மிகத் தெளிவாக நாம் அறிந்துகொள்ளுபவற்றில் மகா சாந்தி விக்ரா அதிகிரிதா(Maha Sandhi-Vigrah Adhikrita)வும், மகாக்ஷ பதல் அதிகிரிதாவும் (Mahaksha Patal Adhikrita) ஆகும். முதலாவது பதவி நாடுகளுக்கிடையே உறவை வளர்க்கும் அமைச்சரையும், இரண்டாவது கணக்குக் காப்பாளரையும் குறிக்கும். வேறு பல கீழ்ப்பட்ட பல பதவிகள் பற்றியும் நாம் அறியும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்கள் அரசர், அரசி, இளவரசர்களின் நலனைக் கவனிக்கும் அதிகாரிகள் ஆவர். தவிர, தொடர்பு விட்டுப் போய் இருக்கும் இடங்களில் குப்தர்கள் காலத்தில் அல்லது ஏழாம் நூற்றாண்டுக்குப்பின் நிலவிய பதவிகளை எப்படிப் பட்ட அதிகாரிகள் வகித்து வந்தனரோ அவற்றையே ஹர்ஷர் காலத்திலும் நிரப்பிக்கொள்ளலாம். குப்தர் காலத்திலும், ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னரும் ஒரு பதவி இருந்து வந்திருக்கும் நிலையில் அது ஹர்ஷர் காலத்திலும் முக்கிய இடம் வகித்திருக்கும் எனக் கொள்ளுதல் சரியே. ரகசி நியுக்தா (Rahasi Niyukta) என்ற அரசரின் தனி அதிகாரியின் சேவையும் ஹர்ஷரின் காலத்தில் மிகத் தேவையுள்ளதாக இருந்திருக்க வேண்டும். எஞ்சிய வெற்றிடங்களை மேலும் ஹர்ஷர் காலத்தைப் பற்றிய வேறு புதிய சான்றுகள் கிடைக்கும் வரை நாம் காலியாக வைத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

[1] வாட்டர்ஸ்-புத்தகம் 1-பக்கம் 154

நாம் அறிய வந்திருக்கும் ஆதாரங்களின்படி ஐம்பதிற்கும் அதிகமான அதிகாரிகளைப் பற்றி அறியலாம். அவர்களில் அரசரின் நிருவாக அதிகாரிகளும் போர் அதிகாரிகளும் உள்ளனர். படை அதிகாரிகளில் மூன்று பிரிவினர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படைகளுக்கு பொறுப்பு வகித்தவர்கள் ஆவர். ஆட்சித்துறை இயலில் நீதித் துறை, அரண்மனை நிருவாகம், மத்திய உள்நாட்டு நிருவாகத் துறை, சட்டத்துறை, வருவாய்த் துறை, மதத்துறை, சமூக நலத் துறை ஆகியவை முக்கியமாகக் குறிக்கப் பெறுகின்றன.

நம்மிடத்திலிருக்கும் ஆதாரங்களைக்கொண்டும், குறிப்பாக உணர்த்தும் நியாயமான முடிவுகளைக்கொண்டும் ஹர்ஷரின் காலத்தில் நிலவி வந்த அரசாங்க நிருவாக அமைப்புகளை விளக்க லாம்.

நிருவாகத்தின் முக்கியப் பொறுப்புகளை ஹர்ஷர் மேற் கொண்டு இருந்தார். அரசருக்கு அமைச்சர்களும், பல்வேறு துறைச் செயலர்களும் உதவினர். செயலர்கள் தங்கள் கடமை யைச் சரிவர நிறைவேற்ற வட்டாரச் (Regional) செயலர்களுடன் இணைந்து செயல்பட்டனர். வட்டாரச் செயலர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் மத்திய செயலர் நாடுவது குறிப்பிட்ட வினைகளின் தன்மையைப் பொறுத்தே ஆகும். மேலும், எந்த அள விற்கு வட்டாரங்கள் மத்திய அரசுடன் இணைந்து செயல்பட்டன என்பதையும் பொறுத்தது ஆகும். மாநிலங்களால் தலைமை அலுவலகத்தின் நிலையான செயலகம் தலைநகரில் இருந்து வந்தது. யுவான் சுவாங்கின் நிலபிடாக் (Nilapita) குறிப்பிலிருந்து மாநில அரசுகளில் நிருவாக முறையுடன் தொடர்பு பட்ட குறிப்புகள் அனைத்தையும் மத்திய செயலகம் பாதுகாத்து வந்திருக்க வேண்டும் என அறிகிறோம். அதே போல மாநில நிருவாகப் பிரிவு அலுவலகங்களும் மத்திய அரசுத் தொடர்புக் குறிப்புகள் அனைத் தையும் பாதுகாத்து வைத்திருத்தல் வேண்டும்.

மேலும், பொதுக்கண்காணிப்பாளர் (General Superintendent) என்ற அதிகாரி ஒருவர் தமக்குட்பட்ட உதவியாளர்களுடன் பல் வேறுபட்ட தொடர்புப் பணிகளை நிறைவேற்றி வந்தார் எனவும் அறிகிறோம். அரசின் பல்வேறு பிரிவுகளுக்கும் உறவு ஏற்படுத்தி இணைந்து செயல்பட உதவுவது அவருடைய சிறப்பான பணி யாகும். அரசருக்கும் பல்வேறு அரசாங்கப் பிரிவுகளுக்கும்; மத்திய அரசிற்கும் அது நேரடியாக நிருவகித்து வந்த மாநிலங் களுக்கும்; மத்திய அரசிற்கும் மண்டலங்களின் பிரதிநிதிகளுக்கும்

சரிவரத் தொடர்பு ஏற்படுத்துதல் கண்காணிப்பாளரின் முக்கியப் பணியாகும். தென் இந்தியக் கல்வெட்டுகளில் சர்வ அத்யக்ஷ (Sarv-adhyaksha) என்ற அதிகாரியைப் பற்றிய குறிப்பு காணப் படுகிறது. எல்லாப் பிரிவுகளைக் கண்காணிக்கும் உயர் அதிகாரியாக அவரைக் கருதலாம். மத்திய அரசின் கட்டளைகளை மாநிலங் களுக்கும் மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லுதல் அவர்களுடைய கடமையாகும். அவற்றை எடுத்துச் செல்லும் அதிகாரிகளை அரசக் கட்டளைத் தூதுவர் என அழைத்தனர்.[1] ஹர்ஷ சரித்திரத் தில் அத்யாக்ஷ என்ற மற்ற அதிகாரிகளைப் பற்றி விளக்கமாகக் காண்கிறோம்.

அரசரின் ஆணைகள்

இச் சொல்லைப் பாணர் அங்குப் பயன்படுத்துவதிலிருந்து கௌடில்யர் காலத்திலிருந்தே ஆட்சித்துறைப் பணியாள்களைக் குறிக்கப் பயன்பட்ட சொல் ஹர்ஷர் காலத்திலும் நீடித்து வழக் கத்தில் இருந்து வந்திருக்கிறதென அறியலாம்.

ஹர்ஷரின் வரலாற்றை விளக்கும் சில ஆதார நூல்கள் மத்திய அமைச்சர் அவையை மந்திரி பரிஷத் (Mantri Parishad) எனக் குறிக்கின்றன. மனுவும், ஹர்ஷர் காலத்தைச் சேர்ந்த மற்ற ஆதார நூல்களும் மந்திரிகளை, மந்திரின் (Mantrin), அல்லது சச்சிவா ((Sachiva), அல்லது அமாத்யா (Amatya) எனக் குறிப் பிடுகின்றன. அமைச்சர்களைக் குறிக்கும் இச் சொற்களைத் தவிர, வேறு சிலவும் இடத்திற்கு ஏற்றவாறு சிறப்புக் கொடுக்கப்பட்டு வழங்கின. காமந்தகியா (Kamandakiya) என்ற சொல்லும் அமைச்சர்களைக் குறிக்க வழங்கியது.[2] அமைச்சரவையின் அளவு ஏறக்குறைய எட்டிலிருந்து இருபது வரை நாட்டின் தேவைக் கேற்ப மாறுபட்டது.[3] மனுவை விளக்கும் காமாந்தகா (Kamandaka), அமைச்சர்களின் எண்ணிக்கை 12 அல்லது 16, அல்லது 20 ஆக இருக்கலாம் என விளக்குகிறார். மேலும், நான்கு வகுப்பு அல்லது ஜாதியைச் சேர்ந்தவர்களும் அமைச்சர வைக் குழுவில் சாதாரணமாகப் பங்கு பெற்றனர் அல்லது அவர்கள் அனைவரும் பங்கு பெறுதல் அவசியம் என்ற முறை பழக் கத்தில் இருந்து வந்திருக்கலாம். ஓர் அரசர் 37 சச்சிவாக்கள் (Sachivas), 4 பிராமணர்கள், 8 க்ஷத்திரியர்கள், 21 வைஸ்யாக்கள், 3 சூத்திரர்கள், ஒரு சுதா (Suta) ஆகியோரைத் துணைக் கொள்ள வேண்டும் என மகா பாரதம் கூறுகிறது. அரசர் குறைந்தது

[1] E.I-VII-162-பல்லவா, வகாடகா (Vakataka), கடம்பாக் கல்வெட்டுகள்

[2] E.I-X-71

[3] அர்த்த சாஸ்திரம் 1-பக்கம் 15

மூன்று அமைச்சர்களைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் புராணம் கூறுகிறது. அரசாங்கத்தின் கொள்கைகளை அரசர் எட்டு அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்தல் அவசியம் எனவும் கூறுகிறது. யுவான் சுவாங் பயணக் குறிப்புகளின் மற்ற நாட்டு விளக்கங்களின்படி அரசர்கள் பல பிரிவினரைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பது தெளிவாகிறது.

வாட்டர்ஸ் மொழிபெயர்த்துள்ள யுவான் சுவாங் பயணக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு யு. என். கோஷல் ஹர்ஷர் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கனோஜ் நகரில் பெரிய அல்லது சற்றுச் சிறிய மாநிலக் குழு (State Council) இருந்திருக்க வேண்டும் எனக் கருதுகிறார்.[1] இக் கருத்து தவறு என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. யு. என். கோஷல் அப்படி முடிவு செய்வதற்குக் காரணம் வாட்டர்ஸ் தம் மொழிபெயர்ப்பில் ஸ்டேட்ஸ்மென் (Statesmen) என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதே. மேலும், அவருடைய மொழிபெயர்ப்பில் மினிஸ்டர் ஆப் ஸ்டேட் (Minister of State) என்ற சொல்லும் காணப்படுகிறது. கனோஜ் ஸ்டேட்ஸ்மென் பாணி (Bani) அல்லது வாணி என்ற தலைவரின் ஆலோசனைப்படி ஹர்ஷ வர்த்தனரை அரசராகும்படி வேண்டிக்கொண்டார். மேலும், மினிஸ்டர் ஆப் ஸ்டேட் (Minister of State) என்பவர்கள் ஹர்ஷரை வாரிசுப் பொறுப்பு ஏற்க வற்புறுத்தினர் என வாட்டர்ஸ் விளக்குகிறார்.[2] யுவான் சுவாங் சீன மொழியில் லியாயோ-ஸு (Liao-shu), ஃபு-ஷென்-ஷி-ஷி (Fu-chen-chih-chih) என்ற இரண்டு வகையான மந்திரிகளைக் குறிக்கின்றார். இவற்றினைச் சரியாகக் குறிக்கும் சொற்கள் ஆங்கிலத்தில் இல்லை. சீன மொழியில் யுவான் சுவாங் குறித்துள்ள சொற்கள்கூட இந்தியாவில் அன்று நிலவியதைச் சரியாகக் குறித்தனவா என்பது ஐயத்திற்கு உரியது. ஏனெனில், அவற்றிற்கும் பல பொருள் கூறலாம். முதலில் குறிக்கப் பட்ட 'ஸ்டேட்ஸ்மென்' என்ற ஆங்கிலச் சொல் அதிகாரிகள் (Officers), சார்புடையார்கள் (Subordinates), உடன்பணியாற்று பவர்கள் (Colleagus), அல்லது அரசியல் வல்லுநர் (Statesmen) என்பவர்களைக் குறிக்கும். இரண்டாவது குறிக்கப்படும் சொல் லான மினிஸ்டர் ஆப் ஸ்டேட் (Minister of State) என்பது, அமைச்சர்கள் (Ministers), அதிகாரிகள் (Officials) அல்லது அரசாங்கக் காரியங்களுக்குப் பொறுப்பு வகிப்பவர் (Men in charge of Affairs) எனக் கொள்ளலாம். இச் சொற்களின் பொருளை ஹர்ஷர் கால நிலையுடன் ஒப்பிட்டுச் சிந்திக்கும் வேளையில் முதலாவது குறிக்கப்பட்ட ஸ்டேட்ஸ்மென் (Statesmen)

[1] H.C.I.P-iii-பக்கம் 349

[2] வாட்டர்ஸ்-புத்தகம் 1-பக்கம் 343

என்ற சொல் சாமந்தாக்களையும், இரண்டாவது குறிக்கப்பெறும் மினிஸ்டர் ஆப் ஸ்டேட் (Minister of State) என்ற சொல் அமைச்சர்களையும் குறிக்கும் என முடிவு செய்யலாம். இவற்றை வெளிநாட்டைச் சேர்ந்தவர் ஒருவர் தெளிவாகப் புரிந்து தம் தாய் மொழியில் குறித்தல் என்பதில் உள்ள இடையூறுகளை நாம் எளிதாக அறிந்துகொள்ள முடியும். ஹர்ஷரின் காலத்தில் சாமந்தாக்கள் அரசவையில் ஒரு சிறப்பான பங்கு வகித்தனர். முக்கிய சிக்கல்களைத் தீர்க்க, அவர்களது அறிவுரைகளை அரசர் நாடிப் பெறுதலும் உண்டு என்பதும் நாம் அறிந்ததே. 'அவர் களுடைய சொற்களை அரசர் மீறுவதில்லை' என ஹர்ஷ சரித்திரம் கூறுகிறது. அரசர் துன்பமுற்ற நிலையில் அது விலகி நலம் பெற ஆர்வத்துடன் விழைபவர்களாகவும், வேறு சமயங்களில் அரச வைப் பிரதிநிதிகளாகவும் சாமந்தாக்கள் விளங்கினர் எனப் பாணர் கூறுகிறார். ஹர்ஷரின் செப்பேடுகள், சாமந்தாக்கள் நிருவாக அதிகாரிகளாகவும் விளங்கினர் எனக் கூறுகின்றன. ஹர்ஷர் காலத்தில் சாமந்தாக்கள் மன்னருடன் கலந்து ஆலோ சனை நடத்தியும், நிருவாகப் பொறுப்புகளைச் செய்பவர்களாகவும் நீடிக்கும் வழக்கம் நல்ல முறையில் நிறுவப்பட்டு விட்டது எனலாம். பட்டான் (Pattan) குறிப்புகள் (காலம் கி.பி. 1170) சாமந்தா மந்திரின் என்ற நிருவாகப் பதவிகளைப் பற்றிக் குறித் துள்ளன. உதயா சுந்தரி கதையில் சுத்ஹலா (Soddhala) அமைச்சர்களுக்கும், சாமந்தாக்களுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக்குகிறார்: ஒரு நல்ல அரசர், அமைச்சர்களுடன் அரசி யல் விஷயங்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் எனவும் அரசர் நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றியும் விளக்குகிறார்; அந்த வரிசையில் ப்ருதூ (Prthu), பாரத (Bharata), பகீரதா (Bhagiratha) என்பவர்களைப் பற்றிக் கூறுகிறார்; எதிரிகளின் செயல்களை மட்டுப்படுத்திச் சாமந்தாக்களுடன் ஆலோசித்தார் எனவும் கூறுகிறார்.

ஆகவே, கனோஜ் ஸ்டேட்ஸ்மென் அல்லது லியாயோ-ஸு (Liao-shu) ஹர்ஷவர்த்தனரை அரசராகும்படி வேண்டிக்கொண் டனர் என்ற சொற்றொடர் சாமந்தாக்களைத்தான் குறித்திருக்க வேண்டும் என்பது தெளிவு. ஹர்ஷர் அரசப் பொறுப்பை ஏற்கும் நிலையில் அரசவைச் சாமந்தாக்களின் முடிவுகளை அறிந்துகொள்ள முயற்சித்தார் என்பதை உணர முடிகிறது.

மத்திய அமைச்சரவையின் அங்கத்தினர்கள் போர், வருவாய், பொதுநலத் துறை போன்ற துறைகளின் தலைவர்களும் ஆவர். சிலர் அனுபவம், கல்விச் சிறப்பு காரணமாக அமைச்சர்களாக விளங்கினர். பிரபாகரவர்த்தனருக்கு வயதில் அதிகம் மூத்த

சிம்ம நாடர் (Simha Nada) தம் இளமைக் காலத்திலேயே சேனுதிபதி என்ற பட்டத்தைப் பெற்றுச் சிறப்புடன் விளங்கினுலும், பிற்காலத்தில் தம் வயது, அனுபவத்தின் காரணமாக அமைச்சர் அவையில் ஆலோசனை கூறும் பொறுப்பை வகித்து வந்தார்.[1]

குப்தர்களின் காலத்தில் இருந்ததைப் போலவே ஹர்ஷரின் காலத்திலும் மத்திய அமைச்சரவையின் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட துறைக்கு அமைச்சர்களாக விளங்கினுலும் போர்த்திறனும் பெற்று இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. முதலில் குமார குப்தரின் அமைச்சராக விளங்கிய பிரிதிவி சேனு பின்னுல் மகா பலதிக்கிரிதா என்ற படைத்தலைவராகப் பொறுப்பு ஏற்ருர்.[2] ஹர்ஷ சரித்திரத்திலேயே பல சமயங்களில் பண்டி ஹர்ஷருக்கு உதவும்பொருட்டுப் படைகளை நடத்திச் சென்ருர் எனக் குறிப்புகள் உள்ளன. பண்டி அரசக் குடும்பத்திற்கு மிக நெருங்கியவர் என்பதுடன் போர்த்திறமை மிக்கவர் என்ற தகுதியினுல் ஹர்ஷருக்கு நீண்டகாலம் சேவை செய்யும் வாய்ப்பை அவர் பெற்ருர். மேலும், மதிப்பு மிக்க மத்திய அமைச்சர் குழுவிலும் பண்டி சிறப்பான பங்கு வகித்தார். பண்டியை ஒரு பெரிய அல்லது முக்கிய அமைச்சர் என யுவான் சுவாங் தம் குறிப்புகளில் எழுதியுள்ளார். பண்டியின் அதிகாரமும், புகழும், அவர் கூறும் கருத்துகளுக்கு மதிப்பும், வரவேற்பும் கிடைக்கக் காரணமாயிருந்தன. கிரகவர்மருக்குப் பின் ஹர்ஷரே அரசப் பொறுப்பு ஏற்கத் தகுதி வாய்ந்தவர் என்று பண்டி செய்த முடிவிற்குக் கனேஜ் அமைச்சர்களிடையே கிடைத்த வரவேற்பு இங்குக் குறிப்பிடத் தக்கது. நமக்குக் கிடைத்துள்ள உள்நாட்டுச் சான்றுகளின்படி பண்டி குறிப்பிட்ட ஒரு பதவியை அதிகாரப் பூர்வமாகப் பெற்றிருந்தார் எனக் குறிப்பிட இயலாவிடினும், அமைச்சர் அல்லது மகா பலதிக்கிரிதா (Maha Baladhikrita) என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தார் என முடிவு கொள்ளலாம்.

மற்ற அமைச்சர்களைப் போலவே மகா சாந்தி விக்ர அதிகிரிதா அமைதி, போர் நடவடிக்கைகளைக்(Minister of Interstate Relations) கவனித்து வந்த அமைச்சராகவும் போர்ப்பயிற்சி பெற்றவராகவும் விளங்கினர். சமுத்திர குப்தர் அவையில் சாந்தி விக்ரகிகா பதவி வகித்து வந்த ஹரிசேனு, குமார் அமாத்யா, மகா தண்ட நாயகா என்ற பட்டங்களையும் பெற்றிருந்தார். மகா தண்ட நாயகா என்ற பட்டம் அவருடைய போர் ஆற்றலுக்காக வழங்கப்பட்டி

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 188-193; மொழிபெயர்ப்பு-பக்கம் 180-186

[2] E.I-X-71

ருக்க வேண்டும். தண்ட நாயகா என்ற பட்டம் போர் ஆற்றலுக்காக வழங்கப்பட்டதை விளக்கச் செப்பேட்டுச் சான்றுகள் உள்ளன நான்காவது விக்கிரமாதித்யரின் கார்குடாரிக் (Kargudari) குறிப்பு[1] படைத்தலைவரைத் தண்டநாயகா எனக் குறிக்கிறது. சங்கம தேவாவின் குறிப்பும் தண்டநாயகா என்பவர் 'மொத்தப் படைக்கும் தலைவர்' எனக் கூறுகிறது.[2] அதே போலவே ஹர்ஷரின் மகாசாந்தி விக்ர அதிகிரிதாவான அவந்தி (Avnti) என்பவரும் படைகளை நடத்திச் செல்வதில் வல்லவராக விளங்கினர். தூதகா (Dutaka), மகா பரமாதாரா (Maha Paramatara), மகா சாமந்தா என்ற பல பட்டங்களுடன் ஹர்ஷரால் பன்ஸ்கீராச் செப்பேட்டில் குறிக்கப்படும் ஸ்கந்த குப்தரும், பாணரால் ஹர்ஷ சரித்திரத்தில் யானைப்படைத் தளபதி எனக் குறிக்கப்படும் (கஜ-சதன்-அதி கரிதா-Gaja-Sadhan-Adikrita)[3] ஸ்கந்த குப்தரும் ஒருவராக இருக்க வேண்டும். ஹர்ஷர் பல பட்டங்களையும் பொறுப்புகளையும் ஒருவருக்கே அளித்திருந்தது, அளிக்கப்பட்ட எல்லாத் துறைகளிலும் சிறப்பாகச் செயலாற்ற இயலாத நிலையிலுங்கூடச் சில திறமை மிக்கவர்களுக்குப் பல பதவிகள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. அதற்கு மேலும் ஒரு முக்கிய காரணம் உண்டு. அவர்களுக்கு அளிக்கப்பட்ட பல முக்கியப் பொறுப்புகளை ஹர்ஷரும் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே, பல பொறுப்புகளின் தன்மையைப் பற்றி அமைச்சர்கள் முற்றிலும் அறிந்துகொள்ளாதவர்களாக இருப்பினும், அவர்கள் பல பொறுப்பு மிக்க பதவிகளை வகித்தல் சாத்தியமாக இருந்திருக்க வேண்டும். மேலும், ஆட்சித் துறை, இராணுவப் பொறுப்புகள் இரண்டும் ஒருவருடைய கட்டுப்பாட்டில் இருந்திருக்குமானல், போர்க்காலத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த நாட்டியல் பொறுப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டன; அல்லது மற்றொருவருக்கு அளிக்கப்பட்டன. இவ்வாறு செய்வது நிருவாகத்தின் திறமையைச் சற்று பாதிக்கக் கூடியது. ஹர்ஷர் அளித்து வந்த பல பட்டங்கள் சிறிய வேறுபாடுகளையே கொண்டன. வலபியின் அரசர் முதலாவது துருவசேனுவிற்கு அளிக்கப்பட்டு இருந்த பட்டங்களைக் காண்கையில் இதை அறியலாம். மகா சாமந்தா, மகா பராதிக்கிர, மகா தண்டநாயக, மகா கார்த்த கிரித்திகா (Maha Karttakritika). மகாராஜா என்ற ஐந்து பட்டங்களைப் பெற்றிருந்தார்.[4] மகா சாந்தி விக்ர அதிகிரிதாவின் அலுவல்கள் மற்றெல்லாவற்றையும்விடப் பொறுப்பு மிகுந்தவை; அலுவல்களும் அதிகம். அரசாங்கம் நல்ல முறையில்

[1] I.A.X-252
[2] I.A.V-46
[3] Harsha-Devahuti-பக்கம் 173—174
[4] A.I-IV-105

இயங்க சாந்தி, விக்ரகிகா என்ற இரண்டு சிறப்பான பிரிவுகளின் செம்மையான பணியே அடிப்படையாகும். கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தில் இவற்றைப் பற்றி விளக்கி இருப்பினும், குப்தர்கள் காலம் வரை சாந்தி விக்ரகிகா என்ற பதவி இருந்ததாக நாம் அறிய முடியவில்லை. மௌரியர்கள் காலத்தில் அரசர்களே சாந்தி விக்ரகிகா பொறுப்புகளை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். குப்தர்கள் அரசாங்கக் காலத்தில் அரசாங்கப் பொறுப்புகளை மேலும் விரிவுபடுத்திச் சாந்தி விக்ரகிகாப் பதவியைத் தோற்றுவித்தனர். ஏழாம் நூற்றூண்டில் அப் பதவி பெருமையின் சின்னமாகவும் கருதப்பட்டது. ஹர்ஷர் காலத்தில் போார், அமைதி, வேற்று நாட்டுத் தொடர்பு அமைச்சர், மகா சாந்தி விக்ர அதிகிரிதா பதவியைத் திறமை மிக்க அவந்தி பெற்றிருந்தார். அவந்திக்கு மேலும் சில சாந்தி விக்ரகிகா என்பவர்கள் உதவினர். பிற்காலத்தில் சில தென்னக அரசுகளில் பல சாந்தி விக்ரகிகா அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கென ஒதுக்கப் பட்ட பகுதியுடன் தொடர்பு கொள்வது பற்றி அரசருக்கு ஆலோசனை கூறும் பொறுப்புகளை அவர்கள் பெற்றிருந்தனர். சாளுக்கியத்திற்கும், கன்னட தேசத்திற்கும் தனித்தனி சாந்தி விக்ரகிகா என்ற அதிகாரிகள் தென்னக அரசுகளால் நியமிக்கப் பட்டிருந்தனர்.[1] மகா சாந்தி விக்ர அதிகிரிதா என்பவர், ஹர்ஷருக்குச் சீனுவுடன் அரசியல் பண்பாட்டு வர்த்தகத் தூதுக் குழுக்களை அனுப்பித் தொடர்பு கொள்ள ஆலோசனைகள் கூறி இருக்க வேண்டும்.

குமார அமாத்யா என்ற பட்டம் கௌரவத்திற்காக வழங்கப் பட்டது எனக் கருதப்பட்டாலும், அப் பட்டங்களை வகித்தவர்கள் சில நிருவாகப் பொறுப்புகளையும் கவனித்து வந்தனர். குமார என்பதற்கு இளவரசன் அல்லது சிறுவன் என்றும், அமாத்யா என்பதற்கு அமைச்சர் என்றும் பொருள்.[2] அது 'இளவரசனின் ஆலோசகர்' என்பதைக் குறித்தே வழங்கி வந்தது. அரசர் சிறுவனுயிருக்கும் சமயத்திலிருந்தே பணி செய்து வருபவர்[3] என்றும் கருதலாம். குமார அமாத்யா என அழைக்கப்பட்டவர்கள் இளவரசர்கள் எனவும், அவர்கள் பிரபுக்கள் குழு அங்கத்தினர்கள் எனவும் கருதுகின்றனர். அரசர்கள் தேவைப்படும் வேளைகளில் அக் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றனர் எனவும், அவர்கள் பிரபுக்கள் குழு அங்கத்தினர்கள் எனவும் கருதுகின்றனர். அரசர்கள் தேவைப்படும் வேளைகளில் அக் குழுவின் ஆலோசனைகளைப்

[1] E.I-XIII-41
[2] I. A-IV-175. E.I-IV-74
[3] E. I-X-50 n. 2

பெற்றனர் எனவும் கருதப்படுகிறது. குமார அமாத்யா, அரசர் ஆட்சி செலுத்தியபோதும் ஆலோசனை கூறி வந்தார் என்ப தற்குச் சான்று காணப்படுவதால், அவர்கள் (குமார அமாத்யா) 'இளவரசரின் ஆலோசகர்' என்ற கருத்தை நிராகரிக்கலாம். ஆகவே, குமார அமாத்யா என்ற சொல், அரசக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் 'அமாத்யா' பொறுப்புகளைச் செய்து வந்த நிலையில் குறிக்கப்பட்டதாகும். 'குமார' என்ற சொல் இளவரசர்களையும், அரசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் குறிக்கும் என்பதோடு மட்டுமன்றி, உயர்ந்த நிலையடைந்த அமைச்சரையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. காலப் போக்கில் 'குமார' என்ற சொல் யாரைக் குறித்ததோ அது மறைந்து, அப் பதவி வகித்த சா்தாரணமானவர்களையும் குறித்தது எனலாம்.

மௌரியர் காலத்திலும், சாதவாகனர் காலத்திலும் அமாத் யாக்கள் உயர் அதிகாரிகளாக விளங்கினர். அவர்களிலிருந்து அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அமாத்யா என்ற சொல் ஹர்ஷர் காலத்தில் உயர் அதிகாரிகளைக் குறிக்கவில்லை. மகா ராஜா ஜெயநாதாவின் ஹோஹ் (Khoh) செப்பேடு (கி.பி. 475-7) சில அமாத்யாக்கள் போகிகா (Bhogika)க்களாகவும் பொறுப் பேற்றிருந்தனர் எனக் குறிக்கிறது. அந்த வகை அதிகாரிகள் போகா (Bhoga) பொறுப்பை அதாவது விளைச்சலில் அரசரின் பங்கை வசூல் செய்யும் அதிகாரம் பெற்று இருந்தனர்.[1] போகிகா, பிரதேசச் சொல்லான புக்தி(Bhukti)யுடன் இணைந்த சிறப்புப் பட்டம் என பிளீட்[2] கருதுகிறார். இரண்டாவது ஜெயபட்டாவின் செப்பேட்டுக் குறிப்புகளிலிருந்து போகிகா என்பவர்கள் சாமந் தாக்களுக்குக் கீழாகவும், விஷயபதிகளுக்கு மேலாகவும் வரிசைப் படுத்தப்பட்டவர்கள் எனத் தெரிகிறது.[3] ஆகவே, அமாத்யா என்பவர்கள் உயர் அதிகாரிகள் வரிசையைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது தெளிவாகிறது. ஓர் அமாத்யாவின் கொள்ளுப் பேரனும், அமாத்யா போகிகாவின் பேரனும், போகிகாவின் மகனுமான சூரிய தத்தா மகா சாந்தி விக்ரகிகா என்ற உயர் பதவியை அடைந்தார்.[4] தர்மத்தையும் அரசியலையும் கற்று உணர்ந்த தனேஸ்வர அரசன் பிரதிநிதிகளான உயர்குடி இளவரசர்கள், ஆலோசகர்கள், ராஜாக்கள் எனவும், அமாத்யா

[1] C. I. I-iii-எண் 27
[2] C. I. I-iii-பக்கம் 100
[3] I. A-V-114-1.8
[4] C. I. I-iii-எண்கள் 21, 22

எனவும் குறிக்கப்பட்டனர். ஹர்ஷர் காலக் குறிப்புகள் ஆலோசகர்களை அமாத்யா எனக் குறிக்கவில்லை. அவர்கள் மந்திரி என அழைக்கப்பட்டதை நாம் அறிவோம். ஆகவே, இச் சூழலில் அமாத்யா என்பது கௌரவப் பட்டமேயன்றி நிருவாக அதிகாரமில்லை என அறியலாம்.

ஹர்ஷர் கட்டளையிட்ட சமயங்களில் அதிகாரிகளை எவ்வாறு வரிசைப்படுத்தி அறிவித்தார் என்பதை பன்ஸ்கீரா, மதுபான் செப்பேடுகளிலிருந்து நாம் அறியலாம். 'மகா சாமந்தா (Maha Samanta), மகாராஜா (Maharaja), தஸ்ஸாத (Dauhssadha), ஸாத்ஹனிகா (Sadhanika), பரமாதரா (Paramatara), ராஜ தன்யா (Raja-sthanya), குமார அமாத்யா (Kumara Amatya), உபாரிகா (Uparika), விஷயபதி (Visayapati), பட்டா (Bhata), சட்டா (Chata), சேவகா (Sevaka) ஏனையோர்' எனச் செப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் குமார அமாத்யாக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இடம் அவர்கள் நிருவாகப் பொறுப்புகளை வகித்து வந்ததைக் குறிக்கிறது. மேலும், மற்ற அதிகாரிகளுடன் ஒப்பிடுவதற்கு வாய்ப்பாக அவர்கள் வகித்த இடத்தையும் அறிகிறோம்.[1]

மேலும், குமார அமாத்யாக்கள் அவர்களுக்கு எனக் குறிக்கப்பட்ட மாவட்ட அதிகாரிகளாகவும் பணி புரிந்தனர் எனச் செப்பேடுகள் குறிக்கின்றன. வட்டங்கள் என்ற புக்திகளைக் கவனித்து வந்த உபாரிகாக்கள் குமார அமாத்யாக்கள் பொறுப்பில் இருந்தனர்.[2] வேறு சில குறிப்புகள் குமார அமாத்யாக்கள் மகா தண்ட நாயகாக்களின்கீழ் அதிகாரிகள் எனக் குறிக்கின்றன.[3] மேலும், மகா-பல-அதிகிரிதாக்களுக்கும் கீழ் அதிகாரிகளாகவே குமார அமாத்யாக்கள் பணியாற்றினர். ஏனெனில், முதலாவது குமார குப்தரின் அமைச்சர் பிரிதிவி சேனு முதலில் குமார அமாத்யாவாக இருந்து, சில காலச் சிறப்பான சேவைக்குப் பின் மகா-பல-அதிகிரிதாவாகப் பதவி உயர்த்தப்பட்டார் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[4] பிற்காலத்தில் பிரிதிவி சேனு மகா சாந்தி விக்ரகிகா என்ற அமைச்சர் பதவியையும் வகித்தார். மற்ற உயர் பதவிகளுக்கு உயர்த்தப்பட்ட நிலையிலுங்கூடக் குமார அமாத்யா பதவியைக் கைவிடாதிருந்தது அப் பதவியின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. மேலும், பல உயர் பதவிகள் குமார

[1] C.I I-iii-எண் 38
[2] E.I-xv-130
[3] A.S.I.A.R.-(1911-12) 32
[4] E.I-X-52

அமாத்யாக்களுக்கே அளிக்கப்பட்டிருந்ததிலிருந்து அப் பதவி வகித்தவர்கள் மிகத் திறமையான அதிகாரிகள் எனவும் அறிய முடிகிறது.

A.S. அல்டேகர் குமார அமாத்யாக்களை ஆங்கிலேயர் காலத்தில் நிருவாகப் பொறுப்பு வகித்து வந்த ஐ.சி.எஸ் அதிகாரிகளுடன் ஒப்பிடுகிறார். ஏனெனில், அவர்கள் நிருவாகம் வகிக்கும் பகுதி மாவட்டங்கள் அல்லது மாநில, மத்திய அரசின் செயலகங்கள் ஆகும். சில வேளைகளில் அரசாங்கத்தின் அங்கத்தினராகவும் இருப்பதுண்டு. அமைச்சர்கள், தளபதிகள் அளவிலுள்ள உயர் பதவிகளுக்கும் ஐ.சி.எஸ். அதிகாரிகளை ஆங்கிலேயர்கள் நியமித்தனர்.[1] இது குப்தர் கால நிலைக்குப் பெரிதும் பொருந்துவது போல ஹர்ஷரின் காலநிலைக்கும் பொருந்தும்.

குப்தர் காலக் கல்வெட்டுகளிலிருந்து ரகசி நியுக்தா என்ற மற்றோர் அதிகாரி பற்றியும் அறிகிறோம். ரகசி நியுக்தா என்பதை மொழி பெயர்த்து ஆராய்ந்தால், அச் சொல் தனிச் செயலரைக் (Private Secretary) குறிப்பதாகக் கொள்ளலாம். பழங்கால இந்திய அரசர்கள் ஆய்வு குறித்து, அல்லது போர் படையெடுப்பு நிமித்தம் அடிக்கடி பயணத்தை மேற்கொண்டிருந்தனர். பயணக் காலத்தில் அரசர் அரசாங்க நிருவாகப் பொறுப்புகளை ரகசி நியுக்தாக்களின் மூலம் கட்டளைகளை அனுப்பிச் செவ்வனே கவனித்து வந்தனர். நிலக் கொடைகளைப் பற்றிக் கூறி அனுப்பிய[2] கட்டளைகளை அதற்குரிய நிருவாகப் பிரிவினருக்கு ரகசி நியுக்தாக்கள் கொண்டு சென்றனர்[3] எனச் செப்பேடுகளில் காணப்படுகின்றன.

ஷர்ஷர் பயணம் மேற்கொண்டிருக்கும் வேளைகளில் பல கட்டளைகளை அனுப்பி வந்ததற்குப் பல செப்பேட்டு, இலக்கியச் சான்றுகள் உள்ளன. ஷர்ஷர் கி.பி. 606ஆம் ஆண்டு முதலாவது படையெடுப்பை மேற்கொண்ட சமயத்தில் அளித்த கொடைகள் பற்றிப் பாணர் முன் குறிப்பிட்டார். அக் கட்டளை தனேஸ்வரத்தின் சுற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த போர் முகாமிலிருந்து அனுப்பப்பட்டதாகும். மேலும், ஷர்ஷரின் அன்றாடக் கட்டளைகள் 'புதிய தங்கத்தில் பொறிக்கப்பட்ட காளையின் உருவ முத்திரை'யைக் கொண்டிருந்தன. ஹர்ஷரின் முத்திரை பொறிக்கப்பட்ட செப்பேடுகள் பஞ்சாபிலுள்ள சோனுபட் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஹர்ஷரின் களிமண் முத்திரைகள்

[1] N.H.I.P-VI-பக்கம் *282*
[2] E.I-VI-*38*; C.I.I-iii-*155*
[3] E.I.XIX-*103*

நாளந்தாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஹர்ஷர் தம் பயணத்தின்பொழுது அனுப்பிய கட்டளைகளுக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டுத் தரலாம். சீனப்பயணி யுவான் சுவாங் பற்றிக் காமரூபத்தின் அரசருக்கு ஹர்ஷர் இரண்டு கட்டளைகளை அனுப்பினார். அக் கட்டளைகள் பருத்தியால் ஆன மெல்லிய துணிகளில் எழுதப்பட்டுச் சிவப்பு மெழுகால் முத்திரை இடப்பட்டன. அவை காமரூபத்தின் அரசர் பாஸ்கரவர்மரை, யுவான் சுவாங் சீனாவிற்குத் திரும்பும் பயணத்திற்கு உதவுமாறு பணித்தன. இதிலிருந்து ரகசி நியுக்தா என்பவர்கள் இயங்க வேண்டிய தேவையை உணருகிறோம். ஹர்ஷரின் காலத்தில் ரகசி நியுக்தா பற்றிய குறிப்புகள் காணப்படாவிடினும், குப்தர் காலத்தில் இருந்ததைப் போலவே அரசரின் கட்டளைகளை எடுத்துச் செல்லும் இவ் வகை அதிகாரிகள் ஹர்ஷரின் காலத்திலும் இருந்திருக்க வேண்டும் என முடிவு செய்யலாம். இத் தொடர்பாகக் காமரூபத்தின் அரசர் பாஸ்கர வர்மரின் கல்வெட்டுச் சான்று ஒன்றினைப் பற்றி இங்குக் குறிப்பிடலாம்.[1] அதில் குறிக்கப்படும் பல பதவிகளில் ஒன்றான ஆஜ்ஞ-சதம்-ப்ரபாயிதா (Ajna-satam-prapayita) என்பது ரகசி நியுக்தா பொறுப்புகளைச் செய்யப் பயன் பட்டது.[2]

பிரதிஹாரா

அடுத்ததாகப் பிரதிஹாரா (Prathihara), மகா பிரதிஹாரா (Maha Prathihara) என்ற மற்றொரு வகை அதிகாரிகளைப் பற்றி அறியலாம். குப்தர்கள் காலத்திலிருந்து ஹர்ஷரின் காலத்துக்குப் பின்னும் பிரதிஹாரா முக்கியப் பங்கு வகித்ததற்குச் சான்றுகள் உள்ளன. மகா பிரதிஹாரா என்ற அமைப்பில் நீதி மன்ற நிருவாகம், அரசவை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாக விளங்கினார். அவருடைய பொறுப்பும் அந்தஸ்தும் பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் உயர்ந்து காணப்படுகிறது. பாணர் அவரை மிக அதிகமாகப் புகழ்ந்துரைக்கிறார். வலபியின் முதலாவது துருவசேனா, மகாராஜா, மகாதண்ட நாயகா என்ற பல பட்டங்களைப் பெற்றிருந்தாலும் மகா பிரதிஹாரா என்ற பட்டத்தையும் பெற்றிருந்தார்.[3]

பிரதிஹாரா என்ற அதிகார அமைப்பில் அவர்கள் எங்குப் பதவி வகித்தனரோ அதைப் பொறுத்துப் பல பிரிவுகளைக் காண்கிறோம்.

[1] E. I-xii 65; xix-118 ff
[2] Harsha-Devahuti-பக்கம் 177
[3] I. A-iv-105

பொறுப்பு வகித்த பிரதிஹாராக்களைப் பாணர் பாஹ்ய (Bahya அல்லது மன்றத்திற்கு வெளியே என்றும், அந்தர (Antra) அல்லது மன்றத்திற்கு உள்ளே என்றும் இரு வகைகளாகப் பிரித்துக் குறிப்பிடுகிறார். மகா பிரதிஹாரா என்பவர் பல பிரதிஹாராக்களுக்குப் பொறுப்பாளராக விளங்கினார். தவாரிகா (Dauvarika) என்பவர் மகா பிரதிஹாராக்களுக்குத் தலைவராக விளங்கினார்.[1] தவாரிகா பதவியைப்பற்றிப் பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் தவிர வேறெங்கும் குறிப்புகள் இல்லை. பிரதிஹாரா அதிகாரிகள் அரசர் பயணம் செய்யும்பொழுது உடன் சென்றனர். இதற்கும் ஹர்ஷ சரித்திரத்தில் சான்றுகள் உள்ளன.[2] காமரூபத்தின் தூதுவர், அரசரைப் பாசறையில் சந்தித்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும் சமயத்தில் இதுவும் குறிக்கப்படுகின்றது. பயணிகள் தங்குமிடங்களில் பிரதிஹாராக்கள் தங்குவதற்கெனத் தனியாக இட வசதிகள் செய்யப்பட்டன.

ஸ்கந்தவாரா (Skandhavara) அல்லது அரண்மனை

ஹர்ஷ சரித்திரத்தில் உள்ள குறிப்புகளைக் கொண்டு அரண்மனையின் அமைப்பைப்பற்றி ஏறக்குறைய சரிவர விளக்க இயலும். அரசரின் வாழ்விடமும் அதன் சுற்றுப்புறங்கள் அனைத்தும் ஸ்கந்தவாரா என அழைக்கப்பட்டன. ஸ்கந்தவாராவைப் பிரதிஹாராக்கள் நிருவகித்து வந்தனர். ஸ்கந்தவாரா நகரின் பெருஞ் சாலையை ஒட்டி அமைந்திருந்தது.[3] அது இரண்டு அகன்ற பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. முதல் பகுதி அல்லது வெளிப்புறம் பாஹ்ய காக்சயா (Bahya-kakshya) என அழைக்கப்பட்டது. அதில் ஹர்ஷருக்குப் பரிசு அளிக்க வந்துள்ள சிற்றரசர்கள் தாங்கள் கொண்டு வந்திருக்கும் யானை, குதிரை, ஒட்டகம், உடை, சாமரங்கள் முதலியவற்றுடன் கூடாரம் அமைத்துக்கொண்டு குழுமியிருந்தனர். அரசரைக் காணும் விருப்பத்துடன் வந்திருந்த அவர்களுடன் தோல்வி கண்ட மகா சாமந்தாக்களும், தூர தேசங்களின் தூதுவர்களும், பல்வேறு நாட்டைச் சேர்ந்த மக்களும், எல்லையை ஒட்டிய கடலோரப் பகுதிகளில் வாழும் மிலேச்சர்களும் (Mlechchhas)[4], பல்வேறு மதத்தைப் பின்பற்றுவோரும் கூடியிருந்தனர்.

வெளிப் பகுதியைக் கடந்து உள்ளே சென்றவுடன் அரண்மனை உட்பகுதியின் பல்வேறு பிரிவுகளையும் (Raja-Kula) கண்காணித்து

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 62
2 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 214; மொழிபெயர்ப்பு 211
3 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 153
4 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 60

நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திப் பணி புரியும் பிரதிஹாராக்களைக் காணலாம். இந்த இடத்தில்தான் பாணரை அழைத்துச் சென்ற அரசரின் மெய்க்காப்பாளர் மேகலகா (Mekhalaka), மகா பிரதி ஹாராவின் தலைவராகிய தவாரிகா, பாரியாத்ரா(Pariyatra)[1] விடம் அறிமுகம் செய்து வைத்தார். பாரியாத்ராவை, பாணர் ஆர்வத்துடன் மிகச் சிறப்பாக விளக்குகிறார். பாரியாத்ரா என்று அழைக்கப்பட்ட பகுதியிலிருந்து வந்தமையால், அவருக்கு அப் பெயர் வந்தது எனக் கருதப்படுகிறது. பாரியாத்ரா என்ற பகுதி ஹர்ஷரால் வெல்லப்படுவதற்கெனக் குறிக்கப்பட்டுக் கைப்பற்றப் பட்ட பகுதியாகும்.[2] பாரியாத்ராவின் நடை, உடை, பழக்க வழக்கங்கள் பற்றிப் பாணர் தரும் விளக்கமானது, அவர் இந்தி யாவில் குடியேறிய வெளிநாட்டுக்காரராக இருக்க வேண்டும் எனக் கருத இடமளிக்கின்றது.

ராஜ குலம் என்றழைக்கப்பட்ட பல்வேறு அரண்மனைப் பிரிவுகளை அந்தர பிரதிஹாராக்கள்[3] நிருவகித்தனர். அப் பிரிவுகள் மேலும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதலாவது பகுதியில் (பாஹ்ய காக்ச்யாவை ஒட்டிய வெளிப்புறம்) அரசருக்கு விருப்பமான மிருகங்களும், உயர்ந்த ரக யானைகளும் குதிரைகளும்[4] நிறைந்திருந்தன. அதையடுத்து மூன்று காக்சயா (Kakshya)[5] அல்லது அரசவைகள் காணப் பட்டன. அரசர் தம்மைக் காண வருபவர்களை இங்குதான் சந்தித்தார். பாணர் ஹர்ஷரைச் சந்திக்க இங்கு வந்த சமயத்தில் அங்குச் சிற்றரசர்கள் நிரம்பியிருந்தனர்.[6] அதே அவை வேறொரு சமயத்தில் துன்பம் மிக்க சூழலைக்கொண்டிருந்த நிலையையும் பாணர் விளக்குகிறார். அது பிரபாகர வர்த்தனர் நோயினால் துன்புற்ற வேளையிலாகும்.[7]

அதைத் தவிர, ஆஸ்தான மண்டபம்,[8] சபா மண்டபம்[9] என்ற இரு அவைகளும் இருந்தன. அரசக் கட்டளைகளை அறிவிக்கவும், இரகசியத் தன்மை சற்றுக் குறைந்த அமைச்சரவைக் கூட்டங்கள்[10]

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 61-2
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 214
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 60
[4] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 62-69
[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 69; மொழிபெயர்ப்பு 154
[6] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 69
[7] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 154-55
[8] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 172, 186, 190, 214
[9] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 194, 201
[10] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 186-94

நடைபெறவும் அம் மண்டபங்கள் பயன்படுத்தப்பட்டன. ராஜ்ய வர்த்தனர் இறந்தவுடன், ஹர்ஷரை அரசராகும்படி திறமை மிக்க சிம்ம நாடர் ஆஸ்தான மண்டபத்தில் தான் வேண்டிக்கொண்டார். அதே அவையில்தான் ஹர்ஷர் தம்முடைய அமைச்சர்களிடம் தாம் திக்விஜயம் மேற்கொள்ளப் போகும் எண்ணத்தை அறிவித்தார்.

மூன்று காக்சயாக்களை அடுத்து அரசர் சிறப்பாகப் பேட்டி அளிக்கும் அவை என்ற புக்தாஸ்தான மண்டபம் (Bhuktasthana Mandapa) காணப்பட்டது.[1] உணவிற்குப் பின் சற்று நேரம் அமரும் இடமாக அது பயன்பட்டதால், அந்த அவைக்கு இப் பெயர் வந்தது. அதற்கும் அப்பாற்பட்ட பகுதிகள் அரசர் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்குப் பயன்பட்டன. அவை சற்று இரகசியத் தன்மையுடையன என்பது பாணரின் குறிப்புகளிலிருந்து தெளிவாகிறது.

அதற்கு அடுத்தவையும், இறுதியாக அமைந்திருந்தனவும் அரசருடைய தனி அறைகள் ஆகும். அவை தவலகிரிகா (Dhavala-griha) என்று அழைக்கப்பட்டன. இரண்டு மாடிகளைக்கொண்ட இதற்கு வெள்ளை மாளிகை என்றும் பெயர். அரசரின் படுக்கை அறை மேல்மாடியில் இருந்தது.[2] அரண்மனையின் உட்பகுதிகளில் பல பிரதிஹாராக்கள் பணி புரிந்தனர். வெள்ளை மாளிகையின் நுழைவாயில்களை எப்பொழுதும் பல வெற்ற கிரஹிகள் (Vetra Grahis) ஆயுதம் தாங்கிக் காவல் புரிந்து வந்தனர்.[3] பிரபாகர வர்த்தனர் நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்தில் அவருடைய அறைக்குச் செல்பவர்கள் படிக்கட்டுகளைச் சப்தமின்றிக் கடந்து செல்வதைப் பிரதிஹாராக்கள் கவனித்துக்கொண்டார்கள். சாமர கிரஹி (Chamara Grahi) என்ற சாமரம் தாங்குபவர்கள், கஞ்சுக்கி (Kanchuki) என்ற வயதான அந்தப்புரக் காவல் பொறுப்பாளர்கள், அங்க ரக்ஷகா (Anga-rakshaka) என்ற மெய்க் காப்பாளர்கள், சிரோ ரக்ஷகா (Shiro-rakshaka) என்ற மெய்க் காவலர் தலைவர், இன்னும் பலர் அங்குக் காணப்பட்டனர்.

யசோவதி அரசியும், இளவரசர்களும், இளவரசிகளும் தனித் தனியாகப் பணியாள்களைக்கொண்டிருந்தனர்.

யுவான் சுவாங் குறிப்புகளின்படி ஹர்ஷர் தம் அலுவல்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டார். ஒன்று, அரசாங்க

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 69
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 123, 159
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 155

அலுவல்களுக்கும், இரண்டாவது, சமயம் பற்றிய அலுவல்களுக்கும், மூன்றாவது, சொந்த காரியங்களுக்கும் ஆகும்.[1] இரண்டாவது பிரிவு சமயம் பற்றிய காரியங்களுக்கு மட்டுமன்றிச் சமூகக் கல்விப் பணிகளுக்காகவும் ஆகும். மக்களின் நல்வாழ்விற்கும் ஆன்மீக உயர்விற்கும் பணி புரியும் வாய்ப்பு அளிப்பது அப் பிரிவு ஆகும். குப்தர்கள் காலத்தில் அது போன்ற பணி புரிந்தவர்கள் விநய ஸ்திதி ஸ்தபகாக்கள் (Vinaya-sthiti-sthapakas) என அழைக்கப்பட்டனர் என்பதைக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.[2] அவர்களுக்கு இணையான மௌரியர் கால அதிகாரிகள் தர்ம மகா மாத்திராக்கள் (Dharma Maha Matras) ஆவர். ஹர்ஷர் காலத்தில் இப் பணிகளைக் குறிப்பாகப் பயணிகள் இளைப்பாறும் விடுதிகள் கட்டுவதிலிருந்து கருத்தரங்கு கூட்டும் முயற்சிகள் மேற்கொள்வது வரை, மேற்கொண்ட பலரைக் காண முடிந்தாலும், குறிப்பிட்ட ஒரு பெயரில் அவர்கள் அழைக்கப்பட்டனர் என்பதை நாம் காண முடியவில்லை. ஹர்ஷர் ஜலந்தரா அரசரை 'ஐந்து இந்தியா'வின் (Five Indies) சமயத்துறை ஆய்வாளராக (மூன்று பவளங்கள்-The Three Gems) நியமித்திருந்தார் என்பதை அறிகிறோம்.[3] குறிப்பிட்ட பணிக்களுக்கான பிரிவு பல அதிகாரிகளின் உதவியுடன் இயங்கி வந்ததை இந் நியமனம் குறிக்கும். கிராமங்களைக் கொடையாக வழங்குவதற்கு அகரஹார (Agrahara) என்ற சொல் ஹர்ஷர் காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. குப்தர் காலத்தில் அது அக்ரஹாரிக்கா (Agraharika) என வழங்கப்பட்டது. அதற்குக் கொடையாக அளிக்கப்பட்ட கிராமத்தின் விவகாரங்களை நிருவகிக்கும் அதிகாரிகள் எனப் பொருள்.[4] சாதாரணமாக மாணவர்களும், நெடுங்காலமாக நிலவி வரும் வழக்கப்படி பல மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கும் பிராமணர்களும், சமயக்கல்வி உலகியல் கல்வியைக் கற்பித்து வந்த கல்வி நிலையங்களும், கற்றுத் தேர்ந்த அறிஞர்களும் நிலக்கொடையைப் பெற்றனர். கல்வியறிவை வளர்ப்பதற்கு ஆர்வத்தைத் தூண்டுவதே இக் கொடையின் நோக்கமாகும். இவ்வாறு குறிப்பிட்ட காலம் வரையிலோ அல்லது முழு உரிமையுடனோ நிலம் வழங்குதல் அல்லது நிலத்தின் வருவாயை மட்டும் வழங்குதல், அது பற்றிய நடவடிக்கைகளைக் கண்காணித்தல் முதலியன அரசாங்கத்தின் கடமையாக இருத்தல் வேண்டும். ஹர்ஷர் காலத்தில் இவ்விரு வகையான நிலக் கொடைகளைப் பற்றி அக்ரஹார என்ற சொல் குறித்தது. அரசருடைய நிலக் கொடை பற்றிய

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 344
2 N. H. I. P-vi-பக்கம் 279
3 வாட்டர்ஸ்-i-பக்கம் 296
4 C. I. I-iii-பக்கம் 52

கட்டளைகளை உள்நாட்டு நிருவாக அதிகாரிகளுக்குக் கொண்டு சென்றவர்கள் தூதகா (Dutaka) என அழைக்கப்பட்டனர். அவர்கள் மகா சாமந்தா, மகாராஜா என்ற பட்டங்களைப் பெற்றிருத்தல் கூடும். மேலும், தூதகா பொறுப்பு நிலையானதாக இருக்கத் தேவை இல்லை. பொதுவாக அது நிலையற்ற பொறுப்பாகவும் (Temporary Post), எந்த ஓர் உயர் அதிகாரிக்கும் வழங்கக் கூடியதாகவும், நிலத்தின் உரிமையை மாற்றிக் கொடுக்கும் வேளையில் அரசருடைய பிரதிநிதியாக இருக்கத் தேவையான ஒன்றும் ஆகும்.

ஹர்ஷரின் காருண்யச் செயல்களை விளக்குவதற்கும் பல சான்றுகள் உள்ளன. துன்பம் இழைக்கப்படுவதிலிருந்து மிருகங்களைக் காக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும், பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தவும் நல்லொழுக்கத்தைப் போதிக்கும் நாடகங்களை அரங்கேற்றுவதற்கும் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். 'உலகத்தை உய்விக்கும் கொள்கையை அழகான நடையில் சாதாரண மக்களும் ஏற்றுக் கொள்ளும்படியாகவும், படிப்பவர்களைக் கவரக் கூடியதாகவும்'[1] ஜாதகக் கதைகளை (Jatakas) அழகுக் கோவையாக மாற்றிப் போதித்ததாக இட்சிங் குறிப்பிடுகிறார். கிழக்கு இந்தியாவைச் சேர்ந்த சந்திரா இயற்றிய விஸ்வாந்தரா (Visvantara) ஜாதகக் கவிதையை ஐந்து இந்திய மக்களும் (Five Indies) கற்று ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இந் நிலை இட்சிங் காலத்திற்கு மட்டுமே பொருந்துவது என்பதில்லை; அதற்குச் சற்று காலத்திற்கு முந்திய ஹர்ஷர் காலத்திற்கும் பொருந்தும். பௌத்தக் கொள்கையை விளக்கும் நாகானந்தா என்ற நாடகத்தை அழகு மிளிரும் இசைக் கோவையாக்கி மக்களிடையே ஹர்ஷர் பிரபலப்படுத்தினார் என்பதை நாம் அறிவோம். நாகானந்தா இசைக்கோவை சீனாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஜப்பானுக்குப் பரவியது. இன்றும் ஜப்பானின் ரையோ-ஓ (Ryo-o) நாடக அரங்கில் அந் நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இறைச்சி உண்பதையும், வேட்டையாடுதலையும் ஹர்ஷர் தடுத்தார் என யுவான் சுவாங் குறிப்புகளிலிருந்து நாம் அறிகிறோம். 'உயிர்களைக் கொல்லுவதற்கும், புலால் உண்பதற்கும்' மன்னிப்பு இன்றித் தண்டனை வழங்கப்பட்டதாக அக் குறிப்பு கூறுகிறது. சற்று மிகைப்படுத்தப்பட்டுக் கூறுவதாகக் கொண்டாலும் ஹர்ஷர் அவற்றை ஓரளவிற்குத் தடுத்தார் எனக்

1 இட்சிங்-பக்கம் 163

கொள்ளலாம்; நெடுஞ்சாலையை ஒட்டிய நகரங்களிலும் கிராமங்களிலும் பல இளைப்பாறும் சத்திரங்களைக் கட்டினார். அங்கு வரும் பயணிகளுக்கு உணவும் சுவை நீரும் வழங்கப்பட்டன. மேலும் தேவையான மருந்துகளுடன் மருத்துவர் ஒருவரும் அங்கு இருந்தார். ஏழைகளுக்கும், பயணிகளுக்கும் தேவைக்கேற்றபடி மருத்துவம் அளிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் பல பகுதிகளிலிருந்து ஏழைகளை அழைத்து, உணவு, உடை, நீர், மருந்து ஆகிய நான்கையும் கொடுத்து உதவினார். ஹர்ஷர் எல்லா மதப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், பயணக் கால இருக்கைகளில் அரிய சுவையான விருந்து படைத்தார்.

ஏழைகளுக்குப் பொருள் உதவி செய்து உதவிய அதே வேளைகளில் கல்விக்கும், சமய வளர்ச்சிக்கும் தக்க நடவடிக்கைகளை ஹர்ஷர் மேற்கொண்டார்; கல்விமான்களைப் பெருமைப் படுத்தியும், சொல்லரங்குகளை ஏற்பாடு செய்தும் கல்விக்கு ஊக்கமளித்தார்; மதக்காப்பாளர்கள் ஆன்மீகப் பேச்சு வார்த்தைகளில் பங்கு பெற ஆர்வமளித்தார். ஹர்ஷரே அந் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, சிறப்பான பங்கு கொண்டவர்களுக்குப் பரிசுகள் அளித்து அவர்கள் திறமை மேலும் வளரத் துணை புரிந்தார்; கீழானவர்களைத் தண்டித்துத் தீய செயல்களை ஒழித்தார். அள்ளி அள்ளிக் கொடுக்கும் வள்ளல் தன்மைக்கு ஹர்ஷர் எடுத்துக் காட்டாக விளங்கினார். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பேரவைகளில் சமய துறையைச் சேர்ந்தவர்களுக்குப் போருக்குத் தேவைப்படும் பொருள்களைத் தவிர மற்ற அனைத்தையும் கொடையாக அளித்தார்.[1] அவ் வேளைகளில் ஏழைகளுக்கும், பொருள் தேவை என்று கருதுபவர்களுக்கும் எந்த சமயத்தைச் சார்ந்தவர் என்பதனை நோக்காது தானம் செய்தார். சமயத்தின்மீது மக்கள் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பை அப் பேரவைகள் உணர்த்தியதாக யுவான் சுவாங் எண்ணுகிறார். பேரவை நிகழ்ச்சிகள் பற்றி அவர் தரும் விளக்கங்களிலிருந்து அவை மிகவும் சீரிய முறையில் மக்களைக் கவரும் வண்ணம் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை அறியலாம். அதை ஹர்ஷரின் ஆட்சிச் சிறப்பாகக் கொள்ளலாம். அவற்றைச் சிறப்பாக நடத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள், படையெடுப்புகளுக்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு அடுத்தபடியான சிறப்பைப் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும், ஹர்ஷரின் காலத்தில் இப் பணிகளை ஏற்று நடத்திய குறிப்பிட்ட அதிகாரிகளைப் பற்றியோ, வழிபாடு, கல்வி, கலை, மக்கள் நலன் முதலியவற்றின் அலுவலகங்கள் பற்றியோ நமக்குச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 344

யுவான் சுவாங்கின் 'பௌத்த மத விவகாரங்களின் தனி ஆய்வாளர்' (Sole Inspector of Buddhist Affairs) என்ற குறிப்பிலிருந்து மேற்கூறிய அரசு பணிகளைச் செவ்வனே நிறைவேற்றும் அலுவலகங்கள் தேவையான அதிகாரிகளின் துணையுடன் செயல்பட்டிருக்க வேண்டும் என முடிவு செய்தல் தவறாகாது.

சட்டம், நீதி, நிருவாகம்

ஹர்ஷரின் சட்டம், நீதி, நிருவாகம் பற்றிய விவரங்களை அக்கால மனு இலக்கியமான காத்யாயனுவின் (Katyayana) குறிப்புகளிலிருந்து அறியலாம் (காலம் கி.பி. 400-600). ஏனெனில், அவை ஹர்ஷரின் காலத்தை ஒட்டியவை ஆம். ஹர்ஷருக்கு நெடுங்காலத்திற்கு முன்னரே இந்து மதச் சட்டமும், நீதி நடவடிக்கைகளும், அது பற்றிய நிருவாக முறைகளும் பல மேதைகளின் முயற்சியால் முற்றிலும் வளர்ச்சி பெற்றிருந்தன எனலாம்.

வேத காலத்தின் ஆரம்பக்காலத்திலேயே அரசாங்க நிருவாகப் பிரிவுகளிலிருந்து நீதி நிருவாகம் பிரிக்கப்பட்டிருந்தது. பிராமணுவில் குறிக்கப்பட்டுள்ள பிரஸ்ன விவாகா (Prasna Vivaka) என்ற சட்டத்துறையின் தனிப்பதவி அதற்குச் சான்றாகும். அது பிரத் விவாகா (Prad Vivaka) என்ற பதவியுடன் தொடர்புள்ளதாக இருத்தல் வேண்டும். காத்யாயன ஸ்மிருதி, நீதிபதியைப் பிரத் விவாகா எனக் குறிக்கிறது. பிரஸ்ன என்றால் கேள்வி என்றும், பிரத் என்றால் கேள்வி கேட்பவர் என்றும் பொருள். பிரஸ்ன, பிரத் என்ற இவ் விரண்டும் பிராச் (Prachh) என்ற சொல்லிலிருந்து தோன்றியவை ஆகும். விவாகா என்பது வாச் (Vach) என்பதிலிருந்து வந்தது. வாச் என்பதற்குப் பேசும் ஒருவன் அல்லது பகுப்பவன் (Analyses) எனப் பொருள். ஆகவே, பிரத் விவாகா என்பது நீதி அல்லது சட்டத்துறையுடன் தொடர்புடையது என அறியலாம்.

அரசரே மக்களுக்கு நீதி அளிக்கும் உயர் அதிகாரியாவார். முறையீடுகளை (Appeal) விசாரிக்கும் உயர்நீதிமன்றமும் அரசரேயாவார். சட்டமியற்றும் அலுவல்கள் மிகக் குறைந்தே காணப்பட்டன. சட்டங்கள் வேதத்திலிருந்தும் (தர்ம சாஸ்திரம்), பழைய இலக்கிய மரபின்படியும் இயற்றப்பட்டன. மேலும், நெடுங்காலப் பழக்க வழக்கங்களும், விவசாயிகள், வணிகர்கள், கலைவல்லுநர்களின் மரபுகளும்; கற்றோர் அவையில் தெரிவித்த ஒருமித்த கருத்துகளும்; பகுத்தறிவும் சட்டமியற்றுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. அரசரோ அல்லது உயர் நீதிபதியோ தர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள சட்டத்

திட்டங்களின்படி முடிவு செய்தல் வேண்டும். அவை கிடைக்கப் பெறுவிட்டால் நாட்டில் வழக்கத்திலிருந்து வரும் பொதுவான பழக்கங்களை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் ஆனால் சாஸ்தி ரத்தில் கூறப்பட்டபடி, தர்மத்தின் விளைவான நல்லவற்றை அழியும்படி தீர்ப்புகள் வழங்குதல் தவறு என பிரஹஸ்பதி கூறு கிறார். அரசர் ஏற்கெனவே வழங்கப்பட்டு இருக்கும் வழக்கங் களுக்கு மாறாகத் தம் விருப்பப்படி தீர்ப்பு வழங்கக் கூடாது என்றும், அப்படிச் செய்வது வேறு வழியின்றிச் செய்யப்படும் கடைசி முடிவாக இருத்தல் வேண்டும் என்றும் காத்யாயனு கூறு கிறது. மன்னர் தம் விருப்பப்படி தீர்ப்பு வழங்குவது மக்களுக்கு அழிவை விளைவிக்கும். தர்ம சாஸ்திரத்தில் கூறப்படாத நிலையில் நீதி நிருவாகம் அன்றாடப் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் அவசியம். வேதத்திற்கு நேர் முரண் இல்லாமல், பழக்க வழக்கத்தில் மக்களின் ஆதரவைப் பெற்று விட்ட மரபுகள் எழுதப்பட்டு அரசரின் முத்திரையும் இடப்படுதல் வேண்டும் என்பது காத்யாயனுவின் நீதி நிருவாக ஒழுக்கக் கருத்து ஆகும்.

சட்டத்திற்கு எழுத்து உருவம் தந்த அனைவரும் நீதியை நாடி வருபவர் அரசருடன் எளிதாகத் தொடர்பு கொள்ளும் சூழ் நிலையின் அவசியத்தை வலியுறுத்துகின்றனர்.[1] சந்திர குப்த மௌரியர் காலத்தில் அந் நிலை காணப்பட்டது என மெகஸ்தனிஸ் உறுதிப்படுத்துகிறார். ஹர்ஷர் நிருவாகத்தில் கருத்துடன் உழைத்து வந்ததை யுவான் சுவாங் தம் பயணக் குறிப்புகளில் கூறுவதிலிருந்து அவர் காலத்தில் நீதித்துறை சந்திர குப்த மௌரியர் காலத்தைப் போலவே எளிதாக இருந்தது எனலாம்.

வழக்குபற்றிக் கருத்துக் கூறும் தீர்ப்புச் சான்றோர்கள் (Jury), அரசர் ஒரு நிரபராதியைத் தண்டித்தலும், குற்றவாளியைத் தப்ப விடுதலும் பாவம் எனக் கூறுகின்றனர்.[2] அரசர் தாமே நேரடி யாக நீதித்துறைப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற இயலாத நிலையில், ஒரு கற்றுணர்ந்த நீதிபதியையும், மூன்று சபாயாக் (Sabhyas)களையும் (நீதிமன்றத்தின் இளைய-Junior-அங்கத் தினர்கள்) நியமித்தல் அவசியம்.[3] நீதிபதியின் தகுதிகளையும் காத்யாயனு விளக்குகிறது. நீதிபதி தன்னடக்கம் மிக்கவராகவும், நற்குடியில் பிறந்தவராகவும், பக்கம் சாராதவராகவும், பண்புள்ள வராகவும், நிலையான கருத்தைக் கொண்டவராகவும், வேறு

1 அர்த்த சாஸ்திரம் 1-19; சுக்ரா-iv-5-8
2 மனு-viii-128
3 மனு-viii-9-10; யஜுர்-113; காத்யாயனு-63; சுக்ரா-iv-5-12

உலகத்தைப் பற்றிய அச்சம் உடையவராகவும், சமயப் பற்று உள்ளவராகவும், அயராது உழைப்பவராகவும், கோபமில்லாத வராகவும் இருத்தல் அவசியம். ஹர்ஷர் காலத்தில் நீதிபதி களுக்கு, பிரத் விவாகா (Prad Vivaka)[1] அல்லது தர்ம் அதிகாரின் (Dharm-adhikarin) அல்லது தர்ம் அத்யக்ஷகா (Dharm-adhyaksha) எனப் பெயர் வழங்கப்பட்டு வந்தது. அக்ஷதர்சகா (Akshadarsaka) என்பதும் பிரத் விவாக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மற்றொரு பெயர் ஆகும்.[2]

நீதிமன்றத்திற்குத் தர்மஸ்தான (Dharma-sthana) அல்லது தர்ம் அசன (Dharm-asana) எனப் பெயர். குப்தர் காலத்திலும் ஹர்ஷர் காலத்திலும் அதிகாரண (Adhikarana) அல்லது தர்ம் அதிகாரண (Dharm-adhikarana)[3] என வழங்கப்பட்டது. அதற்கு 'வழக்கின் உண்மையைப் (அதாவது வழக்குத் தோன்றிய காரணத்தை) புனிதச் சட்டக் கோட்பாட்டின்படி ஆராயும் இடம்' என காத்யாயன பொருள் கூறுகிறது.[4]

தலைநகரில் நிறுவப்பட்டு, அரசர் அல்லது தலைமை நீதிபதியால் நடத்தப்படும் நீதிமன்றங்களைத் தவிர, மற்றொரு வகையான நீதி மன்றங்கள் பற்றிய விளக்கத்தைப் பிரஹஸ்பதி[5] தருகிறார். அவை அரசரின் முத்திரையுடன் நடைபெறும் நீதிமன்றங்கள் ஆகும். மேலும், நகரங்களிலும் கிராமங்களிலும் நடமாடும் நீதி மன்றங்கள்[6] இயங்கி வந்ததையும் அவர் குறிப்பிடுகிறார். இங்கி லாந்தில் இயங்கி வந்த சுற்றி வரும் நீதிமன்றங்களை (Circuit Courts) இவ் விளக்கங்கள் நினைவு படுத்துகின்றன.

பழங்கால இந்தியச் சட்டத்தில் வியவகாரா (Vyavahara) என்ற சொல்லும் முக்கியமான ஒன்று ஆகும். இச் சொல் ஸ்மிருதி, சுத்ரா(Sutra)வில் பல கருத்துகளில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. 'கொடுக்கல் வாங்கல் பற்றிய தொடர்பு', 'ஒரு சிக்கல் அல்லது வழக்கு,' 'சட்டப்படி தொடர்பு கொள்ளும் உரிமை,' 'பிரச்சினைகளுக்கு முடிவு காணும் வழி' என்பவற்றை வியவகாரா குறித்தது. காத்யாயன அச் சொல்லுக்கு இரண்டு விளக்கங்களைத் தருகிறார். முதலாவதான 'ஐயப்பாடுகளைத்

[1] காத்யாயன-68
[2] அமாரா-2, 8, 5
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 78; மொழிபெயர்ப்பு 65
[4] காத்யாயன ஸ்மிருதி சந்திரிகா-ii-பக்கம் 19
[5] பிரஹஸ்பதி-i-2வது அடி
[6] பிரஹஸ்பதி-2, 3 அடிகள்

தீர்ப்பது'[1] என்ற விளக்கம் சொல் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாகும். சட்ட நிருவாகம், அதன் நோக்கத்தை நிறைவேற்ற அறிவுத்திறன், நியாயத்தின் தேவைகள் ஆகியவற்றை வலியுறுத்துகிறார். இரண்டாவதாக, வழக்கு எனக் கூறப்படும் எளிய விளக்கமாகும். வியவகார பதா (Vyavahara Pada) என்றால், 'சிக்கலின் அல்லது வழக்கின் கருப்பொருள்' என்பதாகும். இவை நாட்டியல் வழக்கு (Civil Case), குற்ற வழக்கு (Criminal Case) என இரண்டாகப் பிரிக்கலாம். இவ் விரண்டு வகையான வழக்குகளுக்கு ஒரே நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

வியவகாரா என்பது நான்கு பாதங்களைக் கொண்டது எனக் கூறப்படுகிறது. அவை தர்மம் (Dharma), சட்டபூர்வ ஆதாரம் (Vyavahara), வழங்கும் முறைகள் (Charitra), அரசக் கட்டளை(Raja Sasana) என்பவையாம். வேறு சிலர் அதை வழக்கு (Plaint), பதில், ஆதாரம் (Kriya), முடிவு (Nirnaya) என்றும் கூறுகின்றனர். காத்யாயனு, வழக்கு (Plaint), பதில், எவருக்கு வழக்குகளை மெய்ப்பிக்கும் பொறுப்பு உள்ளதென முடிவு செய்தல் (Pratya-Kalita), ஆதாரம் எனக் கூறுகிறார்.[2] தர்மமும் மற்ற மூன்றும் வழக்குகளின் (Vyavahara) நான்கு கட்டங்களில் ஒன்றான இறுதி முடிவின் (நிர்ணயம்-Nirnaya) நான்கு பாதங்கள் என P.V. கேன் (P.V. Kane) கருதுகிறார்.[3] இவ்வாறு நான்காகப் பிரிக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் மேலும் இரு வகைப்படுகின்றன. முதலாவதான தர்மத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு, குற்றம் செய்தவர் அதை ஒப்புக்கொண்ட நிலையில் உள்ளது என்றும், சோதனை செய்து முடிவு கண்ட நிலையில் உள்ளது என்றும் இரு வகைப்படும். இரண்டாவதான வியவகாரம் (Vyavahara), எழுத்துச் சான்றுகளும் வாக்கு மூலமும் சட்ட பூர்வ ஆதாரம் பெறும் நிலையில் உள்ளது என்றும், நீதி கோருபவரின் பொய் கலந்த பேச்சுகள் கண்டுபிடிக்கப்பட்டு அவருக்கு எதிரான முடிவு எடுக்கும் நிலையில் உள்ளது என்றும் இரு வகைப்படும்; மூன்றாவதான வழங்கும் முறைகள் (Charitra) உரிமைகள் பொதுவாக அனுமானமாக நம்பப்படும் நிலையில் உள்ளவை வேதம் ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக்கொள்ளாததாக இருப்பினும் வட்டார, கிராம அல்லது குடும்பப் பழக்க வழக்கங்களைப் பொறுத்த நிலையில் உள்ளவை எனவும் பிரிக்கப்படுகிறது. இவை எதனாலும் தீர்வு காண முடியாத நிலையில் இறுதிக் கட்டத்தில் பயன்படுத்தப்படும் அரசக்

[1] vi-பல, ava-ஐயம், hara-தீர்த்தல்
Hist. Dh. iii-பக்கம் 246-47

[2] காத்யாயனு-31; அபரார்கா மேற்கோள்-பக்கம் 616

[3] History-Dh-iii-பக்கம் 260

கட்டளை (Raja Sasana) வேதத்திற்கு எதிராக இல்லாமலும், பழக்க வழக்கத்திற்கு முரண்பாடு அற்றதாகவும் இருத்தல் அவசியம். மேற்கூறிய ஒவ்வொரு பிரிவிலும் இரண்டாவதாகக் கூறப்பட்ட முறைகள் பின்பற்றப்படும் வேளையில், அதற்கு முந்திய தாகக் குறிக்கப்பட்ட முறைகள் பொருளற்றதாகப் போகின்றன எனினும், அவை சில வழக்குகளுக்கு மட்டுமே பயன்படுத்தப் பட்டன என காத்யாயனு கூறுகிறுர்.[1]

நீதிமன்ற நடவடிக்கைகள்

சட்ட பூர்வ ஆதாரத்தின் (Vyavahara) அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படும் வழக்குகளில் கீழ்க்காணும் முறைகள் பின்பற்றப் பட்டன.[2] முதலில் உடலுக்கு ஊறு விளைவிக்கப்பட்டவராகவோ, பெரும் செல்வத்தை இழந்தவராகவோ இருக்கும் நீதி கோரு பவருக்குத் தம் நிலையைப் பூர்வ பக்ஷம் (Purva Paksha) கூறும் அனுமதி வழங்கப்படும். குற்றத்தை மறுப்பவர் அதற்குப் பதில ளிக்க வேண்டும்.[3] உத்தரம் (Uttara) ஒப்புக்கொள்ளுதல், மறுத்தல், வேண்டிக்கொள்ளுதல், முன் வழக்கு ஒன்றை மேற் கோள் காட்டி வாதாடுதல் என்ற நான்கில் ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றிக் குற்றவாளி பதிலளிப்பது வழக்கம். பின் இருவரும் தங்கள் நிலையை உறுதிப்படுத்தும் சான்றுகளைக் கூற வேண்டும். பத்திரங்கள், சாட்சிகள், அனுபவ உரிமை எனச் சான்றுகள் மூன்று வகைப்படும் என்று காத்யாயனு கூறுகிறுர்.[4] சான்றுகளை நிரூபிக்க நீதிபதி குறுக்குக் கேள்விகளும், விளக்கங்களும் (Pratya-kalita) கேட்பார். பின் இறுதியில் தீர்ப்பு (Kriyapada) வழங்கப் படும். வழக்கு முழுவதும் நடந்து முடிந்தபின் வழங்கப்படும் தீர்ப்பு, எல்லாக் கட்டங்களும் முடிவதற்குள் வழங்கப்படும் தீர்ப்பு எனத் தீர்ப்புகளைக் காத்யாயனு இரு வகைப்படுத்துகிறுர். இதிலிருந்து சில வழக்குகளில் வழக்கமாகப் பின்பற்றப்படும் முறை கைவிடப்பட்டு, உடனடியாகத் தீர்மானித்து விடுதலும் உண்டு எனத் தெரிகிறது.

வழக்கறிஞர்கள் என்ற பிரிவினரின் தோற்றம் ஹர்ஷர் கால நீதி நிருவாகத்தில் காணப்பட்ட மற்ருெரு சிறப்பான அமிச மாகும். நீதி நிறுவனத்தில் குறிப்பிட்ட பதவியை வகிக்கவில்லை எனினும், அப் பிரிவினரின் தோற்றம் அக் காலத்தில்தான் ஆரம்ப

[1] காத்யாயனு-43
[2] காத்யாயனு-31
[3] காத்யாயனு-158
[4] காத்யாயனு-219-244

மாகியது எனலாம். அஸஹாயா(Asahaya)வின் நாரத ஸ்மிருதி[1] விளக்கத்தில் (கி.பி. 600-750), மூன்றாவது நபரின் வழக்கைத் தான் பெற்ற கூலிக்குக் கைமாருக எடுத்துரைத்த பிராமணன் ஒருவனை நீதிபதி கண்டித்ததாக ஒரு நிகழ்ச்சி காணப்படுகிறது. மேலும், அவன் பிராமணனுக இருந்தபடியால் தக்க தண்டனையும் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், அவன் சார்ந்துள்ள குலத்தின் ஒழுக்க நெறியின்படி அது போன்ற சேவைக்குக் கூலி பெறுதல் கூடாது.

ஹர்ஷரின் மதுபான் செப்பேடு, மகா பிரமாத்ரா (Mahapramatara) என்ற மற்ெருரு புதிய நிருவாகப் பிரிவைப் பற்றியும் கூறுகிறது. அது போன்ற ஒரு பதவி குப்தர்கள் காலத்தில் இருந்ததற்குச் சான்றுகள் இல்லை. மகா பிரமாத்ரா என்பது ஒரு நிருவாகப் பிரிவு என்பதுடன் பட்டமாகவும் இருந்திருக்கலாம். மேலும், ஆருேம் அல்லது ஏழாம் நூற்ருண்டில் மகா பிரமாத்ரா தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், வலபியின் மைத்ரேகர்கள்[2] குறிப்பிலும், பாஜ் நாத்(Baijnath)[3]-ன் கி.பி. 800 பிரஸாஸ்தி(Prasasti)யிலும் மட்டுமே காணப்படுகின்றன. பிரமாத்ரி (Pramatri) அல்லது பிரமாத்ரா (Pramatra) என்பது நீதி நிருவாகப் பொறுப்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது R. S. திரிபாதியின்[4] கருத்தாகும். ஜி. பூலெர்[5] 'ஆன்மீக அறிவுரையாளர்' எனச் சொல்லின் பொருள்;அடிப்படையில்[6] பொருள் கொள்கிருர். யு. என். கோஷல் (U. N. Ghosal), பிரமாத்ரா நில அளவு நிருவாகத்தின் பிரிவாகும் எனக் கருதுகிருர்.[7]

பிரமாத்ரி (Pramatri) அல்லது பிரமாத்ரா (Pramatra)

தர்ம சாஸ்திரத்தை அரசவையில் விளக்கிக் கூறுவதே பிரமாத்ரி அல்லது பிரமாத்ராவின் அலுவல் என்று தோன்றுகிறது.[8] அல்லது நீதிமன்றத்தில் தர்ம விளக்கத்தைத் தரும் அதிகாரியாக இருந்திருத்தல் வேண்டும். பிரமாத்ரா சட்ட விளக்கப் பொறுப்புடன் நில அளவுப் பொறுப்பையும் இணைந்து பெற்றிருக்க வேண்டும்.

1 IV-5
2 இரண்டாவது காரகிரகாவின் வலபிக் கட்டளை I. A. vii-76
3 E. I-i-102
4 History of Kanauj-பக்கம் 140
5 E. I-i-118
6 மோனியர் வில்லியம்ஸ்-பிரமாத்ரி-'மிகச் சரியான கருத்து உடையவர்'
7 H. C. I, P-iii-பக்கம் 348
8 E. I-i-102

காவல் படை

ஹர்ஷர் காலத்திய செப்பேடுகளிலும், ஹர்ஷ சரித்திரத்திலும் காணப்படும் சில பதவிகள் காவல் அதிகாரிகளைக் குறிப்பதாகும். தண்ட (Danda) என்ற சொல்லுக்குப் பொதுவாகப் படை, அபராதம், கோல் அல்லது அதிகாரம் எனப் பொருள். அவற்றுள் அபராதம், கோல் என்பவை நீதி நிருவாகத்தையும், அதிகாரம் என்பது காவல் துறைப் பொறுப்புகளையும் குறித்ததாகக் கொள்ளலாம்.[1]

மகா தண்ட நாயகா(Maha Danda Nayaka) என்பது ஓர் இராணுவப் பதவி(Rank)யை அல்லது இராணுவ அலுவலகத்தைக் குறித்தது. தண்டிகா (Dandika) என்னும் சொல் தண்டிப்பவரையும், தண்ட-பாஸிகா (Danda-pasika) என்னும் சொல் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுபவரையும் குறிக்கும்.[2] செப்பேடுகளில் காணப்படும் இவை அனைத்தும் காவல்துறைப் பதவிகள் எனலாம். போர் ஊர்வலங்களில் அரசரைக் காண வரும் ஆர்வத்தால் கட்டுக்கு அடங்காத மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளைத் தண்டி (Dandi) அதாவது கழி ஏந்திச் செல்பவர் என ஹர்ஷ சரித்திரம் குறிக்கிறது.[3] இதுவும் காவல்துறைப் பணி எனலாம். சார் ஓட்தரானிகா (Chaur Oddharanika) என்றால் திருடர்களை ஒழித்துக் கட்டும் பொறுப்பை ஒப்புக்கொண்டவர் எனப் பொருள். இதுவும் காவல்துறையின் ஒரு சிறப்பான உறுப்பு எனலாம். சார் ஓட்தரானிகா என்பது பல குப்தப் பேரரசர்களின் ஆட்சிக்காலக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஹர்ஷரின் செப்பேட்டில் காணப்படும் தௌஹஸத ஸாத்தனிகா (Dauhassadha Sadhanika) என்ற கடினமான பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுபவர் பதவியும் காவல் துறையைச் சார்ந்தது எனலாம். R. G. பஸாக் (Basak) இப்பதவி கிராமக் கண்காணிப்பு அதிகாரி[4]யைக் குறிக்க வேண்டும் எனக் கருதுகிறார். சட்டா (Chata), பட்டா (Bhata) என்பவர்கள் காவல் துறையில் சாதாரண உறுப்பினர் ஆவர். சாரபட்டாக்கள் (Charabhatas) படையின் முன்னணித் தாக்குதல் வீரராகவும் பயன்படுத்தப்பட்டனர்.[5] வெற்றி (Vetri) என்பவர்களும் தண்டி என்பவர்களைப் போலவே இளநிலை (Junior) அதி

[1] C.I.I-iii-P-16n 5
[2] C. I. I-iii-எண் 46
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 208, 212
[4] E. I.-xii-43, 141
[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 205, 207

காரிகள் ஆவர். காவல்துறை, போர்ப் பணி இரண்டிற்கும் வெற்றி (Vetri) என்போர் பயன்படுத்தப்பட்டனர். சஞ்சாரக (Sancharaka), சர்வகட்டா (Sarvagatah) என்ற மற்றும் இரு வகை ஊழியர்கள் பற்றிய விளக்கமான குறிப்புகள் ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகின்றன. ஹர்ஷர் காலத்தில் ஏவல் வேலைகளைச் செய்து வந்தவர்களை இது குறிக்கும்.[1] சஞ்சாரக என்றால் செய்திகளைக் கொண்டு செல்பவர் எனப் பொருள்.[2] இவர்கள் அரசின் செய்திகளைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப் பயன்படுத்துவதற்கு மட்டும் நியமிக்கப் பட்டவர்கள் எனக் கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். சர்வகட்டா என்றால் எந்த இடத்தையும் சென்று அடைபவன் என்று பொருள். இவ் வகை பணியாள்கள் மக்களின் நிலை, நடத்தை, குறைபாடு, எண்ணங்கள் ஆகியவற்றை அரசர்களுக்கு அறிவித்த இரகசிய ஒற்றர்கள் ஆவர்.

படை

ஏனைய நாடுகளுடன் போரிட்டு வெற்றி கொள்வதே தம் கடமை என்ற எண்ணம் கொண்ட பழங்கால இந்திய அரசர்கள் படை நிருவாகத்தையும், திறமையையும் மிக முக்கியமாக கவனித்து வந்தனர். ஆகவே, படை, அரசாங்கத்தின் மிகச் சிறப் பான பிரிவு ஆகும். சீனப்பயணி யுவான் சுவாங்கின் குறிப்பு களின்படி அரசரின் படை, காலாட்படை, குதிரைப்படை, தேர்ப் படை, யானைப்படை என்ற நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. தேர்ப்படை குப்தர்கள் காலத்திலேயே புறக்கணிக்கப்பட்ட ஓர் பிரிவாக இருப்பினும், யுவான் சுவாங் வழக்கமாகக் குறிப்பிடும் பிரிவுகளை விளக்கியிருக்க வேண்டும். அரண்மனை அல்லது கூடாரத்தைப் பற்றி விளக்குகையில் பாணர் தேர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. படை ஆய்விற்குச் (Inspection) செல்கையில் அரசர் யானைமீது அமர்ந்து சென்றதாகப் பாணர் குறிப் பிடுகிறார்.[3]

படகுகள்

ஹர்ஷரின் படையில் படகுகளும் சிறப்பான இடத்தை வகித்தன இவ்வுண்மை பல காலமாகக் கவனிக்கப்படாதிருந்தது. பன்ஸ்கீரா, மதுபான் செப்பேடுகளில் இது பற்றித் தெளிவாகச் சான்று காணப்படுகிறது. 'சிறப்பு மிக்க வெற்றிக் கூடாரம்,

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 35; மொழிபெயர்ப்பு-பக்கம் 27
[2] E. I-viii-162
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 207; மொழிபெயர்ப்பு-பக்கம் 203

யானை, குதிரை, படகுகளைக் கொண்டிருந்தது' எனச் செப்பேடு கூறுகிறது.[1]

செய்திகளை அனுப்பவும் தொடர்பு கொள்ளவும் குதிரைகளை விட வேறு எதுவும் விரைவாகச் செல்ல முடியாத காலத்தில் ஆறுகள் போக்குவரத்திற்கும், வர்த்தகத்திற்கும், போரில் வெற்றியை ஈட்டித் தரும் வகையிலும் சிறப்பான பங்கை வகித்தன. ஹர்ஷப் பேரரசின் இதயத்தில் ஓடிய கங்கை ஆறு பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்தது. அரசாங்கப் படகுகளும், தனியார்ப் படகுகளும் அதிகமாகக் கங்கையில் காணப்பட்டதற்குப் பல சான்றுகள் உள்ளன. மேலும் ஹர்ஷரின் ஆட்சி வலபி, ஒரிஸாவின் சில பகுதிகள் வரை நீடித்ததன் விளைவாக அரசாங்க வணிகப் போர்த்துறைகள், பாசிம் ஓடாதி (Paschim Odadhi) என்ற அரபுக்கடலிலும், பூர்வ சாகரா (Purva Sagara) என்ற வங்கக் கடலிலும் கப்பல் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி வந்தன எனலாம்.

படை வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறைகளைப் பற்றியும் யுவான் சுவாங் குறிப்புகள் எழுதியுள்ளார்; இந்தியாவின் பொதுவான இயல்புகளை விளக்குகையில் படை அமைப்பு பற்றியும் விளக்குகிறார். படைத்தொழில் பரம்பரையாக வகிக்கப்பட்டு வந்தது. வீரர்களும், படைத்தளபதிகளும் போர்க்கலை அனைத்தையும் கற்றுத் தேர்ந்து விளங்கினர். அமைதிக் காலத்தில் படை வீரர்கள் அரசரின் அரண்மனைகளைக் காவல் புரிந்து வந்தனர். போர்க்காலத்தில் அச்சமின்றி எதிர்த்துத் தாக்கும் முன்னணி வீரர்களாகச் செயல் புரிந்தனர்.[2] ஆனால் வேறு ஓர் இடத்தில், தலைநகரை விட்டு வெகு தூரம் கடந்து மேற்கொள்ளப்படும் படையெடுப்பிற்கும், அரண்மனை, கூடாரம் முதலியவற்றின் காவலுக்கும் தேவையுள்ள அளவிற்கு மட்டுமே வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்[3] என யுவான் சுவாங் கூறுகிறார்.

நிலையான பெரிய படையை நிருவகித்து வருதல் அக்காலப் பொதுவான வழக்கம் என்பது தெளிவாகிறது. இப் படை போர்க் காலத்திலும், அமைதிக் காலத்திலும் பல்வேறு சேவைகளைச் செய்து வந்தது. அரண்மனைக் காவலாளி, குதிரை இலாயத்தின் அதிகாரி, நாட்டின் எல்லையைக் காக்கும் படையினர், அரசர் போர் ஊர்வலத்தின்போது வழியைக் காப்பவர்கள், குதிரைப் படை, காலாட்படை, யானைப்படை வீரர்கள் அனைவரும் அரசப்

[1] E. I-i-72; iv-210

[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 171

[3] வாட்டர்ஸ்-i-பக்கம் 176-7

படையின் அங்கத்தினர் ஆவார்கள். அமைதிக் காலத்தில் படை வீரர்களுக்குக் குறிப்பிட்ட பணிகளை ஒதுக்குவது வழக்கம். ஒரு பெரிய நிலையான படையைச் சேர்ந்த வீரர்களின் போரில் ஈடுபட வேண்டும் என்று இயல்பாக விரும்புகிற மனப்பான்மையைக் குறைக்க அரசர் அமைதிக் காலத்தில் குறிப்பிட்ட பணிகளை ஒதுக்கி அவர்களை மேற்கொள்ளச் செய்தார். படையெடுப்புக் காலங்களில் மேலும் தேவையான அளவிற்கு வீரர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஹர்ஷருக்கு உட்பட்ட சிற்றரசர்களும் ஏனையோரும் அவர்களுடைய படைகளைக் கொடுத்தும், மற்றும் எல்லா உதவி களையும் செய்தல் வேண்டும். கட்டாயப் போர்ப்பணி என்ற வழக்கம் ஹர்ஷரின் காலத்தில் இல்லை. பரிசு அளிப்பதாக வாக் குறுதி அளித்தும், குறிப்பிட்ட ஊதியம் அளித்தும், தேவைப்படும் அளவிற்குப் படைவீரர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் வழக்கமாக இருந்தது.[1] படையெடுப்பு முடிந்தபின் படையின் ஒரு பகுதி கலைக்கப்பட்டது. அவர்கள் தங்களுடைய குடும்பத்தொழிலை மேற்கொள்ளச் சொந்த ஊர்களுக்குத் திரும்புவர். இருப்பினும், ஹர்ஷரின் படையளவு ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே இருந்தது எனத் தெரிகிறது.

படைத்தொழில் பரம்பரை அடிப்படையில் இருந்தது என யுவான் சுவாங் குறிப்பிடுவதிலிருந்து, அக்கால முறையை ஒட்டிப் போர்த்தொழிலை க்ஷத்திரியர்கள் செய்து வந்ததைக் குறிப்பதாகும் என அறியலாம். மிகப் பெரும்பகுதியினர் அவ் வகுப்பிலிருந்தே படை வீரர்களாகப் பொறுக்கப்பட்டனர் என்பது வரலாற்றில் காணப்படுகிறது. க்ஷத்திரியர்கள் வகுப்பைச் சாராத மற்றவர் களும் வெகு காலமாகப் படைத்தொழிலில் பங்கு வகித்து வந்தனர். அவர்களையும் க்ஷத்திரியர்கள் என யுவான் சுவாங் கருதியிருக்க வேண்டும்.

படை அளவு

ஹர்ஷர் தனேஸ்வரத்தின் அரச பதவியை ஏற்றுக்கொண்ட உடனேயே பெரும்படையெடுப்புகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியதன் தேவை தோன்றியது. ஹர்ஷர் தம் சகோதரரைக் கொன்ற பகைவனைப் பழி வாங்கத் துடித்தார்; பக்கத்து நாட்டு அரசர்களைக் கட்டுப்படுத்தி நாட்டின் எல்லையை விரிவாக்க விரும் பினர். அவ் விருப்பங்கள் நிறைவேறும் வரை 'உணவு உட் கொள்ள மாட்டேன்' என்று தம் அமைச்சரவையில் கூறியதாக யுவான் சுவாங் கூறுகிறார். தம் படை வீரர்களுக்குக் கடுமையான

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 176-7

பயிற்சி மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டார்; எந் நேரத்திலும் போருக்குத் தயாராக இருக்கும்படியும் பணித்தார்; '5000 யானைப் படை வீரர்கள், 2000 குதிரை, 50000 போர் வீரர்கள்' கொண்ட படையின் உதவியினுல் ஆறு ஆண்டுகளில் 'ஐந்து இந்தியா'வையும் வென்ருர். நாட்டின் எல்லையை விரிவுபடுத்திய பின் படையின் அளவும் அதிகரித்தது. '60000 யானைப் படை வீரர்களும், 100000 குதிரைகளும்' படையின் சிறப்பான அமிசம் ஆகும். காலாட்படையின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. சற்றேறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரே படையெடுப்புகள் குறைந்து அமைதி தோன்றியது எனலாம்.

யானைப்படை

ஹர்ஷரின் படையில் பல அயுதா (Ayuta) யானைப்படை வீரர்கள் இருந்தனர் எனப் பாணர் குறிப்பிடுகிருர்.[1] ஓர் அயுதா என்பது பத்தாயிரமாகும். எனவே, யுவான் சுவாங் அறுபதாயிரம் எனக் கொள்வது தவருகும் எனக் கூற இயலாது.

ஹர்ஷரின் படை பழங்காலப் போர் முறைகளைப் பின் பிற்றியது. மௌரியர் காலத்தில் ஓர் இரதத்தில் ஒரு தேர் ஓட்டியைத் தவிர இருவரும், ஒரு யானையில் நால்வரும் பயணம் செய்வர். இரதத்திலும் யானையிலும் அமர்ந்திருப்பவர்கள் எல்லோரும் போர் செய்பவர்களாக இருத்தல் வேண்டும் என அவசியமில்லை. ஐயாயிரத்திலிருந்து அறுபதாயிரமாக யானைப்படையின் அளவு உயர்த்தப் பட்டதிலிருந்து ஏழாம் நூற்ருண்டில் யானைகள் படையில் வகித்து வந்த சிறப்பான இடத்தை உணரலாம். குப்தர்கள் காலத்தில் குதிரைப் படைக்குக் கிடைத்த சிறப்பு ஹர்ஷர் காலத்தில் யானைப் படைக்குக் கிடைத்தது. சாகர்கள் குதிரைப்படையின்மீது கொண்டிருந்த விருப்பம் குப்தர்களை அவ்வாறு செய்யத் தூண்டியிருக்க வேண்டும். குப்தர்கள் வலுமிக்க குதிரைப்படையை நிருவகித்து வந்தனர் என்பதற்குக் காளிதாசரின் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. குப்தப் பேரரசின் அழிவுக்குப்பின் தோன்றிய வேறு பல சிறிய அரசுகள் தங்களுடைய ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளத் தக்க புதிய படை ஆற்றல் முறைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கின. சிற்றரசர்களின் கோட்டைகளைத் தாக்கி வீழ்த்தக் குதிரைப்படையைவிட யானைப்படை பயன் மிக்கது என ஹர்ஷர் உணர்ந்தார். தர்ப-சதா (Darpa-sata) என்ற ஹர்ஷரின் விருப்ப மிக்க யானையைப் பற்றிப் பாணர் தரும் சிறப்பான விளக்கங்களும், ஒப்புமைகளும் ஹர்ஷர் காலத்தில் யானைப்படையின் வல்லமை

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 76; மொழிபெயர்ப்பு-பக்கம் 63

யைக் குறிக்கின்றன. அம்பாரம் மிக நன்றாக அலங்கரிக்கப்பட்டும், அம்புத் தாக்குதலிலிருந்து பாதுகாப்புப் பெற இரும்புக் கவசம் அணிவிக்கப்பட்டுமிருந்த தர்ப-சதா, குறித்த காலத்தில் தாக்கும் திறனுடன் நகரும் மலையென விளங்கிற்று எனப் பாணர் விளக்கு கிறார்.[1] உயரமான அம்பாரம் அணிவிக்கப்பட்ட யானைகள் ஒவ்வொன்றும் வலுமிக்க நகரும் கோட்டைகளாக விளங்கின.[2] அம்பார மேடையில் அமர்ந்திருக்கும் வீரர்கள் பல விதச் சுருக்குக் கயிறுகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்திப் போர் புரிந்தனர்.[3] சசானியர்(Sassanians)களும் யானைகளை ஹர்ஷரைப் போலவே பயன்படுத்தினர். அதிகாரத்தைக் கைப்பற்றும் விருப்பத்தால் படை ஆற்றலைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த எதிரிகளைப் பிரபாகர வர்த்தனரும், ஹர்ஷரும் தாக்கி வீழ்த்தினர். குறிப் பாகச் சாளுக்கிய மன்னர் புலிகேசியின் சிறப்பான யானைப்படை ஆற்றல் ஹர்ஷரையும் அதேபோல யானைப்படையைப் பெருக்கு வதற்குத் தூண்டியது. இருப்பினும், ஹர்ஷர் மேற்கொண்ட படை யெடுப்பில் தோல்வி கண்டார். புலிகேசியின் ஆற்றல் யானைப் படையிலும் போர் வீரர்களின் திறமையிலுந்தான் இருந்தது என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். புலிகேசி அண்டை நாட்டு அரசர்களை மரியாதையுடன் நடத்தவில்லை என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.[4] புலிகேசியின் படை வீரர்கள் போர் வெறியுடன் எதிரிகளைத் தாக்குவதும், யானைகளுக்கும் மதுவெறியூட்டி மூர்க்கத்தனமாகத் தாக்குவதும் வழக்கம். யானைகளுக்குக் கனமான பாதுகாப்புக் கவசம் அணிவிப்பதாலும், தந்தத்தின் நுனியில் கூர்மையான ஆயுதங்களைப் பூட்டி விடுவ தாலும் யானைப்படையின் அழிவுத்தன்மை அதிகமாகியது என யுவான் சுவாங் இந்தியப் படை முறைகளைப் பற்றிய பொதுவான விளக்கப்பகுதியில் கூறுகிறார்.[5] ஹர்ஷரின் விருப்பமான யானை களைப் பற்றிய பாணரின் ஒப்புவமைகள், யானைகள் போர்க் களத்தில் பல பணிகளுக்கு உதவின என்பதைச் சுட்டிக் காட்டு கின்றன. எமனுடைய வலையைப் போன்று பகைவர்களைச் சூழ்ந்து கொள்வதிலும், காலத்தைப் போன்று தவறாது தாக்குவதிலும், இராகுவைப் போன்று இறுகப் பிடிப்பதிலும், செவ்வாய்க் கிரகம் போன்று இடம் மாறித் தாக்குவதிலும், தீப்பந்தங்களைப் போலச் சுற்றி வந்து பகைவர்களைச் சிதறி ஓடச் செய்வதிலும் யானைகள் திறமை பெற்று விளங்கின எனப் பாணர் விளக்கு

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 68; மொழிபெயர்ப்பு-பக்கம் 55
2 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 68
3 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 68
4 வாட்டர்ஸ்-ii-பக்கம் 239
5 வாட்டர்ஸ்-i-பக்கம் 171

கிறார்.[1] எதிரிகளின் கூடாரங்களை முட்டிக் குழப்பம் விளைவிக்கவும், தந்தத்தால் பகைவர்களை நசுக்கவும், வெறி பிடித்து ஓடிப் பகை வர்களைக் கொல்லவும் யானைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

யானைகளைப் பெறுவதற்கு எல்லாவித வழிகளிலும் ஹர்ஷர் முயற்சிகளை மேற்கொண்டார். பரிசுகளாகவும், வரிப்பணத்திற்குப் பதிலாகவும், போரில் கைப்பற்றியவையாகவும், அபராதத் தொகைக்குப் பதிலாகவும், அரசரைக் காண்பதற்குத் தரும் கட்டணமாகவும், வேற்று நாட்டுத் தூதரக வெகுமதிகளாகவும், வித்தைக் கூடாரங்களில் (Circus) இருந்தும், வனத்துறை அதிகாரி களால் காடுகளில் புதிதாகப் பிடிக்கப்பட்டும், விந்திய மலைச் சபாரா(Sabara)க்களிடமிருந்து வழக்கமாகப் பெறுவதைத் தவிர, அதிகமாகக் கேட்டுப் பெறுவதன் மூலமாகவும் யானைகள் ஹர்ஷ ருடைய படையின் சிறப்பானப் பிரிவை நிறைவு செய்தன.[2]

யானைக் கொட்டத்தின் நிருவாக அதிகாரிகள் பட்டியல் மிக நீண்டதாகும். ஹர்ஷர் காலத்தில் யானைப்படைக்கு அளிக்கப் பட்ட சிறப்பை அது குறிக்கிறது. யானைப்பாகர்களில் பெரிய பொறுப்பு அதிகாரியாக விளங்கியவருக்கு மகா மாத்ரா (Maha Matra) எனப் பெயர்.[3] மாதிரிச் செயற்கை உருவங்களைத் தயாரித்து அவற்றைத் தாக்கிப் பழகும் பயிற்சியை யானைகளுக்கு அளிப்பது முக்கியமானதாம். சவாரி செய்வதற்கு மட்டும் பயன் படுத்தப்படும் யானைகள், பலவிதமாக நடப்பதற்குப் பயிற்சி பெற்றன. அப் பயிற்சியை அளிப்பவருக்கு அத்ஹோரண (Adhorana) எனப் பெயர்.[4] யானைகளுக்குத் தீனி போடும் வேலை யாள்கள் கர்பதி (Karpati),[5] லிசிகா (Lesika)[6] என அழைக்கப் பட்டனர். போர்களில் பங்கு பெற முடியாத கிழ யானைகள் அலங் கரிக்கப்பட்டு ஊர்வலத்தின் முன் சென்று மெருகு கூட்டின. ஊர்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 68; மொழிபெயர்ப்பு-பக்கம் 65

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 58, 196, 231, 233

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 196; மொழிபெயர்ப்பு-பக்கம் 190. தற்போது பழக்கத்திலிருக்கும் மகாவத் (Mahavat) அல்லது மாஹூத் (Mahout) என்ற சொல் மகா மாத்ரா என்பதிலிருந்து வந்ததாகும். மௌரியர் காலத்தில் போர், நீதி அலுவலகத் துறைகளில் உயர் பதவி வகித்து வந்த வர்கள் மகா மாத்ரா என அழைக்கப்பட்டனர். ஹர்ஷர் காலத்தில் இப் பெயர் யானைகளின் பொறுப்பு அதிகாரிகளைக் குறிக்க வழங்கியது வியப்பைத் தருகிறது. ஹர்ஷர் காலத்தில் மகா மாத்ரா என்பவர் வேறு துறைகளில் பொறுப்புகள் வகித்ததாகச் செய்திகள் இல்லை. யுவான் சுவாங்குடன் பயணம் செய்த அதிகாரியை மோ-ஹோ-தாலோ(Mo-ho-talo) அல்லது மகா தாரா (Mahat-tara) என 'யுவான் சுவாங் வாழ்க்கை' என்ற நூலை மொழி பெயர்த்த S. பீல் கூறுகிறார்.

[4] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 196; மொழிபெயர்ப்பு-190

[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 52, 196, 213

[6] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 65, 21

வலத்திற்குப் பயன்படுத்தப்படும் அலங்கார யானைகளின் பாகர்கள் அரோஹா (Aroha)க்கள் அல்லது சவாரி செய்பவர்கள் என அழைக்கப்பட்டனர்.[1] யானைகளைப் பழக்குபவருக்கு நிஷாதின் (Nishadin) எனப் பெயர். யானைகளின் மருத்துவருக்கு இபா பிஷாக்-வரா (Ibha-bhishag-vara)[2] எனப் பெயர். மருத்துவர்கள் வகித்து வந்த சிறப்பான இடத்தையும், மதிப்பையும் அவர் பெயரின் கடைசிச் சொல் குறிக்கிறது. யானைப்படையின் வேறு சில அதிகாரிகள் பிலு-பதி (Pilu-pati) அல்லது யானைக் காப்பாளர் என அழைக்கப்பட்டனர். அவர்களில் மூத்த அதிகாரிகள் மகா பிலு-பதி (Maha Pilu-pati) என அழைக்கப்பட்டனர். குதிரைப் படையில் இதற்குச் சமமான பதவியை வகித்து வந்த அதிகாரி களுக்கு அஸ்வபதி (Asvapati), மகா அஸ்வபதி (Maha Asvapati) எனப் பெயர்.

குதிரைப்படை

குதிரைப்படைக்கு ஹர்ஷர் அதற்குரிய சிறப்பான இடத்தை அளித்திருந்தார். உயர் இனக் குதிரைகள் வனாயு (Vanayu), ஆரட்டா (Aratta-பஞ்சாப்), கம்போஜா (Kamboja-பாமிர்ப் பகுதி) முதலிய இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பரத்வஜா (Bharadvaja-வடக்குக் காட்வால்-Gadwal), சிந்து தேசம், பாரசீகம் (சசானிய இரான்-Sassanian-Iran) பகுதிகளிலிருந்தும் குதிரைகள் வரவழைக்கப்பட்டன. அரசரின் குதிரை இலாயத்தில் ஆறு வேறு வகை வண்ணக் குதிரைகள் இருந்தனவாகப் பாணர் கூறுகிறார். அதில் தங்கண (Tangana) என்ற வகைக் குதிரைகள் மிருதுவான சருமமும், நிலையான ஓட்டமும் கொண்டவை ஆம்.[3] அவ்வகைக் குதிரைகள் வடக்குக் காட்வாலில் இருந்து பெறப் பட்டன. அவ் வகைக் குதிரைகளில் சவாரி செய்தவர்களை V.S. அகர் வாலா மத்திய பஞ்சாபைச் சேர்ந்த காக்கதாக்கள் (Khakkhatas) என்ற பழங்குடியினர் எனக் கூறுகிறார்.[4] உயர் வகைக் குதிரைகளை அதன் உடற்கட்டு, பழக்கங்கள், இதர வகைக் குதிரைகளிட மிருந்து வேறுபட்டுக் காணப்படும் சிறப்பான பண்புகள் ஆகியவை பற்றிச் சிறப்பான குறிப்புகள் தருவதன் மூலம் பாணர் விளக்கு கிறார். அவ் விளக்கங்கள் பாணர் குதிரைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்தார் என்பதைக் குறிக்கின்றன.[5]

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 67
2 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 196
3 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 206; மொழிபெயர்ப்பு-பக்கம் 201
4 V. S. அகர்வாலா-பக்கம் 146
5 ஹர்ஷ சரித்திரம்-பக்கம் 62; மொழிபெயர்ப்பு-பக்கம் 50

உயர் இனக் குதிரையின் ஒவ்வோர் இயல்பும் சிறப்பாக விளக்கப்படுகிறது. ஹர்ஷரால் பெரிதும் விரும்பப்பட்ட வல்லபா என்ற குதிரைகளைப் பற்றிப் பாணர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷரால் விரும்பப்பட்ட யானைகளைப் போலவே குதிரைகளும் அரண்மனை அல்லது கூடாரத்தின் உட்பகுதிகளில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. சாதாரண வகைக் குதிரைகள் வெளியே குதிரை இலாயத்தில் வைக்கப்பட்டிருந்தன.

குதிரை இலாயத்தின் நிருவாக அதிகாரிகளுக்கு ஸ்தனபால (Sthanapala), வல்லபபால (Vallabhapala) எனப் பெயர்.[1] பாணர் ஹர்ஷரின் இராணுவ ஊர்வலத்தைப் பற்றிக் கூறுகையில் அவர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இருப்பினும், ஹர்ஷ சரித்திர விளக்க உரையாளர் அகர்வாலா. குதிரை இலாயத்தின் நிருவாக அதிகாரிகளை அஸ்வபால (Asvapala)[2] எனக் குறிப்பிடுகிறார். அரசருக்கு விருப்பமான குதிரைகளை ஊர்வலத்தில் அழைத்துச் செல்லுபவர்களுக்குப் பட்டி (Patti) எனப் பெயர்.[3]

ஹர்ஷ சரித்திரத்தை மொழிபெயர்த்துள்ள கோவலும், தாமசும், கிராமிலாகா குலை (Kramelaka Kulaih)[4] என்பதை ஒட்டகக் கூட்டம் எனக் கூறுகின்றனர்.[5] R. S. திரிபாதி, அவையும் படையில் ஒரு போரிடும் பிரிவு எனக் கருதுகிறார்.[6] ஆனால் பின் பகுதியில் கோவலும், தாமஸும் எருது, கழுதைகளைப் போலவே சுமைகளை ஏற்றிச் செல்ல ஒட்டகங்களும் பயன்படுத்தப்பட்டன என விளக்குகின்றனர்.[7]

காலாட்படை

யுவான் சுவாங்கின் இந்தியாவைப் பற்றிய பொதுவான விளக்கத்தில் காலாட்படை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. காலாட்படைக்கு வீரமிக்கவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப் பட்டனர். விரைவாகச் செல்லும் தன்மையும் மூர்க்கமாகத் தாக்கும் திறமையும் அதன் சிறப்பாகும். பெரிய கவசமும் நீண்ட ஈட்டியும் அவர்கள் ஆயுதமாகும். சில வேளைகளில் வளைந்த வாளையும், கத்தியையும் கொண்டு எதிரியின் முன்னணி அமைப்பு

[1] மாட்டுக் கொட்டத்திற்கு வழங்கும் சொல்லான தான் (Than) என்ற சொல் ஸ்தன (Sthana) என்பதிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று D. தேவ ஹூட்டி கருதுகிறார்.

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 205 விளக்கவுரை

[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 205; மொழிபெயர்ப்பு-பக்கம் 200

[4] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 58

[5] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 46

[6] History of Kanauj-பக்கம் 131-அடிக்குறிப்பு 1

[7] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-210; மொழிபெயர்ப்பு-பக்கம் 206

களைத் தாக்கினர். அவர்களுடைய ஆயுதங்கள் அனைத்தும் கூர்மையானவையாகவும், பதமானவையாகவும் இருந்தன. ஈட்டி, கவசம், வில், அம்பு, வளைந்த வாள், கத்தி, போர்க் கோடாரி, கூரான ஆயுதம் பொருத்தப்பட்ட மர ஈட்டி, கோடாரி பொருத்தப்பட்ட ஈட்டி, எறி ஈட்டி முதலியவற்றைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்குத் தலைமுறை தலைமுறையாகப் பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர்களாக அவர்கள் விளங்கினர் என யுவான் சுவாங் கூறுகிறார்.

ஹர்ஷரின் படையைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் படைவீரர்கள் சாரபட்டா (Charabhata)[1] என அழைக்கப்பட்டார்கள். அவர்கள் தங்கள் உடலில் எண்ணெய் பூசிக் கொண்டு இருந்தனர்.[2] நேருக்கு நேர் நடைபெறும் கைகலப்பும் போரில் இறுக்கமாகப் பிடிக்க முடியாதபடி இருப்பதற்கும் அல்லது காயங்கள், பூச்சித் தொல்லைகளிலிருந்து காப்பதற்காகவும் எண்ணெய்ப் பூச்சு உதவி இருக்க வேண்டும். கெட்டியான தோலினாலான கவசத்தையும் அவர்கள் கொண்டிருந்தனர்.[3] S. பீல் எழுதியுள்ள யுவான் சுவாங்கின் வாழ்க்கை என்ற நூலில் தோல் கவச உடையைப் பற்றிய மற்றொரு குறிப்பு காணப்படுகிறது. அக் குறிப்பிலிருந்து யுவான் சுவாங் அசாம் அரசரிடமிருந்து பயணத்திற்குப் பெரிதும் உதவும் தோல் கவச உடையைப் பெற்றுக்கொண்டார் எனத் தெரிகிறது. ஹோ-லா-லி (Ho-la-li) எனப்பட்ட அக் கவச உடை, முரட்டுத் தோலினால் செய்யப்பட்டது; உட்புறம் மிருதுவாக இருந்தது எனவும் தெரிகிறது.

ஊர்வலத்தின்போது அரசரின் முன்னே வழியமைத்துக் கொடுத்துச் செல்லும் பணியாள்கள் தண்ட தாராக்(Danda-dharas)கள் என அழைக்கப்பட்டனர்.[4] வெற்றி கிரஹிகள் (Vetri Grahis) என்பவர்களும் இதே போன்ற பொறுப்புகளையும், அந்தஸ்தையும் பெற்றிருந்தனர். கையில் கழிகளை ஏந்திக் கொண்டு அரசரைக் காண ஆர்வத்துடன்[5] வரும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தியும், புகார் கூற வருபவர்களும், உதவி நாடுபவர்களும் அரசரைச் சூழ்ந்துகொள்வதிலிருந்து காத்துச் சேவை புரிந்தும் வந்தனர். 'வெற்றி(Vetri)கள்' அரண்மனையின் உட்புற அறைகளுக்குச் செல்லும் வாயில்களைக் காவல் புரிந்து வந்தனர். 'வெற்றிகள்' போர்க்காலத்திலும், அமைதிக்

[1] C. I. I-iii-பக்கம் 98n-2
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 205; மொழிபெயர்ப்பு-பக்கம் 200
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 207; மொழிபெயர்ப்பு-பக்கம் 203
[4] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 208; மொழிபெயர்ப்பு-பக்கம் 204
[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 212; மொழிபெயர்ப்பு-பக்கம் 208

சாலத்திலும் காவல்துறை மெய்க்காவல் பொறுப்புகளை நிறை வேற்றி வந்தனர். அவர்களுடைய பொறுப்புகள் மாற்றப்பட்டால் தவிர, போர்களில் 'வெற்றிகள்' பங்கு பெறுவதில்லை எனத் தெரிகிறது. 'அரண்மனையைக் காவல் புரிந்தும், போர்க்காலத்தில் முன்னணித்தாக்குதல் வீரர்களாகவும் பயன்படுத்தப்பட்டார்கள்' என யுவான் சுவாங்கால் குறிக்கப்பட்டவர்கள். சாரபட்டாக் களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் போருக்கு அனுப்பப்பட்ட வர்களாக இருத்தல் வேண்டும்.

ஹர்ஷ சரித்திரம் சாரபட்டா எனக் குறிப்பவர்களும், சட்டபட்டா (Chatabhata) அல்லது பட்டசட்டா என்று செப்பேடுகள் குறிக்கும் பணியாள்களும் ஐயத்திற்கு இடமின்றி ஒருவரைத்தான் குறிக்கிறது. எனினும், இச் சொல் பலவாறாகப் பல இடங்களில் பல காலங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஹர்ஷரின் செப்பேடுகளை மொழிபெயர்த்துள்ள பூலெர் பட்ட சட்டாவை நிலையான படை வீரர்கள் என்றும், நிலையற்ற படை வீரர்கள் என்றும் குறிப்பிடுகிறார். பிளீட், பூலெரின் மொழி பெயர்ப்பைப் பின்பற்றுகிறார். மேலும், சட்டா என்பவர்கள் பட்டாக்களால் நிருவகிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடுகிறார்.[1] வேறு ஓர் இடத்தில் மற்ற ஒரு செப்பேட்டுக் குறிப்பை ஆதாரமாகக் காட்டி, காவல் படையுடன் தொடர்புள்ள, 'திருடர்களிடமிருந்து காக்கும் வீரர்கள் அல்லது காவல்படை அங்கத்தினர்கள்' என பகவன்லால் இந்திராஜி குறிப்பிடுகிறார்.[2] மாவட்ட வரி வசூல் நிருவாகப் பொறுப்பையும், குற்றவாளிகளைப் பிடிக்கும் பொறுப் பையும் பர்கானு(Pargana)வின் தலைவர் சட்டா கொண்டிருந்தார் என J. P. வோகல் (J. P. Vogel) கூறுகிறார். பட்டா, கீழ் அதிகாரி களாகவும் சாதாரணக் காவல்படை அங்கத்தினர்களாகவும் விளங்கினர் என A.S. அல்டேகர் கூறுகிறார்.[3]

படை அதிகாரிகள்

பாணரின் குறிப்புகள் ஹர்ஷர் காலத்தில் நிலவி வந்த பல்வேறு படை அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மேலும், ஹர்ஷர் காலத்திய அல்லது அவரது காலத்தை ஒட்டிய செப்பேடு, கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்து வேறு சில அதிகாரிகளைப் பற்றியும் ஊகித்து அறியலாம். ஏனெனில், அவர்களைப் பற்றிய விவரம் குறிப்புகளில் அடிக்கடி காணப்படுகிறது. அவ் வரிசையில் முதலா வதாக மகா தண்ட நாயகா (Maha Danda Nayaka) என்ற

[1] C. I. I-iii-பக்கம் 98-அடிக்குறிப்பு 2
[2] I. A-ix-175 n-41
[3] N.H.I.P-vi-பக்கம் 277

அதிகாரியைப் பற்றி அறிகிறோம்.[1] ஹர்ஷ சரித்திரத்தில் பல-அதிகிரிதா (Baladhikrita) என்ற அதிகாரிகளைப் பற்றிக் கூறி இருப்பதிலிருந்து மகா பல-அதிகிரிதா (Maha Baladhikrita) என்ற அதிகாரிகளைப் பற்றி யூகித்து அறிந்துகொள்ளலாம்.[2]

V.S. அகர்வாலாவின் ஹர்ஷ சரித்திர விளக்க உரையில் பல-அதியாக்சகா (Bal-adhyaksha) என்பவர்கள் பல-அதிகிரிதாக்களே என்றும், அவர்களை நவீனப் படையமைப்பின் வாகினி (Vahini) பொறுப்பிலிருக்கும் அதிகாரிகளுடன் ஒப்பிட்டு விளக்குகிறார்.

பல-அதிகிரிதாக்கள் பதிபதி(Pati-pati)களுக்குக் கட்டளையிடுவதாக ஹர்ஷ சரித்திரம் குறிக்கிறது.[3] பதிபதி பற்றிய முற்றிலும் தெளிவான விளக்கத்தை அகர்வாலா தரவில்லை. பதிபதி என்பவர்கள் பாசறையின் கண்காணிப்பாளர்கள் என கோவல், தாமஸ் தரும் விளக்கம் சற்று நிறைவை அளிக்கிறது எனலாம்.[4]

சிம்ம நாடர் வகித்து வந்த பதவி படைத்தலைமை அல்லது சேனாபதி (Senapati) என்ற சிறப்பான பதவியாகும். அவருக்கு அதிக ஊதியம் அளிக்கப்பட்டது. குப்தர்களின் காலத்தில் பல சேனாபதிகளின் தலைவராக மகா சேனாபதி என்பவர் இருந்ததை நாம் காண முடிகிறது. இருப்பினும், அரசரே படையின் உயர்தலைவர் என்பதில் ஐயமில்லை.

படையுடன் அரசரும், மற்றும் சிற்றரசர்களின் பெண்டிரும் சென்றதாக ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகிறது.[5] அறுசுவை உண்டியும் புறக்கணிக்கப்படவில்லை என்பதையும் காண முடிகிறது. படையுடன் சமையல் பண்டங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. முயல், வெள்ளாடுகள், பன்றிகள், பறவைகள், மான்கறி இவற்றுடன் மூடிய மோர்ப்பானைகளும் காணப்பட்டன, கூடைகளும், அடுப்புகளும், பாத்திரங்களும், செம்பினால் ஆன பொறிக்கும் தட்டுகளும் காணப்பட்டன என்ற விளக்கம் காணப்படுகிறது.[6]

படையெடுப்புகளை முதலில் மேற்கொள்ளும் சமயம் படை வீரர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் தாக்கும் திறமையின்றிச்

[1] C.I.I-iii-பக்கம் 16n-5; H. C. I. P-iii-பக்கம் 349 ff
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 204; மொழிபெயர்ப்பு-பக்கம் 199
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 204
[4] ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 199
[5] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 205; மொழிபெயர்ப்பு-பக்கம் 200
[6] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 211; மொழிபெயர்ப்பு-பக்கம் 208

சாதாரண வாழ்க்கையின் இன்பங்களில் விருப்பத்துடன் காணப் படுவர். படையெடுப்புகள் அடிக்கடி மேற்கொள்ளப்படும்போது மேற்கூறிய இயல்புகளும் இருத்தல் மிகவும் அவசியம் எனலாம். படையுடன் பெண்களும் சென்றது இதைக் குறிக்கிறது. இல்லா விட்டால், படைவீரர்கள் உரிய மனவளர்ச்சி பெற்றுச் சிறந்த வீரர்களாக ஆவது தடைப்படலாம்.

ஒரு நாளைக்குச் சுமாராக ஒன்பது மைல்களைப் படை கடக்கும். படை நகரும் வேளையில் எத்தனை குரோசாக்(Krosa)களைக் கடக்க வேண்டும் என்பதைப் பறையறைந்து குறிப்பாக உணர்த்துவர்.[1] மனுவைப் பின்பற்றிச் சுக்ரா, ஒரு குரோசா என்பது 2000 கஜம் எனக் கூறுகிறார்.[2] அளவைகள் பற்றிக் கௌடில்யர் கூறுவதி லிருந்து சற்றேறக்குறைய ஒரு நாளில் இரண்டு யோசனை (Yojana) தூரம் அல்லது பத்து மைலுக்குச் சற்று அதிகமாக ஹர்ஷரின் படை கடந்தது எனலாம்.[3]

மாநில நிருவாகப் பிரிவு

நிருவாக வசதிகளுக்கு ஏற்பத் தேவையான உட்பிரிவுகளாகப் பேரரசு பிரிக்கப்பட்டிருந்தது. குப்தர்கள் காலத்தில் மிகப் பெரிய பிரிவுகளான சௌராஷ்டிரம், மாளவம் என்பவை தேசங்கள் என (Desas) என அழைக்கப்பட்டன. தேசம் என்ற சொல் சிறிய நிலப்பரப்புகளுக்கும் வழங்கப்பட்டு வந்தது என்ப தற்குப் பல சான்றுகள் உள்ளன.[4]

ஹர்ஷரின் நேரடியான நிருவாகத்தின்கீழ் இருந்து வந்த நிலப் பரப்புகளை யுவான் சுவாங் ஐந்து கௌடாக்கள் (Five Gaudas) அல்லது ஐந்து இந்தியாக்கள் (Five Indies) எனக் குறிப்பிடுகிறார். அவை சரஸ்வதா (Sarasvata-கிழக்குப் பஞ்சாப்), கன்யா-குப்ஜா (Kanya Kubja-கனோஜ்), கௌடா (Gauda-மேற்கு வங்காளம்), மிதிலா (Mithila-வடக்கு பீகார்), உத்கலா (Uthkala-வடக்கு ஒரிசா) ஆகும். இப் பிரிவுகள் நிருவாக அடிப்படையில் ஹர்ஷரால் ஏற்படுத்தப்பட்டன என நினைப்பதற்கு இல்லை.

இந்தியா ஏறக்குறைய எழுபது அரசுகளைக் கொண்டது என யுவான் சுவாங் தம் பயணக் குறிப்புகளில் கூறியுள்ளார். இவை அனைத்தும் இந்திய எல்லைப் பரப்பிற்குள்ளேயே அடங்கி இருப்பதை நாம் காண முடிகிறது. இவற்றின் இருப்பிடங்களை

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 203; மொழிபெயர்ப்பு-பக்கம் 199
2 சுக்ரா-I-194
3 அர்த்த சாஸ்திரம்-X-2
4 C. I. I-iii-பக்கம் 59; I. A-viii-79

விளக்குகையில் சுற்றளவை மட்டும் அவர் குறிப்பிடுகிருர். கிழக்கிலிருந்து மேற்கு வரை உள்ள தூரம், வடக்கிலிருந்து தெற்கு வரை உள்ள தூரத்தைக் குறிப்பிட்டு விளக்குதல் என்ற முறையைப் பின்பற்றவில்லையாதலால், எந்தப் பகுதியைக் குறித்து எழுதுகிருர் என மிகச் சரியாக அறிந்துகொள்ளுதல் கடினமாகும். 1000லி சுற்றளவு உள்ள லாம்கான் (Lamghan), கொங்கோடா (Kongoda)வைப் பற்றியும், 10000லி சுற்றளவு உள்ள தக்கா (Takka), காமரூபத்தைப் பற்றியும் குறிப்பிடுகையில் சற்றேறக் குறைய பிரதேசத்தின் அளவை அறிந்துகொள்ள முடிகிறது. தவிர, 2000லி சுற்றளவுள்ள பஞ்சாபிலுள்ள மிகச் சிறிய அரசான சின்னபதி (Chinapati) பற்றிக் குறிப்பிடுகையில் வலிமை மிக்க தக்கா (Takka), ஜலந்தரா(Jalandhara)விற்கு இடையில் அது அமைந்திருந்தது என விளக்குகிருர். கிழக்கிலிருந்து மேற்காக 1000லியும், வடக்கிலிருந்து தெற்காக 800லியும் உள்ள பரப்பளவு கொண்டது எனக் குறிப்பிடுகிருர்; அதே போலவே ஏனைய நாடுகளைப் பற்றியும் விளக்கம் தருகிருர். வலிமை மிக்க நாடுகள் இடையில் அமைந்திருந்த சிறிய நாடுகளை ஒப்புக்கொண்டு இயங்க அனுமதித்தன. அவ்வாறு அனுமதித்ததற்கு இராணுவ ஆற்றல், வலிமை மிக்க துணைநாடுகளின் வரலாற்றுச் சிறப்பு அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட போர் அமைதி, கால ஒழுங்கு முறைகள் காரணமாகும்.

யுவான் சுவாங் தரும் சுற்றளவுகளால் குறிக்கும் இடத்தை அறிந்துகொள்வது மிகவும் கடினம். விஷயா(Vishaya)விலிருந்து தேசம் (Desa) வரையிலுள்ள பல அளவுகளாக இந்தியத் துணைக் கண்டத்தை எழுபது பிரிவுகளாகப் பிரித்து அவற்றை நாடுகள் என யுவான் சுவாங் குறிப்பிடுகிருர் எனக் கருதலாம். அவற்றிற்கு இடைப்பட்ட ஒன்றை புக்தி (Bhukti) எனக் குறிக்கலாம். குப்தர்கள் கால விஷய, புக்தி அளவுகளைப் பற்றி A. S. அல்டேகர் குறிப்பிடுகையில் அவை முறையே தற்கால மாவட்டத்துடனும், ஆணையர் பிரிவுகளுடனும் (Commissioner's Division) ஒப்பிடுகிருர்.[1]

ஹர்ஷரின் பன்ஸ்கேரா செப்பேட்டுக் குறிப்புகளிலிருந்து நான்கு நில அளவுப் பிரிவுகளை ஊகிக்கலாம். அஹிச்சித்ரா(Ahichchhatra-உத்தரப் பிரதேசத்திலுள்ள ராம் நகர்), புக்தியில் உள்ள ஒரு விஷயா(Vishaya)வின் மேற்குப் பதக்கா(Pathaka)வில் அமைந்திருக்கும் ஒரு கிராமத்தைக் கொடை அளித்ததாக அது குறிக்கிறது. மதுபான் செப்பேடு பதக்காவை விடுத்து, கிராம, விஷய, புக்தி ஆகிய மூன்று பிரிவுகளைப் பற்றி மட்டுமே குறித்துள்ளது.

1 N. H. I. P-vi-பக்கம் 283

பதக்கா என்ற பிரிவு குப்தர்கள் காலத்திலும் இருந்ததாகச் சான்றுகள் இல்லை. எட்டாம் நூற்றாண்டு வலபியின் மைத்ரேகர்கள் குறிப்புகளில் பதக்கா பிரிவு காணப்படுகிறது.[1] மத்திய இந்தியாவிலிருந்து கிடைத்த ஆறும் நூற்றாண்டு கோஹ் (Khoh) குறிப்பில் பீதா (Petha) என்ற வடிவில் அது காணப்படுகிறது.[2]

தேசம் (Desa) என்ற பிரிவு ஹர்ஷரின் காலத்தில் இருந்தது என்பதை நிரூபிக்கச் சான்றுகள் இல்லை எனினும், அவ்வாறு பேரரசைப் பிரிக்காமல் எளிதாக மாநில நிருவாகத்தைச் செயல்படுத்தி இருக்க முடியாது. மேலும், குப்தர் காலத்தில் நிலவி வந்தது போலவே தேசங்களாகப் பிரித்து ஹர்ஷரும் நிருவகித்து வந்திருக்க வேண்டும். ஹர்ஷரின் மறைவிற்குப் பிறகு, பிற்காலக் குப்தர்களின் அரசுடன் இணைந்த மகதம் ஹர்ஷர் நிருவகித்து வந்த தேசத்தைப் போன்ற ஒரு பிரிவாகவே இருந்திருக்க வேண்டும். ஹர்ஷரின் கட்டளைக்கு உட்பட்டுச் சிற்றரசராகப் பிற்கால குப்தர் இளவரசர் மாதவ குப்தர் மகதத்தை நிருவகித்து வந்தார்.

குப்தர் காலச் சான்றுகளிலிருந்து தேசங்கள் (Desas) அரசரால் நியமிக்கப்பட்ட ஆளுநர் (Governors)களால் நிருவகிக்கப்பட்டு வந்தன என அறிகிறோம். அவர்களுடைய அதிகாரங்களும், பொறுப்புகளும் மிக அதிகம். மேலும், அரசரின் நம்பிக்கைக்கு உரிய அதிகாரியாக ஆளுநர்கள் இருத்தல் அவசியம். அவர்கள் ராஜஸ்தானியா (Raja-sthaniya) என அழைக்கப்பட்டனர். அதற்கு அரசரின் பிரதிநிதி எனப் பொருள். க்ஷேமேந்திரா (Kshmendra) எழுதிய லோக பிரகாசா (Loka Prakasa) என்ற நூலில் ராஜஸ்தானியர் என்பவர் 'மக்களைப் பாதுகாத்து உறைவிடம் அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்' எனக் கூறுகிறார். மேலும், ராஜஸ்தானியர்கள் 'குமார அமாத்யா' என்ற கௌரவப் பட்டத்தையும் பெற்றிருந்தனர். இவ்வாறு வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்களின் மதிப்பையும், அதன் சிறப்பையும் வரிசைக்கிரமப் படுத்தும் சிரமம் ஒரு புறமிருக்க, ராஜஸ்தானியர்களுக்கு ஹர்ஷரின் குறிப்புகளில் குமார அமாத்யா உபாரிகா (Uparika)க்களுக்கு முன்னும், மகா பரமாதாராக்களுக்குப் பின்னும் இடமளிக்கப்பட்டிருப்பதிலிருந்து இவர்களுடைய சிறப்பை உணரலாம். கௌரவப் பட்டங்களை அதிகாரிகள் தாராளமாகவே பயன்படுத்திக்கொண்டனர். எடுத்துக்காட்டாக, ஓர் உபாரிகா தம்மை ஆற்றல் மிக்கவராக எண்ணிக்கொள்ளும் நிலையில் தம்மை உபாரிகா மகாராஜா (Uparika Maharaja) என்ற பட்டத்துடன் அழைத்துக்கொள்வதைச்

[1] C. I. I-iii-எண் 39
[2] C. I. I-iii-எண் 31

சில ஐந்தாம், ஆரும் நூற்ருண்டு மேற்கு வங்காளக் குறிப்புகளி லிருந்து அறியலாம்.[1] புக்தியின் ஆளுநர் ஒருவர் ஆற்றலும் திறமை மிக்கவருமாயிருந்தால், அவருக்கு ராஜஸ்தானியா என்ற பட்டத்தை வழங்கலாம் என்பதையும் காண முடிகிறது. உயர் அரச குடியைச் சேர்ந்த இளவரசர் ராஜஸ்தானியாவாக இருப்பின், மகா ராஜா புத்ர தேவ பட்டாரக (Maharaja Putra Deva Bhattaraka) எனத் தம்மை அழைத்துக்கொள்ளுதலேயும் காண்கிருேம். மாநில ஆளுநர்களுக்கு உள்நாட்டு நிருவாகத்தில் அதிக உரிமைகள் உண்டு. மாநிலத்தைப் பொறுத்த அளவில் அரசரின் நலனேயும், பக்கத்து நாட்டு நடுநிலே அரசுகளின் உறவையும் பேணிக் கண்காணித்தல் அவருடைய முக்கியப் பொறுப்பு ஆகும். மத்திய அரசின் எல்லா நிரு வாகத் துறைகளேப் போன்றே மாநில அளவிலும் செயல்பட்டு வந்தன.

ஸ்கந்த குப்தரின் (Skanda Gupta) ஜுனகை(Junagadh)க் கல் வெட்டு[2] அவரைப் பற்றி மிகப் புகழ்ந்து கூறினுலும், குப்தர் கால மாநில நிருவாகத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் தருகிறது. குப்தர் கால மாநில நிருவாக முறைகள் பிற்கால அரசர்களுக்கு முன் மாதிரியாக விளங்கின என்பதில் ஐயமில்லே. தகுதியும் மக்களுடைய பெரும்புகழையும் பெற்று விளங்கிய சௌராஷ்டி ரர்வின் ஆளுநர் (சக்ரா-Palita) பழுதடைந்த ஆற்றின் கரையைச் சீரமைக்கும் பணியை மேற்கொண்டு நிறைவேற்றியதாகக் கல் வெட்டு குறிக்கிறது. மேலும், பல்வேறு கடமைகளேயும் சிறந்த முறையில் செய்து வந்ததாகவும் விளக்குகிறது. 'நகர மக்கள் யாருக்கும் அவர் தீங்கிழைக்கவில்லே; ஆனல் கொடியவர்களே விரட் டியடித்தார்; எக்காலத்திலும் மக்களே நம்புவதற்குத் தவறவில்லே: மக்களேத் தம் சொந்தக் குழந்தைகளேப் போலக் காத்து வந்தார்; குற்றங்கள் நிகழ்வதை ஒழித்தார்; சுற்றுப்புற மக்களுக்கு வெகுமதி களும், பட்டங்களும் அளித்து மகிழ்வித்தார்; சிரித்த முகத்துடன் உரையாடினர்; அடிக்கடி சுற்றுப் பயணம் செயதும், அன்புடன் வரவேற்றும் மக்களின் அன்பைப் பெற்றுர்' என இத்தொடர்பு பற்றிய சொற்றெடர்களே A. L. பாஷாம் (A. L. Basham) கூறுகிருர்.[3]

புக்தியும் அதன் ஆளுகதரும்

புக்திகள், உபகாரிகாவின் நிருவாகத்திற்கு உட்பட்டிருந்தன. இந்த உபகாரகாக்கள் ஹர்ஷரால் நியமிக்கப்பட்டவர்கள். அதனல்

[1] E. I-xv-130 ff
[2] C. I. I-iii-எண் 14
[3] A. L. பாஷாம் 'The wonder that was India'-பக்கம் 104

அவர்கள் அரசருக்கு நிருவாகப் பொறுப்புகள் பற்றிப் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள் ஆவர். அவர்களைப் பற்றிய விளக்கங்கள் ஹர்ஷரின் பன்ஸ்கீரா, மதுபான் செப்பேட்டுக் குறிப்புகளில் காணப்படுகின்றன. வேறு குறிப்புகளிலிருந்து புக்திகளின் ஆளுநர்கள் போகிகா (Bhogika), போகபதி (Bhogapati), கோப்தா (Gopta), உபாரிகா மகாராஜா (Uparika Maharaja), ராஜஸ்தானியா (Rajasthaniya) என்ற பட்டங்களையும் வகித்து வந்தனர் எனத் தெரிகிறது.[1] இதில் காணப்படும் சில தொடர்கள் புக்தி ஆளுநர்களின் பொது வருவாய்த்துறைப் பொறுப்புகளையும், கடமைகளையும் குறிக்கிறது எனலாம். குப்தர்கள் காலத்தில் விஷயா (Vishaya) என்று குறிக்கப்பட்ட மாவட்டங்களின் தலைமைப் பொறுப்பு அதிகாரிகளான விஷயபதிகளைப் பெரும்பாலும் புக்தியின் ஆளுநர்களே நியமித்து வந்தனர். மத்திய அரசு பொறுப்புச் சுமைகளிலிருந்து தன்னைச் சற்றுத் தளர்த்திக்கொள்ளவும், புக்தியின் ஆளுநர்கள் தாங்களாகவே பொறுப்புடன் நடந்து கொள்ளவும் இது உதவியது எனலாம். ஆனல், பொறுப்பும் அதிகாரமும் மிக்க வலுவான அரசுடன் அரசர் விளங்கும்போதுதான் இவ் வதிகாரிகளின் நம்பிக்கையும், மன நிறைவு மிக்க பணியும் நிலவும். அரசர் வலுவற்றவராக இருப்பின், இக் கொள்கை விரும்பத் தகாத பல விளைவுகளைத் தோற்றுவிக்கும். குப்தர்கள் கால முறையை ஹர்ஷரும் பின்பற்றினுர் எனலாம். ஆனல், குப்தர்களின் அரசைவிட ஹர்ஷரின் அரசு அளவில் சிறியதாக இருந்ததால், சில சமயங்களில் ஹர்ஷர் தாமே நேரடியாக விஷயபதிகளை நியமித்திருக்கக்கூடும் எனக் கருதலாம். விஷயபதிகள் பெரும்பாலும் மகாராஜா, குமார அமாத்யா அல்லது அயுக்தகா (Ayuktaka)[2] என்ற அரசரால் அளிக்கப்பட்ட அந்தஸ்தைப் பெற்றிருந்தனர். அரசர் இவ்விதக் கௌரவப் பட்டங்களை விஷயபதிகளுக்கு அளித்துக் கௌரவப்படுத்தியது அரசருக்கும், விஷயபதிகளுக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்பட உதவியது என்பதை உணர்த்துகிறது. அதே வேளையில் விஷயபதிகள் தங்களுக்கும் அரசருக்கும் இடைப்பட்ட நியமன அதிகாரம் உடைய புக்தி ஆளுநர்களின் அந்தஸ்தும் சீர் கெடாதவாறு நடந்துகொண்டனர்.

விஷயபதிகளின் பணியகத்திற்கு அதிகாரணு (Adhikarana) எனப் பெயர். அதிகாரணு, மாநிலத்தின் முக்கிய நகரத்தில்

[1] C.I.1-iii-எண் 14; E.I.xv-எண் 7; தாமோதர்ப்பூர் செப்பேடுகள்
[2] புத்த குப்தர் செப்பேடு-E.I-xv-138

(அதிஷ்தானு-Adhishthana)[1] இருந்தது. நாட்டின் நல்ல நிலையையும், அழிவையும் குறிக்கும் நல்ல, தீய அரசாங்கக் குறிப்புகள் இந்த வட்டார (நிலபிடா-Nilapita) அலுவலகங்களில்தான் சேர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். இப் பணியகத்தின் அரசாங்கக் கணக்குப் பொறுப்பாளராக இருந்தவருக்குப் புஸ்தபாலா (Pustapala) எனப் பெயர். அச் சொல்லுக்குக் கணக்குகளை வைத்திருப்பவர் எனப் பொருள். பயிர் செய்யப்பட்ட அல்லது பயிரிடப் படாத நிலத்தின் சரியான அளவுகளும் அங்குக் குறித்து வைக்கப் பட்டிருந்தன. அரசிற்குச் சொந்தமான தரிசு நிலங்களும் குறித்து வைக்கப்பட்டிருந்தன. நிலத்தின் உரிமையை மாற்றிக்கொள்ளும் வேளைகளில் இந்த மாவட்ட அதிகாரிகளைக் கலந்து ஆலோசனை பெறுதல் வேண்டும் என்பதையும் அறிகிறோம்.

அக்ஷபாடலிகா (Akshapatalika) என்பவர்கள் நிலத்தின் உரிமையை மாற்றுவதில் உள்ள சட்ட நுணுக்கங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் ஆவர். அந்தப் பொறுப்புகளைக் கிராம, மாவட்ட அளவில் ஏற்றிருந்த அதிகாரிகளுக்கு அக்ஷபாடலா (Akshapatala) எனப் பெயர். சொல் ஆராய்ச்சிப்படி அதற்குச் 'சட்டத்துடன் தொடர்பு கொண்டது' எனப் பொருள் கொள்ளலாம். அக்ஷதர்ஸகா(Akshadarsaka)வும், பிரத் விவேகா (Prad Vivaka)வும் ஒன்றே எனவும், அவர்கள் சட்ட அதிகாரிகள் எனவும் அமார கோஷா (Amara Kosha) கூறுகிறது. அக்ஷபாடலா என்பவர் கணக்குக் கண்காணிப்பு, தணிக்கை அதிகாரியாக விளங்குகிறார். அக்ஷபாடலாவின் பணிகளும் கடமைகளும் மிக அதிகமானவை எனவும், நுணுக்கமானவை எனவும் குறிப்புகளிலிருந்து தெரிகிறது. நிலம் விற்றல் வாங்கல் விவரங்களுக்கும் அவர்கள் பொறுப்பாளர்கள் என்பதை வெளிப்படையாக அறிய முடிகிறது. சில வேளைகளில் அவர்களுடைய கடமைகளும், பொறுப்புகளும் குறிப்பிட்ட ஒரு துறைக்காகவும் ஒதுக்கப் படலாம். இருப்பினும், அக்ஷதர்ஸகாவின் பொறுப்பின் தன்மை அவர்களைப் பல்வேறு துறைகளில் பிணைத்திருக்கக் கூடியது எனலாம். சமுத்திர குப்தரின் குறிப்பு எனக் கூறப்படும் கயா (Gaya) குறிப்பு, நில உரிமைப் பத்திரங்கள் அக்ஷபதல் அதிகிரிதா (Akshapatal Adhikrita)[2] வின் ஆணையின்படி எழுதப்பட்டன எனக் கூறுகிறது. அதே போலவே ஹர்ஷரின் பன்ஸ்கீராச் செப்பேட்டுக் குறிப்பும் மகாக்ஷ பதல் அதிகாரன் அதிகிரிதா பானு[3] (Mahaksha Patal Adhikaran Adhikrita Bhanu)வின் கட்டளைப்படி பதிக்கப்

[1] தாமோதர்ப்பூர் செப்பேடு-E.I-xv-130 ff; xvii-193 ff
[2] C. I. I-iii-எண் 60-பக்கம் 257
[3] E.I-IV-211

பட்டது எனக் கூறுகிறது. பல மாநில, மாவட்ட அக்ஷபதலிகாக்களும் (Akshapatalikas) கிராமத்திலிருந்து கிராம அக்ஷபதலிகாக் (Grama Akshapataliga)களும் பத்திரங்களைப் பாதுகாத்து வைத்து, மத்திய அரசுத் தொடர்பு அதிகாரிகளாக விளங்கினர்.

குப்தர் காலத்தில் பல செப்பேட்டுக் குறிப்புகள், மாவட்ட நிருவாகம் பிரதிநிதித்துவத் தன்மை உடையது என்பதைத் தெளிவாக விளக்குகின்றன.[1] அது போன்ற நிலைமை ஹர்ஷர் காலத்திலும் இருந்ததாகக் கருதலாம். மாவட்ட அதிகாரிகள் அதிஷ்தான்-அதிகாரண (Adhishthan-Adhikarana) என்ற நகரவை மன்றத்தின் (Municipal Board), அல்லது விஷய்-அதிகாரண (Vishay-Adhikarana) என்ற மாவட்ட அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் பணியாற்றினர் என்பதை அறிகிறோம். நகரவை மன்றங்கள் புகழ்மிக்க தன்மையுடன் விளங்கின. விஷய மகாதாராக்கள் (Vishaya Mahattaras) என்று அழைக்கப்பட்ட இருபது உறுப்பினர்கள் அதில் இருந்தனர்.[2] அவர்களில் மிகச் சிறப்பானவர்கள் புரோகா (Puroga) என அழைக்கப்பட்டனர் தலைமை வங்கியாளர் (Chief Banker-நகரஸ்ரேஷ்தின்-Nagarasreshthin), தலைமை வணிகர் (Chief Trader-சார்தா வஹா-Sartha Vaha), தலைமைக் கலை வல்லுநர் (Chief Artisan-பிரதம குலிகா-Pratham kulika), தலைமை எழுத்தர் (Chief Scribe-பிரதம காயஸ்தா-Prathama Kayastha) என்பவர்கள், புரோகா என அழைக்கப்பட்டவர்களில் சிலர் ஆவர். கடைசி இரண்டும் பிரதம அல்லது முதல் என்ற தொழிற்சிறப்புடன் அழைக்கப்படுவதிலிருந்து அவை குறிப்பிட்ட துறையின் நலனுக்காகப் பாடுபடும் தலைவர்களைக் குறிப்பதற்காக இருத்தல் வேண்டும் எனலாம். மன்றத்தில் அங்கம் வகித்தவர்களின் தொழிலை நோக்குகையில் நகர வாழ்வு நலன்களுக்கு நாட்டுப்புற நலன்களைவிட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை ஊகிக்க முடியும் மன்றத்தின் மற்ற அங்கத்தினர்களின் பிரதிநிதித்துவம் மாவட்ட வாழ்க்கையின் மற்ற இயல்புகளைக் குறிப்பதாக அமைந்திருப்பினும், அவர்கள் குறிப்பிட்ட ஒரு துறையுடன் தொடர்பு கொண்டு அதன்

[1] E.I-XV-*113* ff; XVII-*193* ff தாமோதர்ப்பூர் செப்பேடுகள்; I.A-xxxix-*195* ff பரீத்பூர் செப்பேடு-iii

[2] சங்கரா காணக் குறிப்புகள் அவர்களை ராஷ்டிர மகாதாராக்கள் (Rashtra Mahattaras) எனக் கூறுகிறது. S. பீல் மொழிபெயர்த்துள்ள 'யுவான் சுவாங் வாழ்க்கை' (The life of Hiuen-tsing) என்ற புத்தகத்தில், மகாதாராக்கள யுவான் சுவாங் சீனவிற்குத் திரும்பும் பயணத்தின் வழிக் காவல் அதிகாரிகளாக விளங்கினர் என்று கூறுகிறார். யுவான் சுவாங்கிற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருமாறு பயண வழியில் அமைந்திருந்த அரசர்களுக்குக் கட்டளைகளை எழுதி வழிக்காவல் அதிகாரிகளிடம் கொடுத்திருந்ததை முன்பே நாம் கண்டோம். அவ் வசதிகள் சீயப்பயணி சீன எல்லையை அடையும் வரைத் தடையின்றிக் கிடைத்ததாகப் பீல் குறிப்பிடுகிறார்.

நலனுக்காகப் பாடுபடும் ஒருவராக இருந்தார்கள் எனக் காண முடியவில்லை.

மாவட்ட நீதிமன்றங்கள்:

ஒவ்வொரு மாவட்டமும் தனக்கென நீதிமன்றங்களைக் கொண்டிருந்தன. நாளந்தா, வைசாலி ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட நியாய அதிகாரண (Nyay Adhikarana) தர்ம் அதிகாரண (Dharm Adhikarana), தர்ம சாசன அதிகாரண Dharma Sasana Adhikarana)என்ற நீதிமன்றங்களின் முத்திரைகள். அவ் விடங்களில் செயல்பட்டு வந்த நீதிமன்றங்கள் பயன்படுத்தி வந்தவை என்பதில் ஐயமில்லை.[1] இவற்றைத் தவிர, வேறு வகையான நீதிமன்றங்களும் இயங்கி வந்தன என்பதையும் காண முடிகிறது. குறிப்பிட்ட ஒரு துறை நலனுக்காகப் பாடுபடுதல் என்ற முறை நன்கு வளர்ச்சி அடைந்திருந்ததால் வணிகர்கள், தனி நீதியன்றங்களை ஏற்படுத்தித் தங்களுக்குள் எழும் வழக்குகளைத் தீர்த்துக்கொண்டனர். ஒரே தொழிலில் ஈடுபட்டிருக்கும் வகுப்பினர்களுக்கு அவர்களுடைய தொழில் நீதிப்படி வழக்குகளை விசாரித்து முடிவு செய்துகொள்ள விட்டு விடும்படி அரசருக்குப் பிரஹஸ்பதி அறிவுரை வழங்குகிறார். விவசாயிகள், கலை வல்லுநர்கள், வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள், நடனமாடுபவர்கள், சில குறிப்பிட்ட மதத்துறையைச் சார்ந்தவர்கள் அவர்களுக்கெனத் தனி நீதிமன்றங்களைக்கொண்டிருந்த வகுப்பினர்கள் ஆவர். தொழில் வழி உற்றார் கூட்டம் (Kindered Companies-எடுத்துக்காட்டாக வணிகர் குழுவும், அவர்களைச் சூழ வாழ்பவர்களின் கூட்டமும்) நீதிபதிகளுடன் கூடிய, தண்டனை அளித்து நீதி வழங்கும் பிரிவுகள் என பிரஹஸ்பதி கூறுகிறார். மேலும், அந்த நீதி அவற்றின் அதிகாரங்களை வரிசைப்படுத்தும் சமயம் முதல் இடம் நீதிபதிக்கும், இரண்டாவது இடத்தைச் சூழ வாழ்பவர்களுடைய அவைக்கும், இறுதியிடத்தைத் தொழில் வழி உற்றார் கூட்டத்திற்கும் அளிக்கிறார். உயர் மன்றங்களில் முறையீடு (Appeal) செய்துகொள்ளும் உரிமை இருந்து வந்தது. மேலும், தொழில்வழி உற்றார் கூட்டத்தையும், சூழ வாழ்பவர்களுடைய அவையையும் விட நீதிபதி அதிகாரம் மிக்கவர். தலைமை நீதிபதி, நீதிபதியைவிட அதிகாரம் உடையவர். அரசர் எல்லோரையும்விட உயர் நீதியளிக்கும் இடம் வகிப்பவர் எனப் பிரஹஸ்பதி கூறுகிறார்.

கிராமம்

திருவாகத்தின் மிகச் சிறிய பகுதி கிராமம் (Grama) ஆகும். இன்று காணப்படும் கிராமங்களைப் போலவே அவை மாறுபட்ட

[1] M.A.S.I-எண் 66, 52-3; A.S.I.A.R-1913-14-பக்கம் 128; E.I-xi-10L

அளவுள்ளனவாக இருந்தன. சுமார் பன்னிரண்டு பெரிய குடும்பங்களின் கூட்டு அமைப்பையும், அது போன்ற பன்னிரண்டு கூட்டு அமைப்புகளைக்கொண்ட ஒரு கூட்டுப் பகுதியையும் கிராமம் எனக் குறிக்கலாம். அங்கு அமைந்திருக்கும் வீடு, வீதி, அங்காடி, மயானம், கோவில், கிணறு, குளம், தரிசு நிலம் காடு, விவசாயத்துக்கு உட்பட்ட நிலம் முதலியவை கிராம நிருவாகப் பிரிவுகள் ஆட்சிக்கு உட்பட்ட இடங்கள் ஆகும். குப்தர் காலத்திய பல அகழ்வு ஆராய்ச்சிக் குறிப்புகள் இதைத் தெளிவாக்குகின்றன சிமகாராக்கள் (Sima-karas) என்பவர்களால் நிலம் அளக்கப் பட்டது. கிராமத்தின் எல்லைகளைச் சுவர் எழுப்பியும், பள்ளங்களைத் தோண்டியும் குறித்தனர். மாற்றூர் அல்லது பகைவர் தாக்குதலிலிருந்து காப்பதற்கும் அவை உதவின.[1] வேளாண்மை மக்களின் சிறப்பான தொழில் ஆகும். கால்நடைப் பராமரிப்பு, நெசவு, மண்பாண்டத்தொழில், தச்சு, உலோகத் தொடர்புத் தொழில் போன்றவையும் நிலவின கிராமச் சுற்றுப்புறங்களில் கிடைக்கும் இயற்கை மூலப் பொருள்களும், மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளித்து வாழ வழி வகுத்தன.

கிராமத் தலையாரி கிராமியகா (Grameyaka) அல்லது கிராம அத்யக்ஷ என அழைக்கப்பட்டார். கிராமத்தின் நிருவாகப் பொறுப்பு அதிகாரியாகக் கிராமத் தலையாரி விளங்கினர். அவர் எவ்விதம் யாரால் நியமிக்கப்பட்டார் என்பது பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை எனினும், தலைமுறை வழிப்படி மேற்கொள்ளப் படும் பொறுப்பாக இருக்கக் கூடும் எனப் பெனி பிரசாத் (Beni Prasad) கருதுகிறார்.[2] கிராம மக்களின் பொதுவான கருத்தும், அரசாங்க ஒப்புதலும் கூட்டாகக் கிராமத் தலையாரி நியமனத்திற்கு வழிமுறைகளாக விளங்கி இருக்க வேண்டும். பெனி பிரசாதின் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே உள்ளது. தலையாரிக்கு நிருவாகத்தில் உதவுவதற்குப் பல சிறிய அதிகாரிகள் இருந்தனர். ஹர்ஷ சரித்திரம் அவர்களில் இரண்டு வகை அதிகாரிகளைப் பற்றிக் கூறுகிறது.[3] ஹர்ஷர் பயண வழியில், முதலாவது தங்கிய இருக்கையில், கிராம் அக்ஷ பாடலிகா (Gram Aksha-pa'alika) என்ற அதிகாரி, காரணி (Karani) என்ற எழுத்தர், மற்றும் துணை அதிகாரி களுடன் அரசரைக் கண்டு அவர் கைப்பட முத்திரை பெற்றுச் செல்ல அணுகினர். நல்ல வேலையாக அது போன்ற ஒரு செப்பு முத்திரை சோனபட் (Sonapat) என்ற இடத்தில் கண்டெடுக்கப்

[1] E. I. xix-*130*
[2] பழங்கால இந்திய அரசு (The State in Ancient India)-பக்கம் 297
[3] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 203; மொழிபெயர்ப்பு-பக்கம்-198

பட்டது.[1] வழக்கமாகக் குறிக்கப்படும் பத்திர வாசகங்களும் அதில் காணப்படுகின்றன. ஹர்ஷ சரித்திரத்திலும் மகாதாராக் (Mahattaras)கள்[2] பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. குப்தர் காலக் குறிப்புகள் மகாதாராக்களைக் கிராம முதுவர்கள் என விளக்குகின்றன. அவர்கள் கிராமத் தலையாரிக்கு நிருவாகப் பொறுப்புகளில் உதவ அமைக்கப்பட்ட அதிகாரப் பூர்வமற்ற குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

வடக்கு வங்காளத்தில் கிடைத்த குப்தர் காலக் குறிப்புகள் கிராமியகா (Grameyaka-தலையாரி), குடும்பின்(Kudumbin)கள் ஏனையோர் துணையுடன் அஷ்டகுல அதிகாரண (Astakula Adhikarana) செயல் படுவதாகக் குறிப்பிட்டுள்ளன. அதில் கிராம மகாதாராக்களும் (Grama Mahattaras) சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். நாட்டின் சுற்றுப்புறப் பகுதிகளில் இயங்கி வந்த இந்தக் கிராம மன்றங்கள், விஷயாவில் இயங்கி வந்த விஷய அதிஷ்தான அதிகாரண (Vishaya Adhishthana Adhikarana) அல்லது மாநில மன்றங்கள் என்ற பிரிவிற்கு இணையானவை ஆம். மத்திய இந்தியாவில் தலையாரிக்கு உதவ அமைக்கப்பட்ட அதிகாரப் பூர்வமற்ற குழு குப்தர் காலத்தில் பஞ்ச மண்டலி (Parchamandali) எனவும், பீகாரில் கிராம ஜனபதா (Grama Janapada) எனவும் அழைக்கப்பட்டது. குப்தர்களின் காலத்தில் அரசாங்கப் பத்திரங்களில் முத்திரையிடப் பயன்பட்ட பல கிராம ஜனபதா (Grama Janapada) முத்திரைகள் நாளந்தாவில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.[3] வயது, திறமை, குணநலன், செல்வம் இவற்றின் அடிப்படையில் மக்களின் பொதுவான விருப்பம் அறிந்து கிராம முதுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வீடு, வீதி, அங்காடி, கோவில், கிணறு, குளம், மயானம், கால் நடை, புல்வெளி, காடு, விளைநிலம், தரிசு முதலியவற்றுடன் தொடர்புள்ளவற்றைக் கிராம அரசாங்கங்கள் நிருவகித்து வந்தன. நாட்டியல் (Civil) வழக்குகளையும் கிராம முதுவர்கள் துணையுடன் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் சிறப்பான பஞ்சாயத்து நீதி மன்றங்களும் இயங்கி வந்தன. உயர்நீதி மன்றங்களுக்கு வழக்குகளை முறையீடு (Appeal செய்துகொள்ளும் உரிமையையும் பஞ்சாயத்து நீதிமன்றங்கள் அனுமதித்தன.

வனக் குடியிருப்பு நிருவாகம்

பாணர் நாகரிகமிக்க கிராமங்களைப் பற்றி மட்டுமன்றி, நாகரிகத்தின் பயன்களை அதிகமாகப் பெறாத, வெகு தூரத்தில்

[1] C. I. I-iii எண்-52

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 212; மொழிபெயர்ப்பு-பக்கம் 208

[3] M. A. S. I-எண் 66, 45-9

வசித்து வந்த வனக்குடியிருப்புச் சமூகத்தைப் பற்றி விரிவான விளக்கங்களைத் தருகின்றார். விந்திய மலைப்பகுதியில் வாழ்ந்து வந்த சபாராக் (Sabara) குடியிருப்பு ஒன்றைப்பற்றி ஹர்ஷ சரித்திரத்தில் பாணர் விளக்குகிறார்.[1] வேட்டையாடுதலும், வேளாண்மையும் அங்கு வாழ்ந்த மக்களுடைய அடிப்படைத் தொழில்கள் ஆம். இயற்கையாக வளர்ந்து செழித்திருந்த செடிகொடிகளும், வன விலங்குகளும், வேளாண்மைச் செல்வங்களும் கிராமத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்த மக்களுக்குப் பலவகைப் பட்ட தொழில் வாய்ப்புகளை அளித்தன. மர உற்பத்தி விந்திய மலைவாழ் மக்களின் சிறப்பான தொழில்களில் ஒன்றாகும். வனப் பகுதிகளிலிருந்து மரங்கள் சேகரிக்கப்பட்டு நகரங்களில் விற்கப் பட்டன. முரட்டுத் துணிகள், நெய்யப் பயன்படும் பொருள்கள், பாய் முடையும் பொருள்கள், மெழுகு, தேன், லமாஜ்ஜகா (Lamajjaka) என்ற தட்டை, மயில் இறகு, இன்னும் பலவகை இயற்கையான, பயிர் செய்யப்பட்ட பொருள்களும் வருவாய் ஈட்டித் தந்தன. அசோகா (Asoka), கேசரா (Kesara), மா, பாக்கு போன்ற பலவகை மலர், பழ மரங்களும், தரமான மரமாகப் பயன்படும் தியோதரும் (Deodar) வனப்பகுதிகளில் மிகுதியாக வளர்ந்தன. வன விலங்குகளை வேட்டையாடுதலைப் போலவே, பறவைகளைப் பிடித்தலும் சிறப்பாகக் காணப்பட்டது. பறவை களைப் பிடிப்பதற்குப் பொறிகளும், சுருக்குக்கயிறுகளும் பயன் படுத்தப்பட்டன. சஸ்திகா[2] (Shastika-அறுபது நாள்களில் விளைந்து விடுவதே அதற்கு அப்பெயர் வரக் காரணம்), நலா (Nala) என்ற இரு அரிசி வகைகள் அங்குச் சாகுபடி செய்யப் பட்டன. இன்று போலவே சீமுல் என்ற மர மொட்டுக்களிலிருந்து பருத்தி எடுக்கப்பட்டது. கரும்பு சாகுபடி அதிகமாகக் காணப் பட்டது. கலை வல்லுநர் தொழில்கள் பற்றிய குறிப்பில் கருமானைப் பற்றிக் கூறப்படுகிறது.

அடர்ந்து வளர்ந்த வனப்பகுதியும், நிலத்தின் கடினத் தன்மையும் சேர்ந்து வேளாண்மைத் தொழிலை ஓர் உழைப்பு மிகுந்த தொழிலாக மாற்றின. சிறிய நிலப்பகுதியைப் பண்படுத்த விவசாயிகள் மண் அகழும் கருவிகளைக் கொண்டு அதிக நேரம் உழைத்தனர்; சாகுபடி செய்யப்பட்ட நிலத்தை எருதுகளைக் கொண்டு ஆழ உழுதும், உரம் இட்டும் நிலத்தின் வளத்தைக் காத் தனர்.

வனத்தைச் சுற்றி வரும் பகுதிகளின் வழியில் பயணிகளுக்குத் தேவையான (இளைப்பாறிப் புத்துணர்ச்சி பெறும்) வசதிகளை

1 ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 227-30; மொழிபெயர்ப்பு-பக்கம் 225-9
2 பாணினி (Banini)-பக்கம் 5. 1. 90

அமைப்பது சாதாரணமாகக் காணப்பட்டது. வனப்பகுதியில் நுழையும் எல்லா வழிகளிலும் குடிநீர்ப் பந்தல்கள் அமைக்கப் பட்டிருந்தன. அவை களைப்படைந்த பயணிகளுக்குத் தூய, குளிர்ந்த நீரை அல்லது இனிப்புப் பானங்களை வழங்கின. மக்களின் உழைப்பின்றிக் காய்க்கும் பருவ காலப் பழ மரங்கள் ஆரோக்கியமான பழ வகைகளை மிக அதிகமாகப் பயணிகளுக்கு அளித்தன.

வனக் கிராம மக்களின் வாழ்வு கடின உழைப்பு மிக்க, தன்னிறைவு பெற்ற கட்டுப்பாடு மிக்கது என விளக்கப்படுகிறது. அவர்களுடைய வீடுகள் விசாலமானவை. மூங்கில் லமாஜ்ஜகா (Lamajjaka) தட்டைகளினால் ஆக்கப்பட்ட வீட்டுச் சுவர்கள் வண்ணக் கலவைகளினாலும், பூக்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன. பழச் சோலைகளும், தோட்டங்களும் அதிகமாகக் காணப்பட்டன. அவை சுற்றுப்புறத்தை அழகுபடுத்தவும், பழம் தந்து பயன் மிக்கவையாகவும் விளங்கின. கனிகள், காய்கறிகள், கிழங்குகள், உணவிற்குப் பயன்படும் விதைகள், தானியங்கள், பருத்தி முதலியவை மிக அதிக அளவில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. உணவிற்காகப் பயன்பட்டவற்றைத் தவிர, மீதியை விற்றும், பண்ட மாற்றும் செய்துகொண்டனர். திராட்சை மதுவைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. செல்லமாக வளர்க்கப்படும் விலங்குகள், பறவைகளைப் பற்றியும் குறிப்பு காணப்படுகிறது. வீட்டுக்குப் பயன் மிக்க மாடு, கோழிகளைப் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

திருடர் பயமும், காட்டு விலங்குகளும் வன கிராம வாழ்க்கைக்கு ஊறு விளைவிப்பவை ஆம். சாரம் போன்ற அமைப்புகளைக் கட்டியும், வேலிகளை அமைத்தும், கூர்மை மிக்கக் கழிகளை நட்டும் விலங்குகளை நெருங்க விடாமல் தடுத்தனர். வனப்பகுதிகளில் ஒளிந்திருக்கும் திருடர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மரம் வெட்டச் செல்பவர்கள் நல்ல உடைகளை அணியாமல் வேண்டுமென்றே கந்தல் உடைகளை அணிந்து வேலை செய்யச் சென்றனர்.[1]

வனத்துறை சுற்றுப்புறக் குடியிருப்புகளுடன் தொடர்பு கொண்ட சில அதிகாரிகளைப் பற்றிப் பாணர் சில குறிப்புகளைத் தருகிறார். வனபாலா (Vanapala) என்ற அதிகாரி காட்டுப் பகுதிகளில் அனுமதியின்றி மரம் வெட்டும் திருடர்களைத் தடுத்துக் காவல் புரிந்து வந்தார்.[2] சர்வ பள்ளி பதி (Sarva-palli-pati)

[1] Harsha-D. தேவஹூட்டி-பக்கம் 201
[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 227; மொழிபெயர்ப்பு-பக்கம் 226

என்ற கிராமங்களின் தலைவரைப்பற்றிக் குறிப்புக் காணப் படுகிறது. ஆனால் அவருடைய கடமை, பொறுப்புகள் பற்றிய விளக்கம் இல்லை. சபாராக்கள், சேனாதிபதியினால் நடத்தப்படும் ஒருவகைப் படையைக் கொண்டிருந்தார்கள் எனத் தெரிகிறது.

அக் காலத்தில் நிலவிய அரசு முறையில் வருவாயின் கணிச மான தொகை, விவசாயத்திலிருந்தும் நிலவரியிலிருந்தும் கிடைத்த வருவாயாக அரசாங்கத்தின் கருவூலத்தை நிரப்பினாலும் நிலத்தின் முக்கியத்துவத்தை மட்டும் மிகைப்படுத்திக் கூறிவிட முடியாது. விவசாய வளர்ச்சியில் மட்டுமன்றிக் கால்நடைப் பராமரிப்பிலும் மக்கள் மிகக் கவனம் செலுத்தினர். வேத, பௌத்த, சமண, பழைய தமிழ் இலக்கியங்களில் காணும் குறிப்பு களைத் தவிர, அக்னி புராண(Agni Purana)மும், விஷ்ணு தர்மோத் தர மகாபுராண(Vishnu Dharmottara Mahapurana)மும் முறையாக ஒதுக்கப்பட்ட அத்தியாயங்களில் இத் துறைகளைப் பற்றி விளக்குகின்றன. சராக்கா (Charaka), சஸ்ருதாஸம்ஹிதாக் கள் (Susruta Samhitas), மேலும் வராக மிஹிரா(Varaha Mihira) வின் பிரஹத் ஸம்ஹிரிதா(Brihat Samhirita)வும், பிரசாரா (Parasara)வின் கிரிஷி ஸம்ஹிரிதா(Krishi Samhirita)வும் வேளாண் மை அறிவினையும், கால்நடை பராமரிப்பையும் பற்றி முறைப்படி விளக்குகின்றன. வேறு துறைகளின் சிறப்பைப் பற்றி எழுதப்பட்ட குறிப்புகளும் இந்திய வரலாற்றில் காணப் படுகின்றன. அர்த்த சாஸ்திரத்தின் இரண்டாவது நூல் பகுதியில் விவசாயத்தைப் பற்றி மட்டுமன்றி வனத்துறையின் சிறப்பைப் பற்றியும் கூறுகிறது. மேலும், கண்காணிப்பு அதிகாரிகளை நிய மித்து, வனத்துறை இயங்குவதை அரசு மேற்பார்த்தும், அங்கிருந்து கிடைக்கும் வரி வருவாய்த் துறையை நிருவகித்தும் வந்தது எனக் கூறுகிறது. அர்த்த சாஸ்திரத்தில் குறிக்கப்படும் இவை பொதுவாக ஹர்ஷர் கால நடைமுறைகளையும் விளக்கும் எனக் கருதலாம். ஏனெனில், அதில் கூறப்பட்ட கொள்கைகளும் விளக்கங்களும் பிற் காலத்திற்கும் பொதுவானவையாகவே காணப்பட்டன. அவற் றில் கூறப்படும் பல விளக்கங்கள் ஹர்ஷரின் காலத்திற்குப் பின்பும் நிலவின என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

வேளாண்மைக் கண்காணிப்பு அதிகாரிகள் (Superintendents of Agriculture) அல்லது அவருக்கு அறிவுரை கூறுபவர்கள், நிலத்தின் தன்மை, வளம், பலவகைப்பட்ட விதைகள், அதன் பயன் ஆகியவற்றைப் பற்றிய தேர்ந்த அறிவுடையவர்களாக இருத்தல் மிகவும் அவசியம். கோள்களின் தன்மையும், அவை செல்லும் இடத்தையும் ஆய்ந்தும், சூரியன் காணப்படும் தன்மை

யைக்கொண்டு கணித்தும் மழை பொழிவதைக் கூறும் திறமை வாய்ந்தவர்களாகவும் அவர்கள் விளங்கினர். விதை முளைப்பதற்கான வெற்றிகரமான அறிகுறிகளைச் சூரியனும், கதிர் பிடிக்கும் சூழ்நிலைகளை வியாழனும் (Jupiter), மழை பொழிவதற்கான அறிகுறிகளைச் சுக்கிரனும் (Venus) குறித்தன. மழை பொழியும் மேகங்களும் மூன்று வகைப்படுத்தப்பட்டன. முதல் வகை தொடர்ந்து ஏழு நாள்களுக்கு மழை பொழியும். எண்பது என்ற இரண்டாவது வகை சுமாரான மழை பொழியும். அறுபது என்ற மூன்றாவது சூரிய ஒளியும், மழையும் மாறி மாறித் தொடர்ந்த ஒரு பருவ நிலையை உண்டாக்கும்.

மழையளவு மிகச் சரியாக அளந்து குறிக்கப்பட்டது. அஸ்மகா (Asmaka-பஞ்சாப்), அவந்தி (Avanti-மேற்கு மத்திய பிரதேசம்) பற்றிய மிகச் சரியான பருவநிலைக் குறிப்புகளும், மற்றப் பகுதிகளின் ஈரமான, ஈரமற்ற நிலைகளைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. அவ்வாறு குறிக்கப்பட்டிருக்கும் மழையின் அளவுகளும், பிரதேசத்தைப் பற்றிய பருவநிலைக் குறிப்புகளும் இன்றைய மழை அளவு, பருவநிலை விவரங்களை ஒத்ததாகவே இருக்கின்றன. மழை பொழியும் காலம்,[1] நிலத்தின் அமைப்பு, அளவு, அதன் இருப்பிடம், ஆற்று நீர்வளம், கடல் அமைப்பு, மலை அமைப்பு, ஈரத்தன்மை முதலியவற்றைப் பொருத்து விதை விதைப்பது வழக்கம். போதிய அளவு மழை நீர் வசதிகளை இயற்கையாகப் பெறாத பகுதிகளுக்குச் செயற்கை நீர்த் தேக்கங்களிலிருந்து அமைக்கப்பட்ட கால்வாய்கள் நீரைக் கொண்டு செல்ல உதவின. நிலத்தின் வளம் இடையறாது பேணப்பட்டது. புதிதாக முளைவிட்டுக் கிளம்பிய பயிர்களுக்கு உரமாகச் சிறு மீன்களும், ஸ்னுகி (Snuhi-Euphorbia-Antiquorum) செடியின் சாறும் உரமாக அளிக்கப்பட்டன. விந்திய வனப் பகுதிகளின் உர வண்டிகளைப் பற்றிய ஒரு விளக்கம் பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகிறது.[2] உரமிட்டுப் பயிர் வளர்ப்பதும், வளத்தைக் காத்தலும் சாதாரணமாகப் பின்பற்றப்பட்ட வழக்கம் என்பதை இதனால் அறியலாம்.

விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி அரசருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. வரி விலக்கு அளித்தும், கால்நடைகள், விதை, பணம் முதலியவற்றைக் கொடுத்தும் உதவுதல் வழக்கம். அவ்வாறு

[1] அர்த்த சாஸ்திரம்-ii-பக்கம் 24: G. D. A. M. I.-பக்கங்கள் 10, 12, 13

[2] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 229; மொழிபெயர்ப்பு-பக்கம் 228

செய்வது உற்பத்திக்கு ஊக்கமளித்து, அரசாங்கத்தின் கருவூலம் நிரம்ப வழி வகுக்கும் கூட்டுறவு ஆக்கப்பணிகள் ஊக்கமளிக்கப் பட்டன. நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டன. கால்நடை பராமரிப்புக்கு வசதிகள் செய்து தரப்பட்டன. பயிர்களுக்கும் கால் நடைகளுக்கும் தோன்றும் நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டன. கொடிய மிருகங்களிடமிருந்தும், திருடர்களிடமிருந்தும் பாது காப்பு அளிக்கப்பட்டது. அதிகாரிகள் விவசாயிகளைத் துன்புறுத் தாதபடி கண்காணிக்கப்பட்டது.

வழிபாடுகளும், வழிபாடுகளைக் குறிக்கும் செயல்களும், மன்னரின் பணியையும், மக்களுடைய விருப்பத்தையும் நிறைவு செய்ய உதவின. பிரஜா பதிக்ஷ்யப்பா (Praja-pati-kshyapa)என்ற கடவுளை மக்கள் வணங்குதல் காண்கிறோம். பயிரின் விதைகளில் செல்வத்தின் தேவதை உறைந்து விவசாயம் தழைக்க உதவும்.[1] கைப்பிடி அளவு விதையை எடுத்துச் சிறிதளவு தங்கம் போடப் பட்டிருக்கும் நீரில் முக்கி நிலத்தில் தூவும் வழக்கம் நிலவியது.

நிலமே செல்வம். சொந்தமான நிலத்திலிருந்து கிடைக்கும் முழு வருமானத்தையும் அரசர் தர்மப் பணிகளுக்குச் செலவிட லாம்; அல்லது வெகுமதியாகவும் அளிக்கலாம். நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானமே அரசின் முக்கிய வருவாய் ஆகும் யுவான் சுவாங் குறிப்புகளின்படி நில வருவாயில் ஆறில் ஒரு பங்கு அரசாங்கத்தின் பங்கு ஆகும்.[2] அப்பங்கிற்குப் பாககாரா அல்லது உத்ரங்கா (Udranga) எனப் பெயர். ஹர்ஷரின் செப்பேட்டுக் குறிப்புகள் இவ்விரண்டு பெயர்களையும் குறிக்கின்றன.[3]

நில வரியை நிர்ணயம் செய்ய நிலத்தை 'உழவு' என்ற அளவினால் அளப்பது நெடுங்காலமாக நிலவி வந்த முறையாகும். குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள எருதுகள், எவ்வளவு நிலத்தை உழுமோ அந்த அளவே உழவு ஆகும். அந்த அளவு அடிப்படையில் நிலவரி நிர்ணயிக்கப்பட்டது. செப்பேட்டுக் குறிப்புகள் சில சமயம் கிராமத்தின் பெயர்களைக் குறிப்பிடுகையில் அதனுடன் எண்களையும் சிறப்பாகச் சேர்த்துக் குறிக்கின்றன எடுத்துக்காட் டாக, சாக்கம் பராசபாத-லட்சம் (Sakam-bharasapada-laksha) எனக் குறிக்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் லட்சம் அக் கிராமத்தின் 'உழவை'யும், அதிலிருந்து வரியாகக் கிடைக்கும் வெள்ளிப் பண[4] வருவாய்த் தொகையையும் குறிக்கும். பாணர்

[1] அர்த்த சாஸ்திரம்-ii-பக்கம் 24
[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 176
[3] E. I-i-73; iv-211
[4] V. S. அகர்வாலா-138, 219

கிராம அளவுகளைச் சிராக்கள் (Siras)[1] எனக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து நில அளவில் சிரா என்ற அளவு முறையும், மற்றவற்றுடன் வழக்கத்தில் இருந்தது என அறியலாம். ஹர்ஷர் காலத்தில் சிரா எனக் குறிக்கப்படுவது, குப்தர் காலத்தில் குல்யா வாப (Kulya Vapa) எனக் குறிக்கப்பட்ட அளவிற்கு இணையானதாகும். சங்கரா(Sankara)வின் ஹர்ஷ சரித்திர விளக்க உரை, சிரா என்பது 'ஹலா' (Hala) அல்லது 'உழவு' (Plough) என்றே குறிக்கிறது. ஹலா என்பது மூன்றும் நூற்றாண்டில் ஆந்திராவில் நிலவிய நில அளவாக இருந்தது எனக் கருதப்படுகிறது. மனு விளக்க உரை ஆசிரியர்கள், பன்னிரண்டு எருதுகள் சாதாரணமாக எவ்வளவு நிலத்தை உழுமோ அந்த அளவே குலா (Kula) எனக் குறிக்கின்றனர். ஒரு குடும்பத்திற்குப் போதுமான நிலம் என அதைக் குறிக்கலாம். பாணரின் குறிப்புகள் சராசரியாக ஒரு கிராமம் ஆயிரம் 'உழவு'களைக் கொண்டது எனக் கூறுகின்றன. அந்த அளவை சுக்ரநீதி சாரா, ஒரு சதுர பிரஜா பாத்யா குரோசா (Praja-patya-krosa) 6,250000 சதுர கெஜம் அல்லது ஏறக்குறைய 1333 ஏக்கர் எனக் குறிக்கிறது.[2]

நிலவரி 'உழவு' அளவின் அடிப்படையிலேயே வசூல் செய்யப்பட்டது. $1\frac{1}{3}$ ஏக்கருக்கு ஒரு மாதத்திற்கு ஒரு வெள்ளி கர்ஷ பணம் (Karsha Pana) வரியாகச் செலுத்தப்பட்டது.[3] ஹர்ஷர் முதல் படையெடுப்பை மேற்கொண்ட சமயத்தில் வழிபாடு நிகழ்த்தி ஆயிரம் உழவுகள் கொண்ட நூறு கிராமங்களைக் கொடையளித்த நிகழ்ச்சியை நாம் முன்பு கண்டோம். அவை ஒவ்வொன்றும் மாதம் '1000' வெள்ளிப் பண வருவாய் தரும் கிராமங்கள் ஆம். ஹர்ஷர் கால அரசின் வருவாய், செலவு பற்றிய கணக்குக் குறிப்புகள் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், யுவான் சுவாங் சில தகவல்களை நமக்குத் தந்துள்ளார். நாட்டைப் பற்றிய பொதுவான விளக்கத்தில் 'அரசு நிலம்' (Royal Land) நான்காகப் பிரிக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிடுகிறார். அவற்றின் வருவாய் நான்கு முக்கிய அரசுத் துறைகளின் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு யுவான் சுவாங் குறிப்பிடுவது நாட்டின் மொத்த நில வருவாயைப் பற்றியதா அல்லது அரசுக்குச் சொந்தமான நேரடியான கட்டுப்பாட்டிலிருந்த பண்ணைகளின் வருவாயைப் பற்றியதா எனப் பிரித்துக் கூற இயலவில்லை. மேலும், நிலத்திலிருந்து கிடைத்த வரி வருமானத்தைப் பற்றி மட்டும் குறிப்பிடுகிறாரா அல்லது மற்றத் துறைகளின் மூலமாக அரசிற்குக்

[1] ஹர்ஷ சரித்திரம்-மூலம்-பக்கம் 203; மொழிபெயர்ப்பு-பக்கம் 199
[2] சுக்ரா-i-பக்கம் 195
[3] சுக்ரா-i-பக்கம் 193

கிடைத்த வருமானத்தையும் சேர்த்துக் கூறுகிறரா என உறுதிப் படுத்த இயலவில்லை. அவை எப்படி இருப்பினும், வருவாய் பின் வருமாறு செலவிடப்பட்டதெனலாம்: ஒரு பகுதி அரசாங்க நிருவாகம், விழா மற்றும் வழிபாட்டுச் செலவிற்கும், இரண்டாவது அமைச்சர்களின் நலனுக்கும். மூன்ருவது அறிஞர், கல்வியாளர், திறமையாளர்களுக்குப் பரிசு அளிப்பதற்கும், நான்காவதாக மதத்துறையில் தேர்ந்த துறவிகளுக்குக் கொடையளிக்கவும் ஒதுக்கப்பட்டன.

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திலும், பாணரின் ஹர்ஷ சரித்திரத்திலும் சுக்ரநீதிச் சாராவிலும் காணப்படும் ஒரு துறையைப் பற்றிய குறிப்புத் துண்டுகளை இணைத்துப் பார்த்தால் அரசாங்க நிருவாகத்திற்கும், அதிகாரிகளுக்கும் அரசாங்க வருவாய் எவ்விதம் செலவழிக்கப்பட்டதென அறியலாம். வரு முன் உரைப்பவர், சகுனப்பலன் கூறுபவர், சோதிடர், புராணம் படிப்பவர், கதை கூறுபவர், அரச கவி, மத குருக்கள், பல்வேறு துறை கண்காணிப்பு அதிகாரிகள் முதலியோர் மாதத்திற்கு 1000 பணம் சம்பளமாகப் பெற்றனர்[1] என மௌரியன் மூலக்குறிப்பு கூறுகிறது. ஹர்ஷரிடம் மாதம் '1000' பணம் வருவாய் தரக் கூடிய '100' கிராமங்களைக் கொடையாகப் பெற்ற பிராமணர்கள் அர்த்த சாஸ்திரத்தில் மேலே குறிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு இணையாக இருக்க வேண்டும் எனத் தற்காலிகமாக முடிவு செய்யலாம். ஆனல் அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருப்பது, அரசாங்க அதிகாரிகள் வழக்கமாக நிருவாகப் பணிக்காகவும் சேவைக்காகவும் பெற்ற சம்பளம் என்பதையும், ஹர்ஷ சரித்திரம் குறிப்பது, அரசர் பிராமணர்களுக்கு அளித்தது கொடை என்ற உண்மையையும் நினைவு கூர்தல் அவசியம். இவை ஹர்ஷரின் மிகத் தாராளமான கொடைத் தன்மையை விளக்கா நிற்கும்.

கட்டாய உடல் உழைப்பு பற்றி (Forced Labour) யுவான் சுவாங் மூன்று இடங்களில் குறித்துள்ளார். அவை அனைத்தும் இந்திய நிருவாக முறை பற்றிக் குறிக்கும் ஒரு பகுதியில் காணப் படுகின்றன. அவை குறிக்கப்படும் மூன்று இடங்கள் கட்டாய இராணுவப் பணி, ஆக்கப்பணி, நிலவரி வசூல் முதலியன ஆம் முதலாவது நாட்டின் பாதுகாப்பிற்கு அல்லது பேரரசுப் பெருமையை நிலைநிறுத்துவதற்கு எனலாம். இரண்டாவதாகக் குறிக்கப்பட்ட ஆக்கப்பணி, மக்களின் நலனுக்காக உறுதியாக நிறைவேற்றப்பட வேண்டிய நற்பணிகளையும் திட்டங்களையும் குறிக்கும் எனலாம். மூன்ருவது நிலவரி வருவாயுடன் தொடர்பு கொண்ட

[1] அர்த்த சாஸ்திரம்-v-3

தாகும். கட்டாய உழைப்பு விளக்கம், யுவான் சுவாங்கின் நாட்டுச் சூழ்நிலைப் பின்னணி கொண்டதாக இருக்க வேண்டும் என எண்ணலாம். ஏனெனில், சீனாவில் அது போன்ற பழக்கம் உண்டு. துறவிகளைக்கூட 'அரசின் நில வருவாய்த் துறைக்கு உழைக்கும்படி கட்டாயப்படுத்துவதைச் சீன வரலாற்றில் காண முடிகிறது. மக்கள் ஆற்றிய உழைப்பிற்குத் தக்க வெகுமதி அளிக்கப்பட்டது' என ஹியுசி Hsi-yu-chi) கூறுகிறது.

இந்தியாவில் விவசாயிகள் மட்டுமன்றி வேறு தொழிலில் ஈடுப்பட்டிருந்தவர்களும் வரி செலுத்தினர். விவசாயிகள் பெரும் பாலும் தங்களுடைய வரிகளை விவசாயப் பொருள்கள் மூலமாகச் செலுத்தினர். ஆனால் சில வேளைகளில் கேளிக்கைப் பொருள் களாகவும், வரிப்பணமாகவும், தங்கமாகவும், மற்றும் சேவை செய்வதன் மூலமாகவும்[1] செலுத்த நேரிடலாம் என்பதை ஹர்ஷரின் கட்டளைகள் விளக்குகின்றன. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் ராஷ்டிரா (Rashtra)[2] என்ற நாட்டுப்பகுதி மக்கள் செலுத்தும் வரியானது, விளைந்த பொருள்களில் ஆறில் ஒரு பங்கு, படைக்குத் தேவையான பொருள்கள், மற்றும் மதப்பணிகளுக் காகச் செலுத்தட்டும் வரிகளையும் கொண்டதாகக் கூறுகிறது.[3] அவை அனைத்தும் ஒரே சமயத்தில் செலுத்தப்படுபவை ஆம். ஹர்ஷரின் குறிப்பில் வரி என்று மேலே குறிப்பிடப்பட்டிருப்பது தெளிவாக விளக்கப்படாவிட்டாலும், ஆறில் ஒரு பங்கு வழக்க மான பங்கைவிட அதிகமாகச் செலுத்தப்பட்ட வரியாக இருத்தல் வேண்டும். மக்களிடையே சிறப்பாகக் காணப்பட்ட தொழில் நுணுக்கங்களை அல்லது திறமையை அரசாங்கத்திற்கு அல்லது போர்ப் பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணமே, வரிக்குப் பதிலாகச் 'சேவை'யைப் பெறுதல் என்ற முறையை நடைமுறையில் பின்பற்றியதற்குக் காரணமாகும். அதைப் பற்றிய விளக்கமும், வகைகளும் அர்த்த சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. போருக்குத் தேவைப்படும் திறமை மிக்க வீரர்களைத் தந்து உதவும் கிராமம், தானியம், கால்நடைகள், தங்கம் அல்லது மூலப் பொருள்கள் கொடுக்கும் பகுதிகள், பண்ணைப் பொருள்களாகத் தரும் கிராமம்,[4] விஷ்தி (Visti) என்ற இலவச உழைப்பைத் தரும் மக்கள் கொண்ட பகுதி முதலியவை

[1] E. I-i-73; vi-211

[2] வரி செலுத்தும் பகுதிகளை ராஷ்டிரா (Rashtra-நாட்டுப்புறம்), துர்கா (Durga-நகரமும் கோட்டைகளும்), வன (Vana-மலைப்பகுதிகள்) என அர்த்த சாஸ்திரம் பிரிக்கிறது-ii-6

[3] அர்த்த சாஸ்திரம்-ii-15

[4] அர்த்த சாஸ்திரம்-ii-35

வரி விலக்குப் பெற்ற கிராமங்கள் ஆகும். துப்புறவு செய்யும் தொழிலாளிகள், காவலாள்கள், அடிமைகள், தானியத்தை அளப்பவர்கள் முதலியோர் விஷ்தி என்ற இலவச உழைப்பைச் செய்து வந்தவர்களாவர்.[1] கிராமக் கணக்காயர் இவ் வகைத் தொழிலாளர்களின் சரியான எண்ணிக்கை, அவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஒதுக்கப்பட்ட பணிகள் முதலியவற்றைக் குறித்து வைக்கும் பொறுப்புகளை மேற்கொண்டிருந்தார்.[2] வரி கட்டு வதற்குப் பதிலாகப் பணி புரிதல் என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் விவசாயிகளிடமிருந்து ஹர்ஷர் வரி களுக்குப் பதிலாகப் பெற்று வந்த அரசிற்குத் தேவையான பொருள்களையும் பணிகளையும் பற்றிய கட்டளைகள், தேவையான ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டளைகளே எனப் புரிந்துகொள்ள முடிகிறது. இது போன்ற வழக்கங்களை விளக்கும்போது யுவான் சுவாங் 'கட்டாயப் பணி' எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால், அவை அனைத்தும் சாதாரணமாக யாரும் ஏற்று விரும்பிச் செய்யக் கூடியவை ஆம்.

இந்திய ஆதார நூல்கள் பதினெட்டு வகையான வரிகள் விதிக்கப்பட்டதாகவும், அவற்றுள் நிலவரியே மிக முக்கியமானது எனவும் கூறுகின்றன. ஆனால் நிலவரியைத் தவிர, மற்றவற்றின் பட்டியல் காணப்படவில்லை. தஸ் அபராத (Das-Aparadhah) அல்லது பத்துக் குற்றங்கள் என்ற பொதுவான சொற்றொடர் நீதி நிருவாகத்துறை விளக்கத்தில் காணப்படுகிறது. அக் குற்றங்கள் புரிவோர்கள் தண்டிக்கப்பட்டு, அபராதம் செலுத்துமாறு கட்டளை யிடப்பட்டனர். இரண்டாவது ஜீவித குப்தா(Jivita Gupta II) வின் குறிப்பு இப் பத்துக் குற்றங்களில் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை கொடையளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[3] பத்துக் குற்றங்கள் என்பன கீழ்க்காணுமாறு விளக்கப்படுகின்றன: திருட்டு, கொலை, ஒழுக்கமற்ற பால் தொடர்பு என்ற உடல் பற்றிய மூன்றும், கடுமையாகப் பேசுதல், உண்மைக்குப் புறம் பாகப் பேசுவது, அர்த்தம் இன்றிப் பேசுவது, அவதூறாகப் பேசுவது என்ற நான்கு குற்றங்களும், மாற்றார் பொருளைக் கவர எண்ணுதல், தீயது நினைத்தல், நல்லன அல்லாதவற்றைச் செய்ய எண்ணுதல் ஆகிய மூன்றும் ஆகப் பத்துக் குற்றங்கள் எனக் கூறப்படுகின்றன. இப்'பத்துக் குற்றங்கள்' என்ற தொடர் நீதி நிருவாகத் தொடர்பிற்குத் தேவையான அளவிற்குச் சுட்டிக்காட்டி மெய்ப்பிக்க முடியாத அளவிற்குப்

1 அர்த்த சாஸ்திரம்-ii-15
2 அர்த்த சாஸ்திரம்-ii-35
3 C. I. I-iii-எண் 46-பக்கம் 213

பொதுவானதாகக் காணப்படுகின்றன. குறிப்பாகக் கடையாகக் குறிப்பிட்டிருக்கும் பொருளைக் கவர எண்ணுதல், தீயது நினைத்தல், நல்லன அல்லாதவற்றைச் செய்ய எண்ணுதல் ஆகிய மூன்றும் மெய்ப்பித்துத் தண்டனை அளிக்கக் கூடியவையாக இல்லை. கொலை செய்யும் குற்றத்திற்கு அபராதம் அளிப்பது என்றில்லாமல் மிகக் கடுந்தண்டனை அளிக்கலாம்.

மேய்ச்சல் நிலங்கள் தோல், கரி சுரங்கம், மதுப் பொருள்கள் புதையல்கள், பால், மலர், கால்நடைகள் ஆகியவற்றின்மீது வரி விதிக்கப்பட்டிருந்ததாகக் குப்தர் காலக் குறிப்பு ஒன்று கூறுகிறது. வக்காடகா (Vakataka) அரசி பிரபாவதி குப்தா (Prabhavati Gupta)வின் பூனச் செப்பேடு இதற்குச் சான்று ஆகும்.[1] யுவான் சுவாங் குறிப்புகளிலிருந்து ஹர்ஷர் காலத்தில் வரி விதிப்பு குறைவாக இருந்தது என அறிகிறோம். ஹர்ஷரின் அரசாங்கம் வரி விதிக்கத் தக்க மேல் குறிப்பிட்ட பொருள்களுக்கு எல்லாம் வரி விதிக்கவில்லை எனத் தெரிகிறது. அல்லது சீனாவின் வரிப் பளுவை மனதிற்கொண்டு ஹர்ஷரின் வரிவிதிப்பு குறைவானது என யுவான் சுவாங் கருதியிருக்க வேண்டும். இருப்பினும், வணிகர்கள் படகுத் துறையிலும், எல்லைச் சாவடியிலும்[2] செலுத்தி வந்த ஒரு வரியைப் பற்றி யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். இந்த சுங்க வரியை வசூலித்த அதிகாரிகள் தரங்கிகாக்கள் (Drangikas)[3] என அழைக்கப்பட்டனர்.

[1] E. I-xv-எண் 4
[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 176
[3] மைத்ரேகர் குறிப்பு-C. I. I-iii-பக்கம் 165
E. I-xii-339
N. H. I. P-vi-பக்கம் 279

6. பேரவைகள்

படையெடுப்புகளில் ஈடுபட்டு, நாட்டின் எல்லையை விரிவு படுத்தும் நடவடிக்கைகளைத் தம் ஆட்சிக்காலம் முழுவதும் மேற்கொண்டாலும், அமைதியைத் தோற்றுவிக்கும் முயற்சிகளிலும் ஹர்ஷர் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். அசோகரின் ஆட்சியில் போன்றே ஹர்ஷரும் தமது ஆட்சியில் மதம், பண்பாடு ஆகிய துறைகளில் நிறைவான பணியாற்றியுள்ளார். கனோஜ் நகரில் மதப்பேரவை நடத்தி, மஹாயானப் பௌத்தக் கருத்துகளைப் பரப்ப ஹர்ஷர் மேற்கொண்ட முயற்சிகளை இங்குக் குறிப்பிடலாம். ராஜ்மகாலுக்கு அருகே உள்ள கஜன்கலா கூடாரத்தில் ஹர்ஷர், சீனத்துப் பயணி யுவான் சுவாங்கை முதலில் சந்தித்தபொழுதே, அவருடைய குறிப்புகளில் காணக்கிடக்கும் சிறப்பை அறிந்து கொண்டார். 'பேரரசின் பல பகுதிகளிலும் வாழும் பல மதப் பிரிவுகளைச் சார்ந்த ஸ்ரமணுக்கள், அறிஞர்கள், துறவிகள் அனைவரும்' சீனத்திலிருந்து வந்திருக்கும் மத அறிஞருடன் கலந்து உரையாட அனைவரும் கன்யா-குப்ஜாவில் கூடவேண்டும் என்ற கட்டளை அங்கிருந்தே அனுப்பப்பட்டது. கஜன்கலாவி லிருந்து ஹர்ஷர் அணி வகுத்துச் சென்றது ஆடம்பரம் மிக்கதாக விளங்கியது. அரசர் தம்முடைய விருந்தினரான யுவான் சுவாங் குடன் கங்கை ஆற்றின் தென்கரையையொட்டிப் பயணஞ்செய் தார். ஹர்ஷரின் நண்பரும், யுவான் சுவாங்கைக் காமரூபத்தி லிருந்து ஹர்ஷரின் கட்டளைக்கிணங்கி அழைத்து வந்தவருமான பாஸ்கரவர்மர் வடகரையையொட்டிப் பயணம் செய்தார். கங்கை யின் இரு கரைகளிலும் பணியாள்களும், போர் வீரர்களும் படகு களிலும், யானைகளிலும் பயணம் செய்தனர். அவர்கள் முரசுகளை முழக்கியும், சங்குகளை ஒலித்தும், யாழ்களை மீட்டியும், புல்லாங் குழல்களை ஊதிக்கொண்டும் மகிழ்வுடன் பயணத்தை மேற் கொண்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் புடைசூழ 90 நாள்கள் பயணத்திற்குப்பின், இரு அரசர்களின் பரிவாரங்களும் கனோஜ் நகரை அடைந்தன. கனோஜ் நகருக்கு ஹர்ஷர் சென்று சேர்ந்த சமயம் 18 அரசர்களும், 3000 மஹாயான, ஹீனயான

பௌத்தத் துறவிகளும், 3000 பிராமண நிர்கிரந்தாக்களும், நாளந்தாப் பல்கலைக் கழகத்திலிருந்த பௌத்த மடத்திலிருந்து வந்த 1000 பௌத்த அறிஞர்களும் ஏற்கெனவே அங்குக் கூடி இருந்தனர். கூரை வேயப்பட்ட இரண்டு பெரிய அவைகள் கட்டப்பட்டு, சுமார் 2000 மக்கள் அமர வசதி செய்யப்பட்டிருந்தது. அதன் கிழக்குப் பகுதியில் 100 அடி உயரமுள்ள ஒரு கோபுரம் எழுப்பப்பட்டிருந்தது.[1] தங்கத்தால் செய்யப்பட்ட புத்தரின் முழு உருவச் சிலையும், அரியணையும் அங்கு வைக்கப் பட்டிருந்தன.

ஹர்ஷர் பயணக்கால மாளிகையிலிருந்து பேரவைக்கு அரசர் என்ற முறையில் ஆடம்பரமாக வருகை தந்தார். ஹர்ஷர் சக்ரா கடவுளைப் (God Sakra) போன்றும், குமாரா பிரம்மாவைப் போன்றும் யானையின்மீது அமர்ந்துகொண்டு, முறையே விதானம் குடையை ஏந்திக்கொண்டு[2] புத்த சிலையை நோக்கிச் சென்றனர். அவர்களுக்குப் பின் இரண்டு யானைகள் நகைகளையும், மலர்களையும், மற்றொன்று சீனத்துப் பயணியையும், தலைமை அதிகாரிகளையும் தாங்கிச் சென்றன. 300[3] யானைகள் இளவரசர் களையும், அமைச்சர்களையும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த மதப் பெரியோர்களையும் தாங்கிச் சென்றன. ஊர் வலம் புத்தர் சிலை அமைக்கப்பட்டிருந்த இடம் வரை சென்றது. முதலில் புத்தர் சிலை அவைக்குக் கொண்டு வரப்பட்டு, அரியணை யில் அமர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அரசரும், யுவான் சுவாங்கும் வழிபாடுகளை நிகழ்த்தினர். அடுத்தபடியாக, சுமார் 18 அரசர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 பௌத்தத் துறவி களும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்டிருந்த 200 அமைச்சர்களும் புத்தரைத் தரிசிக்க வரிசையாக அனுமதிக் கப்பட்டனர். எஞ்சியோர் அவையில் அமர்ந்திருந்தனர். ஹர்ஷர் சீனத்துப்பயணியை அழைத்து, அவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்து, விழாவைத் தொடங்கி வைத்தார்.

முதலில் யுவான் சுவாங் மஹாயான பௌத்தப்பிரிவின் கொள் கைகளைப் புகழ்ந்து உரையாற்றினார்; கருத்தரங்கிற்கு ஒரு தலைப் பைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து அக் குழுவிற்கு மிங்கின் (Ming-hein) என்ற நாளந்தாப் பல்கலைக் கழக பௌத்தத் துறவியைத் தலைவராக நியமித்தார். கருத்தரங்கிற்குத் தேர்ந்தெடுத்த தலைப்பு ஓர் அட்டையில் எழுதித் தொங்கவிடப்பட்டு, அனைவருக்கும் அறி

[1] பீல்-i-பக்கம் 218

[2] பீல்-i-பக்கம் 218; ஹர்ஷரையும், குமாராவையும் 500 போர் யானைகள் பின் தொடர்ந்தன.

[3] யுவான் சுவாங்கின் மூல நூலில் 100 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்கப்பட்டது. மேலும், பேரவையில் கொள்கை விளக்கத்தில் எந்த ஒரு சொல்லாவது அறிவுக்குப் பொருந்தாது எனக் கருது பவர்கள், அல்லது வாதிட்டு வெற்றி பெறுபவர்கள் எவரேனும் இருப்பின், அவருடைய விருப்பப்படி, ஈடாகத் தம் தலையைத் தருவ தாக யுவான் சுவாங் அறிவித்தார். அன்று இரவு நேர நிகழ்ச்சி வரை பேரவையில் எவரும் யுவான் சுவாங்கின் கருத்திற்கு மாறாக எதுவும் கூற முன் வரவில்லை. நிகழ்ச்சிகள் குறித்துப் பேரரசர் மகிழ்ச்சி அடைந்தார். பேரவையின் அன்றைய நிகழ்ச்சிகள் முடிந்து, பேரரசர் அரண்மனைக்குத் திரும்பினர். மற்றவர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த தங்கும் இடங்களுக்குத் திரும்பினர். மறு நாளும், முதல் நாள் ஊர்வல நிகழ்ச்சியின் போது நடைபெற்றது போலவே அனைவரும் புத்தர் சிலையை[1] நோக்கிச் சென்றனர். இதே போன்று ஐந்து நாள்கள் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. யுவான் சுவாங் ஹீனயானப் பிரிவின் சிறப்பைக் குன்றச் செய்து விட்டார் என்ற எண்ணம் கொண்ட அப் பிரிவைச் சார்ந்த துறவிகள் வெகுண்டு, சீனத்துப் பயணியின் உயிரைப் பறிக்கச் சதி புரிந்தனர். சதித்திட்டத்தை உணர்ந்த ஹர்ஷர், யாராவது சீனத்துப் பயணிக்கு ஊறு விளைவிக்க அல்லது தொட முயன்றால்கூட அவ்விடத்திலேயே அவர்களுடைய தலை வெட்டப்படும் எனவும், எதிர்த்துப் பேசுபவரின் நாக்கு துண்டிக்கப் படும் எனவும் அறிவித்தார்; அவருடைய கருத்துகளைக் கேட்டுப் பயன் பெற விரும்புபவர்கள், இக் கட்டளையைக் கண்டு அஞ்சத் தேவையில்லை எனவும் அறிவித்தார். இவ் வறிவிப்பு, பகைவர்களைப் பேரவையை விட்டு ஓடச் செய்தது. மேலும், 18 நாள்களுக்குப்[2] பேரவையின் நிகழ்ச்சிகள் எத் தடையுமின்றித் தொடர்ந்து நடைபெற்றன.

யுவான் சுவாங்கின் பயணக் குறிப்பு மூல நூலில் (Hsi-yu-chi) பேரவை நிகழ்ச்சி பற்றிச் சற்று மாறுபட்ட விளக்கம் காணப் படுகிறது. அதன்படி யுவான் சுவாங்கின் கருத்துகளை அறிந்து கொள்வதற்காக மட்டுமன்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்பட்ட பல்வேறுபட்ட, புரிவதற்குரிய மதக் கருத்து களையும், மதப் பெரியோர்களின் சொல்லாற்றலையும் அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் பேரவை கூட்டப்பட்டது என அறிகி

1 பீல்-i-பக்கம் 218; யுவான் சுவாங்கின் குறிப்புப்படி, புத்தரின் சிலை அரசரின் உயரத்தில் செய்யப்பட்டிருந்தது. மூன்று அடி உயரமுள்ள மற்றொரு தங்கத்தால் ஆன சிலையும் அங்கு இருந்தது. உற்சவ மூர்த்தியாக எங்கும் எடுத்துச் செல்ல வசதியாக அச் சிலை அமைக்கப்பட்டிருந்தது.

2 பீல்-i-பக்கம் 218; யுவான் சுவாங் பயணக் குறிப்புகளின் மூல நூலில் Hsi-yu-ki) பேரவை 21 நாள்கள் நடைபெற்றன எனக் குறிக்கப்பட்டுள்ளன.

றேம்.[1] கொலைச் சதித்திட்டத்தின் இலக்கு யுவான் சுவாங் அல்ல என்றும், அத் திட்டம் ஹர்ஷரைக் கொல்லுவதற்கு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இறுதி நாளில் பந்தலின் கோபுரத்திலும் அரங்கிலும் தீ விபத்து ஏற்பட்டு, ஹர்ஷரே முன் நின்று அத் தீயை அணைத்தார் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. பின் ஹர்ஷர் மற்ற அரசர்களுடன் கோபுரத்தின் உச்சிக்குச் சென்று, அரங்கின் தோற்றத்தைக் கண்டு கீழே இறங்கும் சமயம் ஹர்ஷரின் மதக் கொள்கையிலிருந்து முரண்பட்ட வெறியன் ஒருவன் கையில் கத்தியுடன் அவரைத் தாக்கினான். ஹர்ஷர் அவனை மிகத் திறமையுடன் பிடித்துக் கைது செய்தார். சூழ்ந்து இருந்த அரசர்கள், கொல்ல முயற்சி செய்த அவனை அவ் விடத்திலேயே கொன்றுவிடத் துடித்தனர். ஆனால், ஹர்ஷர் அவர்களைத் தடுத்து, ஏதும் நடந்திராததைப் போல நடந்துகொண்டார். ஹர்ஷரின் பெருந்தன்மையினால் உந்தப்பட்ட கொலையாளி, பேரவை நிகழ்ச்சிகளின் நடத்தையால் அவமதிப்பிற்கு உள்ளாகி, முரண்பட்ட கருத்துக் கொண்ட சிலரால் அரசரைக் கொல்ல அனுப்பப்பட்ட கூலி என்பதை ஒப்புக் கொண்டான். உடனே ஹர்ஷர் 500 பிராமணர்களை நோக்கிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். அவர்கள் ஹர்ஷர் முன் வந்து, பந்தலுக்கு எரி அம்புகளை எய்து தீயிட்டு, பின் விளையும் குழப்பத்தில் அரசரைக் கொல்லத் திட்டமிட்டதையும் ஒப்புக்கொண்டனர்; அத் திட்டம் சரிவர நடைபெறாது போகவே கொலையாளி அமர்த்தப்பட்டான் என்பதையும் ஒப்புக்கொண்டனர். பேரவையில் பங்கு கொண்ட அரசர்களும், அமைச்சர்களும் உடனே அவர்கள் அனைவரையும் கொல்லுமாறு ஹர்ஷரை வேண்டிக் கொண்டனர். ஆனால், அவர்களுடைய தலைவரை மட்டும் ஹர்ஷர் தண்டித்து, மற்றவர்களை மன்னித்து நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார்.[2]

பேரவை நிகழ்ச்சிகள் முடிந்தபின், ஹர்ஷர் யுவான் சுவாங்கின் மதப்பற்றையும், திறமையையும் பாராட்டும் வகையில் 10000 பொற்காசுகளையும், 30000 வெள்ளிக் காசுகளையும், பருத்தியால் ஆன விலையுயர்ந்த 100 ஆடைகளையும் பரிசளித்தார். பேரவையில் பங்கு கொண்ட 18 அரசர்களும் சீனத்துப் பயணிக்கு விலையுயர்ந்த பொருள்களைப் பரிசளித்தனர். ஆனால் உயர்ந்த மத ஒழுக்கங்களை உண்மையிலேயே பின்பற்றும் யுவான் சுவாங் இப் பரிசுகளில் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஹர்ஷர் யுவான் சுவாங்கின் மறுப்புகளைப் பொருட்படுத்தாது, அவரை அமைச்சர்களுடன்

1 பீல்-i-பக்கம் 219
1 பீல்-i-பக்கம் 221

யானையில் அமரச் செய்து, அரசு முறையில் ஊர்வலம் ஒன்று நடத்தி, 'மஹாயான பௌத்தப் பிரிவை, மற்றவற்றைவிடச் சிறந்து விளங்கச் செய்து நிலை நிறுத்தினார்' என்று பெருமைப்படுத்தினார்.

பேரவையின் அடுத்த சிறப்பான நிகழ்ச்சி 'மோட்சம்' என்ற கொடை அளிக்கும் நிகழ்ச்சியாகும். கனோஜ் பேரவை நிகழ்ச்சி இனிதே நிறைவேறியபின், தமது ஆறுவது ஐந்தாண்டுக் கால நிறைவு விழாவைப் பிரயாகை(அலகாபாத்)யில் கங்கை, யமுனை சங்கமப் பகுதியில் நடத்துவது என்ற முடிவை ஹர்ஷர் அறிவித்தார். வேறு ஆயிரம் இடங்களில் கொடையளித்தாலும், பிரயாகையில் கொடையளித்த பயனைப் பெற முடியாது என்ற நம்பிக்கையின் காரணமாகவே ஹர்ஷர் பேரவையை நடத்தப் பிரயாகையைத் தேர்ந்தெடுத்தார். தாய்நாடு திரும்ப வேண்டும் என்ற எண்ணம் சீனத்துப் பயணியை வாட்டியது. எனினும், ஹர்ஷருடைய வேண்டுகோளுக்கிணங்கி, யுவான் சுவாங் கனோஜிலிருந்து பிரயாகைக்குச் சென்று கொடை விழாவிலும் பங்கு கொள்ள ஒப்புக்கொண்டார். 'மன்னர் தம்முடைய அளவு கடந்த செல்வத்தை ஒரு பொருட்டாக மதிக்காது மற்றவர்களுக்கு அள்ளிக் கொடுக்கும்பொழுது சீனாவிற்குத் திரும்பும் பயணத்தை ஏன் சிறிது நாள்கள் தள்ளிப் போடக் கூடாது?' என யுவான் சுவாங் கூறி, பிரயாகைக்குப் பயணம் செய்தார். ஹர்ஷரும், 18 அரசர்களும் சீனப் பயணியுடன் பிரயாகைக்கு வந்து சேர்ந்த சமயம் ஏற்கெனவே அங்கு 5 இலட்சம் மக்கள் குழுமி இருந்தனர். கொடையளிக்கும் இடம் ஐந்து மைல் சுற்றளவுள்ள ஒரு பெரும் மணற்பரப்பில், சங்கமத்தின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. இன்றும் அப் பகுதி புனிதத்தலமாகக் கருதப்படுகிறது. இந்தியாவின் மிகப் பெரிய விழாவான கும்பமேளா அவ்விடத்தில்தான் நடைபெறுகிறது. 'ஐந்து இந்தியா'விலும் வாழ்ந்த ஸ்ரமணர்கள், நிர்கிரந்தர்கள், துறவிகள், ஏழைகள், அனாதைகள், துணையற்றோர் ஆகியோர் கொடையளிக்கும் இடத்திற்குச் சென்று, அரசரிடம் பொருள் பெற்றுச் செல்லுமாறு வேண்டப்பட்டனர். 1000 நடைதூர நீள அகலமுள்ள சதுரமான ஒரு பெரிய இடத்தில் சுற்றிலும் மூங்கில்களால் ஆன ஓர் அரங்கு அமைக்கப்பட்டது. அவ் விடத்தில் பல நூற்றுக்கணக்கான கூரைக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. பொன்னும், மணியும், வெள்ளியும், முத்தும், மற்றும் பல விலையுயர்ந்த பொருள்களும் அங்குக் குவிக்கப்பட்டிருந்தன. அரங்கில் அமைந்திருந்த வேறு பல நூற்றுக்கணக்கான சேமிப்பு அவைகளில் பட்டாடைகளும், பருத்தியாடைகளும், பொன்னும், வெள்ளியும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. அரங்கின் வெளியே உணவருந்தும் இடங்கள் பல அமைக்கப்

பட்டிருந்தன. மேலும், பல ஓய்விடங்களும் அமைக்கப் பட்டிருந்தன.

கங்கையின் வடகரையில் ஹர்ஷரும், மேற்குச் சங்கமப் பகுதியில் வலபி அரசரும், யமுனையின் தென்பகுதியில் அசாம் அரசரும் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தனர். வலபி அரசரின் கூடாரத்தின் மேற்குப் பகுதியில் கொடை பெறுபவர்கள் இருக்கை கொண்டிருந்தனர்.

பேரவையின் முதல் நிகழ்ச்சி ஹர்ஷர் தம் படைகளுடனும் பரிவாரங்களுடனும் அணி வகுத்துப் பேரவைக்குச் செல்லுதல் ஆகும். குமார ராஜா கப்பலிலும், துருவபட்டரும் மற்ற 18 அரசர்களும் யானையின்மீது அமர்ந்தும் பேரவையை வந்து அடைந்தனர்.

பிரயாகைப் பேரவையின் முதல் நாளில் புத்தரின் உருவச்சிலை ஒன்று கூரை வேயப்பட்ட அரங்கில் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து விலையுயர்ந்த பொருள்களும். உடைகளும் கொடையளிக்கப்பட்டன. இரண்டாம் மூன்றும் நாள்களில் சூரியன் (ஆதித்யா), சிவன் ஆகியோரின் உருவச் சிலைகள் அரங்கில் அமைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து புத்தரின் சிலை அமைக்கப்பட்ட வேளையில் கொடையளித்த பொருள்களில் பாதி விலை மதிப்புள்ள பொருள்கள் கொடையளிக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 10000 பௌத்தத் துறவிகளுக்கு வெகுமதி அளிப்பதற்கெனவே நான்காவது நாள் ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு துறவியும் 100 பொற்காசுகள், 1 முத்து, பருத்தியாலான ஓர் ஆடை, வாசனைப் பொருள்கள், மலர்கள், உணவு, சுவைநீர் ஆகியவைகளைப் பெற்றனர். அடுத்த இருபது நாள்களுக்குத் தொடர்ந்து பிராமணர்களுக்குக் கொடையளிக்கப்பட்டது. அதையடுத்து மேலும் பத்து நாள்களுக்குப் பல மதத்தைச் சார்ந்த துறவிகளுக்கும் கொடை அளிக்கப்பட்டது. தூரப்பகுதியிலிருந்து கொடை பெற வேண்டி வந்தவர்களுக்கும் 10 நாள்கள் தொடர்ந்து பொருள் அளிக்கப்பட்டது. எட்டில் ஒரு பங்கு பொருள்களைத் தொடர்ந்து ஒரு திங்களுக்கு ஏழைகள், அனாதைகள், ஆதரவு இழந்தவர்களுக்கு ஹர்ஷர் கொடை அளித்தார். இவ்வாறாக ஐந்து ஆண்டுகளாகச் சேமித்த பொருள்களை ஹர்ஷர் மக்களுக்கு வாரி வழங்கினார். அரசருக்குச் சொந்தமான நிலங்கள், நாட்டின் ஒழுங்கையும். அமைதியையும் காக்கத் தேவைப்படும் படைகள், யானைகள், குதிரைகள், மற்றும் போர்த் தேவைப் பொருள்களைத் தவிர, வேறு எதுவும் மிஞ்சி இருக்கவில்லை. ஹர்ஷரின் சிற்றரசர்களும் தங்களிட

முள்ள பவளம், விலைமதிப்பற்ற கற்கள், உடைகள், கழுத்து அணிகள், கிரீடக்கற்கள், கையணிகள் அனைத்தையும் விரும்பிக் கொடையளித்தனர். தம்மிடமிருந்த பொருள்கள் அனைத்தையும் வாரி வழங்கியபின், ஹர்ஷர் சாதாரண உடையை அணிந்து கொண்டு, தங்கை ராஜ்யஸ்ரீயிடம் இரந்து பொருள் பெற்று, 'பத்துப் பகுதிகளின்' புத்தரைத் தரிசித்தார். ஹர்ஷர் தம்மிடம் குவிந்திருந்த பொருள்களை மதப்பணிக்காக வாரியிறைத்து அள வற்ற இன்பம் பெற்றார். கனோஜ், பிரயாகைப் பேரவைகளில் கொடையளித்ததன் மூலமாகத் தனியொருவரின் வள்ளல் தன்மையில் ஹர்ஷர் தனியிடம் பெற்றுச் சிறந்து விளங்குகிறார்.

பிரயாகைப் பேரவை நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிதே நிறை வேறிய பின், சீனத்துப் பயணி யுவான் சுவாங் மேலும் பத்து தினங்கள் ஹர்ஷருடன் தங்கினார். ஹர்ஷரும், குமார ராஜாவும் மறுபடியும் பயணிக்குப் பொற்காசுகளையும், பலவகைப்பட்ட உயர்ந்த பொருள்களையும் பரிசாக அளித்தனர். யுவான் சுவாங் மறுபடியும் அவற்றைப் பெற மறுத்து, குமாரா அளித்த, பயணக் காலத்தில் குளிரிலிருந்து பாதுகாப்பு அளிக்கும், தோலினாலான உடை ஒன்றை மட்டும் பெற்றுக்கொண்டார். தாய்நாட்டிற்கு யுவான் சுவாங் புறப்பட்ட பயணத்தின் நெடுந்தூரம் வரை ஹர்ஷர் பயணியுடன் சென்றார். பயணியின் உடைமைகளான புத்தகங்கள், புத்தர் சிலைகள் முதலியவற்றைக் குதிரைகள் சுமந்து சென்றன. வட இந்திய அரசரான உதித்தாவைப் பாதுகாப்புப் படையின் தளபதியாகப் பயணியுடன் இந்தியாவின் எல்லை வரை செல்லு மாறு ஹர்ஷர் கட்டளையிட்டார். பயணம் குறைவான வேகத்தில் செல்வதைக் கண்ட ஹர்ஷர், பல யானைகளையும் கொடுத்து விரை வான பயணத்திற்கு உதவினார். விரைவாகச் செல்லும் பல நூறு குதிரை வீரர்களுடன் துருவபட்டர், குமாராவுடன் ஹர்ஷர் பயணம் செய்து, மறுபடியும் யுவான் சுவாங்கைச் சந்தித்து மகிழ்ந்தார். அதன் பின் சீனத்துப் பயணிக்கு ஹர்ஷர் பிரியா விடை கொடுத்தனுப்பினார்.

7. சமயமும் கல்வியும்

ஹர்ஷர் காலத்தில் பௌத்த மதம் பெற்றிருந்த சிறப்பையும், கல்வி முறைகளையும் அறிந்துகொள்ள யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் மிகப் பயனுள்ளவையாக விளங்குகின்றன. அவர் பயணம் செய்த பகுதிகளில் வாழ்ந்த மக்களின் மதப் பற்று மிக்க வாழ்க்கை, பொருளாதாரம் பற்றிய செய்திகள் அப் பயணக் குறிப்புகளில் காணக் கிடக்கின்றன. அவை அனைத்தும் மிகப் பெரியதொரு நூல் வடிவம் பெறத்தக்க அளவு கொண்டவையாயினும், அவற்றில் காணப்படும் சிறப்பான குறிப்புகளைத் தேர்ந்தெடுத்து, அச் சமயத்தில் இந்தியாவில் கல்வி கேள்வியிலும் மதத்துறையிலும் நிலவிய நிலையை அறிந்து கொள்ளலாம்.

யுவான் சுவாங் பயணக் குறிப்புகளில் முதலிடமளித்துக் குறிப்பிடப்பட்டிருப்பது, இந்திய மக்கள் பெற்றிருந்த சமயச் சிறப்பே ஆகும். இந்தியாவைக் கண்டு களிப்பது, யுவான் சுவாங்கின் பயண நோக்கமல்ல. புத்தரோடும் பௌத்தச் சமயத்தோடும் தொடர்பு கொண்ட இடங்களுக்குச் சென்று தரிசிக்கும் புனித உணர்வும், பௌத்த மதம் பற்றி மேலும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமுமே யுவான் சுவாங் இந்தியப் பயணத்தை மேற்கொண்டதன் அடிப்படை நோக்கங்கள் ஆம். ஆசியாவில் சமயங்களைத் தோற்றுவிக்கும் தனிச்சிறப்பை அப்பொழுது இந்தியா பெற்றிருந்தது. ஆகவே, பயண வழியில் மனிதர்கள் அல்லது இயற்கை தரும் இடர்ப்பாடுகளும், அச்சங்களும் யுவான் சுவாங்கின் மனதைக் கலங்கச் செய்யவில்லை. மேலும், பல சீனர்கள் கற்கும் ஆவலில் இந்தியாவிற்கு வந்துகொண்டே இருந்தனர். இந்தியாவைக் கனிஷ்கர் ஆண்ட காலத்திலிருந்து வங்காளத்தின் தர்மபாலர் காலம் வரை, பல நூற்றுக்கணக்கான சீன மாணவர்கள் அறிவென்னும் வற்றாத ஊற்றை நாடி இந்தியாவிற்கு வந்துகொண்டே இருந்தனர்; இந்தியாவில் சிறந்து விளங்கிய பல கல்வி நிலையங்களை நாடிச் சென்று கற்றுச் சிறப்புப் பெற்றனர். சீனாவிற்கும் இந்தியாவிற்கும் நிலவிய பண்பாட்டுத்

தொடர்பின் பயனாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் கற்றுப் பயனடைந்தாலும் நாம் அறிந்துகொள்ளும் வகையில் அனைவரும் புகழுடன் விளங்கவில்லை. பாஹியான், யுவான் சுவாங், இட்சிங் ஆகிய மூவரும் வரலாற்றில் தனியிடம் பெற்று நிலைத்த புகழுடன் விளங்குகின்றனர். ஆயிரக்கணக்கான சீனர்கள் இந்தியாவில் பயணம் செய்ததிலிருந்து இந்தியாவின் புகழ் ஆசியாவில் கடல் கடந்தும் விளங்கியதை நாம் அறிந்துகொள்ளலாம். இந்தியப் பண்பாடு, சமயம், இசை, நாடகம் முதலியவை இந்தியாவிற்கு இயற்கையாக அமைந்த எல்லைகளாகிய இமயத்தையும், கடல் களையும் கடந்து பரவி வளர்ந்தன.

யுவான் சுவாங் குறிப்பிட்ட ஒரு பௌத்தப் பிரிவில் நம்பிக்கை கொண்டவராக இருப்பினும், அவர் தழுவிய மஹாயான பிரிவைத் தவிர, வேறு பௌத்தப் பிரிவுகள், அதைச் சார்ந்தோரின் எண்ணிக்கை, இந்தியாவில் நிலவிய இந்துமதக் கோட்பாடு, பண்பாடு ஆகியவற்றிற்கும் தவருது வெறுப்பின்றித் தமது பயணக் குறிப்புகளில் சிறப்பான இடமளித்துக் குறித்துள்ளார். குப்தப் பேரரசர்களின் ஆட்சியின் காலத்தில் இந்து மதம் வளர்ச்சி யடைந்த நிலை காணப்பட்டது. வடமொழி, பண்பாட்டுச் சிறப்புப் பெற்றவர்களின் மொழியாகத் திகழ்ந்தது. பௌத்த மதத்தில் சிறப்புப் பெற்றிருந்தோருங்கூட வடமொழியிலேயே எழுதினர். வடமொழி, எழுத்து வழக்கிலும், பேச்சு வழக்கிலும் 'மத்திய இந்தியா'வில் நீடித்திருந்தது. அப் பகுதி வாழ் மக்கள் வடமொழி யைத் தவறின்றிப் பேசினர். வடமொழியை அழகாகவும், சிறப்பாகப் பொருளை உணர்த்தும் முறையிலும் பேசும் ஆற்றல் பெற்றிருந்த அவர்கள், மொழி எவ்வாறு பேசப்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். 'மத்திய இந்தியா' விற்கு அப்பால் வாழ்ந்த மக்கள் பேசும் வடமொழி பிழையுடனும் சற்று வேறுபட்ட தன்மையுடனும் காணப்பட்டது. அதன் சுற்றுப் பகுதியிலும் சற்றுத் தொலைவிலும் வாழ்ந்த மக்களும் அத் தவறுகளை வழக்கமாகப் பயன்படுத்தி, மொழியைப் பிழைப்படுத்தி, அதன் தூய சிறப்பைச் சிதைத்தனர்.[1] பிராமணர்களின் கோட் பாடுகள் சமூகத்தில் மிகவும் வேரூன்றிப் பரவியிருந்தன என்பதை இந்தியாவில் நிலவிய பல்வேறு சமூக உட்பிரிவுகளைக் காணும் வேளையில் அறிந்துகொள்ளலாம். மயிலிறகை அணிபவர்கள், மண்டையோட்டு மாலை அணிபவர்கள், தழைகளாலான உடை உடுத்துபவர்கள், தலையை விரித்து மீசையை வெட்டிக்கொள்ப வர்கள், முடியைத் தலையில் சுற்றிக் கட்டிக் கொண்டை போட்டுக்

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 153

கொள்பவர்கள், பல வண்ணத்தாலான உடை உடுத்துபவர்கள், முற்றிலும் ஆடையே அணியாதவர்கள் போன்ற பல்வேறு பிரிவி னர்கள் காணப்பட்டனர்.[1] உடலில் சாம்பலைப் பூசிக்கொள்ப வர்களும்,[2] திகம்பரர்களும், பாம்சுபதாக்க(Pamsupatas)ளும், வேறு சில பிரிவினர்களாவர். இந்துக்களின் சமூகக் கோட்பாடு களையும், அவர்களிடையே காணப்பட்ட பிரிவுகளைப் பற்றியும் பாணரும் குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொண்டவர்கள், தலை முடியை விரித்துப் போட்டுக்கொள்பவர்கள், கபில, கணாட, நியாய, உபநிஷத்துக்கள், லோகாயத முறை களைப் பின்பற்றுபவர்கள் என்ற பிரிவுகளைப் பற்றிய விளக்கம் ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகிறது. வேறு ஓர் இடத்தில் ஒழுக்கம் மிக்க விதவைகள், பாராசர (Parasara) யாசகர்கள், சமணத் துறவிகள், சிவனை வழிபடுபவர்கள் முதலியவர்கள் தமது நண்பர்களில் சிலர் எனப் பாணர் கூறுகிறார். எளிய வாழ்வு நடத்தும் துறவி கர்பாட்டின் (Karpatin), தனித்து வாழும் காஸ்த முனி (Kastha Muni), தக்த முண்டா (Dagdha Munda), பாண்டுரின் (Pandurin), பிண்டபாதின் (Pindapatin) என அழைக்கப்படும் முனிவர்கள் பற்றியும் பேசப்படுகிறது. சிவனையும் சக்தியையும் வழிபடுபவர்கள் கபாலிகர் (Kapalika) பிரிவினர்,[3] துர்க்கையை வணங்குபவர்கள்[4] ஆகியோரும் யுவான் சுவாங் கண்ட வேறு சில பிரிவினராவர். மேலும், வேறுபட்ட கருத்துகள் கொண்ட வர்கள் எனப் புட்டாக்கள் (Butas), நிர்கிரந்தாக்கள் (Nirgranthas), கபாலிகர்கள், ஜூடிகாக்கள் (Jutikas), சௌதிங்காக்கள் (Chudinkas) போன்ற பிரிவினர் பற்றிய செய்திகளும் காணப்படு கின்றன. சங்யாக்களும் (Sankhyas), வைசேசிகர்களும் (Vaisesikas) நேர் முரண்பட்ட கருத்துகள் கொண்டவர்கள் ஆவர். புட்டாக்கள் தங்களுடைய உடலை மர உரி தரித்து மறைத்துக்கொள்வர். நிர்கிரந்தாக்கள் எனப்படுவோர் உடையே அணிவதில்லை. கபாலி கர்கள் எலும்புகளினாலான மாலையைக் கழுத்திலும், தலையிலும் அணிந்துகொள்ளும் வழக்கமுடையவர்கள் ஆவர். சௌதிங் காக்கள் அழுக்கடைந்த உடைகளை அணிந்துகொண்டு, அழுகிக் கெட்டுப்போன உணவை உண்பர்.

இங்குக் குறிப்பிட்ட பல பிரிவைச் சார்ந்தவர்களும் வெளிப் படையாகத் தெரிந்துகொள்ளக்கூடிய பழக்க வழக்கங்களினால் வேறுபட்டுக் காணப்பட்டாலும் எண்ணப் பாங்கில் அதிக

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 148
[2] வாட்டர்ஸ்-ii-பக்கம் 47
[3] லைப்-பக்கம் 159
[4] லைப்-பக்கம் 87

வேற்றுமையற்றவர்கள் எனச் சீனத்துப் பயணி திறம்பட விளக்குகிறார்.

பலர் பழமையில் பற்றுக்கொண்டு, கற்றுத் தெளியும் ஆர்வமும், தனிமையை நாடும் பண்பும், தன்னடக்கமும் கொண்டு வாழ்ந்தனர். அவர்களைப் போன்றோர் உலகில் பிறந்தாலும், மனித வாழ்வோடு தொடர்பு கொண்ட சிக்கல்களுக்கு அப்பாற் பட்டு, தங்களைத் தனித்துக்கொண்டு வாழ்க்கையின் படிகளைக் கடந்து, இவ்வுலகை நீத்துச் செல்வர். அவர்களுடைய நெறிமிக்க வாழ்க்கையைச் சூழும் புகழும், பெருமையும், எவருடைய கடிந்த சொல்லும் மாற்றி அமைத்துவிட முடியாது.

அப் பெரியோர்களின் குடும்பம் செல்வம் மிக்கச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும், அவர்கள் நெறி மிக்க வாழ்க்கையைப் பின்பற்றி, தங்களுடைய மனதை இவ்வுலக வாழ்வில் செல்லவிடாது தடுத்து, சுற்றி அலைந்து திரிந்து, பிச்சை எடுத்து உண்டு வாழ்வர்; உண்மையை அறிந்துகொள்வதே பெருமை, அறுதையாகச் சுற்றித் திரிவதில் சிறுமையில்லை என எண்ணுவர்.

நாட்டை ஆளும் அரசர்கள் அளிக்கும் மரியாதையும், சிறப்பும் அவர்களை அரசவைக்கு அழைத்து வர முடியாது. கற்றோருக்கும், கருவிலே திரு உடையோருக்கும் அரசர் உரிய மரியாதையும், பெருமையும் அளித்துப் போற்றுதலும், அவர்களுடைய அறிவுத் திறனை மக்கள் உயர்வாக மதித்தலும் காணப்படுகிறது. உயர்ந்த நெறிகளைப் போற்றி வாழும் அவர்களைப் பற்றிய பெருமைகளும், புகழுரைகளும் யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. மக்களும் அதிகாரிகளும் அவர்களை உரிய முறையில் கவனித்துக்கொண்டனர். ஆகவே, அவர்கள் கற்றலை மிக ஆர்வத்துடன் மேற்கொண்டனர்.

ஒழுக்க நெறிகள் போற்றப்பட்டு மதிக்கப்பட்ட விதமும், அதைப் பின்பற்றியவர்களுக்குக் கிடைத்த உயர்ந்த சிறப்பும், அரசர்களும், மக்களும் அவர்களுக்கு அளித்த ஆதரவும், ஊக்கமும், இந்திய மக்களின் அறவாழ்விற்கும், அந்தத் துறையின் முன்னேற் றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதற்கும் சிறந்த எடுத்துக் காட்டுகள் ஆம். அது போன்ற ஒழுக்கமிக்கவர்கள் பலர் இந்தி யாவில் வாழ்ந்தனர் என்பது, இந் நாட்டிற்குப் பெருமை அளிப்ப தாகும். புறவாழ்வின் இன்பம், வசதிகள், சமூக வாழ்வின் களிப்புகள், புகழ்பெறும் விருப்பம் ஆகிய எதுவும் அவர்களிடம் காணப்பட்ட ஆர்வத்திற்குத் தடையாக விளங்க முடியாது. சமூகத்தின் உயர்விற்காகவும், பெருமைக்காகவும் தங்களை வருத்திக்

கொண்டு வாழ்வையே அர்ப்பணித்து இரந்து திரியும் சான்றோர் களுக்கு உரிய பெருமையளிக்க வேண்டும் என்ற அறவுணர்வு சமூகத்தில் மிகுந்து காணப்பட்டது. சமூகத்திற்குப் பணி செய்ய வேண்டும் என்ற உணர்வும் அறநெறி மிக்க அப் பெரியோர்களிடம் காணப்பட்டது. தாங்கள் கற்றுணர்ந்த அறநெறிகளையும் உண்மைகளையும் அவர்கள் சமூகத்திற்கு அளித்துப் பணி புரிந் தனர். உண்மையைக் கற்று உணர்வதோடு மட்டும் கற்றலின் பயன் ஈடேறுவதில்லை. அதை மக்களும் அறிந்து பயன் பெற வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் காணப்பட்டதை யுவான் சுவாங் கீழ்க்காணுமாறு விளக்குகிறார்:

'கலைகளையும், அறிவியலையும் கற்பதால் களைப்பை மறந்து, தூய ஒழுக்கத்தையும், பண்புகளையும் அடிப்படையாகக் கொண்டு, கற்றலின் பொருட்டு நீண்ட பயணங்களையும் மேற்கொண்டு, உண்மையை அறிய முயற்சித்தனர்.'[1]

அறநெறிகளை மக்களுக்குக் கற்றுத் தரும் ஒழுக்கம் மிக்க ஆசிரியர் குழுக்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பயணம் செய்து, நாட்டின் கல்விப் பணி நிறைவு பெற வழி வகுத்தன. அரசாங்கம் மக்களுக்குக் கல்வி போதிப்பதற்கெனத் தனியாக ஒரு துறையைத் தோற்றுவித்து, நிறைவேற்ற முடியாத ஒரு கடின மான பணியைச் செலவின்றி மிகத் திறமையாக அறவோர்கள் செவ்வனே நிறைவேற்றி வந்தனர்.

இந்து மதக் கோட்பாடுகளைப் பரப்பும் பல்வேறு பிரிவுகளும், பௌத்தர்களும், குறிப்பாக மஹாயான பிரிவினரும் இந்தியாவில் கல்விப்பணியில் சிறப்பான பங்கு வகித்தனர். யுவான் சுவாங் இந்தியாவில் பயணம் செய்த காலத்தில் ஹீனயான பிரிவைவிட மஹாயான பிரிவே மக்களிடை சிறப்புப் பெற்று விளங்கியது. யுவான் சுவாங் சென்றவிடமெல்லாம் கல்விப் பணியில் ஈடுபட்டி ருந்த மஹாயான, ஹீனயான பௌத்தர்களைப் பற்றிய செய்தி களைப் பயணக் குறிப்பில் தவறாது குறித்துள்ளார். சில இடங்களில் இரு பிரிவைச் சார்ந்த துறவிகளும் சேர்ந்து வாழ்ந்தனர். இந்து மதக் கோட்பாடுகளை விளக்கும் தேவ கோவில்களைப் பற்றியும், அங்கு நிலவிய 'குழப்பம் மிக்க' வாழ்க்கை பற்றியும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பௌத்த மதம் அழிந்துகொண்டிருந்தாலும், மஹாயான, ஹீனயான மார்க்கங்

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 161

களைத் தவிரச் சுமார் 18 பௌத்தப் பிரிவுகள் இந்தியாவில் காணப் பட்டன. அவர்களிடையே காணப்பட்ட வேறுபாடுகள் மிக அதிகம். மேலே குறிப்பிட்ட 18 பிரிவினரும் தாங்கள் பின்பற்றும் கருத்துகளே உயர்ந்தவை என்ற எண்ணம் கொண்டிருந்தனர்.[1] ஆகவே, அவர்கள் தனித்தனியே வாழ்ந்தனர். கனோஜ் பேரவையில் நிகழ்ந்த சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் இவ் வேறுபாடுகளை விளக்கும் சான்றுகளாகும். இப் பிரிவுகளில் சில, தாங்கள் பின்பற்றிய கருத்துகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் இலக்கிய வடிவம் தந்துள்ளன; அம் முறைகளைப் பரப்புவதற்காகப் பல மடங்களை நிருவகித்து வந்தன. பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 5000 பௌத்த மடங்கள் இந்தியாவெங்கிலும் இயங்கி வந்தன என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் தங்கியிருந்து உயர் கல்வி பயின்ற துறவிகளின் எண்ணிக்கை, இலங்கையிலும் சேர்த்து சுமார் 212130 ஆகும். யுவான் சுவாங்கின் பயணத்தின் முக்கிய நோக்கமே பௌத்த மதத்தைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதே என முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, துறவிகளின் எண்ணிக்கை முதற்கொண்டு, சிறப்பான விளக்கங்கள் பயணக் குறிப்புகளில் காணப்படுகின்றன.

யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காணப்படும் செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த துறவிகளின் எண்ணிக்கையும், அவர்கள் வாழ்ந்த இடங்களின் பெயர்களும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஹர்ஷர் காலத்தில் இந்தியாவில் பௌத்த சமயத்திற்கு அளிக்கப் பட்ட சிறப்பை அறியலாம்.

1. சதவீரா (Sthavira)

கயா (இலங்கை அரசரின் மடம்)	—	1,000
சாமதத்தா	—	2,000
கலிங்கம்	—	500
திராவிடம்	—	10,000
இலங்கை	—	20,000
பரோச்	—	300
சூரத்	—	3,000
மொத்தம்	—	36,800

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 162

2. சமாத்யா (Sammatiya)

அஹிச்சித்ரா	—	1,000
சங்கேசியா	—	1,000
ஹயமுக	—	1,000
விசோகா	—	3,000
கபிலவஸ்து	—	30
காசி	—	3,000
சாரநாத்	—	1,500
மாங்கிர்	—	4,000
கர்ன சுவர்ணு	—	2,000
மாளவம்	—	20,000
வலபி	—	6,000
வடக்கு சிந்து	—	10,000
கராச்சி	—	5,000
பிடாசிலா	—	3,000
அவந்தி	—	2,000
ஆனந்தபுரம்	—	1,000
மொத்தம்	—	63,530

3. சர்வாஸ்திவாதின் (Sarvastivadin)

காஸ் (Gaz)	—	2,000
தமாசவனு விகாரம்	—	300
மதிப்பூர்	—	800
புராவிகாரம்	—	200
நவதேவகுல	—	500
கூர்ஜரம்	—	100
மாங்கிர்	—	200
மொத்தம்	—	4,100

4. லோகாத்தரவாதின் (Lokottaravadin)

பாமியன்	—	பல ஆயிரங்கள்

5. ஹீனயானு (உட்பிரிவுகள் பற்றிய குறிப்புகள் இல்லை)

சகாலா	—	100
காந்தாரம்	—	50

தனேஸ்வரம்	—	700
சுருக்னு	—	1,000
கோவிசனு	—	100
கொசாம்பி	—	300
காசிப்பூர்	—	1,000
மகதம்	—	50
சம்பா	—	200
மொத்தம்	—	3,500

6. மஹாயானு

கபிசா	—	6,000
உத்தியானு	—	18,000
தட்சசீலம்	—	300
குலுடு (ku-lu-to) (பியாஸ் ஆற்றின் மேல்பகுதி)	—	1,000
பிலோஷன்னு	—	300
மகதம்	—	10,000
புன்னியவர்த்தனு	—	700
ஓரிசா	—	'மிக அதிக எண்ணிக்கை'
தெற்குக் கோசலம்	—	10,000
திலோஷிகா (Ti-lo-shika) மடம்	—	1,000
தனகட்டகா	—	1,000
பாலானு (Fa-la-na) (கோமல் பள்ளத்தாக்கு)	—	300
மொத்தம்	—	48,600

7. மஹாயான ஹீனயானப் பிரிவு கொள்கைகளைப் பின்பற்றும் துறவிகள்

மதுரா	—	2,000
ஜலந்தரா	—	2,000
கன்யா-குப்ஜா	—	10,000
அயோத்யா	—	3,000
விரிஜி	—	1,000
புன்னியவர்த்தனு	—	3,000
கண்கனு	—	10,000
மகாராஷ்டிரம்	—	5,000
கட்ச்	—	3,000

உஜ்ஜயினி	—	300
பர்வதா	—	1,000
மெக்ரன்	—	6,000
மொத்தம்	—	46,300

8. எப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என அறுதியிட்டுக் கூற இயலாத துறவிகள்

காஷ்மீரம்	—	5,000
ராஜ்மகால்	—	300
தாமரலிப்தி	—	1,000
ஆந்திரம்	—	3,000
மொத்தம்	—	9,300

மேலே குறிப்பிட்டிருப்பவற்றின் மொத்தம்

ஹீனயானு

சதவீரா	—	36,800
சமாத்யா	—	63,530
சர்வாஸ்திவாதின்	—	4,100
பெயர் குறிப்பிடப்படாதவை	—	3,500
மஹாயானு	—	48,600
மஹாயானமும் ஹீனயானமும் சேர்ந்து	—	46,300
எப் பிரிவினர் எனக் குறிக்கப் படாத துறவிகள்	—	9,300
ஆக மொத்தம்	—	212,130[1]

இவ்வாறு குறிப்பிட்ட பௌத்தத் துறவிகளைத் தவிர, யுவான் சுவாங்கினுல், 'சில', 'சில பத்துக்கள்', 'பல ஆயிரங்கள்' அல்லது 'மிக அதிக எண்ணிக்கையில்' என விளக்கப்பட்ட, பௌத்த மடங்

[1] மேலே குறிக்கப்பட்ட எண்ணிக்கை ரைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) கணித்ததாகும். வாட்டர்ஸின் மொழிபெயர்ப்புக் குறிப்புகளிலிருந்து இது மாறுபட்டுக் காணப்படுகின்றது.

களில் வாழ்ந்த துறவிகளின் எண்ணிக்கையையும் இத் தொகையுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். சீனத்துப்பயணி செல்லாத இடங்களில் வாழ்ந்தவர்களேயும் கருத்தில் கொள்வது அவசியமாகும். யுவான் சுவாங் தந்துள்ள பௌத்தத் துறவிகளின் எண்ணிக்கை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல என வாதிடுபவர்களால்கூட, அக் கால இந்தியாவில் பௌத்த மதம் பெற்றிருந்த சிறப்பையும், பல இலட்சம் துறவிகள் அப் புனித நெறியைப் பின்பற்றினர் என்பதையும் மறுக்க இயலாது. பௌத்த நெறிகளேயும், வேறு மதத்தையும் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை, இந்தியாவின் அறவாழ்க்கையையும் மக்களின் மதப் பற்றையும், அத் துறையில் இந்தியா அடைந்திருந்த முன்னேற்றத்தையும் உலகிற்கு எடுத்துரைக்கும் சான்று ஆகும்.

யுவான் சுவாங் தம் பயணத்தின் சமயம், பல பௌத்தக் கல்வி நிலயங்களேக் கண்டு, அவற்றில் தங்கி, புத்தரின் போதனேகளேக் கற்கும் வாய்ப்புப் பெற்றிருந்தாலும் சில நிலயங்களே மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். காஷ்மீரத்தில் இயங்கி வந்த பௌத்த நிலயத்தை யுவான் சுவாங் மிகப் புகழ்ந்துரைக்கிருர். சீனப்பயணி அங்குச் சென்ற சமயம் பதன்டா செங் (Bhadanta Cheng) என்பவரை, அவரது மாணவர்களுடன் யுவான் சுவாங்கிற்கு உதவுவதற்கெனக் காஷ்மீரத்தின் அரசர் நியமித்தார்; மேலும் பயணியின் தேவைகளே நிறைவேற்ற அரண்மனே நூலகத்திலிருந்து 20 எழுத்தர்களேயும் கொடுத்து, பயணக் குறிப்புப் பிரதிகளே எடுக்க உதவினுர். யுவான் சுவாங் அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கினுர். அங்குத் தங்கியிருந்த வேளேயில் அவர் பல சூத்திரங்களேயும், சாஸ்திரங்களேயும் கற்றுக்கொண்டார். ஜலந்தராவில் அமைந்திருந்த நாகரத்ன மடத்திலும் யுவான் சுவாங் நான்கு மாதங்கள் தங்கியிருந்தார்; சந்திர வர்மர் என்ற கல்வியாளரிடம் மேலும் பல கொள்கை விளக்கங்களே அறிந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்ருர். சுருக்ன நாட்டிலிருந்த ஒரு பௌத்த மடத்தில் பனிக்காலம் முழுவதும், வசந்த காலத்தில் பாதி வரையிலும் அவர் தங்கியிருந்தார். மிகப் பெரும் அறிஞராக விளங்கிய ஜெய குப்தரின் கருத்துகளே அறிந்துகொள்ளும் வாய்ப்பை அங்கு யுவான் சுவாங் பெற்ருர். சுருக்னவின் பௌத்த நிலயங்களில் வாழ்ந்த துறவிகள், வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்களேவிட அறிவும் திறமையும் பெற்று விளங்கினர் என்பது மட்டுமின்றி, மற்றத் துறவிகளுக்குத் தோன்றும் ஐயங்களேயும் தீர்த்து வைக்கும் அளவிற்குப் புலமையும் பெற்று விளங்கினர். மதிப்பூர் பௌத்த மடத்தில் குணப்பிரபாவின் மாணக்கரான மித்ரசேன

என்ற மற்றொரு புகழ் மிக்க பௌத்தத் துறவி வாழ்ந்து வந்தார். அவருக்கு வயது தொண்ணூறு. அவர் எழுதிய ஒரு நூலை யுவான் சுவாங் பல மாதங்கள் ஆழக் கற்றுணர்ந்தார். கன்யா-குப்ஜாவின் பத்ர விஹாரம் (Bhadra Vihara) மிகச் சிறப்பான கல்வி நிலைய மாகும். யுவான் சுவாங் அங்கு மூன்று மாதங்கள் தங்கி, விர்ய சேனு(Virya Sena)வின் மாணுக்கராக இருந்து பயின்றார். வைசாலியிலுள்ள ஸ்வெத்தபுரம் (Svetapura) மடாலயத்திலிருந்து மஹாயான கட்டுரை ஒன்றை யுவான் சுவாங் பெற்றுக் கொண்டார். நாளந்தாவிற்கு அருகில் அமைந்திருந்த திலோஷிகா (Ti-lo-shika) மடாலயம் பல்வேறு பகுதிகளிலிருந்தும் திறமை மிக்க கல்வியாளர்கள் வந்து கூடிச் சந்தித்துக்கொள்ளும் இடமாகத் திகழ்ந்தது. கயாவிலுள்ள மகாபோதி மடாலயம் வினய(Vinaya)க்கோட்பாடுகளை முழுமையாகப் பின்பற்றும் சிறந்த நிலையமாக விளங்கியது. அங்குச் சுமார் 1000 துறவிகள் வாழ்ந்தனர். புன்னியவர்த்தனவிலுள்ள ஒரு விஹாரம் 'கிழக்கு இந்திய'ப் பகுதிகளிலிருந்து பல மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் சிறப்புடன் விளங்கியது. மாங்கிரில் யுவான் சுவாங் ஓராண்டுக் காலம் தங்கித் ததாகட குப்தர் (Tathagata Gupta), சாந்தி சிம்மா (Ksanti Simha) போன்ற புகழ் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து பௌத்தக் கோட்பாடுகளைக் கற்றார். கர்ன சுவர்ணவிலுள்ள ரக்தாம்ரிதா (Raktamrita) பௌத்த மடம் பல துறவிகள் நாடிச் செல்லும் இடமாக விளங்கியது. யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காணப்படும் பௌத்த மடங்களைப் பற்றிய விளக்கங்களிலிருந்து அவை புத்தரின் கொள்கைகளையும் பண்பாடுகளையும் விளக்கும் நிலையங்களாக மட்டுமின்றி, கல்விக்கூடங்களாகவும் திகழ்ந்தன என்பதை அறிகிறோம். மேலும், அவை பகுதி உணர்வின்றி, இந்தியா முழுவதிற்கும் பொதுவான அமைப்புகளாகவும் விளங்கின.

நாளந்தாப் பல்கலைக் கழகத் தோற்ற வரலாறு

கயாவிலிருந்து சுமார் 300லி (50-60 மைல்) தூரத்தில் பாடலிபுத்திரத்திற்குத் தென்கிழக்கே இராகுல ஸ்தூபத்திலிருந்து 30லி (6மைல்) தூரத்தில் மகாபோதியிலிருந்து வடகிழக்கே 7 யோசனை தூரத்தில் நாளந்தாப் பல்கலைக் கழகம் அமைந்திருந்தது. கல்விக்கூடம் இன்றைய பாராகான் (Baragaon) என்ற கிராமத்தில் இருந்ததாகக் கன்னிங்ஹாம் கருதுகிறார். கல்விக் கூடத்தின் தென்பகுதி மாமரச் சோலையில் உள்ள குளத்தில் வாழ்ந்த தீ உமிழும் பிராணியின் பெயரே பல்கலைக் கழகத்திற்கு வழங்கப் படுகிறது என்பது பொதுவான நம்பிக்கை. இவ்விடமே ஜுலாய் (Ju-lai) என்ற அரசரின் தலைநகரமாக விளங்கியது. அவருடைய

கொடுத்தும் 'மனநிறைவு பெருத வள்ளல்' (Nalanda) தன்மையைக்கொண்டே அப் பெயர் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்படுகிறது எனவும் கருதப்படுகிறது. மாஞ்சோலையாக இருந்த அவ்விடத்தை வணிகர்கள் பத்துக் கோடி தங்கக் காசுகள் கொடுத்து வாங்கி புத்தருக்கு வழங்கினர். புத்தரின் மறைவிற்குப்பின் சக்ராதித்யர் (Sakraditya) என்ற அரசர் புத்த மதத்தின்மீது கொண்டிருந்த பற்றினுல் ஒரு மடத்தை அவ்விடத்தில் கட்டினுர். சக்ராதித்யரின் மகன் புத்த குப்தர் தந்தையின் நற்பணியைத் தொடர்ந்தார். தென்புறத்தில் அதையொட்டி மற்ெருரு மடம் கட்டப்பட்டது. தாதங்கதா குப்தர் மூன்ருவது மடத்தை அமைத்தார். பாலாதித்யர் என்ற அரசர் வடகிழக்கில் மற்ெருரு மடத்தைக் கட்டி முடித்தார். நான்காவது மடத்தின் திறப்பு விழாவில் இரண்டு சீனர்கள் பங்கு கொண்டார்கள் என்பதும், மன்னர் அவர்களைக் காணச் சென்ற சமயத்தில் மாயமாக மறைந்து விட்ட அற்புதத்தைக் கண்ட மன்னர் முடி துறந்து தாம் அமைத்த மடத்திலேயே பௌத்தத் துறவியானுர் என்பதும் பழங் கதையாகும். மூத்தமை சட்ட திட்டங்களின் (Rule of Seniority) காரணமாக மன்னர் மற்றத் துறவிகளுக்குக் கீழிடத்தை வகிக்க நேர்ந்தது. தம் நிலையில் பெரும் மாற்றத்தை விரும்பாத மன்னர் மடத்தலைவரிடம் முறையிட்டுக்கொண்டார். முற்றிலும் பக்குவமடையாத துறவிகளைத் தவிர மற்றவர்கள் வயதின் அடிப்படையிலேயே வரிசைப்படுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இம் முறை, பாலாதித்யர் கட்டிய மடத்தில் தவிர, வேறு எதிலும் பின்பற்றப்படவில்லை. பாலாதித்யரின் மகன் வஜ்ரா, மற்ெருரு மடத்தை அங்குக் கட்டி முடித்தார். அதற்கு வடக்கே மத்திய இந்தியாவின் அரசர் மற்ெருரு பெரிய மடத்தை அமைத்தார். தென் இந்திய மன்னரும் ஒரு பகுதியைக் கட்டித் தந்தார். சுற்றுப்புற சுவர்களும், கதவுகளும் அமைக்கப்பட்டன. அரச பரம்பரையினர் இவ்வமைப்பு வேலைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு முடித்தது, அழகான சிற்பவேலைகளில் குறிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தில் ஆர்வமும் திறமையும் மிக்க 10000 துறவிகள் பயின்றனர். கல்வி நிலையத்தின் சட்டத் திட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் மாணவர்கள் தவருது பின்பற்றினர். நாளந்தா, இந்தியாவின் கல்விக் கழகங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. மாணவர்கள் பாடங்களை ஆராய்ந்து கற்றதால், நாள் விரைவில் முடிந்து விடுவதாக உணர்ந்தனர். மடத்தின் மூத்த, இளைய துறவிகள் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டும், இரவும் பகலும் அற உரைகளை நினைவுபடுத்திக்கொண்டும் சிறந்த கல்வி ஆற்றலைப் பெறப் பாடுபட்டனர். திரிபிதகா (Tripitaka) அற்புதங்களை உணராத சிலர் தனித்து வாழ்ந்தனர். வெளி நாடு

களிலிருந்தும் தங்களுடைய ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள வந்த மாணவர்கள் கற்றலின் புகழைப் பெற்றனர். நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெற்றனர். அங்கே கற்றுத் தேர்ந்தவர்களில் சிலர் மேலும் அங்கேயே தொடர்ந்து பணியாற்றினர். தர்மபாலர், சந்திர பாலர் என்ற இருவர் புத்தரின் போதனைகளுக்கு மெருகேற்றினர். குணமதி, ஸ்திரமதி ஆகிய இருவரும் அக் காலத் துறவிகளில் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்தனர். பிரபாமித்ரா பேச்சாற்றலுக்குப் பெயர் பெற்றவர். ஜினமித்ரா பேச்சு ஆற்றலுக்கும், ஜனன சந்திரா அறிவுத் திறனுக்கும் ஒழுக்கத்திற்கும் சிறந்து விளங்கினர். அவர்கள் அனைவரும் உயர் கல்வியும், ஆற்றலும் மிக்கவர்களாக இருந்ததுடன், அக் காலப் பெரியோர்களால் மிகவும் மதிக்கப் பட்டவர்களாகவும் இருந்தனர்.

இந்தியாவிலும், வெளி நாடுகளிலுமிருந்த மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றலை நாளந்தாப் பல்கலைக் கழகம் பெற்றிருந்தது. அக் கல்வி நிலையத்தில் சுமார் 10000 மாணவர்கள் பயின்றனர். தங்களுடைய ஐயப்பாடுளைப் போக்கிக்கொள்ள வெளி நாடுகளிலிருந்தும் பலர் நாளந்தாவிற்கு வந்தனர். அவர்கள் இந்தியாவில் மிகச் சிறந்து விளங்கிய கல்வி நிலையத்தில் கற்ற பெருமையுடன் திகழ்ந்தனர்.[1] மங்கோலியாவில் இருந்து வந்த சில மாணவர்கள் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் காணப் பட்டனர்.[2] இக் கல்வி நிலையங்களின் கட்டடங்களை மேலே குறிப் பிட்டுள்ளபடி பல இந்திய அரசர்கள் அமைத்துக் கொடுத்தனர். சுமார் 10000 மாணவர்கள் தங்கிக் கல்வி பயில வசதியாக ஆறு மாடி கொண்ட கட்டடங்கள் அங்குக் காணப்பட்டன. 100 அடி உயரமுள்ள வெண்கல கோபுரம் ஒன்றை நாளந்தாப் பல்கலைக் கழகத்திற்கு ஹர்ஷர் பரிசளித்தார். நாளந்தாவில் பயிலும் மாணவர்கள் அனைவர்க்கும் கல்வி மட்டுமின்றி உணவு, தங்கு வதற்கு இடம், உடை, படுக்கை, மருத்துவப்பணி முதலியனவும் இலவசமாகவே அளிக்கப்பட்டன. அவற்றிற்கு ஆகும் செலவுகள் பல்கலைக் கழகத்திற்கென ஒதுக்கப்பட்ட பண்ணைகளின் வருமானத் திலிருந்து ஈடு செய்யப்பட்டன. ஒரு 'நாட்டின் அரசர்' 100 கிரா மங்களின் வருமானத்தைக் கல்வி நிலையத்திற்குக் கொடை யளித்தார் என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். அவ்வாறு தாராளமாகக் கொடை அளித்த அரசரின் பெயரை அவர் குறிப் பிடவில்லை. நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் கருத்தரங்குகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆகவே, ஆரம்பக் கல்வி

1 வாட்டர்ஸ்-ii-பக்கம் 165

2 இட்சிங்-தகாகசு (Taka-kusu)-பக்கம் 26

பயிற்றுவிக்கும் நிலையமாக அது விளங்கவில்லை என்றும், உயர்கல்வியைப் போதிக்கும் கழகமாகவே விளங்கியது என்றும் அறிகிறோம். கலந்து உரையாடி, கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதன் மூலமாகக் கல்வி பயிலும் முறை நாளந்தாவில் பின் பற்றப்பட்டது. ஆகவே, மிகக் குறைந்தவர்களே அங்குக் கல்வி பயிலத் தகுதி உடையவர்களாக விளங்கினர். பல்கலைக் கழகத்தில் கற்க விரும்பி வந்த பத்து மாணவர்களில் இரண்டு அல்லது மூன்று பேருக்கே கருத்தரங்குகளில் பங்கு பெற அனுமதி வழங்கப் பட்டது. விண்ணப்பித்துக்கொண்ட மாணவர்களில் பெரும் பான்மையோர் அனுமதி வழங்கப்படுவதற்கு முன் நடை பெறும் தேர்வு முறைகளில் தோல்வி கண்டு, உரிய விடையளிக்க முடியாத நிலையில் திரும்பிச் சென்றனர். பல்கலைக் கழகத்தில் கல்வி பயில அனுமதி வழங்கப்படும் முறைகளில் கண்டிப்பான விதிகள் பின்பற்றப்பட்ட போதிலும், அங்குச் சுமார் 10000 மாணவர்கள் பயின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இந்தி யாவின் கல்விச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். நாளந் தாப் பல்கலைக் கழகத்தில் 1510 ஆசிரியர்கள் பணி புரிந்தனர். நாள்தோறும் பல்வேறு தலைப்புகளில் சுமார் 100 கருத் தரங்குகள் நடத்தப்பட்டன.

நாளந்தாவில் பயின்ற மாணவர்களும், ஆசிரியர்களும் பல் வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்களாவர். அவர்கள் தாங்கள் தாங்கள் நம்பிய கொள்கைகளை உண்மையுடன் கடைப்பிடித்து வந்தனர். கருத்தரங்குகளில் பங்கு பெறும் மாணவர்கள் கருத்துகளை எடுத்துக் கூறி வாதம் புரியும் விதமும், ஆராயும் அறிவாற்றலும் பல்கலைக் கழக வாழ்க்கையின் பெருமை மிகு அமிசமாகும். யுவான் சுவாங் தம்முடைய பயணக் குறிப்புகளில் அங்கு நடைபெற்ற சில சொல்லரங்குகளின் நிகழ்ச்சிகளை அப்படியே விளக்கியுள்ளார். ஒரு நாள் யுவான் சுவாங், சிலாபத்ர(Sila-bhadra)ரினால் யோக சாஸ்திரத்தின் நுட்பங்களை விளக்குவதற்கு அனுப்பப்பட்டார். சிம்மரஸ்மி (Simharasmi) என்ற மிகப் பெரும் கல்வியாளர் ஒருவர் தாம் வழிநடத்த கருத்துகளை விளக்கிக் கொண்டிருந்த சமயம், யுவான் சுவாங்கின் கேள்விகளுக்கு உரிய பதிலளிக்க முடியாமல் அவமானம் அடைந்து, பல்கலைக் கழகத்தை விட்டுச் சென்று, கயாவிலுள்ள புனித போதி மடாலயத்தைச் சீரமைக்கும் பணியை மேற்கொண்டார். பின் அவருடைய மாணாக்கர்களில் சிறந்து விளங்கிய, கிழக்கு இந்தியாவைச் சேர்ந்த, சந்திர சிம்மாவை, யுவான் சுவாங்குடன் வாதிடச் செய்து வெற்றி பெறும் நோக்கத்துடன், நாளந்தாவிற்கு அழைத்து வந்தார். ஆனால் சந்திர சிம்மாவும், யுவான் சுவாங் கிடம் தோல்வி காண நேர்ந்தது. யுவான் சுவாங்கின்

அறிவாற்றலுக்கும், பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி ஆர்வ சூழ்நிலைக்கும் எடுத்துக்காட்டாக மற்றொரு நிகழ்ச்சியையும் இங்குக் குறிப்பிடலாம். நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் வாழ்ந்த ஒரு லோகாயதா (Lokayata) தத்துவ ஞானி, அங்குப் பயின்ற துறவிகள் அனைவருக்கும் ஒரு சவால் விடுத்தார்; தம்முடைய ஆராய்ச்சிக் கருத்துகளை நாற்பது கட்டுரைகளாக எழுதி. அவற்றை விஹாரத்தின் கதவுகளில் தொங்கவிட்டு, அதில் கூறப்பட்டிருக்கும் கருத்துகளை எவரேனும் மறுத்துப் பேசி வென்றால் தம்முடைய தலையை வெற்றிப் பரிசாக அளிப்பதாக அறிவித்தார். யுவான் சுவாங், அச் சவாலை ஏற்றுக்கொண்டு அங்குக் காணப்பட்ட அறிவிப்பை அகற்றும்படி செய்து, பல்கலைக் கழக வேந்தர், மாணவர்கள் முன்னிலையில் போட்டியில் கலந்துகொண்டார்; லோகாயதா தத்துவ ஞானியைச் சொற்போரில் வென்று, பெரும் சிறப்புப் பெற்றார். தோல்வி கண்டவரின் தலையைப் பெறச் சீனப்பயணி விரும்பவில்லை. அவரை யுவான் சுவாங் தம்முடைய மாணவராக ஏற்றுக்கொண்டார்.

சிலாபத்ரருக்கு முன் தர்மபாலர் பல்கலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை மேற்கொண்டு கல்விப் பணி புரிந்தார். அக் காலத்தில் சிறந்து விளங்கிய கல்வியாளர்களில் தர்மபாலரும் ஒருவர். சந்திர பாலர் தம்முடைய சொல் ஆற்றலால் புத்தரின் போதனைகளை 'நறுமணம் கமழச்' செய்தார். குணமதி, ஸ்திரமதி ஆகிய இருவரும் அக் காலத்தில் வாழ்ந்த பௌத்தத் தத்துவ ஞானிகளிடையே பெரும் சிறப்புடன் விளங்கினர். பிரபா மித்ரா திறமையுடன் வாதிடும் ஆற்றலுக்கும், ஜின மித்ரா பண்பாடு மிக்க உரையாடலுக்கும், ஜனன சந்திரா குணநலன்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினர். சிலாபத்ரர் அறிவாற்றலுக்குப் பெரிதும் போற்றப்பட்டு, அக் காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த கல்வியாளர் எனக் கருதப்பட்டார். மேலும், பல ஆயிரம் பௌத்தத் துறவிகளும் மிகத் திறமையும், கற்பதில் ஆர்வமும் கொண்டு விளங்கினர். பல நூற்றுக்கணக்கான துறவிகள் மிகவும் புகழ் பெற்றுத் திகழ்ந்தனர். நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் வாழ்க்கை மிக உயர்ந்தது. கல்வி கற்பதற்கான சூழ்நிலையும், துறவிகள் மாணவர்களின் ஆர்வமும், சொல்லாற்றலும், கருத்தரங்குகளும், ஆராய்ச்சித் திறனும் மிகுந்து விளங்கியதால், மாணவர்கள் நாள் மிகவும் குறுகியது என உணர்ந்தனர். இரவும் பகலும் கருத்து வேறுபாட்டின் காரணமாக, மாணவர்கள் ஒருவரையொருவர் தோழமையுடன் கடிந்துகொண்டும், இளையோருக்கு மூத்தத் துறவிகள் முழுமை பெற உதவி செய்துகொண்டும் இருந்ததால், நாள்கள் மிக விரைவாகச் சென்றன.

நாளந்தாவின் பாடத் திட்டத்தில் பௌத்த மதத்தோடு தொடர்பு கொண்டவை மட்டும் இடம் பெற்றிருக்கவில்லை. மஹாயான பௌத்தப் பிரிவுக் கோட்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும் அங்குப் பெரும் சிறப்பு அளிக்கப்பட்டது என்றாலும், மற்றப் பாடங்கள் புறக்கணிக்கப்பட்டு விடவில்லை. பௌத்த மதத்தின் சிறப்பான அமிசமாக விளங்கிய மற்ற 18 பிரிவுகளைப் பற்றிய கருத்துகளும் இந்து மத வேதங்களும் நாளந்தாவின் பாடத் திட்டத்தில் உரிய இடம் பெற்றன. வேதங்கள், அதர்வ வேதம், ஹித்து வித்யா (Hetu Vidya-தர்க்கம்-Logic), சப்த வித்யா (SabdaVidya-இலக்கணம், தத்துவம்), சிகித்ச வித்யா (Chikitsa Vidya-மருத்துவம்), சாங்கையா (Sankhya), நியாயா (Nyaya) முதலியன அங்குக் கற்றுத் தரப்பட்ட பாடங்களில் சில. மேலும், யோக சாஸ்திரத் (Yoga Sastra)தைப் பல்கலைக் கழக வேந்தர் சிலாபத்ரர் மாணவர்களுக்குத் திறம்படக் கல்வி கற்றுத் தந்தார். அப் பாடத்தைச் சிலாபத்ரர் தீரக் கற்றுணர்ந்தவராகக் கருதப்பட்டார். மேலும், நியாயா, ஹித்து வித்யா, சப்த வித்யா, சட்டம், தத்துவம், இயற்கை, அறிவியல் மொழி ஆராய்ச்சி, வான நூல், பாணினியின் இலக்கணம் ஆகியவற்றிலும் சிலாபத்ரர் ஆழ்ந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார். யுவான் சுவாங் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் ஐந்து ஆண்டுகள் மாணவராகத் தங்கி, பௌத்த இலக்கியங்கள் அனைத்தையும், இந்து மதக் கோட்பாடுகளையும், வேதங்களையும் தீரக் கற்று உணர்ந்தார்.[1] கற்றுத் தேர்வதற்கு முழு உரிமைகளையும் நாளந்தாப் பல்கலைக் கழகம் மாணாக்கர்களுக்கு அளித்தது. அறிவும், புதிய கருத்துகளும் எங்கிருந்து வந்தாலும் அவற்றிற்கு உரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. மதம், பிரிவு, இனம் போன்ற குறுகிய உணர்வுகளுக்கு அங்கு இடமில்லை. உலகம் முழுவதற்கும் கற்றலுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தகுதியை நாளந்தாப் பல்கலைக் கழகம் பெற்றிருந்தது. மகளிரும் அங்குத் தங்கிக் கல்வி பெற வசதியளிக்கப்பட்டதென்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

நாளந்தாப் பல்கலைக் கழகத்திற்கு இணையான உரிமைகளும், கல்விச் சூழ்நிலையும், வாழ்க்கையும், பலவகைப் பாடங்களும், ஆழ்ந்த பயிற்சியும் கொண்டு விளங்கிய மற்றொரு கல்வி நிலையம் விந்திய மலைப்பகுதியில் இயங்கி வந்ததை பாணரின் ஹர்ஷ சரித்திரத்திலிருந்து அறிந்துகொள்கிறோம்.[2] திவாகர மித்ரரினால் நடத்தப்பட்ட ஆசிரமம் தனிமையான சூழ்நிலையில், விந்தியமலை வனப் பகுதியில் அமைந்திருந்தது. கல்விக்கும், அக் காலப் பண்பாடுகளுக்கும் அங்கு முக்கியத்துவம் அளிக்கப்

1 லைப்-பக்கங்கள் 112, 121, 125
2 ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கங்கள் 265-266

பட்டது. அங்குப் பயின்ற மாணவர்களின் கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் மிக அதிக அளவில் மாறுபட்டும், தனித்தன்மை பெற்றும் காணப்பட்டன. இந்தியா அறிந்த எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும், பல்வேறு உட்பிரிவினர்களும், பல்கலைக் கழகத்தின் சிறப்பான நோக்கமாகிய உண்மையை நாடி, திவாகர மித்ரரின் ஆசிரமத்தில் கற்பதற்குக் கூடி இருந்தனர். 'பாடங்களைச் சிந்தித்துக் கருத்து வேறுபாடுகளை எழுப்பி, ஐயங்களைக் கேட்டுத் தீர்த்துக்கொண்டு, சொல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பல்வேறு கோணங்களில் கருத்துகளை ஆராய்ந்து, கற்று, விளக்கி' அறிந்து கொண்டனர். உண்மையைக் கண்டு உணரும் விருப்பத்தால் தங்களால் முடிந்த அளவில் எல்லா முயற்சிகளையும் மாணவர்கள் மேற்கொண்டனர். சமணர்கள், திகம்பரர்கள், ஸ்வதாம்பரர்கள் (Svetambaras), பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்த பிராமணத் துறவிகளான ஆடையின்றி அலையும் முனிவர்கள் (பாட்டுர பிக்சுகள்-Paturabhiksus), பாரிவராஜகர்கள் (Parivrajakas), பிரம்மச்சரியம் பூண்டு வாழ்ந்த வார்நின்கள் (Varnins), பாகவதர்கள், வைஷ்ணவத் துறவிகளான பஞ்ச ராத்திரிக்கள் (Pancharatrikas), சைவர்கள், கேசலுஞ்சகர்கள் (Kesalunchakas); லோகாயதிகத் துறவிகள் (சார்வாகர்கள்-Charvakas); காபிலர்கள் (Kapilas), காணடர்கள் (Kanadas), ஆபனிசதர்கள் (Aupanisadas வேதாந்திகள்-Vedantins), அஸ்வராகாரணிகர்கள் (Aisvarakaranikas-நியாயிகள்-Naiyayikas) ஆகிய தத்துவ ஞானிகள் அங்குக் காணப்பட்டனர். மேலும், தர்ம சாஸ்திர சட்ட வல்லுநர்கள், சப்திகா (Sabdika) என்ற மொழி இயல் வல்லுநர்கள், புராணம் கற்றவர்கள், சடங்கு பழக்க வழக்கங்களை நன்கு அறிந்த சாப்த தந்தவர்கள் (Saptatantavas), பொருள் அறிவியல் வல்லுநர்கள், உலோக இயல் வல்லுநர்கள் (காரண்தமின்கள்-Karandhamins) ஆகியோரும் அங்குக் காணப்பட்டனர். பௌத்தக் கோட்பாடுகளையும், பண்பாடுகளையும் கற்பதற்காக அங்கு வந்தவர்களின் எண்ணிக்கையிலும் குறைவில்லை. திரிசரண (Trisarana) என்ற மூன்று வகைப் பிரிவைப் பின்பற்றுபவர்களும் சைத்த கர்மச் (Chaitya Karma) சடங்குகளை நிறைவேற்றுவதில் மிகச் சுறுசுறுப்புடன் காணப்பட்டனர். பௌத்த மாணவர்கள் சாக்ய சாசனம் (Sakya Sasana) என்ற பௌத்தக் கோட்பாடுகளைக் கற்றுத் தேர்ந்தவர்களாக விளங்கினர். வாசு பந்துவின் கோஷ (Vasubandhu's Kosa) அல்லது பௌத்தச் சித்தாந்தத்திலும் கருத்தரங்குகள் நடைபெற்றன. வேறு சிலர் போதி சத்துவ ஜாதகக் கதைகளைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு கற்று, அவற்றை ஜபித்துக்கொண்டே இருந்தனர்.

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் இயங்கி வந்த இக் கல்வி நிலையங்கள் பற்றிய விளக்கங்கள். அக் காலத்தில் நிலவிய இலக்கிய அறிவையும், ஆர்வத்தையும் எடுத்துக்காட்டும் சான்றுகளாகும். ஆயுர் வேதம்,[1] யஜுர் வேதம், சாம வேதம், அதர்வ வேதம் என்ற வேதங்களை மக்கள் கற்றுத் தேர்ந்தனர் என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். யுவான் சுவாங் இந்தியாவிற்கு வந்து சென்ற சிறிது காலத்திற்குப்பின் இந்தியாவிற்கு வந்த இட்சிங்கின் பயணக் காலம் கி.பி. 671-695[2] ஆகும். நான்கு வேதங்களிலும் இருந்த சுமார் 1 இலட்சம் அடிகள் தாள் அல்லது இலைகளில் எழுதி வைக்கப் படாமல், வழி வழியாகப் பிராமணர்களின் நினைவில் பசுமையாக விளங்கி வந்தன. ஒவ்வொரு தலைமுறையிலும் பல பிராமணர்கள் நான்கு வேதங்களில் ஓர் இலட்சம் அடிகளையும் நினைவில் நிறுத்திப் பிழையின்றிக் கூறும் திறனைப் பெற்று விளங்கினர்.[3] இட்சிங்கும் இந்தியக் கல்வி முறைகளை ஆராய்ந்து குறிப்புகள் எழுதிச் சென்றுள்ளார். இட்சிங்கின் விளக்கப்படி, மாணவர்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் சித்திராஸ்து (Siddhirastu) என்பதாகும். 49 எழுத்துகள் கொண்ட அகர வரிசையையும், சுமார் 10000 சொற்களையும் 300 ஸ்லோகங்களில் அமைத்து மாணவர்கள் கற்றுக்கொள்வர். அதன் பின் மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணம் கற்றுத் தரப்படும். (1) பாணினியின் ஆயிரம் ஸ்லோகங்களையும், (2) தாட்டு(Dhatu)ம், மூன்று கிலாக் களையும் (Khilas), (3) ஜெயாதித்யா எழுதிய காசிகாவிர்த்தி (Kasikavritti) என்ற 'பாணினியின் இலக்கண' விளக்கவுரை நூலில் உள்ள 18000 ஸ்லோகங்களையும் மாணவர்கள் பயின் றனர். (4) அடுத்த கட்டத்தில் மாணவர்களுக்குக் கட்டுரை, உரைநடை, செய்யுள் ஆகிய பாடங்கள் கற்றுத் தரப்பட்டன. இக் கல்வியால் மாணவர்கள் திறமையும், இலக்கிய ஆற்றலும் பெற்றுத் திகழ்ந்தனர். ஹர்ஷர் காலக் கல்வி முறை சிறந்து விளங்கியது என்பதற்கு இது சிறப்பான சான்று ஆகும். அதற்குப் பின் மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கற்ற பாடங்கள் 5 வகைப் படும் என்பதை யுவான் சுவாங், இட்சிங் ஆகிய இருவரின் குறிப்பு களிலிருந்து அறிந்துகொள்கிறோம். அவை (1) சப்த வித்யா (Sabda Vidya) என்ற இலக்கணமும், அகராதி நூல்கள் பற்றிய பாடமும், (2) சில்பஸ்தான வித்யா (Silpasthana Vidya) என்ற அறிவியல், கலை, தொழில் பற்றிய பாடம், (3) சிகித்ஸ வித்யா (Chikisa Vidya) என்ற மருத்துவக் கல்வி, (4) ஹித்து வித்யா (Hetu Vidya) என்ற தர்க்கம் (Logic), (5) அத்யாத்ம வித்யா

[1] இந் நூலின் 11ஆம் அத்தியாயம் காண்க.

[2] 'The Early History of India'-V. A. ஸ்மித்-4வது பதிப்பு-பக்கம் 373

[3] தகாகசு(Taka-kusu)வின் மொழிபெயர்ப்பு-பக்கம் 182

(Adhyatma Vidya) என்ற பொருளியல் தத்துவம் (Metaphysics) ஆகியவை ஆகும். இப் பாடங்களை மாணவர்கள் பயில்வதற்கு உதவியாயிருந்த சில பாடப்புத்தகங்களையும் இட்சிங் குறிப்பிட்டுள்ளார். ஹித்து வித்யாவிற்கு நாகர்ஜுனு எழுதிய நியாய துவார தராக்க சாஸ்திரம் (Nyaya-dvara-taraka Sastra) பாட நூலாகப் பரிந்துரைக்கப்பட்டது. ஜாதகமாலா(Jatakama'a)வும், நாகார் ஜுனு தமக்கு ஆதரவு அளித்துப் போற்றிய ஜிடேகா சாதவாகனு (Jetaka Satavahana) அரசரைப் புகழ்ந்துரைத்து வரைந்த கடிதமாகிய[1] சுரில்லிகா(Suhrillekha)வும், கட்டுரை, தரம் மிக்க இலக்கியம் ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டன. சுரில்லிகாவை இட்சிங் சீனத்தில் மொழி பெயர்த்துள்ளார். புத்த ஸ்தோத்திரத்தின் 150 அடிகளையும் இட்சிங் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் பயிலும் சமயம் மொழி பெயர்த்தார். மேலே குறிப்பிட்ட ஐந்து பாடங்களிலும் சிறப்பாக மாணவர்கள் கற்றுத் தேர்ந்த பின் சிறப்புப் பாடத்தைத் தேர்ந்தெடுத்துத் தொடர்ந்து பயின்றனர். ஒரு பௌத்த மாணவர் தமக்கு விருப்பமான பிரிவு பற்றிய மத இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுத்துக் கற்க வாய்ப்பளிக்கப்பட்டதென யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். குணபத்ரர் (Gunabhadra) என்ற பௌத்தக் கல்வியாளர் மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து பாடங்களையும் கற்றுத் தேர்ந்து மேலும் வானநூல், கணக்கு, மருத்துவம், வழிபாட்டு நூல் ஆகியவற்றிலும் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார் என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[2] சிறப்புப் பாடங்களில் வியாகரணு(Vyakarana)வும் ஒன்ருக விளங்கியது. அதற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல புத்தகங்கள் பாட நூலாக விளங்கின என்பதை இட்சிங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிரேம். அவை (1) சூர்னி (Churni) அல்லது பதஞ்சலி(Patanjali) யின் 24000 ஸ்லோகங்கள் கொண்ட, புத்திக் கூர்மை மிக்க மாணவர்களும் மூன்று ஆண்டுகளில் கற்க முடிந்த, மகாபாஸ்ய (Mahabhasya)மும், (2) மகாபாஸ்யத்துக்குப் பார்த்ரிஹரி(Bhartrihari)யால் எழுதப்பட்ட விளக்க உரையான சுமார் 25000 ஸ்லோகங்கள் கொண்ட பார்த்ரிஹரி சாஸ்திரமும், (இந் நூல் ஐந்து இந்தியாவிலும் மிகப் புகழ் பெற்று விளங்கியது. பார்த்ரிஹரி கி. பி. 651ஆம் ஆண்டு இறந்தார்.[3]), (3) பார்த்ரிஹரியால் எழுதப்பட்ட அனுமான வாதத்திலும், புனிதக் கொள்கையிலும் உயர் தனிச் சிறப்புப் பெற்ற நூலாக விளங்கிய வாக்ய பாதியா

[1] தகாகசு-பக்கம் 159
[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 158
[3] தகாகசு-பக்கம் 180

(Vakya Padiya) என்ற நூலும்[1], (4) பார்த்ரிஹரி தொகுத்து வெளியிட்ட சுமார் 3000 இலக்கண ஸ்லோகங்களும். அவர் காலத்தில் வாழ்ந்த தர்மபாலரின் நூல் விளக்கங்கள் பற்றிய சுமார் 14000 ஸ்லோகங்களும் கொண்ட பைஞ (Pcina) அதாவது சமஸ்கிருத வேதமும் ஆகும். புனித பௌத்த இலக்கியங்களில் சிறப்பாகக் கருதப்பட்ட நூல்களைப் பற்றியும் இட்சிங் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் திரிபிதகா (Tripitaka)[2], விஞய (Vinaya), சூத்திரங்கள் (Sutras), சாஸ்திரங்கள்,[3] மாத்ரிசித (Matricheta) பற்றிய 150, 400 அடிகள் கொண்ட இரண்டு துதிப்பாடல்களையும் இந்தியாவெங்கும் வாழ்ந்த துறவிகள் தேர்ந்தெடுத்துக் கற்றனர்.[4] அஸ்வகோஷா (Asvaghosa) எழுதிய புத்தர் சரித்திரக் காவியம் (Budha Charita Kavya) இந்தியாவில் காணப்பட்ட ஐந்து பிரிவுகளிலும் மிக அதிகமாகப் பயிலப்பட்டது. தென்பகுதிக் கடல் நாட்டில் வாழும் மக்களும் அதன் சிறப்பை உணர்ந்திருந்தனர்.[5] யோகா என்ற பாடத்தில் யோகாச்சாரிய சாஸ்திரத்தையும் (Yogocharya Sastra), அசங்கா(Asanga)வின் எட்டு சாஸ்திரங்களையும் மாணவர்கள் பயின்றனர். தர்க்கத்தில் ஜீன(Jina)வின் எட்டு சாஸ்திரங்கள் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. அபிதர்மா(Abidharma)வில் ஆறு பாதங்கள் (Padas) அல்லது கருத்துகளும், ஆகமங்களில் (Agamas) நான்கு நியாயங்களும் சிறப்பான நூல்கள் என இட்சிங் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு இந்தியாவின் இலக்கியச் சிறப்பு, கல்வி முறைகள் பற்றிச் சீனப்பயணிகளின் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இங்குக் குறிப்பிடப்படும் ஆசிரியர்களில் பலர், ஹர்ஷர் கால வடமொழி இலக்கிய வரலாற்றைச் சேர்ந்தவர்களாவர். குறிப்பாக, பார்த்ரிஹரி; காசிகாவின் இணையாசிரியர்களான ஜெயாதித்யா, வாமனு; பேதவிருத்தி(Beda-vritti)யின் ஸ்லோகப் பகுதிகளை எழுதியவரும், சிலாபத்திரருக்கு முன் நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை வகித்தவருமான தர்மபாலர்; தர்க்கக் கலை வல்லுநரான தர்மகீர்த்தி; தாமரலிப்தி(Tamralipti)யில் வாழ்ந்த கிழக்கு இந்தியாவின் புகழ் மிக்க துறவியும், ரத்னகூட சூத்திர(Ratnakuta Sutra)த்தின் ஆசிரியருமான இராகுலமித்ரா (Rahulamitra); வேசாந்த்ரா (Vessantara) நாடகத்தின் ஆசிரியரான சந்திரா, ஜின பிரபா (Jinaprabha), ஜனன சந்திரா,

[1] தகாகசு-பக்கம் 180
[2] தகாகசு-பக்கம் 120
[3] தகாகசு-பக்கம் 181
[4] தகாகசு-பக்கம் 157
[5] தகாகசு-பக்கம் 166

ரத்னசிம்மா ஆகியோரும்; மற்றும் எண்ணற்ற பௌத்தத் துறவிகளும், மாணவர்களும் இட்சிங் நாளந்தாப் பல்கலைக் கழகத்திற்கு வருகை செய்த சமயம் நாளந்தாவிலும் மற்றும் இந்தியா வெங்கும் சிறந்து விளங்கிய கல்வியாளர்கள் ஆவர். யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல கல்வியாளர்களைப் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன. அக் காலத்தில் வாழ்ந்த மிகப் பெரும் புலவர்கள் வரிசையில் ஹர்ஷரின் அவைப்புலவர் பாணபட்டர் சிறப்பான இடத்தை வகிக்கிருர். பாணரின் குறிப்புகளிலிருந்து வேறு சில புலவர்களைப் பற்றியும் அறிந்துகொள்கிறேம். வடமொழியில் சிறந்து விளங்கிய இயற்கைக் கவிஞர் ஈசானு, வேனி பாரதா (Veni Bharata), கவிஞர் பிரகிரிதா, வாயு விகாரா (Vayu Vikara) ஆகியோர் கவித்திறன் கொண்டு விளங்கியவர்களில் சிறப்பானவர்கள். கிராதர்ஜுனியா(Kiratarjuniya)வின் ஆசிரியரும், புலவருமாக விளங்கிய பாரவி(Bharavi)யும் அக் காலத்தில் வாழ்ந்த புலவராவார். பாரவியைப் பற்றி பாணர் எவ்விதத்திலும் குறிப்பிடவில்லை எனினும், கி.பி. 634ஆம் ஆண்டு ஐஹோல் குறிப்பு அவரைப் புகழ்ந்துரைப்பதிலிருந்து, அவர் பாணருக்கு நெடுங்காலத்திற்கு முன் வாழ்ந்தவராக இருக்க முடியாது என முடிவு செய்யலாம்.[1] ஜானகிஹரனு என்ற காவியத்தை இயற்றிய குமாரதாசரும் அக் காலத்தில் வாழ்ந்த மற்ரெருரு பெரும்புலவராவார். ஏனெனில், அவர் கி.பி. 650ஆம் ஆண்டு காசிகாவிரித்தி (Kasikavritti)யைப் பற்றி அறிந்தவராகவே காணப்படுகிருர். சிசுபாலபதா(Sisupalabadha)வின்[2] ஆசிரியரும், மிகப் புகழ் பெற்று விளங்கியவருமான மாகா(Magha)வும் அக் காலத்தில் வாழ்ந்த புலவராவார். கற்பனை வளம் மிக்க சுபாந்து (Subandhu), பாணர் காலத்திற்குச் சற்று முன் வாழ்ந்தவர் ஆவார். ஏனெனில், ஹர்ஷ சரித்திரத்தின் முன்னுரையில் பாணர் அவர் எழுதியுள்ள வாசவதத்தா(Vasavadatta)வைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பாணரால் முற்றிலும் எழுதி முடிக்கப்படாத காதம்பரியை அவருடைய மகன் பூசன பட்டர் (Bhusana Bhatta) குறைவின்றிப் பூர்த்தி செய்து முடித்தார். ஹர்ஷரின் காலத்தில் காஞ்சியை ஆட்சி புரிந்த மகேந்திர விக்ரமாவும் திறமை மிக்க புலவராக விளங்கினுர். அவர் மத்த விலாசம் (Matta Vilasa) என்ற நாடகத்தை எழுதிய ஆசிரியர் ஆவார். மகேந்திர விக்ரமா ஏழாம் நூற்ருண்டின் முதல் கால் பகுதியில் காஞ்சியை ஆண்டார்.[3] ஹர்ஷர் காலத்தில் தென் பகுதியில் ஆட்சி புரிந்தவரும், ஹர்ஷரின் ஆற்றல் மிக்க பகை

[1] கீத் (Keith)-Classical Sanskrit Literature-பக்கம் 51
[2] கீத்-Classical Sanskrit Literature-பக்கம் 54
[3] R. K. முகர்ஜி-ஹர்ஷர்-பக்கம் 138

வருமாக விளங்கிய இரண்டாம் புலிகேசியின் அரசவைப் புலவராக விளங்கிய ரவி கிருதி (Ravi Kirti) தம்மைப் போற்றிக் காக்கும் அரசரின் வீரத்தையும் வெற்றிகளையும் சிறப்பித்து, கி.பி. 634ஆம் ஆண்டு ஐஹோல் குறிப்பில் கவிதையாகக் குறிப்பிட்டுள்ளார். அக் கவிதையில் அவர் காளிதாசரையும் பாரவியையும் தம்முடன் ஒப் பிட்டும், தம்மைக் காளிதாசரின் ரகுவம்சத்தைக் கற்றுணர்ந்தவர் என்றும், அலங்கார சாஸ்திரக் (Alamkara Sastrs) கோட்பாடுகளில் தாமும் சிறந்த புலமை படைத்தவராக விளங்குவதாகவும், தம்முடைய உட்பிரிகா(Utpriksas)க்களில் சில மிஞ்ச முடியாத சிறப்புப் பெற்று விளங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார். கடைசியில் அக் காலத்தில் வாழ்ந்த பெரும்புலவர்கள் வரிசையில் பாணரின் உறவினரான மயூராவையும், மாதங்க திவாகரர் (Matanga Divakara)வையும் பற்றிக் குறிப்பிட வேண்டும். மயூரா, புகழ் மிக்க சூர்யசடாகா(Suryasataka)வின் ஆசிரியர் ஆவார். மாதங்க திவாகரரின் கவிதைகளில் சில இன்றும் காப்பாற்றப் பட்டு, அவருடைய புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கு கின்றன.[1]

மதமும், கல்வியும் அக் கால இந்தியாவில் ஒருங்கே சிறப்புப் பெற்று விளங்கின என்பதை முன்பே கண்டோம். பௌத்த மடங்களும், ஆசிரமங்களும் கல்விச்கூடங்களாகவே விளங்கின. அங்கு அளிக்கப்பட்ட கல்வியின் தரமும், கடுமையான பயிற்சியும், கற்கும் சூழ்நிலையும் மிகச் சிறந்த மாணவர்களை உருவாக்கியது. இந்தியாவில் வாழ்ந்த பெரும்பான்மையான மக்கள் இந்துமத அல்லது பௌத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களாக இருப்பினும், கடவுளின் உருவச் சிலைகளைக் கோவில்களில் அமைத்து வணங்கும் பழக்கத்தைப் பின்பற்றுபவர்களாகவே விளங்கினர். இந்துமதக் கோட்பாடுகளைப் பின்பற்றும் மக்கள் சிவன், விஷ்ணு, சூரிய தெய்வங்களை வணங்கினர். அக் காலத்தில் இந்துக்கள், பௌத்தர்கள் ஆகிய இருவருக்கும் புனித தலமாக விளங்கிய கன்யா-குப்ஜாவில் மேலே குறிப்பிட்ட மூன்று தெய்வங்களின் கோயில்களும் காணப்பட்டன என யுவான் சுவாங் தம்முடைய பயணக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். சைவப் பிரிவினர்களுக்கு இன்று போலவே அன்றும் காசி சிறந்த வழிபாட்டு ஸ்தலமாக விளங்கியது. காசியில் ஏறக்குறைய 100 இந்து தெய்வங்களின் கோயில்கள் காணப்பட்டன எனவும், அவற்றில் வழிபாடு நடத்தியவர்கள் பெரும்பாலும் சைவப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் சீனத்துப் பயணி குறிப்பிடுகிறார். சைவப் பிரிவினர்களில் சிலர் முடியை மொட்டை அடித்துக்கொண்டும், ஆடையின்றியும்,

[1] கீத்-Classical Sanskrit Literature-பக்கம் 120

திருநீற்றை உடலில் பூசிக்கொண்டும் காணப்பட்டனர். சுமார் நூறு அடி உயரமுள்ள தேவனின் உருவத்தை (சிவலிங்கம்) ஒரு கோயிலில் கண்டதாக யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[1] பௌத்த மதம் மிகச் சிறப்பாக விளங்கிய இடங்களிலும் பல இந்துக் கோயில்கள் காணப்பட்டன. பௌத்தர்களின் பெத்தல காமாகக் கருதப்படும் கபிலவஸ்துவில் ஈஸ்வரனின் கோயில் ஒன்று காணப்பட்டது எனவும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். சிவ வழிபாட்டுடன் துர்க்கையை வணங்குதலும் மக்களிடையே மிகுந்து காணப்பட்டது. பஞ்சாபில் சாலதுரா(Salatura)விற்கு அருகில் சிவனுடைய ஆலயத்திற்குப் பக்கத்தில் பீமா தேவி (Bhima Devi)யின் கோயிலும் காணப்பட்டதாக யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். அக் கோயிலைத் திருநீறு பூசிய தீர்திகர்கள் (Tirtikas) கவனித்துக்கொண்டனர்.[2] போத் கயா(Bodh Gaya)விலும் பூமாதேவியின் கோயில்கள் இருந்தன.[3] முல்தானில் (Multan) மிகப் புகழ் பெற்று விளங்கிய சூரிய பகவானின் கோயில் கீர்த்தி பெற்று விளங்கியது. 'அக் கோயிலில் விலையுயர்ந்த கற்களாலும், நகைகளாலும் அலங்கரிக்கப்பட்ட தங்க விக்ரகம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. தினந்தோறும் ஏறக்குறைய 1000 யாத்திரிகர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அக் கோயிலுக்கு வருகை புரிந்து கடவுளை வழிபட்டனர். இரவு முழுவதும் விளக்குகள் அக் கோயிலுக்கு ஒளியூட்டின. பெண்கள் இடைவிடாது இசைக் கருவிகளை முழக்கியும், மீட்டிக்கொண்டும் காணப்பட்டனர். சாம்பிராணியின் நறுமணம் இடைவிடாது போடப்பட்டு, மலர்களும் வழங்கப்பட்டன.' அரசர்களும், நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பிரபுக்களும் விலையுயர்ந்த பொருள்களைக் கடவுளுக்குக் காணிக்கையாக அளித்தனர். மேலும், பயணிகள் தங்குவதற்கென இளைப்பாறும் விடுதிகளைக் கட்டித் தந்து, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவப் பணியும், தேவையுள்ளவர்களுக்கு உணவும், சுவைநீரும் இலவசமாகவே அளித்தனர்.[4]

மஹாயானப் பிரிவின் வளர்ச்சி காரணமாக, இந்து மதத்தில் போன்று உருவச் சிலைகளை அமைத்து வழிபடும் வழக்கம் பௌத்த மதத்தினர்களிடையே பரவியது. நாளடைவில் புத்தரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட இடங்களில் ஸ்தூபங்களும், ஆலயங்களும் தோன்றின. புத்தரின் சீடர்களுக்காகவும் சில

1 வாட்டர்ஸ்-ii-பக்கம் 47
2 வாட்டர்ஸ்-i-பக்கம் 221
3 வாட்டர்ஸ்-ii-பக்கம் 124
4 வாட்டர்ஸ்-ii-பக்கம் 254

இடங்களில் ஸ்தூபங்கள் கட்டப்பட்டன. மதுராவில் சாரிபுத்ரா (Sariputra), மௌடு கலபுத்ரா (Maud Galaputra) உபாலி (Upali), ஆனந்தா, இராகுல ஆகியோரின் உருவச் சிலைகளுக்கு வழிபாடுகள் நடத்தப்பட்டன என்பதை யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். பௌத்தப் புனித நூல், சூத்திரங்கள், வினய, அபிதர்மா ஆகியவற்றை விளக்கும் ஸ்தூபங்கள் பலவிடங்களில் எழுப்பப்பட்டிருந்தன என ஐந்தாம் நூற்றுண்டில் இந்தியாவில் பயணம் செய்த பாஹியான் குறிப்பிட்டுள்ளார். மகதத்தில் இயங்கி வந்த ஒரு மஹாயான பௌத்த மடத்தைக் கீழ்க்காணுமாறு யுவான் சுவாங் விளக்கியுள்ளார்: 'ஆலயத்தின் நடுவில் 30 அடி உயரமுள்ள புத்தரின் உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு இடப்புறமாகத் தாரா போதி சத்துவரின் (Tara Bodhi Sattva) சிலையும், வலப்புறம் அவலோ கிடீஸ்வரா போதிசத்துவரின் (Avalokitesvara Bodhi Sattva) சிலையும் அமைக்கப்பட்டிருந்தன.'[1]

இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் கொள்கை பற்றி எவ்வளவு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும், சிலைகளை அமைத்து வழிபடும் முறையை இரு பிரிவினரும் ஏற்றுக்கொண்டிருந்ததால், இந்தியா முழுவதிலும் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் தோன்றலாயின. இந்தியாவின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் பௌத்த ஆலயங்கள், மடங்கள், ஸ்தூபங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றுடன் தேவன் கோயில்களும் காணப் பட்டன.

நாட்டை ஆட்சி புரியும் அரசரின் குணநலன்கள், அவர் பின் பற்றும் கொள்கைகள் ஆகியவற்றைப் பொறுத்து, அற வாழ்வு, மதத்துறை ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்படும் எனலாம். மதத் துறைக்கும், கற்றலுக்கும் ஹர்ஷர் பேராதரவு அளித்தது பட்டு மின்றி, அத் துறைகளில் தாமும் மிகவும் சிறப்புப் பெற்று மக்களுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கினர். ஹர்ஷர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்திலிருந்தே பௌத்த மதத் தைத் தழுவியவராகக் காணப்படவில்லை. அச் சமயத்திலும், பின்பு பௌத்த மதத்தைத் தழுவிய சமயத்திலும், அவர் வேறு பிரிவு களின் கொள்கைகளைப் புறக்கணிக்கும் குறுகிய மனப்பான்மை கொண்டவராக விளங்கவில்லை. நாட்டை ஆட்சி புரியும் பேரரசர் ஒருவர் அது போன்று பரந்த மனப்பான்மை கொண்டிராம லிருப்பது, பல்வேறு பிரிவுகளில் நம்பிக்கை கொண்டவர்கள் வாழும் நாட்டில் நல்லதொரு சூழ்நிலையைத் தோற்றுவிப்பதில் இடையூருக விளங்கும். பாணரின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷரின்

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 105

முன்னோர்கள் சைவத்திலும் தாந்தரீக வழிபாட்டிலும் நம்பிக்கை கொண்டவர்கள் என அறிகிறோம். பிரபாகர வர்த்தனரின் காலத்தில் அரண்மனையில் குல தெய்வத்தை வணங்கும் மக்களின் எண்ணிக்கை மிகுந்து காணப்பட்டது. மேலும் தலைநகரில் சந்தி, மகாகாலா(Mahakala)வை வழிபடுவோர் மிக அதிகமாகக் காணப்பட்டனர். ஆறு நிவேதன தியாகங்களை நிறைவேற்றுபவர்களும், மகா மாயூரி (Maha Mayuri) துதிப்பாடல்களைப் பாடுபவர்களும் (பௌத்த வித்யா), வேதங்களை ஜபித்து, சடங்குகளை நிறைவேற்றும் பிராமணர்களும் பிரபாகர வர்த்தனரின் அரண்மனையில் காணப்பட்டனர். சைவர்கள் விருபாக்ஸா(Virupaksa) விக்ரகத்தைப் பல ஆயிரம் குடம் பாலில் அபிஷேகம் செய்தனர். சிவாலயத்தில் ருத்ரா மந்திரங்களைத் துதிக்கும் ஒலி நிறைந்திருந்தது. ஹர்ஷர் பிறந்த செய்தியை மக்களுக்கு அறிவித்த சமயம் நடத்தப்பட்ட வைத்தான (Vaitana) யாகத்தின் தீக்கதிர்கள் சுடர் விட்டுப் பிரகாசித்தன. தூய வெள்ளையுடை அணிந்த அர்ச்சகர்கள் குடும்பப் பூசாரியின் தலைமையில் வேதத்தைத் துதித்துக்கொண்டே இருந்தனர் எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார். நிலாலோஹிதா (Nilalohita) என்ற ருத்ராவையும், சிவனையும் மனம் உருகி வழிபட்ட பின்னரே ஹர்ஷர் படையெடுப்புகளை மேற்கொண்டார். இவ் விளக்கங்களில் இருந்து இந்துமதக் கோட்பாடுகளும், வழிபாட்டு முறைகளும் வர்த்தனர்களின் அரண்மனையில் மிகச் சிறப்பாக மதிக்கப்பட்டன என்பதை அறிகிறோம். ஹர்ஷரால் எழுதப்பட்ட ரத்னாவளி, பிரியதர்சிகா ஆகிய நாடகங்களின் வாழ்த்துப் பாடல்களில் சம்போ (Sambhu), அல்லது ஹரா (Hara) என்றழைக்கப்பட்ட சிவபெருமானுடன் அவருடைய அடியார்களான கணங்கள் (Ganas) கௌரி அல்லது கிரிஜா, கங்கா, பிரம்மா, கிருஷ்ணா, இலக்குமி, சரஸ்வதி ஆகியோரும், குமாரா அல்லது தசமுகா, அல்லது தக்ஷா போன்ற தெய்வங்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர். நாகானந்தா என்ற பௌத்த நாடகத்தின் முதலில் புத்த ஜீனவை வாழ்த்தும் பாடல் காணப்பட்டாலும், கௌரி, கருடா ஆகிய இந்து தெய்வங்களுக்கும் ஹர்ஷர் சிறப்பான இடத்தை வழங்கியுள்ளார். மேலே குறிப்பிட்டுள்ள மூன்று நாடகங்களிலும் நிருவாகத் திறமையையும் மக்களின் நலனையும் வேண்டி, இந்துமத வழிபாடுகளையும், யாகங்களையும் பின்பற்றுவதில் ஹர்ஷர் காட்டிய ஆர்வத்தை விளக்கும் பகுதிகள் காணப்படுகின்றன. ஹர்ஷரின் சோனுபட் செப்பு முத்திரையிலும், மதுபான் செப்பேட்டிலும் பிரபாகர வர்த்தனர் சூரியனை வழிபட்டவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். ஹர்ஷர் பல படையெடுப்புகளை மேற்கொண்டு நாட்டை விரிவு படுத்தும் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றினாலும்,

அமைதியை நாடும் பண்பும், மத வளர்ச்சிக்குப் பணி புரியும் ஆர்வமும் அவரிடம் காணப்பட்டன. ஹர்ஷரும், அவருடைய தங்கை ராஜ்யஸ்ரீயும், விந்திய மலைப்பகுதியில் அமைந்திருந்த ஆசிர மத்தின் தலைவரான திவாகர மித்ரரின் முயற்சியால் பௌத்த மதத்தைத் தழுவினர் எனப் பாணர் குறிப்பிடுகிறார். ஆனால் வேறு வர்த்தனக் குடும்பக் குறிப்புகளிலிருந்து, ஹர்ஷரின் மூத்த சகோதரர் ராஜ்யவர்த்தனரே முதலில் பௌத்த மதத்தைத் தழுவிய பரம சௌகதா (Parama-saugata) அல்லது புத்தரின் பக்தர் என அறிகிறோம். ராஜ்யவர்த்தனரின் மதமாற்றத்தைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும், யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷரும் ராஜ்யஸ்ரீயும் பௌத்தர்களாக மாறி மஹாயானப் பிரிவைப் பின்பற்றுபவர்களாக விளங்கினர் என்பதை ஐயத்திற்கு இடமின்றி அறிகிறோம். ஹீனயானப் பிரிவில் குறை காணும் ஹர்ஷரின் மனநிலையை முதல் சந்திப்பிலேயே யுவான் சுவாங் அறிந்து குறித்துள்ளார். ஹர்ஷர் புதிய பிரிவில் கொண்டிருந்த நம்பிக்கையும் ஆர்வமுமே கனோஜ், பிரயாகையில் இரு பெரும் பேரவைகளைக் கூட்டக் காரணமாகும். அப் பேரவைகளில் மஹாயான பௌத்தக் கருத்துகளுக்கு மட்டுமே சிறப்பிடம் அளிக்கப் பட்டது. யுவான் சுவாங் புதிய பிரிவின் கொள்கைகளை விளக்கி, எக் காலத்திலும் மற்றெல்லாப் பிரிவுகளையும்விட அதுவே சிறந்தது என நிலை நாட்டினார்.

இப் பேரவை நிகழ்ச்சிகளின் சமயத்தில்தான் ஹர்ஷர் சற்று குறுகிய மனப்பான்மையுடன் நடந்துகொண்டார். சகிப்புத் தன்மையின்றிச் சற்று மதவெறியுடன் ஹர்ஷர் நடந்துகொண்டதை யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். ஹர்ஷரின் நிருவாகத் திறமை, பரந்த மனப்பான்மை, கொடைத் தன்மை ஆகிய குணநலன்களுக்கு மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒரு கறையாகவே காணப்படுகிறது. பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கங்களிலிருந்து ஹர்ஷர் இந்துமதக் கொள்கைகளுக்குப் பல வகைகளிலும் இழுக்குக் கற்பித்திருப்பதை அறிகிறோம். ஹர்ஷரும் அவருடைய மேலதிகாரத்திற்கு உட்பட்டிருந்த காமரூபத்தின் அரசர் பாஸ்கரவர்மரும் பேரவையில் இந்திரன் பிரம்மாவின் சிலைகளைப் புத்தரின் சிலைக்குச் சற்றுக் கீழான மரியாதை அளித்து வழிபட்டது, இந்து மதத்தைப் பின்பற்றும் பெரும்பாலான மக்கள் விரும்பக் கூடாத ஒன்றாகும். மேலும், பௌத்த மதத்தின் வேறு பிரிவினரிடமும் ஹர்ஷர் சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை. யுவான் சுவாங்கின் மஹாயானப் பிரிவின் கருத்துகளுக்கு மாறான கருத்து உடையவர்கள் பேரவையில் அதைத் தெரிவித்தால்

அவர்களுடைய நாக்கு துண்டிக்கப்படும் என ஹர்ஷர் வெகுண்டு அறிவித்தது, மத உரிமைகளுக்கு அவர் இடமளிக்க மறுத்தார் என்பதற்குச் சான்று ஆகும். இது போன்ற அறிவிப்பின் விளைவாகவே ஹீனயானப் பிரிவைச் சார்ந்தவர்கள் ஹர்ஷர்மீது வெறுப்புக்கொண்டு அவரை அல்லது யுவான் சுவாங்கைக் கொல்லுவதற்குச் சதி செய்தனர். ஹர்ஷரின் அறிவிப்பினுல் 'தவறுன கொள்கையைப் பின்பற்றுபவர்கள் வெளியேறி ஓடியதால் கருத்தரங்கில் பங்கு கொள்ள எவரும் காணப்படவில்லை.'[1] இந்தியாவின் மத ஒற்றுமைக்கும் தாராள மனப்பான்மைக்கும் எடுத்துக்காட்டாகவும், சிறந்த மதப்பேரவையாகவும் விளங்க வேண்டிய கனோஜ் பேரவை சிறப்பிழந்து, புதிய பிரிவினரின் கருத்து விளக்கக் கூட்டமாகவே முடிவடைந்தது. ஹர்ஷரின் சகிப்புத் தன்மையின்மையின் காரணமாகவும், அரசு கருவூலத்தின் பொருள்கள் அனைத்தையும் பௌத்தர்களுக்கு வாரி வழங்கிவிட்டு வெகு தூரத்திலிருந்து பேரவையில் கலந்துகொள்வதற்காக வந்த இந்து மதப் பிரிவினர்களைப் புறக்கணித்ததால், வெகுண்டு ஹர்ஷரைக் கொல்வதற்கு முயற்சிகள் நடைபெற்றன எனச் சீனத்துப் பயணியின் பீல் விளக்க உரையில் காணப்படுகிறது.[2]

கனோஜ் பேரவை நிகழ்ச்சிகளில் ஹர்ஷர் சற்றுக் கடுமையாக நடந்துகொண்டாலும், அரசின் நிருவாகக் கொள்கைகளில் அக் கருத்துகளுக்கு இடமளிக்கப்படவில்லை என்பதைக் காணும் சமயம் மன நிறைவு ஏற்படுகிறது. கனோஜ் பேரவை நிகழ்ச்சிக்கு அடுத்து நடைபெற்ற பிரயாகை பேரவை, சற்று மாறுபட்டு குறிப்பிட்ட ஒரு பிரிவினரின் கூட்டமாக இன்றி, பல்வேறு மதம், வகுப்புக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களுக்கும் கொடையளிக்கும் பேரவையாக நடைபெற்று முடிந்தது. பிரயாகைப் பேரவையில் கலந்துகொள்ளும்படி ஸ்ரமணுக்கள், ஐந்து இந்தியாவிலும் வாழ்ந்த பிராமணர்கள், ஏழைகள், ஆதரவு அற்றோர், அநாதைகள் ஆகிய அனைவருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன.[3] பௌத்தத் துறவிகளுக்கு அதிக அளவில் கொடையளிக்கப்பட்டாலும், தனி ஒரு மனிதனின் சிறந்த கொடைத் திறனுக, வரலாற்றில் குறிக்கப்படும் அளவிற்குத் தாராளமாக ஹர்ஷர் கொடை அளித்தார். பிரயாகைப் பேரவை நிகழ்ச்சியில் ஹர்ஷர் மிகப் பெருந்தன்மையுடன், குறிப்பிட்ட ஒரு பிரிவைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டிக்கொள்ளாமல், வேறு மதத்தைச் சார்ந்த தெய்வங்களுக்கும் உரிய மரியாதை அளித்து நடந்து

[1] லைப்-பக்கம் 180
[2] பீல்-i-பக்கம் 219
[3] லைப்-பக்கம் 184

கொண்டார். சூரியன், சிவன் ஆகியோரின் சிலைகளுக்குப் புத்தரின் சிலைக்குப் போன்று பெருமை அளிக்கப்பட்டது. ரிக் வேதத்தையும், சாம வேதத்தையும் தீவிரமாகக் கடைப்பிடிக்கும் அறிஞர்களுக்குப் பல கிராமங்களை ஹர்ஷர் கொடையளித்தார் எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார்.

ஹர்ஷர் கிறிஸ்துவர்களிடமும் தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கி.பி.639ஆம் ஆண்டு அலோபென் (Alopen) என்ற சிரிய கிறிஸ்துவரும், அவருடைய நண்பர்களும் ஹர்ஷரின் அரசவைக்கு விஜயம் செய்தனர் என டாக்டர் எட்கின்ஸ் (Edkins) கூறுகிறார்.[1]

ஹர்ஷர் பௌத்த மதத்திற்குச் சிறப்பான ஆதரவு நல்கி புதிய பிரிவின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத் தகுந்த பணியும் புரிந்துள்ளார். கனோஜ், பிரயாகைப் பேரவைகள் அதற்குச் சிறப்பான எடுத்துக்காட்டுகள் ஆகும். காஷ்மீரத்தின் அரசரைத் தம்முடைய படையாற்றலால் பணிய வைத்துப் புத்தரின் புனிதப் பல்லை எடுத்து வந்து, கனோஜ் நகருக்கு மேற்கே அமைந்திருந்த ஒரு மடாலயத்தில் வைத்துப் போற்றினார்; சுமார் 100 அடி உயரமுள்ள வெண்கல கோபுரம் ஒன்றை ஹர்ஷர் நாளந்தாப் பல்கலைக் கழகத்திற்குப் பரிசளித்தார். ஒரிசா படையெடுப்பை மேற்கொண்டு ஹர்ஷர் பல பகுதிகளை வென்ற சமயம், அங்கு ஹீனயான பௌத்தப் பிரிவு மக்களிடையே மிகச் சிறப்புடன் விளங்குவதைக் கண்டார்; உடனே நாளந்தாப் பல்கலைக் கழகத்திலிருந்து புதிய பிரிவைச் சேர்ந்த சாகரமதி (Sagaramati), பிரஜ்ஞரஷ்மி (Prajnarasmi), சிம்மரஷ்மி (Simharasmi), சீனத்துப் பயணி யுவான் சுவாங் ஆகிய நான்கு தேர்ந்த துறவிகளை அங்கு அனுப்பி மஹாயானப் பிரிவு வளரத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்.[2]

பௌத்த மதத்தைப் பரப்புவதற்காக ஹர்ஷர் மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதை, யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். ஆண்டுதோறும் பல பகுதிகளில் வாழ்ந்த பௌத்தத் துறவிகள் கனோஜ் நகரில் கூடினர். அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் ஹர்ஷர் கொடுத்து உதவினார். அக்கூட்டம் இருபத்தொரு நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெற்றது. நாடெங்கிலும் வாழ்ந்த பௌத்தத் துறவிகளை ஒன்று கூட்டி, கருத்தரங்குகள் நடத்துவதை ஹர்ஷர் பெரிதும் விரும்பினார்;

1 அத்னேயம் (Athenaeum)-ஜூலை 3-1880-பக்கம் 8
2 லைப்-பக்கம் 160

கருத்தரங்குகளில் சிறந்து விளங்குபவர்களுக்குத் தகுந்த வெகு மதிகளை அளித்தார். மிகச் சிறந்து விளங்குபவர்களுக்கு உயர்ந்த பெருமையான 'அரியணை'யும், ஹர்ஷரின் ஆசிரியர் என்ற மரியாதையும் அளிக்கப்பட்டன. அத் துறவிகளிடமிருந்து சமயத் துறை பற்றிய அறிவுரைகளை அவ்வப்பொழுது ஹர்ஷர் பெற்றுக் கொண்டார். பௌத்த மதக் கோட்பாடுகளையும், நெறிகளையும் சிறப்பாகப் பின்பற்றும் துறவிகளுக்கும் உரிய பெருமை வழங்கப் பட்டது. ஒழுக்க நெறி தவறும் துறவிகளுக்கு அரசவையை விட்டு வெளியேற்றப்படுதல், நாட்டை விட்டே துரத்தப்படுதல் போன்ற கடுமையான தண்டனைகள் அளிக்கப்பட்டன.[1]

ஹர்ஷர், கங்கையின் கரையை ஒட்டிச் சுமார் 100 அடி உயரமுள்ள ஆயிரக்கணக்கான ஸ்தூபங்களை அமைத்தார் என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். பௌத்தர்கள் புனித ஸ்தலமாகக் கருதும் இடங்களில் பல மடாலயங்களையும் ஹர்ஷர் கட்டி முடித்தார்; மேலும், வழிபாட்டுக் கூடங்களை அமைத்தும், மடாலயங்களின் கூடங்களைச் சிறப்பாக அலங்கரித்தும் கொடுத்தார்.[2] ஹர்ஷர் காலத்தில் கட்டப்பட்ட மிகச் சில பௌத்த மட அமைப்புகளையே புதைபொருள் ஆராய்ச்சி யாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இறுதியாக ஐந்து இந்தியா முழுவதிலும் புலால் உண்ணுதலைத் தடுத்துச் சட்டமியற்றியதை இங்குக் குறிப்பிடலாம். உயிர்களைக் கொல்லுதலையும், சில வகைப் பௌத்தப் பிரிவினர் புலால் உண்ணுதலையும் தடுத்துச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அச் சட்டங்களை மீறுபவர்களுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின்படி கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. நடைமுறையில் இக் கட்டுப்பாடு எவ்வளவு தூரம் அமுல் நடத்தப்பட்டது என்பதும் ஐயப்பாட்டிற்குரியது.

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் வேறு பகுதிகளில் பௌத்த மதம் அழிந்துகொண்டிருந்தாலும் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, அம் மதம் கனோஜ் நகரில் வளர்ந்து கொண்டிருந்தது. ஹர்ஷரின் காலத்திற்குப் பின் பௌத்த மதம் வளர்ச்சி குன்றி அழியத் தொடங்கியது என்பதற்குப் பாஹியானின் பயணக் குறிப்புகள் சான்றும். யுவான் சுவாங்கின் பயணக் காலத்தில் கனோஜில் சுமார் 100 பௌத்த மடங்கள் காணப் பட்டாலும் பாஹியான் இரண்டு மடங்களை மட்டுமே அங்குக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 344

[2] R. K. முகர்ஜி-ஹர்ஷா-பக்கம் 146

ஹார்ஷரின் குணநலன்களை மதிப்பிடும் வேளையில் அவரை ஒரு பௌத்தர் என்று மட்டும் கருதுவது சரியாகாது. வேறு மதங்களுக்கும், சமூகத்திற்கும் அதே அளவு தொண்டு செய்துள்ளார். ஹார்ஷர், 'போருக்குத் தேவையான பொருள்களைத் தவிர, மற்றவை அனைத்தையும் மக்கள் அனைவருக்கும் பாகுபாடின்றி, மதப் பேரவைகளில் கொடையளித்தார். அவ்வாறு கொடை பெற்று மகிழ்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து இலட்சம் என யுவான் சுவாங்கின் பயணக் குறிப்பு கூறுகிறது. தனிப்பட்ட ஒருவரின் கொடைத்திறனுக்கும், தாராள மனப்பான்மைக்கும் ஹார்ஷர், வரலாற்றில் அழியாச் சிறப்பைப் பெற்று விளங்குகிறார். ஹார்ஷர் நாள்தோறும் சுமார் ஆயிரம் பௌத்தத் துறவிகளுக்கும், ஐந்நூறு இந்துக்களுக்கும் இலவச உணவு வழங்கினார்; மேலும், தம்முடைய ஆட்சிப்பகுதியில் அமைந்திருந்த நெடுஞ்சாலைகள், நகரங்கள், கிராமங்களில் இளைப்பாறும் இடங்களை (புண்ணிய சாலைகள்—Punyasalas) அமைத்து, இலவச உணவும், சுவைநீரும் கொடுத்து உதவினார். பயணிகளுக்கும், ஏழைகளுக்கும் வேறுபாடின்றி இலவச மருத்துவப் பணி புரிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அரசு அந் நிலையங்களுக்குத் தேவையான மருந்துகளை அனுப்பி வைத்தது என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[1] இப் பணியில் ஹார்ஷர் அசோகரையும் மிஞ்சி விடுகிறார். அசோகரின் புண்ணிய சாலைகளும், இளைப்பாறும் இடங்களும், பயணிகளுக்கு இலவச உணவும், மருத்துவப் பணிகளையும் அளிக்கவில்லை.[2] யுவான் சுவாங்கின் குறிப்புகளில் காணப்படும் இச் செய்திகள் பாணரின் குறிப்புகளிலும் காணப்படுவதால், ஹார்ஷரின் பொதுப்பணிகள் மிகச் சிறந்து விளங்கின என்பதில் ஐயமில்லை. பொதுப்பணிகளை நிறைவேற்றும் சமயம் ஹார்ஷர், 'அதைப் பெறுபவர்களை வேறுபடுத்திப் பிரிக்கவில்லை என்பதிலிருந்து, அவரது பெருந்தன்மையை உணருகிறோம். 'ஹார்ஷரின் பொற்காலத்தில் மதம் தழைத்தோங்கிற்று. தீமைகள் யாகத்தின் புகையில் மறைந்தன. அவை வானத்தில் அலைந்து திரிந்து சொர்க்கத்தில் புனிதப்படுத்தப்பட்டு வெள்ளைக் கொடி பறக்கும் அலங்காரம் மிக்க ஆலயங்களின் உயர்ந்த கோபுரங்களால்[3] மழையாகப் பொழிந்தன. தர்மம் தழைத்தது. கிராமங்களில் அடர்த்தியான சோலைகள், இளைப்பாறும் இடங்கள்,

[1] பீல்-i-பக்கம் 214

[2] R. K. முகர்ஜி-ஹார்ஷா-பக்கம் 147

[3] வாட்டர்ஸ்-i-பக்கம் 340. கனோஜ் நகரில் 100 இந்துக் கோயில்களும், 100 பௌத்த மடங்களும் காணப்பட்டன என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

தர்ம சாலைகள், நாடக அரங்குகள் ஆகியவை பெருகி நாட்டில் செல்வ நிலை தோன்றியது.'

ஹர்ஷர் ஆர்வத்துடன் மதத் துறை வளர்ச்சிக்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டதைப் போன்றே கல்விக்கும் ஊக்கமளித்தார் இந்திய அரசர்களில் சிலரே சிறந்த கல்வியாளராகவும் விளங்கினர். அவ் வரிசையில் ஹர்ஷருக்கும் சிறப்பான இடம் உண்டு. பாணரின் விளக்கங்களிலிருந்து ஹர்ஷர் ஆழ்ந்த கல்வியும், கவித்திறனும் பெற்று விளங்கினர் என அறிகிறோம். 'கவிதைப் போட்டிகளில் வேறு எவரிடமும் காணப்பட்ட திறனைப் பின்பற்றாத தனித்தன்மை' ஹர்ஷரிடம் காணப்பட்டது, 'அவரது புலமையைச் சொற்களால் விளக்க இயலாது', 'அவர் கற்றவற்றிற்கு அளவில்லை' எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார். 'கலைத் துறைகளும் அவருடைய அறிவுத் திறனுக்கு முன் குறுகியவையாகவே விளங்கின' எனவும் பாணர் குறிப்பிட்டுள்ளார். இவ் விளக்கங்கள் அரசவைப் புலவரால் சற்று மிகைப்படுத்திப் புகழ்ந்து கூறப்பட்டவை எனக் கொண்டாலும், ஹர்ஷரின் புலமையையும், கல்வியாற்றலையும் விளக்க வேறு பல ஆதாரங்கள் உள்ளன.

சீனப் பயணி இட்சிங், ஹர்ஷரின் ஆட்சிக்காலத்திற்குச் சற்று பின்னரே (கி.பி. 673-87) இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். அவர், இலக்கியத் துறையில் ஹர்ஷர் மிக ஆர்வம் கொண்டு விளங்கினர் எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு சமயம் சீலாதித்யர் அரசவைப் புலவர்களைக் கவிதைப் படைப்புகளைத் தருமாறு வேண்டிக்கொண்டார் உடனே அக் காலத்தில் மக்களிடையே புகழ் பெற்று விளங்கிய கருத்துகளை, ஜாதகாக்கள் (Jatakas) அல்லது புத்தரின் முன் பிறவிகள் பற்றிய செய்திகள் கொண்ட சுமார் 500 பாடல்களாக ஹர்ஷரிடம் அவர்கள் சமர்ப்பித்தனர். இவ்வாறு அளிக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஜாடக மாலா (Jataka Mala) என அழைக்கப்படுகிறது. ஆர்யசூரா (Arya Sura) என்பவர் அதன் தொகுப்பு ஆசிரியர்களுள் ஒருவர் என இட்சிங் குறிப்பிட்டுள்ளார்.[1] ஹர்ஷரின் இலக்கியப் படைப்புகளைப் பற்றிக் குறிப்பிடும் சமயத்தில் ஜிமுத்தவாகன போதி சத்துவரின் (Jimutavahana Bodhi Sattva) கதையைக் கவிதை வடிவில் ஹர்ஷர் தந்துள்ளதையும் இட்சிங் குறிப்பிட்டுள்ளார். நாகானந்தா நாடகத்தை நடிப்பு, நடனம் ஆகியவற்றிற்கு இடமளிக்கும் இசைக் கோவையாக மாற்றி, பௌத்தக் கருத்துகளைப் பிரபலப் படுத்த ஹர்ஷர் தம்முடைய கவிதை ஆற்றலைப் பயன்

[1] தகாகசு-பக்கம்-vi

படுத்தினர்.[1] வடமொழி இலக்கிய வரலாற்றில் ஹர்ஷருக்குச் சிறப்பான இடம் உண்டு. ரத்னவளி, பிரியதர்சிகா, நாகானந்தா ஆகிய மூன்று நாடகங்களும், ஓர் இலக்கண நூலும் ஹர்ஷரின் படைப்புகளாம். பழங்கால இந்திய இலக்கியத் திறனாய்வு ஆசிரியர்கள், ஹர்ஷரின் புலமையைச் சிறப்பாகப் புகழ்ந்துரைத்துள்ளனர். அவர் கீத கோவிந்தத்தின் ஆசிரியரான ஜெயதேவர், பாஷா (Bhasa), காளிதாசர் போன்ற பெரும்புலவர்களுடன் இணையாகக் கருதப்படும் தகுதி வாய்ந்தவர் எனக் கருதுகின்றனர். பன்ஸ்கீராச் செப்பேட்டுக் குறிப்பில் காணப்படும் ஹர்ஷரின் அலங்காரம் மிக்க கையெழுத்திலிருந்து அக் கலையில் அவர் சிறந்து விளங்கினர் என அறிகிறோம். ஹர்ஷரைப் போலவே அவருடைய தங்கை ராஜ்யஸ்ரீயும் மதப்பற்றும், கல்வி ஆர்வமும் கொண்டு விளங்கினர். யுவான் சுவாங் மஹாயான பௌத்தக் கோட்பாடுகளை விளக்கும் சமயத்தில், ஹர்ஷருக்குப் பின் அமர்ந்திருந்து ராஜ்யஸ்ரீயும் அதை ஆர்வத்துடன் கேட்டார்.[2] ராஜ்யஸ்ரீ பௌத்த மதத்தின் சம்மாத்தியாப் பிரிவைப் பின்பற்றினர்; அப் பிரிவைப் பற்றிய கொள்கைகளைத் தெளிவாக அறிந்திருந்தார்.

மிகப் பெரும் நாடக ஆசிரியரா்கவும், கல்வியாளராகவும் விளங்கிய ஹர்ஷர் தம் ஆட்சிக் காலத்தில் புலவர்களுக்கும், கற்றோருக்கும் ஆதரவு அளித்துப் போற்றினர். 'அவருடைய கல்வியறிவு, கற்றோருக்கு உதவத் தூண்டியது' எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷரின் ஆதரவு பெற்ற புலவர்களில் பாணர் சிறப்பான இடத்தை வகிக்கிறார். ஹர்ஷ சரித்திரம், காதம்பரி என்ற இரண்டு படைப்புகளின் ஆசிரியராகப் பாணர் விளங்குகிறார். ஹர்ஷரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களில் மிகச் சிலருடைய பெயர்களையே நாம் அறியும் வாய்ப்புப் பெற்றிருக்கிறோம். ஹர்ஷரின் ஆதரவைப் பெற்ற ஹரிதத்தா (Haridatta) என்ற புலவர், மிகப் பெரும் புகழ் அடைந்ததாக ஹர்ஷரின் ஒரு செப்பேட்டுக் குறிப்பில் காணப்படுகிறது.[3] ஒரிசாவில் படையெடுப்புகளை மேற்கொண்டு பயணம் செய்த சமயம், அக் காலத்தின் மிகச் சிறந்த கல்வியாளரும், மக்களால் போற்றப்பட்டவரும், ஹித்து வித்யா, சப்த வித்யா, யோக சாஸ்திரம், நான்கு வேதங்கள், வானநூல், புவியியல், மருத்துவம், கணக்கு, மந்திரம் ஆகியவற்றில் சிறந்த புலமை கொண்டு விளங்கியவருமான ஜெயசேனுவிற்கு எண்பது கிராமங்களின் வருவாயை ஹர்ஷர் கொடையாக அளித்தார். ஆனல், ஜெயசேனு அதைப் பெற்றுக்

[1] தகாகசு-பக்கம் 163
[2] லைப்-பக்கம் 176
[3] E. I-i-பக்கம் 180

கொள்ள மறுத்தார், இந் நிகழ்ச்சி, ஹர்ஷர் கல்வியாளர்களுக்கு அளித்த ஆதரவிற்கும், அக் காலக் கல்வியாளர்களின் ஒழுக்கத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ஹர்ஷர் தமக்குச் சொந்தமான நிலத்திலிருந்து பெறும் வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியை அறிவாற்றல் மிக்கவர்களுக்கும், மற்றொரு பகுதியை மதப் பணிக்காகவும் செலவழித்தார்.[1]

ஹர்ஷர் பின்பற்றிய கொள்கை, அவருடைய சிற்றரசர்களுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிற்று. காமரூபத்தின் அரசர் பாஸ்கர வர்மர், யுவான் சுவாங்குடன் நட்புக்கொண்டு, பயன் பெற விரும்பினார். அப்பொழுது யுவான் சுவாங் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் தங்கி இருந்தார். பாஸ்கர வர்மர் நாளந்தாவின் தலைவர் சிலாபத்ரருக்குச் சீனத்துப்பயணியை அனுப்பி வைக்கும்படி ஒரு கடிதம் வரைந்தார். அக் கடிதம் இரண்டு நாள் பயணத்திற்குப் பின், தூதுவர்கள் மூலம் சிலாபத்ரரிடம் சேர்க்கப்பட்டது. அக் கடிதத்திற்கு யுவான் சுவாங் எவ்வித மறுமொழியும் அளிக்கவில்லை. பாஸ்கர வர்மர் சீனப்பயணிக்கு மற்றும் ஒரு கடிதம் வரைந்தார். அதற்கும் யுவான் சுவாங் மறு மொழி அளிக்காது போகவே, மூன்றாவதாகச் சிலாபத்ரருக்கு மிகுந்த கோபத்துடன் வரைந்த கடிதத்தில், யுவான் சுவாங்கை, தம்முடைய நாட்டில் பௌத்தக் கருத்துகளைப் பரப்பும் பணியை மேற்கொள்ள அனுப்பி வைக்கும்படியும், அவ் வேண்டுகோளைச் சீனப்பயணி ஏற்றுக்கொள்ள மறுத்தால், தீய குணங்களால் உந்தப்பட்டு, வங்காளத்தின் மத்தியப் பகுதியை ஆட்சி புரிந்த சசாங்கன் பௌத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களைத் துன்புறுத்திப் புனித போதியை வெட்டி வீழ்த்தி, பௌத்த மடங்களை அழித்ததைப் போன்று, தாமும் நாளந்தாப் பல்கலைக் கழகத்தைப் படை கொண்டு இடித்துத் தரைமட்டமாக ஆக்கி விடப்போவதாகப் பாஸ்கர வர்மர் அச்சுறுத்தினார். மூன்றாவது கடிதம் விரும்பிய பலனைத் தந்தது யுவான் சுவாங் தூதுவர்களுடனே காமரூபம் வந்து சேர்ந்தார்; சுமார் நான்கு மாதகாலம் அங்குத் தங்கி இருந்து, பௌத்த மதத்திற்குப் பணியாற்றினார். இந் நிலையில் ஹர்ஷரின் வேண்டுகோளுக்கிணங்கி இருவரும் அவரைக்காண ராஜ்மகாலுக்குப் பயணமானார்கள் என்பது முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. ஹர்ஷரைப் போலவே, பாஸ்கர வர்மரும் பௌத்த மதப்பணியைத் தொடர்ந்தார்; கனோஜ், பிரயாகைப் பேரவைகளில் பங்கு பெற்றுக் கொடையளித்தும் சிறப்புப் பெற்றார். சீனப்பயணி தாய்நாடு திரும்பும் சமயம், பௌத்த மதத்தின்மீது கொண்டிருந்த பற்றின்

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 176

காரணத்தால், 'யுவான் சுவாங் தம்முடைய நாட்டில் தங்கி மதப்பணியைத் தொடர்ந்து மேற்கொண்டால், அவருக்கு உதவியாக 100 மடாலயங்களை நிறுவுவதாக வாக்களித்தார்.'[1] ஹர்ஷரைப் போலவே வலபி அரசர் துருவபட்டரும், ஜலந்தராவின் அரசர் உதித்தாவும், கபிசின் (Kapis) அரசரும் பௌத்தமதப் பணியை மேற்கொண்டிருந்தனர்.

ஹர்ஷர் இயற்றிய நாடகங்கள்

ரத்னுவளி, பிரியதர்சிகா, நாகானந்தா ஆகிய மூன்று நாடகங்களை ஹர்ஷர் எழுதினர் என முடிவு செய்யப் பல ஆதாரங்கள் உள்ளன. முதலில் மூன்று நாடகங்களின் நடையிலும், பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்களிலும் மிகுந்த ஒற்றுமை காணப்படுகிறது என கீத் குறிப்பிட்டுள்ளார்.[2] அவை மூன்றும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ரத்னுவளியும், பிரியதர்சிகாவும் கருத்து, அமைப்பைப் பொறுத்தவரை ஏறக்குறைய ஒன்ருகவே காணப்படுகின்றன. இரு நாடகங்களும் நான்கு பகுதிகளைக்கொண்டிருக்கின்றன. நாடகத்தின் தலைவர் உதயனுவின் காதல்களில் ஒன்றே நாடகத்தின் மையக் கருத்தாகும்.[3] மூன்று நாடகங்களின் முன்னுரைப் பகுதியில் காணப்படும் சொற்கள் ஒரே மாதிரியாக நாடகத்தின் தலைப்பிற்கு ஏற்ற தேவையான மாற்றங்களை மட்டும் கொண்டுள்ளன. நாடகங்களில் காணப்படும் கவிதை அடிகளும், சொற்ருெடர்களும் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன. ஹர்ஷர் தம்முடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்ற விரும்பிய குறிக்கோள்களும், சாதனைகளும் மறைமுகமாக அவருடைய நாடகங்களில் இடம் பெற்றுள்ளதைத் தெளிவாகக் காண முடிகிறது.

நாடகங்களின் ஆரம்பப் பகுதியில் அரசர்களின் அவை பற்றிய விளக்கம் காணப்படுகிறது. நாட்டின் பல்வேறு பிரிவுகளை ஆண்ட அரசர்கள் ஸ்ரீ ஹர்ஷ தேவ (Sri Harsa Deva)[4] பேரரசருக்குக் கட்டுப்பட்டு அவையில் அமர்ந்திருந்தனர், ஹர்ஷர் அங்கு

[1] லைப்- பக்கங்கள் 170, 171, 187

[2] கீத் (Keith)-சமஸ்கிருத நாடகம் (Sanskrit Drama-1924)-பக்கம் 170

[3] கீத்-சமஸ்கிருத நாடகம்-1924-பக்கம் 170

[4] ஸ்ரீ ஹர்ஷ தேவ் (கி.பி. 1113-25) எனக் காஷ்மீரத்தின் அரசரே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளார் என்ற கருத்திற்கு ஆதாரமில்லை. காஷ்மீரத்தை ஆண்ட எந்த ஓர் அரசரும், மேலே குறிப்பிட்டிருப்பது போன்ற அரசியல் செல்வாக்கு பெற்றிருக்கவில்லை. மேலும், காஷ்மீரத்தின் ஜெயபிடா (கி.பி. 779-813)வின்கீழ் வாழ்ந்த தாமோதர குப்தர் ரத்னுவளியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, காஷ்மீரத்தின் ஹர்ஷ தேவரே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளார் எனக் கருதுவது தவருகும்.

அமர்ந்திருந்த அரசர்கள் அனைவரையும் வசந்த விழா (நாகானந்தாவில் இந்திர விழா) நிகழ்ச்சிகளில் பங்கு பெறுமாறு அழைப்புகளை அனுப்பி இருந்தார். பேரரசர் என்ற முறையில் ஹர்ஷர் கொண்டிருந்த அதிகாரத்தையும் அரச விழாக்கள், மதப் பேரவைகள், படையெடுப்பு விழாக்கள் முதலியவற்றில் சிற்றரசர்கள் பங்கு கொள்ளுதல் என்ற வழக்கத்தையும் இங்குக் காணப்படும் அடிகள் விளக்குகின்றன.

ஹர்ஷரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளும், அறிந்தோ அறியாமலோ நாடகத்தில் பங்கு பெற்று விடும் நிலைகளையும் நாம் காண்கிறோம். ரத்னாவளி நாடகத்தில் இளவரசி துரத்தப்பட்டு, விந்திய மலைப்பகுதியில் வாழ்ந்த விந்திய கேது என்ற படைத் தலைவரிடம் தஞ்சம் புகும் நிகழ்ச்சி காணப்படுகிறது. ஹர்ஷரின் தங்கை ராஜ்யஸ்ரீ சசாங்கனால் விந்திய மலைப்பகுதிக்குத் துரத்தப் பட்டு, சரபாகேது (Sarabha-ketu), வியாஹ்ரகேது (Vyaghraketu) என்ற படைத்தலைவர்களிடம் தஞ்சம் புகுந்து, பின் ஹர்ஷரால் மீட்கப்பட்ட வரலாறு நாம் அறிந்ததே அதே போன்று ஹர்ஷரின் அரசியல் வாழ்வில் நடைபெற்ற மகிழ்ச்சி மிக்க நிகழ்ச்சியும் ரத்னாவளியில் பங்கு பெற்றுள்ளது. 'பல புதிய பகுதிகளை வென்று, கடல்கள் வரை நாட்டின் எல்லையை விரிவுபடுத்தி, அதே நேரத்தில் தங்கையை மீட்கும் வாய்ப்பும் ஒரே நேரத்தில் கிடைப்பதைப் போன்ற நிறைவான இன்பம் வேறு எதுவும் இல்லை' என்ற அடிகள் ரத்னாவளியில் காணப்படுகின்றன.[1]

ஹர்ஷரின் ஆட்சிக்கால வரலாற்றின் சில நிகழ்ச்சிகளும் அவருடைய நாடகத்தில் எதிரொலிக்கின்றன. ரத்னாவளி, பிரியதர்சிகா நாடகங்களின் கடைசியில் காணப்படும் அடிகளில் ஹர்ஷர் தம்முடைய ஆட்சியில் மக்கள் எவ்வாறு மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று விரும்பினாரோ, அந்த விருப்பத்திற்கு எழுத்து வடிவம் தந்துள்ளார் எனலாம்.

'உலகை ஆளும் தேவன் வாசவா (Vasava) காலம் தவறாது மழை பொழியச் செய்து, நிலத்தில் பயிர்கள் மிகுதியாக வளர அருள் புரியட்டும். மக்கள் கடவுளைச் சிறப்பாக வழிபட்டு, மதப் பற்றுடையவர்களாக விளங்கட்டும். கடவுளுடைய அருள், மக்களுக்குத் தடையின்றிக் கிடைத்து, எல்லா நலன்களும் பெற்று விளங்கட்டும்.'

ஹர்ஷர் தம் ஆட்சிக் காலத்தில் மக்களின் கல்வி வளர்ச்சிக்கும், மத முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்கும்

[1] ரத்னாவளி-பகுதி IV-அடி 39

பாடுபட்டார். அந்த எண்ணத்தை ரத்னுவளியில் அரசர் கூறுவதாக உள்ள கீழ்க்காணும் அடிகள் விளக்குகின்றன:

'பேரரசிற்கு உட்பட மறுத்த பகைவர்கள் வெல்லப்பட்டனர்; நிருவாகத் திறமை மிக்க அமைச்சர்கள் அரசு பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றினர்; மக்கள் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபட்டனர்; நலன்கள் அனைத்தையும் பெற்று மக்கள் அமைதி யுடனும், பாதுகாப்புடனும் வாழ்ந்தனர்.'

ஹர்ஷர் தம்மை ஓர் ஆற்றல் மிக்க பேரரசராக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய எண்ணம் கீழ்க்காணும் வரி களில் எதிரொலிக்கிறது:

'அரசர்களுக்கு அரசர் எல்லா வெற்றிகளையும் பெற்ருர்; மதப் பணியை மேற்கொண்டவர்களின் துன்பங்களைப் போக்கினுர்; நிலத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்தன; அரசர்களுக்கு அரசர் எல்லாச் சிறப்புகளையும் பெற்று விளங்கினுர்.'

ரத்னுவளியில் வத்ஸ ராஜா(Vatsa Raja)வின் தளபதியான ருமன்வத் (Rumanvat திற்கும், கோசலா(Kosala)விற்கும்; பிரிய தர்சிகாவில் வத்ச ராஜாவின் தளபதி விஜயசேனுவிற்கும், விந்திய மலைப் படைத்தலைவரான விந்திய கேதுவுக்கும் நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளை, நூற்றுக்கும் அதிகமான போர்களில் பங்கு பெற்று, வெற்றி கண்ட ஹர்ஷர் கீழ்க்காணுமாறு விளக்குகிருர்:

'இரும்புத் தொப்பிகளை அணிந்திருப்பினும், போர் வாள்களின் தாக்குதல்களால் வீரர்களின் தலைகள் பிளக்கப்பட்டன; காயங் களிலிருந்து தீக்குழம்பு போலக் குருதி பெருக்கெடுத்து ஓடியது; தம்முடைய படையின் பெரும்பகுதியை இழந்தபொழுது ருமன்வத், வெறிகொண்ட யானையில் சவாரி செய்த கோசலா விற்குச் சவால் விடுத்து, நூற்றுக்கணக்கான அம்புகளை எய்து கொன்ருர்.'

வெல்லப்பட்ட பகைவன் வீர மரணத்தைப் பிரியதர்சிகாவில் கீழ்க்காணுமாறு ஹர்ஷர் புகழ்ந்துரைப்பது, அவர் போன்ற வெற்றி வீரருக்குத் தகுதி உடையதே ஆம்.

'புவியில் மிகச் சிறப்பும் புகழும் மிக்க வழியான வீர மரணத்தை விந்தியகேது தழுவிக்கொண்டதன் மூலமாக நம்மை வெட்கப்படச் செய்து விட்டார்.'

ரத்னுவளி நாடகத்தில் இறந்து பட்ட கோசலா அரசரைப் பற்றி வத்ச ராஜா கூறும் சொற்கள் மிகவும் பொருத்தம் உடைய

வையாகக் காணப்படுகின்றன. 'பகைவர்களும் போற்றும் வீரம் மிக்கவருக்கு இறப்பும் சிறப்பு மிக்கதே.' இது போன்ற சொற்றொடர்கள், ஹர்ஷரின் குணநலன்களையே பிரதிபலிக்கின்றன எனலாம். உண்மையான வெற்றி வீரர் ஒருவர் பகைவருக்குத் தரவேண்டிய உரிய மரியாதையும், சிறப்பும், ஹர்ஷரின் நாடகங்களில் காணக் கிடக்கின்றன எனக் கீத் குறிப்பிடுகிறார்.[1]

ரத்னவளியில் வத்ச ராஜாவின் அரசவை, பாசறை பற்றிய விளக்கங்களில் காணப்படும் ஆடம்பரமும், சிறப்பும் ஹர்ஷரின் அரசவை பற்றிய பாணரின் விளக்கங்களை நினைவுபடுத்துகின்றன. போர்க்கூடாரத்தில் எதனுடனும் ஒப்பிட முடியாத அளவிற்குக் குதிரைகளும் யானைகளும் எண்ணிக்கையில் மிகுந்து காணப்பட்டன. இசை முழக்கமும், சிற்றரசர்களின் அவையும், வெற்றிச் செய்திகளும் ஹர்ஷரின் படை அணி வகுப்பை நினைவு படுத்துகின்றன.

ரத்னவளி, பிரியதர்சிகா நாடகங்களை எழுதி முடித்த பின்னரே ஹர்ஷர் நாகானந்தாவை[2] இயற்றியிருக்க வேண்டும். முதல் இரண்டு நாடகங்களையும்விட நாகானந்தாவில் முதிர்ச்சி காணப்படுகிறது. தவிர, நாகானந்தாவின் அடிப்படைக் கருத்தும் முந்தியவற்றைவிட முற்றிலும் மாறுபட்டதாகும். பிற்காலத்தில் ஹர்ஷர் பௌத்த மதத்தில் தீவிரப் பங்கு பெற்ற சமயத்தில் அந் நாடகம் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. முந்திய நாடகங்களில் காணப்பட்டதைப் போன்று, போர், வன்முறை அல்லது மக்களின் காதல், மற்றம் மென்மையான உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல், உயர்ந்த அற வாழ்க்கை, கடமைகள், கடுமையான குறிக்கோள்கள் முதலியவற்றிற்கு நாகானந்தாவில் சிறப்பான இடம் வழங்கப்பட்டிருக்கிறது. தியாகம், தன்னடக்கம், கொடை, தாராள மனப்பண்பு, சாவிலும் அமைதியுடன் இருக்கும் பக்குவம் ஆகிய உயர்ந்த பண்புகளுக்கு ஹர்ஷர் நாகானந்தாவில் இடமளித்துள்ளார். இக் குணங்களுக்கு ஹர்ஷர் முக்கியத்துவம் அளித்து ஜிமூதவாகனு (Jimutavahana)வை உருவாக்கியுள்ளார். போர் வீரம், வெற்றிப் பெருமிதம், புகழ் ஆகியவற்றைப் புறக்கணித்து, அற வாழ்வு, ஒழுக்கம் முதலிய தியாக உணர்வினால் உந்தப்பட்டுத் தம் வாழ்க்கையைப் பிறருக்கு அர்ப்பணிக்கும் பண்பு ஆகியவை நாடகப் பாத்

[1] கீத்-சமஸ்கிருத நாடகம்-பக்கம் 178

[2] நாகானந்தாவைப் பற்றிக் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாகா (Magha) அறிந்தவராகக் காணப்படுகிறார். ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் காஷ்மீரத்தை ஆண்ட அவந்தி வர்மனின் அரசவைப் புலவரான சிவஸ்வாமின் (Sivasvamin) என்பவரும் நாகானந்தாவைப் பற்றி அறிந்திருந்தார். (கீத்-Classical Sanskrit Literature-பக்கங்கள் 54, 60)

திரத்தில் காணப்படுகின்றன. மக்கள் ஒழுக்கம் மிக்க வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற ஹர்ஷரின் உணர்வை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு மிக்க நாடகமாக நாகானந்தா விளங்குகிறது. ஹர்ஷர் பௌத்த மதத்தில் கொண்டிருந்த பற்றிற்கும் நாகானந்தா ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பௌத்தக் கருத்துகளைச் சாதாரண மக்களும் விரும்பி அறிந்துகொள்ளும் வகையில் இசைக் கோவையாகவும் நாகானந்தா அமைந்துள்ளது. இந்தியாவில் பயணம் செய்த சீனப்பயணிகள் அதன் சிறப்பை உணர்ந்து, அதைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். அஃது அங்கிருந்து ஜப்பானுக்கு எடுத்துச் செல்லப் பட்டு இன்றும் அந் நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பது, ஹர்ஷருக்குச் சிறப்பு அளிப்பதாகும். வெற்றிச் சிறப்புகளைப் பெற்று விளங்க விரும்பி, போரில் ஈடுபட்டு, மற்றப் பகுதிகளில் ஆட்சி புரிந்தவர்களைத் தம்முடைய மேலதிகாரத்தை ஒப்புக்கொள்ளும்படி தூண்டிய நூற்றுக்கணக்கான வெற்றிகளையும் பெற்ற ஹர்ஷர், உயிர்களுக்குத் தீங்கிழையாமையை வாழ்க்கையின் அடிப்படையாகக்கொண்டு உய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதைக் காண்கிறோம். அரசர் என்ற முறையில் தம்முடைய பொறுப்புகளையும், மக்கள் ஒழுக்கம் மிக்க அற வாழ்வு வாழ வேண்டியதன் தேவையையும் ஹர்ஷர் நன்கு உணர்ந்திருந்தார்.

ஹர்ஷ சரித்திரத்தின் முன்னுரையில் 'ஆத்ய ராஜா (Adhya Raja) இலக்கியம், அரசியல் ஆகிய இரு துறைகளிலும் சிறந்து விளங்கியவர்' எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார். மேலும், 'ஹர்ஷரின் இலக்கியத் திறனை விளக்கச் சொற்கள் போதுமானதாக இல்லை'[1] எனவும், 'ஹர்ஷரிடமிருந்து கவித்திறன் மிக்க கதைகள் (காவிய கதாசு-Kavya Kathasu) நீரூற்றுப் போலத் தடையின்றிப் பெருக்கெடுக்கும்' எனவும் பாணர் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷர், விக்ரமாதித்யர் ஆகிய இருவரும் முஞ்ஜன் (Munja), போஜன் (Bhoja) ஆகியோருடன் இலக்கிய அவையில் பங்கு பெற்றனர் எனப் பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த உதய சுந்தரி கதை(Udaya Sundari Katha)யில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாணரின் இலக்கியத் திறனை உணர்ந்து, அவருக்கு ஹர்ஷர் பெருஞ்செல்வத்தைப் பரிசாக அளித்தார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. சார்ங்கதாராவின் பத்தாதி(Sarngadhara's Paddhati)யில் (காலம் கி.பி. 1363) காணப்படும் ஜெயதேவரின் புகழ் மிக்க பாடல்களில் சில பாஷா, காளிதாசர், மேலும் ஹர்ஷரின் காலத்திலேயே வாழ்ந்த மயூரா,

1 ஹர்ஷ சரித்திரம்-மொழிபெயர்ப்பு-பக்கம் 65

சோரா (Chora) ஆகிய பெரும் புலவர்களுக்கு இணையான இடத்தை ஹர்ஷருக்கு அளித்துள்ளன. மதிசூதனும் (கி.பி. 1654ஆம் ஆண்டு) ஹர்ஷரை பாணர், மயூரா ஆகியோருக்கு இணையாகக் கருதுவதோடு, 'நாட்டிகா(Natika) வாகிய ரத்னவளியை எழுதிய புலவர் இனத்தைச் சேர்ந்த சிறப்பான ஆசிரியர், (கவிஜனமூர்த்தன்யாஸ்ய—Kavijanamur-dhan-yasya) மாளவத்திற்கும் அதன் தலைநகரான உஜ்ஜயினிக்கும் பிரபு' எனவும் கூறுகிறார்.

ஹர்ஷர் ஒரு சிறந்த நாடக ஆசிரியர் என்பதைத் தவிர, மற்றொரு சிறப்பையும் பெற்று விளங்குகிறார். பன்ஸ்கீரா, மதுபான் செப்பேட்டுக் குறிப்புகளில் காணப்படும் எழுத்துகளும், முதலில் குறிப்பிட்டிருப்பதில் உள்ள ஹர்ஷரின் கையெழுத்தும் அச் செப்பேடுகளை ஹர்ஷரே எழுதியிருக்க வேண்டும் என முடிவு செய்ய உதவுகின்றன. அச் செப்பேடுகளின் வரிகளில் சிறப்பான கவித்திறன் மிளிர்கிறது. செப்பேடுகளில் காணப்படும் சில அடிகள் (மதுபான் செப்பேடு-6-7, பன்ஸ்கீரா செப்பேடு-5-6) ஹர்ஷரின் மூத்த சகோதரர் ராஜ்ய வர்த்தனர் வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டதை அனுதாப உணர்ச்சியுடன் விளக்கு கின்றன. பன்ஸ்கீரா 13, மதுபான் 16-வது அடிகள், செல்வம் மின்னலையும் நீர்க்குமிழியையும் போன்று நிலையற்றது ஆகையால், அரசக் குடும்பத்தினரும் மற்றவர்களும் உண்மையுடன் கொடை யளிக்க வேண்டும் எனக் கூறுகின்றன. அடுத்ததாக மற்றோர் அழகான பகுதி காணப்படுகிறது.'

'உடலாலும், உள்ளத்தாலும், சொல்லாலும் உயிர்களுக்கு நல்லவற்றையே செய்ய வேண்டும். அதுவே மக்கள் தர்மம், அல்லது கடவுளின் அருளைப் பெற வழி' என ஹர்ஷர் கூறுகிறார்.

பௌத்தமதக் கொள்கைகளை விளக்கும் இரண்டு வடமொழிக் கவிதைகளும் ஹர்ஷரால் இயற்றப்பட்டவை எனக் கூறப் படுகின்றன. அவற்றுள் ஒன்று சுப்ரபாத ஸ்தோத்ரம் (Supra-bhata Stotra) என்ற புத்தரைப் புகழ்ந்துரைக்கும் காலை நேர வழிபாட்டுப் பாடல் ஆகும். அதில் ஹர்ஷரின் பெயர் காணப் படுகிறது. மற்றொன்று அஸ்தமஹா ஸ்ரீசைத்ய சம்ஸ்கிரித ஸ்தோத்திரம் (Astamaha-srichaitya-samskrita Stotra) என்ற 'எட்டு சிறப்பு மிக்க பௌத்த ஆலயங்களைப்' பற்றிய துதிப்பாட லாகும். சீன மொழியிலும் ஆக்கப்பட்டுள்ள இப் பாடலை 'நற் குணத்தின் சூரியன்'-சீலாதித்யர் என்ற இந்திய அரசர் இயற்றினார் என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். மேலே குறிப்பிட்டுள்ள பட்டம் ஹர்ஷருக்கே உரியது என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

8. ஹர்ஷர் காலக் கலை வளர்ச்சி

ஹர்ஷர் காலத்தில் இந்தியாவில் நிலவிய கலைகளும், அவற்றின் வளர்ச்சியும் குப்தர் காலக் கலை அமிசங்களுடன் தொடர்பு கொண்டவையாம். ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் குப்தர் காலக் கலைகள் வளர்ச்சியுற்ற நிலை அடைந்து விட்டதால், ஹர்ஷருக்கு எனச் சிறப்பாக உரியவற்றை மட்டும் பிரித்துக் கூறுவது சிரமம். ஆகவே, குப்தர் காலக் கலை வளர்ச்சியின் வரலாற்றையும், சிறப்பான அமிசங்களையும், பொதுவாகவும், சுருக்கமாகவும் ஒவ்வொரு வகையிலும் உள்ள மிகச் சிறப்பான எடுத்துக்காட்டுகளை மட்டும் தெரிந்துகொள்வதன் மூலமாக ஹர்ஷர் காலக் கலைகளைப் பற்றி அறியலாம். குப்தர் காலத்தைப் பொற்காலம் எனக் குறிப்பதன் காரணம், அக் காலத்தில் இந்திய இலக்கியம் மட்டுமின்றிக் கலைகளும் பெற்றிருந்த சிறப்பும் ஆகும். பல திறமை மிக்க குப்தப் பேரரசர்கள் திறமை மிக்க சிறந்த நிருவாகத்தை ஏற்படுத்தி, பல நூற்றாண்டுகள் நிலையான ஆட்சியைத் தோற்றுவித்து, இந்திய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றனர். குப்தர் கால அரசியல் சிறப்பு கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது. இந்தியா கலைத் துறையில் கண்டிருந்த முன்னேற்றத்தை வெளிநாடுகளில் வாழ்ந்த மக்களும் உணர்ந்திருந்தனர். இந்தியாவின் பண்பாட்டு வளர்ச்சி, மத்திய ஆசியா வழியாகத் தூரக்கிழக்கு ஆசிய நாடுகளையும், கடல் வழியாக இந்தோனேசியா, அதைச் சுற்றியுள்ள நாடுகள் ஆகியவற்றையும் 'படையெடுத்து' அழியாச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. குப்தர்களின் வீழ்ச்சிக்குப் பின் தோன்றிய சிறப்பான ஆட்சியின் காலத்தில் வடதிசையில் அமைந்திருந்த பாக்ட்ரியா (Bactria) வழியாக மேல்திசை நாடுகளிலும், தென்பகுதி குஷானர், ஆந்திர அரசுகளால் ரோமானியர்களுடன் வர்த்தகத் தொடர்பும் ஏற்பட்டது.

குப்தப் பேரரசர்களின் காலத்தில் இந்து மதமோ அல்லது பௌத்த மதமோ அரசாங்க மதமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதிலிருந்தும், எல்லா மதங்களுக்கும், அவற்றிலிருந்து தோன்றிய உட்பிரிவுகளுக்குக் குப்த அரசர்கள் அளித்த ஆதர

விலிருந்தும், இந்தியப் பண்பாட்டின் உண்மையான சிறப்பையும், கருத்துகளை வரவேற்று ஏற்றுக்கொள்ளும் பரந்த மனப்பண்பையும் அறிய முடிகிறது. அக் கொள்கையின் விளைவாகச் சைவம் வைணவம், சக்தி வழிபாடு. மஹாயான, ஹீனயானப் பிரிவுகள் முறையே சிவன், விஷ்ணு, தேவி, புத்தர் அல்லது போதி சத்துவத்தைக் கடவுளாகக் கொண்டு சிறந்த வளர்ச்சி பெற்று விளங்கின. இப் பிரிவுகளுடன் தொடர்புள்ள சில வணக்க முறையினால் தோன்றிய ஆலயங்கள் குப்தர் காலக் கட்டடக் கலை, சிற்பக் கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

இப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் சிறப்பாக விளங்கிய அமைப்புகளைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வதன் மூலமாகச் சிற்பக்கலை வளர்ச்சியைப் பற்றி அறியலாம். கான்பூர் மாவட்டத்திலுள்ள பித்தர்கான் (Bhitargaon) கோயில் கி.பி. ஆறும் நூற்றுண்டில் கட்டப்பட்டது எனக் கருதப்படுகிறது. அக் கோயில் செங்கற்களால் கட்டப்பட்டதாகும். சதுரமான அமைப்பும், உயர்ந்த கோபுரமும் அங்குக் காணப்பட்டன. கோபுரம் வேலைப்பாடுகள் மிக்கதாகவும், சிவ கோட்பாடுகளை விளக்கும் அழகு மிக்க சிலைகளைக் கொண்டும் காணப்படுகிறது. குவாலியரில் பெஸ்நகருக்கு (Besnagar) அருகில் உள்ள உதயகிரி மலையில் அமைந்திருக்கும் குகைக் கோயில்களுள் ஒன்றில் கி.பி. 401ஆம் ஆண்டுக் குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அக் கோயிலில் விஷ்ணுவின் வராக அவதாரத்தை விளக்கும் சிற்பங்களும், கங்கை, யமுனை ஆகிய சிலைகளும், மகரா நின்று கொண்டிருப்பது போன்ற சிலையும் காணப்படுகின்றன. கிருஷ்ணர் வாழ்ந்ததாகக் கருதப்படும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள பத்ஹரி(Pathari)யில் அமைந்திருக்கும் கோயிலில் பிறந்த குழந்தையான கிருஷ்ணர் தாயின் அருகில் படுத்திருப்பதை ஐந்து ஏவலாளர்கள் காணும் காட்சி செதுக்கப்பட்ட ஒரு பெரிய சிற்ப வேலைப்பாடு மிக்க அமைப்பும் காணப்படுகிறது. இந்தியாவின் சிற்ப வேலைப்பாடு மிக்க அமைப்புகளில் இதுவே மிகப் பெரியதும், மிக்க அழகுடையதும் எனப் பெக்லர் (Beglar) கருதுகிறார்.

ஜான்சி மாவட்டத்தின் லலித்பூர் பிரிவில் உள்ள தியோகாரி (Deogarh)-ல் அமைந்திருக்கும் கோயில் கி.பி. ஆறும் நூற்றுண்டில் கட்டப்பட்டதாகும். கோயில்களின் சுவர்களிலும், கூரைகளிலும் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகளின் தரம் மிக உயர்ந்ததாகும். யோகி வடிவில் உள்ள சிவபெருமானின் அழகு மிக்க சிற்பம் ஒன்று அங்கு உள்ளது. இந்தியச் சிற்பக்கலையின் மிக உயர்ந்த படைப்புகளில் இச் சிற்பமும் ஒன்று என V. A. ஸ்மித் குறிப்பிடுகிறார்.

விஷ்ணு அனந்தநாகத்தின்மீது சாய்ந்திருப்பதைப் போன்று மற்றொரு சிற்பமும் அங்குக் காணப்படுகிறது. கிருஷ்ண பகவானின் வாழ்க்கையை விளக்கும் அழகு மிக்க சிற்பங்களும், கோவர்த்தன மலையை அவர் தூக்குவது போன்ற மற்றொரு சிற்ப வேலைப் பாடுகள் கொண்ட அமைப்பும் ஜோத்பூருக்கு அருகில் உள்ள மண்டோர(Mandor)ரில் காணப்படுகின்றன. அவை கி.பி. நாலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாம். அலகாபாத் மாவட்டத்தில் உள்ள கோசா(Kosam)மில் கி.பி. 458ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சிவன், பார்வதி உருவங்கள் கொண்ட சில சிற்ப வேலைப்பாட்டுத் தொகுப்புகள் காணப்படுகின்றன,

அடுத்தபடியாக, ஐஹோலில் உள்ள துர்க்கை கோயிலில் காணப்படும் நடமாடும் சிவனின் சிலை ஒன்றை இங்குக் குறிப்பிடலாம். அச் சிலை ஐந்தாம் நூற்றாண்டில் வடிக்கப்பட்ட தாகும். மேலும், ஆறும் நூற்றாண்டைச் சேர்ந்த வைணவப் பிரிவைச் சார்ந்த சிற்ப வேலைப்பாட்டு அமைப்புகள் கொண்ட கட்டடங்கள் பதாமியின் சுற்றுப்புறங்களில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. 'அவை மிகச் சிறந்த இந்து சிற்ப வேலைப்பாடு களாகும்' என ஹாவெ(Havell)லும், குமாரஸ்வாமி (Coomaraswami)யும் கருதுகின்றனர். முதலாவது குகையில் உள்ள சைவக் கோயிலில் சிவ தாண்டவம் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட அமைப்பில் காணப்படுகிறது. இரண்டாவது, மூன்றாவது குகைகள் வைணவக் கோயில்கள் ஆம். நான்காவது குகை ஒரு சமணக் கோயில் ஆகும். ஜின சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட அமைப்பு அதில் காணப்படுகிறது. குப்தர் கால இந்து சிற்ப வேலைப் பாட்டிற்கு எல்லோரா மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கி.பி. 700ஆம் ஆண்டு வெட்டப்பட்ட ஒரு குகையில் தசாவதாரம் அல்லது விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் விளக்கும் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட அமைப்புகள் காணப்படுகின்றன. பைரவர், காளி, மார்க் கண்டேயரைச் சிவன் காப்பது போன்ற சிற்பங்களும் அங்குக் காணப்படுகின்றன. எல்லோராவில் உள்ள காளிதாசர் கோயிலில் அழகு மிக்க தாண்டவக் காட்சி ஒன்று காணப்படுகிறது.

பௌத்தப் பிரிவு சிற்ப வேலைப்பாடுகள் குப்தர் காலச் சிற்பக் கலையின் சிறப்பான அமிசமாகும். இரண்டாவது சந்திர குப்தர், முதலாவது குமார குப்தர், ஸ்கந்த குப்தர் ஆகியோரின் காலத்தைச் சேர்ந்த சிறந்த பௌத்தச் சிற்ப வேலைப்பாடுகள் அலகாபாதிற்கு அருகில் உள்ள கார்வா(Garwah)வில் காணப் படுகின்றன. சாரநாத்தில் காணப்படும் சிற்பங்கள் அவற்றைவிட

மிகச் சிறந்த கலையமிசம் கொண்டு விளங்குகின்றன. சாரநாத்தில் காணப்படும் சில சிற்பங்கள் வேறு காலத்தைச் சேர்ந்தவையாக இருப்பினும், பெரும்பான்மையானவை குப்தர்கள் காலத்தைச் சேர்ந்தவை ஆம். வெளி நாட்டுக் கலையமிசங்களிலிருந்து விடுபட்ட இந்தியக் கட்டடக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் சாரநாத் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.[1] இக் காலத்தைச் சேர்ந்த புத்தர் சிலைகளில் குஷானர்களின் வழியைப் பின்பற்றி அமைக்கப்பட்ட சாயல் காணப்படுகிறது எனினும், ஒரு புதிய முறையும், தேசியக் கலைத் தன்மையும் கொண்டு, அதில் காணப் படும் கலையமிசம் முந்தியதைவிடப் பல வகைகளிலும் மிகச் சிறந்து காணப்படுகிறது என டாக்டர் வோகல் (Vogel) கருதுகிறார்.[2] அக் காலத்தைச் சேர்ந்த புத்தரின் சிலைகளில் புத்தரின் கோட்பாடுகளுக்கு அடிப்படையான, வியக்கத்தக்க அமைதியும், மென்மையான தெய்வீக பாவமும் அழகுற வடிக்கப் பட்டுள்ளன. அதற்கு முந்திய காலத்தில் வடிக்கப்பட்ட புத்தரின் சிலைகளில் காணப்படும் உடைகள் முற்றிலும் மாற்றப்பட்டு, துறவிகளின் மிக மெல்லிய உடைகளைக் காட்டும் சில கோடுகள் மட்டும் காணப்படுகின்றன. புத்தரின் தலையைச் சுற்றிக் காணப்படும் தெய்வீக வளையம் மிக அலங்காரம் உள்ளதாகவும், பூ வேலைப்பாடுகள் மிக்கதாகவும் காணப்படுகின்றது. ஆகவே, ஒளி வளையத்தின்-பிரபாமண்டலத்(Prahamandala)தின் உண்மை யான தத்துவம் முழுவதுமாக மறக்கப்பட்டு விட்டது. இவ்வாறுகப் புத்தரின் சிலைகளில் காணப்பட்ட குஷானர்களின் சிற்பக் கலையமிசம் குப்தர்களின் காலத்தில் புறக்கணிக்கப்பட்டு, இந்தியாவிற்கே உரிய தனித்தன்மை உருவாகியதைக் காண முடிகிறது.

ஈசிபட்டன(Isipatana)வில் அமர்ந்த நிலையில் காணப்படும் புத்தரின் முதல் கொள்கை விளக்கச் சிலை, இந்தியாவின் சிற்பக் கலையில் சிறப்பான ஒன்ருகக் கருதப்படுகிறது. அச் சிலையின் கைகளின் அமைப்பு (தர்ம சக்ர முத்திரை), கீழே காணப்படும் சக்கரம், இரண்டு மான்கள் முறையே கொள்கைகளையும், அக் கொள்கை முதலில் சுழல ஆரம்பித்த மான் தோட்டத்தையும் குறிக்கும்.

'முத்திரை' என்ற மற்ருெரு முறையும் குப்தர்கள் காலத்தில் மிகவும் வளர்ச்சி பெற்றது. புத்தரின் சிலைகளை வடிக்கும் முறையில் முத்திரைகள் பிற்காலத்தில் சிறப்பான பங்கு வகித்தன.

[1] R. K. முகர்ஜி-ஹர்ஷா-பக்கம் 162
[2] டாக்டர் வோகல்-Saranath Museum Catalogue-பக்கம் 19

புத்தரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட சிலைகளின் உருவ அளவைவிடப் பிற்காலத்தில் கடவுளாகக் கருதப்பட்ட புத்தரின் உருவ அளவு, முக்கியத்துவம் பெற்றுப் பெரிதாக விளங்கியது.

ஆரம்ப காலத்தில் பௌத்தக் கோட்பாடுகள் புத்தருக்குச் சிலை அமைப்பதையே தடுத்திருப்பினுங்கூட, குப்தர் காலத்தில் மிக அதிக அளவிலும், பல விதங்களிலும் புத்தர் சிலைகள் வடிக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. பௌத்த மடங்களிலும், வழி பாட்டுக்கூடங்களிலும், ஆலயங்களிலும், ஆலயச் சுற்றுப்புறச் சுவர் மாடங்களிலும், புனித கோபுரங்களிலும் புத்தரின் சிலைகள் காணப்பட்டன.

குப்தர் காலத்தில் பௌத்தச் சிற்பக் கலை அடைந்த மற்றொரு பெரும் மாற்றம், போதிசத்துவப் பிரிவு முக்கியத்துவம் பெற்ற தாகும். மைத்ரேய போதிசத்துவரின் சிலை மட்டுமின்றி, அவலோகிடேஸ்வரா போதி சத்துவரின் சிலைகளையும் நாம் காண்கிறோம்.

பௌத்தச் சிற்பக் கலை வரலாற்றில் காணப்பட்ட மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றம், பல இந்து தெய்வங்களுக்குச் சிலை அமைக்கப்பட்டிருப்பது போன்று, பௌத்தத் தெய்வங்களுக்கும் சிலைகள் அமைக்கும் வழக்கம் தோன்றியதே ஆகும். செல்வத்தை அளிக்கும் பௌத்தத் தெய்வமான வைஸ்ராவண (Vaisravana) செழிப்பின் தேவதை, அதிக நலன்களைக் கொடுக்கும் தேவதை வாசுதாரா, மற்றும் தாரா (Tara), மாரீச்சீ (Marichi) ஆகியோருக்கும் சிலைகள் வடிக்கப்பட்டிருந்ததற்குச் சாரநாத் புதை பொருள்கள் சான்றுகளாக விளங்குகின்றன.

பௌத்த மதத்தில் தோன்றிய ஆலய அமைப்பு, பல சிலைகளுக்கும் வழிபாடு நடத்தும் முறை, தேவதைகளின் எண்ணிக்கைப் பெருக்கம் முதலியன புத்தருக்கும், அவருடைய வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட நிகழ்ச்சிகளுக்கும் வடிக்கப்படும் சிலைகளின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கியக் காரணமாகும். இந்த அமிசத்தைப் பொறுத்த அளவில், குப்தர்காலப் பௌத்தச் சிற்பக் கலை, புத்தரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட மிகச் சிறிய நிகழ்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து, எண்ணற்ற சிலைகள் வடித்த கிரேக்க—புத்தச் சிற்பக் கலையான காந்தாரக் கலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். இக் காரணத்தினாலேயே முன் காலத்தில் கலை உணர்வோடு இரசிக்கப் பட்ட ஜாதகக் கதைகளும், இசைக் கோவைகளும் படிப்படியாகச் சிறப்பிழந்தன.

சாரநாத் சிற்பங்களைத் தவிர, நாளந்தாவில் கண்டெடுக்கப் பட்டுள்ள புதைபொருள் சான்றுகளும் குப்தர் காலச் சிற்பக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

சிற்பக் கலையைத் தவிர மற்ற கலைகளும் குப்தர் காலத்தில் வளர்ச்சி அடைந்தன என்பதற்கு, அங்குக் கண்டு பிடிக்கப் பட்டுள்ள முத்திரைகளும், குப்தர் காலத் தங்கக் காசுகளும் சான்றுகளாக விளங்குகின்றன.

புத்தர் நின்ற நிலையில் இருப்பதாக வடிக்கப்பட்ட குப்தர் காலத்தைச் சேர்ந்த ஒரு சிறிய தங்கச் சிலை இங்கிலாந்தின் தொல் பொருள் நிலையத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. டெல்லியில் காணப்படும் இரும்புத் தூணையும் இங்குக் குறிப் பிடலாம். கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில் சமுத்திர குப்தரால் வெல்லப்பட்ட ஆரியவர்தா (Aryavarta) அரசரான சந்திர வர்மாவினுல் அத் தூண் நிறுவப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கடைசியாகச் சிற்ப, ஓவியக் கலைகளுக்கு ஒருங்கே சிறப்பான எடுத்துக்காட்டாக விளங்கும் அஜந்தா குகைக் கோயில்களையும், ஓவியங்களையும் குறிப்பிட வேண்டும். அஜந்தாவில் காணப்படும் இருபத்தொன்பது குகைக் கோயில்கள் கி.மு. 300ஆம் ஆண்டி லிருந்து கி.பி. 642ஆம் ஆண்டு வரை அமைக்கப்பட்டவை ஆம். எண் XIII குறிக்கப்பட்டுள்ள குகையில் உள்ள உருவங்களுக்கும், சாஞ்சி(Sanchi)யின் உருவங்களுக்கும் ஒற்றுமை காணப்படுவதால், அவை கி.மு. 300ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.[1] எண் VIII-XIII குகைகள், பௌத்த மதத் தொடர்புள்ளவையாகக் காணப்படுவதால், அவை கி.மு. 200-கி.பி. 150ல் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப் படுகின்றன. எண் VI-ம் VII-ம் கி. பி. 450-550ஆம் ஆண்டுகளுக் கிடையே அமைக்கப்பட்டவை ஆகும். எண் I-V, XIV-XXIX குகைகள் கி.பி. 500-642ஆம் ஆண்டுகளுக்கிடையில் வெட்டப் பட்டவை எனக் கருதப்படுகின்றன.

எண் IX, X, XIX, XXVIஆம் குகைகளில் சைத்யா (Chaitya) வடிவமும், மற்றவற்றில் விஹாரங்கள் (Viharas) அமைப்பும் காணப்படுகின்றன.

அஜந்தா குகைக் கோயில்களில் கீழ்க்காணும் சிலைகளை மிகச் சிறப்பாகக் குறிப்பிடலாம்:

[1] R. K. முகர்ஜி-ஹர்ஷா-பக்கம் 164

1. எண் IX-குகையின் வாயிலில் புத்தர் தம் பணியாள்களுடன் காணப்படும் சிலை.

2. எண் XVI, XXII-குகை வாயிலில் காணப்படும் நதி தேவதையின் சிலை.

3. எண் XXVI-குகையில் காணப்படும் $23\frac{1}{4}$ அடி நீளமுள்ள இறந்துகொண்டிருக்கும் புத்தரின் சிலை.

4. எண் XXVI-குகையில் காணப்படும் புத்தரின் கவனத்தை ஈர்க்கும் சிலை.

5. எண் I-குகையில் காணப்படும் புத்தரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட சிலைகள்.

அஜந்தாவின் குகைக் கோயில்களில் காணப்படும் சுவர், கூரைச் சித்திரங்களும், அதன் அழியா வண்ணச் சிறப்பும் அனைவரும் அறிந்ததே. அவை இவ்விடத்தில் சிறப்பாகக் குறிக்கத் தகுதி பெற்றவை ஆம்.

9. பொருளாதார நிலை

ஹர்ஷர் காலத்தின் பொருளாதார நிலையை அறிய யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் மிகவும் பயனுடையவையாக இருக்கின்றன. நகரங்கள், நாட்டின் செல்வ நிலையைக் குறிக்கும் இடங்களாக விளங்கின. சில புதிய நகரங்களும், ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் முக்கியத்துவம் பெற்று வளர்ந்தன. மக்களின் ஆர்வமும், பற்றும் புதிய கொள்கைகளை நாடிச் சென்றதால், இந்தியாவின் சில பழம்பெரும் நகரங்கள் சிறப்பிழந்துகொண்டிருந்தன. பாடலிபுத்திரம், வட இந்தியாவின் சிறப்பான நகரமாகக் கருதப்பட்ட சிறப்பை இழந்தது. அவ்விடத்தை கங்கைக் கரையில் அமைந்திருந்த கனோஜ் நகர் பெற்றது. பல மதத்தினரும், கொள்கைவழி நடப்பவர்களும் கனோஜ் நகரில் காணப்பட்டனர். இந்து மதத்தினரும், மஹாயான, ஹீனயான பௌத்தப் பிரிவினரும் அங்குக் காணப்பட்டனர். 200 தேவன் கோயில்களும், 100 பௌத்த மடாலயங்களும் காணப்பட்டன. கனோஜ் நகரம் ஐந்து மைல் நீளமும், ஒன்றரை மைல் அகலமும் கொண்ட பரப்பில் தக்க பாதுகாப்புடன் அமைந்திருந்தது. நகரத்தின் செல்வநிலையை 'மிகப் பெரும் கட்டடங்களும், அழகு மிக்க பூங்காக்களும், தெளிந்த நீர் நிறைந்த குளங்களும், மக்கள் அறிந்திராத நாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அரிய பொருள்கள் கொண்ட தொல்பொருள் நிலையமும்' அங்குக் காணப்பட்டன என்பதன் மூலமாக யுவான் சுவாங் விளக்குகிறார். மக்களின் நாகரிகத் தோற்றம், உடை ஆகியவை பற்றியும் சீனப் பயணி குறிப்புகள் தந்துள்ளார். 'பளபளக்கும் பட்டாடைகளை அணிந்தும், சொல்லாற்றல் மிக்கவர்களாகவும், கலைகளில் ஆர்வம் மிக்கவர்களாகவும் விளங்கினர். செல்வம் மிக்க குடும்பங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகக் காணப்பட்டது.[1] எல்லா விதத்திலும் தகுதி பெற்று விளங்கிய கனோஜ் நகரத்தில் ஹர்ஷரின் 'மதப் பேரவை' நடைபெற்றது. அடுத்ததாக, ஹர்ஷர் காலத்தில் பிரயாகை என அழைக்கப்பட்ட அலகாபாத் நகரமும் சிறப்பான நகரமாக வளர்ச்சி பெற்றது. இந்து மதக் கோட்பாடுகள் மறுபடியும் இந்தியாவில்

[1] வாட்டர்ஸ்-i-பக்கம் 340

தழைத்ததால், பிரயாகையின் சிறப்பு வளர்ந்தது. ஹர்ஷர் ஆட்சியின் ஆறுவது 'ஐந்தாண்டுக் கால' நிறைவு விழாவாகிய மோட்சம் (Moksa) நடத்தப்படுவதற்குப் பிரயாகை தேர்ந் தெடுக்கப்பட்டு, ஐந்து இந்தியாவிலிருந்தும் பல்வேறு மதம், பிரிவைச் சேர்ந்த மக்கள் ஹர்ஷரிடம் கொடை பெறுவதற்காக இலட்சக்கணக்கில் கூடிய இடமாகச் சிறப்புப் பெற்று விளங்கியது. பௌத்த மதம் மக்களிடையே படிப்படியாக ஆதரவு இழந்ததைத் தொடர்ந்து, புத்தரோடு தொடர்பு கொண்ட புனித நகரங்களின் சிறப்பும் குன்றியது. பாஹியான் இந்தியாவில் பயணம் செய்த காலத்தில் சரவாஸ்தி(Sravasti)யில் 98 பௌத்த மடங்கள் காணப் பட்டன. ஆனால், யுவான் சுவாங்கின் பயண காலத்தில், 'பல மடாலயங்களின் இடிபாடுகளும், ஒரே ஒரு மடமும் அங்குக் காணப் பட்டது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்த மதத்தினர் புனித தலமாகக் கருதும் கபிலவஸ்து ஒரு காலத்தில் சுமார் 1000 மடங்களைக்கொண்டிருந்த சிறப்பைப் பெற்றிருந்தாலும், ஹர்ஷரின் காலத்தில் முப்பது துறவிகளே வாழ்ந்த ஒரே ஒரு மடம் மட்டும் அங்குக் காணப்பட்டது. வைசாலியும் முன்காலத்தில் மிகச் சிறப்பான பௌத்த நகரமாக விளங்கியது. ஆனால், ஒரு காலத்தில் 'பௌத்தக் கொள்கைகள் மிகச் சிறப்பாகப் பின்பற்றப் பட்டு வந்த இடத்தின் இடிபாடுகளுக்கிடையிலும், அதைச் சுற்றி யுள்ள மரம், செடி, கொடிகள் அடர்ந்து வளர்ந்துள்ள காட்டுப் பகுதியிலும் யுவான் சுவாங் மனம் நொந்து பயணம் செய்திருக்க வேண்டும்'[1] என சீனத்துப் பயணியின் வைசாலிப் பயணம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்த மதத்தின் பழம் பெரும் நகரங்கள் சிறப்பிழந்தாலும், சில புதிய பௌத்த நிலையங்கள் தோன்றி இந்தியாவிற்கே சிறப்பை அளித்தன. ஹர்ஷரின் காலத்தில் கிழக்கு இந்தியாவில் நாளந்தாப் பல்கலைக் கழகமும், மேற்கு இந்தியாவில் வலபியும் பெரும் சிறப்புப் பெற்று விளங்கின.[2] ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கிய வேறு சில நகரங்களுக்கும் யுவான் சுவாங் பயணம் செய்து குறிப்புகள் எழுதியுள்ளார். மதுரா ஹர்ஷர் காலத்தில் பெரும் சிறப்புப் பெற்று விளங்கியது நான்கு மைல் சுற்றளவுள்ள பரப்பில் மதுரா அமைந்திருந்தது. உயர் ரகப் பருத்தி ஆடை களுக்கும், தங்கத்திற்கும் அந் நகரம் புகழ் பெற்று விளங்கியது அங்குக் காணப்பட்ட ஆலயங்களும், மடங்களும், அவற்றின் ஸ்தூபங்களும் அசோகரால் கட்டப்பட்டவை ஆகும்.[3] வர்த்தன

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 77
[2] R. K. முகர்ஜி-ஹர்ஷா-பக்கம் 166
[3] வாட்டர்ஸ்-i-பக்கம் 314

அரசர்களின் பூர்வீகத் தலைநகரமாக விளங்கிய தனேஸ்வரத்தில் சுமார் நூறு ஆலயங்கள் காணப்பட்டன. 'சிறப்பான வணிக வளர்ச்சியின் பயனாக, வேறு நாடுகளிலிருந்து பெறப்பட்ட அரிய பொருள்கள் குவிந்திருந்தன. பிஜ்னூர்(Bijnor)க்கு அருகில் உள்ள மதிபுரத்தில் சுமார் 50 ஆலயங்கள் காணப்பட்டன. தானிய வகைகள், பழங்கள், மலர்கள் ஆகியவை மதிபுரத்தின் சிறப்பான பொருள்கள் ஆகும். ஹரித்துவாரத்தில் அதிக மக்கள் வாழ்ந்தனர். வெகு தூரத்திலிருந்தும் பல ஆயிரக் கணக்கான மக்கள் புனித நீராடுவதற்காக ஹரித்துவாரம் வந்து கொண்டே இருந்தனர். பல பக்தி மிக்க அரசர்கள் பயணிகளுக்கு வசதியாகப் புண்ணிய சாலைகள் கட்டி, இலவச உணவும், மருத்துவப் பணியும் அளித்தனர்[1] எனவும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். கோவிசனா (Govisana-இன்றைய ராம்பூரும், பிலிப்ஹிட்டும் (Pilibhit) மிகுதியான ஜனத்தொகை வாழும் பகுதி எனவும், அங்கு முப்பது ஆலயங்கள் காணப்பட்டன எனவும், அயோத்தியில் நூறு பௌத்த மடங்களும் பத்து தேவன் கோயில்களும் இருந்தன எனவும் அவர் கூறுகிறார். மேலும், அஹிச் சித்ரா (Ahichchhatra), பிலோஷன்னா (Pi-lo-shan-na), கபிதா அல்லது சங்காஸ்ரா (Sankasra), சம்பா பீகாரில் உள்ள ராஜ் மகால் பற்றியும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். பிரயாகைக்கு வடக்கே, சரவாஸ்திக்கு அருகில் உள்ள கோசாம்பியில் ஐம்பது ஆலயங்கள் காணப்பட்டாலும், பௌத்த மதம் அழிந்து கொண்டிருந்தது. விசோகா[2](Visoka)வில் இருபது பௌத்த மடங்களும், ஐம்பது கோயில்களும் இருந்தன. வாரணாசியில் பல அடுக்குகளும், மரங்களினாலும், கற்களினாலும் ஆன வளைவு வேலைப்பாடுகளும் கொண்ட நூறு கோயில்கள் காணப்பட்டன. நகர அமைப்பு மிக நெருக்கமானதாகவும், மக்கள் தொகை அதிக அளவிலும் காணப்பட்டது. மக்கள் செல்வம் மிகுந்தவர் களாகவும், அவர்கள் வீடுகளில் விலையுயர்ந்த அரிய பொருள்கள் மிகுதியாகக் காணப்பட்டதாகவும் யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். வங்காளத்தில் உள்ள புன்னியவர்த்தனாவில் நூறு கோயில்களும், இருநூறு பௌத்த மடங்களும் காணப்பட்டதாகவும், அங்கு வாழ்ந்த மக்கள் வசதி மிக்கவர்களாயிருந்தனர் என்றும், மேலும் அங்குப் பல குளங்களும், பயணிகள் இளைப்பாறும் சத்திரங்களும், பூங்காக்களும் காணப்பட்டன எனவும் யுவான் சுவாங் கூறு கிறார். சாமதத்தா(Samatata - வங்காளத்தில் உள்ள பரீத்பூர் Faridpur)வில் முப்பது பௌத்த மடங்களும், நூறு கோயில்களும்,

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 328

2 இன்றைய பாரபங்கி (Barabanki) மாவட்டத்தில் உள்ளது என V. A. ஸ்மித் கருதுகிறார்.

வங்காளத்தின் பயணத் துறைமுகமாக விளங்கிய தாமரலிப்தி (Tamralipti)யில் ஐம்பதுக்கும் அதிகமான கோயில்களும் இருந்தன எனவும்; சசாங்கனின் தலைநகரான கர்ன சுவர்ணு (இன்றைய பர்த்துவான்-Burdwan, பிர்பம்-Birbhum, முர்ஷிதாபாத்-Murshidabad மாவட்டங்கள், நான்கு மைல் சுற்றளவு கொண்டன எனவும்; ஹர்ஷரின் துணைவரும் காமரூபத்தின் அரசருமான பாஸ்கர வர்மர் காலத்தில் காமரூபத்தில் பல நூற்றுக்கணக்கான கோயில்கள் காணப்பட்டன எனவும் யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

நகரங்களில் காணப்பட்ட கட்டடங்களின் சிறப்பும், நகர் அமைப்புத் திட்டமும் அக் காலத்தின் சிறந்த பொருளாதார முன்னேற்றத்திற்குச் சான்றுகளாகும். கட்டடக் கலை வல்லுநர்களை கிரிக சிந்தகாக்கள் (Grihachintakas) எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார். நகரங்களின் நாற்புறத்தையும் சுற்றி அகலமும், உயரமும் உள்ள சுற்றுச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. சுவர்கள் பொதுவாகச் செங்கற்களால் ஆனவையாம். தாழ்வான, ஈரம் மிக்க பகுதிகளில் அமைந்திருந்த வீடுகளின் சுவர்களும், சுற்றுப்புற அமைப்பும், மரத்தாலும், மூங்கில் பின்னல் அமைப்புகளாலும் ஆக்கப்பட்டிருந்தன. உயர்ந்த தரம் மிக்க வீடுகள் பெரிய கூடங்களும், மாடியில் விசாலமான அறைகளும் கொண்டு விளங்கின. மாடியில் உள்ள அமைப்புகளுக்கு மரத்தால் தட்டையான கூரை வேயப்பட்டிருந்தது. கூரைகள் சுண்ணும்புச் சாந்து பூசப்பட்டும், சுட்டு எரிக்கப்பட்ட அல்லது சுடாத ஓடுகளால் வேயப்பட்டும் இருந்தன. அவை மிகவும் உயரமாகக் கட்டப்பட்டிருந்தன. கட்டடங்களுக்கு வெள்ளை அடிப்பதைப் பற்றியும் பாணர் விளக்கியுள்ளார்: 'தொழிலாளிகள் கையில் மட்டையுடனும், தோளில் சுண்ணும்புச் சாந்துக் கலவையுடனும் ஏணியில் ஏறி அரண்மனை உச்சிக் கோபுரங்களுக்கும், அதைச் சுற்றியுள்ள அமைப்புகளுக்கும் வெள்ளையடித்தனர்.'[1] 'ஏழைகளின் வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டும், ஓலை அல்லது புல்லினால் கூரை வேயப்பட்டுமிருந்தன. பருவகால மலர்கள் வீடுகளின் வாயில்களை அலங்கரித்தன.' இந்திய நகரங்களில் காணப்பட்ட அரசாங்கக் கட்டடங்களும், பௌத்த மட அமைப்புகளும் சிறந்த கலையமிசம் கொண்டவை என யுவான் சுவாங் பாராட்டியுள்ளார். அவற்றின் நான்கு மூலைகளில் கோபுரங்களும், ஒரே அடுக்கில் மூன்று அறைகளும் காணப்பட்டன. கூரையிலும், கூரையின் குறுக்குக் கட்டைகளிலும் இனம் புரியாத உருவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. கதவு,

[1]ஹர்ஷ சரித்திரம்-பக்கம் 158

ஜன்னல், சுவர்களில் பல வண்ணங்களில் ஓவியங்கள் தீட்டப் பட்டிருந்தன.[1] தனிப்பட்டவர்களின் வீடுகளின் உட்புறம் விசால மாகவும், வெளிப்புறம் எளிமையாகவும் விளங்கின.

மரச் சாமான்கள் பற்றியும் விளக்கங்கள் காணப்படுகின்றன. உறுதியான கயிற்றினால் கட்டப்பட்ட அமரும் நாற்காலிகள் பல வீடுகளில் காணப்பட்டன. நாற்காலிகள் பல வகையிலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. அரசரின் அரியணை வைக்கப் பட்டிருந்த மேடை சிறிய முத்துகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. விலையுயர்ந்த துணியினால் அரியணையின் அமரு மிடம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் காணப்பட்ட தங்க வேலைப்பாடு மிக்க விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட சிறிய கால் வைக்கும் முக்காலி பற்றியும் பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நகர் அமைப்புத் திட்டம் பற்றியும் யுவான் சுவாங் பல தகவல்களைத் தந்துள்ளார். நகரின் முக்கிய சாலைகள் குறுகிய வையாகவும் தெருக்கள் வளைவுகள் மிக்கவையாகவும் காணப் பட்டன. நகர் அமைப்புக் கொள்கையின் அடிப்படையில் கட்டடங்களும், கடைகளும் அமைந்திருந்தன. வர்த்தக நிலையங்கள் நெடுஞ்சாலைகளிலும், சத்திரங்களும் சாவடிகளும் சாலைகளிலும் அமைந்திருந்தன.

கட்டடக் கலை, சிற்பக் கலை, வீடு கட்டுதல் ஆகிய தொழில்கள் சிறந்து விளங்கின. உற்பத்தித் தொழிலிலும் முன்னேற்றம் காணப்பட்டது. அக் கால மக்கள் பண்படுத்திய பலவகை ஆடைகளைப் பற்றி யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[2] அவை மென்மையாகவும், நேர்த்தியாகவும் விளங்கின. மக்களின் உடைகள் மிகவும் எளியவையாகவே காணப்பட்டன. வட இந்தியாவில் குளிர்மிக்க பகுதிகளில் வாழ்ந்த மக்கள் உடலை

[1] இவ்விடத்தில் நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் கட்டட அமைப்பு, அதன் கலையமிசம் ஆகியவை பற்றிய யுவான் சுவாங்கின் விளக்கத்தைக் குறிப்பிடலாம். அவை பல மாடிகளையும், சிறந்த வேலைப்பாடு மிகக கோபுரங்களையும் கொண்டு விளங்கின. மேலே கட்டப்பட்டிருந்த அறைகளும், அவை மீதிருந்த கோபுரங்களும் வானை முட்டின. கட்டடங்களின் வெளிப்புறங்கள் மிக அதிக அளவில் சிறப்பான வேலைப்பாடுகள் கொண்டி ருப்பினும், உட்புறம் மென்மையும் அழகும் கொண்டிருந்தது. தீ உமிழும் பிராணியின் உருவமும், வண்ணமிக்க அலங்கார வளைவு ஓரங்களும், பழுப்புச் சிவப்பு வண்ணத் தூண்களும் வேலைப்பாடு மிக்கவையாக விளங்கின. மிகவும் அலங்கரிக்கப்பட்ட சிறு தூண்களை வரிசையாக அமைத்துக் கட்டப்பட்ட கைப்பிடிச் சுவர்களும், வெளிச்சத்தைப் பிரதி பலிக்கும் பளபளப்பான ஓடுகளால் அலங்கரிக்கப்பட்ட உட்புறக் கூரை அமைப்பும் முழுமையான சிற்பக் கலையமிசம் கொண்டு விளங்கின என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். லைப்- பக்கம் III; வாட்டர்ஸ்-ii-பக்கம் 165

[2] இந் நூலின் 11ஆம் அத்தியாயம் காண்க.

இறுக்கினுற்போல உள்ள ஆடைகளை அணிந்தனர். காமரூபத்தின் அரசர் பாஸ்கர வர்மர் காட்டு விலங்கின் உரோமத்தால் ஆன விலையுயர்ந்த ஆடை ஒன்றை யுவான் சுவாங்கிற்குப் பரிசளித்தார் என்பதும், பயண வழியில் குளிரிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள சீனத்துப் பயணி அதைப் பெற்றுக்கொண்டார் என்பதும் முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. அரசரும், உயர் குடியில் பிறந்தோரும் அதிக அளவில் நகைகள் அணிந்து காணப் பட்டனர். பொன் வேலைப்பாடு மிக்க தலையணியையும் சங்கிலி யையும், மோதிரங்களையும், கழுத்தணிகளும், காப்புகளையும் அவர்கள் அணிந்திருந்தனர். செல்வம் மிக்க வணிகர்கள் கையில் பொன் காப்பை அணிந்திருந்தனர்.

தொழில் வாழ்வு ஜாதி அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டிருந்தது. பிராமணர்கள் தொழிலில் எவ்விதப் பங்கும் வகிக்கவில்லை. மதத்துறையில் மட்டுமே தங்களுடைய கவனத்தைச் செலுத்தும் சமூகத்தினராக அவர்கள் வாழ்ந்தனர். நிருவாகப் பொறுப்பை க்ஷத்திரியர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். உள் நாட்டு, வெளிநாட்டு வணிகத்தை வைசியர்கள் மேற் கொண்டிருந்தனர். நாட்டின் அடிப்படைத் தொழிலான வேளாண்மையைச் சூத்திரர்கள் கவனித்து வந்தனர். வேளாண்மையோடு பெரிதும் தொடர்பு கொண்ட நீர்ப் பாசனத்தில் உபயோகிக்கப்படும் துலாயந்திரம் (Tula Yantra) என்ற நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பற்றிப் பாணர் குறிப் பிட்டுள்ளார். தொழில் அடிப்படையில் 'ஜாதிகளின் கலப்பு' பற்றிய விளக்கங்கள் யுவான் சுவாங் பயணக் குறிப்புகளில் காணப் படுகின்றன. அதன் மூலமாகச் சமூகப்பணி செவ்வனே நடைபெற்ற தாக யுவான்சுவாங் குறிப்பிடுகிருர்.[1] ராஜ்யஸ்ரீயின் மணவிழா பற்றிய விளக்கங்களில் 'நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தொழிலில் சிறந்து விளங்கிய பணியாளர்கள் அழைக்கப்பட்டனர்' எனப் பாணர் குறிப்பிடுகிருர். தச்சர்களும், வர்ணம் பூசும் தொழிலாளிகளும், புதிய மாதிரிகளை அமைப்பவர்களும் அரண்மனையை அலங்கரித்தனர். தொழில் பயிற்சியாளர்களைப் பற்றிய குறிப்பும் ஹர்ஷ சரித்திரத்தில் காணப்படுகிறது. நவசேவகர்கள் (Navasevakas) எனப் பாணர் அவர்களைக் குறிப் பிட்டுள்ளார்.

பல வகைப்பட்ட தரமிக்க பொருள்கள் உற்பத்தி செய்யப் பட்டன என்பதைப் பாணரின் ஹர்ஷ சரித்திரத்திலிருந்தும், யுவான் சுவாங் எழுதியுள்ள அரசரின் பரிசுப் பொருள்கள் விளக்கங்

[1] வாட்டர்ஸ்-i-பக்கங்கள் 147, 148, 168

களிலிருந்தும் காண முடிகிறது. காமரூபத்தின் அரசர் ஹர்ஷருக்கு அனுப்பிய பரிசுப் பொருள்களில் நுட்பமான ஆபரண வேலைப் பாடுகள் கொண்ட குடை ஒன்றுகும். அதன் கம்பிகள் தங்கத் தாலும், துணி மிக உயர்ந்த வெள்ளை நிறப் பட்டுத் துணியினுலும் செய்யப்பட்டிருந்தன. மேலும், தங்கத்தாலான தலையில் அணியும் ஆபரணங்கள், முத்துக் கழுத்தணி, பல வண்ணத்தால் ஆன பட்டுத் துண்டுகள் கழிகளில் சுற்றி வைக்கப்பட்டுள்ள பெட்டிகள், முத்து, சங்கு, நீலக் கற்கள், தொழில் வல்லுநர்களால் செய்யப் பட்ட கலையமிசம் மிக்க நீர் அருந்தும் கிண்ணங்கள், ஓரத்தில் தங்கக்கரை கட்டி அழகுறச் செய்யப்பட்ட தோல் கச்சைகள், இடையில் அணியும் மிருதுவான துணி, மான் தோலினுல் ஆன தலையணைகள், வேலைப்பாடு மிக்க துணிகள், பிரம்பு நாற்காலிகள், எழுதுவதற்குப் பயன்படும் மரப்பட்டை அடுக்குகள், வேலைப்பாடு மிக்க பெட்டிகள் போன்றவை தொழில் வளத்தைக் குறிக்கும் சில சிறப்பான பொருள்களாகும். தங்கத்தால் செய்யப்பட்ட புத்தரின் முழு உருவச்சிலை ஒன்று கனோஜ் பேரவையில் அமைக்கப்பட்டு வழி பாடு செய்யப்பட்டது என்பதை யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தங்கத்தாலான தட்டு, கிண்ணம், ஏழு நீர்க்குவளைகள், ஓர் ஊன்றுகோல், 3000 பொற்காசுகள், உயர்ந்த பருத்தியாலான 3000 உடைகள் ஆகியவற்றையும் ஹர்ஷர் வெகுமதியாக அளித் தார்.[1] யுவான் சுவாங் இந்தியாவில் பயணத்தை முடித்துச் சீன விற்குத் திரும்பும் சமயம் பல நூல்கள், பயணக் குறிப்புகள், தங்கம், வெள்ளி, சந்தனத்தாலான பல புத்தரின் உருவச் சிலைகள் ஆகிய வற்றைத் தம்முடன் எடுத்துச் சென்றுர். 'தங்கம், வெள்ளி, பச்சைக்கற்கள், பளிங்குகள் முதலியன இந்தியாவில் மிகுதியாகக் காணப்பட்டன' என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[2]

இறுதியாக, அக் கால இந்தியாவின் கொடுக்கல், வாங்கல் செலாவணிக்குத் தங்க, வெள்ளிக் காசுகள் மட்டுமின்றி, முத்தும் சங்கும் புழக்கத்தில் இருந்தன என்பதைச் சீனப்பயணியின் குறிப்பு களிலிருந்து அறிகிறோம்.[3]

[1] லைப்-பக்கம் 178
[2] வாட்டர்ஸ்-i-பக்கம் 178
[3] வாட்டர்ஸ்-i-பக்கம் 178

10. சமூக வாழ்க்கை

ஹர்ஷர் காலச் சமூக வாழ்க்கை பற்றியும், மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றியும் அறிதல் அவசியம். சமூகம் சாதி முறையின் அடிப்படையிலும், அதன் கட்டுப்பாடுகளின்படியும் இயங்கிற்று. குறிப்பிட்ட நான்கு சாதிகளைத் தவிர, யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ள 'கலப்பு சாதி'யும் அக் கால இந்தியாவில் காணப்பட்டது. சமயக் கோட்பாடுகளின் பலதரப் பணிகளையும் நான்கு சாதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வகுப்புகள் நிறைவேற்றின. பிராமணர்களும், க்ஷத்திரியர்களும் 'நாணயம்' மிக்கவர்கள் எனவும், எளிய தூய்மையான சிக்கன வாழ்க்கை நடத்தினர் எனவும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். சாதிகளுக்கிடையே கலப்புத் திருமணம் நடைபெறுவதில்லை எனவும், தாய்வழி உறவினர்களும் தந்தைவழி உறவினர்களும் திருமணத் தொடர்பு கொள்வதில்லை எனவும் யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

திருமணத் தொடர்பு, உணவருந்துதல் போன்றவற்றில் சாதிக்கட்டுப்பாடுகள் காணப்பட்டாலும், சாதிகளுக்கிடையே பழக்க வழக்கத் தொடர்புகளுக்கு வேறு தடையேதும் காணப்படவில்லை. பாணர் ஓர் ஐதீகக் கல்வி அறிவு மிக்க பிராமண குலத்தைச் சேர்ந்தவராக இருப்பினும், பல வகைப்பட்ட சமூகப் பிரிவினர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என அறிகிறோம். பாணர் தொடர்பு கொண்ட வகுப்பினரின் பட்டியல் மிக நீளமானது. முதலில் குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் வந்திஞுக்கள் (Vandinas) என்ற இழி குலத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரரர்கள் ஆவர். சாதி இன்னதெனத் தெரியாத காட்யாயனிகா (Katyayanika) என்ற விதவைத் துறவி, ஜாங்கலிகா (Jangalika) என்ற பாம்பு மருத்துவர், அடைப்பக்காரர், கலாட (Kalada) என்ற பொற்கொல்லர், ஹய்ரிகா (Hairika) என்ற கண்காணிப்பாளர், லெகாகா (Lekhaka) என்ற எழுத்துகள் பதிப்பவர், சித்ரகிரித் (Chitrakrit) என்ற ஓவியர், புஸ்தககிரித் (Pustakakrit) என்ற சட்டநூல் தொடர்பு அதிகாரி, மார்டங்கிகா (Mardangika) என்ற முரசொலிப்பவர், இரண்டு இசைக்

கலைஞர்கள், சைராந்திரி (Sairandhri) என்ற பணிப் பெண், வாம்சிகா (Vamsika) என்ற இரண்டு குழல் ஊதுபவர்கள், ஒரு பாட்டு ஆசிரியர், சம்வாஹிஹா (Samvahiha) என்ற தலை மழிப்ப வர், லாசகா (Lasaka) என்ற நடனமாடுபவர், அக்சிகா (Aksika) என்ற பகடைக்காரர், கிதரா (Kitara) என்ற சூதாட்டக்காரர், சைலாலி (Sailali) என்ற நடிகர், நர்த்தகி (Nartaki) என்ற நடன மாடும் பெண், ஒரு பாராசர(Parasara)த் துறவி, தாட்டுவாதவித் (Dhatuvadavid) என்ற உலோக வல்லுநர், ஸ்பனகா (Ksapanaka) என்ற ஒரு திகம்பரச் சமணர், ஒரு சைவத் துறவி, தார்டுரிகா (Dardurika) என்ற குயவர், அன்டிரஜாலிகா (Aindrajalika) என்ற ஜால வித்தைக்காரர் ஆகியோருடன் பாணர் தொடர்பு கொண்டிருந்தார். சாதிகள், வகுப்புகள் தொழில் புரிவோருக் கிடையே மட்டுமின்றி ஆண், பெண் இருபாலாருக்கிடையேயும் தாராளமான சமூகத் தொடர்புகள் இருந்தன என்பதற்கு இஃது ஒரு வலுமிக்க சான்றாகும். ஐதீகமும், கட்டுப்பாடுகளும் மிக்க பிராமணர் ஒருவர் தடையற்ற முறையில் சமூகத் தொடர்பு கொண்டு மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் எனத் தெரிகிறது.

மக்களின் உடல் தூய்மை பற்றியும் யுவான் சுவாங் தம் பயணக் குறிப்புகளில் எழுதி வைத்துள்ளார். மக்கள் மற்றவர் களின் கட்டாயத்திற்காக இன்றித் தாங்களாகவே விரும்பி உடலைத் தூய்மையாக வைத்துக்கொண்டனர்; ஒவ்வொரு முறையும் உணவு உட்கொள்வதற்கு முன் நீராடினார்கள். நிறைவில்லா தனவும், எஞ்சி இருப்பனவுமான பொருள்களை உணவில் பரிமாறு வதில்லை. உணவுப் பாத்திரங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவ தில்லை. அவை பெரும்பாலும் மண்ணாலும் மரத்தாலும் செய்யப்பட்ட பாண்டங்கள் ஆதலால், பயன்படுத்திய பின் புறக் கணிக்கப்பட்டன. ஆனால் தங்கம், வெள்ளி, செம்பு அல்லது இரும்பு போன்ற உலோகங்களினால் செய்யப்பட்ட பாத்திரங்கள் துலக்கப்பட்டு மறுபடியும் பயன்படுத்தப்பட்டன. பாஹியான் கண்டு குறித்துள்ளதைப் போலவே, யுவான் சுவாங்கும் இந்திய உணவின் தூய்மையைப்பற்றிக் குறித்துள்ளார். வெங்காயமும், வெள்ளைப்பூண்டும் உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்பட வில்லை. அதை உண்ட மக்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப் பட்டனர் என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். மான், ஆடு ஆகியவற்றின் இறைச்சியைத் தவிர வேறு உயிர்களின் இறைச்சி உண்ணுவது தடுக்கப்பட்டிருந்தது. மீன் உணவாகப் பயன் பட்டது. சாதாரணமாக உணவு, பால், நெய், சர்க்கரை,

இனிப்புப் பண்டங்கள், அப்பங்கள், கடுகு எண்ணெயில் வறுக்கப் பட்ட தானியங்கள் ஆகியவற்றைக்கொண்டிருந்தது.[1]

ஹர்ஷ சரித்திரத்தில் விழாக்கால அரண்மனைப் பழக்க வழக்கங்கள், கேளிக்கைகள், நடத்தை பற்றிய பாணரின் குறிப்புகளைப் பார்க்கும்போது உயர்குடி மக்களின் அரண்மனை வாழ்க்கை அவ்வளவு கட்டுப்பாடு மிக்கதாகக் காணப்படவில்லை என்றே தெரிகிறது. கட்டுப்பாடற்ற இன்பங்களை நுகர அரசர் அனுமதி வழங்கி விட்டதே போல அவ் விழாக்கள் நடைபெற்றன. 'அடிமைப் பெண்கள் குடித்து விட்டுத் தங்களுடைய துணைவர்களுடன் ஆடிக்கொண்டிருந்தனர். சிற்றரசர்களும் குடிபோதையில் அலங் கோலமாக நடனமாடிக்கொண்டு இருந்தனர். அடிமைகள் குடி வெறியில் பாடிய பாட்டுகளில் அமைச்சர்களின் காதல் இரகசியங்கள் வெளிப்பட்டன. மேலும், அடிமைகள் கீழான வசை மொழி பாடிக்கொண்டும், அரச குலப் பெண்களுடன் சண்டை யிட்டுக்கொண்டும் இருந்தனர். இளைஞர்கள் வேசிகளுடன் குதூகலமாக ஆடிக்கொண்டிருந்தனர்,'[2] எனப் பாணர் விளக்கு கிறார். பெண் இனமே மகிழ்ச்சியால் கூத்தாடிக்கொண்டு இருந்தது போலத் தோன்றுகிறது. வயது முதிர்ந்த பெண்கள்கூட வெறி பிடித்தாற்போலக் கத்திக்கொண்டு இருந்தனர். கிழவர் களும் வெட்கத்தை விட்டு மது அருந்தி, மாயத்தால் கட்டுண்ட வர்கள் போல ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அறிவாற்றல் மிக்கவர் களும் போதையால் மயக்கமடைந்தவர்கள் போலத் தங்களை மறந்திருந்தனர். துறவிகளுங்கூட நடனமாட வேண்டும் என்று ஏக்கம் கொண்டனர். இதே போன்ற மற்றொரு கட்டுப்பாடற்ற விழாக் கோல விளக்கம் ரத்னாவளியிலும் காணப்படுகிறது. நகரத்தின் மக்கள் அனைவரும் வசந்த விழாவில் தங்களை மறந்து மகிழ்ச்சியுடன் இருந்ததைப் பற்றி ஹர்ஷர் விளக்கியுள்ளார். 'குடிவெறியுடன் பெண்கள் நடனமாடினர். சிவப்பு வண்ணக் கலவையை அவர்கள் உடல் முழுவதும் பூசிக்கொண்டிருந்தனர். பாம்பின் படத்தைப் போன்ற நுனி கொண்ட பீச்சாங்குழல் களால் பீச்சப்பட்ட நீரில் குளித்து, நல்ல உடைகளை அணிந்திருந்த நண்பர்களைக் கட்டித் தழுவிக்கொண்டு அவர்கள் ஆடினர். அப் போது நெடுஞ்சாலையின் கடைகள் வரை எதிரொலிக்கும்படி அவர்கள் கையொலி எழுப்பினர். பிரிக்சாகிரிஹா (Preksagriha) என்ற இசை அரங்குகளிலும் மக்கள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். மேலே காணப்படும் விளக்கங்கள் சற்று மிகைப் படுத்திக் கூறப்பட்டவை எனினும், அக் கால உயர்குடி மக்களின்

[1] வாட்டர்ஸ்-i-பக்கங்கள் 140, 151, 152, 168, 178

[2] R. K. முகர்ஜி-ஹர்ஷா-பக்கம் 175

வாழ்க்கையின் உண்மை நிலையை அவ் விளக்கங்களிலிருந்து ஓரளவு அறிந்துகொள்கிறோம். பிற்காலத்தில் ஹர்ஷரும் அவருடைய தங்கையும் காவி உடை அணிந்து பௌத்த மதத்தைத் தழுவிய சமயத்தில் அரண்மனையிலும், நகரத்திலும் மக்களின் மகிழ்ச்சி வெறிக் கோலங்கள் குறைந்து, வழக்கத்துக்கு மாறுகக் காணப் பட்டன. அசோகரின் காலத்தில் அவருடைய முன்னோர்கள் பின் பற்றிய பழக்க வழக்கங்கள் புறக்கணிக்கப்பட்டதை இதற்கு ஒப்புமை கூறலாம்.

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் சமூகத்தில் பெண்கள் வகித்து வந்த நிலையை உணர்த்தும் சான்றுகளும் உள்ளன. உயர்குலப் பெண்கள் கல்வி கற்பதில் ஆர்வத்துடன் காணப் பட்டனர். தனித்து வாழும் முறை பின்பற்றப்படவில்லை. யுவான் சுவாங் மஹாயான பௌத்தக் கருத்துகளை விளக்கிய சமயம், அவற்றை ஆர்வத்துடன் கேட்டுப் பயன் பெறும் அளவிற்கு ராஜ்யஸ்ரீ உயர் கல்வி அறிவு பெற்று விளங்கினுர். தங்கைக்குப் பௌத்தக் கருத்துகளை விவரித்து விளக்கம் கூற, ஹர்ஷர் விந்திய மலைப் பகுதியில் வாழ்ந்து வந்த பெரும் பௌத்தத் துறவியான திவாகரமித்ரரை நாடினுர் என்பதைப் பாணர் விளக்கியுள்ளார். அரண்மனையின் அந்தப்புரத்திற்குச் செல்வதற்கு அதிகமான கட்டுப்பாடுகள் இருந்ததாகத் தெரிய வில்லை. (Arhat) அர்ஹத் கிருஷ்ணு, விஸ்ரவசா (Visravasa), அவலோகிடேஸ்வரா, விரிஞ்சா (Virincha) போன்ற பல பிரிவுகளைச் சேர்ந்த வயது முதிர்ந்த பெண் துறவிகள் அந்தப் புரத்தில் காணப்பட்டனர். இளவரசி நுண்கலையில் பயற்சி பெறத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ராஜ்யஸ்ரீ இசை, நடனம் ஆகிய இரு துறைகளிலும், அத் துறையில் மிகச் சிறந்த ஆசிரியர்களிடம் பயிற்சி பெற்றுத் தேர்ந்தார் எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷர் தம்முடைய பிரியதர்சிகா எனும் நாடகத்தில், நாடகத் தலைவராக வரும் அரசர் தமது அரசியிடம் நடனம், பாட்டு, இசைக் கருவிகளைக் கேட்க விரும்பிப் பிரியதர்சிகாவின் அறிவுரைப்படி அவற்றில் பயிற்சி பெறும்படி அரசியைப் பணித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அக் காலப் பெண்டிர்கள் ஓவியக் கலையை விரும்பிப் பயின்று சிறந்து விளங்கினர். ரத்னுவளி எனும் நாடகத்தில் வரும் தலைவி சமுத்ககா (Samudgaha) என்ற வண்ணக் கலவைகள் கொண்ட பெட்டியையும், வார்டிகா (Vartika) என்ற வரைகோலையும் (Brush) கொண்டு சித்திரப்பலகை(Chitraphalaka)யில் காதலனை ஓவியமாகத் தீட்டும் காட்சி விவரிக்கப்பட்டிருப்பதிலிருந்து இதை நன்கு அறியலாம். ஓவியப்பள்ளி (Chirasala), இசைப்

பள்ளி (Gandharvasala) பற்றிய குறிப்புகளும் ஹர்ஷரின் நாடகங்களில் காணப்படுகின்றன. பெண்களுக்கு மிகச் சிறிய வயதிலேயே மணம் முடிக்கும் வழக்கம் நிலவியது. வயதிற்கு வரும் முன்னரே ராஜ்யஸ்ரீக்குத் திருமணம் நடைபெற்றது. திருமணம் செய்துகொண்ட சில ஆண்டுகளில் கணவனை இழந்த ராஜ்யஸ்ரீ வாழ்க்கை முழுவதும் விதவையாகவே வாழ்ந்தார். 'பெண்கள் மறுமணம் புரிந்துகொள்வதில்லை' என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். ராஜ்யஸ்ரீ முக்காடு அணிந்து தனித்து வாழும் வாழ்க்கை முறையைப் பின்பற்றவில்லை என்பதை அவர், 'ஹர்ஷருக்குப் பின் அமர்ந்து' யுவான் சுவாங்கின் பௌத்தக் கோட்பாடுகள் விளக்க உரையைக் கேட்டார் என்பதிலிருந்து அறிந்துகொள்கிறோம்.[1] கனோஜ் நகரிலிருந்து வெளியேறிய பின், விந்திய மலைப்பகுதிகளில் நடமாடிய செய்தி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. கணவன் இறந்த பின், மனைவி தானாக முன் வந்து, உடன்கட்டை ஏறுதல் என்ற மரணத்தைத் தழுவும் வழக்கம் அன்று இந்தியாவில் நிலவிய வழக்கமாகும். ராஜ்யஸ்ரீயும் கணவர் இறந்த பின் உடன்கட்டை ஏற விரும்பி, சிதையில் விழப் போகும் சமயம், சகோதரரால் தடுக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டார், உடன் கட்டை ஏறும் வழக்கம் அக் காலத்தே இருந்தது என்பதற்கு ஹர்ஷரின் தாய் யசோவதியின் முடிவு ஓர் எடுத்துக் காட்டாகும். அந் நிகழ்ச்சியைப் பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் விளக்கியுள்ளார். ஹர்ஷர் எவ்வளவோ தடுத்தும், பிரபாகர வர்த்தனர் உயிர் பிரிந்துகொண்டிருந்த வேளையிலேயே, சுமங்கலியாகவே உயிர் நீப்பேன் என யசோவதி அறிவித்தார்; அந் நிலையில் இறக்காமல் உயிர் வாழ்வது, கணவனை உண்மையாக நேசிப்பதாகாது எனக் கருதினார். கணவருடைய என்றும் அழியா அன்பு என்ற எண்ணெயில் எரிந்து, அவர் பிரிவால் மனைவி அனுபவிக்கும் துக்கம் என்ற தீயை நோக்கச் சிதையின் தீ மிகவும் குளிர் தருவது என யசோவதி கருதினார். தம் மகனைத் தழுவி உச்சியில் முத்தமிட்டு விட்டு அரசி சாவை விரும்பிச் சென்றார். அரண்மனையின் அந்தப்புரத்திலிருந்து புறப்பட்டு, நேராகச் சரஸ்வதி ஆற்றின் கரைக்கு நடந்தே சென்று தீயை வணங்கி, 'கணவரின் கால் தூசு போல, விண்ணுலகத்திற்கு விரைந்து சென்று கணவரின் வருகையை அறிவிக்க' அதில் குதித்தார். பிரியதர்சிகா என்ற நாடகத்திலும் விந்தியகேதுவின் இறப்பிற்குப் பின் அவருடைய மனைவி உடன்கட்டை ஏறிய நிகழ்ச்சியை ஹர்ஷர் விளக்குகிறார். பிளீட்டின் எண் 20 என்ற குறிப்பு (காலம்

[1] லைப்-பக்கம் 176

கி.பி.510) குப்தப் பேரரசரான பானு குப்தருடன் போரிட்டு வீழ்ந்த கோபராஜா என்ற படைத்தலைவரின் மனைவி உடன் கட்டை ஏறிய நிகழ்ச்சியை நினைவு கூர்கிறது. கணவன்மீது மனைவி கொண்டிருந்த தூய அன்பிற்கும் பற்றிற்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் இது போன்ற நிகழ்ச்சிகள், நாட்டின் அரச குல உயர்குடிப் பெண்களின் தூய்மைக்கும், அற வாழ்விற்கும் பொதுவான எடுத்துக்காட்டுகளாகவும் விளங்குகின்றன.

கடற்பயணம் சாதாரணமாகக் கருதப்பட்டது.[1] கி.பி. 641ஆம் ஆண்டு ஹர்ஷர் சீனாவிற்கு அரசாங்கத் தூதுவர் ஒருவரை அனுப்பி வைத்தார். சீனப் பயணி யுவான் சுவாங் தாய் நாட்டிற்குத் திரும்ப விருப்பம் தெரிவித்த சமயம், ஹர்ஷர் அவரிடம் எவ் வழியாகப் பயணம் செய்ய விரும்புவதாகக் கேட்டு, 'தென் பகுதிக் கடல் வழியைத் தேர்ந்தெடுத்தால் துணைக்குப் பணியாளர்களை அனுப்பி வைப்பதாக'க் கூறினார்.[2] அதிலிருந்து, ஹர்ஷர் அச்சமற்ற கடற்பயண வசதிகளைச் செய்து தருமள விற்கு நிருவாகத் திறன் கொண்டவராகவும், சீனாவிற்குச் செல்லும் கடல் வழியைப் பற்றி நன்கு அறிந்தவராகவும் இருந்தார் என்பது நன்கு பெறப்படுகின்றது. பல அரசாங்கத் தூதுவர்கள், வணிகர்கள், பணிக்குழுக்கள், யாத்திரிகர்கள் ஆகியோர் அவ் வழியாகப் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து பயணம் செய்து இரு நாடுகளுக்கிடையே அரசியல், வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்பட உதவினர். நான்காம் நூற்றாண்டில் இந்தியாவில் பயணம் செய்த பாஹியான் இவ் வழியிலேயே சீனாவிலிருந்து இந்தியாவிற்கு வந்து திரும்பிச் சென்றார். இந்தியாவின் பயணத் துறைமுகமாக விளங்கிய தாமரலிப்தி (Tamralipti)யிலிருந்து கப்பலேறி 14 நாள்கள் பயணத்திற்குப் பின் இலங்கையை அவர் அடைந்தார்; அங்கிருந்து சுமார் இருநூறு பயணிகளை ஏற்றிச் செல்லும் கப்பல் ஒன்றில் பயணம் செய்து, அடுத்த தங்குமிடமான ஜாவாவிற்குச் சென்றார்; அங்கிருந்து அதே போன்ற கப்பல் ஒன்றின் மூலமாக ஐம்பது நாள்கள் பயணம் செய்து வாங்சௌ(Kwang-chow)வை அடைந்தார். அக் கப்பல்களில் சுமார் ஐம்பது நாள்கள் பயணத்திற்குத் தேவையான பண்டங்கள் சேமித்து வைக்கப் பட்டிருந்தன. ஏறக்குறைய இருநூறு வணிகர்கள் அக்

[1] ஹர்ஷர் எழுதியுள்ள ரத்னாவளி நாடகத்தில் ஒரு கடற்பயணம் குறிப் பிடப்பட்டுள்ளது. நாடகத் தலைவி இலங்கையிலிருந்து கௌசாம்பி வரை பயணம் செய்யும் வழியில் கப்பல் கவிழ்ந்து கட்டை ஒன்றின் உதவியால் மிதந்துகொண்டிருந்த வேளையில் கௌசாம்பியைச் சேர்ந்த வணிகர் ஒருவரால் காப்பாற்றப்படுகிறாள்.

[2] லைப்-பக்கம் 188

கப்பல்களில் பயணம் செய்தனர். இந்தியாவிற்கும், சீனவிற்கும் வணிகம், குடியேற்றம், பண்பாட்டுப் பணித் தொடர்புகளை ஏற்படுத்த இக் கடல் வழி குப்தர் காலத்திலும், ஹர்ஷர் ஆட்சிக் காலத்திலும் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு, இரு நாடுகளும் நன்மைகளைப் பெற்றன. கி.பி. 603ஆம் ஆண்டு சுமார் 5000 இந்தியர்கள் இந்தியாவின் மேற்குக் கரைப் பகுதிகளிலிருந்து ஜாவாவில் குடியேறியதாக அந் நாட்டு வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. விவசாயிகள், கலை வல்லுநர்கள், போர் வீரர்கள், மருத்துவர்கள், எழுத்தாளர்கள் முதலிய துறையினரையும் கொண்டு அக் குழு விளங்கிற்று. குடியேற்றங்களை அமைக்கும் தொழிலாளிகள் பலர் அக் குழுவில் சிறப்பாகக் காணப்பட்டனர். குடியேற்ற மக்கள் ஏழு பெரிய கப்பல்களிலும், நூறு சிறிய கப்பல்களிலும் பயணம் செய்து ஜாவாவை அடைந்தனர். கற்களிலும், பித்தளையிலும் எழுத்துக்கள் பதிக்கும் தொழிலாளிகளைக் கொண்ட மேலும் 2000 குடியேற்ற மக்களும் ஜாவாவிற்குச் சென்றனர். ஜாவாவில் இந்தியக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் போரோபுதூர் (Borobudur), பிராம்பணம் (Prambanam) ஆகிய இடங்களில் காணப்படும் சிறப்பு மிக்க கோயில்கள் கட்டி முடிக்கப்பட்டதற்கு இந்தியாவிலிருந்து சென்ற கலைத்திறன் மிக்க இத் தொழிலாளர்களே காரணமாவார். குஜராத்தின் துறைமுகங்களிலிருந்து ஜாவாவிற்குப் பயணம் செய்த குடியேற்ற மக்கள் சாகர்கள் (Sakas) ஆக இருக்க வேண்டும். இரண்டாவது சந்திர குப்தர் ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட படையெடுப்புகளினாலும் கி.பி. 550-600ஆம் ஆண்டுகளுக்கிடையே சசானியர்களும், துருக்கியர்களும், வெள்ளை ஹூணர்களை (White Huns) வென்றதாலும் வடபகுதியில் அவர்கள் பின் வாங்குதல் தடுக்கப்பட்டதாலும் சாகர்களின் ஆற்றல் வீழ்ச்சி அடைந்தது. மேலும், பிரபாகர வர்த்தனர் கூர்ஜரம், லதாவைச் சேர்ந்த ஹூணர்கள்மீது படையெடுத்து வெற்றி கண்டார். காந்தாரம், சிந்து, மாளவம் ஆகிய பகுதிகளின் அரசர்களும் ஹர்ஷரால் வெல்லப்பட்டனர். இப் படையெடுப்புகளினால் ஏற்பட்ட குழப்பங்களினால், சாகர்கள் குஜராத் கரையை ஒட்டி நகர்ந்து புதிய வாழ்வு தரும் பூமியைத் தேடலாயினர். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த நாடுகளில் மக்கள் பெருமளவு குடியேற அதுவே காரணமாகும். அதன் விளைவாகக் கடல் வழிகளும் பயன்படுத்தப்பட்டு, வியாபார, குடியேற்றத் தொடர்புகள் வளர்ந்தன. ஹர்ஷர் இறந்த சிறிது காலத்திற்குப் பின் இந்தியாவிற்கு வந்த இட்சிங்கின் கடற்பயணக் குறிப்புகளிலிருந்து கடல் வழிகள் முழு அளவில் பயன்படுத்தப்பட்ட விதத்தை அறிகிறோம். கி.பி. 671ஆம் ஆண்டு இட்சிங் சீனவி

லிருந்து ஒரு பாரசீகக் கப்பலில் பயணமானூர். இருபது நாள் பயணத்திற்குள் முதல் தங்குமிடமான ஸ்ரீபோஜா என்றழைக்கப் பட்ட நாட்டின் தலைநகரான போஜா(Bhoja)வை அக் கப்பல் அடைந்தது. அங்கிருந்து வேறு ஒரு கப்பலில் பதினைந்து நாள்கள் பயணம் செய்து, ஸ்ரீபோஜாவின் பகுதியாக விளங்கிய மலாயு (Malayu)வை அடைந்தார்; அங்கிருந்து வேறு ஒரு கப்பலில் தொடர்ந்து பயணம் செய்து ஸ்ரீபோஜாவின் மற்றொரு துறை முகமாகிய கச்சா(Ka-cha)வை அடைந்தார்; அந் நாட்டின் அரசருக்குச் சொந்தமான வேறு ஒரு கப்பலில் பத்து நாள்கள் பயணம் செய்து, உடை அணியாத மக்கள் வாழும் ஒரு தீவை (நிகோபார்) அடைந்தார்; அங்கிருந்து சுமார் பதினைந்து நாள்கள் தொடர்ந்து பயணம் செய்து, இந்தியாவின் சிறப்பான துறைமுகமான தாமரலிப்தியை அடைந்தார். அதே போன்று இட்சிங் சீனுவிற்குத் திரும்பிய கடற்பயணக் குறிப்புகளையும் தந்துள்ளார் தாமரலிப்தியிலிருந்து தென் கிழக்குத் திசையில் இரண்டு மாதம் பயணம் செய்தால் கச்சாவை அடையலாம். அவ் வேளையில் போஜாவிலிருந்து ஒரு கப்பல் கச்சாவிற்கு வந்து சேர்ந்திருக்கும் இலங்கை வழியாகப் பயணம் மேற்கொள் பவர்கள் தென்மேற்குத் திசையில் பயணம் செய்ய வேண்டும். இட்சிங் கச்சாவில் பனிக்காலம் வரைத் தங்கி இருந்து, பின் மறுபடியும் கப்பலேறித் தென் திசைப் பயணத்தைத் தொடர்ந் தார்; ஒருமாத காலப் பயணத்திற்குப் பின் மலாயு அல்லது ஸ்ரீபோஜாவை அடைந்தார். கோடை காலத்தின் பாதி நாள்களை அங்குக் கழித்த பின், இட்சிங் வடதிசையில் பயணத்தை மேற்கொண்டார்; ஒரு மாதம் கழித்து வாங்-பூ(Kwang-fu)வை அடைந்தார். மேலே காணப்படுவது இட்சிங் சீனுவிலிருந்து இந்தியாவிற்கும், பின் இந்தியாவிலிருந்து சீனுவிற்கும் திரும்பிய கடற்பயண விளக்கத்தின் மிகச் சுருக்கமான விளக்கமாகும். 'விவேகமுள்ளோர் அவற்றைப் பற்றி மேலும் விளக்கமாக அறிந்து பயன் பெறுவர் என நம்புவதாக' தகாகசு முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவையும், சீனுவையும் தொடர்புபடுத்திய இக் கடல் வழிகள், அந் நாடுகளுக்கிடையே வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகள் வளர்வதற்குப் பெரிதும் துணை புரிந்தன. இந்தியா தன்னுடைய கொள்கைகளை இந்திய எல்லைகளுக்கு அப்பால் அமைந் திருந்த நாடுகளுக்கு விரைவாக ஏற்றுமதி செய்ததற்கு இட்சிங் பயணக் குறிப்புகளில் சான்றுகள் காணப்படுகின்றன. கீழை நாடுகளில் காணப்பட்ட இந்தியப் பண்பாட்டு நிலையங்கள் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். அக் காலத்தில் மலாயு அல்லது போஜா

என்று அழைக்கப்பட்ட சுமத்ரா தீவானது இந்தியப் பண்பாட்டின் மிகச் சிறப்பான எடுத்துக்காட்டு நிலையமாக அன்று விளங்கியது. இட்சிங் இங்குதான் பல ஆண்டுகள் தங்கி இருந்து சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளைக் கற்றார். அதன் தலைநகரில் இந்தியப் பண்பாடு நன்கு வளர்ச்சி பெற்றிருந்த மத்திய தேசத்தின் பெரிய கல்வி நிலையங்களில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் அனைத்தையும் சுமார் 1000 துறவிகள் கற்றனர் என இட்சிங் குறிப்பிட்டுள்ளார். பாஹியானால் (கி.பி. 414) ஜாவடி (Javadi) என அழைக்கப்பட்ட ஜாவாவிற்கு இட்சிங்கின் காலத்தில் கலிங்கா (Kalinga) என்ற பெயர் வழங்கப்பட்டது. முதலில் இந்து மதக் கோட்பாடுகளும், பின் பௌத்தமும் அங்கு வளர்ச்சி அடைந்தன. சுமத்ராவில் ஐந்தாம் நூற்றாண்டில் குறிக்கப்பட்ட வடமொழி வைணவ எழுத்துப் பதிவேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கி.பி. 656ஆம் ஆண்டுக் குறிப்பிலிருந்து ஆதித்ய தர்மர் என்பவர் ஜாவாவின் அரசராக விளங்கினார் என அறிகிறோம். தென் கடல் பகுதியில் அமைந்திருந்த தீவுகளில் (பதினொன்றுக்கும் அதிகமானவை அப் பதிவேடுகளில் விளக்கப்பட்டுள்ளன) அரசர்களும் படைத் தலைவர்களும் பௌத்த மதத்தில் நம்பிக்கை கொண்டு அதைப் பின்பற்றுபவர்கள் என இட்சிங் குறிப்பிட்டுள்ளார்.[1]

இந்தியர்கள் கடல் கடந்து தென் கடல் பகுதியில் காணப்பட்ட தீவுகளுடனும், கிழக்குப் பகுதி நாடுகளுடனும் கொண்டிருந்த தொடர்புகள் ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் மேலும் பெருகின. இந்தியாவை ஒட்டி அமைந்திருந்த நாடுகள் அனைத்திலும் இந்தியப் பண்பாடு பரவிற்று. ஹர்ஷர் காலத்தில் நிலவி வந்த பண்பாட்டுத் தொடர்புகளைப் பற்றிய மிகச் சிறந்த

[1] வெளிநாடுகளில் இந்தியாவின் செல்வாக்கு வளர்ச்சி பற்றிய விளக்கங்கள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி இந்து மதமும் பௌத்தமும் (Hinduism and Buddhism) என்ற மூன்று புத்தகங்கள் கொண்ட ஒரு சிறந்த நூலை எலியட் (Elliot) எழுதியுள்ளார். இத் தொடர்பாக அப் பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சில குறிப்புகளை இங்குக் கூறலாம். மலேயாத் தீபகற்பத்தில் உள்ள வெல்லஸ்லி மாவட்டத்தில் நான்காம் நூற்றாண்டில் குறிக்கப்பட்டுள்ள ஒரு பதிவேடு கண்டெடுக்கப்பட்டு உள்ளது. அதில் ரக்தம்ரிதிகா(Raktamrithika-வங்காளத்தில் முர்ஷிதாபாத் மாவட்டத்திலுள்ள ரங்கமதி)விலிருந்து வந்த புத்த குப்தர் என்ற பௌத்த மதத்தைப் பின்பற்றும் கப்பற்படைத்தளபதி(Mahanavika)யைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. துரோணரின் மகன் அஸ்வத்தாமா(Asvatthama)வின் குடும்ப வழித்தோன்றல்கள் எனப் புகழ்ந்து கூறிக்கொள்பவர்களும், இரண்டாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரை அகண்ட இந்தியாவை ஆண்டவர்களும், சைவப் பிரிவைச் சேர்ந்தவர்களுமான பல இந்து மத அரசர்களின் பெயர்கள் கொண்ட பதிவேட்டுத் தொடர்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கிழக்கு போர்னியா(Borneo)வில் உள்ள கோடிய் (Koetei)யில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஐந்தாம் நூற்றாண்டுக் குறிப்பு, மூலவர்மர் (Mulavarman) என்ற அரசர் பல்லவ நாட்டை ஆண்டு வந்தார் எனக் கூறுகிறது. (I.A. 1921-பக்கம் 117)

விளக்கங்கள் யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காணப் படுகின்றன. யுவான் சுவாங் சீனவிலிருந்து இந்தியாவுக்கும், பின் சீனவிற்கும் திரும்பிய நிலவழி நெடுக அமைந்திருந்த நாடுகளில் குறிப்பிடத்தக்க இந்தியப் பண்பாட்டு அமிசங்கள் காணப்பட்ட தாகக் குறிப்பிட்டுள்ளார். என்கி (Yenki) என்ற நாட்டில் பத்து பௌத்த மடங்களும், ஹீனயானத்தின் சர்வாஸ்திவாதின் பிரிவைச் சேர்ந்த 2000 துறவிகளும் காணப்பட்டனர் இந்தியாவின் சூத்திரங்கள், வினய கோட்பாடுகள் (Vinaya Regulations) ஆகிய வற்றிற்கு ஏற்ப மாணவர்கள் பாடங்களை ஆழ்ந்து கற்றனர். இலக் கியப் பாடங்களைத் தவிர, அந் நாட்டின் எழுத்து முறையும் இந்தியாவிலிருந்து பெறப்பட்டுச் சில மாற்றங்களுடன் விளங்கியது என யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.[1] இந்தியாவின் மகா முனிவரான தர்மகுப்தர் கி.பி.585ஆம் ஆண்டில் சீனவிற்குச் செல்லும் வழியில் தங்கிய இடமான ஆரண்ய விஹாரம் என்ற புகழ் பெற்ற மடாலயம் இங்குதான் அமைந்துள்ளது எனச் சீன ஆதாரங்களைக் கொண்டு வாட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளார். கூ-சி (Ku-chih) என்ற நாட்டில் நூற்றுக்கும் அதிகமாகக் காணப்பட்ட பௌத்த மடங்களில் ஹீனயானத்தின் சர்வாஸ்திவாதின் பிரிவைச் சேர்ந்த ஐயாயிரத்திற்கும் அதிகமான துறவிகள் வாழ்ந்தனர். இந்திய இலக்கியங்களையும், மற்ற படைப்புகளையும் அத் துறவிகள் பயின்றனர். எழுத்து முறை இந்தியாவிலிருந்து பெறப்பட்டது எனினும், அதிக மாற்றங்களுடன் காணப்பட்டது.[2] அந் நாடு முழுவதும் சிறப்பான பௌத்தக் கட்டடங்களும், அழகிய புத்தர் சிலைகளும் காணப்பட்டன எனப் பல சீன ஆதாரங்களைப் பின்பற்றி வாட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளார். அந் நாட்டின் கிழக்கு, மேற்குச் சுற்றுப்புறங்களில் அமைந்திருந்த இரண்டு பௌத்த மடங்களில் மனிதரின் சிற்ப ஆற்றலுக்கு அப்பாற் பட்ட புத்தரின் அழகான உருவச் சிலைகள் காணப்பட்டன என வாட்டர்ஸ் குறிப்பிடுகிறார். கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த மடத்தில் புத்தரின் அடிச்சுவடு பதிக்கப்பட்ட பச்சைக் கல்லால் ஆன படி ஒன்றும் காணப்பட்டது. புத்தர் நின்றுகொண்டிருக்கும் நிலையில் காணப்படும் 90 அடி உயரமுள்ள இரண்டு உருவச் சிலைகள் கூ-சி நகருக்கு வெளியே பௌத்தப் பேரவைகள் நடந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்தன. பௌத்தத் துறவிகளும், தொழில்களில் ஈடுபட்டிருந்த சாதாரண மக்களும் பங்கு பெறும் மதக் கூட்டம் ஆண்டுதோறும் இலையுதிர் காலத்தில் அங்கு நடை பெற்றது. அக் கூட்டம் பத்து நாள்கள் தொடர்ந்து நடை

[1] வாட்டர்ஸ்-1-பக்கம் 48
[2] வாட்டர்ஸ்-1-பக்கம் 59

பெற்றது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்து வந்த மக்களும், மதத்தோடு தொடர்பு கொண்டவர்களும் அக் கூட்டத்தில் பங்கு பெற்றனர். அரசரும், மக்களும் கூட்டங்களில் பங்கு கொண்டமையால், அந் நாள்கள் விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டன. மக்கள் தொழிலில் ஈடுபடுவதை விடுத்து, கூட்டங்களில் பங்கு பெற்று மதக் கொள்கை விளக்கங்களைக் கேட்க விரைந்தனர். நாட்டில் இயங்கி வந்த பௌத்த மடங்களில் வாழ்ந்த எல்லாப் பிரிவைச் சேர்ந்த துறவிகளும் தங்களிடம் இருந்த புத்தரின் சிலைகளுடன் ஊர்வலமாகச் சென்றனர். இந்தியாவிற்கு வெகு தூரத்தில் அமைந்திருந்த ஒரு நாட்டில் இந்தியாவில் தோன்றிய பௌத்த மதத்தின் கோட்பாடுகள் நிலை நிறுத்தப்பட்டு, ஹர்ஷரின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது போன்று ஆடம்பரமும், மகத்துவமும் மிக்க மதப் பேரவைகளும் நடைபெற்றன. அந் நாட்டிற்குப் பக்கத்தில் 'ஆசார்ய விஹாரம்' (Ascharya Vihara) என்ற புகழ் மிக்க பௌத்த மடம் அமைந்திருந்தது. விசாலமான அறைகளும், கலை நுட்பம் மிக்க புத்தரின் உருவச் சிலைகளும் அங்குக் காணப்பட்டன. தூரத்தில் வாழ்ந்த உயர்குடி மக்கள், அதன் புகழைக் கேள்விப்பட்டு, அவ்விடத்திற்கு வருகை புரிந்தனர். அரசரும் அதிகாரிகளும் அவர்களை வரவேற்றுத் தக்க வசதிகளைச் செய்து கொடுத்து உதவினர். யுவான் சுவாங் மோட்ச குப்தரின் விருந்தினராக இம் மடத்தில் தங்கி இருந்தார். மோட்ச குப்தர் ஹீனயானப் பிரிவைச் சார்ந்தவராவார். சுமார் இருபதாண்டு காலம் அவர் இந்தியாவில் தங்கி இருந்து கல்வி கற்றார். அவரால் எழுதப்பட்ட சொல் இலக்கண ஆராய்ச்சி விளக்க உரை மிகவும் புகழ் பெற்றது என 'லைப்' கூறுகிறது. இருப்பினும், யுவான் சுவாங்கின் கல்வி ஆற்றலுக்குப் பணிந்த சீடராக மோட்ச குப்தர் விளங்கினார். கி.பி. 585ஆம் ஆண்டில் தர்மகுப்தரும் இந்த மடத்தில் தங்கி இருந்தார் என வாட்டர்ஸ் குறிப்பிடுகிறார். குமாரஜீவாவின் காலத்தில் வாழ்ந்த விமலாக்ஸா (Vimalaksa) என்பார் தூர நாடுகளிலிருந்து வினயக் கல்வியைக் கற்பதற்கு இங்கு வந்த மாணவர்களில் சிறப்பானவராகக் கருதப்படுகிறார்.[1]

போ-லு-கா (Po-lu-ka) எனக் குறிப்பிடப்பட்ட பாலுகா (Baluka)வில் காணப்பட்ட பத்து மடங்களில் சர்வாஸ்திவாதின் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான பௌத்தத் துறவிகள் வாழ்ந்தனர்.

1 வாட்டர்ஸ்-i-பக்கம் 64

அடுத்தபடியாகச் சீனப்பயணி, துருக்கியர்களின் கட்டுப்பாட்டி லிருந்த தாஷ்கெண்ட் (Tashkend), சாமர்கண்டு (Samarkand), தொக்காரா (Tokhara) வழியாகப் பயணம் செய்தார். அப் பகுதிகளில் பௌத்த மதம் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. தெர்மிஸ்(Termiz)ஸில் உள்ள பத்து பௌத்த மடங்களில் ஆயிரத் திற்கும் அதிகமான துறவிகள் வாழ்ந்தனர் என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். அங்கு அழகு மிக்க ஸ்தூபங்களும், புத்தரின் சிலைகளும் காணப்பட்டன. அதன் சுற்றுப்புறங்களில் உள்ள சில இடங்களில் பௌத்த மதம் காணப்பட்டது. குந்தஸ் (Kunduz) பகுதியில் அது மிகச் சிறந்து விளங்கியது. அங்கு யுவான் சுவாங் ஹீனயானப் பிரிவில் பெரும் புகழ் பெற்று விளங்கிய தர்மசங்கா (Dharmasanga)வைச் சந்தித்தார். அந் நாட்டின் அரசர், யுவான் சுவாங் இந்தியாவை நோக்கித் தென் திசையில் பயணம் செய்யும் வேளையில் 'பணிக்கட்டளை' அளித்து உதவினார். அதிகாரிகள் அரசின் கடமைகளை நிறைவேற்றப் பயணம் செய்யும் காலத்தில் அவர்களுக்குத் தங்கும் வசதிகள், குதிரைகள், ஆள்களைத் தந்து உதவுதல் போன்ற பணிகளைச் செய்யுமாறு, அரசு மக்களை ஆணை யிடுவதே 'பணிக்கட்டளை' ஆகும். இந்தியாவிற்குச் செல்வதற்கு முன் போ-ஹா Fo-ha) என்று சீனத்துப் பயணி குறித்துள்ள புகழ் பெற்று விளங்கிய பௌத்த இடமான பால்க்(Balkh)கிற்குச் செல்லு மாறு குந்தஸ் அரசர் யுவான் சுவாங்கை வேண்டிக்கொண்டார். அதன் தலைநகரமே 'ராஜகிரிஹாவின் சிறு நகரம்' என அழைக்கப் பட்டது. அங்குச் சுமார் நூறு மடங்களில் மூவாயிரத்திற்கும் அதிகமான ஹீனயானப் பிரிவைச் சார்ந்த பௌத்தத் துறவிகள் வாழ்ந்தனர். தலைநகருக்கு வெளியே நவ சங்காராம (Nava Sangharama) என்ற நிலையம் காணப்பட்டது. 'இந்துகுஷ் வட பகுதியில் காணப்பட்ட ஒரே பௌத்த நிலையம்' இதுவே எனவும், 'அந் நிலையத்தில் பௌத்தக் கோட்பாடுகளை விளக்கும் தலைவரின் பதவியை அடிக்கடி புதியவர்கள் வகித்து வந்தனர்' எனவும் யுவான் சுவாங் குறிப்பிடுகிறார். விலையுயர்ந்த ஒரு புத்தர் சிலையையும், ஒரு வைஸ்ரவண சிலையையும், வேறு பல அரிய பொருள்களையும் அம் மடம் கொண்டிருந்ததால், சுற்றுப்புறத்தில் வாழ்ந்த நாகரிகமற்ற படைத்தலைவர்களால் அடிக்கடி கொள்ளை அடிக்கக் குறிக்கப்படும் இலக்காக அது ஆயிற்று. புத்தரின் புனிதப் பொருள்களில் சில அங்குக் காணப்பட்டன. புத்தர் கழுவுவதற்குப் பயன்படுத்திய பாத்திரம், பல், துடைப்பம் ஆகியவை விழா நாள்களில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. அதற்கு அருகில் அமைந்திருந்த ஒரு ஸ்தூபம் புத்தரின் புனிதப்பொருள்களைக் கொண்டிருந்தது. அங்குப் பிரஜ்ஞகரா (Prajnakara) என்ற கல்வியாளர் வாழ்ந்தார். சில அபிதர்மம், விப்ஹாசா சாஸ்திரம் (Vibhasa Sastra) ஆகிய

வற்றின் கொள்கைகளை அவரிடமிருந்து யுவான் சுவாங் கற்றுக் கொண்டார்.

யுவான் சுவாங் பால்(Balkh)கை விட்டுப் புறப்பட்டு காஸ் (Gaz) நாட்டை அடைந்தார். அங்குள்ள பத்து மடங்களில் சுமார் 300 சர்வாஸ்திவாதின் துறவிகள் வாழ்ந்தனர். பாமிய (Bamian)னில் பத்து மடங்களில் லோகாத்தரவாதின் (Lokuttaravadin) பிரிவைச் சேர்ந்த பல ஆயிரம் துறவிகள் வாழ்ந்தனர். கபிசா (Kapisa) இந்தியாவின் எல்லையை ஒட்டி அமைந்து இருந்தது. பௌத்த மதம் புகழ் பெற்று விளங்கிய மிகச் சிறப்பான இடங்களில் கபிசாவும் ஒன்றும். ஆயிரத்திற்கும் அதிகமான பௌத்த மடங்களில் மஹாயானப் பிரிவைச் சேர்ந்த ஆறுயிரத்திற்கும் மேற்பட்ட துறவிகள் வாழ்ந்தனர்.

யுவான் சுவாங் தாய்நாட்டிற்குத் திரும்பும் வழியில் அமைந்திருந்த பல நாடுகளிலும் பௌத்தம் சிறந்து விளங்கியது. சாஓ-கூ-ட (T'sao-ku-t'a) நாட்டின் தலைநகரான கஜினியில் காணப்பட்ட சுமார் 100 மடங்களில் 10000க்கும் அதிகமான மஹாயானப் பிரிவைச் சேர்ந்த துறவிகள் வாழ்ந்தனர். காபூலை ஆண்ட துருக்கிய அரசர் பௌத்தக் கருத்துகளில் ஆர்வம் உடையவராகக் காணப்பட்டார். தொக்காரா (Tokhara) நாட்டில் உள்ள அன்டரப்(Andrab)பில் துருக்கிய அமிசம் காணப்பட்டாலும், சில மடங்களும், சிறிய அளவில் பௌத்தத் துறவிகளுமே காணப்பட்டனர். மேலும், அசோக ஸ்தூபம் ஒன்றும் அங்குக் காணப்பட்டது. கோஸ்ட் (Khost) என்ற நாட்டிலும், பாதக்ஷா(Badakshan)னிலும் சில பௌத்த மடங்கள் காணப்பட்டன. பாதக்ஷானின் அரசர் 'பௌத்தக் கோட்பாடுகளில் அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்தார்.' குரான் (Kuran) நாட்டைப் புத்தரின் கொள்கைகளை அறிந்த ஓர் அரசர் ஆண்டு வந்தார். வாகா(Wakhan)னில் பத்து பௌத்த மடங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்றில் கல்லினுல் செய்யப்பட்ட புத்தரின் உருவச் சிலை செம்பு முலாம் பூசப்பட்டு, விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட விதானத்துடன் அமைக்கப்பட்டிருந்தது. பாமிர்ப் பள்ளத்தாக்கில் உள்ள தாஷ்குர்கா(Tashkurghan)னின் மக்கள் 'உண்மையான பௌத்தர்'களாக விளங்கினர். அந் நாட்டு அரசர், 'பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த பண்பட்ட அறிஞராக' விளங்கிஞர். அந் நாட்டுப் பழங்கதையின்படி, அவருடைய முன்னோர்களில் ஒருவர் அசோகரால் வெல்லப்பட்டார். அசோகர் அரண்மனையில் அவர் ஒரு ஸ்தூபத்தைக் கட்டினுர். பின்பு அவர் அரண்மனையிலிருந்து வெளியேறி, வேறு ஓர் இடத்திற்குச் சென்று, அங்கு பௌத்தப்

பெரியார் ஒருவரை வரவழைத்தார். அவர் சௌத்ராந்திகா (Sautrantika) பிரிவைத் தோற்றுவித்தவரும், கிழக்கில் வாழ்ந்த அஸ்வகோஷா (Asvaghosa), தெற்குப் பகுதியில் தோன்றிய தேவா (Deva), மேற்குத் திசையில் வாழ்ந்த நாகார்ஜுனு போன்ற சிறப்பு மிக்க பௌத்தப் பெரியார்களுடன் ஒப்பிடத் தகுந்தவரும், சாஸ்திர ஆசிரியருமான குமாரலாப்தா (Kumaralabdha) என்பவராவர். அவருடைய பிறப்பிடமான தக்ஷிலா(Taxila)விலிருந்து கட்டாயப்படுத்தி அழைத்து வந்து இருக்கச் செய்து, அவருக்காக மிகச் சிறப்பான பௌத்த மடம் ஒன்றை அவ்வரசர் நிறுவினார். ஓ(Osh)வில் பத்து பௌத்த மடங்களில் சர்வாஸ்திவாதின் பிரிவைச் சேர்ந்த சுமார் 1000 துறவிகள் வாழ்ந்தனர். காஸ்கா (Khasgarh)ரில் சுமார் நூறு மடங்கள் காணப்பட்டன. திரிபிதகா, விப்ஹாசாக்கள் அல்லது விளக்க உரைகள் முழுவதையும் அவற்றின் பொருளை அதிகமாக அறிந்துகொள்ளாமல் மனப்பாடம் செய்திருந்த துறவிகளைக் கண்டதாக யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். அங்கு வழங்கிய எழுத்து முறை இந்தியாவிலிருந்து பெறப்பட்டதாகும். சி-கு-கா(Che-ku-ka)வில் 'பௌத்த மதம் பரவியுள்ள எந்த நாட்டிலும் விட' மஹாயான நூல்கள் அதிகமாகக் காணப்பட்டன. இறுதியாக, கோடெ(Khoten)னில் மக்கள் பௌத்த மதத்தைத் தழுவியவர்கள் எனவும், சுமார் நூறு மடங்களில் ஐயாயிரத்திற்கும் அதிகமான மஹாயானப் பிரிவைச் சேர்ந்த துறவிகள் வாழ்ந்தனர் எனவும் யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். இந்திய எழுத்து முறையே அந் நாட்டிலும் வழங்கி வந்தது. அந் நாட்டின் அரசர் பௌத்த மதத்தைத் தழுவி இருந்தார். புத்தரின் பல வகையான உருவச் சிலைகள் அங்குக் காணப்பட்டன. அங்குள்ள மடங்கள் அசோகர் காலத்தில் வாழ்ந்த மகாமுனிவர்களும், அவருடைய அமைச்சர்களும், கோடெனில் குடியேற்றத்தை ஏற்படுத்தியவர்களுமான வைரோச்சனு (Vairochana), யசஸ் (Yasas) ஆகியோருடன் தொடர்பு கொண்டவையாய் சிறப்புடன் விளங்கின.[1]

ஹர்ஷரின் ஆட்சிக் காலம் இந்திய வரலாற்றின் சிறப்பு மிக்க காலங்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை. ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் திறமை மிக்க உள்நாட்டு நிருவாகம் காணப்பட்டது. வெளிநாடுகளிலும் இந்தியாவின் செல்வாக்கு உயரும் அளவிற்கு ஹர்ஷரின் ஆட்சி புகழ் பெற்று விளங்கியது. இந்தியாவைச் சுற்றியும் தூரத்திலும் அமைந்திருந்த நாடுகள் பண்பாடு, அறிவு வளர்ச்சி ஆகியவற்றைப் பெற இந்தியாவை நாடும் அளவிற்கு ஏழாம் நூற்றாண்டும் சிறப்புப் பெற்று விளங்கியது.

[1] வாட்டர்ஸ்-ii-பக்கம் 302

11. யுவான் சுவாங்

வாழ்க்கை வரலாறு

யுவான் சுவாங் சென் (Chen) என்ற பழமையான சீனக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அக் குடும்பத்தினர் பயணம் செய்வதில் ஈடுபாடும், விருப்பமும் உடையவர்களாக இருந்ததால், சீனப் பேரரசர்களின் ஆதரவைப் பெற்றிருந்தனர். யுவான் சுவாங்கின் குடும்பம் தெய்வீகப் பேறு பெற்ற ஷன் (Shun) பேரரசர் பரம்பரை எனக் கருதப்படுகிறது. சீனுவில் கியூசி-டி (Kuesi-te) என்று இன்று அழைக்கப்படும் மாவட்டத்தில் அவருடைய குடும்பம் நெடுங்காலமாக வசித்து வந்தது. பின் அவர்கள் இன்றைய ஷாண்டுங் (Shantung) பகுதிக்குக் குடி பெயர்ந்தனர். அக் குடும்பத்தைச் சேர்ந்த ஓ-பு (O-fu) என்பார் சௌ (Chow) வமிசத்தின் முதல் அரசரான ஊவாங்(Wu-wang)கின் கீழ் மண்பாண்டத் தொழில் இயக்குநராகவும், பள்ளி மேற்பார்வையாளராகவும் பணி புரிந்து வந்தார். பரம்பரை உரிமைப்படி அரசரால் ஓ-புவுக்கு அப் பதவி கொடுக்கப்பட்டது. ஓ-புவின் மகன் ஹு-குங்-கியூ-மேன் (Hu-kung-kuei-man) என்பவருக்கு, அரசர் ஊவாங் தம் மகளை மணம் முடித்துக் கொடுத்து, அவருடைய நிலையை மேலும் உயர்த்தினர். சென் குடும்பத்தின் வாரிசாகவும், அக் குடும்பத்தின் மூதாதையரின் பிரதிநிதியாகவும் அவர் அங்கீகரிக்கப்பட்டார். நிலமானியமும் வழங்கப்பட்டது. கண்ணியம் மிக்க மூன்று பெரியோர்களுள் (Three Reverends) ஒருவராக மேன் என்பவர் புகழ் பெற்றார். அவரது ஆளுகைக்குட்பட்ட நிலமானியப்பகுதி ஹோானன் பகுதியில் இருந்தது. கி.மு. 478ஆம் ஆண்டு வரை மேனின் ஆளுகைப் பகுதி தனியாகவே இயங்கி வந்தது. பின் அக் குடும்பம் பிரிந்து சிறப்புக் குன்றியது. ஆளுகைப் பகுதிகளை இழந்த அக் குடும்பத்திற்குச் சென் என்ற பெயர் மட்டும் நீடித்தது.

சென் குடும்பம் மறுபடியும் ஹான் வமிசத்தின் (Han Dynasty) ஆட்சிக் காலத்தில் அதாவது கி.மு. மூன்றும் நூற்றாண்டில் சிறப்பும் புகழும் பெற்றது. அக் குடும்பத்தில் ஒருவரான சென் பிங்

(Chen Ping) தம் திறமையாலும், முயற்சியாலும் வறுமையின் கீழ் மட்டத்திலிருந்து தம் நிலையை உயர்த்திச் செல்வத்தையும் அதிகாரத்தையும் பெற்று, வரலாற்றில் தமக்கென ஒரு சிறப்பான இடத்தைப் பெற்ருர்.

கி.பி. இரண்டாம் நூற்ருண்டில் யுவான் சுவாங் முன்னோர் களில் மற்ருெரு சிறப்பானவரைக் காண்கிறேம். அவருடைய பெயர் சென் ஷி (Chen Chih) ஆகும். அக் குடும்பத் தொடரில் நாம் அடுத்துக் காணும் முக்கிய மனிதர் ஷி-க்கு ஆருவது தலை முறையான சென் தா (Chen Ta) என்பவராவார். அவர் கி.பி. நான்காம் நூற்ருண்டில் வாழ்ந்தார். அப்பொழுது சீனுவைச் சின் (Chin) வமிசத்தினர் ஆண்டு வந்தனர்.

யுவான் சுவாங்கின் கொள்ளுதாத்தாவின் பெயர் சின் (Chin) ஆகும். வீ (Wei) அரசப் பேரரசிற்குப் பின் சாஞ்சியில் ஓர் உயர் அதிகாரியாக அவர் பணியாற்றினுர். யுவான் சுவாங்கின் தாத்தா காங் (K'ang) கல்வித்துறையில் தனிச் சிறப்பு பெற்று விளங்கி யதால், அரசின் ஆதரவுப் பெற்றுத் தலைநகரின் தேசீயக் கல்லூரியில் பேராசிரிய நியமனப் பேறு கிடைக்கப் பெற்ருர். அப் பதவிக்கு ஊதியம் அளிப்பதற்காகவே ஒரு சிறு நகரத்தின் வருவாய் ஒதுக்கப் பட்டிருந்தது. யுவான் சுவாங்கின் தந்தை ஹுய் (Hui) சிறந்த ஒழுக்கம் உடையவர்; நல்ல உயரமும், வனப்பும் பெற்றிருந்தார்; அரசாங்க நடைமுறைப் பற்றிய அறிவும், உயர் கல்வியும், அறி வாற்றலும் ஒருங்கே பெற்றிருந்தார்; கன்பூஷியசின் கொள்கை களில் நம்பிக்கை கொண்டவராகவும், பழைமை முறைகளை விரும்புபவராகவும் காணப்பட்டார்; தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளை உண்மையிலேயே பின்பற்றினுர்; நேரம் தவருது அலுவலகத்திற்குச் சென்று தமது பணிகளை ஒழுங்காக நிறைவேற்றினுர். அரசரின் கட்டுப்பாடுகள் தளர்ந்து, அரசியல் குழப்பநிலை தோன்றிய சமயம், பதவியைத் துறந்து, அரசுக்கும் தமக்குமிருந்த தொடர்பை அவர் துண்டித்துக்கொண்டார்; கிராமத்திற்குச் சென்று அங்குத் தனியே வசிக்கத் தொடங்கினுர். தற்சமயம் என்-ஷி (Yen-shih) என்று அழைக்கப்படும் பகுதியில் அக் கிராமம் உள்ளது. யுவான் சுவாங் கி.பி. 600ஆம் ஆண்டு தம் தந்தை வாழ்ந்து வந்த கோ-ஷி (Kou-shih) நகரத்தின் அருகில் உள்ள சிற்றூரில் பிறந்ததால், கோ-ஷி-மனிதன் (Kou-shih-man) என அழைக்கப்படுகிருர்.

ஹுயின் குடும்பம் நான்கு சகோதரர்களைக் கொண்டது. நால்வரில் யுவான் சுவாங் இளையவர்; தம் சகோதரர்களுடன் சேர்ந்து இளமைக் கல்வியைத் தம் தந்தையிடம் பயின்ருர்.

ஆசிரியர் சிலரும் கல்வி புகட்டினர். இளமையிலேயே யுவான் சுவாங், தம் வயதிற்கு அதிக அறிவு ஆற்றல் உடையவராகவும் புத்திக் கூர்மையுடனும் விளங்கினார். சமயோசிதமும், நல்ல நினைவாற்றலும், கற்பதில் ஆர்வமும், எளிதாகக் கற்றுக்கொள்ளும் திறனும், கற்றவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலும் அவரிடம் காணப்பட்டன. குழந்தைகளை எளிதாகக் கவரும் வேடிக்கை விளையாட்டுகளில் யுவான் சுவாங் ஆர்வம் காட்டவில்லை. நண்பர்களிடமிருந்து தனித்திருக்கவே அவர் விரும்பினார். தந்தையைப் போலவே கன்பூஷியசின் கொள்கைகளில் அவரும் நம்பிக்கை கொண்டிருந்தார்; பழைய இலக்கியங்களையும், மதத்துறைப் பழக்க வழக்கங்களையும் நன்கு அறிந்துகொண்டார். ஹூயின் இரண்டாவது மகன் புத்த மதத்தில் தீவிரப் பங்கு கொண்டார். யுவான் சுவாங்கும் மதத்தின்மீது கொண்டிருந்த ஆர்வத்தால் உந்தப்பட்டு, தம் சகோதரரைப் போலவே மதத் துறையில் ஈடுபட்டார்; தம் சகோதரர் தங்கியிருந்த பல மடங்களுக்கும் சென்றார்; தாமும் ஒரு புத்தத் துறவியாக மாற விரும்பினார்; பௌத்தப் புனித நூல்களைப் பய பக்தியுடன் படிக்கத் தொடங்கினார்; தம் இருபதாவது வயதில் பௌத்தத் துறவியாகும் தகுதியைப் பெற்றார்; ஆனால் மேலும் தொடர்ந்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பல மடங்களுக்குச் செல்லும் முயற்சியை மேற்கொண்டார்; பௌத்தக் கருத்துகளை நன்கு கற்றுணர்ந்த அறிஞர்களின் துணைகொண்டு, மத நிறுவனங்களில் மதத்தைப் பற்றிய அரிய நூல்களைக் கற்றார். விரைவிலேயே, வயதிற் குறைந்த, சொல்லாற்றல் மிகுந்த புத்தத் துறவியென அவரது புகழ் சீனமெங்கும் பரவிற்று.

இந்தியப் பயணம்

யுவான் சுவாங், புத்தர் பிறந்த புனித பூமிக்குச் சென்று வர வேண்டும் என்ற அடங்காத ஆவல் கொண்டிருந்தார்; புத்தரின் வாழ்க்கையோடு தொடர்புடைய பல புனித இடங்களை நேரே காணும் வாய்ப்பை எதிர் நோக்கி இருந்தார். மேலும், புத்தரின் புனித போதனைகளின் சீன மொழிபெயர்ப்புகளில் உள்ள குறைகளை அவர் உணர்ந்திருந்தார்; ஆகவே, அப் புனிதப் படைப்புகளை அதன் மூல மொழிகளிலேயே கற்று, அதன் உண்மையான விளக்கங்களை அறிந்துகொள்ளும் ஆவல் கொண்டிருந்தார். பயண ஏற்பாடுகளைச் செய்துகொண்டு கி.பி. 629ஆம் ஆண்டு தலைநகரான சாங்-ஆன் (Chang-an) நோக்கிப் புறப்பட்டார். அங்கிருந்து அவர் தம்முடைய நீண்ட பயணத்தை இரகசியமாகத் தொடர்ந்தார். தம் பயணக் காலத்தில்

தாம் நேரில் கண்டவற்றையும், கேட்டவற்றையும் பற்றி விளக்கமாக யுவான் சுவாங் எழுதியுள்ளார்.

பதினாறு ஆண்டுகளுக்குப் பின் யுவான் சுவாங் தம் தாயகத்திற்குத் திரும்பினார். சீனத் தலைநகரான சாங்-ஆனை 645ஆம் ஆண்டு வந்து அடைந்தார். அப்பொழுது தாங்-தாய் சாங் (Tang-tai-tsang) பேரரசர் சீனாவை ஆண்டுகொண்டிருந்தார். சீன வரலாற்றிலேயே காண்பதற்கு அரிய ஒரு மகிழ்ச்சி மிக்க, மாபெரும் வரவேற்பு யுவான் சுவாங்கிற்கு அளிக்கப்பட்டது. தெருக்கள் முழுவதும் மக்கள் கூட்டம் காணப்பட்டது. ஆர்வம் மிக்க ஆண்களும், பெண்களும் விழாக்கால இசையை முழக்கிக் கொண்டு துறவியை வரவேற்றனர். இயற்கையும் மக்களுடன் இணைந்து, புனித நாட்டைக் கண்டு வந்த துறவியை வரவேற்பது போன்று மழை பொழிந்தது. மரங்களும், செடி கொடிகளுங்கூட விட்டுப் பிரிந்த துறவியை வரவேற்பதே போன்று காணப்பட்டன. யுவான் சுவாங் மேற்கு நோக்கிப் புறப்பட்டுப் புனிதப் பயணத்தைத் தொடர்ந்த சமயத்தில் மேற்கு நோக்கிப் பணிவுடன் குனிந்து மரியாதை செலுதத்திய ஒரு மரமானது, அவர் சீனாவிற்குக் கிழக்கு நோக்கித் திரும்பி வரும் வேளையில் கிழக்குத் திசையில் கிளைகளையும் இலைகளையும் தாழ்த்தி மரியாதை செலுத்தியது என சொல்லப்படுகிறது பயணி நலமாகத் தாயகம் திரும்பிய நிகழ்ச்சியானது உண்மையில் அதிசயங்களில் ஒன்றாகவே கருதப்பட்டது. ஏனெனில், யுவான் சுவாங் மிகச் சிலரே கண்டுள்ள புனித பூமிக்குச் சென்று, மற்றவர் கண்டும் கேட்டும் அறியாதவற்றை எல்லாம் அறியும் பேறு பெற்றிருந்தார். நெடிய, வழி அறியாப் பாலைப் பகுதிகளை அவர் தனியாகக் கடந்திருந்தார். மற்றும் அவர் துணிவுடன் உயர்ந்த மலைகளின் மீது ஏறியவர்; புல் பூண்டுகள் அற்ற பகுதியைக் கடந்து குருதி உறைந்து போகும் கொடிய குளிர் காற்றில் வாடியவர்; காணுமிடமெல்லாம் கடும் பனியைக் கண்ட நிலையிலும் மனங்கலங்காது பயணத்தைத் தொடர்ந்தவர்; 'உலகத்தின் மேற்கு முனை'யைக் கண்டு வந்தவர்; வாழ்க்கையின் எல்லா நிலைகளும் நிறைந்து விளங்குவதாகக் கருதப்பட்ட ஒரு நாட்டுக்குச் சென்று நலமே திரும்பி வந்தவர்; அங்ஙனம் திரும்பி வந்தபொழுது தம்முடன் விலை மதிக்கவொண்ணாத அரிய நூல்களை அதிக அளவில் கொண்டு வந்தவர். அந் நூல்களில் சில அறிஞர்களைக் கவர வல்ல உயர்ந்த கருத்துகளைக் கொண்டவை. அவை பலவும் சீனர்களுக்குப் புரியாத இந்திய மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. ஒழுங்காகச் சீவப்பட்ட ஓலைகளின் வெளிப்புறத்தில் சீராக அவை எழுதப் பட்டிருந்தன. புத்தரின் அழகான படங்கள் அவற்றில் காணப்

பட்டன. மற்ற புனிதத் துறவிகளின் உருவங்கள் தங்கம், வெள்ளி ஆகியவற்றில் செதுக்கப்பட்டிருந்தன. மேலும், புத்தரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட 150 புனிதப் பொருள்களையும் அவர் கொண்டு வந்திருந்தார். இவை அனைத்தையும் இருபது குதிரைகள் சுமந்து வரும் காட்சி, கோலாகலம் மிக்க திருவிழாவை நினைவூட்டியது. இதைக் கண்டு களிப்புக் கடலிலாழ்ந்த சீனப் பேரரசர், தம்முடைய அனுமதியைப் பெறுமல், மேலை நாட்டுப் பயணத்தை மேற்கொண்ட யுவான் சுவாங்கை மன்னித்து விட்டார். பேரரசர் பயணியின் நட்பை நாடி, வலிய வந்து பழகி, யுவான் சுவாங்கின் நெருங்கிய நண்பராகி விட்டார்; தம்முடைய இருப்பிடத்திற்கு அவரை அழைத்துச் சென்று மேற்கு நாட்டுப் பயணச் செய்திகளைப் பல நாள்கள் அலுப்படையாமல் கேட்டு மகிழ்ந்தார். மதப் பொறுப்புகளை விட்டு விட்டு அரசாங்கத்தில் பொறுப்பு மிக்க பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு யுவான் சுவாங்கை அவர் வேண்டிக்கொண்டார். ஆனுல், பயணியின் மனமோ அதை நாடவில்லை. அவருடைய கருத்து ஒரே ஒரு குறிக்கோளில் ஊன்றியிருந்தது. அரண்மனையை விட்டு மடத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தவுடன், தாம் கொண்டு வந்துள்ள அரிய செல்வங்களை இந்தியமொழிகளிலிருந்து சீனத்திற்கு மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட அவர் விரும்பினுர். யுவான் சுவாங்கின் வேண்டுகோளுக்கிணங்க, சீனப் பேரரசர், பல அறிஞர்களையும், மதவல்லுநர்களையும் மொழிபெயர்க்கும் பணிக்காகவும், பிரதிகள் எடுத்து ஒருங்கிணைக்கும் வேலைகளுக்காகவும் நியமித்தார். பேரரசரின் வேண்டுகோளுக்கிணங்கித் தம்முடைய பயண நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து, ஒருங்கிணைந்து, குறிப்புகளின் துணையுடன் சு-யு-கி (Hsi-yu-ki) என்ற நூலை யுவான் சுவாங் தொகுத்து முடித்தார். இப் பெரும்பணி கி.பி.645ஆம் ஆண்டு நிறைவுற்றது. அதில் ஒரு பிரதியை யுவான் சுவாங் சீனப் பேரரசருக்கு அளித்தார். ஆனுல், நமக்குக் கிடைத்திருப்பதைப் போன்ற பிரதி 648ஆம் ஆண்டுதான் முழுமையாகத் தயாராயிற்று.

இதற்குப்பின் ஓய்வுகொள்ள மனமில்லாத யுவான் சுவாங் தம் சகோதரர்களின் துணையுடன் போற்றுதற்கரிய செயல்களைச் செய்தும், செய்யும்படி மற்றவர்களைத் தூண்டியும் வந்தார்; அமைதியான அதே சமயத்தில் சுறுசுறுப்பான வாழ்வு வாழ்ந்து மன நிறைவு கொண்டார். 664ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் ஆரும் நாள் தம்முடைய இவ்வுலக வாழ்வு முடியப் போகிறது என்பதை யுவான் சுவாங் அறிந்துகொண்டார்.

ஆகவே, அதற்குத் தம்மை அவர் தயார் செய்துகொண்டார். அச்சமோ, துக்கமோ அவரிடம் சிறிதும் காணப்படவில்லை. தம்முடைய வாழ்வு நிறைவெய்தியது என்ற மகிழ்ச்சியும், மன நிறைவுமே அவர்பால் குடிகொண்டிருந்தன. இறப்பிற்குப் பின் நற்கதி அடைவோம் என்ற நம்பிக்கையையே யுவான் சுவாங் கொண்டிருந்தார். மறுபடியும் பிறந்து, புதிய வாழ்விலும் புத்தரின் பணிகளை, மக்களின் நன்மைக்காகத் தொடர்ந்து செய்ய முடியும் என்று யுவான் சுவாங் திடமாக நம்பினார். எனவே, அவர் மகிழ்ச்சியுடன் மரணத்தை எதிர்கொண்டார்.

யுவான் சுவாங்கின் குணநலன்கள்

தந்தை ஹுயி(Hui)யைப் போலவே யுவான் சுவாங்கும் கவர்ச்சியான உடல் அமைப்பைப் பெற்றிருந்தார். நல்லொழுக்கமும், அறிவுத்திறனும் ஒருங்கே அவரிடம் காணப்பட்டன. யுவான் சுவாங் குடும்பப்பற்று மிக்கவராக விளங்கினார். நகைச் சுவையில் விருப்பமற்றவராகவும், புதிதாக எதையும் கண்டு பிடிக்கும் ஆற்றல் இல்லாதவராகவும் இருப்பினும், கடுமையாக உழைக்கும் பண்பை அவர் பெற்றிருந்தார். மத இலக்கியங்களை ஆழக் கற்று, மிக உயர்ந்த மதப் பெரியாராக அவர் விளங்கினார். இந்தியாவின் செல்வங்களும், சிறப்புகளும், பெருமைகளும் அவரைக் கவர்ந்தன எனினும், தாய்நாட்டுப் பற்றை அவற்றிற்கு மேலாக அவர் கருதினார். புத்த மதத்தின்மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றின் காரணமாக அறிவுக்குப் புறம்பான, புத்த மத சம்பந்தமான அதிசய நிகழ்ச்சிகளையும், கதைகளையும் அவர் நம்பினார். யுவான் சுவாங் இந்தியாவில் கண்டவற்றை மிக நன்றாகவும், சரியாகவும் குறித்து வைக்கும் வாய்ப்புப் பெற்றிருந்த போதிலும் அதை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை எனலாம்.

ஆனால், சீனப்பயணியான அவர் இந்தியாவின் நிலையைத் தாம் புரிந்துகொண்ட அளவிற்கே குறித்திருக்க முடியும். வெளி நாட்டுப் பயணி ஒருவர் வேறு ஒரு நாட்டின் சூழ்நிலைகளை எந்த அளவிற்குச் சரியாகக் குறித்திருக்க முடியும் என்பதையும், சீன மொழியில் எழுதப்பட்டவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பு எவ்வளவு தூரம் யுவான் சுவாங்கின் கருத்துகளைச் சரியாக உணர்த்த இயலும் என்பதையும் எண்ணிப் பார்த்தல் அவசியம் ஆகும். காலத்தால் பொருள் மாறுபட்டு இருப்பினும், யுவான் சுவாங்கின் குறிப்புகளைத் தமிழில் படிக்கும் ஒருவர், ஹர்ஷர் கால நிலையைக் கூடியவரை மிகச் சரியாகப் புரிந்துகொள்ள இயலும் என்பதை ஒப்புக்கொள்ளலாம். வாட்டர்ஸ் ஆங்கிலத்தில்

மொழி பெயர்த்துள்ள நூலும் வரலாற்றுக்குப் பயன்படக் கூடியது. வேறு எந்த ஆங்கிலேயரையும்விட, வாட்டர்ஸ் சீன வரலாற்றையும், பௌத்த இலக்கியங்களையும் நன்கு அறிந்தவர் ஆதலால், அவருடைய மொழிபெயர்ப்பு நூல் யுவான் சுவாங் கால இந்தியாவின் அரசியல், சமூக நிலையைச் சரியாக அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.

யுவான் சுவாங் பயணத்தின் முக்கிய நோக்கத்தை நாம் அறிந்துகொள்ளுதல் அவசியம். புத்தரையும், பௌத்த மதத்தையும், அதன் தொடர்பான செய்திகளையும் நன்ருக அறிந்து கொள்ளும் ஆர்வத்தின் காரணமாகவே அவர் இந்தியாவில் பயணம் செய்தார். யுவான் சுவாங் பௌத்த மதத்தின்மீது கொண்டிருந்த அளவற்ற பற்று, ஏற்றுக்கொண்ட கொள்கைகள், படித்து உணர்ந்த கருத்துகள் ஆகியவை புத்தரின் போதனைகளுக்கு மாறுபட்டவையாக இருப்பினும், அவை அன்பில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகும்.

யுவான் சுவாங் இறந்தபின் 'அவருடைய மாணவர்களுக்கு அவர் அதிசயமாக இரவில் காட்சி அளித்தார்' என்பன போன்ற கதைகள் வழங்கலாயின. அவருடைய வாழ்க்கைக் காலத்திலேயே யுவான் சுவாங் 'சாக்ய முனி' (Sakyamuni) என்று கௌரவிக்கப் பட்டார். சில பௌத்தக் கோயில்களில் யுவான் சுவாங்கைத் தெய்வமாக வணங்கும் நிலையும் தோன்றியது.

யுவான் சுவாங் இந்தியாவைப் பற்றித் தரும் குறிப்புகள்

இந்தியா

யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளிலிருந்து இந்தியாவிற்குப் பல பெயர்கள் வழங்கப்பட்டன என்பதை அறியலாம். இன்-டு (Yin-tu) என்பது அதிகமாக வழக்கத்தில் இருந்த சொல்லாகும். அதைத் தவிர, டின்-சு (Tien-chu), ஷென்-டு (Shen-tu), சீன்-டவ் (Sien-tau) எனவும் இந்தியா குறிக்கப்பட்டது.

இன்-டு என்ற சொல் இந்தியாவையும், இந்திய மக்களையும் குறிக்கும் சொல்லாக விளங்கிற்று. இந்து தேசா (Indu-Desa) என்பதை இந்தியாவைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகச் சீனர்கள் கொண்டனர். சீன இலக்கியத்தில் இந்த்ரவர்தனு என்ற சொல்லும் இந்தியாவைக் குறித்தது. பொதுவாக இன்-டு என்பது இந்தியாவைக் குறிக்கும் சொல்லாக இருப்பினும், பல அரசுகள் இருந்தமையால், பிரதேசப் பெயர்களே வழங்கப்பட்டு வந்தன. மகத ராஜ்யம், கௌசாம்பி, சாமதத்தா, நேபாளம்

என்பவை அதற்குச் சில எடுத்துக்காட்டுகளாம். இன்-டு என்ற சொல்லுக்குச் சந்திரன் எனச் சீனர்கள் பொருள் கொண்டனர். இந்தியாவில் புத்தர் என்ற சூரிய ஒளி மறைந்த பின் தோன்றிய நீண்ட இரவு பௌத்தம் புகழ் குன்றியிருந்த காலத்தைக் குறிக்கிறது எனவும், அப்போது தோன்றிய பல்வேறு மதங்கள் அவ்விரவில் தோன்றிய நட்சத்திரங்களை ஒத்தவை என்றும், புத்தரின் கருத்துகள் சந்திரனை ஒத்தவை எனவும் சீனர்கள் விளக்கம் கூறினர்.

யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளிலிருந்து அவர் இந்தியாவை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்து இருப்பதை அறியலாம். வடக்கு இந்தியா, கிழக்கு இந்தியா, மேற்கு இந்தியா, மத்திய இந்தியா, தென் இந்தியா என்பவை அப் பிரிவுகளாகும். தொன்னூறாயிரம் லி (Li-5லி-ஒரு மைல்) சுற்றளவு உள்ள பகுதியும், பனி படர்ந்த மலைகளை (இந்துகுஷ் மலை) வட பகுதியிலும், கிழக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளில் கடலை எல்லையாகவும் கொண்டது இந்தியாவாகும். ஏறக்குறைய எழுபது அரசுகள் அங்கு ஆட்சி செலுத்தி வந்தன. கோடைக் காலத்தில் கடும் வெப்பமும், பெரும்பகுதியான நிலப்பரப்பு நீர்வளம் மிக்கதாகவும் இருந்தன. வடக்கில் மலைப்பாங்கான பகுதிகள் மிகுந்தும், நிலப்பரப்பு கரிசலாகவும், கிழக்குப் பகுதி அரிசி விளையும் செழிப்பான சமவெளியாகவும், தென் பகுதி காய் கனிகள் அதிகமாக விளையும் நிலப்பரப்பு மிக்கதாகவும், மேற்குப் பகுதி கரடு முரடானதாகவும் விளங்கியதென யுவான் சுவாங் விளக்குகிறார்.

யுவான் சுவாங் ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பயணம் செய்தார். அவர் தம் பயணத்தின்பொழுது நேரில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பயணக் குறிப்புகளாக வெளியிட்டிருக்கிறார். இந்தியாவின் சமூகம், மதம், பொருளாதாரம் ஆகியவற்றைப் பற்றிய சிறப்பான குறிப்புகள் காணப்படுகின்றன. நீட்டலளவு, கால அளவு, பருவ காலங்கள், நகர் அமைப்பு, கட்டடக் கலை, மக்களின் உடை, கல்வி, மொழி, சாதிகள், படை, மரியாதை முறைகள், இறப்பு, இந்தியாவின் உற்பத்திப் பொருள்கள், பண்டமாற்று ஆகியவை பற்றி யுவான் சுவாங் தந்துள்ள பொதுவான விளக்கங்கள் ஹர்ஷரின் காலத்து நிலையை நன்கு விளக்குவனவாகவே அமைகின்றன.

இந்தியாவில் வழங்கி வந்த நீட்டல் அளவுகள்

இந்தியாவில் வழங்கி வந்த நீட்டலளவுகள் பற்றி யுவான் சுவாங் சிறப்பான விளக்கம் தந்துள்ளார். நீட்டலளவின் மிகப்

பெரிய பகுதி யோசனை என்பதாகும். ஒரு யோசனை என்பது, அரசரின் இராணுவம் ஒரு நாளில் கடக்கும் தூரமாகும். அதற்கு நேரடியான சீன அளவு நாற்பது லி (அல்லது 8 மைல்) ஆகும். ஆனால், இந்தியர்கள் அதை முப்பது லி எனவும், பௌத்த நூல்கள் 16லிக்குச் சமமானது எனவும் கொண்டனர். இந்த வேறுபாடுகள் சாதாரணமானவை ஆகும். ஏனெனில், ஒரு யோசனை என்பதன் அளவு இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் மாறுபட்டிருந் திருக்கிறது. ஒரு யோசனை என்பது எட்டு குரோஸா (Krosa) ஆகவும், ஒரு குரோஸா ஐந்நூறு பௌ (Bow) ஆகவும், ஒரு பௌ நான்கு குபிட்கள் (Cubits) ஆகவும், ஒரு குபிட் இருபத்து நான்கு விரற்கிடை தூரமாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு விரற்கிடை தூரம் ஏழு கோதுமை மணிகளின் அளவாகும். மேலும், எருதின் உரோமப் பருமனளவு, ஆட்டு உரோமப் பருமனளவு, முயல் உரோமப் பருமனளவு, நுண்ணிய நீர் அளவு ஆகியவையும் வழக்கத்தில் இருந்தன. நீட்டலளவையின் கடைசி அளவு நம் கண்களால் காண முடியாத சிறிய அளவாகும். அச் சிறிய அளவு அணு அல்லது தூசி ஆகும். இச் செய்திகளை லலித விஸ்தாரம் என்ற நூலிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

கால அளவுகள்

ஹர்ஷரின் காலத்தில் இந்தியாவில் வழங்கி வந்த கால அளவுகள் பற்றிய தெளிவான விளக்கங்களையும் யுவான் சுவாங் தந்திருக்கிறார். ஒரு க்ஷணம் (Kshana) என்பது மிகக் குறைந்த கால அளவாகும். நூற்றிருபது க்ஷணங்கள் ஒரு தட்க்ஷணு (Tat-kshana) ஆகும். அறுபது தட்க்ஷணு ஒரு லாவா (Lava). முப்பது லாவா ஒரு முகூர்த்தம். ஐந்து முகூர்த்தம் ஒரு காலமாகவும், ஆறு காலம் ஒரு நாளாகவும் கணக்கிடப்பட்டு வந்தது.

பருவகாலத்தைப் பற்றிய விளக்கம்

அடுத்து, பருவகாலங்களைப் பற்றி யுவான் சுவாங் விளக்குகிறார். பௌத்த மதத்தினர் பருவகாலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர். வெப்பம் மிக்க கோடைக் காலத்தைக் கிரிஷ்மா (Grishma) எனவும், அதை அடுத்த மழைக்காலத்தை வர்ஷ (Varsha) எனவும், குளிர் காலத்தை ஹேமந்த (Hemanta) எனவும் அழைத்தனர்.

நகரங்களும் வீடுகளும்

நகரங்களின் பொதுவான அமைப்புப் பற்றியும், கட்டடங்கள் பற்றியும் மிகச் சுவையான விளக்கங்கள் யுவான் சுவாங்கின் பயணக்

குறிப்புகளில் காணப்படுகின்றன. நகரின் நாற்புறங்களைச் சுற்றிலும் பாதுகாப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவை உயரமாகவும் அகலமாகவும் விளங்கின. சாலைகள் குறுகலாகவும், பல வளைவுகளை உடையனவாகவும் இருந்தன. சாலைகளின் இரு பக்கங்களிலும் கடைகளும், சத்திரங்களும் அமைந்திருந்தன. இறைச்சி விற்பனையாளர், மீனவர்கள், பொது நிகழ்ச்சி நடத்துபவர்கள். நகர்த் துப்புறவுத் தொழிலாளிகள், கொலைத் தண்டனை நிறைவேற்றுபவர்கள் ஆகியோர் குறிப்பாக அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் காணப்பட்டனர். இவர்கள் நகரத்திற்கு வெளியே வாழும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். நகரங்களுக்குள் வரும் சமயம் அவர்கள் இடப்புறமாக ஒதுங்கிச் செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது. நகரச் சுற்றுப்புறச் சுவர்கள், வீடுகள் ஆகியவற்றைக் கட்டுவதற்குச் செங்கற்கள் பயன்படுத்தப் பட்டன. தாழ்வான ஈரம் மிக்க பகுதிகளில் மூங்கில்களையும் மரங்களையும் பயன்படுத்தினர். வீடுகளின் பெரிய அறைகள் மேற்கூரைகளைக் கொண்டிருந்தன. அவற்றின்மீது மரத்தாலான தட்டையான கூரைகளை உடைய அறைகளும் அமைக்கப் பட்டிருந்தன. தரையில் சுட்ட அல்லது சுடாத ஓடுகள் பாவப் பட்டு இருந்தன. அவை அதிக உயரம் உள்ளவையாகவும், ஏறக்குறைய சீனத்துப் பாணியிலும் காணப்பட்டன. தரை சாணத்தால் மெழுகப்பட்டிந்தது. பருவகால மலர்களால் வீட்டின் முன்புறத்தை அலங்கரித்தல் வழக்கம் ஆகும். இதைக் கூறும் இடத்தில் இவ்வித வழக்கங்கள் சீனரிடத்தில் இல்லையென் பதையும் யுவான் சுவாங் சுட்டிக் காட்டுகிறார். தவிர, பௌத்த மடங்களும், ஆலயங்களும் சிறப்பு மிக்க அழகிய கட்டடக் கலையழகு மிக்கனவாக விளங்கின. மடங்களின் நாற்புறங்களிலும் உயரமான கோபுரங்கள் எழுப்பப்பட்டிருந்தன. சாதாரண மக்களுடைய வீடுகளின் உட்புற அறைகளின் அளவுகள் வேறுபட்டு இருந்தன. மேலும் கட்டட அமைப்பு, மாடிகள் கட்டுதல், அறைகள் அமைத்தல் போன்றவற்றிற்குக் குறிப்பிட்ட ஒழுங்கு முறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. கதவுகள் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருந்தன. கயிற்றினால் கட்டப்பட்ட நாற்காலிகளைச் செல்வந்தர்களும், உயர்குடி மக்களும் பயன்படுத்தினர். அரச குலத்தவரும், அதிகாரிகளும், சமூகத்தின் உயர் நிலையினரும், பிரபுக்களும் நாற்காலிகளை வெவ்வேறு முறைகளில் அலங்கரித்துக் கொண்டனர். சாதாரண அதிகாரிகள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி ஆசனங்களின் சட்டங்களை வேலைப்பாடு மிக்கதாகச் செய்து அலங்கரித்துக்கொண்டனர். அவற்றை மக்கள் பொதுவாகப் பெரிதும் மதித்துப் போற்றினர். அரசரின்

அரியணை பற்றியும், அது அலங்கரிக்கப்பட்டிருந்த விதம் பற்றியும் யுவான் சுவாங்கும் விளக்கியுள்ளார்.[1]

உடை

மக்கள் அணியும் உள்ளாடைகளும் மேலாடைகளும் தைக்கப் பட்டவை அல்ல. வெள்ளையுடைகளை மக்கள் விரும்பினாலும், பல வண்ண உடைகளையும் அன்னார் அணிந்தனர். ஆண்கள் இடையைச் சுற்றித் துணியைக் கச்சை போன்று கட்டிக்கொண்டன. மேலாடைகள் தோளை மறைப்பதில்லை. பெண்கள் நீண்ட அங்கி போன்ற உடைகளைத் தோள்களை மறைக்கும் வகையில் அணிந்தனர். உடைகள் இறுக்கமாக இல்லாமல் உடலில் தொங்கிக்கொண்டிருந்தன. ஆடவர்கள் மீசையை வெட்டிக் கொண்டு பல வகைகளில் அழகுபடுத்திக்கொண்டனர். மாலைகளையும், கழுத்து அணிகளையும் மக்கள் விரும்பி அணிந்தனர்.

மக்களின் உடை வகைகள் பற்றியும் சீனத்துப் பயணி விளக்கங்கள் தந்துள்ளார். கசியா (Kausheya) என்பது பட்டு ஆடைகளையும், பட்டும் பருத்தியும் கலந்து நெய்யப்பட்ட ஆடைகளையும் குறிக்கும். முரட்டுப் பருத்தி நூலால் ஆன ஆடைகளையும் அவை குறிக்கும் எனப் பழைய சீனத்து நூல்கள் கூறுகின்றன. பருத்திச் செடிகளையும், அவற்றின் இழைகள் ஆடை நெய்வதற்குப் பயன்படும் என்பதையும் அவர்கள் அறிந்திருக்க வில்லை.

இரண்டாவது வகைக்குச் சௌமா (Kshauma) எனப் பெயர். அது முரட்டுத் துணிகளைக் குறிக்கும். செடிகளின் இழைகளி லிருந்து தயாரிக்கப்படும் ஆடைகளை அவை குறித்தாலும், பொது வாகச் சணலிலிருந்து நெய்யப்பட்ட முரட்டு ரக ஆடைகளையே அது குறித்தது எனலாம்.

மூன்றாவது வகைக்குக் கம்பளா (Kambala) எனப் பெயர். அது கம்பளி ஆடைகளையும், விரிப்புத் துணிகளையும் குறிக்கும். இம் மூன்று வித ஆடைகளையும் பௌத்தத் துறவிகள் அணிந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

யுவான் சுவாங் இறுதியாகக் குறிக்கும் வகைக்கு ஹோ-லா-லி (Ho-la-li) எனப் பெயர் தருகிறார். இப் பெயருக்கு இணையான வடமொழிச் சொல்லை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால்,

[1] வீடுகள், அங்குக் காணப்பட்ட அலங்காரப் பொருள்கள், அரசரின் அரியணை ஆகியவை பற்றி யுவான் சுவாங்கும், பாணரும் ஏறக்குறைய ஒரே மாதிரியான விளக்கங்கள் தந்துள்ளனர். இந் நூலின் 9ஆம் அத்தியாயம் காண்க.

திபெத்திய மற்றும் வடமொழிச் சொற்களுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து, ஹோ-லா-லி என்பது காட்டு விலங்குகளின் உரோமத்தால் ஆன ஆடை எனலாம்.

இந்து மதத் துறவிகள் அணியும் ஆடை அணிகள் பற்றிய விளக்கமும் பயணக் குறிப்புகளில் காணப்படுகிறது. மயிலின் தோகையாலான உடைகளேயும். மண்டை ஓடுகளால் ஆன மாலைகளேயும் ஒரு சிலர் அணிந்துகொண்டனர். ஆடை எதுவுமின்றி நிர்வாணமாகவும் சிலர் காட்சி அளித்தனர். புல், தழைகளால் ஆன ஆடைகளால் உடலை மறைத்துக்கொண்டும், மீசையை வெட்டிக்கொண்டும், தலைமுடியை விரித்துக்கொண்டும், அல்லது சுருட்டித் தலையின் உச்சியில் கட்டிக்கொண்டும் பலர் பல வகையாகக் காணப்பட்டனர்.

பௌத்தத் துறவிகள் மூன்று வித அங்கிகளை அணிந்தனர். அவற்றிற்கு அண்டாரவாசகா (Antaravasaka), சாம்கட்டி (Samghati), உத்தர சங்கா (Uttarasanga) எனப் பெயர் வழங்கி வந்தது.

அரசர், பிரபுக்கள் ஆகியோரின் ஆடை, அணிகலன்கள் மிகச் சிறந்து விளங்கின. விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட கிரீடங்களேயும், மாலைகளேயும் அவர்கள் அணிந்தனர். மேலும், மாலைகளேயும், காப்புகளேயும், மோதிரங்களேயும் அவர்கள் அணிந்தார்கள். செல்வம் மிக்க வணிகர்கள் மட்டுமே கைகளில் காப்புகளை அணிந்தனர். பெரும்பான்மையான மக்கள் காலணிகள் ஏதும் அணிந்திருக்கவில்லை. செருப்பு போன்றவற்றை மிகச் சிலரே அணிந்திருந்தனர். பற்களைச் சிவப்பு அல்லது கறுப்பு வண்ணங்களால் கறை ஏற்படுத்திக்கொள்ளுதலும், முடியை வெட்டிக்கொள்ளுதலும், காதுகளில் துளையிட்டுக்கொள்ளுதலும் போன்ற வழக்கங்கள் மக்களிடம் சாதாரணமாகக் காணப்பட்டன. அவர்கள் பெரிய கண்களேயும், நீண்ட நாசியையும் பெற்றிருந்தனர்.

மக்கள் பண்பு

க்ஷத்திரியர்களும், பிராமணர்களும் ஒழுக்கம் மிக்கவர்களாகத் தூய, எளிய, சிக்கன வாழ்வு வாழ்ந்தனர். கட்டுப்பாடுகளுக்காக இன்றித் தாங்களாகவே தூயவர்களாக வாழ்ந்து வந்தனர் என யுவான் சுவாங் குறிப்பிடுகிருர். உண்பதற்கு முன் ஒவ்வொரு முறையும் கைகளைக் கழுவிக்கொள்வது சாதாரண வழக்கமாகும். உணவுப் பாண்டங்கள் பெரும்பாலும் மண்ணாலும் மரத்தாலும் செய்யப்பட்டிருந்தன. பயன்படுத்தப்பட்டதற்குப்

பின் அவை ஒதுக்கி எறியப்பட்டன. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட பாண்டங்கள் மட்டும் துலக்கப்பட்டு, மறுபடியும் பயன்படுத்தப்பட்டன. உணவு உண்ட பின் பற்குச்சியால் வாயைச் சுத்தம் செய்வது வழக்கமாயிருந்தது. சிறுநீர் கழித்த பின் சுத்தம் செய்துகொள்வதும் மக்களின் அன்றாட வழக்கமாகும். சந்தனம், குங்குமப்பூ போன்ற வாசனைத் திரவியங்களை நறுமணத்திற்காக உடலில் அவர்கள் பூசிக்கொண்டனர். அரசர் குளிக்கச் செல்லுகையில் பணியாள்கள் இசைக்கருவிகளை மீட்டியும், மேள இசை முழக்கியும், பாட்டுகள் பாடியும் கடவுளை வழிபட்டனர்.

மொழி, பேச்சு வழக்கம், எழுத்து வழக்கம்

யுவான் சுவாங், பேச்சு எழுத்து வழக்கு, கல்வி கற்றல் பற்றியும் விளக்குகிறார். இந்திய மொழியின் எழுத்துகள் பிரம்ம தேவரால் கண்டு பிடிக்கப்பட்டவை. தொடக்கத்தில் அவற்றின் எண்ணிக்கை 47 ஆகும். வடமொழி எழுத்துகளைப் பிரம்மா கண்டு பிடித்ததாகப் பல நூல்களிலிருந்து அறிகிறோம். ஒரு காலத்தில் பிரம்மா பூமியில் அரசாட்சி புரிந்ததாகவும், எழுபத்திரண்டு எழுத்துகள் கொண்ட காரு (Kharu) என்ற எழுத்து முறையைக் கண்டு பிடித்ததாகவும் கூறப்படுகிறது. காரு எழுத்து முறைக்கு நல்வரவே கிடைக்காததன் விளைவாக வெகுண்ட பிரம்மா அவற்றை அழித்துவிட முயற்சித்தார் எனவும், ஆனால் எ (A), ஔ (Aw) என்ற இரண்டு எழுத்துகள் மட்டுமே தப்பித்து மக்களிடையே வழங்கலாயிற்று எனவும் கூறப்படுகிறது. மேலும், பிரம்மா முதலில் பிரம்ம எழுத்து முறையைக் கண்டு பிடித்ததாகவும் சொல்லப்படுகிறது. பிரம்ம எழுத்து முறை அல்லது தேவநாகரி எழுத்து ஒரு புத்திக் கூர்மை மிக்க பிராமணரால் கண்டு பிடிக்கப்பட்டது எனவும், காரு எழுத்து முறை ஒரு ரிஷியால் கண்டு பிடிக்கப்பட்டது எனவும் கூறப்படுகிறது. காரு எழுத்து முறை லலித விஸ்தாரத்திலும், ஏனைய நூல்களிலும் காரோஷ்த்தா (Kharoshtha) என்ற பெயரில் குறிக்கப்பட்டுள்ளது. சில பௌத்த நூல்கள் புத்தரே எழுத்துகளைக் கண்டு பிடித்தார் எனக் கூறுகின்றன. சிவபெருமானே எழுத்துகளையும் சொற்றொடர்களையும் கண்டு பிடித்ததாகவும் கூறப்படுகிறது. வட இந்தியாவில் மக்கள் மொழியைப் பேசும் முறையும் எழுதும் முறையும் மற்றவர்களும் பின்பற்றத் தக்க வகையில் முன் மாதிரியாகச் சிறந்து விளங்கியது என யுவான் சுவாங் கருதினார். காலப்போக்கில் வேற்று மொழிக் கலப்பும், தவறுகளும் கலந்ததால், அம் மொழி தன் தனித்தன்மையை இழக்க நேர்ந்தது.

ஏழு வயது நிரம்பப் பெறும் சமயத்தில் குழந்தைகள் கல்வி கற்க அனுப்பப்பட்டனர். 'பன்னிரண்டு அத்தியாய' (Twelve Chapters) முறையைப் பின்பற்றி அவர்கள் கல்வி கற்றனர். அம் முறை சித்தத்(Siddham)தைத் தீரக் கற்பதற்கு அடிப்படையாகும். சித்தம் என்பது, கடவுளின் புனிதமான திருவருளைப் பெறுவதாகும். ஐந்து விஞ்ஞானங்களும் படிப்படியாக அவர்களுக்குப் போதிக்கப் பட்டன. முதல் விஞ்ஞானப் பாடம், சொல் இலக்கணத்தையும் அதன் பாகுபாட்டையும் பற்றியது ஆகும். இரண்டாவது, கைதேர்ந்த தொழில் நுட்பங்கள், அதன் கொள்கைகள், இயந்திரக் கலைகள், சோதிடம் பற்றியது ஆகும். மூன்றாவது, மருத்துவம், நுண்கலைகள், கற்களின் பயன் ஆகியவை பற்றிய தாகும். சிந்திக்கும் திறன், பகுத்து உணரும் அறிவு ஆகியவை பற்றிய கல்வி நான்காவது ஆகும். கடைசியாக, புத்தத்தின் 'ஐந்து கட்டளைகளைப்' பற்றியும், முக்தி அடைவதற்கான வழியை விளக்கு வதும், கர்மா என்ற கொள்கையின் வலிமை பற்றியதும் ஆகும்.

பிராமணர்கள் நான்கு வேதங்களையும் கற்றனர். அவை ஆயுர், யஜுர், சாம, அதர்வ வேதங்களாகும். இதே பாகு பாட்டைத்தான் ஜூலியன் மொழிபெயர்ப்பிலும், பீலின் குறிப்புகளிலும் காண்கிறோம். மேற்கூறிய மொழிபெயர்ப்புகள் யாவும் ஏன் ரிக் வேதத்தை விடுத்து, ஆயுர் வேதத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கின்றன என்பது ஒரு புதிராகும். ஆயுர் வேதம் என்பது உடல் நலனைப் பேணி நெடுங்காலம் வாழ வழி காட்டும் கலையாகும். அது அதர்வ வேதத்தின் பின் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதை ஒரு வேதமாகவே ஒப்புக்கொண்டு, மக்கள் கற்றுக்கொண்டனர். ஏனெனில், அவற்றில் கூறப்படும் கருத்துகளும் அனுபவங்களும் வாழ்க்கைக்குப் பயன்படுபவை யாகவே உள்ளன. ரிக் வேதமே முதல் வேதமென அறிந் திருந்தும், யுவான் சுவாங் அதை இங்கு முதலில் கூறவில்லை என்பதோடு அதைப் பற்றியே குறிப்பிடவில்லை. மற்ற வேதங்களைப் பற்றிய விளக்கங்கள் எளிய முறையில் நன்கு விளக்கப்பட்டிருக்கின் றன. இரண்டாவதாகக் குறிக்கப்பட்டுள்ள யஜுர் வேதம் இறை வணக்கத்தையும், அதன் பெருமைகளையும் பற்றி விளக்குவதாகும். சாம வேதம் இந்திரன், அக்னி, சோமக் கடவுள்களின் வழிபாடு, விழாக்களின் பண்பாடு, போர் முறைகள் ஆகியவை பற்றி விளக்குகிறது. அதர்வ வேதம் நுண்கலைகளைப் பற்றியும், மருத்து வத்தைப் பற்றியும் விளக்குகிறது. இவ் வேதங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், அவற்றை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பதும் முக்கியமான ஒன்றாகும். அவர்களின் நினைவு ஆற்றலிலேயே வாழ்ந்து வந்த வேதங்கள், பௌத்த மதத்தின் வளர்ச்சிக் காலத்

திற்குப் பின் எழுத்து உருவம் பெற்றன. பௌத்த மதத்திலிருந்து இந்துக்களாக மாறிய சில துறவிகள் நான்கு வேதங்களுக்கும் எழுத்து உருவம் கொடுத்தனர்.

அடுத்து, ஆசிரியர்கள் பற்றிய விளக்கத்தை யுவான் சுவாங் தருகிறார். வேதங்களின் பொதுவான பொருளையும், பின் ஆழ்ந்த விளக்கங்களையும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டி, முன்னேற வழி செய்வது அவர்களுடைய கடமை. திறமையான மாணவர்களுக்குத் தகுந்த வழி காட்டியும், மந்தமானவர்களைச் சிந்திக்கத் தூண்டியும் அவர்கள் உதவுவர்; புத்திக் கூர்மையுள்ள மாணவர்களின் சோம்பலை அகற்றி, விளக்கங்களை நன்கு புரிந்துகொள்ள உதவுவர். மாணவர்கள் தங்கள் முப்பதாவது வயதில் கல்வியை முடித்து, பணிகளில் ஈடுபடுவார்கள். மாணவர்களின் முதல் கடமை, கல்வி அளித்த அன்பான ஆசிரியர்களுக்குத் தகுந்த வெகுமதி அளிப்பதாகும்.

கற்பதில் ஆர்வம் மிக்க பெரியோர்களைப் பற்றியும் யுவான் சுவாங் விளக்குகிறார். ஆழ்ந்து படிக்கும் விருப்பத்தின் காரணமாகத் தனித்து வாழ்வதில் அவர்கள் மன நிறைவு கொண்டனர். அவர்களுடைய வாழ்க்கை சாதாரண மனித வாழ்விற்கு அப்பாற்பட்டதாகும். பெருமையினாலும், புகழினாலும் அவர்கள் கவரப் படவில்லை. அவர்கள் புகழ் நாடெங்கிலும் பரவிற்று. அரசர்கள் அவர்களை மிக்க மரியாதையுடன் நடத்தினாலும், அரசவைக்கு வர அவர்கள் விரும்புவதில்லை. கற்றுணர்ந்த அப் பெரியோர்களை மக்களும் மதித்துப் போற்றினர். அவர்கள் களைப்பின்றிக் கல்வி கற்று ஒழுக்க நெறியுடன் வாழ்ந்து சிறப்புப் பெற்றனர். செல்வம் மிக்க குடும்பச் சூழ்நிலைகளில் இருந்து வந்திருப்பினும், அதைப் புறக்கணித்து விட்டு, கற்க வேண்டும் என்ற தீராத ஆர்வத்துடன் அலைந்து திரியும் வாழ்க்கையை மேற்கொண்டு, பிச்சை எடுத்துப் பெற்ற உணவை உண்டு, அன்னார் மகிழ்வுடன் வாழ்ந்தனர். உண்மையை உணரும் ஆர்வத்தைத் தவிர, வேறு எண்ணமே அவர்களுக்கு ஏற்படுவதில்லை. செல்வ வளத்தின் காரணமாகச் சுவையுள்ள உணவை உண்டும், அழகான உடை உடுத்தியும், ஆடம்பரமான ஆனால் ஒழுக்கமற்ற வாழ்க்கை நடத்தும் மக்களை விட, கற்றலை நாடி அலைந்து திரியும் பெரியோர்களின் வாழ்வு சிறந்ததென அக் கால மக்கள் எண்ணினர்.

பௌத்த சமயம்

யுவான் சுவாங், இந்தியாவிற்கு வந்த காலத்தில் பௌத்த சமயத்தின் நிலையையும், பொதுவான அமிசங்களையும் பற்றித்

தாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும் எழுதிச் சென்றிருக்கிறார். பல இடங்களில் அவர் எழுதியிருப்பவற்றிற்குச் சரியான பொருளை அறிந்துகொள்வது சற்றுக் கடினமாக உள்ளது. 'புத்தரின் போதனைகளை மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய இயல்புக்கும், திறமைக்கும் ஏற்ற வகையில் புரிந்துகொண்டு பின்பற்றினர்' என்பது அவரது கருத்து ஆகும். புத்தர் ஒரு மொழியில் தம் போதனைகளை விளக்கினாலும், மனிதர்கள் தங்களுடைய இயல்புக்கு ஏற்ற வழிகளிலேயே அவற்றைப் புரிந்து கொண்டு பின்பற்றினர். புத்தர் 'ஆரிய மொழி' பேசியதாகவும், சீனர்களும், யவனர்களும், புக்காரா பாக்ட்ரீயா (Bokhara Bactria) மக்களும் தங்கள். தங்கள் மொழியிலேயே பேசியதாக எண்ணிக்கொள்கின்றனர் எனவும் யுவான் சுவாங் கூறுகிறார். புத்தர் மறைந்து பல காலம் கழித்தே யுவான் சுவாங் இந்தியாவிற்கு வந்தார். புத்தரின் போதனைகளைப் பின்பற்றியவர்கள் அவற்றைப் புனித உணர்வுடன் சேகரித்துப் பாதுகாத்து, மக்கள் அறிய உதவினர். அவை புத்தரின் போதனைகள்தானா என்ற ஐயமும், கருத்து வேறுபாடுகளும் உள்ளன. ஆனால், யுவான் சுவாங் இந்தியாவுக்கு வந்த காலத்தில் பௌத்த சமயம் புனிதமாக விளங்கிற்று. எனினும், பௌத்த மதத்திற்குள்ளேயே போட்டியிட்டுக்கொண்டு தோன்றிய பதினெட்டுக் கொள்கைப் பிரிவுகளைக் காண்கிறோம். அக் கொள்கைப் பிரிவுகள் பௌத்த சமய வரலாற்றில் சிறப்பானவையாம். அவை பௌத்த சமயம் தோன்றி வளர்ந்த வரலாற்றைத் தெளிவாக விளக்குகின்றன. புத்தரின் மறைவிற்குப் பிறகு மதத்தில் ஏற்பட்ட இரண்டு பிரிவுகள், சதவீரர்கள் (Sthaviras), மகாசங்கிகள் (Mahasanghikas) என்பவை ஆகும். சதவீரர்கள் பிரிவில் காலப்போக்கில் மேலும் பதினொரு பிரிவுகள் தோன்றியதாலும், மகாசங்கிகள் பிரிவில் ஏழு பிரிவுகள் தோன்றியதாலும் மொத்தம் இருபது கொள்கைக் கழகங்கள் ஏற்பட்டன. ஆனால், பௌத்த நூல்கள் மூலக் கழகங்கள் இரண்டையும் விடுத்து, பதினெட்டுக் கழகங்கள் என்றே குறிக்கின்றன. ஒவ்வொரு பிரிவும் ஒரு குறிப்பிட்ட கொள்கையை வலியுறுத்தி விளக்குகிறது. பேராசிரியர் ரைஸ் டேவிட்ஸ் ((Prof. Rhys Davids) இராயல் ஆசிய சஞ்சிகை(Journal of Royal Asiyatic Society)யில் 1891-92ஆம் ஆண்டுகளில் எழுதிய கட்டுரைகளில் அவற்றைப் பற்றிய விளக்கங்களைத் தெளிவாக எழுதியிருக்கிறார்.

பௌத்த மதத்தில் மேலும் தோன்றிய இரு பிரிவுகளைப் பற்றியும் யுவான் சுவாங் விளக்குகிறார்; அவற்றிற்குப் பெரிய மார்க்கம் (Great Vehicle), சிறிய மார்க்கம் (Small Vehicle) என்ப

பெயரிட்டு அழைக்கிறார். இவ்விரு மார்க்கங்களைப் பின்பற்று பவர்களும் சில இடங்களில் ஒரே மடத்தில் வாழ்ந்து வந்திருக் கின்றனர். இருப்பினும், அவர்கள் நம்பிய கொள்கைகளும், முறைகளும் பெரிதும் மாறுபட்டவையாம். சமஸ்கிருதத்தில் யானு (Yara) என்ற சொல்லுக்கும், ஆங்கிலத்தில் வெகிக்கில் (Vehicle) என்ற சொல்லுக்கும் இணையாக மார்க்கம் என்ற சொல்லைக் கருத வேண்டும். இச் சொல்லை அடிப்படையாகக்கொண்டே பௌத்த மதப் பிரிவுகளான ஹீனயானுவிற்குச் சிறிய மார்க்கம் (Little Vehicle) எனவும், மஹாயானுவிற்குப் பெரிய மார்க்கம் எனவும் பெயரிடப்பட்டுள்ளது. ஹீனயானப் பிரிவு பழைய பிரிவு எனவும், மஹாயானப் பிரிவு தொடர்ந்து வளர்ச்சி அடைந்த பிரிவு என்றும் கொள்ளலாம். வளர்ச்சியடைந்த மாறு பட்ட பெரிய மார்க்கத்தை(மஹாயான)ச் சார்ந்தவர்கள் எந்தப் பிரிவிலிருந்து தோன்றினார்களோ அதற்குச் சிறிய மார்க்கம் (ஹீனயானம்) எனப் பெயரிட்டனர். பெரிய மார்க்கம் அல்லது மஹாயானப் பிரிவினர், ஹீனயானப் பிரிவினரைவிட அதிகமான கொள்கைகளையும், நிறைவான மதத்தைப் பற்றிய வேறுபட்ட உளவு கோள்களையும், ஆடம்பரம் மிக்க பக்தி வழிகளையும் பின் பற்றி வந்தனர். அதற்குப் போதி சத்துவம் ஓர் எடுத்துக் காட்டாகும். புத்தர் மனிதர்களுடன் கொண்டிருந்த தொடர்பு, பிரார்த்தனையின் ஆற்றல், வழிபாடு, மதத்துறையில் வளைந்து கொடுக்கும் தன்மை ஆகியவற்றைப் புதிய மார்க்கம் ஏற்றுக் கொண்டது. யுவான் சுவாங் சிறிய, பெரிய மார்க்கங்களின் வேறு பாடுகளைச் சில எடுத்துக்காட்டுகளின் மூலமாக விளக்குகிறார் ஆழ்ந்து கருத்தை நிலைபடுத்தும் தவநிலை சிறிய மார்க்கத்திற்கு உரியதாக இருப்பினும், பெரிய மார்க்கத்தின் சிறப்பான அமிச மாகக் கருதப்படுகிறது. ஹீனயானப் பிரிவிலேயே சமாதி, பிரஜ்ஞை பற்றிய இரண்டு மாறுபட்ட கருத்துகளைக் காண்கிறோம். யுவான் சுவாங் இங்குச் சிறிய மார்க்கத்தினர் பின்பற்றி வந்த அமைதியான சிந்தனை, மேலும் கீழுமாக நடப்பது, நிலையாக நின்றிருப்பது போன்ற வழக்கங்கள் பெரிய மார்க்கத்தினின்று மாறுபட்டிருப்பதாகக் கூறுகிறார். பௌத்த மடங்களில் பௌத்தத் துறவிகள் அனைவரும் ஏவல் வேலைகள் உட்பட எல்லாப் பணிகளை யும் செய்து வர வேண்டும். ஒரு துறவி குறிப்பிட்ட ஒரு பாடத்தை நன்கு பயின்று தம் சொல் வன்மையினால் அதை அனைவரும் அறிந்துகொள்ளுமாறு விளக்கும் திறமை பெற்று விட்டால், அஃது அவருடைய முன்னேற்றத்தின் முதற்படியாகக் கருதப்படும். அந் நிலையில், அவர் சாதாரண வேலைகள் செய்வ திலிருந்து விலக்குப் பெறுவார். இதே போன்ற விலக்கு, மடங்களை நாடி வரும் கற்றுணர்ந்த துறவிகளுக்கும் அளிக்கப்படும். புதிய

துறவி முதலில் மடத்தின் விருந்தினராகக் கருதப்படுவார். பிறகு மடத்தின் தலைவர் அவருடைய மூத்தமை(Seniority)க்கு ஒப்ப இடமளித்து, மடத்தின் வழக்கமான தினசரிப் பணிகளைச் செய்து வரப் பணிப்பார். மதத்துறையில் சிறந்த அறிஞராக இருப்பின், அவ் வேலைகளிலிருந்து முற்றிலும் விலக்குப் பெற வாய்ப்பு உண்டு.

இந்தியாவில் நிலவி வந்த சாதி முறைகள்

இந்திய மக்களிடையே காணப்பட்ட பிரிவுகளையும், சாதி முறைகளையும் பற்றிய செய்திகளையும் யுவான் சுவாங் தருகிறார். அவர் பெரும்பாலும் இந்து சமய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள சமூகச் சாதிப் பிரிவுகளைப் பின்பற்றியே விளக்கியிருக்கிறார். சமூகம் பொதுவாக நான்கு பரம்பரை இனங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. முதற்பிரிவுபிராமணர்கள் எனவும், இரண்டாவது க்ஷத்திரியர்கள் எனவும், மூன்றாவது வைசியர்கள் எனவும், இறுதியாகச் சூத்திரர்கள் எனவும் பிரிக்கப்பட்டிருந்தனர். பிராமணர்கள் என்பவர்கள் பிரம்மன் அல்லது தூய அறவாழ்வுப் பழக்கத்தைக் கொண்டவர்கள். மேலும், கோட்பாடுகளை உண்மையுடன் பின் பற்றுபவர்களாகவும், போற்றத்தகு தூய்மையை உடையவர்களாகவும் அவர்கள் விளங்கினார்கள் என யுவான் சுவாங் விளக்குகிறார். இரண்டாவது குறிக்கப்பட்டுள்ள க்ஷத்திரியர்கள் அரச பரம்பரையினர் என்ற சிறப்பைப் பெற்றவர்கள். ஈகைக் குணமும் இரக்கமும் கொண்டு, வீரம் மிக்கவர்களாக அவர்கள் விளங்கினர். இக் குணங்களை மனுவில் அரசரைப் பற்றிக் கூறப் பட்டுள்ள செய்திகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. மன்னர் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டும் என மனுநூல் கூறுகிறது. பௌத்த மத நூல்கள் க்ஷத்திரியர்களுக்குப் பிராமணர்களைவிட உயர்ந்த இடம் கொடுத்துள்ளது. மூன்றாவது பிரிவினரான வைசியர்கள் வர்த்தகச் சமூகத்தினராவர். 'இல்லாத பொருள்களைப் பண்டமாற்று மூலமாகப் பெறுபவர்கள்' என்று இவர்களைப் பற்றி விளக்கம் தரப்படுகிறது. அதன் மூலமாக இலாபம் பெற்று வைசியர்கள் வாழ்ந்தனர். இறுதியாகக் கூறப்பட்டுள்ள சூத்ர இனம் விவசாயிகளையும், நிலத்தில் விதைப்பது, அறுவடை செய்வது போன்ற கூலி வேலைகளைச் செய்பவர்களையும் குறிக்கும். இந் நான்கு இனத்தினரும், தங்களுக்குள் தரத்தில் மாறுபட்ட பல்வேறு வகுப்புகளை ஏற்படுத்திக்கொண்டனர். ஓர் இனத்தைச் சேர்ந்த மனிதர் தம் இனத்தைச் சார்ந்த பெண்ணையே மணம் முடித்தல் வழக்கம். எக் காரணம் கொண்டும் வேறு பிரிவினருடன் திருமணத் தொடர்பு கொள்வதில்லை. வகுப்பு முறைகளைத் தவிர, சமூக அந்தஸ்தும் செல்வமும் திருமணத் தொடர்பிற்கு அடிப்படையாக அமைந்தன. யுவான்

சுவாங்கின் இக் கருத்துகளை மனுவுடன் ஒப்பிடும் வேளையில், அவை இரண்டிற்கும் பல ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம். 'ஒரு தந்தை தம் மகளைச் சம அந்தஸ்துடைய அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பெருமைகளை உடைய தம் இனத்தைச் சேர்ந்த இளைஞனுக்கே மணமுடிக்க வேண்டும்' எனவும், 'பெண் தன்னைப் போன்ற அந்தஸ்துடைய கணவனைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப் பட வேண்டும்' எனவும் மனுநீதி கூறுகிறது.[1]

இந் நான்கு பிரிவினரைத் தவிர, கலப்புச் சாதியினர் என்ற ஒரு பிரிவும் காணப்பட்டது. அது, சிறிய கைத்தொழில் செய் பவர்கள், நெசவாளர்கள், செருப்புத் தைப்பவர்கள், வேடர்கள், மீனவர்கள், நீர் சுமப்பவர்கள், துப்புரவுத் தொழிலாளிகள் போன்ற தொழில் அடிப்படை கொண்ட பிரிவாகும். அல்பேருணி (Alberuni) நான்கு சாதி முறைகளைப் பற்றித் தந்துள்ள செய்திகளை யுவான் சுவாங் எழுதியுள்ள விளக்கங் களுடன் ஒப்பிட்டு, அவற்றின் உண்மையை உணரலாம்.

படை

படை திருவாகம் அரசரைத் தலைமையாகக் கொண்டு இயங்கிற்று. பரம்பரையாக ஆளும் உரிமை க்ஷத்திரியர்களிடமே இருந்து வந்தது. சில வேளைகளில் வேறு சாதியினர் முக்கியத்துவம் பெற்று, தங்களை மன்னராக அறிவித்துக்கொண்டு, கலகம் செய்து மன்னரையே கொலை செய்து விடும் நிகழ்ச்சிகளும் நடை பெறுவதுண்டு. இதிலிருந்து ஆளும் உரிமையை க்ஷத்திரியர்கள் மட்டுமே பெற்றிருந்தாலும், வேறு குலத்தைச் சார்ந்தவர்களும் ஆளும் வாய்ப்பைப் பெற்றனர் என்பதை அறிய முடிகிறது.

போர் வீரர்கள் மிகுந்த வீரம் மிக்கவர்களாக விளங்கினர். படைத்தொழில் பரம்பரையாக வகிக்கப்பட்டு வந்தது. வீரர்களும், தளபதிகளும் போர்க்கலை அனைத்தையும் கற்றுத் தேர்ந்து, திறமை பெற்றவர்களாக விளங்கினர். அமைதிக் காலங்களில் படைவீரர்கள் அரண்மனைகளைக் காவல் புரிந்து வந்தனர்; போர்க்காலத்தில் அச்சமின்றி எதிர்த்துத் தாக்கும் முன்னணி வீரர்களாகச் செயல் புரிந்தனர்.

காலாட்படை, குதிரைப் படை, தேர்ப்படை, யானைப்படை ஆகியவை படையமைப்பின் முக்கியப் பிரிவுகள் ஆம். போர் யானைகள் பாதுகாப்பாக இரும்புக் கவசத்தால் மூடப்பட்டும், தந்தங்களில் கூர்மையான பூண்கள் பூட்டப்பட்டும் இருந்தன.

[1] மனு-IX-88

படைத் தளபதி யானைமீது அமர்ந்து போர் புரிவது வழக்கம். யானையைச் செலுத்தவும், கட்டுப்படுத்தவும் மேலும் இரண்டு படைவீரர்கள் தளபதியுடன் செல்வார்கள். ஏனைய போர்த் தலைவர்கள் தேர்களில் செல்வர். அத் தேர்களில் நான்கு குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன. தேரின் இரு பக்கங்களிலும் காலாட் படைவீரர்கள் அமர்ந்து போர் புரிவர். காலாட்படைக்குத் தேர்ந்த வீரர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் விரைந்து சென்று தாக்கும் திறனைப் பெற்றிருந்தனர். கேடயத்தை ஒரு கையில் ஏந்திக்கொண்டும், மறு கையில் பெரிய ஈட்டியைக் கொண்டும் அன்னார் தாக்கிப் போர் புரிந்தனர். சிலர் நீளமான வாள்களையும், அல்லது வளைந்த கூர்மையான வாள்களையும் கையிலே ஏந்திக்கொண்டு, போர்க்களத்தின் முன் வரிசைக்குச் சென்று தாக்கினர். ஈட்டி, கவசம், வில், அம்பு, வாள், வளைந்த வாள் போன்ற போர்க்கருவிகளைத் திறமையாகப் பயன் படுத்தும் திறனை அவர்கள் பெற்றிருந்தனர்; அவற்றை மிகச் சரியான முறையில் பயன்படுத்துவதற்குப் பல தலைமுறைகளாகப் பயிற்சி பெற்றிருந்தனர்.

சமூகமும் சட்ட முறைகளும்

யுவான் சுவாங் இந்திய மக்களின் நடத்தை, மற்றும் குணநலன்களைப் பற்றிய விளக்கத்தைத் தருகிறார். இந்தியர்களை அவசரக்காரர்களாகவும், நிலையற்ற கொள்கை உடையவர் களாகவும் வர்ணித்த போதிலும், ஒழுக்கம் மிக்கவர்களா யிருந்தனர் என அவர் கூறுகிறார். இந்தியர்கள் எதையும் தவறாக எடுத்துக்கொள்வதில்லை. தேவையான அளவிற்கு மேலாகவே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அவர்களிடம் காணப்பட்டது. தாங்கள் செய்யும் பாவங்களுக்கு மறு பிறப்பிலும் தண்டனை கிடைக்கும் என அஞ்சினர்; ஆகவே, இப் பிறவி வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பெரிது படுத்திக்கொள்வதில்லை. ஏமாற்று வேலைகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை; கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் பண்பு மிக்கவர்கள்.

நீதி முறைகள் பற்றியும், தண்டனை அளிக்கும் விதங்கள் பற்றியும் யுவான் சுவாங் விளக்கம் தந்திருக்கிறார். அரசாங்கம் சீராகச் செயல்பட்டு, நிருவாகத்தை நடத்தி வந்ததால், மக்கள் நல்ல முறையில் ஒன்று கூடி வாழ்ந்து வந்தனர். குற்றம் புரியும் வகுப்பு மிகவும் சிறிய அளவிலேயே இருந்தது. அரசு இயற்றியுள்ள சட்டங்கள் மீறப்பட்டு, அரசாங்கத்திற்கு எதிரான சதித் திட்டங்கள் தீட்டப்பட்ட வேளைகளில் அவை வெளிப்படுமாயின் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, வாழ்நாள் முழுவதையும்

சிறையில் கழிக்குமாறு தண்டிக்கப்பட்டனர். மற்றபடி சித்திரவதை செய்தல், சவுக்கடி போன்ற தண்டனைகள் பொதுவாகத் தரப் படுவதில்லை. குற்றவாளி ஒருவன் உயிரோடு வாழ்ந்தாலும், இறந் தாலும் சமூகத்தின் அங்கமாகக் கருதப்படவில்லை. சமூக ஒழுக்கங் களுக்கு மாறான குற்றங்களும், நம்பிக்கைத் துரோகங்களும் மன்னிக்க முடியாத குற்றங்களாகக் கருதப்பட்டன. அக் குற்றங் களைப் புரிபவர்கள், மற்றும் தாய்தந்தைக்கு உரிய மரியாதை கொடுக்கத் தவறுபவர்களின் காது, மூக்கு, கைகால்களை வெட்டி விடுதலே தண்டனை ஆகும். நாடு கடத்துதல், காட்டிற்கு அனுப்பி விடுதல் போன்ற தண்டனைகளும் கொடுக்கப்படுவதுண்டு. வேறு வகைப்பட்ட சிறிய குற்றங்களுக்கு அபராதம் விதிப்பார்கள். குற்றவாளிகளை விசாரிக்காமல் சித்திரவதை செய்யும் வழக்கம் இல்லை.

மேலும், குற்றத்தை ஒருவன் செய்திருக்கிறானா, இல்லையா என்பதைக் கண்டுகொள்வதற்காகப் பின்பற்றப்படும் முறை களைப் பற்றிய விளக்கங்களையும் யுவான் சுவாங் தருகிறார். அவை நீர்ச் சோதனை, நெருப்புச் சோதனை, நிறுவைச் சோதனை, நச்சுச் சோதனை என நான்கு வகைப்படும். இச் சோதனைகள் குற்றம் புரிந்தவனுக்குத் தக்க தண்டனை வழங்கும் நோக்கத்துடன் பின்பற்றப்பட்டிருக்க வேண்டுமேயன்றி, அவன் தப்பித்துக் கொள்வதற்கு ஏற்ற எளிய வழிகளைக் காட்டுவதற்கு அல்ல. மேலும், தப்ப இயலாத சோதனைகளும், தண்டனையின் கடுமையும் குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைத்தன.

நிறுவைச் சோதனையும், நச்சுச் சோதனையும் மனுவில் கூறப் படவில்லை. எனினும், அல்பேருணியின் குறிப்புகளிலிருந்தும் இவற்றை நாம் அறிகிறோம்.[1]

வணக்க முறைகளும் கௌரவிக்கும் வகைகளும்

இந்தியர்களின் வணக்க முறைகளைப் பற்றியும், கௌரவிக்கும் வகைகள் பற்றியும் தெளிவான விளக்கங்களை யுவான் சுவாங் தருகிறார். அவை ஒன்பது வகைப்படும்.

1. அன்புடன் நலம் விசாரித்து வாழ்த்துதல்
2. தாழ்மையுடன் தலை வணங்குதல்
3. குனிந்து, கைகளைத் தலை வரை உயர்த்தி வணங்குதல்

[1] மனு VIII; அல்பேருணி Vol. II-பக்கம் 159

4. மார்புமீது கைகளைக் கட்டிக்கொண்டு வணங்குதல்

5. நின்றபடியே ஒரு காலை மடக்கி வணங்குதல்

6. முழங்காலிட்டு வணங்குதல்

7. கைகளும் முழங்கால்களும் தரையில் படும்படி வணங்குதல்

8. முழங்கால்களையும், முழங்கைகளையும் தரையில் வைத்துக் குனிந்து நெற்றி நிலத்தில் பட வணங்குதல்

9. நிலத்தில் விழுந்து வணங்குதல்

முழங்காலிட்டு வணங்குதல் என்ற வணக்க முறை இவ்வொன்பதிலும் சிறந்த முறையாகக் கருதப்பட்டது. அரசரைச் சற்று தூரத்தில் காணும் சமயத்தில் மக்கள் கைகளைக் கட்டிக் கொண்டு நிலத்தை நோக்கிக் குனிந்து வணங்குவார்கள்; அண்மையில் காணும் சமயத்தில் அரசரின் கணுக்கால்களைத் தொட்டு, கால்களை முத்தமிட்டு வணங்குவார்கள். செய்திகளைக் கூறும் சமயத்திலும், கட்டளைகளைப் பெறும் சமயத்திலும் முழங்காலிட்டு வணங்குவார்கள். உயர்குடிப் பெருமக்கள் தங்களை வணங்குபவர்களைத் தலையை அசைத்தபடி அன்புடன் விசாரித்து முதுகில் தட்டிக் கொடுப்பார்கள்; மேலும், நல்ல புத்திமதிகளையும் கூறி, தாங்கள் அவர்களிடம். உண்மையான அன்பு கொண்டிருப்பதையும் காட்டுவார்கள். பௌத்தத் துறவிகளிடம் காணப்பட்ட மரியாதை முறை நல்வாழ்த்துக் கூறுவதே ஆகும். பல சூழ்நிலைகளில் சிறப்பான சேவையை மட்டுமே கருத்தாகக் கொண்டு மனதில் தோன்றியபடி ஒரு முறையோ அல்லது மூன்று முறையோ சுற்றி வருதலும் வணக்க முறையாகக் கருதப்பட்டது. மேற்கூறிய வணக்க முறைகள் மன்னருக்கும், பிராமணர்களுக்கும், பௌத்தத் துறவிகளுக்கும் உரிய வணக்க முறைகளாம். பெரியோர்களைக் காணுமிடத்து பாத அணிகளைக் கழற்றி விட்டு மரியாதை செலுத்துதல் போன்ற முறைகளை யுவான் சுவாங் குறிக்கவில்லை. பொதுவாகச் சீனத்துப் பயணி இந்துக்களின் பழக்க வழக்க முறைகளை ஆர்வத்துடன் குறிக்கவில்லை என்ற கூற்றுக்கு இது போன்ற ஆர்வமற்ற குறிப்புகள் காரணமாக விளங்குகின்றன.

நோய்வாய்ப்படுதலும் இறப்பும்

நோய்வாய்ப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் இந்தியர்கள் எவ்வாறு நடத்தினர் என்பதையும் யுவான் சுவாங் குறிப்புகளில் காணலாம். நோய்வாய்ப்பட்டவர்கள் ஏழு

நாள்களுக்கு உணவு உட்கொள்வதில்லை. அக்காலத்திலேயே பொதுவாக நோயாளிகள் குணமடைந்து விடுதல் வழக்கம்; அவ்வாறு இல்லாவிடின், மருந்து உட்கொள்வர். பல வகைப்பட்ட மருந்துகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மருத்துவர்கள் தங்களுடைய திறமைக்கு ஏற்ப அவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பார்கள். யாரேனும் இறந்து விட்டால், உறவினர்கள் தலையை விரித்துக்கொண்டும், மார்புமீது அடித்துக்கொண்டும் அழுவார்கள். அழுகைக்கு எனக் குறிப்பிட்ட நேரமோ, உடையோ, முறையோ கிடையாது. இறந்தவர்களின் உடலை அகற்றுவதிலும், இறுதிச் சடங்குகள் செய்வதிலும், ஒப்புக்கொள்ளப்பட்ட மூன்று சடங்குகளைப் பின்பற்றினர். முதலாவது, உடலைத் தீயிட்டு எரித்து அழிப்பதாகும். இரண்டாவது, உடலை ஓடையில் எறிந்து விடுவதாகும். மூன்றாவது, வனவிலங்குகள் உண்ணும் வகையில் காட்டில் போட்டு விடுவதாகும். மன்னர் இறந்தவுடன் வாரிசைப் பதவி ஏற்கச் செய்வதே முதல் வேலையாகும். அவரே மன்னருக்கு இறுதிச் சடங்குகளைச் செய்வார். இறந்தவருக்குப் பட்டங்கள் வழங்கிக் கௌரவிப்பது இல்லை. மக்கள், இறந்த வீட்டிற்கு உண்ணுவதற்குச் செல்வதில்லை; இறுதிச் சடங்குகளுக்குப் பின் உணவு உட்கொள்வார்கள்; இறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்கள் சுத்தமற்றவர்களாகக் கருதப்பட்டதால், நகரத்தின் வெளியிலேயே குளித்து விட்டு, வீடு திரும்புவார்கள்.

மிக அதிக வயதாகி, சாவை நெருங்கிக்கொண்டிருப்பவர்களும், தீராத நோயினால் அவதிப்படுபவர்களும், வாழ்க்கையின் குறிக்கோள்கள் நிறைவேறி விட்டன எனக் கருதுபவர்களும் உறவினர்களிடம் இறுதியாக விடை பெற்றுக்கொண்டு, சிறிய படகில் அமர்ந்து, கங்கை நதியின் நடுவே சென்று மூழ்கி இறப்பார்கள். இறுதியாக அவர்கள் விடைபெறும் நிகழ்ச்சி இசை முழக்கத்துடன் விமரிசையாக நடைபெறும். இப்படி இறக்க விரும்புவதாக அறிவிக்கும் பத்துப் பேரில் ஒருவரே இறுதி நேரத்தில் பின் வாங்கினர் என யுவான் சுவாங் குறிக்கிறார்.

பௌத்தத் துறவிகள் இறக்கும்பொழுது மற்றத் துறவிகள் ஓலமிட்டு அழுவதில்லை; மகிழ்ச்சி மிக்க வேறு ஓர் உலகத்திற்குச் செல்லும் பேறு இறந்தவர்க்குக் கிடைத்தது என எண்ணுவர்.

வரி விதிப்பும் வருவாயும்

குறைகளற்ற நல்லரசு இயங்கியதால் குறைவான அதிகாரிகளே இருந்தனர். தனிப்பட்டவர்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கும் நிலை காணப்படவில்லை. அரசருக்குச் சொந்தமான

நிலம் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பகுதியின் வருமானம் அரசாங்கச் செலவிற்கும், வழிபாட்டிற்கும் ஒதுக்கப் படும். இரண்டாவது பகுதி, அதிகாரிகளின் நலனுக்காகவும், மூன்றாவது பகுதியின் வருவாய் சிறந்த அறிவாற்றல் மிக்கவர் களுக்கும் செலவிடப்படும். நான்காவது பகுதியின் வருவாய், பல்வேறு வகைப்பட்ட பிரிவினரின் மதச் சேவைக்கான வெகுமதி யாக அளிக்கப்படும். வரி விதிப்பு குறைவாகவே இருந்தது. மக்கள் பரம்பரைத் தொழிலைச் செய்வதிலேயே ஈடுபட்டனர். அரசரின் நிலத்தில் உழைத்தவர்கள் விளைச்சலில் ஆறில் ஒரு பகுதியை வரியாக மன்னருக்குக் கட்டினர்.[1] வர்த்தகர்கள் பண்ட முறையையே பின்பற்றினர்; ஆங்காங்கே இருந்த சுரங்கச் சாவடி களில் வரி கட்டினர். அரசாங்க வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் அவர்களுடைய திறமைக்கு ஏற்ப ஊதியம் பெற்றனர். வேறு நாடுகளின்மீது படையெடுத்துச் செல்வதும், அல்லது அரண் மனையைக் காவல் புரிவதும் படைவீரர்களின் முக்கியக் கடமை களாகும். மந்திரிகளுக்கும், அதிகாரிகளுக்கும் நிலங்கள் ஒதுக்கப் பட்டிருந்தன.

இந்தியாவின் உற்பத்திப் பொருள்கள்

இந்தியாவின் முக்கிய விளைபொருள்களின் பட்டியலையும் யுவான் சுவாங் தருகிறார். ஒவ்வொரு பகுதியின் நிலமும் இயற்கை அமைப்புகளால் வேறுபட்டிருந்தது. உற்பத்திப் பொருள்களும் பல வகைப்பட்டவையாம். மரங்கள், பூக்கள், மூலிகைகள், பழங்கள் ஆகியவை வெவ்வேறு விதத்தினவாகவும், வேறுபட்ட பல பெயர்களையும் கொண்டிருந்தன. எடுத்துக் காட்டாக, மாம்பழம், புளியம்பழம், வாழைப்பழம், தேங்காய், பலாப்பழம், கோவைப் பழம், முந்திரி, ஆரஞ்சு போன்றவை நாட்டின் பல பகுதிகளிலும் பயிரிடப்பட்டிருந்தன. சீனாவில் கிடைக்கும் சில வகைக் கனி வகைகள் இந்தியாவில் காணப்பட வில்லை.

விவசாயிகள் நிலத்தை உழுதல், விதைத்தல், நீர் பாய்ச்சுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் போன்ற வேலைகளைக் காலத் திற்கு ஏற்றபடி செய்தனர். அரிசி, கோதுமை, கடுகு, இஞ்சி, பூசணி, சுரைக்காய் ஆகியவை இந்தியாவில் அதிக அளவில் விளைந்தன. வெள்ளைப்பூண்டும், வெங்காயமும் உண்பவர்களிடம் இருந்து பேசாது ஒதுங்கினர். பால், நெய், சர்க்கரை, அப்பம், கடுகு எண்ணெயில் சமைக்கப்பட்ட தானிய வகைகள் போன்றவை அன்றாட உணவாகும். மீன், இறைச்சி, மான்

1 மனு, viii-130, 131; viii-308

இறைச்சி ஆகியவற்றை அவ்வப்பொழுது உண்டனர். கழுதை, யானை, குதிரை, பன்றி, நாய், ஓநாய், சிங்கம், குரங்கு, மனிதக் குரங்கு ஆகியவற்றின் இறைச்சி புறக்கணிக்கப்பட்டது.

திராட்சை மதுவிற்கும், மற்ற பான வகைகளுக்கும் உள்ள வேறுபாடுகளையும் யுவான் சுவாங் விளக்கியுள்ளார். திராட்சைப் பழத்திலிருந்து தயாரிக்கப்பட்ட மதுவுடன் சர்க்கரை கலந்து, க்ஷத்திரியர்கள் உண்டனர். வைசியர்கள் நன்றாக வடிக்கப்பட்ட மதுவையும், பௌத்தத் துறவிகள் திராட்சைச் சாறும் சர்க்கரையும் கலந்தும் பருகினர். கீழ்க்குடி மக்கள் குடிப்பதற்கென ஒதுக்கப்பட்ட பானங்களின் வகை எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வீட்டுப் பயனுக்காக மேற்கூறிய பொருள்கள் அனைத்தும் மிகுதியான அளவில் கிடைத்தன. சமைக்கும் முறைகள் பல வகைப்பட்டவையாம். சீனர்களைப் போன்று, நீராவியினால் உணவைச் சமைக்கும் முறையை இந்தியர்கள் அறிந்திருக்கவில்லை. சமையல் பாண்டங்கள் மண்ணாலும், பித்தளையினாலும் ஆனவை. உணவு வகைகளை ஒரு பாத்திரத்தில் இட்டுக் கலக்கி, விரல்களின் நுனியால் அள்ளி உண்டனர். கரண்டிகளும், சீனத்தில் பயன் படுத்தப்பட்ட உணவு அள்ளும் குச்சிகளும் பழக்கத்தில் இல்லை. நோயாளிகள் மட்டுமே கரண்டியினால் உணவை உண்டனர்.

தங்கம், வெள்ளி, வெண்கலம், கண்ணாடி ஆகியவற்றால் ஆன பொருள்களும் அதிக அளவில் பழக்கத்தில் இருந்தன. மக்கள் துறைமுகப் பகுதிகளிலிருந்து பண்டமாற்று முறைப்படி விலை யுயர்ந்த பொருள்களைப் பெற்றனர். காஷ்மீரத்துக் கனி வகைகள் இந்தியாவெங்கிலும் பயிரிடப்பட்டன என யுவான் சுவாங் விளக்குகிறார். இவ் விளக்கம் பயணக் குறிப்புகளில் இந்த ஓர் இடத்தில் மட்டுமே காணப்படுகிறது. சுவையான அத்திப் பழங்கள் சீனாவிலிருந்து இந்தியாவிற்கு வந்ததாகவும் ஜூலியன் கூறுகிறார்.[1]

காசி

காசியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, சீனத்துப் பயணி பாஹியான் காசி என்ற பெயரை ஒரு நாட்டின் பகுதியாகவும், பொ-லா-ந (Po-lo-na), பரானா (Barana) அல்லது வாரானா (Varana) என்ற பெயரை நாட்டின் தலைநகராகவும் குறிப் பிடுகிறார்.[2] பொதுவாக, பௌத்த இலக்கியங்களில்

[1] ஜூலியன் II-பக்கம் 200

[2] ஃபோ-கூ-சி (Fo-Kuo-Chi)- அத்தியாயம் 34

'காசி' எனும் சொல் ஒரு நாட்டைக் குறிக்கும் சொல்லாகவே இருக்கிறது.

காசி மாவட்டம் ஏறக்குறைய 800 மைல் (4000லி) சுற்றுப் பகுதியைக் கொண்டது. தலைநகரின் மேற்குப் பகுதி கங்கை வரைப் பரவி இருந்தது. தலைநகர் சுமார் நான்கு அல்லது ஐந்து மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் உடையது. நகர அமைப்பு நெருக்கடி மிக்கதாகவும், மக்கள் தொகை மிகுந்தும் காணப் பட்டது. அளவற்ற செல்வத்தையும், விலையுயர்ந்த பொருள்களையும் கொண்ட பெரிய வீடுகள் அங்குக் காணப்பட்டன. மக்கள் மரியாதையும், நற்குணமும் பொருந்தியவர்களாயிருந்தனர். பெரும்பான்மையான மக்கள் கற்பதில் ஆர்வம் மிக்கவர்கள். நகரம் மிதமான பருவநிலையைப் பெற்றிருந்தது. விளைபொருள்களும் அதிகம். பழ மரங்களும், செடி கொடிகளும் அடர்த்தியாக வளர்ந் திருந்தன. சமாத்தியா (Sammatiya) பிரிவைச் சேர்ந்த முப்பது மடங்களில் சுமார் 3000 துறவிகள் வாழ்ந்தனர். ஏறக்குறைய 600 தேவ கோயில்கள் இருந்தன. 10000க்கும் அதிகமான பக்தர்கள் அங்கு இருந்தனர். அவர்களில் பெரும்பான்மையினர் சிவபக்தர்கள். அவர்களில் சிலர் உடலில் சாம்பலைப் பூசிக் கொண்டும், நிர்வாணமாகவும் காணப்பட்டனர். புறவாழ்வை மறந்து தூய அறவாழ்வை நாடினர். தலைநகரிலேயே இருந்த இருபது தேவ கோயில்கள் சிற்ப வேலைப்பாடுகளுக்கும், மர வேலைப்பாட்டிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கின. அடர்ந்த மர நிழல்களுக்கிடையே தூய நீரோடைகள் ஓடின. வெண்கலத் தால் ஆன நூறடி உயரமுள்ள சிவலிங்கம் மக்கள் கண்டு வியக்கத் தக்க கம்பீரத்துடன் விளங்கியது.

திராவிடம்

தா-லோ-பி-டு (Ta-lo-p'i-t'u) என்ற சீனச் சொல் திராவிடம் என்பதைக் குறிக்கிறது. திராவிடத்தின் தலைநகரம் காஞ்சிபுர மாகும். பாலாற்றின் கரையில் காஞ்சிபுரம் அமைந்திருந்ததாகக் கன்னிங்ஹாம் கருதுகிறார். காஞ்சி-பூ-லா (Kanchih-pu-la) என்பது காஞ்சிபுரத்தைக் குறிக்கும் சீனச் சொல்லாகும். இஃது ஏறக்குறைய ஆறு மைல் சுற்றளவு கொண்டதாகும். இப்பகுதி மண் வளம் மிக்கது; கனி வகைகளும் மலர்களும் மிகுந்து காணப்பட்டன. மக்கள் வீரமும், நம்பிக்கையும், பொது நலமும் மிக்கவர்களாக விளங்கினர். அவர்கள் கற்பதில் ஆர்வம் மிக்கவர்கள். மத்திய இந்திய மக்கள் பேசும் மொழியிலிருந்து மாறுபட்ட மொழியை அவர்கள் பேசினார்கள். நூறு பௌத்த மடங்களில் சுமார் 10000 துறவிகள் வாழ்ந்தனர். அவர்கள் சதவீரா பிரிவைச் சேர்ந்தவர்கள்.

ஏறக்குறைய எண்பது தேவ கோயில்கள் இருந்தன. அவற்றில் பெரும்பான்மை திகம்பரக் கோயில்களாகும். இப் பகுதிக்குப் புத்தர் அடிக்கடி வருகை புரிந்தார். அவர் போதித்த இடங்களிலும், மக்கள் மனம் மாறிய இடங்களிலும் அசோகர் ஸ்தூபங்களை எழுப்பினார். நாளந்தாவின் சிறப்பான கல்வியாளர் தர்மபாலர் இந் நகரத்தின் ஓர் உயர் அதிகாரியின் மூத்த மகனாவார். அவருக்கு வயது வந்ததும், மன்னரின் மகளை மணம் முடிக்கப் பேசி நிச்சயித்தனர். திருமணத்திற்கு ஒரு நாள் முன் மன நிம்மதியின்றிப் புத்த சிலைக்கு முன் நின்று வணங்கினார். அவருடைய பிரார்த்தனைக்குப் பதிலளிக்கும் வகையில் தலைநகரிலிருந்து சில நூறு மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு மடத்திற்குக் கடவுளால் அவர் தூக்கிச் செல்லப்பட்டார். மற்ற பௌத்தத் துறவிகள் அதைக் கேள்வியுற்று, தர்மபாலரைத் தங்களுடைய சகோதரராக ஏற்றுக் கொண்டனர். அதைக் கேள்விப்பட்ட மன்னருக்குத் தர்மபாலரின் மீதிருந்த மதிப்பு மேலும் உயர்ந்தது. தர்மபாலர் தர்க்கம் (Logic), பௌத்தம், சொல் ஆராய்ச்சி, இயற்கைத் தத்துவம் (Etymology, Metaphysics) ஆகியவற்றில் பெயரும் சிறப்பும் பெற்றார். தலைநகரின் தென்புறத்தில் ஒரு பெரிய மடம் இயங்கி வந்தது. அங்குதான் அசோகரால் கட்டப்பட்ட நூறடி உயர ஸ்தூபம் இருந்தது. அவ்விடத்தில்தான் புத்தர் தம் போதனைகளால் தீர்த்தங்கர்களைத் தம் வயப்படுத்தினார்.

12. முடிவுரை

பழங்கால இந்தியாவில் நிலவி வந்த அரசுகளை அவற்றின் தன்மைகளைப் பொறுத்து மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். சம்காகனு (Samghagana) அல்லது 'குடியரசு' என்பது மௌரியர் காலத்திற்கு முன் நிலவிய அரசு முறையாகும். அவற்றில் சில குப்தர்களின் காலம் வரை நீடித்தன. இரண்டாவதாக, மௌரியர் களின் கட்டுப்பாடுகள் மிக்க மத்திய அரசு ஆகும். மூன்றாவதாக, ஹர்ஷர் காலத்தில் நிலவிய மன்னராட்சிகளின் கூட்டரசு ஆகும்.

ஓர் அரசின் வெற்றி, குடிமக்கள் நல்வாழ்வு பெறுதலிலேயே அடங்கியிருக்கிறது. இந்திய அரசுகளின் மிகச் சிறப்பான தன்மையே சக்கரவர்த்தி அல்லது திக் விஜயி என்ற சொல்லில் அடங்கியிருக்கிறது. அரசு புரிபவரின் தேர் (சக்கரங்கள்) எங்கும் தடையின்றிச் செல்கின்றன என்பதே சக்கரவர்த்தி என்ற சொல்லின் பொருளாகும். எல்லாத் திசைகளிலும் அமைந்துள்ள நாடுகளை வெல்லுபவர் என்பதே திக் விஜயி என்பதன் பொருளாகும். போர் வெற்றிகளின் மூலமாக நாட்டிற்கு இயற்கையாக அமைந்துள்ள மலை அல்லது கடல் போன்ற எல்லைப் பகுதிகள் வரை தம் ஆதிக்கத்தைப் பரப்பி, நாட்டில் தம்முடைய சிறப்பான ஆட்சித்தலைமையைத் தோற்றுவித்தலே அவருடைய சிறப்பான குறிக்கோளாக அமைய வேண்டும்.

மேலே குறிப்பிட்ட அரசை அமைக்கும் முறைகள் பற்றிய அரசியல் கருத்துகளும் குறிப்பிடத் தக்கவை ஆகும். போரிட்டு வெல்லுவதும் மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. தர்ம விஜயம் (Dharma Vijaya) அல்லது நெறியான படையெடுப்பு என்பது மற்ற அரசர்களைக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும் என்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டதாகும். இரண்டாவது வகை, லோப விஜயம் (Lobha Vijaya) ஆகும். பேராசையே அதன் அடிப்படை. பகைவருடைய மண்ணையும், பெண்ணையும் கைப்பற்றுவது அதன் நோக்கமாகும். மூன்றாவது வகை, அசுர விஜயம் (Asura Vijaya) என்பதாகும். பேய் போன்று தாக்கிப் பகைவரின் உற்றார், உறவினர் அனைவரையும் கொல்லுதல் அதன் குறிக்கோள் ஆகும்.

திட்டமிட்ட பேச்சு வார்த்தை, சாமர்த்தியம், வெறி ஆகியவை மேலே குறிப்பிட்ட மூன்று வகைப் படையெடுப்புகளுடன் முறையே தொடர்பு கொண்ட உந்தும் ஆற்றல் ஆகும்.

அரசு முறைகளை விளக்கும் மெக்கிவில்லி போன்றோரின் புத்தகங்கள்கூடத் தர்ம விஜயத்தையே புகழ்ந்துரைக்கின்றன. போர் வழியைத் தவிர்த்து அமைதியான முறையில் பெறும் வெற்றிகளே பெரிதும் விரும்பக் கூடியவை. நட்பு உடன்படிக் கைகளும் பல வகைப்படும். வாக்குறுதிகளின் அடிப்படையி லிருந்து திருமணத் தொடர்பு கொள்ளுதல் மூலமாக ஏற்படும் நல்லுறவு வரைப் பல வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சாந்தி (Sandhi) என்பது, சொல் நட்புறவு, அமைதி ஆகிய இரண்டையும் குறிக்கும் சிறப்பான சொல்லாகும். நெறியான படையெடுப்பை மேற்கொண்டவர், வெல்லப்பட்ட அரசருக்கு அரசுரிமையைத் திரும்ப அளித்து, அந் நாட்டு மக்களின் பழக்கம், மரபு, பண்பாடு ஆகியவற்றை மதித்துக் காப்பாற்ற வேண்டும் என எதிர்பார்க்கப் பட்டது. கீழ்ப்படிதல் என்பது நாட்டின் நிலைமைக்கும் தன் மைக்கும் ஏற்றபடி உடன்படிக்கைகளின் மூலம் பெறப்பட்டது. மேலரசருக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்கள் ஒப்பந்தத்தில் கண்டுள்ள படி பல வழிகளில் விசுவாசத்தைத் தெரிவிக்க வேண்டும். மேற் கூறியவற்றைத் தம் ஆட்சிக் காலத்தில் பின்பற்றி வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தை ஹர்ஷர் பெற்றுள்ளார்.

பேரரசின் பல்வேறு பகுதிகளை அரசு புரியும் அரசர்களின் குழாம் அல்லது மண்டலம் (Mandala) என்பது அரசியல் நிருவாக அமைப்பின் மற்றொரு கருத்தாகும். பேரரசருக்கும் நாட்டின் பல்வேறு பகுதிகளை அரசு புரிந்த அரசர்கள், சிற்றரசர்களுக் குள்ளும் பல விதமான உறவு முறைகள் நிலவின என்பதற்கு மண்டல அமைப்பு ஒரு சான்று ஆகும். குறிப்பாக, பரந்த பேரரசை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் உள்ள அரசர்கள் மண்டல உறவு முறை பற்றி ஆழ்ந்து சிந்தித் திருக்க வேண்டும். அத்தகைய பேரரசர்கள் தங்களது பகை வர்கள், நண்பர்கள், அவர்கள் ஆட்சி புரியும் பகுதிகள் ஆகியவை பற்றிய தகவல் அனைத்தையும் திட்டமிட்டுச் சேகரித்து வைத்திருந் தனர். இவை பற்றிய தகவல்கள் நேரத்திற்கு நேரம் மாறக் கூடியவை. புதிய உடன்படிக்கை ஏற்படும் வேளையில் ஏற்கெனவே வேறு அரசர்களுடன் கொண்டுள்ள உறவின் தன்மைகள் மாறி விடும். புதிய உடன்படிக்கைகளின் விளைவாகப் பழைய உடன் படிக்கைகள் பயனற்றுப் போகும் நிலையும் ஏற்படும். நண்பர் பகை வராக மாறுவதும், பகைவர் நண்பராக மாறுவதும் உண்டு. தவிர, எச் சூழ்நிலையிலும் நடுநிலை வகிக்கும் அரசுகளும் இவ்வமைப்பில்

இடம் பெறும். மண்டல அமைப்பு பற்றிய விளக்கங்களில் அமைதியின் தேவை, போரில் தர்மம், அதிகாரத்தைப் பகிர்தல், வட்டாரங்களுக்கு உரிமை வழங்குதல் போன்றவை கருத்தில் கொள்ளப்பட்டாலும், அரசியலில் அதிகாரம் பெறும் தன்மையே அம் முறையின் அடிப்படையாகக் காணப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வகைப் படையெடுப்பு களிலும் பொதுவாகவே மண்டல அமைப்பு முறை எல்லா இந்திய அரசர்களிடையே விளங்கி வந்துள்ளது. பேரரசை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு, போரில் வெல்லும் அரசர் ஒரு குறிப் பிட்ட குடும்பத்திலிருந்தோ அல்லது பகுதியிலிருந்தோ தான் தோன்ற வேண்டும் என்ற தேவையில்லை. அவர்கள் நாட்டின் எப் பகுதியிலிருந்தும் தோன்றக் கூடும். இவ்வுண்மை நாட்டின் பல்வேறு பகுதிகளில் வட்டார உணர்வைத் தோற்றுவித்தது. அவற்றில் ஆட்சிபுரியும் அரசர்கள் தங்களுடைய ஆற்றலைப் பெருக்கிக்கொண்டு, நாட்டின் மற்றப் பகுதிகளின்மீது மேலதி காரத்தை நிலை நிறுத்த விரும்பியதே மண்டல அமைப்பின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் எனலாம், ஒரு சில வேளைகளில் ஆற்றல் மிக்க மாநில அரசுகள் நாட்டின் இயற்கை எல்லைகளான மலைகள் கடல்கள் வரை ஆதிக்கத்தைப் பரப்பி ஒரு வலுவுள்ள அரசியல் அமைப்பைத் தோற்றுவிக்கும் முயற்சிகளை மேற்கொண்டன. வெல்லப்பட்ட பகுதிகளை உரிமையுடன் நீடிக்க அனுமதிப்பது பொதுவாக நிலவி வந்த பழக்கமாகும். மேலும், வென்றவர் தாமே விரும்பி வெல்லப்பட்டவர்க்கு உரிமை அளித்து, வேறுபாட்டிலும் ஒற்றுமை தோன்ற வழி வகுத்தனர். அந் நிலையில் பல பகுதிகளிலும் விளங்கிய வெவ்வேறு அரசியல் அமைப்புகள் ஒன்றுபட்டு ஓர் இந்தியப் பேரரசில் உரிமையுடனும், அதே சமயம் பேரரசின் மிக்க அங்கம் முடியாத ஓர் உறுப்பு என்ற உணர்வுடனும் விளங்கின. இதுவே மண்டல அமைப்பு முறையின் அடிப்படைக் கொள்கையாகும்.

ஹர்ஷரின் அரசியல் குறிக்கோள்களும், பின்பற்றிய கொள் கைகளும் மேலே கூறிய கருத்துகளின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டன. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தம் முடைய ஆட்சி பரவ வேண்டும் என்ற அவா அவரிடம் காணப் பட்டாலும், தென்மேற்கில் நர்மதை ஆறு, தென்கிழக்கில் கொங்கோடா வரையிலுமே நாட்டை விரிவு படுத்துவதில் அவர் வெற்றி காண முடிந்தது. குஜராத்தும், அசாமும் ஹர்ஷரின் நட்பு நாடுகளாக விசுவாசத்துடன் நடந்துகொண்டன. காஷ்மீரம், கூர்ஜரம், சிந்து ஆகியவை ஹர்ஷரின் ஆற்றலை மதித்துப் பணிந்தன. சீனத்துப்பயணி யுவான் சுவாங் மத்திய

ஆசியா வழியாகத் தாய்நாடு திரும்பும் சமயம் வழியில் அமைந்திருந்த இந்திய அரசுகளைப் பயணிக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு கடிதம் எழுதும் அளவிற்கு ஹர்ஷர் செல்வாக்குப் பெற்றிருந்தார். ஹர்ஷர் வெளி நாடுகளுடனும் அரசியல் உறவு கொள்ள முயற்சிகள் மேற்கொண்டதிலிருந்து அவரது தேர்ந்த அரசியல் அறிவு புலப்படுகிறது. கி.பி. 641ஆம் ஆண்டு முதல் அதிகாரப் பூர்வமான ராஜதந்திரக் குழு சீனாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக் குழு நேபாளம், திபெத் வழியாகச் சீனாவிற்குச் சென்றிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. கி.பி. 648ஆம் ஆண்டிற்குள் ஹர்ஷர், சீனப் பேரரசரான தாங் (T'ang) வமிசத்தின் தாய்-சாங் (T'ai-tsang) ஆகிய இருவரும் ஒவ்வொருவரும் மூன்று தூதுக் குழுக்களை அனுப்பி வரவேற்றனர். மூன்றாவது தூதுக்குழு ஹர்ஷர் இறந்தபின் இந்தியாவிற்கு வந்தது. ஹர்ஷர், பொதுவாக எல்லா இந்திய அரசுகளையும் கருத்தில் கொண்டே தூதுக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். மகாராஷ்டிரத்தின் ஆற்றல் மிக்க சாளுக்கிய அரசரான இரண்டாம் புலிகேசி ஹர்ஷருக்குச் சாகல் ஒட்டார பாத நாதர் அல்லது 'வடபுலத் தலைவர்' என்று அளித்த பட்டத்திற்கு முற்றிலும் தகுதி உள்ளவர் என்பதை மேலே குறிப்பிட்ட ஹர்ஷரின் முயற்சிகள் தெளிவாக விளக்குகின்றன.

நாட்டின் எல்லைகளை விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொண்ட நிலையிலும் 'நெறியான' படையெடுப்புகளையே ஹர்ஷர் மேற்கொண்டார். அவர் அம்முறையைப் பின்பற்றியதற்கு அரசியல் அறிஞர்களின் பரிந்துரைகள் துணை புரிந்தன. எனினும், தம்முடைய படை வசதி, வெல்லப்பட்டுச் சிற்றரசர்களாக விளங்கியவர்களின் ஆற்றல், அன்று நிலவிய அரசியல் சமநிலை ஆகியவற்றைச் சீர் தூக்கி ஆராய்ந்த பின்னரே, அம் முடிவுகளை ஹர்ஷர் மேற்கொண்டிருக்க வேண்டும். நாட்டை விரிவுபடுத்தும் விருப்பத்தை நிறைவேற்ற அவர் மிகக் கீழான வழிகளைப் பின்பற்றவில்லை எனினும், அக் காலத்தில் அவையும் வழக்கத்தில் இருந்தன என்பதைச் சாரங்கன், தேவகுப்தர் ஆகியோரின் கனோஜ் தாக்குதல் நடவடிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. ஹர்ஷர் ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் அன்றைய தேவைகளும், கடமைகளும் ஹர்ஷரின் கொள்கைகளை உருவாக்குவதில் சிறப்பான பங்கு வகித்தன. பிற்காலத்தில் ஹர்ஷரின் அரசியல் முதிர்ச்சியும், வெற்றிகளினால் மமதை அடையாத மன நிலையும், மத உணர்வும் அவரது கொள்கைகள் நன்கு உருவாகப் பயன் பட்டன.

ஓர் ஆற்றல் மிக்க அரசர் தமக்கு உட்பட்ட பேரரசின் பல பகுதிகளுடன் சீரான உறவு ஏற்படுத்திக்கொள்வதற்கு நுண்ணிய அறிவாற்றல் கொண்டிருத்தல் அவசியம். ஏனெனில், பல ஆண்டு களாக எடுத்துக்கொள்ளும் சீரான முயற்சியினாலேயே ஒரு விரி வான பேரரசை ஏற்படுத்த முடியும். அரசரிடத்தே அதிகாரங்கள் அனைத்தும் குவிக்கப்பட்ட அரசு முறையைவிட, ஹர்ஷர் ஏற்படுத்தியது போன்ற கூட்டரசு முறையில் மாநிலங்களுக் கிடையே சீரான உறவையும், சமநிலையையும் ஏற்படுத்திக் கொடுப்பது மிகச் சிரமமான பணியாகும். அத் தகைய பணியில் ஹர்ஷர் வெற்றி பெற்றார் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

ஹர்ஷர் தம்முடைய ஆட்சிக் காலம் முடிவடையும் வரை, நாட்டை விரிவு படுத்தும் கொள்கையைப் பின்பற்றி, படை யெடுப்புகளை மேற்கொண்டார். பேரரசின் அளவு அதிகரிக்கும் அதே வேளையில், அதற்கேற்றாற்போல் கூட்டரசிற்கு உரிய நிரு வாகத் திறமையும் தேவைப்பட்டது. அவற்றைச் செவ்வனே நிறைவேற்றும் பணியில் ஹர்ஷர் சிறப்பான வெற்றி பெற்றார். ஒவ்வொருவரின் நிலைக்கும் ஏற்றாற்போல ஏற்படுத்தப்பட்ட நட்பு உடன்படிக்கைகளின் தன்மையையும், உறவையும் ஆராயும் நிலையில் ஹர்ஷருக்கு உட்பட்டிருந்த சிற்றரசர்களை ஐந்து அல்லது ஆறு வகைகளாகப் பிரிக்கலாம். அவர்களிடையே உயர் அதிகார நிலை, நட்பு ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட சீரான நல்லுறவை ஹர்ஷர் தோற்றுவித்தார். ஹர்ஷரின் நேரடியான கட்டுப் பாட்டின்கீழ் இருந்த பகுதிகள் நல்ல அரசைப் பெறும் பேறு பெற்றன. தமக்கு உட்பட்ட அதிகாரிகளுக்கு ஊதியத்தைப் பணமாக அளிப்பதற்குப் பதிலாக நிலத்தை அல்லது நிலவரியை ஒதுக்கும் கொள்கையை ஹர்ஷர் பின்பற்றினார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. சமயத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் நிலக் கொடை அளிப்பதன் மூலமாகவே அவர் ஆதரவு அளித்தார். இக் கொள்கையின் விளைவாக, காலப் போக்கில் அரசு நிலம் பிரிக்கப்பட்டுச் சிதறுண்டது.

இம் முறை பிற்காலத்தில் அரசின் கட்டுப்பாட்டிற்கு ஊறு விளைவித்தது. அரசரின் ஆற்றல் குறைந்த காலத்தில் நிலையற்ற (Temporary) நில ஒதுக்கீடு பெற்ற அதிகாரிகளும், தனிப்பட்டவர் களும் அதை நிலையான உரிமையாகக் கருதிக்கொண்டு, தவறான வழிகளில் பயன்படுத்தத் தொடங்கினர். இதுவே நாடுகளை வென்று ஒழுங்குபடுத்தி இணைக்கும் அரசர்களின் முயற்சிகளுக்குப் பெரும் தடையாக விளங்கியது.

ஹர்ஷர் தாராளமாக நிலத்தைக் கொடை அளித்ததால் தோன்றிய விரும்பத் தகாத விளைவுகள் அவருடைய காலத்தில் தோன்றவில்லை எனினும், யுவான் சுவாங்கின் பயணக்குறிப்பு களில் காணப்படும் சில பொருள் பொதிந்த சொற்றொடர்கள் சாமந்தாக்களின் செல்வச் செழிப்பை உணர்த்துகின்றன. ஹர்ஷரைப் போலவே தங்களிடத்தில் அதிகமாகக் குவிந்துள்ள செல்வத்தைப் பேரவை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற சாமந்தாக் களும் மக்களுக்குத் தாராளமாகக் கொடை அளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது; அவர்களுடைய செல்வச் செருக்கை அழிப்பதற்காகவே என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு மிக அதிக அளவில் கொடை அளிப்பது அதைப் பெறுபவர்க்கு எவ்வித மனநிலையைத் தோற்றுவிக்கும் என்பது ஒருபுறமிருக்க, நாட்டின் பொருளாதாரத்திற்கு எவ்வாறு ஊறு விளைவிக்கும் என்பதும் மனதிற்கொள்ள வேண்டிய பிரச்சினை ஆகும். ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் சிறப்பான வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்டாலும், நிலத்தையே வாழ்க்கையின் அடிப்படையாக நாடும் நிலை தெளி வாகக் காணப்படுகிறது. இது போன்ற பொருளாதார, அரசியல் தடைகள் நாணயப் புழக்கத்திற்கும், முதலீட்டிற்கும் பெரும் ஊறு விளைவிக்கத் தொடங்கின. குப்தர் காலத்தில் பேரரசிற்கும், அதன் அங்கங்களாக விளங்கிய பகுதிகளுக்கும் இடையே விளங்கிய நுட்பமான சமநிலை மறைந்து போனதே பிற்காலத்தில் ஏற்பட்ட ஊறுகளுக்குக் காரணமாக இருக்கக் கூடும் ஹர்ஷர் தம்முடைய ஆட்சிக் காலத்தில் தோற்றுவித்த வலுவற்ற மத்திய கூட்டரசு, பேரரசர் ஆற்றல் மிக்கவராக விளங்கும் காலம் வரையிலேயே நீடிக்கக் கூடியது. ஆகவே, நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு வழி வகுக்கும் ஆற்றல் மிக்க அமைப்பாக அது நெடுங்காலம் நீடிக்க இயலாது. இந்திய அரசு இயல்களில் புதிய முறைகளைத் தோற்று விக்கும் தனித் திறமை கொண்டவராக ஹர்ஷர் இல்லாதிருப் பினும், அவர் உயிர் வாழ்ந்த காலம் வரை நாட்டின் நிலையை அப்படியே காக்கும் பணியைச் சிறப்பாக நிறைவேற்றினார். இதைக் கூறுவதன் காரணமாக ஹர்ஷப் பேரரசின் எல்லைப் பரப் புகளையும், நிருவாகத் திறனையும் குறைத்து மதிப்பிட வேண்டும் என்று பொருள் இல்லை. இந்திய அரசு முறைகளில் வெல்லப்பட்ட சிற்றரசர்கள் தங்களுடைய பகுதிகளைத் தாங்களே அரசு புரிந்து கொண்டு அதே சமயம் ஒரு பேரரசருக்கு உட்பட்டிருத்தல் என்ற வழக்கத்தின் அடிப்படையில், அவற்றை நாம் சிந்திக்க வேண்டும். நட்பு உடன்படிக்கைகளின்படி பேரரசுக்குக் கீழ்ப்படிய ஒப்புக் கொண்டாலும் அதில் உட்பட்டிருந்த சிற்றரசுகள் கணிசமான அளவுக்கு அரசியல், பொருளாதாரம், இராணுவம் ஆகிய துறை களில் பலவித சலுகைகளையும் பெற்று, பெயரளவிற்கே மைய

அரசுக்கு மரியாதையும் விசுவாசமும் காட்டி வந்தன. அத்தகைய கண்ணேட்டத்தில் வலபியும் காமரூபமும் ஹர்ஷப் பேரரசின் அங்கங்கள் எனலாம்.

ஹர்ஷருடைய ஆட்சிக் காலத்தின் சிறப்பான சாதனைகளைச் சமயம், சமூகம், கலை ஆகிய மூன்று துறைகளிலும் பரக்கக் காணலாம். கலைத் துறையில் சிறப்பாக விளங்குவது இலக்கிய வளர்ச்சியே ஆகும். கட்டடக் கலை வளர்ச்சிக்கு எவ்விதமான குறிப்பிடத்தக்க சான்றும் இன்று நம்மிடம் இல்லை.

ஒரு சிறிய பகுதியின் அரசராகப் பதவியேற்ற ஹர்ஷர் இந்திய வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த பல சாதனைகளைப் புரிந்துள்ளார். குப்தப் பேரரசு அழிந்த ஒரு நூற்றுண்டிற்குப் பின் மற்றெரு வலுவான அரசைத் தோற்றுவிப்பதில் உள்ள இன்னல்களைக் கடந்து ஒரு பேரரசை அவர் ஏற்படுத்திஞர். ஹர்ஷரின் ஆட்சிக் காலத்திலேயே இந்திய வரலாற்றின் இடைக்காலத்தில் நிலவிய பிரிவினைச் சக்திகள் வளரத் தொடங்கின. எனினும், ஹர்ஷர் நிறுவிய குறுகிய கால ஆட்சியின் பொலிவு சுடர் விட்டுப் பிரகாசித்தது. ஆகவே, இந்தியாவை ஆண்ட தலை சிறந்த அரசர்களின் வரிசையில் கலை வளர்த்த பெருமை மிக்க ஹர்ஷருக்கும் சிறந்ததோர் இடமுள்ளதென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஹர்ஷர் ஆட்சிக் கால மற்றும் ஏழாம் நூற்றாண்டின்

சிறப்பான நிகழ்ச்சிகள்

ஆண்டுகள் கி.பி.	நிகழ்ச்சிகள்
586	ராஜ்ய வர்த்தனரின் பிறப்பு
590	ஹர்ஷரின் பிறப்பு
592	ராஜ்யஸ்ரீயின் பிறப்பு
600	யுவான் சுவாங்கின் வருகை
600	சசாங்கன் பௌத்தர்களைத் துன்புறுத்துதல்
603-4	ராஜ்யஸ்ரீயின் திருமணம்
605	பிரபாகர வர்த்தனர் இறப்பு; கிரக வர்மர் கொல்லப் படுதல்; ராஜ்ய வர்த்தனர் தனேஸ்வரத்தின் அரச ராதல்
606	ஹர்ஷர் தனேஸ்வரத்தின் அரசராதல்
606-612	ஹர்ஷர் வட இந்தியாவை வெல்லுதல்
608	சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி ஆட்சிப் பொறுப்பு ஏற்றல்
609	சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி முடி சூட்டிக் கொள்ளுதல்
612	ஹர்ஷர் முடி சூட்டிக்கொள்ளுதல். கி.பி. 606 ஹர்ஷர் சகாப்தம் எனக் குறிக்கப்பட்டது.
618	கோஓ-சு (Koo-tsu) முதலாவது தாங் (T'ang) அரசர் ஆதல்
619-20	சசாங்கனின் சிற்றரசர் இரண்டாவது மாதவ ராஜாவின் கஞ்சம் குறிப்பு
622	ஹிஜ்ரா—முகமது சகாப்தம்
623	வங்காளம் ஹர்ஷப் பேரரசுடன் இணைதல்
626	தாய் சாங் (T'ai-tsang) சீனப் பேரரசர் ஆதல்
628-29	ஹர்ஷரின் பன்ஸ்கிரா செப்பேடு
629	யுவான் சுவாங் பயணம் மேற்கொள்ளுதல்
630	ஹர்ஷரின் வலபிப் படையெடுப்பு
630-632	ஹர்ஷரின் மதுபான் செப்பேடு

ஆண்டுகள் கி.பி.	நிகழ்ச்சிகள்
633	ஹர்ஷர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப் படுதல்
635	ஹர்ஷர் காஷ்மீரை வெல்லுதல்
636	நெஸ்டோரியன் கிறிஸ்துவ மதத்தை அலோபென் சீனாவில் பரப்பினார்.
637-642	ஹர்ஷரின் ஒரிசா படையெடுப்பு
638	ஹர்ஷரின் ஐந்தாவது ஐந்தாண்டுக்காலப் பிரயாகை பேரவை
641	ஹர்ஷர் சீனாவிற்குத் தூதுக்குழுவை அனுப்புதல்
642	இரண்டாம் புலிகேசியின் இறப்பு
643	ஆறாவது ஐந்தாண்டுக் கால கனோஜ், பிரயாகைப் பேரவைகள்
643	யுவான் சுவாங் சீனாவிற்குப் புறப்படுதல்
643	வாங்-யுவான்-ஸி(Wang-hiuen-t'se)யின் லி-ஐ-பியோ (Li-i-piow) ஆகியோரின் சீனக் குழு இந்தியாவிற்கு அனுப்பப்படுதல்
644	யுவான் சுவாங் சீனாவை அடைதல்
646	வாங்-யுவான்-ஸியின் இரண்டாவது குழு இந்தியா விற்கு அனுப்பப்படுதல்
646	யுவான் சுவாங்கின் பயணக்குறிப்பு நூல் முற்றுப் பெறுதல்
647	ஹர்ஷரின் இறப்பு
647-48	யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் வெளியிடப் படுதல்
649	சீனப் பேரரசர் தாய் சாங் இறப்பு. காஓசங் (Kaotsung) பதவியேற்றல்
657	வாங்-யுவான்-ஸியின் மூன்றாவது குழு இந்தியாவை அடைதல்
664	யுவான் சுவாங்கின் இறப்பு
671	இட்சிங் இந்தியப் பயணத்தைத் தொடங்குதல்
675-685	நாளந்தாவில் இட்சிங் தங்கி இருந்த காலம்
691	இட்சிங் 'ரெக்கார்டு' என்ற நூலைத் தொகுத்தல்
695	இட்சிங் சீனா திரும்புதல்

வமிசவழி ஆட்சி அட்டவணைகள்

வர்த்தனர்கள் வமிசவழி ஆட்சி அட்டவணை

புஷ்பபூதி

மகாராஜா நரா வர்த்தனர் = வஜ்ரிணி தேவி

மகாராஜா ராஜ்ய வர்த்தனர் = அப்சரா தேவி

மகாராஜா ஆதித்ய வர்த்தனர் = மகாசேன குப்த தேவி

பரம பத்தாரக மகாராஜாதி ராஜ பிரபாகர வர்த்தனர் = யசோமதி தேவி (யசோவதி)

பரம பத்தாரக மகாராஜாதி ராஜ ராஜ்ய வர்த்தனர்

பரம பத்தாரக மகாராஜாதி ராஜ ஹர்ஷர்

ராஜ்யஸ்ரீ = கிரக வர்மர் மௌகாரி

மகள் = வலபியின் இரண்டாவது துருவசேனு

பிற்கால குப்தர்கள் வமிசவழி ஆட்சி அட்டவணை

- கிருஷ்ண குப்தர்
  - ஹர்ஷ குப்தர்
    - முதலாவது ஜீவித குப்தர்
      - குமார குப்தர்
        - தாமோதர குப்தர்
          - மகாசேன குப்தர்
            - குமார குப்தர்
            - மாதவ குப்தர்
              - ஆதித்ய சேனர்
                - தேவ குப்தர்
                  - விஷ்ணு குப்தர்
                    - இரண்டாவது ஜீவித குப்த தேவர்
          - தேவ குப்தர்

மௌகாரிகள் வமிசவழி ஆட்சி அட்டவணை

- மகாராஜா ஹரி வர்மர்
  - மகாராஜா ஆதித்ய வர்மர்
    - மகாராஜா ஈஸ்வர வர்மர்
      - மகாராஜாதி ராஜ ஈசான வர்மர்
        - மகாராஜாதி ராஜ சர்வ வர்மர்
          - மகாராஜாதி ராஜ அவந்தி வர்மர்
            - கிரக வர்மர் = ராஜ்யஸ்ரீ
            - சுவா............(சுச்சா?)
        - சூர்ய வர்மர்

வலபியின் மைத்ரேகர்கள் வமிசவழி ஆட்சி அட்டவணை

(1) சேனாபதி பட்டார்கா

(2) சேனாபதி முதலாவது தாரசேனா

(3) மகாராஜா துரோண சிம்மா

(4) மகாராஜா முதலாவது துருவசேனா

(5) மகாராஜா தாரபட்டா

(6) மகாராஜா குகசேனா

(7) மகாராஜாதி ராஜ இரண்டாவது தாரசேனா

(8) மகாராஜா முதலாவது சிலாதித்ய தர்மாதித்யர்

(9) முதலாவது காரகிரகர்

தேரபட்டா

(10) மூன்றாவது தாரசேனா

(11) இரண்டாவது துருவசேனா பாலாதித்யர் (துருவபட்டர்)

(12) பரமபத்தாரக மகாராஜாதி ராஜ நான்காவது தாரசேனா

சிலாதித்யர்

(14) இரண்டாவது காரகிரகர் தர்மாதித்யர்

(13) மூன்றாவது துருவசேனா

(15) இரண்டாவது சிலாதித்யர்

(16) மூன்றாவது சிலாதித்யர்

(17) நான்காவது சிலாதித்யர்

(18) ஐந்தாவது சிலாதித்யர்

(19) ஆறாவது சிலாதித்யர், துருவபட்டர்

கீழ்க்குறிப்பு: பிளீட் முறைப்படுத்தியபடி (C.I-I-iii-எண் 39) 15, 16, 17, 18, 19 எண் குறிப்பிட்டுள்ள அரசர்கள் முறையே மூன்றாவது சிலாதித்யரிலிருந்து ஏழாவது சிலாதித்யர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். 15 எண் குறிப்பிடப்பட்டிருப்பவரின் தந்தை ஆட்சி புரியாவிட்டாலும், இரண்டாவது சிலாதித்யர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

வாதாபியின் சாளுக்கியர்கள் வமிசவழி ஆட்சி அட்டவணை

- முதலாவது ஜெயசிம்மா
  - ராணு ராகா
    - முதலாவது புலிகேசி கி.பி. 541
      - கீர்த்தி வர்மர் கி.பி. 567-97
        - இரண்டாம் புலிகேசி கி.பி. 609-642
          - பல்லவர் ஆட்சிக் குழப்பநிலை நிலவிய காலம்
            - ஆதித்யவர்மன்
            - சந்திராதித்யா
            - முதலாவது விக்கிரமாதித்யர் கி.பி. 655-78
              - விநயாதித்யா கி.பி. 678-96
                - விஜயாதித்யா கி.பி. 696-733/4
                  - இரண்டாவது விக்கிரமாதித்யர் கி.பி. 734-46
                    - இரண்டாவது கீர்த்தி வர்மர் கி.பி.746-57
                      - சரயாஸ்ரயா சீலாதித்யர்
                      - ஜெயாஸ்ரய மங்கலாரச ராஜா
            - தராஸ்ரயா ஜெயசிம்ம வர்மர்
              - அவானி ஜனஸ்ரயா புலிகேசி ராஜா
        - குப்ஜா விஷ்ணு வர்த்தனு
      - மங்கலீசா கி.பி. 597-608
        - புத்தவ ராசா

காஞ்சியின் பல்லவர்கள் வமிசவழி ஆட்சி அட்டவணை

சிம்ம வர்மர் கி.பி. 550-575

|

சிம்ம விஷ்ணு கி.பி. 575-600

|

முதலாவது மகேந்திர வர்மர் கி.பி. 600-630

|

முதலாவது நரசிம்ம வர்மர் கி.பி. 630-668

|

இரண்டாவது மகேந்திர வர்மர் கி.பி. 668-670

|

முதலாவது பரமேசுவர வர்மர் கி.பி. 670-695

|

இரண்டாவது நரசிம்ம வர்மர் கி.பி. 695-722

|

இரண்டாவது பரமேசுவர வர்மர் கி.பி. 722-730

|

இரண்டாவது நந்திவர்மர் பல்லவமல்லர் கி.பி. 730-796

தலைப்புத் தொடர்பான நூல்கள்

D. தேவஹூட்டி—Harsha-a Political Study
M. L. எட்டிங்ஹௌசன்—Harsha Vardhana
K. M. பணிக்கர்—Sri Harsha of Kanauj
R. K. முகர்ஜி—Harsha
R. S. திரிபாதி—History of Kanauj
V. S. அகர்வாலா—Harsha Charita, a Cultural Study
R.C. மஜூம்தார்—History and Culture of the Indian People
E. B. கோவல் & F.W. தாமஸ்—Harsha-carita of Bana
C. M. ரிட்டிங்—Kadambari Translation
T. வாட்டர்ஸ்—On Yuan Chwang's Travels in India-Hsi-yu-chi Translation
S. பீல்—Buddhist Records of the Western World-Hsi-yu-chi Translation
V. A. ஸ்மித்—Early History of India
J. அலென்—Catalogue of the Coins of the Gupta Dynasties and of Sasanka, King of Gauda
A. S. அல்டேகர்—State and Government in Ancient India
ஜவஹர்லால் நேரு—Glimpses of World History
K. P. ஜெயசுவால்—Arya Manju Sri Mula Kalpa, Translation
R. D. பானர்ஜி—History of Orissa-2 vol-The Age of Imperial Guptas
A. L. பாஷாம்—The wonder that was India
R. G. பண்டார்கர்—Early History of the Deccan
J. G. பூலெர்—Indian Palacography
E. J. ராப்ஸன்—Indian Antiquary
A. கன்னிங்ஹாம்—The Coins of Medieval India
V. R. R. தீக்ஷிதர்—Gupta Polity
J. F. பிளீட்—Gupta Inscriptions
K. கோபாலன்—The History of the Pallavas of Kanchi
S. லெவி—Le Nepal
H. C. ராய்சௌத்திரி—Political History of Ancient India
R.N. சேலடோரே—Life in the Gupta Age
H. D. சங்காலியா—Life in the Gupta Age
C. V. வைத்யா—History of Medieval Hindu India
J. தகாகசு—Taisho Issaikyo Series
A.B. கீத்—A History of Sanskrit Literature
K. J. விர்ஜி—Ancient History of Saurashtra
ஜூவோ டுப்ரேல்—Ancient History of the Deccan

கலைச்சொற்கள்

A

Abbot	—	மடத்தலைவர்
Academy	—	கலைக் கழகம்
Accession	—	பதவி ஏற்றல்
Administration	—	நிருவாகம்
Aggression	—	ஆக்கிரமிப்பு
Analyser	—	பகுப்பவர்
Anarchy	—	அரசியல் குழப்பம்
Annals	—	ஆண்டு வகை வரலாறு
Appeal	—	முறையீடு
Appointment	—	நியமனம்
Approval	—	ஒப்புதல்
Approximate	—	ஏறத்தாழ
Archaelogy	—	தொல் பொருளியல்
Architecture	—	கட்டடக் கலை
Arena	—	அரங்கு
Artisan	—	கலை வல்லுநர்
Ascendancy	—	ஆதிக்க நிலை
Assembly	—	சபை
Assessment	—	தீர்வை

B

Balcony	—	முற்றம்
Barrier Station	—	எல்லைச் சாவடி
Boundary	—	எல்லை

C

Cadre	—	தரம்
Calligraphy	—	எழுத்து அலங்காரம்
Carvers	—	எழுத்துப் பதிப்பவர்
Cavalry	—	குதிரைப் படை
Chop Sticks	—	உணவு அள்ளும் குச்சிகள்
Chronicle	—	செய்திக்கோவை, வரலாற்றுக் குறிப்பு
Chronology	—	கால விளக்க முறை
Civil	—	பொது, நாட்டியல்

Code — சட்டத் தொகுதி
Committee — குழு
Compulsory Military Service — கட்டாயப் போர்ப் பணி
Confederation — நாடுகளின் இணைவு
Convention — மரபுகள்
Copper Plate — செப்பேடு
Counsellor — ஆலோசகர்
Counsellor of the Prince — இளவரசரின் ஆலோசகர்
Courtier — அரசவைப் பிரதிநிதி
Cultural Invasion — பண்பாட்டுப் படையெடுப்பு
Culture — பண்பாடு

D

Dardura — தார்துரா (நீலகிரி மலைத் தொடர்)
Democracy — மக்களாட்சி
Descendant — வழித்தோன்றல்
Description — விரித்துரைத்தல்
Despotism — வல்லாட்சி
Dig Vijaya — திக் விஜயம்
Diplomacy — ராஜ தந்திரம்
Direct — நெறிப்படுத்து
Direct Representative — நேரடிப் பிரதிநிதி
District — மாவட்டம்
District Council — மாவட்டக் குழு
Drastic — தீவிர
Dynasty — வமிசம்

E

Elephant Corps — யானைப் படை
Empire — பேரரசு
Epic — காவியம்
Epigraphy — கல்வெட்டுத்துறை
Era — காலம்
Etymology — சொல் ஆராய்ச்சி
Executive — நிருவாகத் துறை

F

Factors — கூறுகள்
Federation — கூட்டரசு
Feudatary — மானியக்காரர்

Finance — நிதி
'Five India' — 'ஐந்து இந்தியா'
Forest Settlement — வனக் குடியிருப்பு

G

Gazette — அரசிதழ்
Genealogical Tables — வமிசவழி ஆட்சி அட்டவணைகள்
General Superintendent — பொதுக் கண்காணிப்பாளர்
Genesis — தோற்றம்
Ghats — மலைத்தொடர்
Gift of Umbrella — குடைப் பரிசு
Goods — பொருள்கள்
Governor — ஆளுநர்
Grant — கொடை

H

Harem — அந்தப்புரம்
Headman — தலையாரி
Historic — வரலாற்றில் குறிக்கத் தக்க
Hostage — பணயம்
Huns — ஹூணர்கள்

I

Iconoclast — சிலை உடைப்பான்
Immigration — குடியேற்றம்
Imperialism — ஏகாதிபத்தியம்
Infantry — காலாட்படை
Inquiry — ஆய்வு
Inscription — வெட்டெழுத்துக் குறிப்பு
Inspect — ஆய்வு
Inspector — ஆய்வாளர்
Invasion — படையெடுப்பு

J

Jataka Mala — ஜாதக மாலை
Journal — இதழ்
Judicial Service — நீதித்துறைப் பணி
Junior — இளைய
Jury — தீர்ப்புச் சான்றுளர், வழக்குப் பற்றிக் கருத்துக் கூறும் சான்றுளர்

K

Kamarupa — காமரூபம், அசாம்
Kindered Companies — தொழில் வழி உற்றார்
Kingdom — அரசு
King's Court — அரசவை

L

Landlord — நிலக்கிழார்
Lawyer — வழக்கறிஞர்
'Lee' — 'லி' சீன நீட்டலளவு
Line of Heritance — உரிமைத் தொடர்
Lions Throne — சிம்மாசனம்
Logic — தர்க்கம்

M

Maritime Supremacy — கடல் ஆதிக்கம்
Mask — முகமூடி
Medieval — இடைக்கால
Men in charge of Affairs — துறைப் பொறுப்பாளர்கள்
Metaphysics — இயற்கைத் தத்துவம்
Ministers — அமைச்சர்கள்
Monarchy — மன்னராட்சி
Monastry — மடம்
Municipal Board — நகரவை மன்றம்

N

Neutrality — நடுநிலை
Nilapita — நீலப் பெட்டி, அரசாங்கக் குறிப்புகள் வைக்கப்படும் பெட்டி

O

Oath — உறுதிமொழி
Octroi — சுங்கவரி
Office — அலுவலகம், பதவி
Officers — அதிகாரிகள்
Opera — இசைக்கோவை, இசைநாடகம்
Ordinance — அவசரச் சட்டம்
Organization — அமைப்பு, நிறுவனம்
Ostracism — சமூகத்திலிருந்து ஒதுக்கப்படல்
Outpost — புறக்காவல்

Overseas Empire — கடல் கடந்த பேரரசு
Overseas Trade — கடல் கடந்த வாணிகம்

P

Pact — ஒப்பந்தம்
Panchayat Courts — பஞ்சாயத்து நீதி மன்றங்கள்
Partition — பிரிவினை
Penetration — ஊடுருவல்
Persecution — துன்புறுத்துதல்
Pilgrim — பயணி
Plough — உழவு, நில அளவு
Policy — நடைமுறை
Private Secretary — தனிச் செயலர்
Procedure — நடைமுறை

Q

Quinquennial — ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

R

Race — இனம்
Raja Sasana — அரசக் கட்டளை
Regime — ஆட்சி முறை
Regional Executive — வட்டாரச் செயலர்
Regulating Pace Drums — வேக ஒழுங்கு முரசுகள்
Reign — ஆட்சிக்காலம்
Republic — குடியரசு
Revival — உயிர்ப்பித்தல்
Right of Speech — பேச்சுரிமை
Royal Land — அரசு நிலம்
Rufugee — அகதி
Rural — நாட்டுப்புறம்

S

Senapathi — படைத் தலைவர்
Seniority — மூத்தமை
Serf — அடிமை ஊழியர்
Session — அமர்வு, கூட்டத்தொடர்
Sources — அடிப்படைச் சான்றுகள்
Sphere of Influence — செல்வாக்கு மண்டலம், ஆளுமைப் பகுதி
Statesmen — அரசியல் வல்லுநர்கள்

Stupas — ஸ்தூபிகள்
Subordinates — சார்புடையாளர்கள்
Suzerainty — மேலாண்மை

T

Temporary — நிலையில்லா
Tent — கூடாரம்
Three Gems — மூன்று பவளங்கள்
Three Reverends — மூன்று மதிப்புடையோர்
Toleration — சகிப்புத் தன்மை
Trade — வாணிகம்
Tragedy — துயர நிகழ்ச்சி
Trial by Ordeal — கடுஞ்சோதனை
Travelling Palace — பயணக் கால அரண்மனை
Tribute — திறை
Twelve Chapters — பன்னிரண்டு அத்தியாயங்கள்

U

University — பல்கலைக் கழகம்
Urban — நகர்ப்புறம்

V

Vedic Age — வேத காலம்
Vehicle — மார்க்கம்

Y

Yuvaraja — இளைய ராஜா

Z

Zone — மண்டலம்

விளக்கங்கள்

இந்திய நீட்டலளவுகள்

யோசனை
கிரோசா
பௌ
குப்பிட்

இந்தியக் கால அளவுகள்

க்ஷணம்
தட்க்ஷணு
லாவா
முகூர்த்தம்
காலம்
நான்

பருவ காலங்கள்

கிரீஷ்மா
வர்ஷ
ஹேமந்த

இந்தியத் துணி வகைகள்

கசியா
கௌமா
கம்பளம்
ஹோலாலி

பௌத்த அங்கி வகைகள்

அண்டார வாசகா
சாம்கட்டி
உத்தார சங்கா

பௌத்த சமயப் பிரிவுகள்


சதவீரா
சமாத்யா
சர்வாஸ்திவாதின்
லோகாத்ரவாதின்
மஹாயானம்
ஹீனயானம்

பேரரசின் நிருவாகப் பிரிவுகள்

மண்டலம்
தேசம்
புக்தி
கிராமம்


படையெடுப்பு வகைகள்

தர்ம விஜயம்
லோப விஜயம்
அசுர விஜயம்



படம் 1

ஹர்ஷரின் பன்ஸ்கீரா செப்பேடு—ஆண்டு 22 (கி.பி. 628—29)
(பக்கம் 382, 383-ல்) வாசகம் இணைக்கப்பட்டுள்ளது.



படம் 2

ஹர்ஷரின் மதுபான் செப்பேடு—ஆண்டு 25 (கி.பி. 631—32)

பன்ஸ்கீரா செப்பேட்டின் வாசகம்

1. Śri svast Mahānauhastyaśvajayaskandhāvārəchchhrivarddhamanakotyā mahārājasri Naravarddhanastasya puttrastatpādānudhyātassri Vajrinidevyamutpannah paramādityabhakto mahārājasri Rajyavarddhanastasya puttrastatpadānu

2. dhyātaśśrimad Apsarodevyāmutpannah paramātityabhakto māhārajasrimad Adityavarddhanastasya puttrastatpādānudhyatassri Mahāsenaguptādevyāmutpannaśchatussamudrātikkrāntakirttih pratāpanurāgopa

3. natānyarājo Varnnāsramāwyavasthāpanapra vrittachakkra ekachakkraratha iva prajānāmārttiharah paramādityabhaktah paramabhattārakamāhārajadhirajasri Pra(bha) kara(va)rddha(na)styasya puttrastatpā(da)

4. nudhyātassitayasahpratānavichchhuritasakalabhuivanamandalah parigrihitadhanada Varun Endraprabhritilokapalatejassatpathopārjjitānekadravina bhumipradānasamprinitārthihridayo

5. tisayitapūrvvarajacharito devyamamalayasomatya(m) Sri Yasomatyamutpannah parama Saugatassugata iva parahitaikaratāh paramabhattārakamahārājadhirājasri Rājyavarddhanah | rajāno yudhi

6. dustavājina iva Sri Devaguptādayahkritvā yena kasāpraharavimukhassarvve samam samyatāh | utkhāya dvisato vigitya vasudhānkritvā prajānām priyam pranānujjhitavanarātibhavane satyānurodhena yah | tasya

7. nugastatpādānudhyātah paramamāhes'varo maheśvara iva sarvvasatvānukampo paramabhattārakamahārājādhirājasri Harsah ahchchhattrābhuktā vañgadiyavaisayikapaschimapathakasambaddha Markkatasa

8. gare samupagātanmahāsāmantā mahārāja daussādhasadhanikapramātārarājasthāniyakumāramātyoparika visayapativhatachātasevakadinprativasijānapadāmscha samājnapayati viditama

9. stu yathāyamuparilikhitagrāmassvasimaparyantassodrañgassarvvarājakulābhābyapratyāyasametassarvvaparihri - taparihāro visayaduddhritapindah putrapauttrānugaschandrārkkaksitisamaka

10. lino bhūmichchhidranyayena mayā pituh paramabhattārakamahārajadhirājasri Prabhākaravarddhanadevasya māturbhāttārikāmahātevirajnısri Yaśomatidevyā jyesthabhratriparamabhattāraka

11. MahārājadhirājaSriRājyavarddhanadevapādānañcha punyayaśobhivriddhaye Bharadvājasagotrabahvrichachchhandogasabrahmacharibhatta Balachandra Bhadrasvāmibhyam pratigrahadharmanagrahāratvena pratipā

12. dito viditvā bhavadbhissamanumantavyah prativāsijāna padairapyajūasravanavidheyair bhūtvā yathāsamuchitatulyameyabhāgabhōgakarahiranyādipratyāyā etayorevopaneyāssevopāsthāna (ucha) ka

13. raniyanityapi cha | Asmatkulakkramamudāramudaharadbhiranyais'cha dānamidamabyyanumodaniyam | Laksmyastaditsalilabudbudachanchalāyādanam phalam parayas'ah paripālanañchi | karmanā ma

14. nasā vachā karttavyam prānibhi(r)hitam. Harsenaitatsamākhyātandharmmārjjanamanuttamam (I*) Dūtakotra mahāpramātāramahāsāmanta Śri Skandaguptah Mahākṣapatalādhikaranādhikritamahāsāmantama

15. hārājā (Bhana) samādes'ādutkirnnam


16. Isvarenedimiti samvat 20 2

17. Kārti Vadi 1 (II*)

18. SVAHASTO MAMA MAHĀRĀJĀDHI RĀJA ŚRI HARṢAṢYA



படம் 3
ஹர்ஷரின்
சோன்பட் செப்பு முத்திரை




படம் 4
ஹர்ஷரின்
நாளந்தா களிமண் முத்திரை



படம் 5
சர்வ வர்மர் மௌகாரியின்
அசிர்கார் முத்திரை



படம் 6
மகா சாமந்தா சசாங்க தேவாவின்
கல் முத்திரை அச்சு



படம் 7
நாளந்தாப் பல்கலைக்கழகத்தின் தோற்றம்



படம் 8
நாளந்தாப் பல்கலைக்கழகத்தின் மூலைக்கோபுரமும்
மூன்றாவது ஸ்தூபமும்



படம் 9

ஜப்பானில் நடைபெறும் பகாகு ரையோ-ஒ நிகழ்ச்சியில்
ஹர்ஷர் இயற்றிய நாகர்னந்தா நாடகத்தின்
ஒரு பகுதி நடித்துக் காட்டப்படுதல்



படம் 10

புத்தரின் சிலை
காந்தார முறையில் அமைந்தது (கி.பி 300)



படம் 11

புத்தரின் அஸ்தி அடங்கிய கலசம்



படம் 12

போதி சத்துவர்



படம் 13

துங்ஹுவாங் (Tunhuang) பட்டுத்துணியில் தீட்டிய
யுவான் சுவாங்கின் (?) சித்திரம்



படம் 14

யுவான் சுவாங்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

*

பின்வரும் பொருள்களில்

பட்டப்படிப்பு நூல்கள்

விரைவில் வெளிவரும்

கணிதம்	—	41 நூல்கள்
பௌதிகம்	—	28 ,,
வேதியியல்	—	39 ,,
தாவரவியல்	—	30 ,,
விலங்கியல்	—	40 ,,
பொறியியல்	—	50 ,,
வரலாறு	—	45 ,,
அரசியல்	—	34 ,,
பொருளாதாரம்	—	83 ,,
வணிகவியல்	—	36 ,,
புள்ளியியல்	—	16 ,,
உளவியல்	—	8 ,,
புவியியல்	—	18 ,,